வெளியீடு—6—8—1974]
Issued—6—8—1974]

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1974 மார்ச் 11

**Monday 11th March 1974**

தொகுதி XLIX—எண் 1

**Volume XLIX—No. 1**

தமிழ் நாடு அரசு
1974
GOVERNMENT OF TAMIL NADU
1974

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

V2|1, 31 N74
N74 . 49

61646

# Tamil Nadu Legislative Assembly Debates

Tenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

11th to 14th March 1974.

Vol. XLIX (Nos. 1 to 4).

TABLE OF CONTENTS.

*Monday, 11th March 1974.*


| | PAGES |
|---|---|
| (i) Personnel of the Government of Tamil Nadu | i-vi. |
| (ii) Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | vii. |
| (iii) List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... ... | ix-xvi. |
| 1. Questions and Answers ... ... ... | 1-28 |
| 2. Adjournment Motion— | |
| Fire accident at Gudiyatham and its consequences ... ... ... ... ... | 28-30 |
| 3. Statement— | |
| Public Works Minister's statement on the talks on River waters between the Governments of Tamil Nadu and Kerala ... ... | 30-32 |
| 4. Calling Attention— | |
| Acute scarcity of rice in Kanyakumari district | 33-35 |

*Monday, 11th March 1974—cont.*


| | Pages |
|---|---|
| 5. Announcement— | |
| Change in the order of business ... ... | 36 |
| 6. General discussion on the Budget for the year 1974–75 ... ... ... ... ... | 36–105 |
| 7. Papers laid on the Table ... ... ... ... | 105–106 |


*Tuesday, 12th March 1974.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 117–142 |
| 2. Calling Attention— | |
| Proposed closure of Allwin Middle School, Mulagumoodu in Kanyakumari district and the necessity to protect the teachers and students of that school ... ... ... | 143–144 |
| 3. General discussion on the Budget for the year 1974–75 (cont.) ... ... ... ... | 144–228 |
| 4. Papers laid on the Table ... ... ... | 228–229 |


*Wednesday, 13th March 1974.*


| | |
|---|---|
| 1. Points of order— | |
| (i) Postponement of questions without written communication from the concerned Minister | 243–246 |
| (ii) Absence of the Transport Minister from the House ... ... ... ... ... | 275–276 |
| 2. Questions and Answers ... ... ... | 247–274 |
| 3. General discussion on the Budget for the year 1974–75 (cont.) ... ... ... ... | 276–345 |
| 4. Papers laid on the Table ... ... ... | 345–346 |




*Thursday, 14th March 1974.*


| | Pages |
|---|---|
| 1. Point of Information— | |
| Prior intimation to Members about postponement of questions ... ... ... ... | 353–354 |
| 2. Questions and Answers ... ... ... | 354–386 |
| 3. General discussion on the Budget for the year 1974–75 (cont.) ... ... ... ... | 386–463 |
| 4. Papers laid on the Table ... ... ... | 463–464 |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்**: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்**: (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சேரி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து**: (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்–சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிமை மாற்று வாரியம்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: கிராமத் தொழில்கள், கதர்-கிராமத் தொழில்கள், அறக் கட்டளைகள், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. துரைமுருகன்.
2. திரு. வை. பாலசுந்தரம்.
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.
4. திரு. குழ. செல்லையா.
5. திரு. கே. ஏ. வகாப்.
6. திரு. கோ. இளங்கோவன்.

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி)

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ. ,

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். எ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்பத்தூர்–மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). .. .. | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி. |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம். |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், திரு. என். | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, திரு. என். | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம். |
| 51 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 5 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 61 கார்த்திசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம். |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார் கோவில். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. எ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. கி. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை-மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. எ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. எ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஒ. | அவிநாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 191 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாத புரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 222 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1974 மார்ச் 11.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Freedom Fighters.*

* 351 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to offer Pattayams to Freedom Fighters in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ): இம்மாநிலத் திலுள்ள முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தினருக்கும், மூன்று மாதமும் அதற்கு மேலும் சிறை தண்டனை அனுபவித்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், வருமான வரம்பு பாகுபாடு இல்லாமல் பட்டயம் வழங்கப்படுகிறது. தாமிர பத்திர விருது பெற்றவர்களுக்கு இந்தப் பட்டயம் வழங்கப்படமாட்டாது. 1974 சனவரி மாதம் முடிய 5,102 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் இந்தப் பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டத் தியாகிகளுக்கும் குமரி மாவட்டப் போராட்ட தியாகிகளுக்கும் பென்ஷன் வழங்குவதாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்ச ரவர்கள் முன்பு கூறினார்கள். அந்தப் பரிசீலனை என்ன ஆயிற்று ? அவர்களுக்கு அதிகத் தாமதமின்றி அரசு பென்ஷன் வழங்க ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் அதுபற்றிய முடிவை அரசு சார்பில் அறிவிக்க இருக்கின்றோம்.

* 352 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Chief Minister be pleased to state the progress made in the printing of Directory compiled by the Committee constituted to prepare the Who's Who of Freedom Fighters ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விடுதலைப் போராட்ட வீரர்கள் பட்டியல் தயாரிக்கும் பணி முடிந்து, தமிழக விடுதலை வீரர் வரலாற்றின் மூன்று தொகுப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

திரு என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டமே சமீபத்தில் நடந்த தேர்தலுக்காகச் செய்யப்பட்ட திட்டம் என்று சொல்ல படுகிறது. சுதந்திரத்திற்காகப் போராடியதற்குப் பணம் வேண்டுமென்றால் விலைக்காகப் போராடிய மாதிரி இருக்கும் அல்லவா ? அப்படியானால் விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் போன்றவற்றை நடத்தும்போது, அதற்கும் இம்மாதிரி ஒரு சலுகை கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது தேர்தலுக்காகக் கொண்டு வந்த திட்டம் என்று கூறுவது எள்ளளவும் பொருத்தமற்ற ஒரு வாதமாகும். ஏனென்றால், 1966-ம் ஆண்டில் இங்கிருந்த முன்னாள் காங்கிரஸ் அரசு இந்தத் திட்டத்தை உருவாக்கியது. இத்திட்டம் உருவாக்கப்பட்ட போது ஆறேழு தியாகிகள்தான் இந்த மானியத்தைப் பெற முடிந்தது. அதற்குப் பிறகு முன்னேற்றக் கழக அரசு அமைந்த பிறகு கிட்டத்தட்ட ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட தியாகிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

பட்டயங்கள் வழங்கப்படுவதென்பது, ஆறு மாத காலம் சிறை சென்றவர்களுக்கு மத்திய அரசின் சார்பில் தாமிர பத்திரங்கள் அளிக்கப்படும் என்ற ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். மேலவையில் பேசிய பல உறுப்பினர்களும் இந்த ஆறு மாத காலம் என்கின்ற வரையறையைக் குறைக்க வேண்டும், அதற்குக் குறைவாகவும் சிறை சென்றவர்களுக்குப் பட்டயங்கள் வழங்க வேண்டும் என்றனர். அதையொட்டி, மத்திய அரசுக்கு தமிழக அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டது, அந்த ஆறு மாத காலம் என்பதைக் குறைக்க வேண்டுமென்று. ஆனால், மத்திய அரசு அதற்கு இணக்கம் தெரிவிக்க மறுத்துவிட்டது. ஆகவேதான், ஆறு மாதங்களுக்குக் குறைவாகச் சிறை சென்ற—மூன்று மாத காலம் சிறை சென்ற தியாகிகளுக்கு—மத்திய அரசினுடைய பட்டியலில் பிரசித்தி பெற்ற தியாகிகளுக்கு தமிழக அரசின் சார்பில் விடுதலை விருதுப் பட்டயங்கள் அளிப்பது என்று முடிவுசெய்யப்பட்டு அளிக்கப்படுகிறது. ஆகவே, விடுதலைக்காகப் போராடியதற்காகத் தரப்பட்ட விலை என்றோ, கூலி என்றோ கூறுவது பொருத்தமற்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அண்மையில் நமது மாநிலத்திலிருந்து கொடுக்கப்பட்டு வந்த பென்ஷன் தொகை ரூ. 75 நிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? அதுமட்டுமன்றி வயது முதிர்ந்தவர்களுக்கு இல்லமொன்று அமைப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது சம்பந்தமாக நமது மாநில அரசுக்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வயது வந்தோர் இல்லம் பற்றி, மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான தகவலும் இதுவரையில் வரவில்லை. ஆனால் ரூ. 75 நிறுத்தப்பட்டதாக வந்த தகவல் சரியானதல்ல. அதில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் சில பிரச்சினைகள் இருந்தன. 200 ரூபாயில் 125 ரூபாய் மத்திய அரசு கொடுப்பதாகவும், 75 ரூபாயை மாநில அரசு கொடுக்க வேண்டுமென்றும் மத்திய அரசு சொன்னார்கள். கொடுக்கிற 200 ரூபாயையும் நீங்களே கொடுத்துவிடுங்கள், நாங்கள் கொடுக்கிற 75 ரூபாயை சிறை சென்ற மற்றவர்களுக்குக் கொடுக்க மாற்றிக் கொள்ளுகிறோம் என்று சொன்னோம். அதற்கு அவர்கள் இணங்கி வரவில்லை. கடைசியாக நாமே இதை ஒத்துக் கொண்டு அந்த 75 ரூபாயை அளித்து வருகிறோம். மத்திய அரசு 125 ரூபாய் அளித்து வருகின்றார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நம்முடைய மாநிலம் தான் இந்த விடுதலைப் போராட்ட வீரர்களை மதிக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அதை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த விடுதலைப் போராட்ட வீரர்களுடைய பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு தரும்போது முதலிடம் தருமா நம்முடைய அரசு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுபோன்று முதலிடம் தர வேண்டும் என்பதைக் கட்டாயமாக்குவதற்கு சட்ட அமைப்பில் இடம் இல்லை.

திரு. எஸ். வடிவேல் : விடுதலை இயக்கத்தில் முன்னணியில் நின்று சிறை சென்று தண்டனை பெற்றவர்கள் பின்னர் வேறு இயக்கத்தில் சேர்ந்தவர்கள் பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நம்முடைய அரசு உணருமா ? அதைப் புனர்ப் பரிசீலனை செய்து அவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விடுதலைப் போராட்ட இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளில் இருக்கிறார்கள் என்கிற காரணத்தினாலேதான் விடுதலை விழாவைக்கூட ஒரு கட்சி விழாவாக நடத்தாமல் அது தேசிய விழாவாக நடத்தப்பட வேண்டுமென்ற கொள்கையை இந்த அரசு வலியுறுத்தி வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கோரிக்கையைத் தெரிவித்ததற்குப் பிறகு அல்ல, ஏற்கெனவே அரசு முடிவு எடுத்துவிட்டது. பல்வேறு அரசியல் கட்சிகளில் இருக்கும் விடுதலை வீரர்களுக்கும் அரசின் சார்பில் உதவிகள், மானியங்கள், பட்டயங்கள் ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. நா. வீராசாமி : ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட விடுதலை வீரர்களுக்கு நம்முடைய அரசு பட்டயங்கள் வழங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நம்முடைய அரசுக்கு ஆண்டொன்றுக்கு எவ்வளவு செலவாகிறது ? அப்படி பட்டயங்கள் பெற்ற விடுதலை வீரர்களுக்கு மத்திய அரசு பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பட்டயம் கொடுப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் செலவாகும் என்பதல்ல. பட்டயம் ஒரு முறைதான் கொடுக்கப்படுவது. பத்தாயிரம் பட்டயங்கள் செய்யச் சொல்லி ஆர்டர் கொடுத்தோம். 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அதற்குச் செலவாகும். இதுவரை ஐயாயிரத்துக்கு மேற்பட்ட பட்டயங்கள் வழங்கியிருக்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு நம்முடைய அரசு 75 ரூபாய் கொடுத்து வந்தது சில காலம் நிறுத்தப்பட்டிருந்ததே. அந்த 75 ரூபாய் மறுபடியும் எக்காலத்திலிருந்து கொடுக்கப்படுகிறது ? பழைய பாக்கியும் சேர்த்துக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிறுத்தி வைத்திருந்ததன் காரணத்தைச் சொன்னேன். பழைய பாக்கி விவரங்கள் என்ன என்பதை அறிந்துதான் நான் புதிதாகத் தகவல் தரவேண்டும்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசினால் தரப்படுகிற பட்டயங்கள் இந்தி மொழியில் இருப்பதாகத் தெரிகிறது. அந்தந்த மாநிலத்தில் அந்த மொழி பேசுகிற மக்களுக்கு—தாய்மொழியிலேயே பட்டயங்கள் வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய மாநில அரசு வற்புறுத்துமா? மேலும், நம்முடைய தமிழக அரசு தருகின்ற பட்டயம் எந்த வடிவத்தில் எந்த மொழியில் தரப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய அரசிலே தரப்படுகின்ற பட்டயம் இந்தியில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை தொடக்கத்திலேயே இந்த அரசின் சார்பில் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அவர்கள் இந்தி மொழியை மாற்றிக்கொள்வதற்கான நம்முடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அதனால் தமிழக அரசு சார்பில் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு தரப்படுகின்ற பட்டயங்களில், அவர்கள் பற்றி குறிப்புகளை தமிழிலேயே பொறித்து வழங்குகிறோம். ஆகவே, தமிழக அரசு வழங்கும் பட்டயம் தமிழில் இருக்கிறது ; மத்திய அரசு வழங்கும் பட்டயம் இந்தியில் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, விடுதலை போராட்ட வீரர்களுக்கு பட்டயங்கள் வழங்குவதோடு மட்டுமல்லாமல், பல குடும்பங்கள் பொருளாதாரத்தில் நலிந்திருக்கின்றன. அவர்களுக்கு நிலப் பட்டாவும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிலப்பட்டாக்கள் வழங்குகின்ற நேரத்தில், விடுதலை போராட்ட வீரர்களும் அக்கறையோடு கவனிக்கப்பட்டு, இந்த உரிமைகள் அவர்களுக்கும் தரப்பட வேண்டுமென்று அரசின் கொள்கை இருந்து வருகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இந்த விடுதலை போராட்ட வீரர்கள் பட்டியலில் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? நேதாஜி படையில் இருந்த காப்டன் லட்சுமி இப்போது எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? அவருக்கு அரசு உதவி செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காப்டன் லட்சுமி எங்கே இருக்கிறார் என்ற விபரம் இல்லை. இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, விடுதலை போராட்ட வீரர்
களைப்போலவே இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டவர்கள் இருக்
கிறார்கள். அவர்களுக்கும் பட்டயம் வழங்கப்படுமா ? வழங்குவதாக
இருந்தால் இன்னும் எவ்வளவு காலத்தில் நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே நண்பர் ஜேம்ஸ்
அவர்களுக்குப் பதில் அளிக்கும்போது இதுபற்றிய விபரத்தையும் தெரி
வித்திருக்கிறேன். அவர்களுடைய பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது.
கன்னியாகுமரி மாவட்டத்தில் விடுபட்டவர்களுடைய பட்டியல் தயாரிக்கப்
பட்டு, முழுமை பெற்றவுடன் அரசு முழு விபரத்தையும் அறிவிக்கும்.

Thiru K. S. KOTHANDARAMIAH : There are a number of people who went to jails during freedom struggle. But the details of their imprisonment are not available. Actually some of them had been jailed in Vellore and Trichy jails. But details are not available. If big people apply, the details are furnished but for the poor people who went to jails during freedom struggle, the details are not available. The last date for receipt of applications by freedom fighters is also now fixed. In view of what I have said, will the Hon. Chief Minister make some arrangements by which details regarding these poor patr'ots who went to jails during freedom struggle, are made ava'lable ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்தப் பிரச்சினையில் ஒரு
வரையறையை அரசு நிர்ணயித்து, அந்தத் தகுதி படைத்தவர்களுக்கு
மானியம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இந்தத் தகுதிகள்
தேவையில்லை என்று வரைமுறைகளைத் தளர்த்திவிட்டால், தகுதி எது
வுமே இல்லாதவர்களும் இதிலே நுழைந்துவிடுவார்கள். ஆகவே,
வரைமுறைப்படி உள்ள தகுதி பெற்றவர்களுக்கு எல்லாம் மானியம்
வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. பெ. சீனிவாசன் : இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட
வர்களுக்குப் பட்டயம் வழங்குவதோடு மட்டுமல்லாமல், தீ குளித்த 8 பேர்
குடும்பங்களுக்கும் வேறு ஏதாவது சிறப்பு செய்யும் உத்தேசம் அரசுக்கு
உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே தீ குளித்தவர்
குடும்பங்களுக்கு சிறப்பு செய்ய வேண்டுமென்று கருதி, அந்தக் குடும்பங்
களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர்களுக்கு மானியம்
வழங்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டு, இப்போது நடைமுறையில் இருக்
கிறது.

திரு வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, பல்லாயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு நாம் சலுகைகள் தருகிறோம். இதிலே எத்தனை பேர் பெண்கள் என்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் பெண்கள் இதிலே அதிகமாக இருந்தால் அவர்களுக்குத் தருகின்ற சலுகையினை இரட்டிப்பாக்கித் தந்தால் வருங்காலத்தில் இப்படிப்பட்ட சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட பெண்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும். ஆகவே, அரசு அதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வருங்காலத்தில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய சந்தர்ப்பம் அவர்களுக்கு வராது. ஏனென்றால் சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகள் முடிந்துவிட்டன.

திரு கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, நமது மாநில அரசு விடுதலை போராட்ட வீரர்களுக்கு, பட்டயங்கள் வழங்கப்பட்டவர்கள் எல்லோருக்கும் பென்ஷன் தருகின்றதா ? பட்டயம் வழங்கப்பட்டவர்களில் பலருக்கு இன்னும் பென்ஷன் வழங்கப்படாமல் இருக்கிறதா ? அப்படி இருந்தால் அவர்களுக்கும் உடனடியாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பட்டயம் கிடைக்கப்பெற்ற அனைவருமே பென்ஷன் வழங்கப்படுவதற்கான தகுதி பெற்றவர்கள் அல்ல. பென்ஷன் வழங்கப்படுவதற்கு சில தகுதிகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் அவர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

### *Assessment of total personality of students*

* 353 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the details of the Educational Institutions in Madras City in which the Pilot Project of assessment of total personal'ty has been introduced ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இத்திட்டம் சென்னை நகரில் 19 உயர்நிலைப் பள்ளிகளில் செயல்படுகிறது. இப்பள்ளிகளின் விவரங்கள் அடங்கிய அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த மாணவர் முழு வளர்ச்சி முன்னோடித் திட்டத்தின் நோக்கம் என்ன ? எந்தெந்த வகையில் மாணவர்களுக்கு இத்திட்டம் பயன்படுகிறது ?

---

@ 107—108-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இத்திட்டம் பரீட்சார்த்தமாக 1969-ஆம் ஆண்டு சென்னை சைதாப்பேட்டை மாதிரிப் பள்ளியில் கொண்டுவரப்பட்டது. அதன் நடைமுறையைப்பார்த்து மற்ற மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை நீட்டிக்கும் யோசனைப்படி, இப்போது படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் வருகின்ற மாணவர்கள், அவர்கள் படிக்கின்ற மற்ற பாடங்களோடு, நூலகங்களிலிருந்து நூல்களை எடுத்துப் படிப்பதற்கு 50 எண்கள், உடற்பயிற்சிக்கு 50 எண்கள், கையெழுத்துக்கு 50 எண்கள், ஒழுக்கம்-நன்னடத்தைக்கு 50 எண்கள் என்ற அளவில் 200 எண்கள் பெறவேண்டும். இவைகளில் மாணவர்கள் தகுதி பெறுகிறார்களா என்பதை அந்தந்தப் பள்ளியின் வகுப்பாசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும் முடிவு செய்கிறார்கள்.

இந்த முறையினால் மாணவர்கள் நல்ல பலன் பெற்றிருக்கிறார்கள். உடற்பயிற்சி, நூல்கள் படிப்பது, கையெழுத்து, ஒழுக்கம், நன்னடத்தை இவைகளில் சிறந்தவர்களாக மாணவர்கள் திகழ்கிறார்கள். அந்தவகையில் அவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் ஊக்கமளிக்கப்படுகிறது. இப்போது 19 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 உயர்நிலைப் பள்ளிகளில் கொண்டுவர முயற்சிகள் நடைபெறுகின்றன. பின்னர் படிப்படியாக எல்லா பள்ளிகளிலும் கொண்டுவரக்கூடிய நிலைமை இருக்கிறது.

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல இந்தத் திட்டம் பரவலாக மாணவர்களிடையே நல்ல வரவேற்பைப் பெறுவதால், தமிழ்நாடு முழுவதும் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் இந்த மாணவர் முழு வளர்ச்சி முன்னோடித் திட்டத்தை கொண்டுவர உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இத்திட்டம் பரீட்சார்த்தமாக பார்க்கப்பட்டதில் நல்ல பலன் கிடைப்பதாகத் தெரிகிறது. அதனால் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 சதவிகிதம் அதாவது 25 உயர்நிலைப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்து, இத்திட்டத்தை செயல்படுத்த எண்ணியுள்ளோம். எல்லாப் பள்ளிகளிலும் உடனடியாகக் கொண்டுவர முடியாது. ஏனென்றால் இத்திட்டம் கொண்டுவரப்படக் கூடிய பள்ளிகளில் நூலகங்கள் இருக்க வேண்டும்; உடற்பயிற்சிக்கான இடவசதி இருக்க வேண்டும். இந்த வசதிகளை எல்லாம் கவனத்தில் கொண்டு படிப்படியாக எல்லாப் பள்ளிகளிலும் கொண்டுவரக் கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறது.

### *Graduate teachers.*

* 354 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state —

(*a*) whether there is any proposal to regularise the services of the graduate teachers appointed between 1970 and 1973 ; and

(*b*) if so, the details of the same

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பி. பிரிவு பள்ளிகளில் 1—4—1970 முதல் 3—3—1973 வரை நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணி முறைப்படுத்தப்படும் என்று 3—3—1973 நாளிட்ட கல்வித்துறையின் அரசாணை எண். 351-ல் ஆணையிடப்பட்டது. அரசு உயர்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர்கள் பதவி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவின் வரம்பிற்குள் இருப்பதால் அதன் ஒப்புதல் பெற்றபின்னரே மேற்கண்ட ஆணையை செயல்படுத்த முடியும். மேற்படி பி. டி. ஆசிரியர்களின் பெயர்கள் கல்வித் தகுதிகள், வயது முதலான விவரங்கள் பள்ளிக்கல்வி இயக்குநரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவ்விவரங்கள் அரசுக்கு கிடைத்தவுடன், தேர்வு ஆணைக்குழுவின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதற்கிடையில் இவர்கள் அனைவரும் வேலையில் தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகின்றனர்.

திரு. என். கே. பழனிசாமி : சார், 4, 5 வருஷமாக வேலையிருக்கின்ற ஆசிரியர்களும் சர்வீஸ் கமிஷன் முன்பு வந்துதான் நிரந்தரமாக்கபபடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அதனால் அவர்கள் 4, 5 ஆண்டுகள் பணியாற்றியது வீணாகப் போகிறது. ஆகவே, ஏற்கெனவே ஆசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் சர்வீஸ் கமிஷனுக்கு ஆஜராகாமலே, அவர்களை நிரந்தரமாக்கிவிட்டு, இனிமேல் வருகின்ற ஆசிரியர்களை சர்வீஸ் கமிஷன் மூலமாக வரவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ? இந்தக் கோரிக்கையை "கிராஜுவேட் டீச்சர்ஸ்" வைத்தபோது சர்க்கார் ஏட்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்போது நடைமுறையில் அது இல்லை என்று தெரிகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 1—4—1970-க்குப் பிறகு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற வேலை கூட சர்வீஸ் கமிஷனுக்குப்போய் நீங்கள் நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டும் என்று உத்தரவிலே குறிப்பிட்டுத் தரப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தும் ஆசிரியர்களின் முறையீட்டினை ஏற்று, 3—3—1973 வரை நியமிக்கப்பட்டவர்கள் பணி முறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சர்வீஸ் கமிஷனுக்குப் போகாமலே நிரந்தரமாக்கப்படுவார்கள் என்று உறுதி தரப்பட்டிருக்கிறது. இந்த விவகாரம் சர்வீஸ் கமிஷனுக்கு உட்பட்டிருப்பதால் அவர்களின் அனுமதியுடன்தான் செய்ய முடியும். அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே நியமனம் ஆனவர்களில் சர்வீஸ் கமிஷன் மூலமாக 2,330 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மீதமுள்ளவர்களும் தொடர்ந்து வேலையில் நீடித்து வருவார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, எப்படி இருந்தாலும் ஒரு காலத்தில், சர்வீஸ் கமிஷன் கன்பர்மேஷன் இல்லாமல், அவர்களுடைய வேலை நிரந்தரமாகாது என்ற நிலைமை இருக்கும்போது, அவர்களை தற்காலிகமாக நியமிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன். கல்வி இலாகாவில், 10 (எ)(1) விதிப்படி



தற்காலிகமாக நியமித்துவிட்டு, 4, 5 ஆண்டுகள் அவர்கள் பணியாற்றிய பிறகு, சர்வீஸ் கமிஷன் தேர்வுக்கு அவர்கள் செல்ல வேண்டுமென்றிருப்பதை, முதலிலேயே சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குச் சென்றவர்களை நியமிக்க அரசுக்கு என்ன தடை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷனுக்குப் போய், அவர்கள் நாள் குறிப்பிட்டு தேர்வு நடத்துகிற வரையில், இடங்களைக் காலியாக வைக்க முடியாது. ஆகவேதான், 10(எ) (1) விதிப்படி, தற்காலிகமாக நியமிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்கள் நேர்முக விசாரணை நடத்தி, ஆட்களைத் தேர்ந்தெடுத்து, அரசுக்குப் பட்டியல் அனுப்புவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே தான், சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குச் செல்பவர்கள் முதலிலே 10 (எ) (1) விதிப்படி தற்காலிகமாக நியமிக்கப்படுகிறார்கள். பிறகுதான், பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் நிரந்தரமானவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

பழைய டிஸ்டிரிக்ட் போர்ட் பள்ளிகளிலே பணியாற்றுபவர்கள், சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குப் போக வேண்டிய அவசியமில்லை. மற்றவர்கள் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, வேலையற்றுப் போய்விடுவார்களோ என்ற நிலைமை காரணமாக, விதிகளைத் தளர்த்தி, அவர்களைக் கட்டாயமாக்க வேண்டுமென்று வைத்திருக்கிறோம். 1–4–1970 முதல் 3–3–1973 வரை தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள் என்ற உறுதியைத் தருகிறேன்.

திரு. கா. வேழவேந்தன் : இப்படி பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும்போது, ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் பல ஆசிரியர்களை நியமிக்கிறோம். ஆனால், ஆரம்பப் பள்ளியிலே, 8–வது வகுப்பு வரை இருக்கிற பள்ளிகளிலே ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும்போது, கட்டாயமாக பட்டதாரிகளாக இருக்கவேண்டுமென்ற நிலைமை ஏற்படுத்தினால், கல்வியின் தரம் உயரும். ஆகவே, ஒவ்வொரு ஆரம்பப் பள்ளியிலும் 8-வது வகுப்பு வரையிலே இருக்கிற பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை, பட்டதாரிகளாக நியமிக்க ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைமை ஆசிரியர் பி.டி. படித்தவராக இருக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டு, மெள்ள மெள்ள நடைமுறைப் படுத்தி வருகிறது. நிதிவசதியைப் பொறுத்துத் தான் மேற்கொண்டு திட்டங்கள் நிறைவேற்ற முடியும்.

திரு. நா. வீராசாமி : மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்ன கருத்து, ஆசிரியர்களிடத்திலே தவறான எண்ணத்தை ஏற்படுத்திவிடும். ஒரு தடவை ரெகுலரைஸ் செய்துவிட்டால் கூட, மீண்டும் அவர்கள் எம். பி. எஸ். ஸி. தேர்வுக்குச் செல்ல வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே, ஒரு முறை ரெகுலரைஸ் செய்யப்பட்டவர்கள் மறுபடியும் எம்.பி.எஸ்.ஸி. தேர்வு எழுத வேண்டுமா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெவுபடுத்துவார்களா ?

[1974 மார்ச் 11

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஒரு தடவை ரெகுலரைஸ்
பண்ணப்பட்டவர்கள். மீண்டும் எம்.பி.எஸ்.ஸி. தேர்வு எழுத வேண்
டாம். முதலில் தற்காலிகமாக நியமிக்காமல், என் முன் கூட்டியே
எம்.பி.எஸ்.ஸி. மூலமாகத் தேர்ந்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்று
திரு. சீனிவாசன் அவர்கள் கேட்டார் என்றுதான் நான் நினைக்கிறேன்.
தற்காலிகமாக நியமித்த பிறகு, 2, 3 ஆண்டுகளுக்குப் பிறகுதான்
எம்.பி.எஸ்.ஸி. தேர்வு நடத்தி எடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது.
இரண்டு, மூன்று ஆண்டுகாலத்துக்குத் தேவையான ஆசிரியர்களது பட்டி
யலை வைத்துக் கொண்டு, காலி இடங்கள் எற்பட எற்பட, இவர்களைக்
கொண்டு நிரப்புகிற முறை வரவேற்கத்தக்கதுதான். அப்படி ஒரு
பட்டியலைத் தயாரித்துக் கொண்டு, அதிலிருந்து ஆட்களை எடுத்து நிரப்பக்
கூடிய சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு பள்ளிக் கல்வி இயக்குநரையும்
கல்லூரிக் கல்வி இயக்குநரையும் கேட்டிருக்கிறேன். சாத்தியக்கூறு
களைப் பொறுத்த முடிவு எடுக்கப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : இப்படி 10(எ)(1) நியமனங்கள் மூலம்
வேலையிலே சேர்கிறவர்களை, இத்தனை ஆண்டுக்காலத்திற்குள், சர்வீஸ்
கமிஷன் தேர்வு செய்ய வேண்டும், இல்லாவிட்டால் அவர்களை ஊஸ்ட்
செய்ய வேண்டுமென்ற விதிமுறையை அரசு ஏற்படுத்துமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி விதிமுறைகள்
போட்டு, சர்வீஸ் கமிஷனைக் கட்டுப்படுத்த இயலாது. ஆனால், முன்
கூட்டியே நிலைமைகளைத் தெரிந்து, கட்டுப்படுத்த இயலுமா என்பதற்
கான முயற்சியை ஆராயலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்பொழுது "ஹாஃப் எ மில்லியன்"
ஸ்கீமில்" புதிததாக கிராஜுவேட் டீச்சர்களை நியமிக்கிறோம். 10(எ)(1)
விதிப்படி வேலை செய்பவர்களை ரிலீவ் செய்துவிட்டு, அந்த இடங்களில்
புதிய ஆசிரியர்களை நியமிக்கிறோம். ஆகவே, இந்தக் கஷ்டத்தை நீக்கு
வதற்காக, ஏற்கனவே 10(எ) (1) விதிப்படி வேலையிலிருக்கிற ஆசிரியர்
களுக்கு முதலில், "ஹால்ப் எ மில்லியன் ஸ்கீம்"-ல் இடம் அளிப்பதற்கு
அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே,
ஏற்கெனவே சர்வீஸ் கமிஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குத்தான் இந்த
"ஹாஃப் எ மில்லியன் ஸ்கீமில் நாம் வாய்ப்புத் தருகிறோம். அதற்குப்
பிறகு, தற்காலிகமாக இருப்பவர்களை நியமிக்கலாம். ஏற்கெனவே, தற்கா
லிகமாக இருப்பவர்களுக்கு, சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்
கப்பட்டவர்களுக்கு அடுத்த முன்னுரிமை தரவேண்டுமென்று கூறப்பட்
டிருக்கிறது. அது மாத்திரம் அல்லாமல், செகண்டரி கிரேடில் பி.டி.
படித்திருப்பவர்களுக்கும் அவர்களுக்குரிய பாடங்கள் இருக்குமானால், அப்
பதவிகளில் நியமிக்க அவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்றும்
கூறப்பட்டிருக்கிறது.



1974 மார்ச் 11]

மேலப்பாளையம் உயர்நிலைப்பள்ளி.

*355 வினா—திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்
துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையத்திலுள்ள முஸ்லீம்
உயர்நிலைப்பள்ளி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) அப்பள்ளிக்கு அரசின் அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) 1945-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

(இ) 1967–68-ம் ஆண்டு முடிய தற்காலிக அங்கீகாரம் வழங்கப்
பட்டது அதன் பிறகு தொடர் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

(உ) அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு தேவைப்படும் முக்கிய நிபந்
தனைகளை பள்ளியின் நிர்வாகத்தினர் நிறைவேற்றவில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, 1945–வது
ஆண்டிலே தொடங்கப்பட்ட இந்த உயர்நிலைப் பள்ளிக்கு 1967-வது ஆண்டு
வரையிலே அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பது விந்தையாக இருக்
கிறது. அந்தப் பள்ளியின் நிர்வாகஸ்தர்கள் ஒழுங்காக நிர்வாகிக்
காததாலே, மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து
வருகிறது.

மேலும் 60,000 முஸ்லீமகள் வாழக்கூடிய மேலப்பாளையத்திலே ஒரே
ஒரு முஸ்லீம் பள்ளி தான் இருக்கிறது. அரசே அப்பள்ளியை ஏன்
எடுத்துக் கொள்ளக்கூடாது, அல்லது அதனை செம்மைப்படுத்தக்கூடிய
நடவடிக்கைகளை ஏன் எடுக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கீகாரம் வழங்கப்
படாது இருப்பதிலே விந்தை இல்லை. நிபந்தனைகள் 20 ஆண்டுகளாக
நிறைவேற்றப்படாமல் இருப்பதுதான் விந்தையாக இருக்கிறது. பள்ளியில்
விளையாட்டு நிலம் மாணவர்கள் உபயோகிக்க ஏற்றதாக சரி செய்யப்பட
வில்லை. பள்ளிக்கு இடவசதி, தளவாடங்கள் போதிய அளவு வழங்கப்
படவில்லை ; அறிவியல் கூடம் அமைக்கப்படுவதற்காகக் கட்டப்பட்ட கட்டி
டத்தில் நடத்தப்பட்டு வரும் வகுப்புகளை வேறு கட்டிடத்திற்கு மாற்றி
அறிவியல் கூடத்தைப் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்த வழி
செய்யவில்லை ; அப்பள்ளியின் தலைமை ஆசிரியரைப் பள்ளியின் நிர்வாகக்
குழுவின் பதவி வழி வந்த உறுப்பினராகச் சேர்க்கவில்லை ; முன்னாள்
ஆசிரியர் திரு. முத்துக்குமாரசாமி அவர்களுக்குச் சேரவேண்டிய நிலுவை
ஊதியத்தை வழங்கவில்லை : அபாயகரமாக இருக்கும் பள்ளியின் கட்டி
டத்தை பழுது பார்த்து கட்டிட உறுதிச் சான்றிதழைப் பெற்று அனுப்ப
வில்லை ; பள்ளியின் நிர்வாக நிதிக்கும், அபிவிருத்தி நிதிக்கும் பள்ளி
யின் பெயரில் தனிக் கணக்குகள் வைக்கப்படவில்லை. ஆகையால் [illegible]

அங்கீகாரம் அளிப்பதிலே சங்கடம் ஏற்படுகிறது. அரசு அனுப்ப வேண்டிய மானியம் தாளாளருக்கு அனுப்பப்படவில்லை. தலைமை ஆசிரியர் மூலமாக, பணம் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தாளாளர் மீது, தமிழ்நாடு கல்வி விதி 99 (ஏ) ன்படி தக்க நடவடிக்கை எடுக்கத் தேவையான ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக் குறிப்பு வரைவு தயாரித்து இயக்குநரின் ஒப்புதலுக்கு அனுப்பும்படி நெல்லை (நடு) மாவட்டக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆனால், அந்தப் பள்ளிக் கூடத்தை இப்பொழுது அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்குச் சட்டத்திலே இடம் இல்லை. புதிய சட்டத்தின் அடிப்படையிலேதான் நாம் முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த மேலப்பாளையம் முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, அங்குள்ள சிறுபான்மை மக்களுக்குப் பெரும்பாலும் பயன்படுகிறது. ஆகவே, சிறுபான்மையோரை ஆதரிக்கின்ற வகையில் சில நிபந்தனைகளைத் தளர்த்தி அங்கீகாரம் அளிக்க அரசு இனிமேலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவற்றிலே எதுவும் தளர்த்தக்கூடிய நிபந்தனைகள் அல்ல. ரூ. 80,000 கட்ட வேண்டும், அதனைத் தளர்த்தி ரூ. 20,000 கட்டச்சொல்லுங்கள், ஒரே தடவையில் கட்டுவதற்குப் பதிலாக, 5 தடவையாகக் கட்ட அனுமதியுங்கள் என்று சொன்னால், அந்த விதிகளைத் தளர்த்தலாம். ஆனால், இதில் உள்ள விதிகளைத் தளர்த்த முடியாது. ஆகவேதான் நேரடியாக தலைமை ஆசிரியர் மூலமாகச் சம்பளத்தைத் தருகிறோம். சிறுபான்மையோர் பள்ளியாக இருப்பதால், புதிய சட்டத்தின்படி கூட அரசாங்கம் எடுத்துக்கொள்ள வழி இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : நிபந்தனைகளைத் தளர்த்த இயலாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்பள்ளி பொருளாதாரச் சிக்கலிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் தனிக் கருணை வைத்து, பொருளாதார உதவி அளித்து, அப்பள்ளி நிர்வாகம் நல்ல முறையிலே நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியாதே தவிர, அவர்களாகத் தந்து விடுவார்களானால், அரசாங்கம் அதுபற்றி யோசிக்கலாம்.

## அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*356 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் டி. ஆலங்குளம் அரிசனங்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அரிசனங்களுக்கு அங்கு குடியேற தடை ஏதுவும் ஏற்பட்டுள்ளதா ?



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) எதுமில்லை.

* 357 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரம், 28-வது வார்டு, காங்கயம்பாளையம்புதூரில் உள்ள அரிசன மக்களுக்கு வீட்டு மனைக்கு நிலம் கையகப்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பிரிவு 4(1) முன் மொழிவு மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

[முற்பகல் 9-30]

திரு. எஸ். வடிவேல் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொள்வதற்கு மனைகள் கொடுப்பதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்று போகிற நிலைமையைப் பார்த்தால் ஆமை வேகத்திலே போய்க் கொண்டிருக்கிறது, அதை புயல் வேகத்திலே போகச் செய்கின்ற நிலைமையில் இல்லாமல் இலாக்கா ரொம்பப் பின்தங்கியிருக்கிறது. ஆகவே அந்த நிலைமையை மாற்றி ஒரு ஆண்டுக் காலத்திற்குள்ளாகவே மனைகளை வழங்கச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மனை வழங்குகின்ற பொழுது இடம் அரசாங்கத்தினுடைய நிலமாக இருந்தால் தாமதம் இல்லாமல் வழங்கலாம், ஆனால் தனியார்களுடைய நிலமாக இருந்தால் அவற்றை ஆர்ஜிதம் செய்துதான் கொடுக்க வேண்டியிருக்கிறது, அந்த நிலைமையில் நிலச் சொந்தக்காரர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள், அவர்கள் வழக்கு மன்றங்களுக்குக்கூடச் செல்கிறார்கள், அதனால் தான் தாமதம் ஏற்படுகிறது, அரசாங்க இலாக்காவிலே தாமதம் இல்லை.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு மனைப்பட்டா வழங்குவதிலும் சரி, குடிசைகளிலே வாழ்கின்ற மக்களுக்கு மனைப்பட்டா வழங்குவதிலும் சரி பலவகையான சிக்கல்கள் இருப்பதால்தான் காலதாமதம் ஏற்படுகிறது என்று இந்த மன்றத்திலேயே பலமுறைகள் எடுத்துக் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிலைமையைப் பற்றி ஆராய ஒரு சர்வ கட்சிக் குழு ஏற்படுத்தி அவர்களுக்கு எல்லாம் சீக்கிரமாக மனைப்பட்டாக்கள் வழங்கக்கூடிய முறையைக் கொண்டுவர அரசிற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசனங்களுக்கு நிலம் வழங்கப் படுவதிலே—அவர்கள் குடியிருக்கின்ற பகுதிகளிலே ஜனத் தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வந்து இட நெருக்கடி ஏற்பட்டு விடுகிறது—அவர்கள் இருக்கின்ற இடங்களுக்கு அருகாமையிலே நிலத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள், சில இடங்களைப்

பொறுத்தவரையில் அருகாமையிலே இடம் கிடைக்கிறது. ஆகவே வழங்கப்படுகிறது. ஆனால் சில இடங்களிலே அவர்களுடைய விருப்பத்திற்கு மாறாக சற்றுத் தொலைவிலேதான் இடம் கிடைக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலே நிலம் கொடுத்தால் அவர்கள் அந்த இடங்களுக்குச் செல்ல மறுக்கிறார்கள். அருகாமையிலோ தொலைவிலோ இடங்களை எடுத்துக் கொடுக்க நான் முன்வாந்தாலும்கூட நிலச் சொந்தக்காரர்கள் எதிர்க்கிறார்கள், சிலர் வழக்கு மன்றங்களுக்குச் செல்கிறார்கள்.

நஞ்சை நிலங்களை நாம் கொடுப்பதில்லை, ஏனென்றால் அதையெடுத்துக் கொடுத்தால் அதனால் உணவு உற்பத்தி தடைபடுமோ என்று எண்ணி அதை எடுத்துக் கொடுப்பதில் யோசனை செய்ய வேண்டி இருக்கிறது. நஞ்சை நிலத்தை எடுத்தாலும் கூட 2 சென்ட்களுக்கு உட்பட்டுத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. இவ்வளவு சிக்கல்கள் இருப்பதால்தான் தாமதம் ஏற்படுகிறது.

ஆகவே, இதற்காக என்று தனியாக ஒரு குழு அமைக்கவேண்டிய அவசியம் இல்லை. இந்த இலாகா மூலமாகவே பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, சர்க்கார் புறம்போக்கு நிலங்களாக இருந்தால் சீக்கிரமாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் சர்க்கார் தீர்வை கட்டி தரிசாக இருக்கிற நிலங்கள் இவையெல்லாம் அரிசன மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றால் அரிசன நலத்துறையிலிருந்து ரெவின்யூ இலாகாவிற்கு பேப்பர்கள் மாறிமாறிப் போய்க்கொண்டே 7 ஆண்டுகள்கூட ஆகிவிடுகின்றன. ஆகவே, அந்த நிலைமையில்லாமல் மனுச்செய்த நாளிலிருந்து ஒரு ஆண்டுகுள்ளாக வழங்கப்பட வேண்டுமென்று ஒரு திட்டவட்டமான உத்திரவைப் போடுவதற்கு அரசு முன்வருலாமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு உத்திரவு பிறபிக்கப்பட்டிருக்கிறது. 1960ஆம் ஆண்டிற்கு முன்னால் அரசாங்க புறம்போக்கு நிலங்களில் குடியமர்த்தப்பட்டிருந்தால் அந்த நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட நிலங்கள் வேறு இலாக்காக்களுக்குத் தேவைப்பட்டால், போக்குவரத்துத் துறை போன்ற துறைகளுக்குத் தேவைப்பட்டால், அப்படிப்பட்ட நிலங்களை பட்டா செய்து கொடுக்கமுடியாது. நீண்டகாலமாக இருந்தால் அந்த நிலங்களை அவர்கள் தேவையென்று கேட்டால் 1960ஆம் ஆண்டுக்கு முன்னாலிருந்து அரிசன மக்கள் அங்கே குடியிருந்துகொண்டிருந்தால் அவர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதிலே தாமதம் இல்லை. ஆனால் அவர்கள் புதிய இடங்களாகக் கேட்டால் தாமதம் ஏற்படுகிறது, தாமதம் இருந்தால் அது பரிசீலனை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சர்க்காருக்குச் சொந்தமான புஞ்சை நிலங்களாக இருந்தால் உடனே நடவடிக்கை எடுக்கப்படுகிறது.



## வாலாந்தூரில் பாதை அமைப்பு.

*358 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், வாலாந்தூர் அரிசன தெருவிற்கு இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த வாலாந்தூர் கிராமம் ஒரு தீவைப்போல் இருக்கிறது, அங்கே நடைபாதை, இணைப்புச்சாலை வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே இனிமேலாவது அதைப் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, ஊராட்சி உள்ளாட்சித் துறைக்குச் சம்பந்தப்பட்ட பிரச்னையாக இருக்கிறது. ஊராட்சி ஒன்றியத்திலே இணைப்புச்சாலை போட்டுக்கொள்ளலாம் என்று ஒப்புதல் அளித்தால் தான் போடமுடியும்.

## மீன்பிடித் தொழில்.

*359 வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்தும் திட்டம் எதையேனும் அரசு வகுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அவையின் முன்பு ஒரு அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

## வந்தவாசியில் புதிய தொழில்களுக்குச் சலுகை.

*360 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் துறையில் பின்தங்கிய இடங்களின் சலுகையை வடஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டத்திற்கு அளிக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

---

@ 108—109-ம் பக்கங்களில் II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 11

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) : பின்தங்கிய பகுதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளில் மத்திய அரசின் பதினைந்து சதவீத மானியத்தைத் தவிர ஏனைய சலுகைகள் அனைத்தும் வந்தவாசி வட்டத்திற்கு அளிக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தப் பதினைந்து சதவீத மானியத் தொகை அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியென்பதால் வருகிற ஆண்டிலாவது மத்திய அரசிற்கு பரிந்துரை செய்து, வந்தவாசி, செய்யாறு போன்ற வட்டங்கள் நலன் அடையச் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு மாவட்டத்திலேயும் சிறு சிறு பகுதிகள் ஆங்காங்கே பிற்பட்ட பகுதிகளாக இருக்கின்றன. ஆகவே அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் கேட்கப்பட்டது. மத்திய அரசாங்கம் மறுத்துவிட்டது.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இந்தச் சலுகையின் அடிப்படையிலே வட ஆர்க்காடு மாவட்டத்திலே எந்த எந்தப் பகுதிகளுக்கு, தாலுக்காக்களுக்கு சலுகைகள் தரப்பட்டிருக்கின்றன. குடியாத்தம் தாலுகா அதிலே சேர்க்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் அதையும் சேர்ப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : திருப்பத்தூர், வாணியம்பாடி, வேலூர், வாலாஜாபேட்டை ஆகிய பகுதிகள். மற்றப் பகுதிகளைப் பொறுத்தளவிற்கு அவர்கள் சொன்னது மாவட்டத்தில் சில இடங்கள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் நாம் சொன்னது இரண்டு மாவட்டங்களையாவது எடுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் கண்டின்யுட்டி இருக்குமென்று சொன்னோம். ஆனால் அவர்கள் பாபுலேஷன், விஸ்தீரணத்தை அடிப்படையாக வைத்து அதிகமாக இருக்கக் கூடாது என்று விதி போடுகிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் சில பாக்கெட்டுகள் இருக்கின்றன. வந்தவாசி, குடியாத்தம், என்று இருக்கின்றன. இவைகளுக்கு அதிகமாக ஜனத் தொகை, விஸ்தீர்ணம், இவையெல்லாம் போகாமல் பார்த்துக் கொள்கிறோம் என்று சொன்னோம். அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர்அவர்களே, சேலம் மாவட்டம் முழுமையும் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென மத்திய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்ய நம்முடைய அரசினிடத்திலே ஒரு பரிசீலனை இருந்ததே, நாளடைவில் அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலம் மாவட்டத்தைப்பற்றி அப்படி ஒரு திட்டம் இல்லை. ரூரல் இன்டஸ்ட்ரீஸ் புராஜக்ட்ஸ் என்ற அடிப்படையிலே சில தனிச் சலுகைகள் தரப்படுகின்றன. அது அந்த மாவட்டத்திற்குப் பொருந்தும்.



1974 மார்ச் 11]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இந்த சப்ஸிடி 10, 15 சதவீதம் என்று கொடுக்கப்படுகிறது. அது தென் ஆர்க்காடு மாவட்டத்திலே ஒரு இடத்திற்குக்கூட ஒரு தாலூகாவிற்குக் கூடக் கொடுக்கப்படவில்லையே. அமைச்சர் அவர்கள் காட்டாம்புலியூர் பகுதியிலே இந்த 15 சதவீத அடிப்படையில் தொழில்களை ஆரம்பிப்பதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தென் ஆற்காடு மாவட்டமும் பின் தங்கிய மாவட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தப் பதினைந்து சதவீத முறை எப்படி தரப்படுகிறது என்று ஏற்கனவே நான் சொன்னேன். தென் ஆர்க்காடு மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக இருந்தும் அதிலே சில பகுதிகள் மிக மிகப் பின்தங்கிய பகுதிகளாக இருந்தும் இந்த 15 சதவீதம் கொடுக்க முடியவில்லை என்பது உண்மை.

## கடப்பாக்கத்தில் கயிறு தொழிற்சாலை.

* 361 வினு—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அச்சிறுபாக்கம் தொகுதியில் உள்ள கடப்பாக்கம் பகுதியில் " கயிறு தொழிற்சாலை " ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, அச்சிறுபாக்கத் தொகுதியிலே அடங்கியுள்ள கடப்பாக்கம் எழில் குலுங்கும் தீவுத் திடலாகும். கேரளத்திலே இருக்கின்ற தீவு போல் இருக்கிறது. அந்த இடத்திலே ஒரு கயிறு தொழிற்சாலை அமைத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று அங்கு வாழ்கின்ற மக்கள் கருதுகிறார்கள். ஆகவே, அதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கயிறு உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் நாம் ஸ்டேட் எய்ட் டு இன்டஸ்ட்ரீஸ் ஆக்டின் மூலமாக திட்டங்கள் வைத்திருக்கிறோம். சுமார் ரூபாய் ஒரு லட்சம் வரையில் சிறிய சிறிய தொழில்கள் உருவாக்குவதற்கு அனுமதிக்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அந்த வகையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோரிக்கைகள் அந்தப் பகுதியிலிருந்தும் வந்தால் கவனிக்கப்படும்.

திரு.கே. டி. கே. தங்கமணி : சார், கேரளத்திலே இந்தக் கயிறு தொழிற்சாலைகளை ஏற்படுத்த மிக விரிவான முறையிலே அந்த அரசாங்கம் உற்சாகம் கொடுத்துக் கொண்டு வருகிறது. தமிழ்நாட்டிலே இந்தத்

[1974 மார்ச் 11

தொழில் விருத்தியடையக்கூடிய முறையிலே பாக்கெட்டுகள் இருக்கின்றன. அதைப் பரிசீலனை செய்து இந்தத் தொழிலுக்கு ஒரு கேந்திரமான இடம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேரளத்தைப்போல் தமிழகத்திலேயும் தரப்படுகிறது. இதுபற்றிப் பல விஷயங்கள் இந்த மன்றத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல் தஞ்சாவூர் மாவட்டத்திலே 20 தொழிற்சாலைகள் உருவாக்குவதற்கு பிரம்மாண்டமான திட்டம் நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து வேறு எந்த எந்தப் பகுதிகளிலே அப்படிப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றனவோ, அந்த அந்தப் பகுதிகளிலே பரிசீலனை செய்யப்பட்டு சிறிய சிறிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : Is there any proposal to mechanise the coir industry in Tamil Nadu, as it had been done in Kerala ? Does the Government think that if it is mechanised it will create unemployment problem ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது நான் சொன்ன உதவிகளே சிறிய அளவில் இயந்திர சாதனங்களுடன் தொடங்கப்படுகிறது. பெரிய அளவில் மெகனைஸ்டு ஸ்கீம் எடுத்தால் வேலைவாய்ப்புக் குறையலாம். ஒரு லட்சம் ரூபாய்த் திட்டம், கட்டிட வசதி, இயந்திர வசதி கொடுத்து, இந்த பைபரை எடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த பைபர் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குக்கூட வாய்ப்பு இருப்பதனால் நாம் இந்தத் தொழிலுக்கு ஊக்கம் தந்து வருகிறோம்.

## திருப்பூருக்கு துணை நீதிமன்றம்.

* 362 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயதுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

திருப்பூரில் சப்-கோர்ட் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

## புதுக்கோட்டையில் மாவட்ட நீதிமன்றம்.

* 363 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையில் மாவட்ட செஷன்ஸ் நீதிபதி கோர்ட்டு ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : புதிய புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மாவட்ட செஷன்ஸ் நீதி மன்றம் 14—1—1974 முதல் செயல்பட சனவரி 1974-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



1974 மார்ச் 11]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த அலுவலகம் எங்கே செயல்பட இருக்கிறது. புதிய கட்டிடம் கட்டப் போகிறதா ? ஏற்கனவே இருக்கிற கட்டிடத்தில் நீடிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது புதிய கட்டிடத்தைப் பற்றி திட்டம் எதுவும் இல்லை.

## சென்னையிலுள்ள நினைவுச் சின்னங்கள்.

* 364 வினா—திரு. ரா. ரா. முனுசாமி :
திருமதி த. ந. அனந்தநாயகி) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகர பொதுச்சாலைகளில் எத்தனை நினைவுச் சின்னங்கள் எங்கெங்கே உள்ளன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விவரப்பட்டியல் @ சட்டப் பேரவையின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

திரு. எஸ். வடிவேலு : நம்மை அடிமைப்படுத்தியிருந்த ஆங்கிலேயர்கள் சிலைகளை அகற்றிவிட்டு, சுதந்தர வீரர்கள் சிலைகளை அங்கங்கே வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : படிப்படியாக அந்த வேலை நடைபெற்று வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : ஆங்கிலேயர்கள் என்றாலும் கூட—ஜி.யூ. போப், அன்னிபெசண்ட் போன்றவர்கள் நம்முடைய சமுதாயத்திற்கு வாழ்வளித்தவர்கள். அவர்களின் சிலைகள் நீங்கலாக, மன்றோ சிலை, ஏழாம் எட்வர்ட் சிலை போன்றவற்றை எல்லாம் அகற்றி அங்கே நம்முடைய சமுதாயத்திற்கு வாழ்வளித்தவர்கள் சிலைகளை நிறுவ அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தற்போது இல்லை.

திரு. அ. பெ. சீனிவாசன் : சென்னை நகரத்தில்—பொதுவாக தமிழ் நாட்டிலே—சிலைகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது. ஆகவே இந்தச் சிலைகளுக்கு ஒரு கட்டுப்பாடு ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. பெ. தர்மலிங்கம் : இல்லை.

---

@ 110—115-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 மார்ச் 11

மன்னியாற்றின் குறுக்கே பாலம்.

* 365 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதி, மாயூரம் யூனியனில் உள்ள தருமதானபுரம் பஞ்சாயத்தில், மன்னியாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தருமதானபுரம் ஊராட்சியிலுள்ள மன்னியாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி, கிராமப் பணித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு தளம் மட்டம் (Deck State level) வரை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

*Traffic safety lessons in schools.*

* 366 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Police Commissioner has arranged for conducting traffic safety lessons in the Educational Institutions in Madras ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) சென்னை காவல்துறையைச் சார்ந்த போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகள் கல்வி நிலையங்களின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பயிற்சிக்கு விருப்பம் தெரிவிக்கும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. சாதாரணசாலை விதிகளைப் பற்றிய கோட்பாடுகளும், நடைமுறைகளும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் பஸ்ஸின் கூரையிலும், படிக்கட்டிலும் பல பயணிகள் யாத்திரை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக மாணவர்கள் இவ்விதம் செய்கிறார்கள். இதனால் ஒரு சிலர் உயிரிழந்தும் இருக்கிறார்கள். ஆகவே, இதைத் தடுக்க அரசாங்கம் இப்போது என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்தக் கவலையை வரவேற்கிறேன். இப்படி புட்போர்டிலும், பஸ் மேலிடங்களிலும் பயணம் செய்வது ஆபத்தானது என்பது பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதோடு அல்லாமல் எதிர்க்கட்சித் தலைவர் கூறியதைப் போல உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது. அதைக் கட்டாயம் தடுக்க வேண்டுமென்று காவல் துறையினருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, அவர்கள் அப்படிப் பயணம் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.



1974 மார்ச் 11]

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது டிராபிக் என்போர்ஸ்மென்டைப் பொறுத்த வரை மாணவர்கள் போலீசாருக்கு உதவியாக இருக்கிறார்கள். அதுவும் இந்தத் திட்டத்தின் கீழ் வருகிறதா ? அப்படியானால், கல்லூரிகளில் இருக்கக்கூடிய மாணவ மாணவிகளுக்கும் கூட இதில் இடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இப்போது சில மாணவர்கள் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க விதி முறைகளை அனுசரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள். கல்லூரியில் உள்ளவர்கள் அவர்களாகவே முன் வந்தால் அவர்களுக்கும் இந்தப் பயிற்சியை அளிக்கலாம். போக்குவரத்தில் ஏற்படுகிற ஆபத்தினை உணர்த்தி, எந்த எந்த முறையில் விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்கிற உணர்வினை அளிக்கின்ற முறையில்தான் இப்போது இந்தத் திட்டம் அமல் செய்யப்படுகிறது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, தாம்பரத்தில் இருந்து நானும் வரும்போது பார்க்கிறேன். போக்குவரத்து வண்டிகளை அங்கங்கே நிறுத்தி மேல் கூரையில் 20 மூட்டைகளுக்குமேல் கூரையே பிய்ந்து விழுந்து விடுமோ என்று அஞ்சுகிற முறையில் போட்டு வருகிறார்கள். இதனால் விபத்து ஏற்படக்கூடிய வாய்ப்பு இருப்பதனால் இந்த முறை தவிர்க்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அத்தகைய ஆபத்து எதுவும் நிகழ்ந்ததாக இதுவரை இல்லை. ஆயினும் மாண்புமிகு உறுப்பினர் அதுபற்றிய தகவலை என் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட நபர் இவ்வளவு எடைக்கு மேல் எடுத்துப் போகக் கூடாது என்கிற விதி இருக்கிறது. இதை எப்படி எடுத்துப் போகிறார்கள் என்பதை கவனிக்கிறேன்.

ஆரம்பாக்கத்திலிருந்து பேருந்துப்பணி.

* 367 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், ஆரம்பாக்கம் முதல் திருவள்ளூருக்கும்—பொன்னேரிக்கும் பேருந்துப் போக்குவரத்து ஏற்படுத்துவதில் ஏற்படும் காலதாமதத்திற்கும் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, ஊத்துக் கோட்டை, திருவள்ளூர் ஆகிய இடங்களில் கிளை பணி மனைகளைக் கட்டுவதற்கான நிலம் கையகப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விடங்களில் பணி மனைகள் கட்டி முடிக்கப்பட்ட பின்னரே, ஆரம்பாக்கம், திருவள்ளூர், பொன்னேரி ஆகிய இடங்களை இணைக்கும் வகையில் புதிய பேருந்துகள் விடுவது பற்றி பல்லவன் போக்குவரத்து கழகம் பரிசீலிக்க இயலும்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த ஆரம்பாக்கம் ஆந்திரத்தின் எல்லையைக் கடந்து தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இருப்பதனால் ஆந்திர எல்லையைத் தாண்டிப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மீண்டும் இதைப் பரிசீலனை செய்து ஆரம்பாக்கத்திலிருந்து திருவள்ளூர்,—பொன்னேரிக்கு பஸ்கள் விட அரசு விரைவுபடுத்துமா ?

மாண்புமிகு திரு. ச இராமச்சந்திரன் : விரைவுபடுத்தப்படும்.

## *Appointments in temples.*

* 368 *Q.*—Thiru A. PARANDHAMAN, Pulavar C. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether the Government have issued specific instructions to the Devasthanam Authorities in Tamil Nadu to the effect that persons belonging to Backward Classes and Scheduled Castes must be considered for appointment and that the percentage fixed by the Government in that regard must be followed ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பின்தங்கிய வகுப்பினர்கள் ஆலயங்களில் ஏற்கெனவே ஊழியம் செய்து வருகிறார்கள். ஆகவே, அவர்கள் நியமனத்திற்குப் பிரத்தியேகமாக அறிவுரை எதும் தேவையில்லை. ஆலயங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களை ஊழியர்களாக நியமிப்பதைக் கட்டாயப்படுத்த இந்து அறநிலைய பாதுகாப்புச் சட்ட விதிகளை திருத்த செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

புலவர் சி. பழனிச்சாமி : பழனி ஆலயத்தை எடுத்துக் கொண்டால், பணியாளர்களை நியமிப்பதில் இந்த 18 சதவிகிதம் தாழ்தப்பட்டவர்களுக்கு என்கிற விகிதாசாரம் பின்பற்றப்படவில்லை. இதுவரை, ஏறத்தாழ 90 வழிகாட்டிகளை நியமித்துள்ளார்கள். இந்த 90 பேர்களில் ஒருவர் கூட தாழ்த்தப்பட்டவர் கிடையாது. நான் அறங்காவலராக இருந்து சொல்லியும் கேட்கவில்லை. ஆகவே, எல்லாக் கோவில்களிலும் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்க வேண்டுமென்று அரசு ஆணை அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில் ஊழியர்களை நியமனம் செய்யும்போது தாழ்த்தப்பட்டவர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்று ஆணையாளர் அவர்களால் அறிவுரை கூறப்பட்டிருக்கிறது. அந்த அறிவுரை பல இடங்களில் பின்பற்றப்படவில்லை என்கிற காரணத்தினால் சட்டம் திருத்தம் செய்யலாமா என்பது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவதற்கு என்ன என்ன தகுதிகள் வேண்டும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி ஆலயப் பணியாளர்களைப் பற்றியது. அர்ச்சகர்களைப் பற்றியது அல்ல.



திருமதி த. ந. அனந்தநாயகி : இப்போதே பல பிடாரி அம்மன் கோயில்களிலே தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி ஊழியர்கள் நியமனத்தைப் பற்றியது.

* 369 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக கோயில்களில் இதுவரை எத்தனை தாழ்த்தப்பட்டவர்கள் அர்ச்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : நாற்பத்திரெண்டு அரிசன அர்ச்சகர்கள் பணிபுரிகின்றனர். ஆனால், அவர்கள் யாரும் நியமனம் செய்யப்படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்திலேதான் அர்ச்சகர்களாகத் தாழ்த்தப்பட்டவர்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கீகரிக்கப்படும் இவர்களை சுப்ரீம் கோர்ட்டிலே வழக்குத் தொடரப்பட்ட காரணத்தினால் அர்ச்சகர்களாகத் தாழ்த்தப்பட்டவர்களை நியமிப்பதில் ஏதாவது சங்கடங்கள் இந்த அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பரம்பரை அர்ச்சகர் முறை இருந்து வருவதை நீக்கவும், அதற்கு மாறாக தேவையான கல்வித் தகுதிகளைக் கொண்டுள்ளவர்கள் அடங்கிய சமய அமைப்பை ஏற்படுத்த அரசு விரும்பியது. அதனால்தான் எந்த சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்கள் கோயில் பூசாரிகளாக, அறங்காவலர்களாக நியமிக்க வேண்டுமென்று சட்டத்திலே செய்தோம். ஆனால், தமிழ் நாட்டைச் சேர்ந்த சில மடாதிபதிகள் உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களைத் தாக்கல் செய்ததால் அது ஆராயப்பெற்று பரம்பரை அர்ச்சகர் முறை ஒழிக்கப்பட்டிருக்கிறதே தவறு, என்று சொல்லி எந்த சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எந்த குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அர்ச்சகராக நியமிக்கலாம் என்ற முறையைச் செல்லுபடியாக்காமல் செய்திருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய அரசை, இந்திய அரசியல் சட்டப் பிரிவுகள் 25 மற்றும் 26 ஆகிய இரண்டையும் திருத்தி, அதைச் செல்லுபடியாகும் சட்டமாக மாற்ற வேண்டுமென்று பலமுறை கேட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மத்திய சர்க்காரிடமிருந்து பதில் கிடைக்கவில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நம்முடைய நாட்டில் தாழ்த்தப்பட்டவர்களை அர்ச்சகர்களாக நியமிக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்து அது சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மத்திய சர்க்காரிடத்தில் இந்திய அரசியல் சட்டத்தை திருத்த வேண்டுமென்று பலமுறை கோரிக்கைகள் விடுத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையில் மத்திய சர்க்கார் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. எது

எதற்கோ சட்டத்திருத்தம் கொண்டுவரும் மத்திய சர்க்கார் இதற்கு உடனடியாக சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் இந்த அரசாங்கம் கண்டனத் தீர்மானம் போடுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கடந்த சட்டசபை நிகழ்ச்சியின்போதுகூட முதலமைச்சரவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நாட்டில் சட்டமன்ற உறுப்பினராக வருவதற்கோ அல்லது பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கோ, ஏன் ஜனாதிபதியாக வருவதற்குக்கூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வர முடியும். ஆனால், அவர்கள் கோவில்களில் அர்ச்சகராக வருவதற்கு இப்பொழுதுள்ள அரசியல் சட்டம் இடம் கொடுக்கவில்லை. ஆகவே, அதை மாற்றவேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம் என்ற தெளிவான கொள்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசு இதுவரையில் அதற்குப் பதில் கொடுக்காததால் கண்டனத் தீர்மானம் போடுவதற்குக்கூட இந்த அரசாங்கம் யோசிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அளவிற்கு இதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. ஏற்கெனவே பல கோயில்களில் இப்பொழுதே அரிசனங்கள் பூசாரிகளாக இருக்கிறார்கள். அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். அந்த கோயில்களுக்குப் பல இந்துக்கள் சென்று வழிபடுகிறார்கள். எனவே, இதில் என்ன அரசியல் சட்டச்சிக்கல் இருக்கிறது என்று தெளிவுபடுத்தினால் பிறகு கண்டனத் தீர்மானத்திற்குப் போகலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதில் சிக்கல் ஏற்படக்கூடிய சூழ்நிலை உச்ச நீதி மன்றத்திற்கு இந்த வழக்கு போன பிறகுதான் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தச் சிக்கலைத் தவிர்க்கத்தான் மத்திய அரசு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று நாம் பல முறையும் வலியுறுத்தி வந்திருக்கிறோம். இந்தக் கேள்வியின் அடிப்படையில் இப்பொழுதும் மத்திய அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

அம்மையார் அவர்கள் முதன்முதலிலேயே கொஞ்சம் முந்திக்கொண்டு கேள்வியைக் கேட்டார்கள். பிடாரிகள் கோயில்களிலே இப்பொழுது அரிசன அர்ச்சகர்கள் இருக்கிறார்களே, புதிதாக இந்தச் சட்டத்தில் என்ன கொண்டு வந்து விட்டீர்கள் என்று கேட்டார்கள். அவர்களுடைய இந்தக் கேள்வியையே வாதத்திற்கு ஆதாரமாக எடுத்துக் கொண்டு, உச்ச நீதி மன்றத்திற்குப் போனவர்களை அல்லது வழங்கப்பட்ட தீர்ப்பையொட்டி மாற்றும் அளவில் சட்டத்தைத் திருத்தாமல் இருக்கும் மத்திய அரசை, இப்பொழுதே சில கோயில்களில் அரிசன அர்ச்சகர்கள் இருக்கும் நேரத்தில், அந்தக் கடவுள் கோபித்துக் கொள்ளாமல் இருக்கும்பொழுது மற்றக் கோயில்களிலும் இருந்தால் என்ன, ஏன் சட்டத்தைத் திருத்தக் கூடாது என்று அவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அவர்கள் குறிப்பிட்ட பிடாரிகள் ஒத்துக்கொள்ளும் இந்தச் சமுதாய சீர்திருத்தத்தை சில அடங்காப் பிடாரிகள் ஒத்துக்கொள்ளாததுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. அந்த அடங்காப் பிடாரிகள் திருந்தி, சமுதாய சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியை நாம் அனைவரும் கட்சி சார்பில்லாமல் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றுதான் இந்தக் கேள்விக்குப் பதிலாகக் கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், மத்திய சர்க்காரை அடங்காப் பிடாரி என்று சொல்கிறார்களா, அல்லது வழக்குப் போட்டவர்களை அடங்காப் பிடாரி என்று சொல்கிறார்களா என்பதைக் கூறவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் திசை திருப்பத் தேவையில்லை. நான் மத்திய அரசையோ அல்லது வழக்கு போட்டவர்களையோ அடங்காப்பிடாரி என்று சொல்லவில்லை. சமுதாய சீர்திருத்தத்தில் மறுமலர்ச்சி ஒளி விட வேண்டிய கொள்கையை மறுத்து நிற்பவர்கள் யாராக இருந்தாலும் சமுதாய சீர்திருத்தம் வேண்டுமென்ற கொள்கைக்கு அடங்காப்பிடாரிகளாக இருக்கிறார்கள் என்பதைத்தான் சொன்னேன்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள், அரிசனங்கள் அர்ச்சகர்களாக இருக்கும் ஆலயங்களில் மற்ற ஜாதிக்காரர்களும் கும்பிடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி அல்ல, அவர்கள் வீரன், காட்டேரி போன்ற கோயில்களில் இருக்கிறார்களே தவிர, மேலிடத்தில் பார்க்கும்போது எந்தக் கோயிலிலும் இப்படிப்பட்ட பூசாரிகள் தென்படவில்லை. இப்பொழுது நியமிக்கப்பட்ட பூசாரிகளை இந்திய அரசு தடுக்கும் நிலைமையிருந்தால் அதைக் கண்டனம் செய்யவோ அல்லது போராட்டம் நடத்தவோ இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அப்படி வந்தால் எங்களைப்போன்றவர்கள் ஒத்துழைப்பு அளிக்கத் தயார் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதை கண்டித்துதான் பெரியார் அவர்கள் போராட்டம் நடத்துவதாக இருந்தார்கள். ஆனால், தமிழ்நாட்டின் சாபக்கேடு அவர் நம்மிடமிருந்து இயற்கையின் கொடுமையால் பிரிக்கப்பட்டுவிட்டார்கள். போராட்டம் இல்லாமலேயே இந்த பிரச்சினையை தீர்த்து வைக்கும் மனோபக்குவத்தை மத்திய அரசு பெற்று, அரசியல் சட்டத்தை உடனடியாகத் திருத்தி நம்முடைய நாட்டிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இது மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் தமிழ்நாட்டிலிருந்து சென்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும்—அரசியல் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்பதற்காகத் தனியார் மசோதா கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு தங்கமணி அவர்கள் ஒரு கருத்தைக் கூறினார்கள். இது கட்சி சார்பில்லாமல் அணுக வேண்டிய பிரச்சினை என்றும் சொன்னார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் இந்தப் பிரச்சினையைப் பெரிய பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். சில நேரங்களில் வெளியே பேசப்படும் பேச்சுக்களில், இது என்ன பெரிய விவகாரம் இதை இந்த அரசு பெரிது படுத்திக்கொண்டிருக்கிறதே என்று சொல்வது இந்த முக்கியமான பிரச்சினைக்கு ஊறு விளைவிப்பதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற ஒரு தீர்மானத்தைப் பாராளுமன்றத்தில் தர வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கு, இது போன்ற தீர்மானத்தைத் தர வேண்டுமென்று கழகத் தலைமை கட்டளையிட்டிருக்கிறது.

ஆலயங்களில் தமிழில் வழிபாடு

*370 வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) தமிழில் வழிபாடு நடத்தாமல் உள்ள ஆலயங்களும் தமிழ் நாட்டில் உள்ளனவா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, தேவாரம், திருவாசகம் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் ஆகியவை பிறந்த தாய் தமிழில் அர்ச்சனை நடத்துவதில் அரசு வெற்றிகரமாக நடத்தி வருகிறது. ஆனால் சி[ல] கோயில்களில் சமஸ்கிருதத்தில் செய்கிறார்கள். என்ன காரணம் என்[று] அந்த அர்ச்சகர்களை கேட்டால் வருகின்றவர்களில் சிலர் சமஸ்கிருதத்தி[ல்] செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று பதில் சொல்கிறார்கள் எனவே, அறநிலையத் துறையின் கீழுள்ள எல்லா ஆலயங்களிலும் தமிழி[ல்] தான் அர்ச்சனை நடத்த வேண்டும், சமஸ்கிருதத்தில் வேண்டுமென்[று] விரும்புகின்றவர்கள் அர்ச்சகர்களை வரவழைத்து வேண்டுமானால் செய்[து] கொள்ளலாம் என்ற உத்தரவை பிறப்பிக்குமா என்று அறிய விரும்[பு]கிறேன்.

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அறநிலைய[த்] துறை ஆணையாளரின் உத்தரவுப்படி தமிழிலே வழக்கமாக அர்ச்சனை நடத்த வேண்டும். யாராவது விரும்பினால் சமஸ்கிருதத்தில் செய்[ய] வேண்டுமென்று கேட்டால் சமஸ்கிருதத்திலே நடத்தலாம் என்று ஏ[ற்] கெனவே சுற்றறிக்கை வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த அடிப்படையி[ல்] தான் கோயில்களில் நடத்திவருகிறார்கள்.



THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, ours is a land of temple worship. Thousands of people are coming from other States and they may like to have 'archana' in their traditional ways and I understand the Government has no objection to permit them. The difficulty is that the people coming from outside are not aware whether they can do the archana in the traditional way. I want to know whether any application forms for doing archana stating the languages has been prescribed so that it would be easy for the temple authorities to regulate the archanas. May I know from the Hon. Minister for Religious Endowments whether such application forms would be introduced in the temples for doing archanas ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வழிபட
வருபவர்கள் எந்தப் பகுதியிலிருந்து வந்தாலும் தமிழிலே அர்ச்சனை
நடத்துவதுதான் வழக்கமாக இருக்கும். ஆனால் சமஸ்கிருதத்தில்தான்
செய்ய வேண்டுமென்று முன்கூட்டியே தெரிவித்தால் அப்படிச் செய்வதற்
கான முறையை ஏற்கெனவே செய்து வைத்திருக்கிறோம்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, சில கோயில்களிலே "தமிழி
லும் அர்ச்சனை செய்யப்படும்" என்று போர்டில் எழுதிப் போட்டிருக்
கிறார்கள். எங்களுடைய பழனி கோயிலிலே கூட அப்படிப் போட்டிருந்
தார்கள். நான் அறங்காவலராக வந்ததற்குப் பிறகு, தமிழிலே அர்ச்சனை
செய்யப்படும். மற்ற மொழியிலும் அர்ச்சனை செய்யப்படும் என்ற
போர்டை வைப்பதற்குத் திட்டம் செய்திருக்கிறார்கள். எனவே கோயில்
களில் தமிழிலும் செய்யப்படும் என்ற போர்டு இருந்தால் அதை மாற்றி
வடமொழியிலும் செய்யப்படும் என்று வைக்க உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : தமிழிலும் என்பதை மாற்றி,
தமிழில் என்று மாற்றப்பட்டு ஓராண்டு காலமாகிறது.

[முற்பகல் 10-00]

திரு எஸ். ஆறுமுகம் : சாமிக்கு ஆசாமி பூசை செய்வது பொருத்தமா?

(பதில் இல்லை).

திரு. துரை முருகன் : இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள காசி,
இராமேஸ்வரம் போன்ற தலங்களுக்கு எல்லா மொழிகளும் பேசுகின்ற
மக்களும் வருகிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து காசிக்குச் செல்லு
கிறார்கள். வட மாநிலங்களிலிருந்து இராமேஸ்வரத்திற்கு வருகிறார்கள்.
ஆகவே, எப்படி நாம் 14 மொழிகளைத் தேசிய மொழிகளாக வைத்திருக்கி
றோமோ அதே போன்று 14 மொழிகளிலும் அர்ச்சனை நடத்தப்படுமா?
லிங்க் லாங்வேஜ் ஆங்கிலத்திலும் அர்ச்சனை நடத்தப்படுமா?

[1974 மார்ச் 1

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அநேகமாக இருக்கிற அர்ச்சகர்களுக்கு இரண்டு மொழிகள்தான் தெரியும். வருகிறவர்கள் அவரவர்கள் மொழியிலே ஆண்டவனை அர்ச்சித்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்படிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக்குறிக்கும்.

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்

குடியாத்தத்தில் ஏற்பட்ட தீ விபத்தும் அதன் விளைவுகளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்—

'The big tire accident in Gudiyatham, North Arcot district, resultin in the death of five persons including some children and loss to th property to the time of several lakhs of rupees,.

என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதே போன்று திரு ஜேம்ஸ் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். திரு பொன்னப்ப நாடார் அவர்கள் அது எப்படி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதற்குரியது என்பது பற்றி விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அண்மையில் ஒரு பெரிய தீ விபத்தின் காரணமாக குடியாத்தம் பகுதியிலே வட ஆர்காடு ஜில்லாவில் விபரீத விளைவு ஏற்பட்டிருக்கிறது. இது அண்மையில் நடந்த நிகழ்ச்சி. குறிப்பாக, உயிரிழப்பு ஏற்பட்டிருக்கிறது. ஐந்து பேர்கள் இறந்துவிட்டதாகத் தகவல் வந்திருக்கிறது. அதில் ஒரு சில குழந்தைகளும் உட்பட்டிருப்பதாகத் தகவல் இருக்கிறது. அது மட்டுமின்றி லட்சக்கணக்கான மதிப்புள்ள பொருள்கள் சேதம் அடைந்திருக்கின்றன. நிரம்ப குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ இரண்டாயிரம் குடும்பங்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் அவர்களுக்கு நல்ல முறையில் உதவி செய்தால் தான், நிவாரணம் அளித்தால் தான் பாதுகாக்க முடியும். ஏற்கெனவே கொடுப்பது மாதிரி 80 ரூபாய் என்ற முறையில் உதவி கொடுத்தால் போதாது. கொஞ்சம் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். பெருவாரியான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் உடனடியாக நிவாரணம் அளிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். இது முக்கியமான விஷயமாக இருப்பதால் அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, குடியாத்தத்தில் இந்த பயங்கரமான தீ விபத்து நேற்றைய தினம் ஏற்பட்டு உடனடியாக மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள், அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் நண்பர் துரைசாமி ஆகியோர் எங்களோடு தொடர்பு கொண்டு விவரங்களை கூடுமான வரையில் எடுத்துக்



கூறி இருக்கிறார்கள். நேற்றைய தினம் பிற்பகல் 3 மணி அளவில் இந்தத் தீ விபத்து ஆரம்பமாகி இருக்கிறது. இந்த விபத்தை உடனடியாகத் தவிர்ப்பதற்கு வாணியம்பாடி, வேலூர், குடியாத்தம், ஆம்பூர் ஆகிய நகரங்களிலுள்ள தீயணைப்பு வண்டிகள் அந்த இடத்திற்கு விரைந்து சென்றிருக்கின்றன.

ஆயினும், நெசவாளர்கள், நகரசுத்தி தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிற அளவுக்கு ஏறத்தாழ 500 வீடுகள் தீயினால் பாதிக்கப்பட்டன என்கின்ற விவரம் இதுவரையில் அரசுக்கு வந்துள்ளது. அது மாத்திரமல்லாமல் அங்கப்ப முதலியார் என்ற 70 வயது முதியவர் ஒருவரும் 60 வயதுள்ள அவருடைய துணைவியாரும், 25 வயதுள்ள சந்திரன் என்ற ஒருவரும், இரண்டு குழந்தைகளும் ஆக மொத்தம் 5 பேர் இந்தத் தீயினால் இறந்து கருகிவிட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது.

மற்ற விவரங்களை அறிவதற்கு அதிகாரிகளும், மற்றவர்களும் ஒவ்வொரு இல்லமாகச் சென்று இரவு முதல் இதுவரையில் தங்களுடைய ஆய்வுகளை நடத்தி வருகிறார்கள். இந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்ற உடனடி நிவாரணங்களை மாவட்ட ஆட்சித் தலைவரும் ஏனைய அதிகாரிகளும் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மற்றக் கட்சி நண்பர்களும் வேக வேகமாகச் செயல்பட்டு நிவாரணங்களை அளித்து வருகிறார்கள். என்ற சேதியும் எனக்கு வந்துள்ளது.

அங்குள்ள மூன்று உயர்நிலைப் பள்ளிகளில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு வழங்குகின்ற ஏற்பாடும், உறையுள் வழங்குகின்ற ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. இருபதுக்கு மேற்பட்டவர்கள் காயமுற்றிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உடனடியாக மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு உடனடி சிகிச்சைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

தீ விபத்திற்குக் காரணம் எதிர்பாராமல் நடந்தது என்று ஊகிக்கப்படுகிறது. ஒருவருடைய வீட்டுக்குப் பக்கத்திலே ஏற்பட்ட ஒரு சிறு தீச்சுழலின் காரணமாக எங்கும் பரவி இத்தனை பெரிய பயங்கரமான விபத்து விளைவிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. மேலும் தகவல்களை அறிந்து எவ்வளவு இழப்பு ஏற்பட்டிருக்கும் என்ற கணக்குகள் எல்லாம் தெரிந்து உடனடியாக அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்ற அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இதுபற்றி மேலும் விவரங்களை அறிந்து அந்தப் பகுதி மக்களுக்கு ஆவன செய்ய இப்போது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் குடியாத்தம் செல்ல இருக்கிறார்கள். இன்னும் சில நிமிட நேரங்களில் அவர்கள் இங்கிருந்து புறப்பட இருக்கிறார்கள். அதற்கிடையே கலெக்டர் தலைமையில் நிவாரணக் குழுவை அங்கே அமைத்து அந்தக் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

எவ்வளவு சேதம், எப்படி உதவிகள் செய்ய வேண்டுமென்ற முறைகளை வகுப்பதற்கு முன்பு உடனடியாக, முதல் கட்டமாக உதவிகளைச் செய்வதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது, அளிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்து இதுபற்றி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லையென்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு என்னுடைய அனுமதியை மறுக்கிறேன்.

## (3) அமைச்சரின் அறிக்கை.

கேரள மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும இடையே நதி நீர்ப் பிரச்னைகள் குறித்து நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரங்கள் குறித்து பொதுப்பணித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நமது மின் துறை அமைச்சர் மாண்புமிகு ஒ. பி. இராமன் அவர்களும், நானும் தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும், திருவனந்தபுரத்தில், கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் இருந்து வந்த நதி நீர் பிரச்சனைகள் குறித்து 8—3—1974 தேதி அன்று நடத்திய பேச்சு வார்த்தைகளின் முழு விவரங்களை இந்த அவைக்கு அறிவிக்கின்றேன். கேரள மாநிலத்தின் சார்பில், அம்மாநிலத்து முதல்வர் அவர்களும், பொதுப்பணித் துறை, மின் துறை அமைச்சர்களும், தங்கள் தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும் கலந்து கொண்டார்.

(1) பாண்டியார் புன்னபுழா திட்டம் :—

1965-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் தமிழ்நாடு அரசிற்கும் கேரள அரசிற்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி மேற்கு முகமாய் ஓடும் பாண்டியார் புன்னபுழா ஆறுகளில் அணைகள் அமைத்து 14 ஆயிரம் மில்லியன் கன அடி தண்ணீரைக் கொண்டு 442 மில்லியன் யூனிட் மின் சக்தி உற்பத்தி செய்து, தண்ணீரை முறையாக கேரளாவுக்கு விட்டு விடுவதென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்த தண்ணீரைப் பயன்படுத்தி இரு அரசுகளும் இணைந்து சோழாட்டிபுழாவில் மின்சக்தி உற்பத்தி செய்து சமமாக பங்கு கொள்வதற்கும் 1965-ம் ஆண்டு ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது.

பாண்டியாறு புன்னபுழா தண்ணீரை மோயாற்றுக்குள் திருப்பி பவானி வடிகால் பகுதிக்கு வரும்படி செய்தால் கோவை மாவட்டத்தில் வறண்ட பகுதிகளுக்கு பாசன வசதி வழங்கலாமென்று, கோவை மாவட்ட விவசாயிகள் அரசுக்கும் மதிப்பீட்டு குழுவிற்கும் முறையீடு செய்திருந்தனர். மதிப்பீட்டுக் குழு அதன்பேரில் பாண்டியாறு புன்னபுழா தண்ணீரை கீழ்ப் பக்கமாக திருப்புவது குறித்து அரசு கவனிக்குமாறு பரிந்





துரை செய்தது. பரிசீலனை செய்து பார்த்ததில் பாண்டியாறு மோயாறு திட்டம் சாத்தியமானதென்று தெரிந்தது. இத் திட்டத்தால் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட அதே அளவு மின் சக்தி உற்பத்தி செய்வதோடு, ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கருக்கு பாசன வசதி பெற வாய்ப்பு உள்ளது என்று தெரிய வந்ததால், இத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குமாறு கேரள அரசை கேட்கப்பட்டது. இரு அரசுக்குமிடையே பலமுறை பேச்சு வார்த்தைகள் இது குறித்து நடைபெற்றன. 1965-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்திலிருந்து எவ்வித மாறுதலும் செய்ய கேரள அரசு விரும்பவில்லை. தமிழ் நாடு நீர்கோள் பகுதியில் 25,000 மில்லியன் கன அடி தண்ணீர் கிடைப்பதில் 14,000 மில்லியன் கன அடி தண்ணீரைத்தான் கிழக்கு புறமாக திருப்ப தமிழ் நாடு கோருகிறது என்று விளக்கப்பட்டது. ஆயினும் தங்களுக்கு தற்போதுள்ள நிலைகளுக்கு முறையாக தண்ணீர் தேவைப்படுகிறதென்று கேரளா கூறியதன் பேரில் 9,000 மில்லியன் கன அடி தண்ணீரை மாத்திரம் கீழ்ப்பக்கமாக தமிழ் நாட்டிற்கு திருப்பிவிட்டு மீதமுள்ள 5,000 மில்லியன் கன அடி தண்ணீரை கேரளாவுக்கு விட்டு விடுகிறோமென்று தெரிவித்தோம். மேலும் கேரள மாநிலத்திற்கு ஏற்படும் 9,000 மில்லியன் கன அடி தண்ணீர் இழப்பை ஈடு செய்ய இதன் தொடர்பாக கேரள மாநிலத்தில் கட்டப்படவேண்டிய மூன்று அணைகளையும் தமிழக அரசு, நம் செலவிலேயே கட்டித் தருகிறோமென்று தெரிவித்தோம். அதற்கும் கேரள அரசு மறுத்துவிட்டது. இதற்கு அவர்கள் சொன்ன காரணம், தங்களுக்கு மின் சக்தி உற்பத்தி குறையும் என்பதாகும். அதற்காக, பாண்டியாறு—புன்னபுழா திட்டத்திற்கு கீழ் கட்டப்பட வேண்டிய சோழாட்டிபுழா திட்டத்தில் தமிழக அரசிற்கு இருக்கும் 50 சதவிகிதம் மின் சக்தி உரிமையை விட்டுக் கொடுக்கிறோம் என்றும் தெரிவித்தோம். இதற்கும் மேலாக ஒரு படி மேலே சென்று மற்றொரு கருத்தும் தெரிவித்தோம். அதாவது பாண்டியாறு புன்னபுழா ஆறுகளிலிருந்து, கோவை மாவட்டத்தின் பாசனத்திற்கு கேரளா நீர் வழங்க ஒப்புக் கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் நெல் கேரளாவுக்கு வழங்குகிறோம் என்றும் தெரிவித்தோம். ஆயினும் நாம் எடுத்துரைத்த எல்லா மாற்று யோசனைகளையும் கேரள அரசு ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, 1965-ம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தத்தைத்தான் நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்தியது. இதற்கு மேலும் காலந் தாழ்த்துவதால் பலன் கிடைக்குமென்று நம்பிக்கை இழந்துவிட்டது மட்டுமல்ல, பாண்டியாறு புன்னபுழா வேலைகளுக்கான செலவுத் தொகை மேலும் கூடுதலாகும்.

இதன்றி, கீழ் நீராறு அணை சம்பந்தமாக கேரள மாநிலத்தின் அனுமதியை நாம் பெற வேண்டி இருந்தது. இதற்கிடையில் இந்திய பிரதமர் நம் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் பாண்டியாறு—மோயாறு திட்டத்தால் முதுமலை வனவிலங்கு சரணாலயத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்படுமென்றும் வனவிலங்குகள் உய்விடத்திற்கு குந்தகம் விளையாது, மாற்று ஏற்பாடுகள் செய்யுமாறும் தெரிவித்தார்கள்.

## கேரள மாநிலத்திற்கும், தமிழகத்திற்கும் இடையே நதி நீர்ப் பிரச்னைகள் குறித்து நடந்த பேச்சு வார்த்தைகளின் விவரங்கள் குறித்து பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை

[திரு. ப. உ. சண்முகம்] [1974 மார்ச் 11

இவைகளின் காரணமாக வேறு வழியின்றி, கேரள அரசின் வற்புறுத்தலான 1965-ம் ஆண்டு ஒப்பந்தப் படியே பாண்டியாறு புன்னபுழா திட்டத்தை செயல்படுத்தலாம் என்ற இசைவு மன வருத்தத்தோடு நம் தரப்பில் தரப்பட்டது.

(2) கீழ் நீராறு அணை.

1970-ம் ஆண்டு மே திங்கள் 29-ம் நாள் கையெழுத்திட்ட பரம்பிக்குளம்–ஆழியாறு திட்ட ஒப்பந்தப்படி கீழ் நீராறு நீர்க்கோள் பகுதியில் கட்டவிருக்கும் நீர்த்தேக்க அணைக்கட்டுமிடத்திற்கும், தண்ணீரை கொண்டு வர அமைக்கவிருக்கும் சுரங்க பாதைக்கான இடத்திற்கும் நாம் கேரள அரசின் ஒபபுதலைப் பெற வேண்டும். அணைக்கட்டுவதற்கு சாத்தியக் கூறுக உள்ள ஒரே ஒரு இடத்திற்கான ஒப்புதலை கேரள அரசிடம் நாம் கேட்டோம். ஆனால் தண்ணீர் வழங்குவதில் கூட்டு மேற்பார்வை உரிமை போன்ற சில பிரச்சனைகளை கேரளா எழுப்பிற்று. திட்டத்தை செயல் படுத்துவதில் தாமதம் ஏற்படின் அதன் விளைவாக செலவினம் அதிகரிக்குமென்றும், தண்ணீர்த் தேவைப்படுகிற பின்தங்கிய பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படும் என்றும் கேரள அரசிற்கு விளக்கி சொல்லப்பட்டது. பாண்டியாறு—புன்னபுழா ஒப்பந்தத்தை ஒட்டி கேரள அரசு கீழ் நீராறு அணை சுரங்கப்பாதை இவை அமைக்கும் இடங்களுக்கு தற்போது ஒத்துக்கொண்டது. இதனால் பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் 2,000 மில்லியன் கன அடி தண்ணீர் கூடுதலாகப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைக் கொண்டு கூடுதலாக மின்சார உற்பத்தியும் பாசன வசதியையும் நம்மால் பெருக்கிக்கொள்ள முடியும்.

(3) ஆனமலையாறுத் திட்டம்.

கேரள அரசு நமக்கு ஆய்வின் முழு விவரங்களையும் அறிவிக்கவேண்டும். மேலும் அவர்கள் ஆய்விற்காக உபயோகப்படுத்தும் நம் எல்லையிலுள்ள நிலங்களுக்கு வாடகை தரவேண்டும் என்பன போன்ற நிபந்தனைக் குட்பட்டு, கேரள அரசு ஆனமலையாறுத் திட்டத்தின் ஆய்விற்கான பணிகளை நம் எல்லையிலும் மேற்கொள்ளலாம் என்று நம் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலமாக நீண்ட நாளாகத் தேங்கிக் கிடந்த திட்டங்களை செயல்படுத்தவும் அதன் பயனாக, நம் மாநிலத்தில் தண்ணீர் வசதியையும் மின்சக்தி உற்பத்தியையும் ஓரளவிற்கு பெருக்க ஏதுவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## (4) கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசிப் பற்றுக்குறை, விலையேற்றம், தரமான அரிசி நியாயமான விலையில் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் ஆகியவை குறித்து

THIRU R. PONNAPPA NADAR: I call the attention of the Hon. Minister for Food and Co-operation to a matter of urgent public importance, namely, the acute scarcity of rice in Kanyakumari district where rice is sold at Rs. 4 per measure during December 1973 and January 1974, the enhancement of the price of rice to Rs. 2 per kilo by the Civil Supplies Corporation Branch at Nagercoil in December 1973 and the necessity to supply good quality of rice at fair and reasonable prices there.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்டு நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்டதொரு முடிவையொட்டி, 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் அம்மாவட்டத்தில், தற்போது அமுலிலுள்ள பங்கீட்டு முறையும், மானியப் போக்குவரத்துக் கட்டுப்பாடும் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. விளவங்கோடு வட்டமும், தமிழ் நாடு கேரள எல்லைப்பகுதியில் கல்குளம் வட்டத்திலுள்ள 10 கிராமங்கள் அமைந்துள்ளதும் அரிசி உற்பத்தியில் பற்றுக் குறை பிரதேசமாக உள்ளதுமாகிய இப் பகுதி தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு நெல், அரிசி (போக்கு வரத்துக் கட்டுப்பாடு) ஆணையின்கீழ் தனிப்பட்டதொரு பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளன; இப் பகுதியில், அரசு இருப்புக்களிலுள்ள அரிசியைப் கட்டுப்பாட்டு முறையில் வயது வந்த நபர் ஒருவருக்கு வாரத்திற்கு இரண்டு கிலோ வீதமும், சிறுவர்களுக்கு வாரத்திற்கு ஒரு கிலோ வீதமும் பங்கீடு செய்யும் ஏற்பாடு செயல்படுத்தப்பட்டுள்ளது. கல்குளம் வட்டத்தின் எஞ்சிய பகுதியும், அகஸ்தீஸ்வரம் தோவாளை வட்டங்களும் சேர்ந்த ஓர் அறிவிக்கப்பட்ட பகுதியாகின்றன. எனினும், முழுதும் நகர்ப் பகுதியாக அமைந்துள்ள, மாவட்டத் தலைமையிடமான நாகர்கோயிலிலு உள்ள பொது மக்களுக்கு அரசு அரிசி வழங்கப்படுகின்றன. அரை மதியத்திற்கொருமுறை (பதினைந்து நாட்களுக்கொரு முறை) பெரியவர்கள் ஒவ்வொருவருக்கும் இரண்டு கிலோ, குழந்தை ஒன்றுக்கு ஒரு கிலோ என்ற விகிதங்களில் அரிசி வழங்கப்படுகிறது. இந்த அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50 என்ற வீதத்தில் விற்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் அரிசி ஓரளவு பற்றுக்குறையாக உள்ளது. இம்மாவட்டத்திற்கு ஆண்டொன்றுக்கு 1,14,960 டன் அரிசி தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகிறது. இம் மாவட்டத்தில், ஆண்டொன்றுக்கு உற்பத்தியாகும் அரிசி, சுமார் 93,000 டன்னாகும். 22,000 டன் அரிசி பற்றுக்குறையாக உள்ளது.

விளவங்கோடு வட்டத்திற்கும், கல்குளம் வட்டத்திலுள்ள பத்து கிராமங்களுக்கும் திங்களொன்றுக்கு 5,000 டன், நாகர்கோயில் நகருக்குத் திங்களொன்றுக்கு 560 டன் என்ற விகிதங்களில், 1973 ஆம் ஆண்டில் அரசு இருப்பிலிருந்தும் தனி வணிகர்களாலும் உபரி மாவட்டங்களி லிருந்து மொத்தம் 71,736 டன் அரிசி கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இம்மாவட்டத்திற்குப் பற்றாக்குறையாக உள்ள தென்று கூறப்படும் அளவைக் காட்டிலும் இது மிகவும் அதிகமே.

ஜனவரி மாதம் நெல் அறுவடை எதும் இல்லாததால், அரிசியின் விலை கன்னியாகுமரி மாவட்டத்தில் சற்று உயர்ந்தது உண்மையாகும். ஆயினும் பிப்ரவரி மாதம் மத்தியிலிருந்து கும்பம் நெல் அறுவடை ஆரம்பித்த பின்பு அரிசியின் விலை குறைய ஆரம்பித்துள்ளது. வெளிச் சந்தை விலையை ஆராய்ந்து பார்க்கையில் ஒழுங்குபடுத்தப்பட்ட விநியோக முறை அமுலில் இல்லாத பகுதிகளாகிய தோவாளை வட்டம், அகஸ்தீஸ் வரம் வட்டம், கல்குளம் வட்டத்தில் பத்து கிராமங்களைத் தவிர மற்ற பகுதி ஆகியவற்றில் அரிசி விலையைக் கணக்கில் கொள்ள வேண்டும். ஒழுங்குபடுத்தப்பட்ட அரிசி விநியோகம் அமுலில் உள்ள விளவங்கோடு வட்டத்திலும், கல்குளம் வட்டத்திலுமுள்ள 10 கிராமங்களிலும் நிலவும் அரிசியின் வெளிச் சந்தை விலையை பொருட்படுத்த அவசியமில்லை. ஏனெனில், இப்பகுதியிலுள்ள நெல் உற்பத்தியாளர்கள் தவிர மற்றவர்கள் கிலோ ரூபாய் 1.50 என்ற விலையில் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் அரிசி அனுமதி பெற்ற கடைகள் மூலம் பெறுகிறார்கள். ஒழுங்குபடுத்தப்பட்ட விநி யோக முறை அமலில் இல்லாத கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சில சமயங்களில் தற்போது நிலவும் அரிசியின் வெளிச் சந்தை விலை வருமாறு :—

| ஊரின் பெயர். (1) | 2—3—1974 தேதிய கிலோ ஒன்றின் சில்லறை விலை. (2) |
|---|---|
| நாகர்கோவில் (அகஸ்தீஸ்வரம் வட்டம்). .. .. .. | ரூ. 2.05 |
| தப்பாண்டி (தோவாளை வட்டம்). .. .. .. | ரூ. 1.95 |
| க்கலை (கல்குளம் வட்டம்). .. .. .. | ரூ. 2.15 |

வ்விலைகள் மிக அதிகம் எனக் கூற முடியாது.



கன்னியாகுமரி மாவட்ட ஹோட்டல் சொந்தக்காரர்கள் முறை யிட்டுக் கொண்டதன்பேரில், கிலோ ஒன்றுக்கு ரூ. 2 என்ற வீதத்தில் நேர்த்தி ரக அரிசியைப் பெருமளவில் ஹோட்டல் சொந்தக்காரர்களுக்கு வழங்க உணவுப் பொருள் வழங்கு கழக ஆணையாளர் ஆணைகள் பிறப்பித் தார். கன்னியாகுமரி மாவட்ட உணவுப் பொருள் வழங்கு கழக அதி காரிகள் இந்த ஆணையைத் தவறாகப் புரிந்துகொண்டனர். முறைப் படுத்தப்பட்ட பங்கீட்டு முறை பகுதியிலுள்ள மக்களுக்கு விற்கப்படும் அரிசி யின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50-லிருந்து ரூ. 2 ஆக உயர்த்தப்பட வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் நினைத்தனர். எனவேதான் அவர்கள் இப்பகுதியிலுள்ள மக்களுக்குக் கிலோ ஒன் றுக்கு ரூ. 2 என்ற வீதத்தில் 17—12—1973-லிருந்து அரிசி விற்பனையைத் தொடங்கினர். இது மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கு வரவே அவர் சென்னையிலுள்ள உணவுத் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார். அதன் பின்னர், கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50 என்ற பழைய விலையிலேயே அரிசி விற்கப்பட வேண்டுமென்று உணவுப்பொருள் வழங்கு கழக அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. மாற்றி யமைக்கப்பட்ட உத்தரவுகள் 24—12—1973 முதற்கொண்டு செயலில் இருந்து வருகின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தத் தடவை விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. பல பகுதிகளில் கரிந்து போயிருக்கின்றன. அந்த விவரங்கள் பற்றி இன்றைய ஹிந்து பத்திரிகையில் கூட தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆதலால் 22,000 டன்தான் டெபாஸிட்டாக இருக் கிறது என்று சொல்வது முன்பு எடுக்கப்பட்ட கணக்கு.

அதுமட்டுமல்லாமல் இப்போது விலைப் பட்டியலை அமைச்சர் அவர்கள் தந்தார்கள். அதாவது, 2·05, 1·95, 2·30, 2·22 என்று படி அரிசி அங்கு விற்பதாக தகவல் எல்லாம் கூறியிருக்கிறார்கள். இது அங்கிருக்கிற நிலைமைக்குப் புறம்பானது என்பதை நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி, இன்று ஒரு கோட்டை நெல் 75 பக்கா என்று சொல்வார்கள். அது ரூ. 110-ல் இருந்து ரூ. 120 வரையில் நாகர் கோவில் நகரில் விற்றுக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து இன்னும் மேலும் விலை ஏறுகிற விதத்தில் மே, ஜூன், ஜூலை மாதங்களில் மிகவும் கடுமையாக இருக்கும். ஆகவே அந்த நேரத்தில் பாதுகாப்பு அளிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசிப் பற்றாக்குறை, விலையேற்றம், தரமான அரிசி நியாயமான விலையில் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் ஆகியவை குறித்து

[1974 மார்ச் 11

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, பற்றாக் குறை ஏற்படும் என்ற அளவில் 22,000 டன் என்று நாங்கள் கணக்குப் போட்டிருந்தாலும்கூட, 1973-ம் ஆண்டிலே அரசு இருப்பிலிருந்தும் தனி வணிகர்களாலும் 71,736 டன் அங்கே அனுப்பப்பட்டிருக்கிறது. அதையொட்டி நாங்கள் கொடுத்திருக்கிற கணக்கு 22,000 டன் பற்றாக் குறை என்றிருந்தாலும், அங்கே மேற்கொண்டு 50,000 டன் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த முறையில் அங்கே ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன. ஆனால், இந்த உபரியாக வருவதை யார் வாங்கு கிறார்கள், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் கடத்தல்காரர்களால் தான் இந்த அதிகவிலை விற்கும் பிரச்னை ஏற்பட்டு வருகிறது. இந்த 50,000 டன்னையும் அரசே கூட்டுறவுத் துறையின் மூலம் ரூ. 1·50 விலையில் விற்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஏற்பாட்டிலே ஏதாவது தவறு இருந்தால், சுட்டிக் காட்டினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

## 5. அறிவிப்பு.

### பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 18—3—1974-ம் நாளன்று விவாதத் திற்கும், வாக்கெடுப்பிற்கும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் 34. உணவு பொருள்கள் வழங்கு துறை, 55. பல்வகை மூலதனச் செலவு ஆகியவை 22—3—1974-ம் நாளன்றும், 22—3—1974-ம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக்கோரிக்கைகள் எண் 18. மருத்துவம், 19. பொதுச் சுகாதாரம், 47. பொதுச் சுகாதாரம், துப்புரவு நீர்வழங்கல் குறித்த மூலதனச் செலவு, 33. நகரப் பகுதி வளர்ச்சி ஆகியவை 18—3—1974-ம் நாளன்றும் எடுத்துக்கொள்ளப் படும் என்றும் அறிவிக்கிறேன்.

## 6. 1974–75 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. குழ. செல்லையா : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்தினைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தனக்கே உரிய நல்ல தமிழில் மிக தெளிவாக நீண்டதொரு அறிக்கையாகச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும், உற்பத்தி குறைவிற்கும், இங்கே ஏற்படுகின்ற அந்தக் குறைகளைத் தடுப்பதற்கும் பூரண முழுப்பொறுப்பு நடுவண் அரசுதான் என்பதை இங்கே தெளிவாக





எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும் அந்தக் காரியங் களுக்கு எல்லாம். நான் பல முறை கடிதம் எழுதியிருக்கிறேன், தொலை பேசி மூலம் பேசியிருக்கிறேன், தந்தி கொடுத்து இருக்கிறேன். என்ற விளக்கத்தையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார் கள்.

அவர்களுடைய அறிக்கையைப் பார்க்கிற நேரத்தில் மத்திய அரசிட மிருந்து மாநில அரசுக்கு பெற வேண்டிய காரியங்களைப் பெறுவதற்கு தந்தி கொடுப்பதும் கடிதம் எழுதுவதும் தான் முக்கியம்என்றால் இதற்கு ஒரு முதலமைச்சர் என்ற முறையில் இவ்வளவு பெரிய அமைப்புகள் தேவை தானா என்பதை அவருடைய கருத்திலிருந்து நம்மாலே உணர முடிகிறது. எனவே, இதைப் போன்ற காரியங்களைச் செய்வதற்கு நம்முடைய அரசே முழு பொறுப்பு என்று இருக்கவேண்டும். அதை உணரவில்லை, முழு கவனமும் இதில் அரசு செலுத்தவில்லை, தவறி இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மின்சாரம், கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்னைகள் குறித்து இங்கே நிதி நிலை அறிக்கையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். வேளாண்மை யைப் பொறுத்தவரையில் நம்முடைய நாடு சிறப்பாக உற்பத்தியைப் பெருக்கி இருந்தால் தான் நாட்டிலுள்ள முன்னேற்றம், வளர்ச்சி மிக நல்ல முறையில் இருக்கும்.

குறிப்பாக, விவசாயிகளைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசின் கவனம் அதிகமாக அந்தப் பகுதிக்குத் திரும்பவில்லை என்பதை நம்மாலே சொல்ல முடியும். விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள், பூச்சி கொல்லி மருந்துகள், விதை போன்றவற்றில் கவனம் செலுத்தவில்லை, விவசாயிகளுக்கு, ஏழை நடுத்தர விவசாயிகளுக்கு தகுந்த முறையில் அது பகிர்ந்து அளிக்கப் படவில்லை என்ற நிலைமையை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. காரணம், தஞ்சை மாவட்டத்தி லிருக்கும் விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் அங்கே நிச்சயமாகப் போகவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையிலே இத்தனை டன் உரம் குடோனில் இருக்கிறது, அனுப்பியிருக்கிறோம் என்ற செய்தி கேட்டு விவசாயிகள் வாங்குவதற்குச் சென்றால் அவர்களுக்கு தகுந்த முறையில் உரங்கள் வழங்கப்படவில்லை.

ஏக்கர் ஒன்றுக்கு 10 கிலோ வேண்டுமென்று சொல்லுகிறார்கள். 10 கிலோ உரம் வாங்க வேண்டுமானால் கணக்குப் பிள்ளையிடம் ரசீது வாங்க வேண்டும். அந்த ரசீதை வாங்கிக் கொண்டு போய் கிராம சேவக்கிடம் கையெழுத்து வாங்கவேண்டும். அப்படி கிராமசேவக்கிடம் வாங்கிய ரசீதை எடுத்துக்கொண்டுபோய், விவசாயி வளர்ச்சி அதிகாரி யிடத்தில் கொடுத்து 10 கிலோ உரம் வாங்க வேண்டும். இதற்கு ஏறத்தாழ மூன்று நாட்கள் அவன் வேலையை விட்டு அலைய வேண்டியிருக்கிறது. இந்த நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இருந்தது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. குழ. செல்லையா] [1974 மார்ச் 1

அது மட்டுமல்லாமல் ஒரு உர மூட்டையின் விலை ரூ. 50·30 என்று சொன்னால் அது ரூ. 130 வரை விற்கப்படுகிறது. இதனால் ஏழை எளிய நடுத்தர விவசாயிகள் அதை வாங்கிப் போட முடியாத சூழ்நிலையி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ரசாயன உரம் இல்லாமல் இந்த காலத்தில் சாகுபடி செய்ய முடியாது என்பது எல்லோரும் அறிந் உண்மையாகும். முறையாக உரம் வழங்குவதற்கு வழி வகை செய் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

உரம்தான் இந்த நிலைமை என்றாலும், பூச்சிகொல்லிமருந் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். குறுகிய கால பயிர்களான கருணை போன்றவற்றிற்கு ஒரு முறையல்ல 6 முறை பூச்சி மருந் தெளிக்கவேண்டும். உரம் தான் தட்டுப்பாடு என்றால் பூச்சி கொல்ல மருந்தாகிலும் விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டாமா? அவர்கள் இரட்டிப்பு விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. அங்கேயிருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வினியோகம் செய்யாமல், இப்படிப்பட் பூச்சிகொல்லி மருந்துகளை தனியார் மூலம் வினியோகம்செய்ய அனுமதித் இருப்பதால் இப்படி விவசாயிகள் இரட்டிப்பு விலை கொடுத்து வாங் வேண்டியிருக்கிறது.

அதே போல் பொறுக்கு விதைகளும் தற்போது கிடைக்கவில்லை கிடைக்கின்ற விதைகளைப் போட்டாலும் அவற்றிற்குப் பாதுகாப்பு தகுந் படி இல்லை. இதனால் விளைச்சலில் பர்சன்டேஜ் குறைந்து விடுகிறது. அதனால் தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆகவே, இந்த அரசு விவசாயிகள் பக்கம் தகுந்த கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது களம் கட்டித் தர ஒன்றியங்கள் முற்பட்டிருக்கின்றன. இந்த களங்கள் கட்டுகிற நேரத்திலும் யார்யார் ஒன்றியத்தின் தலைவருக்கு ஓட்டுப் போட்டார்களோ, அந்த ஊராட்சிக்குத்தான் அந்தப் பணம் ஒதுக்கப்படுகிறது. இப்படி களங்கள் கட்டப்படுகிற நிலைமையை நம்மாலே பார்க்க முடிகிறது. இதை யாரும் மறுத்துச் சொல்ல முடியாது. ஒன்றியங்களில் பார்த்தால் தெரியும்.

விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கடன் கொடுக்கப் படுகிறது. கூட்டுறவுச் சங்கத்தில் யாரோ சிலர் கையாடல் செய்ததற்காக, யாரோ சிலர் பணம் எடுத்தார்கள் என்பதற்காக, அந்த விவசாயி களுக்குத் தருவது சரியான படி, முறையாகத் தரப்படவில்லை. அவர் களுக்குக் கடன் வழங்குகிற நேரத்தில் பல்வேறு தவறுகளைச் சொல்லி காலதாமதம் செய்கிறார்கள். அவர்கள் அதற்குப் பதில் தயாரித்து வருவதற்கே 2, 3 மாதம் ஆகிறது.

விவசாயிகளுக்கு விவசாய காலத்தில், குறிப்பிட்ட பயிர் வைக்கிற காலத்தில் போதிய உரம், கடன், பூச்சி கொல்லி மருந்து இவற்றை வழங்காவிட்டால் பிறகு அது பயன்படாமல் போய்விடும். ஆகவே குறிப்பிட்ட காலத்தில் கடன் கொடுக்க வழிவகை செய்யவேண்டும்.



1974 மார்ச் 11] [திரு. குழ. செல்லையா]

தஞ்சை கூட்டுறவு வங்கியில் ஒரு புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தலைவரோ, செயலாளரோ தவறு செய்தார்கள் என்பதற்காக, பணத்தை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்பதற் காக, அந்தக் கடன் தொகையை பணமாக பட்டுவாடா செய்யாமல் அவர்களுக்கு செக் மூலமாக கொடுக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு விவசாயியும் தங்களுடைய வேலையை விட்டுவிட்டு எங்கே பாங்க் இருக்கிறது என்று பார்த்து அங்கே போய் 1, 2 நாள் தங்கி பணத்தைப் பெற்றுக் கொண்டு வரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

எனவே அந்த பட்டுவாடா முறையில் தலைவர் மீதோ, செயலாளர் மீதோ சந்தேகம் ஏற்பட்டால், கூட்டுறவு மத்திய வங்கியே ஒரு மொபைல் வண்டி மூலம் எந்தெந்தப் பகுதிகளில் விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்ய வேண்டுமோ அந்தப் பகுதிகளுக்குச் சென்று பணம் விவசாயிகளுக்குப் பட்டுவாடா செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பால் உற்பத்தியைப் பற்றிச் சொல்கிற போது 1972–73, 1973–74-ல் இருந்ததைவிட அதிகமான உற்பத்தி இப்போது இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தேவையான பால் மக்களுக்குக் கிடைக்கிறதா என்றால் இல்லை. எல்லா இடங்களிலும் பால் பண்ணையில் நஷ்டம் ஏற்படுவதாகத்தான் கணக்கு இருக்கிறது. லாபம் இருந்ததாகக் கணக்கில் இல்லை. இப்படி உற்பத்தி அதிகமாகியிருக்கிற கணக்கைப் பார்த்தால் எப்படி நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தஞ்சை மாவட்டத்தில் ஒரு பால் பண்ணை இருந்தது. அந்தப் பால் பண்ணையின் தலைவராக அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பேற்று இருந்தார் கள். 20 லட்ச ரூபாய் அந்தச் சங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இப்போது அந்தச் சங்கத்தைக் கலைத்துவிட்டு, அதன் பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பின்கீழ் கொடுத்து இருக்கிறார்கள்.

இப்படி ஒவ்வொரு சங்கமும் 20 லட்சம், 10 லட்சம் என்று நஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, இந்த அரசு தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. ஏதாவது எதிர் கட்சியைச் சார்ந்தவர்கள் சங்கங்களில் பொறுப்புகளில் இருக்கிறார்கள் என்று சொன்னால் அதுவும் குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்று சொன்னால், அந்தச் சங்கங்களுக்கு ஒரு முறைக்கு இரு முறை தணிக்கைக்கு வந்து, உண்மையிலேயே எந்த விதமான தவறுகளும் இல்லையென்றால் கூட, அதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கிற நிலைமையிருக்கிற நேரத்தில், ஒரு பால் பண்ணையில் 20 லட்ச ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது, அதன் மேல் ஒன்றும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று

சொன்னால், அதற்குக் காரணம் ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அதற்குத் தலைவராக இருந்தார்கள் என்பதுதான் என்ற குற்றச்சாட்டை நான் இந்த நேரத்தில் சொல்லாமல் இருக்கமுடியாது.

[முற்பகல் 10--30]

மாண்புமிகு திரு. மு.கண்ணப்பன் : தஞ்சாவூர் கூட்டுறவு பால் வழங்கு சங்கத்தில் அங்கத்தினர் சட்ட மன்ற உறுப்பினரால் 20 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். ஏராளமான ஊழியர்கள் அங்கே ஏற்கனவே வேலையில் இருந்த காரணத்தினால் ஓரளவுக்கு நஷ்டம் ஏற்பட்டு, அன்றைக்கு நிர்வாகத்தில் இருந்தவர்கள் பதவி காலம் முடிந்த பிறகு அரசாங்க அதிகாரிகளே அதற்கு முழுப் பொறுப்பேற்று நடத்தும் படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, 20 லட்சம் ரூபாய் நஷ்டம் என்று தவறான தகவல் தரவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. குழ. செல்லையா : சட்டமன்ற உறுப்பினர் இந்த சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்றிருந்தார்கள். நிர்வாகத்தின் முழுப் பொறுப்பும் தலைவரைச் சார்ந்தது. அதிலே பணியாளர்களை நியமிப்பது கூட அந்த போர்டே தவிர, அரசாங்கம் இல்லை. இந்த இப்புக்குத் தகுந்த காரணம் சொல்லப்படவில்லை. தணிக்கை கூட இன்னும் முடியவில்லை. எனவேதான் முழுப் பொறுப்பு தலைவரைச் சார்ந்தது.

எதிர்க்கட்சியினர் சம்பந்தப்பட்டிருந்தால் தீவிர நடவடிக்கை எடுப்பதும், ஆளும் கட்சியினர் சம்பந்தப்பட்டிருந்தால், ஆளும் கட்சி உறுப்பினர் தலைவராக இருக்கிற காரணத்தினால் நடவடிக்கை எடுப்பதற்கு கால தாமதம் ஆகிறது. ஏதேதோ செய்கிறார்கள் என்ற சந்தேகம் பொது மக்களுக்கு எழுந்து, சர்வகட்சியினர் ஊர்வலம் சென்று கிளர்ச்சி செய்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனுக் கொடுக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்களுக்கும் சர்வகட்சிக் குழுவினர் மனுக்கள் கொடுக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நான் தவறான தகவல் கொடுக்கவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மின்சாரம் போட்டதற்காக மின்சார விழாக்களை நடத்துகிறார்கள். எல்லா கிராமங்களிலும் வேலைகள் முடிந்துவிட்டதாகச் சொல்லப்பட்டாலும், வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால், மின்சாரத் தட்டுப்பாட்டுக்குக் காரணம் ஒரு வகையிலே உற்பத்திக் குறைவு தான்.

அதே நேரத்தில் எங்கே ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்கே அமைச்சர்கள் வருகிறார்களோ அந்த நேரத்தில் அங்கெல்லாம் விழாக்கள் எடுக்கிறார்கள். அப்படி விழா நடைபெறுகிறபொழுது மூன்று நாட்களுக்கு



சுற்று வட்டாரத்தில் 15 கிராமங்களுக்கு மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அந்த அளவுக்கு ஆடம்பரமாக மின்சாரத் தட்டுப்பாடு உள்ள காலத்தில் விழா எடுக்க வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். குறைந்த அளவு மின்சாரத்தைப் பயன்படுத்தி விழா எடுக்கலாம். அதே நேரத்தில் பெரிய அளவுக்கு பத்து, பதினைந்து கிராமங்களுக்கு தேவையான மின்சாரம், இரண்டு, மூன்று நாட்களுக்குத் தேவையான மின்சாரத்தை ஒரு விழாவுக்குப் பயன்படுத்துவது என்றால், அப்படி ஆடம்பர விழாக்கள் எடுப்பதினால் நெருக்கடியான சூழ்நிலை ஏற்படுகிறது. இனிமேலாவது இம்மாதிரி நிலைமைகளைத் தவிர்க்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார வேலைகளை அவசரம் அவசரமாகச் செய்வதன் காரணத்தினால் ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை நான் முன்னாள் சட்ட மன்றத்தில் கூட எடுத்துச் சொல்லியிருக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், என்னுடைய கிராமத்தில் மின்சாரக் கம்பங்கள் ஊன்றப்பட்டனவே தவிர, மின்சாரம் தரப்படவில்லை. ஒரு வரிசையில் கம்பிகள் இழுக்கப்பட்டன. இன்னொரு வரிசையில் சில கம்பங்கள் இருக்கின்றன. மற்ற பகுதியில் கம்பங்கள் ஊன்றப்படவில்லை.

பேராவூரணித் தொகுதியில் முதுகாடு என்ற ஒரு கிராமம். சட்ட மன்ற உறுப்பினர் இருக்கிற இடத்திலேயே இந்த நிலைமை என்றால், மற்ற பகுதிகளில் காரியங்கள் எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

பல்வேறு பகுதிகளில் கொடுத்த ஸ்கெச்சை வைத்துக்கொண்டு செய்கிறோம் என்று அங்கே இருக்கிற அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால், ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிற சட்டமன்றத் தொகுதிகளில் அங்கே எந்தவிதமான கணக்குகளும் எடுக்கப்படுவதில்லை.. வரிசையாக மின் கம்பங்களை ஊன்றி கம்பிகளை இழுத்துவிட்டு, பின்னால் எஸ்டிமேட் போடக் கூடிய நிலைமை இருக்கிறது. எனவேதான், பாரபட்சமற்ற வகையில் எல்லா மக்களுக்கும் ஒளி வழங்கவேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். எல்லா மக்களிடமும் அரசு வரி வாங்குகிறார்கள். எல்லா மக்களுக்கும் வரி போடப்படுகிறது. எல்லாவித உரிமைகளும் எல்லா மக்களுக்கும் உண்டு என்ற சொல்லுகின்ற நேரத்தில் ஒரு சில பகுதிகளுக்கு இப்படி, வேறு சில பகுதிகளுக்கு அப்படி என்கின்ற நிலைமை இருப்பது நல்லது அல்ல என்பதை இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். மின் சாரத்தை விரிவுபடுத்துகிற நேரத்தில் காவல்துறை காலனிகளுக்கு, போலீஸ் காரர்கள் தங்குகின்ற காலனிகளுக்கு பத்து மணியோடு மின்சாரம் நிறுத்தப் பட்டு விடுகிறது. அதனால் அவர்களுடைய குழந்தைகள் தேர்வு நேரங் களில் மின்சாரத்தைப் பயன்படுத்தி படிக்க முடியவில்லை. எனவே பொதுவாக மீட்டர் இருப்பதைத் தவிர்த்து, வீடு வீடாக தனி மீட்ட

[திரு. குழ. செல்லையா] [1974 மார்ச் 11

வைத்து, இவ்வளவு தான் மின்சாரம் பயன்படுத்தவேண்டும். அதற்கு மேல் பயன்படுத்தினால் பணம் கட்டவேண்டும் என்ற முறையை வைத்தால், காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நலமாக இருக்கும்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடன் கொடுத்ததை ரத்து செய்வதாக சொல்லியிருப்பது மகிழ்ச்சி அடையக் கூடிய காரியமாகும். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு வேலப்பன் அவர்கள் எடுத்துக்காட்டியது போல் அந்த ஒரு கோடி ரூபாயும் முறைப்படி பாதிக்கப்பட்ட நெசவாளருக்குத் கிடைத்ததா என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

சின்னாளம்பட்டி, சித்தையன்கோட்டை பகுதிகளிலே அண்ணா தி.மு.க.வின் சார்பில் ஜனவரி 10, 11, 12-ம் தேதிகளில் ஏறத்தாழ 10,000 பேர்களுக்கு கட்சி பாகுபாடு இல்லாமல் இனமாக அரிசி விநியோகம் செய்தோம். அப்பொழுது நானும் அங்கே போயிருந்தேன். அப்படி போயிருக்கும்பொழுது நெசவாளர்களிடமிருந்து அவர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருக்கிற கார்டுகளை வாங்கி பரிசீலனை செய்து பார்க்கிற நேரத்தில் எங்களுக்குக் கிடைத்த தகவல் அங்கிருக்கிற சின்னாளம்பட்டி நெசவாளர்களைப் பொறுத்தவரையில், முறையான நெசவாளர்கள் 100 பேர்கள் இருக்கிறார்கள் என்றால், 200, 300 கார்டுகள் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். ஏன் இப்படி நிலைமை என்றால் அங்கு பட்டு நூல் கார்டு மூலம் வாங்கி விற்பனை செய்து கொள்ளலாம். ஆளுகின்ற கட்சியிலுள்ளவர்கள் 100 பேர்கள் இருந்தால் 200 கார்டுகள் வாங்கி, 100 பேர்களுக்கு விநியோகம் செய்துவிட்டு, அவர்கள் பட்டு நூலை வாங்கி விற்பனை செய்ததாக அங்கே சொல்லப்படுகிறது. நான் இதைச் சொல்லுகிற காரணம் என்னவென்றால் ஒரு கோடி ரூபாயை ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்றால், அதை முன்கூட்டியே செய்திருக்கலாம். ஆனால், காலம் கடத்தி . . .

மாண்புமிகு திரு செ.மாதவன் : அனைத்துக் கட்சி குழு போட்டு, கார்டு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதி அங்கு இருந்திருப்பார்கள். அப்பொழுது அவர்கள் இதை எடுத்துக் காட்டவில்லையா?

திரு குழ. செல்லையா : பூரண உரிமை அந்தத் தொகுதி தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் கையிலே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட, அதிகாரிகள் யார் சொன்னாலும் ஆளும் கட்சியினர் சொல்லுவதைக் கேட்கிறார்களே தவிர, எல்லோருடைய கருத்துகளையும் கேட்டுக்கொள்வதில்லை.

மாண்புமிகு திரு செ. மாதவன் : கட்சி விவகார உணர்ச்சியில் நான் தலையிட விரும்பவில்லை. ஆனால் மாநிலம் முழுவதும் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் அனைத்துக் கட்சிக் குழு போடப்பட்டு, யார் யார் தறி வைத்திருக்கிறார்கள் என்று அவர்கள் கணக்கு எடுத்து கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கணக்குக்கு மீறி ஏதாவது தவறு



1974 மார்ச் 11] [திரு. செ. மாதவன்]

செய்யப்பட்டிருந்தால் அனைத்துக் கட்சிக் குழுவில் உள்ள அங்கத்தினர் சுட்டிக் காட்டியிருக்கலாமே? அப்படி ஏதாவது சுட்டிக் காட்டி நடவடிக்கை எடுக்காமல் இருந்ததா? அப்படி ஏதாவது இருந்தது என்று சொன்னால், நடவடிக்கை எடுக்கலாம்.

திரு குழ. செல்லையா : பல முறை இப்படி நிலைமை இருக்கிறது என்று சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் குறிப்பாக ஊரிலிருக்கிறவர்கள் மலைக்குப் போயிருக்கிறார்கள் என்று ஒரு பட்டியலை வைத்துக் கொண்டு, அதன்படி வாங்கின கார்டுகளை முறையாக விநியோகம் செய்யவில்லை . . .

(திரு கே. என். குமாரசாமி எழுந்திருந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு குழ. செல்லையா அவர்கள் பேசட்டும். இப்படி ஒரு உறுப்பினர் பேச்சில் மற்ற உறுப்பினர்கள் குறுக்கிட்டுக்கொண்டிருக்க முடியாது.

திரு குழ. செல்லையா : ரூபாய் 100, 100 ஆக ஒரு கோடி ரூபாய் கொடுக்கிற நேரத்தில், அந்தப் பணத்தை திருப்பி வசூல் பண்ணுகிற நேரத்தில் சிரமம் இல்லாமல் இருப்பதற்காக, பணத்தை அனுப்புகின்ற நேரத்தில் அவர்களுக்கு முறையாக கிடைக்கின்றவகையில், ஒட்டுமொத்தமாக அனுப்பாமல், தனித்தனியாக அவரவர் பெயருக்கு அந்தப் பணத்தை அனுப்பினால்தான் நலமாக இருக்கும். இல்லாவிட்டால், பாதிக்கப்பட்டவர்களுக்குக் கிடைப்பதில்லை. அப்பொழுதுதான் திரும்பி வசூலிக்க முடியும்.

நான் இதை அழுத்தம் திருத்தமாகச் சொல்லுவதன் காரணம், தஞ்சை மாவட்டத்தில் கடன் தருகிற நேரத்தில் கணக்குப்பிள்ளை கணக்கை வைத்துக்கொண்டு அதன் அடிப்படையில் கடன் வழங்கப்படுகிறது. ஆனால், அதைத் திருப்பிக் கேட்கிற நேரத்தில் அந்த ஆளையே காணமுடியாத ஒரு நிலைமை தஞ்சை மாவட்டத்தில் இருக்கிறது. இந்த நிலைமை இல்லாமல் ஒழுங்கான முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடன் தொகை போய்ச் சேரும்படியான வழிமுறைகளை வகுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வித் துறையைப் பொறுத்தவரையில் இங்கே 34 பேர்களுக்கு சராசரி ஒரு ஆசிரியர் என்று கணக்கு வைத்து இருக்கிற நிலைமையைக் காண்கிறோம். கல்விக்காக நான்கில் ஒரு பங்கு செலவு செய்தாலும் கல்வியின் தரம் மிகவும் குறைந்திருக்கிறது என்பதைக் காண முடிகிறது. நிறையப் பகுதிகளில் சரியான ஆதாரக் கல்விக்கு வேண்டிய வசதிகள் இன்னும் செய்து தரப்படவில்லை. மற்றும் வேண்டிய சில சௌகரியங்களும் இல்லை.

அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் கருத்துக்கள் நிறைந்திருந்தாலும், அவை மக்களுக்குப் பயன்படுபவைகளாக இல்லை என்று சுட்டிக் காட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. துரைமுருகன் :** பேரவைத் தலைவரவர்களே, 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை வரவேற்று நானும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் படிக்கின்ற போது, சில விஷயங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். அந்த அளவுக்கு வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக் கின்றன. காரணம், நிதிநிலை அறிக்கை என்பது ஒளிவு மறைவு இல்லாத ஒரு அறிக்கை என்பதால் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளிப் படையாக எல்லாவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசு செய்திருக்கிற சாதனைகளையும், செய்ய வேண்டிய சாதனைகளையும் எடுத்துக் காட்டியிருப்பது மட்டுமல்லாமல், சாதனைகளைச் சாதிக்கின்ற நேரத்திலே ஏற்படுகின்ற தடங்கல்களைப் பற்றியும் கூறியிருக்கிறார்கள்.

அம்மையார் அவர்கள் பாராளுமன்றத்தில் பேசும்போது நாங்கள் சொன்னவைகளை எல்லாம் நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் அப்படி யெல்லாம் சொல்லாமல் நாட்டின் நடப்புகளைப்பற்றி முதலில் இரண்டு பக்கங்களில் கூறிவிட்டு, அதற்குப் பின்னால் காரணம் என்ன என்பதை யும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் சாதித்த சாதனைப் பட்டியலையும் சாதிக்க வேண்டியவைகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இருக்கின்ற குறைந்த அதிகாரத்தையும், குறைந்த வருவாயையும் வைத்து, நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது நம்முடைய கழக அரசு.

வேளாண்மைத் துறையிலே பசுமைப் புரட்சி, முடிந்த அளவிலே பாசன வசதி, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி, குழந்தை களுக்குச் சத்துணவுத் திட்டம், வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், பிற்பட்டோர் நல பணித் திட்டம், கிராமங்களுக்கு எல்லாம் குடிநீர் வழங்கு திட்டம், சாலைகள் இணைப்புத் திட்டம்—இப்படி பல் வேறு திட்டங்களை குறைந்த அதிகாரத்தையும் குறைந்த வருமானத்தை யும் வைத்து, இந்த அரசு சாதித்து இருக்கிறது.

ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி இங்கே பேசிய எதிர்க் கட்சி நண்பர்கள் எல்லாம் தாங்கள் ஏதோ குறைகளைக் கண்டுவிட்டது போல் திரும்பத் திரும்பச் சில கருத்துகளைச் சொன்னார்கள்.





அவர்கள் சொல்லியவைகளில் ஒன்று இங்கே உரம் சரியாகக் கிடைக்க வில்லை என்பது. இரண்டாவது, மின்சார இணைப்புச் சரியாக தரப்படவில்லை என்பது. இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட, இந்தக் காரியங்களைச் செய்வதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, மத்திய அரசு எப்படி தடையாக இருக்கிறது என்பதை டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற சில அம்சங்களை மட்டும் இங்கே தொகுத்துக் கூற விரும்புகிறேன்.

நெய்வேலி இரண்டாவது சுரங்கவேலை, அதனைச் சார்ந்த 1,000 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம், புதிய உரத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை போன்ற திட்டங்களைக் குறித்து இறுதி முடிவுகள் அறிவிக்கப்பட வில்லை.

நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் உரங்களை யேனும் மாநிலத்தில் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த நமக்கு அதிகாரமளிக்கும்படி மத்திய அரசை நாம் கேட்டுள்ளோம் ; இதுவரையில் பதில் இல்லை.

காவிரிப் பிரச்சனைக் குறித்து " ஃபாக்ட் ஃபைண்டிங் கமிட்டி " தனது முடிவை மத்திய பாசன மின்விசை அமைச்சகத்திடம் அளித் துள்ளது. இதன்மீது விரைந்து முடிவு காண முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார் ; இதுவரையில் மத்தியிலிருந்து பதில் வரவில்லை.

மேட்டூரில் ஓர் அனல் மின்விசை நிலையமும், மேற்கு மலைத் தொடர் களிலும், ஒகனெக்கலிலும் நீர் மின்விசை உற்பத்தி நிலையம் அமைக்க அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது ; இதுவரையில் அனுமதி கிடைக்கவில்லை.

கைத்தறி நெசவாளர்க்கு நன்மை பயக்கும் வகையில் சந்தானம் குழு சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த பிரதமருக்கு முதலமைச்சர் மடல் எழுதினார் ; இன்னும் பதில் இல்லை.

தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கடலூரில் புதிய உரத் தொழிற்சாலை, மணலியில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலை, நைலான் தொழிற்சாலை, பற்ற வைப்பு இல்லாத குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, இன்னும் பலத் திட்டங்கள் மத்திய அரசின் அனுமதி எதிர்பார்த்து நிற்கின்றன.

பொறியியல் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்க, பல்கலைக் கழக மானிய குழுவின் ஆய்வு முடிந்த பின்னும் மத்திய அரசு இன்று வரையில் அனுமதி அளிக்கவில்லை.

[திரு. குழ. செல்லையா] [1974 மார்ச் 11

அதோடு கூட மதிய உணவு திட்டத்தின் அடிப்படையில் ஆசிரியர்கள் முழு கவனத்தையும் மதிய உணவு வழங்குவதில் செலுத்தவேண்டிய நிலைமை இருப்பதன் காரணமாக—மதிய உணவு வழங்குவது நல்ல திட்டம்தான், வரவேற்கிறேன்—அதே நேரத்தில் ஆசிரியர்கள் தலையில் அந்தப் பொறுப்பு சுமத்தப்படுவதால், கல்வியின் தரம் குறைந்து, கல்வி வளர்ச்சிக்கு இடைஞ்சலாக இருக்கிறது.

இந்த மதிய உணவு வழங்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களுக்கோ அல்லது தனிக்கமிட்டிக்கோ, செலவு அதிகம் ஆனாலும் கூட, அளித்து விட்டால் உண்மையிலேயே கல்வியின் தரம் உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

முப்பத்திநான்கு மாணவர்கள் என்று இருப்பதை 20 அல்லது 25 என்று குறைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தால், முறையான கல்வி மேலும் வளர முடியும் என்பதையும், இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

வணிக வரியைப் பொறுத்தவரையில் வரிவிலக்கு வரம்பை ரூ. 50,000 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். அதிலே பலசாதாரண வியாபாரிகள் இலாபம் அடையக்கூடும் என்றாலும், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிற நேரத்தில். வணிக வரி சம்பந்தப்பட்ட காரியங்களில் கூட கட்சி மாச்சரியங்கள் தலைகாட்ட முற்படுகின்றன. வி.ஆர். நாராயணசாமி என்றவர், அண்ணா தி.மு.கவைச் சேர்ந்தவர். வெல்ல மண்டி வைத்திருக்கிறார். முசிறிப் புத்தன் கடை வைத்திருக்கிறார். நாங்கள் பாண்டிச்சேரியில் தேர்தல் வேலை செய்துகொண்டிருந்த நேரத்திலே அதிகாரிகள் அங்கெல்லாம் போய் கணக்கு வழக்குகளை அள்ளிக்கொண்டு போயிருக்கிறார்கள்.

நான் இதைக் குறிப்பிடுவதற்கு பல காரணங்கள் உண்டு. 50,000 ரூபாய் வரை விற்பனை செய்யக்கூடிய வியாபாரிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கணக்கைச் சரியாகப் பார்த்து செய்தால்தான் அதன் பலனை அந்த வியாபாரி பெற முடியும். ஆனால், கணக்கு பார்ப்பவர்கள் எப்படி பார்க்கிறார்கள்? முதலிலே அதிகாரிகள் வருவது கிடையாது. பியூனை அனுப்பி வைக்கிறார்கள். அந்த வியாபாரி அவனிடம் பணம் கொடுத்து அனுப்பினால் அதிகாரிகள் அந்த கடைக்குப்போவதே கிடையாது. பணம் கொடுக்கவில்லையானால் அந்த கணக்கு, இந்த கணக்கு என்று சொல்லி, இவ்வளவு வருமானம் வந்திருக்கிறது. இவ்வளவு விற்பனையாகியிருக்கிறது என்று சொல்லி, வரி போட்டுவிடுகிறார்கள். இந்த நிலைமை நாட்டிலே பரவலாக நடைபெறுகிறது. இதை யாரும் மறுக்க முடியாது.



1974 மார்ச் 11] [திரு. குழ. செல்லையா]

சிறு வியாபாரி ஒருவர் கல்லாவிலே கடன் வாங்கி 3,000 ரூபாய் வைத்திருப்பார்—ஏதாவது காரியங்களுக்காக. அந்த நேரம் பார்த்து அதிகாரி வருவார். இப்போது 3,000 ரூபாய் இருக்கிறது. அதனால் நீ காட்டுவது பொய் கணக்கு என்று சொல்லி, 3,000 த்தை 30 ஆல் பெருக்கி இவ்வளவு விற்பனையாகி இருக்கிறது; இவ்வளவு வரி கட்ட வேண்டுமென்று எழுதிவிட்டு போய்விடுகிறார். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கக்கூடாது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகிற "புக்கிங் கிளார்க்" குகளுக்கு ஊக்க போனஸ் அளிக்கப்படும் என்று 1972 லே ஆணை பிறப்பிக்கப்பட்டும் இதுநாள் வரையிலே தரப்படவில்லை. அதைப்போல இளநிலை எழுத்தர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 210 ரூபாய் என்று இருக்கிறது. ஆனால், காசாளர்களுக்கு 200 ரூபாய் தான் அடிப்படைச் சம்பளம் இருக்கிறது. வீட்டு வசதி வாரியம், குடிசைமாற்று வாரியம் போன்ற துறைகளில் இருக்கிற இளநிலை எழுத்தர்களுக்கும் காசாளர்களுக்கும் ஒரே சம்பளம்தான் இருக்கிறது. ஆகவே, இந்தபோக்குவரத்துத் துறையிலே இருப்பவர்களுக்கு மட்டும் இந்த மாறுதல் தேவையில்லை. இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, கோவிலைப்பற்றி ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கோவில் தர்மகர்த்தாக்களாக இருக்கிறார்கள். சில கோவில்களில் நிதி இருக்கிறது. சில கோவில்களுக்கு நிதியோடு நிலமும் இருக்கிறது. அந்த நிலங்களை நிலம் இல்லாத சாகுபடி செய்கின்ற உழவர்களுக்கு கொடுக்காமல், சில காரணங்களைக் காட்டி, அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு கொடுத்துவிடுகின்ற நிலைமை இருக்கிறது. இதற்கு பல ஆதாரங்கள் என்னிடத்திலே இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் உண்மையாகவே கிடைக்கவேண்டியவர்களுக்கு அந்த நிலம் கிடைக்க வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே ஒரு கோயில் இருக்கிறது. அங்கே ஒரே மாதிரியான இரண்டு சிலைகள் இருக்கின்றன. ஒன்று எங்கிருந்தோ திருடப்பட்டு கொண்டுவந்ததாகச் சொல்லுகிறார்கள். அந்த வட்டாரத்திலே உள்ளவர்கள், இதற்கு மேலிடத்திலுள்ளவர்கள், ஆளும் கட்சிக்காரர்கள்—சில பெரியவர்கள உடந்தையாக இருப்பதாகப் பேசிக்கொள்கிறார்கள். ஒரேமாதிரியான இரண்டு சிலைகள் அங்கே எப்படி வந்தன என்பதைப் பற்றி விசாரித்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல், ஆளுவோர்களின் தலையீட்டினால் அந்தக் கோவிலில் திருட்டு மறைக்கப்பட்டுள்ளது. சிலை வாங்கியவரை விட்டுவிட்டு வேலை செய்கிற சாதாரண பணியாள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதனால் அந்தப் பணியாள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் தவிர்க்கப்பட்ட வேண்டுமென்று வற்புறுத்தி முதலமைச்சர்

அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் கருத்துக்கள் நிறைந்திருந்தாலும், அவை மக்களுக்குப் பயன்படுபவைகளாக இல்லை என்று சுட்டிக் காட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. துரைமுருகன் : பேரவைத் தலைவரவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை வரவேற்று நானும் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாகப் படிக்கின்ற போது, சில விஷயங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். அந்த அளவுக்கு வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. காரணம், நிதிநிலை அறிக்கை என்பது ஒளிவு மறைவு இல்லாத ஒரு அறிக்கை என்பதால் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளிப்படையாக எல்லாவற்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அரசு செய்திருக்கிற சாதனைகளையும், செய்ய வேண்டிய சாதனைகளையும் எடுத்துக் காட்டியிருப்பது மட்டுமல்லாமல், சாதனைகளைச் சாதிக்கின்ற நேரத்திலே ஏற்படுகின்ற தடங்கல்களைப் பற்றியும் கூறியிருக்கிறார்கள்.

அம்மையார் அவர்கள் பாராளுமன்றத்தில் பேசும்போது நாங்கள் சொன்னவைகளை எல்லாம் நிறைவேற்றிவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் அப்படியெல்லாம் சொல்லாமல் நாட்டின் நடப்புகளைப்பற்றி முதலில் இரண்டு பக்கங்களில் கூறிவிட்டு, அதற்குப் பின்னால் காரணம் என்ன என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் சாதித்த சாதனைப் பட்டியலையும் சாதிக்க வேண்டியவைகளையும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

இருக்கின்ற குறைந்த அதிகாரத்தையும், குறைந்த வருவாயையும் வைத்து, நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறது நம்முடைய கழக அரசு.

வேளாண்மைத் துறையிலே பசுமைப் புரட்சி, முடிந்த அளவிலே பாசன வசதி, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி, குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டம், வீட்டுவசதி வாரியம், குடிசைமாற்று வாரியம், பிற்பட்டோர் நல பணித் திட்டம், கிராமங்களுக்கு எல்லாம் குடிநீர் வழங்கு திட்டம், சாலைகள் இணைப்புத் திட்டம்—இப்படி பல வேறு திட்டங்களை குறைந்த அதிகாரத்தையும் குறைந்த வருமானத்தையும் வைத்து, இந்த அரசு சாதித்து இருக்கிறது.

ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி இங்கே பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் எல்லாம் தாங்கள் ஏதோ குறைகளைக் கண்டுவிட்டது போல் திரும்பத் திரும்பச் சில கருத்துகளைச் சொன்னார்கள்,





அவர்கள் சொல்லியவைகளில் ஒன்று இங்கே உரம் சரியாகக் கிடைக்கவில்லை என்பது. இரண்டாவது, மின்சார இணைப்புச் சரியாக தரப்படவில்லை என்பது. இந்த நிதிநிலை அறிக்கையிலே கூட, இந்தக் காரியங்களைச் செய்வதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன, மத்திய அரசு எப்படி தடையாக இருக்கிறது என்பதை டாக்டர் கலைஞர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே டாக்டர் கலைஞர் அவர்கள் தெரிவித்திருக்கின்ற சில அம்சங்களை மட்டும் இங்கே தொகுத்துக் கூற விரும்புகிறேன்.

நெய்வேலி இரண்டாவது சுரங்கவேலை, அதனைச் சார்ந்த 1,000 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம், சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம், புதிய உரத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்புச் சாலை போன்ற திட்டங்களைக் குறித்து இறுதி முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் உரங்களை யேனும் மாநிலத்தில் பகிர்ந்தளிக்கப்படுவதைக் கட்டுப்படுத்த நமக்கு அதிகாரமளிக்கும்படி மத்திய அரசை நாம் கேட்டுள்ளோம் ; இதுவரையில் பதில் இல்லை.

காவிரிப் பிரச்சனைக் குறித்து “ஃபாக்ட் ஃபைண்டிங் கமிட்டி” தனது முடிவை மத்திய பாசன மின்விசை அமைச்சகத்திடம் அளித்துள்ளது. இதன்மீது விரைந்து முடிவு காண முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார் ; இதுவரையில் மத்தியிலிருந்து பதில் வரவில்லை.

மேட்டூரில் ஓர் அனல் மின்விசை நிலையமும், மேற்கு மலைத் தொடர்களிலும், ஒகனெக்கலிலும் நீர் மின்விசை உற்பத்தி நிலையம் அமைக்க அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது ; இதுவரையில் அனுமதி கிடைக்கவில்லை.

கைத்தறி நெசவாளர்க்கு நன்மை பயக்கும் வகையில் சந்தானம் குழு சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த பிரதமருக்கு முதலமைச்சர் மடல் எழுதினார் ; இன்னும் பதில் இல்லை.

தூத்துக்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, கடலூரில் புதிய உரத் தொழிற்சாலை, மணலியில் பெட்ரோ கெமிகல் தொழிற்சாலை, நைலான் தொழிற்சாலை, பற்ற வைப்பு இல்லாத குழாய்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, இன்னும் பலத் திட்டங்கள் மத்திய அரசின் அனுமதி எதிர்பார்த்து நிற்கின்றன.

பொறியியல் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைக்க, பல்கலைக் கழக மானிய குழுவின் ஆய்வு முடிந்த பின்னும் மத்திய அரசு இன்று வரையில் அனுமதி அளிக்கவில்லை.

தொழிலாளர்களுக்கு அரசு நிறுவனங்களில் பங்குகள் கொடுக்கும் திட்டத்தை முழுமைப் படுத்த மத்திய அரசின் சில சட்டங்களில் மாறுதல்கள் செய்ய வேண்டியிருக்கிறது. இதுகுறித்து நம் அரசு வலியுறுத்தியும் மத்திய அரசு இதுவரை இறுதி முடிவை அறிவிக்கவில்லை.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் 1—4—1974-ல் நடைமுறைக்கு வரவேண்டியதுகூட இன்னும் இறுதி நிலையை அடையவில்லை.

இவ்வளவு காரிருளுக்கிடையிலேயும் நமது முதல்வர் அவர்கள் தமிழகத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கான ஒளி விளக்கை அணைத்து விடாமல் எல்.ஐ.சி. எம்பளம் போன்று காத்து நிற்கிறார்கள். அவசரமும் அவசியமுமாகச் செய்யப்பட வேண்டிய இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களுக்குக்கூட அனுமதி அளிக்காத மத்திய அரசை; மத்திய அரசு என்று சொல்வதைவிட இதை ஒரு மந்த அரசு என்றே சொல்லலாம்.

நாம் பரிந்துரைத்துள்ளத் திட்டங்களை மத்திய அரசு காலதாமதமின்றி நிறைவேற்றியிருக்குமானால் இன்று துணிக்குப் பஞ்சம் வந்திருக்காது, உரத்திற்கு பஞ்சம் வந்திருக்காது ; மின்சாரத்திற்கு பஞ்சம் வந்திருக்காது ஆகவே, தமிழக அரசு எங்காவது எதையாவது செய்யத் தவறியதாகக் கருதப்படுமானால் அதற்கு முழுப் பொறுப்பும் மத்திய அரசுதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது மத்திய அரசுதான் எல்லாவற்றிற்கும் பொறுப்பு என்று சொல்கிறார்கள். மின்சார உற்பத்தியில் குறைவு ஏற்பட்டிருப்பதற்கு நீங்கள் எல்லாத் திட்டங்களையும் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி எழுதியிருக்கிறீர்கள். அதற்கு முன்னால் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆகவே, காலதாமதத்திற்கு நீங்கள்தான் காரணம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தமிழக அரசு ஏற்கெனவே அனுமதி கேட்டிருந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆவன செய்திருந்தால் ஓரளவு பற்றாக்குறையைத் தவிர்த்திருக்க முடியும்.

ஆகவே, தமிழகத்தில் இருக்கிற இந்த குறைந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு, குறைந்த வருமானத்தை வைத்துக் கொண்டு, மக்களின் வாழ்க்கைத் தரம் கெட்டுவிடாமல், ஏழை எளிய மக்களின் எதிர்காலம் கெட்டுப் போகாமல் இருக்க, மக்களின் நல்வாழ்விற்கான ஒளி விளக்கை எல்.ஐ.சி. எம்பளம் போன்று காத்து வருகிறார் டாக்டர் கலைஞர் அவர்கள்.





டாக்டர் கலைஞர் அவர்கள் எப்போதுமே பட்ஜெட்டை சமர்ப்பிக்கின்ற போது ஒரு புதுமையைச் செய்கிறார்கள். முன்பெல்லாம் பட்ஜெட் என்றால் பலசரக்குக் கடையில் வாங்கிய பொருட்களுக்கு கணக்குப் பட்டியல் போல்தான்—புளி விலை இவ்வளவு, பருப்பு விலை இவ்வளவு, எண்ணெய் விலை இவ்வளவு என்று தான் காட்சியளிக்கும். ஆனால் டாக்டர் கலைஞர் அவர்கள் அளிக்கின்ற நிதிநிலை அறிக்கையில் எப்போதுமே ஒரு புதுமையைக் காணலாம். அவர்களின் அறிக்கை புரட்சிக் கருத்துக்களை அளிக்கின்ற அறிஞர்களின் இதயப் படமாக விளங்குகிறது. இந்தியத் துணைகண்டத்திலே வேறு எந்த மாநிலமும் செய்ய முடியாத திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் நாம் காண்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆசிரியர்கள், ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரிபவர்கள், மற்றும் அரசு ஊழியர்கள் எல்லாம் ஓய்வூதியம் பெறுகிறார்கள். ஆனால் சாதாரண மக்கள், நடுத்தர மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு வாய்ப்பு இல்லை. அவர்கள் வயதாகிப் போனால் வீட்டிலே தொல்லைகள், “கிளம்” என்றும் இந்தக் “கிளம் ” எப்போது தொலையும் என்றும் பேசுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கிட டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்திருக்கிறார்கள். சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் போன்று மற்ற மாநிலங்களில் இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. இங்கிலாந்திலே இப்படிப்பட்ட ஒரு திட்டம் இருப்பதாக நான் கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர சரியான விபரம் எனக்குத் தெரியாது.

ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள், சாமானிய மக்களுக்காக, சாமானியர்களால் நடத்தப்படுகிற அரசு இது என்று. ஆக இந்த அரசு சமூக பொருப் பாதுகாப்புத் திட்டம் என்ற முறையில் மிகப் பெரும்பாலான குறைந்த வருமானம் பெறும் மக்களின் நலனுக்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 30 வயதான ஒருவர் தம்முடைய 55-வது வயது வரை மாதம் ரூ. 10 செலுத்தி வந்தால், அவரது 55-வது வயதில் இருந்து அவர் உயிரோடு இருக்கும் வரை மாதம் 100 ரூபாய் ஓய்வூதியமாக வழங்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. மாதம் 10 ரூபாய் என்பதாக அவர் 25 வருஷம் செலுத்தினார் என்றால் அவர் கொடுப்பது ரூ. 3,000 தான். ஆனால் 55 வயதுக்குப் பிறகு 16 வருடங்கள் அவர் உயிரோடு இருந்தாலும் மாதம் 100 ரூபாய் என்கிற அளவில் கிட்டத்தட்ட 18 ஆயிரம் ரூபாய் வரை பெற வாய்ப்பு இருக்கிறது. இடையிலே இறப்பு ஏற்பட்டாலும் அவர் கட்டிய தொகையை வட்டியுடன் அவரது குடும்பத்தினர் பெறுகின்ற வாய்ப்பும் இருக்கிறது. எங்குமே இல்லாத, இந்த ஒரு நல்ல திட்டத்தை நமது அரசு இங்கே கொண்டு வந்திருப்பதற்காகப் பாராட்டுகிறேன்.

[திரு. துரைமுருகன்] [1974 மார்ச் 11

இரண்டாவதாக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என்பதாக அமைக்க முன்வந்திருப்பது மிகவும் பாராட்டக்கூடிய அம்சமாகும். மற்ற அண்டை மாநிலங்களிலே புதுப்புது விமானத்தை வாங்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள், மந்திரிமார்கள் பறக்க. ஆனால், இங்கே 5 கோடி மூலதனத்தில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை நிறுவி, நம்முடைய அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு கப்பல்விட இருக்கிறோம். கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி.-யின் கனவை நினைவாக்கியிருக்கிறது நமது திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பது நாம் எல்லாம் பெருமைப்படக்கூடிய ஒன்றாகும்.

அடுத்த மூன்றாவது முக்கியமான அம்சம் கைத்தறித் தொழிலாளர்கள் துயரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முன்வந்திருப்பது தான். குறிப்பாக, கைத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் ஏற்படுவதற்கு சந்தானம் குழுவினர் செய்திருக்கக்கூடிய பரிந்துரைகளை ஏற்க முன்வந்து—கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலை நியாயமான விலையில் ஆலைகளிடமிருந்து வாங்கி வினியோகிப்பது, கூட்டுறவுக்கு அப்பாற்பட்ட நெசவாளர்களையும், நூல் வழங்குதவற்கு கூட்டுறவுத் துறைக்குக் கொண்டு வருவது, கைத்தறிக்கு என்று வேட்டி, துண்டு, சேலை, துப்பட்டி போன்ற ரகங்களை சட்ட ரீதியாக ஒதுக்குவது, அனுமதி அல்லாத விசைத்தறிகளை வளரவிடாது தடுப்பது ஆகியவற்றைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

கைத்தறி நெசவாளர்கள் வறுமையைப் போக்க, நிதி வசூலித்து தங்கள் வறுமையை போக்கிக் கொண்ட எத்தனையோ அரசியல்வாதிகள் உலவுகின்ற இந்த நேரத்தில் கைத்தறியாளர்களுக்கு வட்டியில்லாக் கடனாக அளித்த ஒரு கோடி ரூபாயை ரத்து செய்ய முன்வந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதாகும். இன்னும் கூனன் நிமிர, குருடன் பார்வை பெற—என்ற முழக்கம் செயல்பெற அங்கஹீனர்களின் வாழ்க்கைக்குப் பாதுகாப்பும், நிவாரணமும் அளிக்க இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. கண்ணொளி இழந்தவர்களுக்கு கண்ணொளி வழங்கும் திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், சைக்கிள் ரிக்ஷா கொடுத்த திட்டம் என்பதாக இப்படி பலப்பல திட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

தவிர, பூம்புகார் புதுப்பித்தல், கட்டமொம்மன் கோட்டையைக் கட்டுதல், திருவள்ளுவருக்குக் கோயில், மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள்—என்பதாக இப்படிக் குறைந்த அதிகாரமும், பண முடையும் உள்ள இந்த நிலையிலேயே இவ்வளவு திட்டங்கள் என்றால் மாநில சுயாட்சி தருவார்களேயானால் தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு மட்டுமல்லாது—உலகத்திற்கே புதுப்புதுத் திட்டங்களை வழங்கும் திருவிடமாக மாறும் என்பது என் திடமான எண்ணம்.



1974 மார்ச் 11] [திரு. துரைமுருகன்]

ஆனால், மாநில சுயாட்சி என்பது பிரிவினை வாதம் என்கிறார்கள். இது பிரிவினையில் தான் கொண்டுபோய்விடும் என்று பிரச்சினையைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள். அவர்களுக்குக் கூறுவேன். பிரிவினை வாதம் நாம் நடத்தவில்லை. இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறார்களே—அவர்கள் எல்லாம் வெட்கித் தலை குனியும்படியாக மராட்டிய மாநிலத்திலே சமீபத்தில் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். இந்திய ஒருமைப்பாட்டுக்கே விடப்பட்ட சவாலாக அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூர் மக்களுக்கு மட்டும் 80 சத விகிதம் வேலை கொடுக்க வேண்டும் என்கிறார்கள்.

ஒன்றுமட்டும் சொல்கிறேன். சென்டிரல் செக்டாரில் அமைக்கப்படுகிற நிறுவனங்களில் கூட சன்ஸ் ஆப் தி சாயில் என்பதாக 80 சத வீதம் கொடுக்க வேண்டுமென்றால் அப்புறம் இந்திய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுவதற்கு என்ன வாய் இருக்கிறது?

கர்னாடக மாநிலத்தில் இருந்து தமிழர்கள் துரத்தி அடிக்கப்பட்டிருக்கிறார்கள். மராட்டிய மாநிலத்திலே நடந்து கொண்டிருப்பது என்ன என்பதை நாம் அறிவோம். ஒரு காலத்தில் ஈழத்தை வென்றவர்கள் எனச் சொல்லப்படுபவர்கள் இன்றைக்கு ஈழத்தில் இருந்து விரட்டியடிக்கப்படுகிறார்கள். பர்மாவில் இருந்து விரட்டப்பட்டு அங்காடி அமைக்கிறார்கள். இப்படி பல்வேறு இடங்களிலும் காரியங்கள் நடைபெறுகிறபோது தமிழர்கள் மட்டும் ஏமாளிகளாக இருக்க வேண்டுமா? அதிகாரிகள் மட்டத்தில் கூட 50 சதவீதம் உள்ளூர்க்காரர்களுக்குத்தான் என்று அவர்கள் போவார்களானால் கேரள மாநிலத்தில் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதைப் போல, நம்முடைய மாமன்றத்திலேயும் அத்தகைய செயலைக் கண்டித்து, அதற்கு நமது எதிர்ப்பைத் தெரிவித்தாக வேண்டும்.

இன்றையதினம் மராட்டிய மாநிலப் போக்குக்கு தீட்சித் அவர்கள் பச்சைக் கொடி காட்டியிருப்பதாக அறிகிறேன். ஆகவே, எல்லோரும் சேர்ந்து—எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிற வகையில் இங்கேயும் ஒரு கண்டனத் தீர்மானத்தைப் போட்டாக வேண்டும் என்று நான் டாக்டர் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஒருமைப்பாடு என்பதாகச் சொல்லிக் கொண்டே இதுபோன்ற காரியங்களை வடக்கே உள்ளவர்கள் செய்கிறபோது, தமிழகம் ஏமாளியாக மட்டும் இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வளவும் ஊருக்காக வாதாடிவிட்டால் உள்ளூர்க்காரர்கள் எங்களுக்கென்ன என்று கேட்பார்கள். ஆகையால், எனது தொகுதிபற்றியும் ஒன்றிரண்டு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் எங்கள் மாவட்ட பொன்னையாற்று மேம்பாலத்திற்கு பச்சைக்கொடி காட்டப்படும் என்று எதிர்பார்த்தேன். அதை உடனடியாகச் செய்ய வேண்டும். ராஜாத் தோப்பு அணையையும் கட்டித் தரவேண்டும்.

[திரு. துரைமுருகன்] [1974 மார்ச் 11

சீனி என்று காகிதத்தில் இருந்தால் போதாது. வேலூர் சர்க்கரை ஆலையையும் உடனே ஆரம்பிக்க வேண்டும்.

இன்னும் வீட்டுவசதி வாரியம். மாவட்ட வளர்ச்சிக் கழகம், அரிசன நல வீட்டு வசதி வாரியம் ஆகியவை எனது மாவட்டத்தில் லேட்டாக வருகிறது. அவற்றை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பீடித் தொழிலாளர்கள் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

இன்னும் எங்கள் மாவட்டத்தில் அரிசனங்களுக்கு சுடுகாட்டிற்குப் போகக்கூட பாதை கிடையாது. உடனடியாக அவர்களுக்கு சுடுகாட்டிற்குப் பாதை வசதி செய்து தரப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. ஓ. என். சுந்தரம்</u>: சபாநாயகர் அவர்களே, 1974–75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனது கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பையேற்று 8-வது நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதை கடைசி பட்ஜெட்டிற்கு முதல் பட்ஜெட் என்று கருதுகிறேன். அப்படி நிதிநிலை அளிக்கின்றபோது—இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை மிக நீளமான உரையாக அமைந்திருக்கிறது. சென்ற ஆண்டு கூட 12½ பக்கங்கள் தான். இந்த ஆண்டு 53 பக்கங்கள். கடிதங்களும், காவியங்களுமாக எல்லாம் மத்திய அரசை குறை சொல்லுவதாகவே அமைந்திருக்கிறது. குறை சொல்வதை வரவேற்கிறேன். அதுவே பட்ஜெட் என்று ஆகி விட்டால் என்ன சொல்வது ?

1967-இல் திராவிட முன்னேற்றக் கழகம் கொடுத்த வாக்குறுதிகள் ஏதாவது நிறைவேறியிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். 3—5—67 அன்று தமிழக முதல்வராகப் பணியாற்றிய அண்ணாதுரை அவர்கள் சொல்கிறபோது இந்த அரசானது விலைவாசி உயர்வைத் தடுத்து நிறுத்தும் என்றார்கள். இன்றைக்கு மார்ச் 74-ல் முதல்வர் கருணாநிதி சொல்கிற போது, கடுமையான விலைவாசி ஏற்றத்திற்கு, வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு எல்லாம் முழுப்பொறுப்பு மத்திய அரசு என்பது போலச் சொல் கிறார்கள்.

[முற்பகல் 11-00]

அப்படி மத்திய அரசைக் குறை கூறுகின்ற பொழுது ஒன்றைக் கவனிக்க வேண்டும். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் பட்ஜெட்டைக் குறை சொல்வதைக் கடுமையாக விமர்சித்தார்கள். ஜனநாயகத்திலே, கருத்து வேறுபாடுகளைச் சொல்வது, குறைகளைச் சொல்வது எல்லாம்



1974 மார்ச் 11] [திரு. ஓ. என். சுந்தரம்]

முக்கியமான அம்சங்கள். நாம் சொல்வதை அவர்கள் மிகப் பொறுமையாகக் கேட்க வேண்டும். சட்டசபை என்று சொன்னால், அதை செத்த சபை என்று சொல்வதோ அல்லது அதை செத்த சபையாக ஆக்குவதோ ஜனநாயக வளர்ச்சிக்கு அவ்வளவு பெருமை தருவதாக இல்லை என்பதை நான் மிக்க வருத்தத்தோடு சொல்ல ஆசைப்படுகிறேன். வருங்காலத்தில் அப்படிப்பட்ட துர்ப்பாக்கியமான நிகழ்ச்சிகள் ஏற்படாவண்ணம் இந்தச் சபையினுடைய கண்ணியத்தைக் காக்க வேண்டுமென்று நான் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(திரு. துரைமுருகன் தலைமை.)

இந்த பட்ஜெட்டில், அரசு அலுவலாளர்களுக்கு ஆண்டுக்காண்டு சாதனை என்ற முறையிலே ரூ. 10 அளித்திருக்கிறீர்கள். திராவிட முன்னேற்றக் கழக அறிக்கையிலே, ஏற்கனவே மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறீர்கள். மத்திய அரசின் அடிப்படை சம்பள விகிதமும், மாநில அரசின் அடிப்படைச் சம்பள விகிதமும் ஒரே அளவில் இருக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் அதிகாரத்தைப் கேட்போம் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே மத்திய அரசிடமும், நிதிக் குழுவிடமும் நாங்கள் வாதாடினோம், முறையிட்டோம், இதற்கு நிதி கிடைக்கவில்லை யென்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இப்படி ஆண்டுக்காண்டு ரூ. 10 கொடுப்பதன் மூலம் அவர்கள் தேவையை நிறைவு செய்ய முடியாது. இது யானைப் பசிக்கு சோளப் பொரியாகத்தான் இருக்குமே தவிர, நிரந்தர தீர்வாக இருக்காது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடிக்கடி நமது முதல்வர் அவர்கள் டெல்லிக்குப் பறக்கிறார்கள். நிதிக் குழுவைப் பார்க்கிறார்கள், பிரதமரைப் பார்க்கிறார்கள். அப்படிச் செல்லும்போது, இதற்கென்று ஒரு நிதியை ஏற்படுத்தி, இந்த மாநில அரசு ஊழியர்களது அடிப்படைச் சம்பளத்தையும், மத்திய அரசு ஊழியர்களது அடிப்படைச் சம்பளத்தையும் "பாரலல்"-ஆக, "ஈக்குவல்"-ஆக ஆக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சபையின் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: தலைவர் அவர்களே, மாநில அரசு செய்யவேண்டுமென்று ஊக்கப்படுத்துவதை நான் வரவேற்கிறேன். எதிர்க்கட்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் அமர்ந்திருந்தபொழுது இதற்கு மத்திய சர்க்கார், ஒத்துக்கொண்டு ஆவன செய்யவேண்டுமென்று சேர்த்து பேசினோம். அதுபோல், மாண்புமிகு உறுப்பினர் பேசினால், அது நாங்கள் முயற்சி எடுக்கும்போது, எங்களுக்கு உறுதுணையாக அமையும்.

<u>திரு. ஓ. என். சுந்தரம்</u>: அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்து சொன்ன வாக்குறுதியை ஆளும் கட்சி முதல்வரவர்கள் நிறைவேற்ற வேண்டியதில்லை யென்று கருதுகிறார்களா என்று எனக்குப் புரியவில்லை. அன்றைக்குச் சொன்னதை......................

[1974 மார்ச் 11

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் கூறியதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ளவில்லையென்று கருதுகிறேன். எதிர்க்கட்சியாக நாங்களிருந்தபொழுது, மாநில அரசையும் ஊக்கப்படுத்தி, மத்திய அரசையும் வலியுறுத்துகின்ற அளவுக்குப் பேசியிருக்கிறோம், இது போன்ற பல்வேறு பிரச்னைகளில். இப்பொழுது மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுப் பெற வேண்டுமென்று கூறுவதோடு அமையாமல், மத்திய அரசும் அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று, மத்திய அரசையும் வலியுறுத்தி மாண்புமிகு உறுப்பினர் பேசுவாரானால், அது எங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்றுதான் சொல்கிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம் : அவர்கள் செய்யக்கூடிய பயனுள்ள காரியங்களிலே குறுக்கே நிற்கவில்லை, ஆதரிக்கத்தான் செய்வோம். ஆனால், அன்றைக்கு நீங்கள் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். மொத்தத்திலே ரூ. 50 கோடி ஒதுக்கி இருக்கிறோம் என்று சொன்னால், அது போதாது. ஆகவே, அடிப்படைச் சம்பளத்தை, "பாரலல்" ஆக ஆக்கிவிட்டீர்கள் என்று சொன்னால், இப்படிப்பட்ட தொந்தரவுகள் வராது, நாமாக........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடிப்படைச் சம்பளத்தையும் அகவிலைப் படியையும் மெர்ஜ் செய்து, இரண்டையும் இணைத்து அறிவித்த ஒரே ஒரு மாநிலம், இந்தியாவிலேயே கழக அரசு ஆண்டு கொண்டிருக்கிற தமிழ் மாநிலம்தான் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஓ. என். சுந்தரம் : இப்பொழுது தமிழக மாநில ஊழியர்களது அடிப்படைச் சம்பளம் மத்திய அரசு ஊழியர்களது அடிப்படைச் சம்பளத்திற்குச் சமமாக இருக்கிறதா ? அல்லது கூடுதலாக இருக்கிறதா ? அல்லது குறைவாக இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குறைவாக இருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டாகிவிட்டது. நான் மாத்திரமல்ல, எல்லா மாநில முதலமைச்சர்களும் என்.டி.சி.யில் தேசிய வளர்ச்சிக் குழுவில் விவாதித்திருக்கிறார்கள். ஆனால், மத்திய அரசுதான் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. ஆக, இவ்வளவு நேரம் மாநில அரசு கேட்க வேண்டுமென்று வாதாடுபவர், மத்திய அரசு இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று வார்த்தைகளைத் தயவுசெய்து சொல்லக் கூடாதா என்பது தான் என்னுடைய பரிதாபமான கேள்வி.

திரு. ஓ. என். சுந்தரம் : இதிலே கருத்து வேறுபாடு கிடையாது. அப்படிப்பட்ட சம்பள விகிதங்கள் குறைவாக இருக்கிறது என்று சொல்கிற முதல்வர் அவர்கள், அதற்காக மத்திய அரசிடத்திலே கேட்க வேண்டு மென்பதிலே நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. நிச்சயமாக அதற்கு ஆதரவு கொடுக்கிறோம். அதிலே தப்பு இல்லை.

அடுத்தபடியாக, இன்றைக்கு நிதிநிலை அறிக்கையில், 1974–75-லே ரூ. 470 கோடிக்குப் பக்கமுள்ள வருவாய் காண்பிக்கப்பட்டிருக்கிறது, எனக்கு முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் திரு துரைமுருகன்



974 மார்ச் 11] [திரு. ஓ. என். சுந்தரம்]

அவர்கள் சொன்னார்கள், நாங்கள் எதை எதையோ கேட்டு திட்டம் போட்டோம் அவர்கள் கொடுக்கவில்லையென்று. அன்றைக்குக் காங்கிரஸ் ஆட்சியில் இருந்தபொழுது, தமிழக அரசின் திட்டங்கள் 193 கோடி ரூபாயில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பல நல்ல திட்டங்களெல்லாம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அதன் விவரங்களுக்குள் நான் விரிவாகப் போகவில்லை. அப்படிப்பட்ட திட்டங்களைக் குறைந்த அதிகாரங்களை வைத்துச் செய்யும்போது, நாமும் அதைச் செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும், திட்டங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

இன்றைக்குத் தமிழக அரசின் வருவாய் ரூ. 470 கோடி என்று சொன்னால், அதிலே 3-ல் 1 பங்கு வணிகத் துறையிலே வரியாக வந்து கொண்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. இன்றைக்கு ரூ. 130 கோடிக்குப் பக்கமாக சேல்ஸ் டாக்ஸ் மூலமாக வரக்கூடிய அடிப்படை யிலே இருக்கிற ஓர் அம்சத்தை நிதிநிலை அறிக்கையிலே நான் பார்க் கிறேன்.

சென்ற ஆண்டு, இந்தச் சட்டமன்றத்திலே கேட்டோம், வரி விலக்கு ரூ. 25,000 என்று இருப்பதை ரூ. 50,000 ஆக்க வேண்டுமென்று கேட் டோம். ஆனால், ஏனோ அதைச் செய்யவில்லை. ஆனால், இன்றைக்கு, ஒன்றுக்கு 3 பங்கு விலைவாசி ஏறிவிட்டது. இப்பொழுது ரூ. 50,000 வரை விலக்கு அளித்திருக்கிறீர்கள். வரவேற்கத் தக்கதுதான். இல்லை யென்று சொல்லவில்லை. அதனால் ஓரளவுக்கு நிவாரணம் உண்டு. ஆனால், இன்றைக்கு ஏறி இருக்கிற விலைவாசியில் சாதாரணமாக ரூ. 50-க்கு விற்ற மூட்டைகள் எல்லாம், ரூ. 150—200-க்குப் பக்கமாகப் போயிருக்கும் போது, சாதாரண ஆட்கள் வரி விலக்கை அனுபவிக்க முடியாத நிலைமை தான் இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வரி விலக்கை அளித்துவிட்ட பிறகு, ரூ. 10 இலட்சத்துக்கு மேற்பட்டு விற்பனை செய்பவர்களுக்கு சர்சார்ஜ் கொண்டு வந்திருக்கிறீர்கள். அதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். இன்றைக்கு ரூ. 10 இலட்சத் துக்கு மேற்பட்டு விற்பனை செய்பவர்கள், 5 சதவிகிதமே கொடுக்க முடிய வில்லை, அதற்கு சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லும் போது, அதை மேலும் உயர்த்தக் கூடாது என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு விரிவாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

ரூ. 10 இலட்சம் டர்ன்ஓவர்-க்கு 5 சதவிகிதத்திலிருந்து 10 சத விகிதம் வரை சர்சார்ஜ் என்று சொன்னால், விற்பனை வரி குறைந்தபட்சம் 3½ சதவிகிதத்திலிருந்து உயர்ந்தபட்சம் 30 சதவிகிதம் வரை இருக்கும் போது, 3½ சதவிகிதம் என்று பார்த்தாலும், ரூ. 3,500 சாதாரணமாக சர்சார்ஜ் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. அது மத்திய அரசால் விதிக்கப்படுகின்ற வருமான வரி போல இருக்கிறது. வருமான வரியிலே கூட, அவர்கள் வருமானத்தை எடுத்துக் கொண்டு, நம்முடைய செலவை எல்லாம் நீக்கி, லாபத்திற்கு வருமான வரி விதிக்கிறார்கள். ஆனால்,

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 மார்ச் 11

இங்கு வியாபாரத்தில் ஏற்றத்தாழ்வு, விலை உயர்வு எல்லாம் ஏற்பட்டாலும் கூட, ரூ. 10 இலட்சம் என்று சொன்னால், குறைந்தபட்சத்தை எடுத்துக் கொண்டால், கூட—30 சதவிகிதம் பற்றி சொல்லவில்லை. ரூ. 3,500 சர்சார்ஜ் கட்டுவது என்று சொன்னால், ஒருவன் நான் அதைக் கட்ட வேண்டு மென்றால் மிகவும் கஷ்டம் ஏற்படும்.

இப்பொழுது ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள், வியாபாரிகள் இந்த சர்சார்ஜை யாரிடமும் வசூலிக்கக் கூடாது என்று. இந்த ரூ. 3,500-ஐ, அவர்களுடைய வருமானத்திலிருந்து, ஆதாயத்திலிருந்து கொடுக்க வேண்டுமென்றுதான் பொருள். அப்படிக் கொடுத்துவிட்டால் சரியாக இருக்கும். ஆனால், பல வியாபாரக் குடும்பங்கள் இந்த விலை ஏற்றத் தாழ்வுகளினால் எத்தனை பெரிய நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நீங்கள் அப்படி பத்து சதவீதமாக ஆக்கிவிட்டீர்க ளென்று சொன்னால் அவன் 3,500 ரூபாய் லாபத்திலிருந்து கொடுத்தால் பரவாயில்லை. ஆனால் அவனுக்கு நஷ்டம் வந்துவிட்டால் அவனுக்கு என்ன நிவாரணம் வைத்திருக்கிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டும். இன்றைக்கு 5 சதவீதம் என்பதே அதிகம், ஆனால் நீங்கள் பத்து சதவீதம் என்று கேட்கிறீர்கள். ஏற்கெனவே வியாபாரக் குடும்பங்கள் படுகின்ற கஷ்டநஷ்டங்களை மேலும் அதிகமாக்கி அவர்களுக்கு அதிகமாகத் தொல்லைகளையும் கஷ்டங்களையும் இந்த அரசாங்கம் கொடுக்கும் என்று சொன்னால் வியாபாரிகள் முன்னுக்கு வருவது கஷ்டம்.

இந்த வரியை 5 சதவீதமாக ஆக்கவேண்டும். இதை நான் தெளிவாக வற்புறுத்திச் சொல்கிறேன். அப்படி நீங்கள் எதிர்க்கட்சிகாரர்கள் சொல் கிறார்களே என்பதால் ஒருவேளை மறுத்துவிட்டால், சிலாப் சிஸ்டம் வைத்து 10 லட்சம் ரூபாயிலிருந்து 25 லட்சம் வரையிலும் (நிகர டர்ன் ஓவர் இருந்தால்) 5 சதவீதம் என்றும் 25 லட்சம் முதல் 50 லட்சம் வரையில் இருந்தால் $7\frac{1}{2}$ சதவீதம் என்றும் 50 லட்சத்திற்கு மேலான தொகையாக இருந்தால் 10 சதவீதம் என்றும் நிர்ணயிக்க வேண்டும். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசிகள் குறைந்துவிடும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. பண வீக்கம், கருப்புப் பணம், கள்ளச் சந்தை இவைகளைப் பார்த்தால் விலைவாசி உயரத்தான் செய்யும், உங்களுடைய வருவாய் 120 கோடி இருக்கும் என்று நீங்கள் சொல்லலாம், ஆனால், அது 140 கோடியிலிருந்து 150 கோடிக்குப் போய் அதற்கு மேலும் ஓடத்தான் செய்யும். ஆகவே இந்த சிறு நிவாரணங்களை அளிப்பதற்குத் தயங்கக் கூடாது என்பதைத் தெரிவித் துக் கொள்கிறேன்.



.974 மார்ச் 11] [திரு. ஓ. என். சுந்தரம்]

உணவுப் பண்டங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். .967-க்கு முன்னால் நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், உணவுப் பண்டங் களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று. உங்களுக்கு அது ஒரு வேளை நினைவிலே இல்லாமல் போகலாம், ஆகவே உங்களுக்கு நினைவூட்டு வதற்காகச் சொல்கிறேன். உணவுப் பண்டங்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே சாதாரணமாக அரிசி விலை 2 ரூபாய் $2\frac{1}{4}$ ரூபாயாக இருந்தது இன்றைக்கு 3 ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது காரணம் என்ன? உணவு வியாபாரிகள் சங்கத்தின் மூலமாக உங்களுக்கு மகஜர் கொடுத்து இருக்கிறார்கள் என்று பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். தஞ்சாவூரிலே 25 சதவீதமாக இருந்த லெவியை 50 சதவீதமாக உயர்த்திய தன் காரணமாகத் தான் இன்றைக்கு அரிசி விலை உயர்ந்துவிட்டது. (மணியடிக்கப்பட்டது) சபாநாயகர் அவர்களே, எங்களுடைய கட்சியின் சார்பிலே இன்றைக்கு நான் ஒரு ஆள்தான் பேசுகிறேன், ஆகவே 10 நிமிடங்கள் அதிகமாக எனக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சாவூரிலே உள்ள 40 அரிசியாலைகள் இன்றைக்கு அதனால் பாதிக்கப்பட்டு தொழிலாளர்கள் வேலை செய்ய முடியாத நிலைமை யெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. மக்களுக்கு 3 ரூபாய்க்குக்கூட அரிசி கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அந்த லெவி முறையை வேண்டும் 25 சதவீதம் என்ற அளவிற்குக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற மாதம் நான் ஆளுநர் உரையின்மீது பேசுகின்றபொழுது மது விலக்கு கொள்கைப்பற்றி இந்த அரசாங்கம் தெரிவிக்க வேண்டும், தெளி வான கொள்கையை தெரிவிக்க வேண்டுமென்று சொன்னேன், ஆனால், இதுவரையிலும் தெரிவிக்கப்படவில்லை. இந்த ஆகஸ்டு வரையிலும் சாரக் ஷாப் இருக்குமா? அதற்கு மேலும் நீடிக்குமா? அல்லது மூடப்படுமா? பூரண மதுவிலக்கு கொண்டுவரப்படுமா என்று தெளிவாக அவர்கள் பதில் சொல்ல வேண்டும். ஏற்கெனவே நாம் கொண்டுவந்ததே வேறு—அப்படியிருக்கும்பொழுது—நான் ஏற்கெனவே சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன்.—மதுவிலக்கு ரத்து செய்தால் பாதிக்கிணறு தாண்ட வேண்டாம் முழு கிணற்றையும் தாண்டிவிடுங்கள் என்று சொல்லியிருக் கிறேன். பரிபூரண மதுவிலக்குக் கொள்கையைக் கொண்டுவர வேண்டு மென்பதைப்பற்றி உங்களுடைய பேச்சின்போது திட்டவட்டமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதல்வர் அவர்கள் கலைத் துறையிலே உள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வீட்டுவசதியைச் செய்து தரப்போவதாக அறிவித்திருக் கிறார்கள், நான் அதை வரவேற்கிறேன். முதல்வர் அவர்கள் கலைத் துறையிலே எந்த அளவிற்கு ஈடுபாடு கொண்டவரோ அந்த அளவிற்கு பத்திரிகைத் துறையிலேயும் ஈடுபாடு கொண்டவர் என்பதிலே சந்தேகம் இல்லை. பத்திரிகை தொழிலிலே உள்ளவர்கள் ஆயிரக்கணக்கான குடும் பங்கள் வீட்டு வசதியில்லாமல் இருக்கிறார்கள், அவர்களுக்கும் வீடுகள்

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 மார்ச் 11

கட்டித் தருகின்ற திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் எதிர்க்கட்சிகாரர்கள் சொல்கிறோம். செய்ய வேண்டுமா என்று நினைக்காமல் அதற்காக இந்த நிதியில் ஒரு டோக்கன் நிதி அடையாளப் பூர்வமான தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். அந்தச் சம்பவத்தை நான் சொன்னால் வெட்கம், சொல்லாவிட்டால் துக்கம் என்ற அளவிற்கு நான் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட காசோலைகள் 10 நாட்களுக்குள்ளாக ஸ்டேட் பாங்கியில் கொடுக்கப்பட்ட பொழுது அவையெல்லாம் ஹானராவது இல்லை, திரும்பி வந்துவிடுகின்றன, சாதாரணமாக வியாபாரிகள்தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வார்கள், நாங்களும் செய்திருக்கிறோம், ஆனால் அரசே இப்படிச் செய்தால் எப்படி ? சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு 25-ம் தேதியன்று கொடுக்கப்பட்ட காசோலைகள் 28-ஆம் தேதியன்று ஸ்டேட் வங்கியிலே கொடுக்கப்பட்டால் ஹானராவது இல்லை, அடுத்த மாதம் 8-ம் தேதி திரும்ப வந்துவிட்டது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் நிதிநிலை சரியாக இருக்குமா என்று என்னைப் போன்றவர்கள் அரசியலில் அதிகமாக ஈடுபாடு இல்லாதவர்கள் யோசிக்க வேண்டிய நிலைமையில் இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காகத்தான் இதைத் சொல்கிறேன்.

குளித்தலையிலே குடகனாற்றிலே நீர்த் தேக்கம் கட்டுவதாகப் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். வேடசந்தூர், அழகாபுரிக்குப் பக்கத்திலே திருச்சி ஜில்லாவிலே காவிரியாறு ஓடக்கூடிய பகுதியிலே வசதியிருக்கிறது—ஆனால் வேடசந்தூர் பகுதியிலே கண்மாய்களுக்குத் தண்ணீர் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை ஆகவே போதுமான அளவிற்கு அங்கே தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும், அந்த முறையிலே இந்தத் திட்டத்திலே மாறுதல்களைச் செய்து பாளையம் பஞ்சாயத்திலே வேடசந்தூர் பஞ்சாயத்திலே உள்ளவர்களுக்கு அந்தத் திட்டத்தின் பயன்கள் கிடைக்கக்கூடிய முறையிலே திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே இரண்டு தினங்களுக்கு முன்னதாக எங்கள் கட்சியின் சார்பாக சட்ட மன்ற உறுப்பினர்கள் திரு ஆண்டி அம்பலம் அவர்கள் ஒரு பிரச்னை பற்றிப் பேசினார்கள், ஆனால் கோர்டிலே இருக்கிறது, சப்ஜூடிஸ் என்று சொல்லி நிறுத்தப்பட்டதாகச் சொன்னார்கள், நான் அந்த விவகாரத்திற்குள்ளே போகவில்லை. பொதுவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முதல்வருக்கு ஆபத்து அதிகமாக ஏற்படுகிறது எதிர்க் கட்சியிலிருந்து அல்ல, ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் சிலர் இப்படி விவகாரங்களிலே தலையிட்டு பல தொல்லைகளைக் கொடுத்து விபரீதமான நிலைமைகளை முதல்வர் அவர்களுக்கு ஏற்படுத்திவிடுகிறார்கள். ஆகவே, சரியான முறையிலே நியாயம் வழங்கப்பட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1974 மார்ச் 11] [திரு. ஓ. என். சுந்தரம்]

காவல் துறையில் நான் எல்லோரையும் சொல்லவில்லை, இருவர் ஒருவர் பாரபட்சமாக நடந்துகொள்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி இந்த நிதிநிலை அறிக்கையை எங்களுடைய கட்சியின் சார்பாக வரவேற்பதற்கில்லை என்று சொல்லி அமர்கிறேன். வணக்கம்.

*திரு. பி. பொன். சொக்கலிங்கம்: தலைவர் அவர்களே, 1974–75 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை 'வரவேற்றுப் பேசுகின்ற நல் வாய்ப்பைப் பெற்றமைக்காக நான் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்றுப் பேசுகின்ற நேரத்திலே இங்கே இரண்டு, மூன்று நாட்களாக இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசிய பல நண்பர்களுடைய கருத்துக்கள் என்னுடைய கவனத்திற்கு வருகின்றன.

இந்த நிதிநிலை அறிக்கையை எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள் என்ற காரணத்தினாலேயே அவர்கள் எதையும் எதிர்க்க வேண்டுமென்ற காரணத்தினாலேயும், நல்ல பட்ஜெட் என்று தெரிந்தும் பல நண்பர்கள் எதிர்த்துக் கொண்டிருந்தார்கள், எதிர்த்துப் பேசிக் கொண்டு வருகிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள நல்ல கருத்துக்களை, விவசாயப் பெருங்குடி மக்கள் வரவேற்கிறார்கள். ஏழைஎளிய பாட்டாளி மக்களுக்கு விவசாயத்தையே நம்பியிருக்கக்கூடிய மக்களுக்கு மாடு, கன்றுகளை வைத்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு, மாட்டுத் தீவனத்திற்கான வரியை ரத்து செய்திருக்கிறார்கள், இதை மாடு வைத்துப் பிழைப்பவர்கள் பாராட்டுகிறார்கள். அதை எதிர்க் கட்சியிலே உள்ள யாரும் பாராட்டவில்லை.

கோழி வளர்ப்புக்காக ஒரு பங்கீட்டுத் தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள், அதை யாரும், எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் பாராட்டவில்லை. உரம் பற்றவில்லை, உரம் பற்றவில்லை என்று சொல்லுகிறார்கள். இன்றைக்குக் குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் நான்கைந்து ஏக்கரா நிலம் உள்ள விவசாயக் குடும்பங்களுக்குச் சீரான முறையில் கார்டு விநியோகத்தின் மூலம் உரம் தாராளமாகக் கிடைக்கிறது. இருந்தாலும் இந்த ரசாயன உரத்தை மட்டும் நம்பிக் கொண்டிராமல் கோழி வளர்ப்பதன் மூலம், அந்தக் கோழியின் உரத்தை பயன்படுத்தி தங்கள் நிலங்களில் தரமான நெல்லை உற்பத்தி செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அதிலே விவசாயிகள்தான் அதிகமாகக் கவனம் செலுத்துவதில்லை.

எதெற்கெடுத்தாலும் முதலமைச்சரைக் குறை சொல்ல வேண்டும், அவர் தீட்டிய திட்டத்தைக் குறை சொல்ல வேண்டும் என்று கருதிக் கொண்டு சொல்கிறார்கள். நாங்கள்கூட குறை சொல்லலாம், "தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள், பாரதியின் பாடலைச் சொன்னார்கள். ஆனால் எத்தனைபேர் அரிசிக்கு ஆலாய்ப் பறந்தார்கள்!

இன்னும் சிலர் பேசுகிறார்கள். நம்முடைய நண்பர் சுரேந்திரன் கூட அண்ணா அவர்களின் பெயரைச் சொல்லிச் சொன்னார்கள், மதுவிலக்கைப் பற்றி அண்ணாவின் கொள்கை அண்ணா அவர்களை அறிமுகப்படுத்துவதுபோலச் சொன்னார்கள், மதுவிலக்கைப் பற்றிச் சொன்னார்கள். ஆனால் இன்றைக்குப் புதுவை மாநிலத்தில் அவர்களது கொள்கை என்னவென்று சொல்லவில்லை. ஆனால் சிறந்த முறையில் திட்டம் தீட்டப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் அவர்கள் குறை கண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதுவரையில் கிராம வளர்ச்சித் துறையிலிருந்த ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த வாய்க்கால்கள் இன்றையதினம் பொதுப்பணித்துறைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அது ஒரு சிறப்பான திட்டம். அந்தத் திட்டத்தின் கீழ் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் அரசுக்கும் உள்ள பங்குத் தொகையை, ஏற்கனவே இருந்ததைவிட இன்றைக்கு அரசு ஐந்து பங்கு தருவதாக வாக்களித்திருப்பது இந்தத் திட்டத்திலே இருக்கிறது. அதனால் ஏழை எளிய விவசாய மக்கள் பாராட்டுகிறார்கள்.

அதையும்விட ஏழை எளிய மாதர்கள் தங்கள் கைகளிலே அணியக் கூடிய கண்ணாடி வளையல்களுக்கு விலக்கு அளித்திருக்கிறார்கள். அதை இங்குள்ள எதிர்க்கட்சி நண்பர்கள் வரவேற்கவில்லை. 1967–ஆம் ஆண்டு பணத்திற்கு இருந்த மதிப்பிற்கும் இன்றைக்குள்ள பணத்திற்கு இருக்கும் மதிப்பிற்கும் உள்ள வேறுபாட்டை இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. ஆனால் குறை சொல்ல வேண்டும் என்ற காரணத்திற்காகவே சொல்லுகிறார்கள்.

இன்றைக்கு நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கோடி ரூபாய் கடனைத் தள்ளிக் கொடுத்தார்கள் என்றால் அதை வரவேற்கிறோம். ஆனால் அது சரி அல்ல என்று சொல்கிறார்கள்.

நெசவாளர்களைப் பற்றிப் பேசும் பல நண்பர்களை நான் பார்த்தேன். ஒரு காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நெசவாளர்களின் குடும்பங்களின் துயரத்தைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக கைத்தறித் துணிகளைக் கழகத் தலைவர்கள் சிரமேற்தாங்கி அத்தனைபேரும் விற்க வேண்டுமென்று சொன்னார்கள். அதைப்போல விற்றோம்.

அதுமட்டுமல்ல, அண்ணா அவர்கள் சொன்னார்கள், நாமும் கைத்தறி துணி கட்டுகிறோம் என்ற நிலை வருமானால் கைத்தறி துணியை நெய்யும் நெசவாளர்கள் தரமான கைத்தறி ஆடைகளை நெய்வார்கள் என்று சொன்னார்கள். இங்கே பேசிய பல நண்பர்களை நான் பார்த்தேன். கைத்தறி நெசவாளர்களுக்காகக் கண்ணீர் வடிக்கும் அருமை நண்பர்கள், கைத்தறி நெசவாளர்களுக்காக என்ன செய்தீர்கள் என்று கேட்கும் அருமை நண்பர்கள் இரண்டு மூன்று பேரைப் பார்த்தேன். அவர்கள் கைத்தறித் துணியினால் செய்யப்பட்ட சட்டையைப் போட்டிருக்கவில்லை. மாறாக டெர்லின், 820 போன்ற சட்டைத் துணிகளைப் போட்டுக் கொண்டு கைத்தறி நெசவாளர்களைப் பற்றிப் பேசுகிறார்கள்.





உரத்தைப் பற்றிச் சிலருக்குத் தெரியாது என்று கருதுகிறேன். வயலுக்கு எவ்வளவு உரம் இடவேண்டுமென்றுகூடத் தெரியாது என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்த வரையில் நான் சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். கடந்த கால அரசைவிட இந்தத் தமிழக அரசு, அதுவும் நம்முடைய கலைஞர் தலைமைப்பொறுப்பேற்றிருக்கும் இந்த அரசிலே 8 ஏக்கர், 7 ஏக்கர், 6 ஏக்கர் என்று நிலத்தை வைத்துக் கொண்டிருக்கும் சிறு நிலச்சுவான்தார்கள் இதுவரையில் காணாத அளவில் மகசூலை அதிகமாகக் கண்டு வருகிறார்கள் என்பதை மனப்பூர்வமாக இந்த நேரத்தில் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு ஏக்கரா நிலத்தில் நூறு கலம் அளவிற்கு பொன்னி விளையும் அளவிற்கு விவசாயம் செய்ய முடிகிறது, தரமான உரம் கிடைப்பதால்தான்.

ஆனால் சில இடங்களில் கிடைக்கும் உரங்களைத் தாறுமாறாக விற்றுவிடுவதால் அவர்கள் சொல்லுகிறார்கள், உரம் கிடைக்கவில்லை, உரம் கிடைக்கவில்லை என்று. நேற்றைய முன்தினம்கூட சிதம்பரத்திலே ஏறத்தாழ 150 டன் யூரியா போன்றவைகள் மாவட்ட ஆட்சித் தலைவரின் முன் ஈ.ஐ.டி. பாரி கம்பெனியாரால் நவரப்பட்டத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது கார்டு மூலம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பால் பண்ணையைப் பொறுத்த வரையிலும் தீவிரமாகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதைப் பார்க்கும்பொழுது மிகவும் பாராட்டக்கூடிய முறையில் நல்ல வகையில் இருக்கிறது. கால்நடை வளர்ப்பு நம்முடைய நாட்டிற்கு மிகமிகத் தேவையானது. அதன்மூலம் அதிகப்படியான உரங்களை நாம் பெற முடியும். அதற்குப் பிறகு கோழி வளர்ப்பதன் மூலமும் சத்துணவுக்கு ஏற்ற முட்டைகள் கிடைப்பதோடு, அந்தக் கோழிகளின் மூலம் கிடைக்கும் உரத்தைப் பயன்படுத்தினால் ஒரு ஏக்கருக்கு இரண்டு அல்லது மூன்று டன் போட்டால் அதிக மகசூலைப் பெற முடியும். அந்த அளவிற்கு விவசாயிகள் நல்ல முறையிலே பயன்படுத்த முன் வருகிறார்கள். அப்படிப்பட்ட நல்ல திட்டங்களையெல்லாம் வரவேற்க முடியாதவர்களாகச் சிலர் இருக்கிறார்கள்.

ஏறத்தாழ 50 அல்லது 59 பொருட்களுக்கு ஒருமுனை வரி என்ற பெயரால் விதிக்கப்பட்டிருக்கிறது. அதில் பிண்ணாக்குக்கு மூன்றரை சதவிகிதம் என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் தலைவரவர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்வேன், கடலைப் பிண்ணாக்கு, எள்ளுப் பிண்ணாக்கு போன்ற பிண்ணாக்குகள் மாடுகளுக்கு மிகவும் அத்தியாவசியமானவையாகும். கடலைப் பிண்ணாக்கில் ஐந்தரை சதவிகிதம் நைட்ரஜன் இருப்பதால் உரத்திற்குப் பதிலாக இதையே உரமாக இரண்டாம் போகத்திற் பயன்படுத்துகிறார்கள் என்பதாலும் இந்தப்

[திரு. பி. பொன். சொக்கலிங்கம்] [1974 மார்ச் 11

பிண்ணாக்கிற்கு விதிக்கப்பட்டிருக்கும் மூன்றரை சதவிகித வரியையும் நீக்கிவிட்டால் விவசாயிகள் மிகவும் உற்சாகத்துடன் இருப்பார்கள் என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்விக்காகவும் நிதி அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது. முதியோர் பென்ஷன் என்ற நல்ல திட்டம் அமைந்துள்ளது. இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் பாராட்டாமல் எதிர்க் கட்சியினர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உணவு கிடைக்கவில்லை என்று ஒரு பக்கத்திலும், வீடு கிடைக்கவில்லை என்று ஒரு பக்கத்திலும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். வீட்டு குடியிருப்பு மனை வழங்கப்பட்டு, ஆதி திராவிட குடும்பங்களுக்கு, உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள் காண முடியாத திட்டத்தை, பண்டித ஜவஹர்லால் நேரு காண முடியாத திட்டத்தைத் தீட்டியிருக்கிறார் அண்ணாவின் அருமைத் தம்பி கலைஞர். அப்படிப்பட்ட திட்டத்தை ஆதி திராவிட மக்களுக்காக வீட்டு வசதி வாரியம் என்ற பெயரில் சிறந்த திட்டத்தை கலைஞரவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்று நேற்றையதினம் 93 வயது நிறைந்த ஒரு காங்கிரஸ்காரர் மிகவும் பாராட்டி ஆனந்தக் கண்ணீரோடு சொன்னார்கள்.

அதை நான் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, அவர்களுக்குத் தெரியாத கருத்துக்கூட கலைஞருக்குத் தெரிந்திருக்கிறது என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல, அதற்காகத்தான் முன்பெல்லாம் ஆரூரில் பிறக்க, அருணையை நினைக்க என்று சொன்னார்கள். அந்த வகையில் ஆரூரில் பிறந்த கலைஞர் அவர்களால் இந்தத் திட்டத்தைத் தீட்ட முடியும் என்று நான் சொன்னேன்.

நூறாண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த இராமலிங்க அடிகளார் சொன்னார்கள், “உண்ணவோ உணவுக்கு வழியுமில்லை, உடுக்கவோ ஒரு முழம் கந்தைக்கு மேலில்லை, படுக்கவோ பழம்பாய்க்குக் கதியுமில்லை, பாரில் நல்லவற்பாற் சென்று பிச்சை யெடுக்கவோ திடமில்லை, என்மட்டிலே உயிரைவிடவும் மனமில்லை, என்செய்குவேன் வெண்பிறைச் சடை வித்தக வள்ளலே” என்று இராமலிங்க அடிகள் ஏழை எளிய மக்களைப் பார்த்துப் பாடினார்கள். நாலரை கோடி மக்களுக்காக அந்தப் பாடலை நல்ல முறையில் படித்து, இதனை அமுல் செய்யும் வகையில் இன்றைக்குச் சிறந்த முறையில் உள்ள உணவு, இருக்க இடம், உடுத்த உடை இப்படியெல்லாம் வழங்குகின்ற கலைஞரவர்களைப் பார்த்து கிண்டலும் கேலியும் பேசுகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் பட்ஜெட்டிலே இன்ன குறையிருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. அதைச் சொல்லி இன்னதைச் செய்ய வேண்டுமென்று எடுத்துக்காட்ட முன்வரவில்லை.

தேர்தலுக்கு நிற்பார்களா, நின்றால் வர முடியுமா என்ற கேள்விகளைக் கேட்கிறார்கள். இதைப்பற்றி உள்ளபடியே நான் என்ன நினைப்பது இவர்களைப்பற்றி என்றே தெயவில்லை. அண்ணாவைப்பற்றியே தெரி-



1974 மார்ச் 11] [திரு. பி. பொன். சொக்கலிங்கம்]

யாதவர்களெல்லாம் அடிக்கடி அண்ணா, அண்ணா என்று சொல்கிறார்கள். அதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். அண்ணாவால் வளர்க்கப்பட்ட கழகம், அண்ணாவால் வளர்க்கப்பட்டிருக்கிறோம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முறையில் இருப்பதால் எதையும் பேசலாம் என்று பேசுகிறார்கள்.

திரு. வடிவேல் அவர்கள்கூடச் சொன்னார்கள். வீடு கட்டுகிறார்கள், காரிலே போகிறார்கள், அங்கவஸ்திரம் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இப்படிச் சொல்பவர்கள் வீடில்லாமல் சமுத்திரக் கரையில் பாலைவனத்தில்தானா குடியிருக்கிறார்கள் என்று நாங்கள் கேட்க முடியும். ஆனால் இப்படிப் பேசுபவர்களில் சிலர் கோல்ட் ப்ளாக் 555 சிகரெட்டைப் பற்ற வைக்கிறார்கள். நாங்கள் எல்லாம் அண்ணா வழியில் வந்தவர்கள் என்ற காரணத்திற்காக, கலைஞரவர்களைத் தலைவராக ஏற்றிருக்கின்ற காரணத்தால் எதையும் பேசிவிடலாம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை என்னாலே உணர முடிகிறது.

[முற்பகல் 11--30]

சிதம்பரம் வட்டத்தில் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு விவசாயிகளுக்காக, சிறு சிறு நிலச்சுவான்தார்களுக்காக ஆகாய விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது. அதற்காக இப்போது அரசு அலுவலாளர்கள் கடுமையாக வரி வசூலுக்க இறங்கியிருக்கிறார்கள் என்று நேற்றையதினம் தொலைபேசி மூலம் சொன்னார்கள். அதைத் தவணை முறையில் வசூல் செய்ய வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லையென்றால் எப்படி கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடனைத் தள்ளிக் கொடுத்தார்களோ, அதைப் போல் இரண்டு மூன்று ஏக்கர் இருக்கக்கூடிய சிறு நிலச்சுவான்தார்களுக்குப் பூச்சி மருந்து வரியினைத் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் வட்டாரத்தில் நவரப்பட்டத்தில் சிறப்பான முறையில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் உற்சாகமூட்டுகின்ற வகையில் கரும்பு நிதியிலிருந்து சாலைகள் பராமரிப்புப்புக்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது கண்டு பகுதி மக்கள் பாராட்டுகிறார்கள். நம்முடைய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்காக இந்தச் சிறப்பான திட்டத்தைத் தீட்டியமைத்ததற்காக நானும் ஏழை எளிய விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

எங்கள் பகுதியில் சாலைகள் போடுவதற்காக இப்போது உத்தரவாகியிருந்தும்கூட சிலபல இடங்களில் விவசாயிகள் கண்டு முதலான மகசூல்களை எடுத்துச் செல்ல வசதி இல்லாத நிலை இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தின் அருகாமையில் இருப்பதால் பொதுப்பணித் துறை மூலமாக வாய்க்கால்களுக்கு ரோடு அருகாமையில் சுவர் கட்ட வேண்டிய திட்டத்தை உருவாக்கி நிறைவேற்ற வேண்டும்.

[திரு. பி. பொன். சொக்கலிங்கம்] [1974 மார்ச் 11

வீராணம் ஏரியின் கீழ் உள்ள பகுதிகளில் 36 நீர்ப்பாசன வாய்க்கால்களுக்கு ஸ்லாப் சிஸ்டம் என்ற பெயரில் தடுப்புச் சுவர் கட்டி கீழே ஸ்லாப் போட வேண்டுமென்ற திட்டம் ஓராண்டு காலத்திற்கு முன்பு உருவாக்கப்பட்டது. அதை விரைவில் அமல் செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றியுடன் நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறேன். வணக்கம்.

திரு. மு. சி. ஆ. ரெத்தினசாமித் தேவர்: தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நமது மதிப்பிற்குரிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 1974–75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைக் கூறி என்னுடைய தொகுதி சம்பந்தமான சில விஷயங்களையும் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

நான் இந்த மன்றத்தில் 1971-ம் ஆண்டு உறுப்பினராக வந்தது முதல் இந்த நிதிநிலை அறிக்கையானது நான்காவது அறிக்கையாக ஆகிறது. ஏற்கெனவே, 1971–72, 1972–73, 1973–74-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கைகளைப் போலவே இந்த 1974–75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையும் இந்த நாட்டிலுள்ள ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்களுடைய நல்வாழ்வுக்கு வழி செய்யும் வகையில் அமைந்திருக்கிறது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். பொதுவாக, ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு மிக மிக முக்கியமான அம்சங்கள் கல்வி, விவசாயம், தொழில், பொதுச் சுகாதாரம் போன்றவை.

இந்த நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக 110 கோடி ரூபாயைத் தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. கல்வியில் இந்த அரசுக்குள்ள ஆர்வத்தை அது பிரதிபலிப்பதாக இருக்கிறது. அதே போன்று விவசாய வளர்ச்சிக்காக 68 கோடி ரூபாயை ஒதுக்கி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நீண்ட காலக் கடனுக எறக்குறைய 90 கோடி ரூபாய் வரை ஒதுக்கி இந்த நாட்டினுடைய விவசாயப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளித்திருக்கிறது. ஏற்கெனவே, 1967-ம் ஆண்டுக்கு முன்னால் இந்த நாட்டினுடைய உணவு நிலைமையைப் பார்க்கின்ற போது அதற்குப் பின்னால் கழக அரசு நாட்டினுடைய நிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட பின் படிப்படியாக உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றதோடு அல்லாமல் வெளி மாநிலங்களுக்கும் அனுப்புகிற அளவுக்கு முன்னேறியிருக்கிறோம் என்றால், தமிழக அரசு விவசாயத்தில் கொண்டுள்ள அக்கறைதான் அதற்குக் காரணம்; அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்தான் காரணம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று விவசாயத்திற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள பம்ப் செட்டுகளுக்கு என்னுடைய தொகுதியில் மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறை காரணமாக இருந்த போதிலும் கூட வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய மின்சாரத்தை வைத்து விவசாயிகளின் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கும்படி இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



1974 மார்ச் 11] [திரு. மு. சி. ஆ. ரெத்தினசாமித் தேவர்]

கல்வியைப் பொறுத்தமட்டிலும் அதிகமான பணம் செலவழிக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு இந்த ஆண்டு பஞ்சப்படி 10 ரூபாய் உயர்த்திருக்கிறார்கள். அதேபோன்று ஆசிரியர்களில் முதுநிலை ஆசிரியர்களாக தேர்வு பெற்று இள நிலை ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு முதுநிலை ஆசிரியர்களுடைய சம்பள விகிதத்தை உடனடியாகக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவர்களுக்குப் புதிய விகிதத்தில் சம்பளத்தைக் கூடுதலாகக் கொடுத்து விட்டால் புதிதாக நியமனம் செய்யக்கூடிய ஆசிரியர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கும் என்ற காரணத்தால் இதைக் குறிப்பிடுகிறேன்.

மேலும், பொதுச் சுகாதாரத்தைப் பொறுத்த மட்டிலும் நல்ல முறையில் இந்த அரசு பல காரியங்களைச் செய்து வந்த போதிலும் கூட எங்கள் பகுதியைப் பொறுத்தமட்டிலும் அரசு மருத்துவ மனைக்காக அருகாமையிலுள்ள நீதிமன்றக் கட்டடத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே காங்கிரஸ் அரசு இருந்த காலத்திலேயே உத்திரவிட்டிருந்தும் கூட இன்னும் அனுமதி அளிக்கப்படவில்லை. அதைத் தொடர்ந்து பத்தாண்டுக் காலமாக அதை மாற்றியமைக்க வெண்டுமென்று முயற்சித்தும் கூட இதுவரை அந்த முயற்சி நிறைவேறவில்லை. நம்முடைய சட்ட அமைச்சர் கூட தாலுகா அலுவலகத்தில் முன்சிப் கோர்ட்டுக்காக ஒரு இடத்தைப் பார்வையிட்டுச் சென்றார், அந்தப் பகுதியில் கட்டடத்தைக் கட்டிவிட்டு நீதிமன்றத்தை அந்த இடத்திற்கு மாற்றிவிட்டு மருத்துவ மனைக்கு நீதிமன்றக் கட்டடத்தைக் கொடுத்து விடலாம் என்ற முறையில் பார்வையிட்டு வந்தார். அதிலே எந்தவித முடிவும் இன்னும் நிறைவேற்றப்பட வில்லை.

அதே போன்று விவசாயத் துறையில் எங்களுடைய பகுதியில் வைகை அணைக்கட்டு நீர்ப்பாசன வசதியைக் கொண்டு மேற்கொண்டு ஐயாயிரம் எக்கருக்கு விஸ்தரிக்கக்கூடிய வசதி இருக்கிறது என்று நீண்ட நெடுங்காலமாகக் கேட்டு வந்திருக்கிறோம். சமீபத்தில் 1973-ம் ஆண்டில் திண்டுக்கல் தேர்தலின்போது கூட நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தல் பிரசாரத்தின் போது விக்கிரமங்கலத்திலுள்ள ஆயிரம் எக்கர் நிலத்திற்குப் பாசன வசதி உடனடியாகக் கொடுக்கப்படும் என்று உறுதி கூறினார்கள். அந்த வேலையும் தட்டுப்பட்டு நின்றிருக்கிறது. அந்த வேலையையும் உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் கள்ளர் சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பெண்கள் விடுதிக்கான கட்டடம் கட்ட வேண்டும் என்று எங்கள் பேரூராட்சிக்குச் சொந்தமான ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ஒரு இடத்தை 1970-ல் கொடுத்தும் கூட இது வரையில் அங்கு அதற்கான கட்டடம் கட்டப்படவில்லை.

திருமங்கலத்தில் பெண்களுக்கான ஹரிஜன நல இலாகா மூலம் நடத்தப்படுகிற ஹாஸ்டலும், கள்ளர் சீரமைப்புத் துறை மூலம் நடத்தப்படுகிற ஹாஸ்டலும் வாடகைக் கட்டடங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஹாஸ்டலைக் கட்டித் தர வேண்டுமென்று கள்ளர் சீரமைப்பு உதவி கலெக்டராக இருந்தவரிடமும் கூறியிருக்கிறோம். ஆகவே அந்த விடுதிக்

கான கட்டடத்தை உடனடியாகக் கட்டித் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி அரசாங்கத்திற்கு அந்தக் கட்டடத்தைக் கட்டித் தர சந்தர்ப்பம் இராவிட்டால் அந்த இடத்தை யாவது அந்தப் பேரூராட்சிக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், பேரூராட்சிக்கு அந்த இடம் மிகவும் தேவையாக இருக்கிறது. ஆகவே, அந்தயிடத்தில் அந்த விடுதிக்கான கட்டடத்தைக் கட்டவில்லை என்றால்—ஏன் நாம் அந்த இடத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளக்கூடாது. என்று அந்தப் பேரூராட்சி உறுப்பினர்கள் என்னிடம் கேட்கிறார்கள். அந்த இடத்தில் ஹரிஜன நல இலாகா மூலம் கட்டும் விடுதியையும், கள்ளர் சீரமைப்புத்துறை மூலம் கட்டும் விடுதியையும் அந்த ஒரேயிடத்திலேயே சேர்த்துக் கட்டிவிடலாம். அந்த இடம் இரண்டு ஏக்கர் பத்து சென்ட் உள்ளது. கிட்டதட்ட ஒரு லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இடமாகும் அது. ஆகவே அவற்றை உடனடியாகக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் கள்ளிக்குடி பேரூராட்சியில் பெராயூர் பக்கம் ஒரு ஆறு ஓடுகிறது. போக்குவரத்து வாகனங்கள் அதன் வழியே செல்லக்கூடிய ஆறாக அது இருக்கிறது. அங்கு ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று நாடு விடுதலை அடைந்த நாளிலிருந்து மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பாலத்தையும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டு இந்த நிதிநிலை அறிக்கை சாதாரண, எளிய, நடுத்தர மக்களுக்கு வாய்ப்பான ஒன்றாகும் என்று கூறி இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமர்கிறேன்.

*திரு. செ. சதாசிவம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கு சென்ற 4—3—1974-ஆம் நாள் அன்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் முதல்வர் அவர்களால் இந்தப் பேரவையில் வைக்கப்பட்டிருக்கிற 1974–75-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை சுமார் 12·42 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருந்தும் அந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட—ஏழை மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் கஷ்டமாக இருக்கும் என்ற காரணத்தால் அவர்களுக்கு எந்தவிதமான வரிவிதிப்பும் செய்யாமலும் அவர்களுக்கு செய்ய வேண்டிய பணிகளை எந்தவிதத்திலும் குறைக்காமலும் இந்த நிதிநிலை அறிக்கையை தயார் செய்திருக்கிறார்கள்.

மேலும் இந்த ஆண்டு பற்றாக்குறையைத் தவிர்ப்பதற்கு வரிச் சுமையைத் தாங்கக் கூடியவர்களுக்கு, பஸ் முதலாளிகளுக் கெல்லாம் பஸ்களுக்கு ஏற்றவாறு வரியைப் போட்டு சாதாரண மக்கள் மீது எந்தவிதமான வரியையும் விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.





மேலும் சில மாதங்களுக்கு முன்பாக தமிழக அரசு நெசவாளர்கள் நூல் கிடைக்காது அல்லல்படும்போது அவர்களுக் கெல்லாம் வட்டியில்லாக் கடனாக ஒரு கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கியது. அப்படி வழங்கப்பட்ட கடன்களைத் தமிழக அரசு கருணைக்காட்டி அவற்றை வசூலிக்காது தள்ளுபடி செய்யுமாறு உத்தரவிட்டிருப்பதற்காக என் தொகுதியைச் சார்ந்த நெசவாளர்கள் சார்பில் தமிழக அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் 25,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்து கொண்டிருந்த சிறிய வியாபாரிகள் விற்பனை வரி கணக்கு காட்டுவதில் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று அந்த 25,000 ரூபாய் என்பதை ரூ. 50,000 ஆக உயர்த்தி சிறிய வியாபாரிகளுக்கு, ரூ. 50,000 வரை வியாபாரம் செய்யக்கூடிய சிறிய வியாபாரிகளுக்கு, விற்பனை வரி விலக்கு அளித்திருப்பதற்காக அந்த வியாபாரிகள் தமிழக அரசைப் பாராட்டி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்கள் அரசாங்கத்திற்கு நன்றியுடையவர்களாக இருக்கிறார்கள்.

மேலும் 59 பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரியின் கீழ் கொண்டு வந்திருப்பதன் காரணமாக வியாபாரிகளுக்குள்ள பல கஷ்டங்கள் குறைந்துள்ளன.

அடுத்து, பருவ மழை சரியாகப் பெய்யாததன் காரணமாக எங்கள் பகுதியில் உள்ள ஏரி, குளங்கள் எல்லாம் இப்போது வற்றிவிட்டன. இதே நிலை நீடித்தால் அங்கு இரண்டு மாதங்களில் குடிநீர் பிரச்னை ஒரு பெரிய பிரச்னையாக ஆகிவிடும். ஒரு ஆண்டிற்கு முன்னால் அந்தப் பகுதியில் யூனிசெப் மூலம் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து குடிநீர் வழங்க சர்வே எல்லாம் நடந்து முடிந்தன. அப்படியிருந்தும் இன்னும் அக் கிணறுகளைத் தோண்டுவதற்கான வேலைகள் துவங்கப்படவில்லை. இந்த வேலைகள் துரிதமாக துவங்கப்படாவிட்டால் அங்குள்ள குடிநீர் பிரச்னை பெரியதொரு பிரச்னையாகிவிடும். ஆகவே யூனிசெப் மூலம் ஆரம்பிக்கப்பட இருக்கிற அந்த ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டும் திட்டத்தைத் துரிதப்படுத்தி அந்தப் பகுதிவாழ் மக்களுக்குக் குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஜெயம்கொண்டத்தில் குடிநீர் பிரச்னை விரைவில் தீர இருக்கிறது. சுயமரியாதைக் கொள்கைகளுக்காக உயிர்நீத்த வேலாயுதம் குடியிருந்த ஊர் உடையார்பாளையம். அது ஒரு நகரப் பஞ்சாயத்து. அந்த நகரப் பஞ்சாயத்தின் குடி நீர் பிரச்னையை இதுவரை தீர்க்கப் போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இப்பொழுது அதற்குரிய இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ்காக 10,000 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். ஜெயங்கொண்டம் குடிநீர் தொட்டியிலிருந்து உடையார்பாளையம் நகரத்திற்குத் தண்ணீர் கொடுக்கிற அளவிற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் ஜெயங்கொண்டத்தில் விரைவில் தண்ணீர் திறந்துவிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கு தண்ணீர் கொடுக்கப்படுகிற அதே தினத்தில் உடையார் பாளையத்திற்கும் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. சதாசிவம்] [1974 மார்ச் 11

அடுத்து, இதுவரை ஹைவேஸால் பராமரிக்கப்படுகிற ரோடுகளில் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதில் சில ரோடுகள் மிகவும் குறுகலாக இருக்கின்றன. செந்துறையில் இருந்து ஜெயங்கொண்டம் செல்லும் பாதையில் எலையூர், புதுக்கடி என்ற இடத்தில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரையில் ஒரு பஸ்தான் ஓடக்கூடிய அளவில்தான் பாதை இருக்கிறது.

ஜெயங்கொண்டத்திலிருந்து விருத்தாசலம் செல்லும் வழியில் கருக்கை, ஆற்றுக்குறிச்சி ஆகிய இடங்களில் சுமார் இரண்டு கிலோ தூரத்திற்கு ஒரு பஸ் செல்லக்கூடிய அளவிற்குத்தான் பாதை இருக்கிறது. அவ்வளவு குறுகலாக இருக்கிறது. ஒரு பஸ் செல்லும்போது எதிரில் ஒரு பஸ் வந்தால் அதைத் திரும்ப பின்பக்கம் கொண்டு சென்று பிறகுதான் இந்த பஸ் போகக்கூடிய அளவில் அவ்வளவு குறுகலாக இருக்கிறது பாதை. அதில் சர்க்கார் துரித பஸ்கள் கூட ஓடுகின்றன. ஒருதடவை ஒரு மாட்டு வண்டி எதிரே வந்தபோது அந்த பஸ்ஸை பின்பக்கம் கொண்டு செல்ல வேண்டி வந்தது. முக்கால் மைல் தூரம் பின் சென்ற பிறகு தான் அப்பிரச்னை தீர்ந்தது. ஆகவே அந்தப் பாதையை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் பஸ் போக்குவரத்து நல்லமுறையில் அமைவதற்கு ஏதுவாகும்.

பின்னர் செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆதனக்குறிச்சி பஞ்சாயத்து சம்பேரில் இருந்து பெண்ணாகடம் செல்ல வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டி நல்ல பாதை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். கரும்பு செஸ் நிதியிலிருந்து 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரியவருகிறது. அந்த வேலையை துரிதமாக இந்த ஆண்டே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சையிலிருந்து திருமானூர் பாலத்தின் வழியாக சென்னைக்கு வர பெண்ணாடம் வழி வந்தால் குறைவான தூரத்தில் வர முடியும். ஆகவே அரியலூர் வட்டத்திலுள்ள கரும்புகளையும் பெண்ணாடம் அருணா சுகர் பேக்டரிக்கு ஏற்றி வருவதற்கான வசதிக்காகவும் வெள்ளாற்றின் குறுக்கே அங்கு ஒரு பாலம் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது அரியலூரில் ஒரு டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் இருந்து வருகிறது.

அங்கு பல ஆண்டுகளாக விசாரித்து முடிவு செய்யப்படாத பல கேஸ்கள் இருப்பதால், அங்கு இப்போது ஒரு அடிஷனல் டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்ட் ஏற்படுத்தி வக்கீல்கள் அமர்ந்திருந்த இடத்தில் கோர்ட் அமைக்கப் பட்டு நடந்து வருகிறது. அதன் காரணமாக வக்கீல்கள் உட்கார இட மில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

மேலும் அந்தக் கோர்ட்டை ஜெயங்கொண்டத்தில் பிரித்து அமைப்ப தற்கும், திருச்சியிலுள்ள சப்-கோர்ட் ஒன்றை அரியலூரில் அமைப்பதற்கும் செயற்குறிப்புகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றன. அந்தப்



1974 மார்ச் 11] [திரு. செ. சதாசிவம்]

பகுதி மக்கள், உடையார்பாளையத்திலுள்ள மக்கள், சப்-கோர்ட்டிற்கு திருச்சிக்குச் செல்வதற்கும், டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டிற்கு அரிய லூருக்குச் செல்வதற்கும் உள்ள நிலை இருக்கிறது. ஆகவே, அரியலூரில் சப்-கோர்ட் ஏற்படுத்துவதற்கும், ஜெயங்கொண்டத்தில் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் ஏற்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் வட்டம் செந்துறை ஒன்றியத்தில் சில ஆண்டுகளாக அரி சனங்களுக்கு மனைப்பட்டா வழங்கப்படவில்லை. வெல்பேர் ஆபீசர்களைக் கேட்டால் பணம் ஒதுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கும் அரிசன மக்களுக்கு பட்டா வழங்க உடனடியாக ஏற்பாடு செய்வதுடன், தற்போது முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கும் அரிசன மக்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தையும் விஸ்தரித்து அந்த மக்களுக்கு வீடுகள் கட்டித் தரவும் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரிசன மக்களுக்குப் பட்டா வழங்கப்படுவதுபோல், மனை இல்லாத தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மனை ஒதுக்கித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் வட்டம் மிகவும் பின்தங்கிய வட்டம். அந்த வட்டத்தில் எந்த விதமான ஆற்றுப் பாசனமோ, பெரிய ஏரிப் பாசனமோ கிடையாது. அங்கே இருக்கும் மக்கள் வேலை கிடைக் காமல் பாதி நாட்கள் தஞ்சாவூர் ஜில்லாவிற்கும், வேறு இடங்களுக்கும் சென்றுதான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை அமைத்துக் கொடுத்தால் அங்கேயிருக்கும் ஏழை நெசவாளர்களுக்கும், மற்ற ஏழை மக்களுக்கும் உதவிகரமாக இருக்கும். ஆகவே, உடையார்பாளையம் வட்டத்தில் ஒரு கூட்டுறவு நூல் உற்பத்தி நிலையம், அல்லது கூட்டுறவு முந்திரி உடைக்கும் நிலையம் ஆரம்பித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயிருக்கும் விவசாயிகள் மானாவாரிப் பயிர்கள்தான் உற்பத்தி செய்து வருகிறார்கள். அங்கே போதுமான தண்ணீர் கிடையாது. நிலவள வங்கியின் மூலமாக ஹைடர் ஸ்கீம் என்று சொல்லிக் கடன் கொடுத்து, அதன் மூலம் போர் போட்டவர்களுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அந்த மின்சார இலாக்கா இணைப்புக் கொடுக்க மறுக்கிறார்கள். ரூ. 20,000 ரூ. 30,000 செலவு செய்து போர் போட்டவர்கள் இன்றைக்கு பம்ப் செட்டிற்கு மின் இணைப்புக் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு வருட வட்டி கட்ட வேண்டுமென்று நோட்டீஸ் வந்திருக்கிறது. ஆகவே, அந்த போர் போட்டவர்களுக்கு உடனடியாக மின்சார இணைப்புத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே "சிறு விவசாயிகள் நீரேற்றுச் சங்கம்" என்று ஒன்றை ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்களெல்லாம் கூட்டுறவுத் துறை மூலம் அமைத்து இருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் நடைமுறைக்கு வர

[திரு. செ. சதாசிவம்] [1974 மார்ச் 11

வில்லை. அதை நடைமுறைக்கு எடுத்துக் கொண்டு, விவசாயிகளுக்கு நல்ல வகையில் தண்ணீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கையை முழு மனதோடு ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு மாற்று தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்று நமது இந்திய நாடு பொருளாதார வகையில் கடுமையான விலைவாசி ஏற்றத்தாலும், பணச் சிக்கல்களாலும் அவதியுறும் நேரத்தில் மத்திய அரசு நிதி நிலை அறிக்கை மூலம் மேலும் வரி விதித்து அத்தியாவசியப் பொருள்களின் விலையை மேலும் அதிகரிக்கச் செய்துள்ள இந்த நேரத்தில், நம்முடைய மாநில அரசு ஒரு இக் கட்டான நிலையில் மதுவிலக்கின் காரணமாக 25 கோடி ரூபாய்க்கு மேலே இழப்பு அடைந்திருக்கும் நேரத்தில் நிச்சயமாக ஒரு கடுமையான வரி விதிப்பை தமிழக மக்கள் தாங்க வேண்டுமென்ற அச்சத்தில் நாம் இருந்து கொண்டிருந்த போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் ரூ. 10 கோடிக்கு மட்டுமே புதிய வரியைப் போட்டிருக்கின்றார் என்று பார்க்கிறபோது—நான் உள்ளபடியே மனமகிழ்வோடு சொல்கிறேன். இந்த மாநில அரசு மக்களின் சிரமங்களை அதிகப்படுத்தக் கூடாது என்பதில் அக்கறை கொண்டு வரியைக் குறைந்த அளவுக்கு விதித்து இருப்பது பாராட்டிற்குரியது. அந்த அளவுக்குச் சாதனை புரிந்த நமது முதலமைச்சர் அவர்களை ஒரு "பைனான்சியல் விசார்ட்" (**Financial Wizard**) என்று அழைக்கலாம். அவர் கல்லூரியில் சென்று பொருளாதாரம் படிக்காமல் இருக்கலாம். ஆனால் எத்தனை சாதுர்யமாக இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்து இருக்கிறார்கள் என்று பார்க்கிறபோது உண்மையிலேயே இது நல்லதொரு நிதிநிலை அறிக்கை, பாராட்டுதற்குரிய நிதிநிலை அறிக்கை என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் ஒரு வணிகன். உண்மையிலே இந்த நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள வரிச் சலுகை வணிக சமுதாயத்திற்கு சற்று மன அமைதியை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. பல காலமாக நாங்கள் பொருள்களுக்கு ஒரு முனை வரி விதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தோம். இப்போது 59 பொருள்களுக்கு ஒரு முனை வரி விதிப்புக் கொண்டு வந்திருக்கிறார்கள். இது இத்துடன் நின்று விடக் கூடாது. இன்னும் பல பொருள்கள் ஒரு முனை விற்பனை வரியின் கீழ் கொண்டு வரக்கூடிய தன்மையில் இருக்கிறது. ஸ்டேஷனரி பொருள்கள் இன்னும் இருக்கின்றன. அவைகளுக்கு ஒரு முனை வரிவிதிப்பு கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது 50,000 ரூபாய் வரை வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலும் கொடுக்காத ஒரு



1974 மார்ச் 11] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

சலுகையாகும் இது. இது சிறு வியாபாரிகளுக்கு நல்ல பலனைத் தரும். இப்படி அரசு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளித்திருந்தபோதிலும்; அதிகாரிகள் வரி வசூல் அதிகம் செய்து காட்ட வேண்டுமென்ற ஆர்வத்தில் நீங்கள் ரூ. 50,000-க்கு மேல் வியாபாரம் செய்தீர்கள் என்று சொல்லி கெடுபிடி செய்ய முடியும். அந்தச் சிறு வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். விற்பனை வரி அதிகாரிகள் மட்டத்தில் எல்லாம் சரியாக இல்லை என்று சொல்லி —அதற்குமேல் நான் சொல்ல விரும்பவில்லை—அவர்களைக் கண்காணிப்பதற்கு விஜிலென்ஸ் அதிகாரிகளை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தப் பிரச்னையை இத்தோடு விடுகிறேன்.

இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் குமாரபாளையம் சம்பவம் குறித்து அதிகமாகப் பேசினார்கள். நானும் கோவை தேர்தலுக்குச் சென்று இருந்தேன். அங்கே முஸ்லீம் தெருக்களில் ஒவ்வொரு பகுதியிலும் சுவர்களில் எழுதப்பட்டு இருந்தது. "குமாரபாளையத்தில் பாத்திமாக்கு ஏற்பட்ட நிலைமை உங்களுக்கு ஏற்பட வேண்டுமா" என்று எழுதியிருந்தார்கள். நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

இதிலே ஓரளவு ஈடுபாடு கொண்டு அதிகமாகத் தகவல் பெற்று உண்மை நிலையை அறிந்தவன் என்ற முறையில் இந்தச் சபைக்கு பகிரங்கமாக ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். தவறு நடந்தது உண்மை. ஒரு சில குற்றவாளிகள் இதைச் செய்து இருக்கிறார்கள். ஆனால் அரசு இதில் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதா என்றால் இல்லை. இதில் முழுமையாக நடவடிக்கை எடுத்து இருக்கிறது. நாங்கள் அந்தப் பெண்ணின் பிணத்தை எடுத்து மறுபரிசோதனை செய்யவேண்டுமென்று கோரிய நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஐ.ஜி. அவர்களோடு தொடர்பு கொண்டு அதற்கு உத்தரவிட்டார்கள். நாங்கள் அந்த இடத்திற்குச் சென்று பார்ப்பதற்கு முன்பே அது செய்யப்பட்டது. அந்த அளவுக்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக நாங்கள் மேலும் பல விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கூறியபோது, நாங்கள் செல்வதற்கு முன்பே எங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தருவதற்கு உத்தரவிட்டது. இதை அரசு மறுக்கவும் இல்லை, மறைக்கவும் இல்லை. எத்தனை அதிகாரிகள் இருந்தாலும் நாட்டில் கொலைகாரர்கள் இருக்கத்தான் செய்வார்கள், குற்றவாளிகள் இருக்கத்தான் செய்வார்கள், கற்பழிப்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். ஆனால் சம்பவம் எங்கேனும் நடந்து விட்டால் அதற்கு அரசுதான் காரணம், அதை அரசு தான் தூண்டி விட்டது என்று சொல்வது, அரசின் மேல் உள்ள ஒரு அசூயையின் காரணமாகவும், அரசுக்கு மாசு கற்பித்து அதன் மூலம் ஓட்டு வாங்கலாம் என்பதற்காகவுமேயாகும். அதுவும் ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட அசம்பாவிதமான நிகழ்ச்சியை வைத்து அரசியலில் லாபம் தேட வேண்டுமென்று நினைத்தால் எந்த அளவுக்கு அரசியல் நாகரிகம் தரம் கெட்டு இருக்கிறது என்பதற்கு நான் இதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

]திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 மார்ச் 11

[நண்பகல் 12-00]

ஆனால் ஒன்றை நான் சொல்லித்தான் ஆகவேண்டும். குமார பாளையத்தில் இரண்டு பண சக்திகள் ஒன்றை ஒன்று மோதுவதாகும். பண சக்திகள் ஒன்றுக்கு ஒன்று சேற்றை வாறி வீசுவதற்காகக் கிடைத்த எந்த ஆயுதத்தையும் ஆதாரமாக வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றன. இது ஒரு துர்ப்பாக்கியமான துரதிருஷ்டவசமான சம்பவம். ஒரு கோஷ்டி உண்மையை அமுக்கப் பார்க்கிறார்கள். ஒருவர் எறும்பை யானையாக ஆக்கி தீவிரப் பிரசாரம் செய்வதாகக் கேள்விப்படுகிறேன். இந்த நிலை பொதுவாக துர்ப்பாக்கியமானது. சீக்கிரம் நீதி நிலை நிறுத்தப்பட வேண்டும். நீதி நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று பெரியவர்களெல்லாம் பாடுபடுவதன் காரணமாக அரசாங்கத்திற்கு வேண்டுகோள் ஒன்று விடுக்க விரும்புகிறேன்.

பகிரங்கமாக நீதி விசாரணை நடத்தப்படும் என்று அறிவித்து விடுங்கள். அதன் மூலம் துர் சக்திகள் தன்னுடைய செல்வாக்குகளைப் பயன்படுத்தாது. உண்மை நிலை வெளிவர அனுகூலமாக இருக்கும். பல்வேறு எதிர்க்கட்சியினர் அந்த ஊரிலே இதற்காக தொடர் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இந்தப் பிரச்னையை இந்த அரசு மிக நல்ல முறையில் அணுகி வருகிறது. ஆராய்ந்து வருகிறது. ஆகவே அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் இதற்காக நாங்களும் எங்களால் முடிந்த அளவுக்கு உண்மையை நிலைநாட்டுவதற்கு முயற்சிக்கிறோம் என்ற வாக்குறுதியையும் கொடுக்கிறேன். கணவர் தஸ்தகீர் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக சந்தேகம் இருக்கிறது. அதிலே போலீஸார் அத்து மீறி, உண்மைக்கு மாறாக நடந்து கொண்டார்களா என்பதை முதல் அமைச்சர் அவர்களே தலையிட்டு உண்மையை ஆராய வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்து, அடுத்த பிரச்சினைக்கு வருகிறேன்.

சிக்கல் ஒரு சிறிய கிராமம். அங்கே ஒரு கலவரம் நடந்தது. அந்தக் கலவரத்திற்குத் தலைமை தாங்கி நடத்தியிருக்கிறார் சப் இன்ஸ்பெக்டர் கருப்பையா என்பவர். அவரே தலைமை வகித்து ஒரு கூட்டத்தைக் கூட்டி பள்ளிவாசலில் கற்களை எறியச் சொல்லியிருக்கிறார். முஸ்லிம் மக்கள் வசிக்கும் வீடுகளில் உள்ள ஓடுகளை உடைத்திருக்கிறார்கள். நானும், எனது கட்சித் தலைவர்களும், சக சட்ட மன்ற உறுப்பினர்களும் அங்கே சென்று கண்ணாலே பார்த்தோம். ஒரு இந்து பெருங்குடி மகன் வீட்டில் ஒரு ஓடு கூட கலைக்கப்படவில்லை. அதே சமயத்தில் அங்கே இருக்கும் 20, 30 முஸ்லிம் மக்களின் வீடுகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் இதைக் கண்ணாலே கண்டோம். பள்ளிவாசல் சேதப்படுத்தப்பட்டிருப்பதையும் கண்டோம். ஒரு முஸ்லிம் மூதாட்டி கண்ணில் நீர் மல்க தனக்கு ஏற்பட்ட காயங்களைக் கா[illegible]



1974 மார்ச் 11] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

இந்தச் சம்பவம் நடைபெற்றது சம்பந்தமாக சில பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட 27 பேர்களும் முஸ்லிம்களாக இருக்கிறார்கள். மற்ற மதத்தினர் எவரும் கைது செய்யப்படவில்லை. இது விநோதமாகவும், வேடிக்கையாகவும் இருக்கிறது. கைது செய்யப்பட்டவர்கள் பேரில் ஏதேனும் கேஸ் போடப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. இன்னும் எந்தக் குற்றச்சாட்டும் தரப்படவில்லை. நான்கு மாதங்கள் ஆகியும் குற்றம் எதுவும் ருசுவாகவில்லை.

ஆகவே, இதில் முதலமைச்சர் அவர்களே தலையிட்டு உண்மை என்னவென்பதை ஆராய்ந்து அறிய வேண்டும். அந்த சப்-இன்ஸ்பெக்டர் எந்த ஊரில் இருந்தாலும் முஸ்லிம் சமுதாயத்தினருக்கு பிடித்தது ஆபத்து. ஐந்து இடங்களில் அவர் இருந்திருக்கிறார்: அந்த ஐந்து இடங்களிலும் வகுப்புக் கலவரங்கள் உண்டு பண்ணப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட பொல்லாத அதிகாரிகளை வைத்துக் கொண்டு அரசாங்கம் ஏன் கெட்ட பெயர் சம்பாதித்துக் கொள்ளவேண்டும்? இவர்களையெல்லாம் எங்கே அனுப்ப வேண்டுமோ அங்கே அனுப்புவதற்கு இன்னும் காலம் வரவில்லையா என்று நான் கேட்கிறேன்.

அடுத்தபடியாக, உருது ஆசிரியா பயிற்சிப்பள்ளிகள் மாத்திரம் இன்னும் திறக்கப்படவில்லை. தமிழகத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் மூடப்பட்டு மீண்டும் திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உருது ஆசிரியர் பயிற்சிப் பள்ளி மாத்திரம் இன்னும் திறக்கப்படவில்லை. பல இடங்களில் உருது ஆசிரியர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. மூன்று உருது ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. சென்னையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒவ்வொன்று, திருச்சியில் பெண்களுக்கு ஒன்று. ஆண்களுக்கு ஒன்று, பெண்களுக்கு ஒன்று என்று இரண்டு பயிற்சிப் பள்ளிகளையாவது திறந்தால் கூட நாங்கள் சம்மதிப்போம் வேலூரில் இப்பொழுதே உருது ஆசிரியர்கள் கிடைக்கவில்லை என்று கேள்விப்படுகிறேன். (மணி அடிக்கப்பட்டது) சீக்கிரம் முடித்துவிடுகிறேன். என் கட்சியில் நான் ஒருவன் தான் பேசப் போகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்): எல்லாக் கட்சிகளிலிருந்தும் கொஞ்சம் பேர்கள்தான் பேசுகிறார்கள். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: ஆகவே, அருள் கூர்ந்து இந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை உடனடியாகத் திறப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் பல தடவைகள் இங்கே சொல்லியிருக்கிறோம். எங்கள் சமுதாயத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு பதவிகள் நியமனங்களில் கிடைக்கவில்லை, கிடைக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அண்மையில் ஒரு அநீதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு

அரசாங்கம் காரணம் அல்ல. அலுவலர்களுக்கு இத்தகைய ஒரு போக்கு இருக்கக் கூடாது. சிறுபான்மையினருக்கு நியாயம் வழங்க வேண்டும் என்பதை மறந்து விடக்கூடாது.

டைரக்டரேட் ஆஃப் காலேஜியேட் எஜுகேஷனில் ஒரு பதவி காலி யாயிற்று. அடுத்த சீனியராக இருந்தவர் ஒரு முஸ்லிம். அவரை விட 7 ஆண்டுகள் ஜூனியராக இருக்கும் ஒருவர் அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? அந்தப் பதவிக்கு நாங்கள் தகுதியில்லையா? எங்களுக்குத் தகுதியில்லை என்றால், நாங்கள் கேட்டுப்பார்ப்போம். இல்லை என்று சொன்னால் மன நிம்மதியோடு இருந்து விடுவோம். அப்படித் தகுதியிருந்தும், முதல் இடத்தில் இருந்தும் இவருக்குப் பின்னாலே 7 ஆண்டுகள் ஜூனியராக இருந்த ஒருவருக்கு அந்தப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம்? இதை அதிகாரிகள் மனசுத்தியோடு, அகிம்சா தர்மத்தோடு, தேசிய மனப் பான்மையோடு, பாரபட்சமற்ற முறையில் செய்தாரா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மகாராஷ்டிரம், கர்நாடக எல்லைப் பகுதிகளில் தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அது குறித்து இந்த அரசு இந்தச் சபை யில் ஒரு கண்டனத் தீர்மானம் கூட நிறைவேற்றவில்லை. சர்வ கட்சியினரும் ஒப்புக் கொண்டு அது மாதிரி ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றி தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருக்கிறோம் என்ற உறு தியை இந்தச் சபையின் மூலம் காட்ட வேண்டும்.

எங்கள் மதிப்பிற்குரிய தலைவர் காயிதே மில்லத் அவர்களை நினைத் தாலே உள்ளம் உருகுகின்றது. அவர்களுக்கு இன்னும் ஒரு நினைவுச் சின்னமும் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படவில்லை. அவர்கள் எங்கள் உள்ளங்களில் வாழ்கிறார்கள் என்பது உண்மை. ஆனால், நாங்கள் மறைந்ததற்குப் பிறகு நன்றி கெட்ட நாட்டில் என்ன நடக்குமோ எனக்குத் தெரியாது. ஆகவே, அரசாங்கம் ஒரு ஞாபகச் சின்னத்தை அவர்கள் பெயரால் ஏற்படுத்த முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

எனது தொகுதியில் எந்தத் திட்டமும் இதுவரையில் நிறைவேற்றப்பட வில்லை. 3½ ஆண்டு காலமாக மக்களை சந்திக்கவே நான் பயந்து கொண்டு ஒளிந்து கொண்டிருக்கிறேன் என்று கூட சொல்லிப் பார்த்தேன். பத்திரி கைகளும் அதைப் பிரமாதப்படுத்தின. அப்படியிருந்தும் எந்தத் திட்டமும் தொடங்கப்படவில்லை.

நொய்யல் ஆற்றில் 5,000 எக்கர்களுக்குப் பாசனவசதி அளிக்கும் வகையில் ரூ. 2 கோடி 30 லட்சம் செலவில் ஒரு திட்டம் சீஃப் என்ஜினியர் வரை எட்டியிருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். இதை காலதாமதம் செய்யாமல் 6 மாத காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கான உத்தரவை முதல் அமைச்சர் அவர்களே தலையிட்டுப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மராமத்து இலாகா அமைச்சராக





இருந்த காலத்திலேயே இது அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இவ்வளவு காலத்திற்குப் பிறகாவது அந்தத் திட் டத்தை காலதாமதம் இல்லாமல் உருவாக்கி, அதையாவது என்னுடைய தொகுதிக்கு அன்பளிப்பாகத் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமராவதியிலிருந்து உபரி நீரைத் தடுத்து எல்லாக் குளங்களுக்கும் பாசன வசதி செய்துதரக்கூடிய ஒரு திட்டத்தையும் நிறைவேற்றிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளப்பட்டியில் பெண்கள் ஓரியண்டல் ஹைஸ்கூல் ஒன்று ஏற் படுத்த வேண்டுமென்று முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இந்த எளியோனும் அதில் பங்கு கொண்டிருக்கிறேன். அது சம்பந்த மாக நிபந்தனைகள் பெரிதும் போட்டு அது தடைப்பட்டு விடக்கூடாது. இன்னும் அந்த ஊரில் ஒரு பெண் கூட உயர்நிலைப் பள்ளி வரையில் போய் 10-வது படித்ததில்லை. 12,000 முஸ்லிம் மக்களில் ஒரு பெண் கூட 10-வது படித்த பெண் இல்லை என்பது வேதனை தரத்தக்க விஷயம். 1974-ம் ஆண்டில் அப்படியிருக்கக் கூடிய சூழ்நிலை துர்ப்பாக்கியமானது. பெண்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கக் கூடிய விதத்திலே ஓரியண்டல் ஆங்கிலோ அராபிக் ஹைஸ்கூல் அங்கே ஏற்படுத்த நிபந்தனை களைச் சற்று தளர்த்திக் கொடுக்க வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் இந்த மதுவிலக்கு விஷயத்தில் இரண்டு விஷயங்கள் பற்றி முடிவு செய்திருக்கிறீர்கள், ஆனால் இன்னொரு அறிக்கை வெளியிட் டிருக்கிறீர்கள். வெளிநாட்டு சரக்குகளுக்கு விதிவிலக்கு என்று செல்லியிருக் கிறீர்கள். அதையும் வேண்டாம் என்று சொல்லி விடவேண்டும். வெளி நாட்டுச் சரக்குகள் எத்தனை விலை விற்றாலும் குடிப்பழக்கம் உடையவர்கள் குடிக்கத்தான் செய்வார்கள். ரூ. 5 விற்ற சரக்கு ரூ. 50 விற்கிறது என்றால் கூட குடித்து பழக்கப்பட்டவர்கள் குடித்து நாசமடைந்து விடுவார்கள். ஏழை மக்கள், குடித்துப் பழக்கப்பட்டவர்கள், என்ன விலை விற்றாலும் அதைப் பொருட்படுத்தாமல் வெளிநாட்டுச் சரக்குகள் கிடைக்கும் வரையில் அதை வாங்கித்தான் குடிப்பார்கள். ஆகவே, மதுவிலக்கு முழுவதாக அமுலுக்கு வந்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மதுவிலக்கை முழுவதும் அமுல் நடத்தினால் உண்மையில் இறைவனே உங்கள் பக்கம் நிற்பான். நிச்சயம் இவைகள் இறைவனுக்குப் பிரியமான திட்டங்கள். இம்மாதிரி திட்டங்களை நிறை வேற்றினால், நாட்டிலுள்ள தீய புரட்சிக் கூட்டங்கள் சக்தியற்றுப் போய் சர்க்கார் நிலை பெற்று விடும் என்பதை நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஒரு தொழில் கூட இல்லை. காங்கிரஸ் சர்க்கார் இருந்தபொழுது சதாசிவ கவுண்டர் அவர்கள் முயற்சி செய்து ஒரு சிறு நூற்பு ஆலையை அங்கே ஏற்படுத்தினார். அது சிறிய அளவில் தான் இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஐம்பது பேர்களுக்கு வேலை தரக் கூடிய ஒரு தொழிற்சாலை கூட அங்கே இல்லை. டிட்கோ, ஸிட்கோ

என்றெல்லாம் சொல்லுகிருர்கள். அந்த ஸ்தாபனத்தின் மூலமாவது ஒரு தொழில் பேட்டையை எங்கள் பகுதியில் ஆரம்பித்து கொஞ்சம் பேருக்காவது வேலைவாய்ப்பைத் தேடித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதி மிகவும் வசதியற்ற பகுதி, பிற்போக்கான பகுதி. திருச்சி மாவட்டத்தில், முற்போக்கான மாவட்டத்தில் இணைந்து இருக்கக் கூடிய பகுதியாக இருப்பதினுல், முற்போக்கு பெற்றுவிட்டோம் என்று கருதவிடக்கூடாது...................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சிறிய தொழில்களை ஊக்கப் படுத்துவதற்கு அரசு எல்லா விதமான சலுகைகளையும் அளிக்கின்றது என்று பகிரங்கமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சிறிய அளவுக்கு முதலீடு செய்யக்கூடியவர்களை அறிமுகப்படுத்திஞல், அவர்கள் மூலமாக தொழில்களை அங்கே உருவாக்குவதற்கு அரசு எல்லா விதமான உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவுக்கு ஏதேனும் சில தொழில்களை என்னுடைய தொகுதியிலே தொடங்குவதற்கு வசதிகள் செய்து தரவேண்டுமென்று சொல்லி, இந்த நிதிநிலை அறிக்கையை நான் முழு மனதோடு வரவேற்று, பாராட்டி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது "நன்றி கெட்ட நாடு" என்று தவறுலாகச் சொல்லிவிட்டார்கள் என்று கருதுகிறேன். அந்த வார்த்தைகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

*திரு. ஜி. ராமசாமி : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கின்ற 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை கூற விரும்புகிறேன்.

நமது மாநிலத்திற்கு வேண்டிய பல திட்டங்களை வகுத்து, அந்தத் திட்டங்களை எல்லாம் 1,532 கோடி ரூபாய் அளவுக்கு தயாரித்து, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்த்துக்கொள்ளவதற்காக மத்திய அரசுக்கு நமது தமிழக அரசு அனுப்பிவைத்திருக்கிருர்கள். அப்படி இருந்தும் மத்திய அரசு அதற்கு எந்த விதமான ஒப்புதலும் தராமல், எந்தவித மான நிதி ஒதுக்கீடும் செய்யாமல் இருப்பது கண்டு நாம் அனைவருமே வருத்தமடையவேண்டியிருக்கிறது.



மத்திய அரசு தமிழகத்தை மாற்றுன்தாய் மனப்பான்மையோடு பார்த்து வருகிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. நமது நிதி நிலையில் நாம் பின்தங்கி இருந்தபோதிலும் தமிழகத்திலே மிகச் சிறப்பான ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை தயாரித்து, உணவு உற்பத்தியைப் பெருக்கி, பசுமை புரட்சியின் மூலமாக அனைவரும் நல்ல முறையிலே வாழ்வதற்கு வழிவகைகளை வகுத்து, இங்கே மிகுதியாக இருக்கின்ற உணவு தானியத்தை மற்ற மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையைப் பெற்றிருக்கிறேம், என்றுல் அது நம்முடைய முதல் அமைச்சரவர்கள் பெருமுயற்சிதான் என்பது நமக்குக் கண்கூடாகத் தெரியும்.

நமது முதலமைச்சரவர்கள் விவசாயத்திற்காக ஏறக்குறைய 98 கோடி ரூபாய் ஒதுக்கி, அதாவது நீண்டகால குறுகியகால கடனாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வழங்க செய்திருப்பது பாராட்டுவதற்குரிய ஒன்றுகும். விவசாயிகளுக்கு பயன்படுகின்ற உரம் பொறுக்கு விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் முதலானவைகள் கிடைப்பதற்கு வழிவகை செய்திருக்கி கிருர்கள்.

1972-ம் ஆண்டுக்குள் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஒரு திட்டத்தை தயாரித்தார்கள். அதன் மூலமாக தமிழகத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டு விட்டது. அதாவது அரிசன காலனிகளுக்கு—ஏறக்குறைய 24,000 அரிசன காலனிகளுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுவிட்டது. அதைப்போன்று மின் வசதி அளிக்கப்படாத மற்ற அரிசன காலனிகளுக் கும், மின் விளக்கு இல்லாத ஊர்களுக்கும் உடனடியாக மின் விளக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கு வதில் காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதை ஒரு தீவிரத் திட்டமாகக் கொண்டு, தமிழகத்திலுள்ள எல்லா அரிசன மக்க ளுக்கும் வீட்டுமனைப் பட்டா கிடைக்க வேண்டுமென்ற அளவில் ஒரு திட்டத்தைத் தீட்டிச் செயல்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு ஒரு சோசலிச அரசாக இருப்பதால்தான் 13 பஞ்சாலை களை இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. மற்றும் ஆரூரான் சர்க்கரை ஆலைக்கு சொந்தமான 3,421 ஏக்கர் நிலத்தை அரசே எடுத்துக்கொண்டு, கரும்பு உற்பத்தி செய்ய திட்டம் வகுத்திருப்பதை பாராட்டுகிறேன்.

முப்பது வயது உள்ளவர்கள், அவர்கள் மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் வீதம் செலுத்தி வந்தால் 55 வயதடையும்போது அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் பென்ஷன் வழங்கும் சிறப்புத் திட்டத்தை முதலமைச்சரவர்கள் அறிவித்திருக்கிருர்கள். இந்தியாவிலேயே வேறு எங்கும் இத்திட்டம் இல்லை என்று கூறுவதிலேயே நாங்கள் எல்லாம் பெருமையடைகிறேம்.

[திரு. ஜி. ராமசாமி] [1974 மார்ச் 11

கண்ணொளி வழங்கு திட்டம், தொழு நோய் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லம் அமைத்தல், கை ரிக்சாக்களை அகற்றிவிட்டு சைக்கிள் ரிக்சாக்களை கொடுத்தல், ஊனமுற்றவர்களுக்கு உதவி செய்தல் போன்ற பல்வேறுபட்ட திட்டங்களை நமது தமிழக அரசு செய்துவருகிறது.

அதைப்போலேவே, குழந்தைகள் காப்பகம் ஏற்படுத்தி, குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்த்து, சத்துணவு கொடுத்து, சகல வசதிகளும் செய்து கொடுத்து, குழந்தைகளை நல்ல முறையிலே பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. கிராமப் பகுதிகளிலே கருவுற்ற தாய்மார்களுக்கு சத்துணவு அளித்து, அந்தத் தாயமார்களின் உடல்நலத்தைப் பேணி, பிறக்கும் குழந்தைகளும் ஆரோக்கியமாக வளர்க்கப்படுவதற்கு சிறந்த ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறது நம்முடைய தமிழக அரசு.

வீட்டுவசதி வாரியத்தின் மூலமும், குடிசை மாற்று வாரியத்தின் மூலமும் ஆயிரக்கணக்கான வீடுகளைத் கட்டி, ஏழை எளிய மக்களுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது நம்முடைய அரசு. ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக கிராமப்புற சாலைகள் அபிவிருத்தித் திட்டங்கள், குடிநீர் திட்டங்கள், பள்ளிகள் கட்டுதல் போன்ற பல்வேறு பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்கள்பற்றி இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கருதி, அந்த நல்ல நோக்கத்தோடுதான் ஊராட்சி ஒன்றியம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இப்போது எப்படி இருக்கிறது என்றால், கூட்டுறவு, எஞ்சினீயரிங், மராமத்து, கல்வி, மாதர் நலம் இதுபோன்ற மற்றுள்ள பணிகள் சரிவர நடைபெற முடியாமல் இருக்கிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய இலாகாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஊராட்சி ஒன்றியப் பணிகள் சரிவர நடக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட பணிகள் சீராக நடைபெற நமது அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூம்புகார் என்ற கப்பல் நிறுவனத்தை அமைத்து, அதன் மூலம் நமது அரசு இந்தியாவிலேயே எந்த மாநிலமும் செய்யாத சிறப்பைச் செய்திருக்கிறது.

அரசு ஊழியர்களுக்கு ஏராளமான உதவிகளை செய்திருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன்.

ஐம்பத்தொன்பது பொருள்களுக்கு ஒரு முனை வரி விதித்து வியாபாரிகளுக்கு நன்மை செய்திருக்கிறது.

ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் விற்பனை செய்கின்ற சிறு வியாபாரிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. விறகு, மாட்டுத் தீவனம், கண்ணாடி பொருட்களுக்கு முழுதுமாக வரி விலக்கு அளித்திருக்கிறோம். அதனால் ஏழை எளிய மக்களின் குறை தீர்க்கப்பட்டிருக்கிறது.



1974 மார்ச் 11] [திரு. ஜி. ராமசாமி]

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் சில திட்டங்களை கூற விரும்புகிறேன். கடந்த மூன்றாண்டு காலமாக என்னுடைய தொகுதியில் எந்த ஒரு வேலையும் நடைபெறாமல் இருக்கிறது. எலகிரி மலை எங்களுடைய ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது. அந்த மலை சுமார் 3,500 அடி உயரம் உள்ளது. அதை ஒரு சுற்றுலா இடமாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்கான ஏற்பாடுகள் வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் பெருமுயற்சியோடு செய்திருக்கிறார்கள். அதை சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாக மாற்றுவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டியப்பனூரில் பாம்பாற்றுக்குக் குறுக்கே அணை ஒன்றைக் கட்டினால் விவசாயத்திற்கு மிகவும் உதவியாக இருக்கும். பாலாற்றின் புல்லூர் அருகே ஒரு அணை கட்டினால் திருப்பத்தூர், வாணியம்பாடி ஆகிய இரு வட்டங்களிலும் விவசாயம் பெருக வாய்ப்பு ஏற்படும். மேலும் பாம்பாற்றில் ஏ. கே. மேட்டூர், திம்மாமுத்தூர் ஆகிய இடங்களில் இரண்டு பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். இவைகளை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தினால் நடத்தப்படுகின்ற மருத்துவ மனையை அரசாங்க மருத்துவ மனையாக மாற்றி அமைத்து, அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல மருத்துவ வசதிகளை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம சாலை அபிவிருத்தித் திட்டத்தின் மூலமாக திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தாமலேரிமுத்தூர், மூக்கானூர், குட்டூர், ஓட்டப்பட்டி, புதூர், புள்ளாநேரி, வெட்டப்படு, மற்றும் இவை போன்ற இடங்களுக்கு சாலை வசதிகளை செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் திருப்பத்தூர் தாலுகாவில் ஏராளமான பீடித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு கூலி சரியானபடி கிடைக்காததால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு நல்ல நிலைமையை உருவாக்கி, கூலி சரியாகக் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கடைசியாக நமது மாமன்றத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள், மகாத்மா காந்தி, நமது பேரறிஞர் அண்ணா ஆகியவர்களின் உருவப் படங்களை வைத்திருப்பது போல, தந்தை பெரியார் அவர்களுடைய உருவப்படத்தையும் நமது மாமன்றத்தில் வைத்திட வழி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அவரால் அளிக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

<u>புலவர் சி. பழனிச்சாமி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட 1974-75-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்தைக் கூறவிழைகிறேன்.

[புலவர் சி. பழனிச்சாமி] [1974 மார்ச் 11

இந்த நிதிநிலை அறிக்கையானது ஏழை எளிய பாட்டாளி மக்கள் நடுத்தர மக்களுடைய நலனைக்கருத்தில் முதன்மையாக வைத்துக்கொண்டு வரப்பட்ட நிதிநிலை அறிக்கையாகும். இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பிரசுரித்த எதிர்க்கட்சி ஏடுகள் எல்லாம் 10 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் என்று தலையிட்டு பிரசுரித்திருந்தன. ஆனால் இந்த 10 கோடி ரூபாய் வரிகள் யார் யாருக்குப் போடப்பட்டிருக்கிறது? ஏழை மக்கள் மீதா? தாங்கக்கூடிய பெரிய பணக்காரர்களுக்குத்தான் போடப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய தினம் நம்முடைய நடுவண் அரசு ஒரு நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. அதிலே அவர்கள் யாருக்குச் சலுகை செய்திருக்கிறார்கள்?

பெரிய பணக்காரர்களுக்குச் சலுகை செய்திருக்கிறார்கள். வருமான வரி கட்டக் கூடிய பெரிய பணக்காரர்களுக்கு 98 சதவீதம் வரி என்று இருந்ததை 75 சதவீதம் ஆகக் குறைத்திருக்கிறார்கள். இந்த முறையில் டாட்டா, பிர்லா, பஜாஜ், டால்மியா போன்ற பெரிய கொழுத்த பண முதலைகளுக்குச் சலுகை செய்து விட்டு, ஏழை எளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய அஞ்சல் அட்டை, உள்நாட்டுக் கடிதம், மூன்றும் வகுப்பு ரயில் கட்டணம், புகை வண்டி நிலைய நுழைவுக் கட்டணம் ஆகியவற்றுக்கு விலை உயர்த்தியும், மற்றும் மண்ணெண்ணெய், பற்பசை, சோப்பு, புகையிலை, காப்பி, ப்ளாஸ்டிக் பொருள்கள், சோடா, காகிதம், துணி ஆகியவற்றின் மீதெல்லாம் வரிகளை உயர்த்தியுள்ளார்கள். இந்த மாமன்றத்திலுள்ள எதிர்க்கட்சிக்காரர்களை விரும்பி, வேண்டிக்கேட்டுக் கொள்வேன், எந்த அரசு ஏழை, எளியவர்களுக்குப் பாடு படுகின்ற அரசு என்று நெஞ்சிலே கை வைத்துச் சொல்லுங்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் ஏழை எளிய தொழிலாளி மக்களுக்காக இயங்குகிற அரசு என்பதை இந்த அவையிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையில் இருந்தே உணர்ந்துகொள்ளலாம்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நீர்ப்பாசனத்திற்காக மட்டும் 30·83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் என் தொகுதியில் பழனிக்கருகில் ஆயக்குடி கிராமத்தில் வரதமா நதியின் குறுக்கே ஏறத்தாழ $1\frac{1}{4}$ கோடி ரூபாயில் ஒரு நீர்த் தேக்கம் அமைக்க இந்த அரசு முன் வந்துள்ளது. இந்த வரதமாநதி அணைக்கட்டுத் திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் கடந்த 25 ஆண்டுகாலமாக கோரிக்கை எழுப்பிக் கொண்டு வந்தனர். கடந்த 20 ஆண்டு காலமாக ஆண்டுகொண்டிருந்த காங்கிரஸ்காரர்களிடம் பல முறை விண்ணப்பித்தும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் முடிந்தது. ஆனால் இப்போது இந்த தி. மு. கழக அரசு இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டமைக்காக இந்த அரசுக்கும், நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்கள் சார்பாக என் இதய பூர்வமான நன்றியை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 11] [புலவர் சி. பழனிச்சாமி]

அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியில் கொழுமம் கிராமத்திற்கண்மையில் பச்சையாறு, குதிரையாறு சிறிய நீர்தேக்கத்திட்டத்திற்கு ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் திட்டத்தில் கொண்டுவரலாமென்று ஆய்வு நடத்தப்பட்டதென அறிகிறேன். ஆகவே, குதிரையாறு, பச்சையாறு திட்டத்தையும் விரைவில் கொண்டுவர ஆவன செய்து அந்தப்பகுதி மக்களுக்கு உதவி செய்யுமாறு மிக்க பணிவுடன் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. வரதமாநதிக்குச் செல்லுகிற வரதாபட்டணம் சாலையையும், பெரிய குளம் கண்மாய்க் கரையில் செல்லுகிற சாலையையும் அமைத்துக்கொடுக்குமாறு மிகப் பணிவன்போடு வேண்டி விரும்பிக்கேட்டுக் கொள்கிறேன். இந்த இரு சாலைகளும் ஏறத்தாழ ஐயாயிரம் ஏக்கர் நிலங்களுக்குச் சொந்தக்காரர்களான விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் பயன்படுத்துகிற சாலையாக இருப்பதால் இந்த இரு சாலைகளையும் அவசியம் அமைத்துக் கொடுத்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிதி ஆண்டிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக "தாழ்த்தப்போட்டோர் வீட்டு வசதிக் கழகம்" ஒன்றை ஏற்படுத்தி, தாழ்த்தப்பட்டோர்களுக்காக முதற்கட்டமாக ஐந்தாண்டுக்காலத்தில் ஒரு லட்சம் வீடுகள் கட்டித் தர முன்வந்துள்ளது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும்.

மற்றும் ஆசிரியர்கள் உள்பட அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படியில் ரூபாய் பத்து உயர்த்தியிருப்பதும். 40 ஆயிரம் சிறுகடை வியாபாரிகளுக்கு விற்பனை வரி விலக்குச் செய்திருப்பதும், பருப்பு, எண்ணெய் வகைகள் மீது விற்பனை வரி 7 சதவீதத்திலிருந்து 3·5 சதவீதமாகக் குறைத்திருப்பதும், கைத்தறியாளர்களுக்குக் கொடுத்த ஒரு கோடி ரூபாய் கடனை ரத்துசெய்ததும், ஊனமுற்றோர் புது வாழ்வுத் திட்டம் சமூகப் பொது காப்புத் திட்டம் ஆகியவற்றை கொண்டு வந்தமைக்காகவும் இந்த அரசை ஏழை எளிய நன்றியுள்ள பொது மக்கள் பாராட்டவும் நன்றி கூற கடமைப்பட்டவர்களும் ஆவார்கள் என்று இங்கே நான் குறிப்பிடவிரும்புகிறேன்.

அடுத்து, மிக முக்கியமான ஒரு வேண்டுகோளை இந்த அரசுக்கும் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் விடுக்க விழைகிறேன். இந்த வேண்டுகோள் நமது நாலரை கோடி தமிழ் மக்களின் தன்மானத்தை காப்பாற்றுகிற வேண்டுகோளாகும்.

அது என்ன வேண்டுகோள்? கடந்த 1970 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். இந்த மாமன்றத்தில் ஏகோபித்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். அத்தீர்மானத்திலே இந்த நாட்டிலே பிறந்த எந்தச் சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர் தாழ்த்தப்பட்டவராக இருந்தாலும் ஆகம விதிகளை நன்கு கற்றுத் தேர்ந்தவராக இருந்தால் அவர் கோவில்களிலே அர்ச்சகர்களாகப் பணியாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம்.

மாவட்ட வளர்ச்சிக் கழகம், டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், என்று அமைக்கப் போவதாக இந்த அறிக்கையில் முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கக் கூடிய காரியமாகும். ஆனல், மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை சரியல்ல வென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சாவூர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் விவசாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மாவட்டமாகும். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டம் என்பதால் சேர்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து, கோவை மாவட்டம். தமிழகத்தில், தொழில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள மாவட்டம். மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்களும் பிரதிநிதிக்ளாக இருக்கிற காரணத்தால், அம்மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டம், வறட்சியான மாவட்டம். அதற்காக மத்திய அரசு ரூ. 2 கோடி கொடுத்துக்கொண்டு வருகிறது. அமைச்சர் மாதவன் அவர்களுடைய மாவட்டமாக இருந்ததால், அதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து, தர்மபுரி மாவட்டம். உண்மையிலேயே வறட்சியான மாவட்டம். மத்திய அரசு ஆண்டுதோறும் ரூ. 2 கோடியை மானியமாகக் கொடுத்து செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இராசாராம் அவர்களுடைய மாவட்டமாக அது இருப்பதால், அதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

உண்மையிலே, நெல்லையையோ, குமரி மாவட்டத்தையோ தேர்ந்தெடுத்திருக்கவேண்டும். இன்றைக்கு, திருநெல்வேலிக்கோ, குமரிக்கோ சரியான அமைச்சர் இல்லாததால், அந்த மாவட்டங்களை விட்டிருக்கிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுப் பணியைப் பற்றி பேசும்போது, இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னல், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் முக்கூடல் வீரவ நல்லூர் பாலம் 1975–76ம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்படும் என்று சொன்னர்கள். அதற்கு என்னுடைய மகிழ்ச்சியையும், தொகுதி மக்களுடைய நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கு படிப்படியாக அமுல் செய்யப்படும் என்று கூறி இருக்கிறார்கள். ஆனல், திட்டவட்டமாக, எல்லா கடைகளும் இந்த தேதியில் ரத்து செய்யப்படும் என்று கூறவில்லை. எங்களுடைய பக்கத்தில் அரிஷ்டம் என்றிருக்கிறது. அங்கு அதற்கு சுவர்முட்டி என்றுதான் பெயர். அந்தச் சுவர்முட்டியைக் குடித்தால், சுவரிலேதான் மோதுவானே தவிர, வேறு எங்கும் போகமாட்டான். அவ்வளவு கடுமையானது. அதற்கு 30 சதவீதம்





வரி போட்டிருக்கிறார்கள். ஒன்று, இந்த சுவர்முட்டி அரிஷ்டத்தை நாட்டைவிட்டே விரட்ட வேண்டும் அல்லது 100 சத வீதம் விற்பனை வரியாவது பாடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நான் ஊரியிலிருந்து சென்னை வரும்போது, மணியாச்சு சந்திப்பில், ரயில்வே ஸ்டேஷனில், சமூக விரோதிகள் என்று சொல்லப்படுகின்ற ரௌடிகள் அட்டகாசம் அடிக்கடி நடப்பதாகவும், போலீஸ் இலாகாவுக்கு மனுச் செய்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் சொன்னர்கள். முதல்வர் அவர்களுக்கும் அவர்கள் இதுசம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறார்கள். அங்கு இந்த ரௌடிகளின் தொல்லை பொறுக்கமுடியாமல், நல்லமுறையிலே நடந்துவந்த ஒரு ஓட்டலைக்கூட மூடிவிட்டார்கள். அப்படி மூடிவிட்ட காரணத்தினல், பிரயாணிகள் சௌகரியம் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, பிரயாணிகள் வசதியை முன்னிட்டு, ரௌடிகளின் தொல்லையைப் போக்கி, அந்த ஓட்டலை மீண்டும் திறக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீரவநல்லூர் என்ற எனது தொகுதியிலுள்ள ஓர் ஊரில் ஓர் அரிசனப் பெண்ணை, குறிப்பிட்ட சமூக ரௌடிகள் அதிகத் தொல்லைப் படுத்து இருர்கள், அந்த ரௌடிகளின் அட்டகாசம் தாங்க முடியவில்லை என்று அந்த அம்மையார் மனு கொடுத்தார்கள். அந்த மனுவை மாவட்ட போலீஸ் அதிகாரியிடம் கொடுத்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; எந்த நடவடிக்கையும் எடுத்ததாக எனக்கு அறிவிக்கவும் இல்லை. சாதாரணமாக, எம்.எல்.ஏ., எம்.எல்.சி. மனு கொடுத்தால், இத்தனை நாளைக்குள் அதன்பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டும், எடுத்த நடவடிக்கையை இத்தனை நாளைக்குள் அறிவிக்கவேண்டுமென்று அரசாங்கத்தில் ஒரு ஜி. ஓ. கூட இருப்பதாக அறிகிறேன். ஆனல், எனக்குச் சரியான பதில் வரவில்லை. எம்.எல்.ஏ.க்கள் இதுமாதிரி மனுக்கள் அனுப்பினல் இவ்வளவு நாட்களுக்குள் எடுத்த நடவடிக்கையைப் பற்றி பதில் அனுப்ப வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவை அரசு இட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாளையங்கோட்டையிலிருந்து அம்பை ரோடுக்குப் போகும் வழியில், தருவை அருகே பச்சையாறு என்ற ஓ ஆறு ஓடுகிறது. அதேபோல், கல்லிடைக்குறிச்சி அருகே கோரையாறு ஓடுகிறது. அங்கு தாம்போதி பாலம் இருக்கிறது. இவற்றிற்கும் மேல்நிலை பாலம் அமைத்துத் தர வேண்டும. இன்றைக்கு தூத்துக்குடி துறைமுகத்தை நோக்கி, தினசரி கிட்டத்தட்ட 500 லாரிகள் அந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இங்கு, ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மழைகாலத்தில் 10 அடி உயரத்திற்குத் தண்ணீர் சென்றதனல் அந்தப் பாதை மறைந்து, 3, 4 நாட்களாக அந்தப் பாதை வழியாக எந்தவிதமான போக்குவரத்தும் செல்லமுடியாத நிலை இருந்தது. ஆகவே, கோரையாறு, பச்சையாறு கீழ் நிலைப் பாலங்களை, மேல்நிலைப் பாலங்களாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

மாவட்ட வளர்ச்சிக் கழகம், டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், என்று அமைக்கப் போவதாக இந்த அறிக்கையில் முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கக் கூடிய காரியமாகும். ஆனால், மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை சரியல்லவென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சாவூர் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. தஞ்சாவூர் விவசாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய மாவட்டமாகும். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மாவட்டம் என்பதால் சேர்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து, கோவை மாவட்டம். தமிழகத்தில், தொழில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ள மாவட்டம். மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களும், மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்களும் பிரதிநிதிகளாக இருக்கிற காரணத்தால், அம்மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுகிறேன்.

அடுத்து, இராமநாதபுரம் மாவட்டம், வறட்சியான மாவட்டம். அதற்காக மத்திய அரசு ரூ. 2 கோடி கொடுத்துக்கொண்டு வருகிறது. அமைச்சர் மாதவன் அவர்களுடைய மாவட்டமாக இருந்ததால், அதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து, தர்மபுரி மாவட்டம். உண்மையிலேயே வறட்சியான மாவட்டம். மத்திய அரசு ஆண்டுதோறும் ரூ. 2 கோடியை மானியமாகக் கொடுத்து செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு இராசாராம் அவர்களுடைய மாவட்டமாக அது இருப்பதால், அதைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

உண்மையிலே, நெல்லையையோ, குமரி மாவட்டத்தையோ தேர்ந்தெடுத்திருக்கவேண்டும். இன்றைக்கு, திருநெல்வேலிக்கோ, குமரிக்கோ சரியான அமைச்சர் இல்லாததால், அந்த மாவட்டங்களை விட்டிருக்கிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பொதுப் பணியைப் பற்றி பேசும்போது, இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் முக்கூடல் வீரவநல்லூர் பாலம் 1975–76ம் ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்படும் என்று சொன்னார்கள். அதற்கு என்னுடைய மகிழ்ச்சியையும், தொகுதி மக்களுடைய நன்றியையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மதுவிலக்கு படிப்படியாக அமுல் செய்யப்படும் என்று கூறி இருக்கிறார்கள். ஆனால், திட்டவட்டமாக, எல்லா கடைகளும் இந்த தேதியில் ரத்து செய்யப்படும் என்று கூறவில்லை. எங்களுடைய பக்கத்தில் அரிஷ்டம் என்றிருக்கிறது. அங்கு அதற்கு சுவர்முட்டி என்றுதான் பெயர். அந்தச் சுவர்முட்டியைக் குடித்தால், சுவரிலேதான் மோதுவானே தவிர, வேறு எங்கும் போகமாட்டான். அவ்வளவு கடுமையானது. அதற்கு 30 சதவீதம்





வரி போட்டிருக்கிறார்கள். ஒன்று, இந்த சுவர்முட்டி அரிஷ்டத்தை நாட்டைவிட்டே விரட்ட வேண்டும் அல்லது 100 சத வீதம் விற்பனை வரியாவது பாடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், நான் ஊரியிலிருந்து சென்னை வரும்போது, மணியாச்சு சந்திப்பில், ரயில்வே ஸ்டேஷனில், சமூக விரோதிகள் என்று சொல்லப்படுகின்ற ரௌடிகள் அட்டகாசம் அடிக்கடி நடப்பதாகவும், போலீஸ் இலாகாவுக்கு மனுச் செய்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் சொன்னார்கள். முதல்வர் அவர்களுக்கும் அவர்கள் இதுசம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறார்கள். அங்கு இந்த ரௌடிகளின் தொல்லை பொறுக்கமுடியாமல், நல்லமுறையிலே நடந்துவந்த ஒரு ஓட்டலைக்கூட மூடிவிட்டார்கள். அப்படி மூடிவிட்ட காரணத்தினால், பிரயாணிகள் சௌகரியம் மிகவும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, பிரயாணிகள் வசதியை முன்னிட்டு, ரௌடிகளின் தொல்லையைப் போக்கி, அந்த ஓட்டலை மீண்டும் திறக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வீரவநல்லூர் என்ற எனது தொகுதியிலுள்ள ஓர் ஊரில் ஓர் அரிசனப் பெண்ணை, குறிப்பிட்ட சமூக ரௌடிகள் அதிகத் தொல்லைப் படுத்துகிறார்கள், அந்த ரௌடிகளின் அட்டகாசம் தாங்க முடியவில்லை என்று அந்த அம்மையார் மனு கொடுத்தார்கள். அந்த மனுவை மாவட்ட போலீஸ் அதிகாரியிடம் கொடுத்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; எந்த நடவடிக்கையும் எடுத்ததாக எனக்கு அறிவிக்கவும் இல்லை. சாதாரணமாக, எம்.எல்.ஏ., எம்.எல்.சி. மனு கொடுத்தால், இத்தனை நாளைக்குள் அதன்பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டும், எடுத்த நடவடிக்கையை இத்தனை நாளைக்குள் அறிவிக்கவேண்டுமென்று அரசாங்கத்தில் ஒரு ஜி. ஓ. கூட இருப்பதாக அறிகிறேன். ஆனால், எனக்குச் சரியான பதில் வரவில்லை. எம்.எல்.ஏ.க்கள் இதுமாதிரி மனுக்கள் அனுப்பினால் இவ்வளவு நாட்களுக்குள் எடுத்த நடவடிக்கையைப் பற்றி பதில் அனுப்ப வேண்டுமென்று கண்டிப்பான உத்தரவை அரசு இட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாளையங்கோட்டையிலிருந்து அம்பை ரோடுக்குப் போகும் வழியில், தருவை அருகே பச்சையாறு என்ற ஓ ஆறு ஓடுகிறது. அதேபோல், கல்லிடைக்குறிச்சி அருகே கோரையாறு ஓடுகிறது. அங்கு தாம்போதி பாலம் இருக்கிறது. இவற்றிற்கும் மேல்நிலை பாலம் அமைத்துத் தர வேண்டும். இன்றைக்கு தூத்துக்குடி துறைமுகத்தை நோக்கி, தினசரி கிட்டத்தட்ட 500 லாரிகள் அந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இங்கு, ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மழைகாலத்தில் 10 அடி உயரத்திற்குத் தண்ணீர் சென்றதனால் அந்தப் பாதை மறைந்து, 3, 4 நாட்களாக அந்தப் பாதை வழியாக எந்தவிதமான போக்குவரத்தும் செல்லமுடியாத நிலை இருந்தது. ஆகவே, கோரையாறு, பச்சையாறு கீழ் நிலைப் பாலங்களை, மேல்நிலைப் பாலங்களாக மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியின் வடபகுதியாகிய மருதம்புத்தூரில், அல்லது புதுப்பட்டியில், ஏதாவது ஓர் ஊரில் ஓர் உயர்நிலைப்பள்ளியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மக்கள் தங்கள் பிள்ளைகளை உயர்நிலைப்பள்ளிக்கு அனுப்ப ஆர்வமாக இருக்கிறார்கள். இப்பொழுது உயர்நிலைப்பள்ளிக்குச் செல்ல வேண்டுமானால், ஆலங்குளம் தொகுதியில் உள்ள ஆலடிபட்டி என்ற ஊருக்கோ அல்லது முக்கூடல் என்ற ஊருக்கோதான் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த 2 ஊர்களுக்கும் செல்லவேண்டிய தூரம் 7, 8 மைல்கள் ஆகும். போக்குவரத்து வசதி இல்லாத ஏரியா அது. ஆதலால், அங்கு அரசு ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், தெற்கு கல்லிடைக்குறிச்சி என்ற ஒரு பகுதி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கு நாடார் புதுக்குளம் என்ற ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தின் உரிமையாளர்கள், அதனை அரசுக்குத்தர தயாராக இருக்கிறார்கள். அரசாங்கம் அந்தக் குளத்தை எடுத்துக்கொண்டு, மணிமுத்தாறு அணையிலிருந்து தண்ணீர் விட தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் விவசாயிகள் பெரிதும் பயன்படுவார்கள், அரசையும் பாராட்டுவார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கடனு நதி ராம நதிகுளங்கள் பராமரிப்பு செய்யப்படாமல் இருக்கின்றன. கிட்டத்தட்ட, 20, 30 ஆண்டுகளுக்கு மேல் அவை மராமத்து செய்யப்படவில்லை. அவற்றை மராமத்து செய்ய அரசு தக்க நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அம்பாசமுத்திரம் என்பது என்னுடைய தாலுகாவின் தலைநகரம். அங்கு ஒரு கலைக் கல்லூரி கட்டிடம் கட்டுவதற்காக 3 ஆண்டுகளாகியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அமைச்சரால், நடப்பட்ட அடிக்கல் என்ன ஆயிற்று, எங்கு போயிற்று என்று தெரியவில்லை. அரசாங்கம் உடனடியாகக் கல்லூரிக் கட்டிடம் கட்ட என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ, அதை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய மாவட்டத்திலே இன்று விவசாயத்திற்கு அடுத்தபடியாக பீடித் தொழில் மிகவும் சிறப்பான முறையிலே நடந்து கொண்டிருக்கிறது. பெரும் பகுதி வேலைவாய்ப்பை பெண்களே பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு டி.பி அதாவது காசநோய் சீக்கிரமாகப் பற்றிவிடுகிறது. இதைப்பற்றி பல சந்தர்ப்பங்களிலே நான் இந்தச் சட்டமன்றத்திலே கூறியிருக்கிறேன். அவர்களுக்கு அப்படி அந்தநோய் வந்துவிட்டால் அதைக் கவனிக்க அவர்கள் நாகர்கோவிலுக்கு பக்கத்திலேயுள்ள ஆசாரிப்பள்ளத்திற்குச் செல்ல வேண்டும். அவர்கள் எல்லாம் தினக்கூலி 2 ரூபாய், 3 ரூபாய்தான் பெறக்கூடியவர்கள், அந்த நிலையிலே உள்ளவர்கள் 50 மைல், 60





மைல் சென்று வைத்தியம் செய்யக்கூடிய நிலைமையிலே வசதியில்லை என்ற நிலைமையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவிசெய்யும் பொருட்டு எனது தொகுதிக்குப் பக்கத்திலே திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள சுத்தமல்லி என்ற ஊரில் ஒரு டி.பி. ஆஸ்பத்திரி ஏற்படுத்தினால்—அந்த இடத்திலே ஒரு நல்ல சூழ்நிலை இருக்கிறது. நல்ல காற்று வரக்கூடிய ஏரியா என்று சொல்கிறார்கள்—அவர்களுக்கு உதவியாக இருக்கும், ஆகவே அதைச்செய்து அவர்களுக்கு குறைகளைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 1974–75 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை பெரும்பான்மையாக ஏழை எளிய விவசாய மக்களுடைய நலனை மனத்திலே கருதியும், வணிகப் பெருமக்கள், நடுத்தர மக்கள், நெசவாளர்கள் ஆகியவர்களுடைய இன்னல்களைப் போக்கக் கருதியும் மிகச் சிறந்த முறையிலே தயாரிக்கப்பட்டிருக்கிற ஒரு நிதி நிலை அறிக்கை என்பதை நான் பெருமையோடு சொல்லி அதனை வரவேற்கிறேன்.

நான் மேலே சொன்னதுபோன்று, விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும் நடுத்தர மக்களுக்கும் வணிகப் பெருமக்களுக்கும் நலனளிக்கக் கூடிய முறையிலே இது தயாரிக்கப்பட்டிருக்கிறது. முதலிலே விவசாயிகளுடைய நலனை எடுத்துக்கொண்டால், கால்வாய்ப் பாசனத்தின் மூலமாக பெரும்பான்மையான விவசாயம் நடைபெறுகிறது என்பதை மனத்திலே கொண்டுதான் ஏறத்தாழ 30·83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் சிறப்பாக மதுரை, இராமநாதபுரம் பகுதிகளிலே பெரியாறு கால்வாய்களை மேம்படுத்துவதற்காகத் திட்டங்களை அமைத்திருக்கிறார்கள் என்பதனால் முழுமனதோடு நான் அதை வரவேற்கிறேன்.

அடுத்ததாக, நெசவாளர்களைப் பொறுத்தவரையில் திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் அவர்களுடைய இன்னல்களைப் போக்குவதற்காக எந்த அளவுக்கு முயற்சியெடுத்துக் கொண்டு வந்தது என்பது இந்த மன்றத்திலே உள்ள அனைவருக்கும் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியமைத்த பிறகும்கூட அவர்களுடைய இன்னல்களை, குறைகளைக் போக்குவதற்காக அவர்களுடைய தொழில் மேம்பாட்டிற்காக என்ற முறையிலே 2·01 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, சமீபத்திலே அவர்களுக்காக 'வழங்கப்பட்ட கடன் நபர் ஒன்றுக்கு 100 ரூபாய் வட்டியில்லாமல் வழங்கப்பட்ட கடனை இந்த அரசு பெருந்தன்மையோடு வஜா செய்து இருக்கிறது என்பதை நான் பெருமையோடு கு[illegible] படுகிறேன்.

[திரு. சொ. காவேரிமணியம்] [1974 மார்ச் 11

ஆண்டுதோறும் நெசவாளர்கள் ஒரு இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதை நிதிநிலை அறிக்கை குறிப்பிட்டு இருக்கிறது. தமிழகத்தின் நூற்பாலைகளின் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற நூல் அகில இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றதில் ஐந்தில் ஒரு பாகம் ஆகும். அந்த நூலை எல்லா நெசவாளர்களுக்கும் பகிர்ந்தளித்தால் மிச்சமாகக்கூட இருக்கும். இருந்தாலும் நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதில்லை. அவர்களை வறுமை வாட்டிக் கொண்டிருக்கிறது. ஆண்டொன்றுக்குப் பல மாதங்கள் நூலுக்காக அவர்கள் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இதிலே இருக்கிற மூலப்பொருள் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். தேவையான உற்பத்தி இருக்கிறது. இங்கே, வேலை செய்வதற்குத் தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள். நெசவாளர்களுக்குப் போதுமான நூல் கிடைக்கவில்லை என்றால் காரணம் மத்திய அரசின் கையிலே அதிகாரம் இருக்கிறது. நூல் நாம் உற்பத்தி செய்கிறோம். ஆனால் அதைக் கொடுக்கிற அதிகாரம் மத்திய அரசினிடத்திலே இருக்கிறது. இதனால்தான் நெசவாளர்களுக்குப் பல விதமான தொல்லைகள் ஏற்படுகின்றன. இதைப் போக்குவதற்காகத் தமிழக அரசு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு பெருந் தலைவராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் மாநிலத் தேவை என்பதைப் பல கோணங்களிலே வற்புறுத்தி வருகின்றார்கள்.

நம்மிடத்திலே அதிகாரம் இல்லாத காரணத்தினாலே இந்த நிலை நெசவாளர்களுக்கு மட்டுமல்ல, சர்க்கரை போன்ற பொருள்களுக்கும்கூட தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வணிகப் பெருமக்களைப்பற்றிச் சொல்ல விரும்புகின்றேன். வணிகப் பெருமக்களின் நலனைக் கருதி இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பல ஆண்டுகளாகக் கோரிக்கைகளை வலியுறுத்தி வந்தார்கள். நியாயமான கோரிக்கைகளுக்கு எப்பொழுதுமே செவி சாய்க்கக்கூடிய நம்முடைய தமிழக அரசு அவர்களுடைய கோரிக்கைகளை ஆராய்ந்து பரிசீலித்து ஏறத்தாழ 59 பொருட்களுக்கு ஒரு முனை விற்பனைவரி விதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, அன்றாடம் மக்கள் பயன்படுத்துகின்ற எண்ணெய், பருப்பு போன்ற வகைகளுக்கு 3½ சதவீதம் ஒருமுனை வரி விதித்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, ஏழை எளிய மக்கள் பொதுவாக வாழ்க்கையில் பயன்படுத்துகின்ற விறகு, மாட்டுத்தீவனம், கண்ணாடி வளையல் இவைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் இந்த நாட்டின் அடித்தளத்திலே உள்ள மக்களின் நலனைக் கருதி இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.



1974 மார்ச் 11] [திரு. சொ. காவேரிமணியம்]

இன்னும் ஒன்றைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். நான் ஏற்கெனவே சொன்னதைப்போல் விவசாயிகள் நலனைக் கருதி, வணிகப் பெருமக்களின் நலனைக் கருதி, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கிறது இந்த அரசு. விவசாயிகளின் நலனையும் நெசவாளர்களின் நலனையும் கருதி பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறது இந்த அரசு. இன்னும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிற சாரங்களைப் பார்க்கிறபோது தமிழக அரசு, தமிழ்நாட்டிற்கு ஒரு வீர வரலாறு உண்டு, மறக்கமுடியாத சின்னங்களும் உண்டு, மறக்கமுடியாத நிகழ்ச்சிகளும் உண்டு.

கி.பி. முதல் நூற்றாண்டு முதல் எத்தனையோ நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டில் நடந்திருக்கின்றன. நம்முடைய முதல்வர் அவர்கள் கருணையுள்ளம் கொண்டவர் மட்டுமல்ல, கலையுள்ளம் கொண்டவரும்கூட என்பது நமக்கு எல்லாம் தெரியும். அதன் விளைவாகத்தான் பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே உருவாக்கியிருக்கிறார்கள். ஆறரை லட்சம் ரூபாய் செலவிலே பூம்புகார் கலைக்காட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிகழ்ச்சி இன்றைக்குப் பூம்புகாரிலே 1973–74-ஆம் ஆண்டிலே கண்காட்சியாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழன் சரித்திர நிகழ்ச்சிகளை வீர வரலாறுகளை மனதிலே வைத்து இருப்பான் என்பதை எடுத்துக் காட்டுகின்ற முறையிலே இதனை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என்று உருவாக்க அதற்காக அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் 5 கோடியும், தற்காலிகமாக ஒரு கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது எல்லாம் அவர்களின் நல்ல கலை உள்ளத்தைத்தான் காட்டுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நான் இந்த நேரத்திலே ஒரு பணிவன்பான வேண்டுகோளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கண்ணகி பிறந்தது பூம்புகார் நகரம், கண்ணகி வழக்குரைத்தது மதுரை மாநகரம், அவளுக்குச் சிலையெழுப்பியது சென்னை மாநகரம். ஆனால் கண்ணகி வழக்குரைத்து மதுரையை எரித்ததாலோ என்னவோ மதுரையை மறந்துவிட்டார்கள் என்று கருதுகிறேன். பூம்புகார் நகரத்திற்கு தாங்கள் பெரும் புகழைத்தேடித் தந்திருக்கிறீர்கள். கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழியன் முன்பு வழக்குரைத்த நகரம், மதுரை. அந்த மதுரை மாநகரத்திலே அழியாத சின்னம் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல நிகழ்ச்சிகள் இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்க்கிறபோது இந்த நிதிநிலை அறிக்கையைப் பெருமையோடு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். ஏழை எளிய மக்களின் இன்னல்களைப் போக்குவதற்கும் சாதாரண மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கும் வேண்டிய எண்ணத் திட்டங்களுடன் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. செ. காவேரிமணியம்] [1974 மார்ச் 11

ஒரு சில கருத்துக்களை என்னுடைய தொகுதியிலே மட்டுமல்ல, என்னுடைய தொகுதியைச் சுற்றியிருக்கிற மதுரை மாநகரம் உள்ளிட்ட பகுதிகளைப் பொறுத்தவரையில் சில கருத்துக்களைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். மதுரை மாநகரத்தில் பல கல்லூரிகள் இருக்கின்றன. கல்லூரிகள் அனைத்தும் மத அடிப்படையிலே தான் இருக்கின்றன. யாதவா கல்லூரி, அது இன அடிப்படையிலே உள்ள கல்லூரி, அமெரிக்கக் கல்லூரி அது மத அடிப்படையிலே இருக்கிறது. சங்கம் வளர்த்த மதுரை என்று சொல்கிறார்கள், அப்படிப்பட்ட முத்தமிழுக்காகச் சங்கம் வளர்த்த மதுரையில் அரசின் சார்பாக ஒரு கலைக்கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்று மிக்க பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் மதுரையின் பக்கத்தில் "சபர்ப் ஆப் மதுரை" என்று சொல்லும் பகுதியிருக்கிறது. குறிப்பாக மதுரை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. மதுரை தெற்கு, மதுரை வடக்கு என்று பிரிக்கப்படுகிறது. நம்முடைய மாநிலம் பூராவிலும் தேடிப்பார்த்தாலும் மதுரை தெற்கு பகுதியைப்போல் பிற்பட்ட பகுதி ஒன்றைப் பார்க்க முடியாது. அங்கே எந்தவிதமான தொழிற்சாலையோ அல்லது சிறு தொழில்களோ அல்லது அரசாங்கத்தின் சார்பாக நடத்தும் வேறொரு நிலையமோ கிடையாது. ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த மதுரை தெற்கு பகுதியை "பேக்வோர்ட் ஏரியா", பிற்படுத்தப்பட்ட பகுதி என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அங்கே ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்த வேண்டும்.

உலகத்திற்கெல்லாம் அறத்தைத் தந்த வள்ளுவனுக்கு மயிலையில் உள்ள கோயிலைப் புதுப்பிப்பதற்கான திட்டம் இருக்கிறது. அதேபோல் நுங்கம்பாக்கத்தில் 80 கிரவுண்டில் திருவள்ளுவர் நினைவாலயம் வைப்பதற்குத் திட்டம் வகுத்திருக்கிறோம். அதேபோன்று, ஒரு அழியாச் சின்னத்தை, நீதி தவறியவன் என்று தெரிந்தவுடனேயே தானும், தன் கோப்பெருந்தேவியும் அங்கே இறந்த காட்சி நமக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியை நினைவுப்படுத்தும் முறையிலே மதுரை நகரத்திலே ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கிறேன்.

*திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகரவர்களே, 1974-75-ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலே என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு நான் விருப்பப்படுகிறேன்.

குறிப்பாக, இந்த வரவு-செலவுத் திட்டத்தை முடிக்கும்பொழுது 49 இலட்சம் கையிருப்போடு முடிப்போம் என்று சொன்னார்கள். ஆனால் என்ன நடந்திருக்கிறது என்று பார்த்தால், வருமானத்திலே 3 கோடி



1974 மார்ச் 11] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ரூபாய் அதிகரித்திருந்தாலும்கூட செலவும் அதிகரித்து இன்றைக்கு கிட்டதட்ட 5 கோடி ரூபாய் "டெஃபிசிட் ஃபைனான்சிங்" என்ற அளவிலே பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும் கட்டத்தில் இந்த அரசு நிற்கிறது. எப்பொழுதுமே வரவு செலவுத் திட்டத்தைக் கொடுக்கும்பொழுது வரவாக இருக்கட்டும், அல்லது செலவாக இருக்கட்டும். அதில் குறைந்த அளவுதான் வித்தியாசம் இருக்கும் அளவில் சமர்ப்பித்தால்தான் அது சாமர்த்தியமாக ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதாக இருக்கும்.

இன்றைக்கு உள்ள நிலைமையைப் பார்த்தால் கிட்டத்தட்ட 67-லிருந்து நீங்கள் எடுத்துக் கொண்டாலும் கிட்டத்தட்ட 10 சதவீதம் முதல் 12 சதவீதம் வரையில் வரவிலும் சரி, செலவிலும் சரி வித்தியாசம் ஏற்படுவதைப் பார்க்கும்பொழுது ஒழுங்கான வரவு-செலவுத் திட்டத்தை, கட்டுப்பாட்டோடு இவர்கள் தயாரித்திருக்கின்றார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் பல இனங்களில் வரவைக் குறைத்துக் காட்டுகிறார்கள், பல இனங்களில் செலவை அதிகரித்துக் காட்டுகிறார்கள். இப்படிச் செய்துவிட்டு துண்டு விழுகிறது துண்டு விழுகிறது என்று சொல்லி, எப்படியாவது புது வரிகளைப் போட்டு மேலும் வருவாயை அதிகரிக்க என்ன வழியிருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மக்கள் பண வீக்கத்திலே சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் பற்றாக்குறை பட்ஜெட் போடுகிறது, பற்றாக்குறை பட்ஜெட் போடுகிறது என்று சொல்லக்கூடிய இங்கேயுள்ளவர்களாவது பல புதிய திட்டங்களைத் தருகிறார்களா என்றால் இல்லை, ஆனால் பற்றாக்குறை பட்ஜெட் மட்டும் வருகிறதென்று பார்க்கும்பொழுது எந்த நிலையிலே பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் மாநில அளவில் செய்திருக்கிறார்கள் என்று புரியவில்லை.

ஆளும் கட்சி உறுப்பினர்களில் பலபேர் இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிய கவலையேயில்லாமல் மத்திய சர்க்கார் அதைப்போடுகிறது, இதைப் போடுகிறது என்று கவலைப்பட்டார்களே தவிர, இவர்கள் ஒரு சிறப்பான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து நாங்கள் வழிகாட்டுகிறோம் என்று சொல்லுகின்ற புத்திசாலித்தனம் இருந்ததா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

அதுமட்டுமல்ல, இன்றைக்குள்ள பண வீக்கத்திலே எல்லா அரசாங்கங்களும் They must reduce their non-plan expenditure அதாவது திட்டமில்லாத செலவுகளை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கிறதோ அவ்வளக்கவ்வளவு பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று பொருளாதார நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் பண வீக்கத்தைப்பற்றியும், விலைவாசி ஏற்றத்தைப் பற்றியும் சொல்லி அதற்கு மத்திய சர்க்கார்தான் பொறுப்பு என்று சொல்லிக்கொண்டிருக்கும் இந்த அரசு தன்னுடைய செலவுகளை எப்படிச் செய்கிறது ?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 11

1968-69-ஆம் ஆண்டில் திட்டமில்லாத செலவுக்காக 252 கோடி ரூபாயும், 1969-70-ஆம் ஆண்டில் திட்டமில்லாத செலவுக்காக 276 கோடி ரூபாயும், 1970-71-ஆம் ஆண்டில் திட்டமில்லாத செலவுக்காக 268 கோடி ரூபாயும் செலவு செய்யப்பட்டுள்ளது. இப்படித் திட்டமில்லாத செலவுகள் அதிகரித்தால் அந்தப் பணம் எங்கே போகிறது? அது மக்களின் நன்மைக்காக போகவில்லை. உங்களுடைய கட்சி விளம்பரத்திற்காக, நீங்கள் விழாக்களை நடத்துவதற்காக, பழைய இனிய கற்பனை உலகத்திலிருந்துகொண்டு அதைப் புதுப்பிக்கிறோம், இதைப் புதுப்பிக்கிறோம் என்று செய்யப்படுகிறதே அல்லாமல் மக்களுடைய வாழ்வில் மறுமலர்ச்சியை உண்டாக்குகின்ற முறையில் புதிய திட்டங்களை உருவாக்க நீங்கள் திட்டங்கள் தீட்டினால் இப்படி திட்டமில்லாத செலவு அதிகரித்துக்கொண்டு போவதற்கு வழியே இருக்காது. ஆகவே திட்டமில்லாத செலவை அதிகரித்து உங்களுடைய சொந்த விளம்பரத்திற்காகச் செலவு செய்கிறீர்கள் என்பதை மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

பொதுமக்களிடமிருந்து கடன்களை எழுப்புகின்றீர்கள், எதற்காக? புதிய மூலதனச் செலவுக்காக எழுப்புகிறீர்கள். ஏறத்தாழ 581 கோடி ரூபாய் பொதுமக்களிடமிருந்து கடனை எழுப்பியிருக்கிறீர்கள். இதில் புதிய மூலதனச் செலவிற்காகப் போனது 329 கோடி ரூபாய்தான். மீதியை எப்படிச் செலவழித்தீர்கள் ? குறிப்பிட்ட ஒரு காரியத்திற்காக பொது மக்களிடமிருந்து பணத்தைத் திரட்டுகிறோம். "பப்ளிக் டெட்" ரெய்ஸ் செய்கிறோம். ஆனால் அப்படிப்பட்ட பொதுக் கடன்களைக்கொண்டு, செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல், செய்ய வேண்டாத வேலைகளுக்காகச் செலவழிக்கிறீர்கள் என்பதைப் பார்க்கும்பொழுது ஒழுங்காகத் தமிழக வரவு செலவுத் திட்டத்தில் பொதுப்பணம் செலவழிக்கப்படுகிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது என்பதைத்தான் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் தனி நபர்களுக்கும், தனிப்பட்ட தொழிற்சாலைகளுக்கும் இதுவரையில் ஏறத்தாழ 3 கோடி ரூபாய் கடனைக் கொடுத்திருக்கிறீர்கள். அதில் எவ்வளவு நம்பிக்கை உள்ள கடன்களோ, எத்தனை சகது பைப்ஸ்க்கு கொடுத்தது மாதிரிக் கடன்களோ தெரியாது. இந்த அளவிற்கு வரவு ...த் திட்டத்தில் பாழாக்கப்படுவதைக் கட்டாயமாக நிறுத்தக் கடமைப் ...கிறோம்.

வரவு செலவுத் திட்டத்தை முழுக்க முழுக்கப் படித்தால், மத்திய சர்க்காரை ...ருடி குறை சொல்லியே தப்பித்துக்கொண்டு போகலாம் என்ற எண்ணத்தி...ஆல்ல், எங்களுக்குப் பணம் கொடுக்கவில்லை, எங்களுக்கு அதிகாரம் கொடுக்கவி...ய கலை, எங்களுக்கு உத்தரவு கொடுக்கவில்லை என்று 53 பக்கங் களிலேயும் ... இத்தகைய நிலைமையையே சொல்லக்கூடிய அளவில் சோக கிதமாக இரு...றிப்பாபதைப் பார்க்கிறோம். எங்களால் செய்ய முடியும், எங்களால் நடத்த முடியு...ம் மைம் என்று தன்னம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதே கேள்விக் குறிய...ா நடறாக உள்ளது.



1974 மார்ச் 11] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஆறுவது நிதிக் கமிஷன் அதிகமாகக் கொடுக்கவில்லையா ? இன்கம் டாக்ஸ் வரியிலே 75 சதவீதம் பங்குதான் மாகாணங்களுக்குக் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். இன்றைக்கு 80 சதவீதம் ஆக உயர்த்தியிருக்கிறார்கள். "ஆக்ஸிலரி எக்ஸைஸ் டூட்டி"யில் இதுவரையில் மாகாணங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படவேயில்லை, ஆனால் இனிமேல் பகிர்ந்து கொடுக்க முன் வந்திருக்கிறார்கள். கொடுக்க வேண்டிய கடன்களையெல்லாம் ஒழுங்குபடுத்திச் சரியான முறையில் கொடுக்க வேண்டுமென்று கேட்டீர்கள். அதையும் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் அதிகமாக வேண்டுமென்று கேட்பதற்கு உரிமை இருக்கிறது. நீங்கள் எவ்வளவு சிறப்பாக வாதாடுகிறீர்களோ அந்த அளவிற்கு பெறுகிறீர்களே, தவிர உங்களுக்கு வாதாடும் திறமையில்லாமல், வாங்குவதற்குத் திறமையில்லாமல், ஐயோ, எங்களுக்கு கொடுக்கவில்லையே, கொடுக்கவில்லையே என்று தன்னம்பிக்கையற்ற முறையில் அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, அழகாகச் சொல்லியிருக்கிறார்கள், செய்வதைச் சொல்லி, சொல்வதைச் செய்வோம் என்று அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டும் உங்கள் அகராதியில் சரியான பொருளோடு இருக்கின்றதா ? எதில் நீங்கள் சொல்வதைச் செய்தீர்கள்?

ஒரு ரூபாய்க்கு மூன்று படி கொடுப்போம் என்று சொன்னீர்கள், செய்தீர்களா ?

அதுபோகட்டும், ஒரு ரூபாய்க்கு ஒரு படி போடுவோம் என்று சென்னைக்கும் கோவைக்கும் போட்டீர்களே, அதையாவது நீடித்தீர்களா ? கிடையாது.

வரியைக் குறைப்போம், வசதியைப் பெருக்குவோம் என்று சொன்னீர்கள். இன்றைக்கு என்ன நிலை? நீங்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்ததிலிருந்து 74-ம் ஆண்டு வரையில் 1,115 கோடி ரூபாய் அதிக வருமானம் தான் வந்திருக்கிறது. 7 வருஷங்களிலே, வரியும், மத்திய சர்க்கார் உதவியும், உங்களுக்குக் கொடுத்த பணமும் 1,115 கோடி ரூபாய் அதிகமாகத்தான் வந்திருக்கிறது. ஆனால் நீங்கள் சொன்னது என்ன? நாங்கள் 194 கோடி ரூபாய் வரியை 100 கோடி ரூபாய்க்குக் கொண்டு வருவோம், 60 சதவீதம் வரியைத் குறைப்போம், 40 சதவீதம் வசதிகளைப் பெருக்குவோம் என்று சொன்னீர்கள். யார் வசதி பெருகிறது, யார் வரி குறைந்தது என்பதை மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய நிலைமையிலிருக்கிறார்கள்.

கூவத்தைச் சுத்தப்படுத்துவோம், உல்லாசப் படகுகள் விடுவோம் என்று சொன்னீர்கள். சற்று கூவத்திற்குச் சென்று பாருங்களேன், பக்கத்தில்தானே இருக்கிறது. சிம்சன் பிரிட்ஜ்க்கு அப்பால் படகு போகவில்லை. சுகாதாரத்திற்காக முன்பிருந்த குடிசைகளை அகற்றினார்கள். மீண்டும் புதிதாகக் குடிசைகள் வந்திருக்கின்றன. 12 மைல் நீளமுள்ள

கூவத்திற்கு, 1967-ஆம் ஆண்டிலிருந்து 1974-ஆம் ஆண்டு வரையில் ஒரு கோடி ரூபாய் என்று முதலில் சொல்லிவிட்டு, பிறகு 3 கோடி ரூபாய் செலவழித்து 3 மைல்கூடச் சுத்தப்படுத்தாமல் செய்திருக்கிறீர்கள் என்றால் நீங்கள் என்ன சொல்கிறீர்கள், என்ன செய்கிறீர்கள் என்பதை மக்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஏதோ காவேரித் தண்ணீர் வரும் வரும் என்று சொல்லி சைதாப்பேட்டை பாலத்திற்கருகில் சிலையை வைத்தீர்கள். தண்ணீர் வந்ததா? ஒரு மணி நேரம் கூட தண்ணீர் ஒழுங்காக வரவில்லை. காவேரித் தண்ணீர்தான் வரவில்லை என்றாலும் வீராணம் நீராவது வந்ததா? அது எந்தக் குழாயில் சிக்கிக் கொண்டிருக்கிறதோ தெரியவில்லை. இப்படி எதைச் சொன்னீர்கள், எதைச் செய்கிறீர்கள் என்பது நன்றாகத் தெரிகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவேரித் தண்ணீராவது வரவில்லை, வீராணம் தண்ணீராவது வந்ததா என்று கேட்கிறார்கள். காவேரித் தண்ணீர் வேறு, வீராணம் தண்ணீர் வேறு என்பதை விளக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: மைசூரிலே கட்டப்பட்டுள்ள அணைக் கட்டிலே போய்ப்பார்த்தால் காவேரித் தண்ணீர் வராததுபோல் தெரிகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சென்னைக்கு காவேரி நீர் வருவது என்றால் வீராணம் வழியாக வருவதுதான், அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

[பிற்பகல் 1–00]

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்னைக்கு காவேரித் தண்ணீரைக் கொண்டு வருவோம் என்றீர்கள். கடைசியில் வெறும் வீராணம் ஏரித் தண்ணீரைத் தான் கொடுக்கப்போகிறீர்கள். இனி மேட்டூருக்கே தண்ணீர் வராது போலிருக்கிறது. அதிலே விழிப்போடு இருந்து உடனடியாகப் பேசித் தீர்த்து முடிவு காண உங்களுக்குத் துணிவு இல்லை. பக்கத்தில் இருக்கும் காங்கிரஸ் மாநிலமான மைசூர் மாநிலத்திற்கு இவ்வளவு துணிவு இருக்கும்போது உங்களுக்கு ஏன் துணிவு இல்லை? செய்ய வேண்டிய காரியத்தில் துணிவு காட்டாது மத்திய அரசை வம்புக்கு இழுக்கிற காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

"ஷிப்பிங்" சென்ட்ரல் சப்ஜெக்ட். சென்ட்ரல் லிஸ்ட் 24ல்வருகிறது. கன்கரண்ட் லிஸ்டில் இன்லண்ட் வாட்டர்வேஸ் 34-வதாக இருக்கிறது. "கப்பல் விடுவோம் உலகம் முழுவதும் வாணிபம் செய்வோம்" என்று பழைய தமிழகத்தில் கப்பல் விட்டதைப் போல் இப்போதும் விடுவோம் என்று சொல்லி மத்திய அரசாங்கத்தைக் குத்திப் பார்க்கிறீர்கள். அதற்கு உங்களுக்கு அதிகாரம் இருக்கிறதா? நீங்கள் விடப்போவது என்ன பேப்பர் கப்பலா? உலகம் பூராவும் எப்படிச் சுற்றி வரப் போகிறீர்கள்? அதற்குச் சட்ட திட்டம் கிடையாதா?





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்கு ஷிப்பிங் கார்ப்பரேஷன் அமைப்பதற்கு மத்திய அரசு ஒத்துக் கொண்டிருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளாமல் பேசுவது நல்லதல்ல.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஏழாவது ஷெட்யூலில் சென்ட்ரல் லிஸ்ட் 24-ல் இன்டர்நேஷனல் வாட்டர்வேஸ் என்று போட்டிருக்கிறார்கள். இன்லண்ட் வாட்டர்வேஸ் கன்கரண்ட் லிஸ்டில் 32-வதாக இருக்கிறது. நீங்கள் உலகம் பூராவும் வாணிபம் செய்வோம் என்று சொன்னால் அது மத்திய அரசுக்கு சவால் விடுவது மாதிரி இருக்கிறது. பழைய தமிழகத்தில் கப்பல் வாணிபம் நடந்தது, இந்தச் சோழன் காலத்திலே கடல் வாணிபம் பரந்து விரிந்து போய்க் கொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொள்வதற்காக கப்பல் விடப் போகிறீர்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதுதான் அம்மையார் அவர்கள் சொன்னார்கள். காங்கிரஸ் அரசாங்கமே மத்திய அரசை எதிர்த்துக் காரியங்களைச் செய்யும்போது நீங்கள் ஏன் செய்யக்கூடாது என்று கேட்டார்கள். அதைக் கேட்டுவிட்டு "மத்திய அரசாங்கத்திற்கு எதிராக நீங்கள் கப்பல் போக்குவரத்துக் கழகம் வைக்கலாமா?" என்று கேட்கிறார்கள். எதிர்த்து வைக்கலாமா என்று அவர்கள் கேட்டார்கள். ஆனால் மத்திய அரசு கப்பல் போக்குவரத்து ஆரம்பிப்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதை ஏற்றுக் கொண்டிருப்பதாக மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்களே அறிவித்திருக்கிறார்கள். எதிர்த்து வைக்கலாம் என்ற வாதத்திற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

காங்கிரஸ் அரசாங்கம் மத்திய அரசை மீறிக் காரியங்களைச் செய்யும்போது தமிழக சர்க்கார் மத்திய சர்க்காரை மீறி காரியங்களைச் செய்யக்கூடாதா என்று கேட்டார்கள். காங்கிரஸ் அரசாங்கம் மைசூரிலே காவேரித் தண்ணீருக்கு அணை போட்டுத் தடுக்கிறது. தண்ணீர் அங்கிருந்து வருகிறபடியால் அவர்கள் ஹேமாவதியைக் கட்டித் தடுக்க முடிகிறது. இங்கு எப்படிச் செய்வது. இங்கு நாம் அணைகட்டி கீழே இருக்கின்ற தண்ணீரைத் தடுப்பதா? எந்த வகையிலே மத்திய அரசை மீறுவது என்று யோசனை சொன்னால் நலமாக இருக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் ரொம்ப விளக்கமாகச் சொன்னேன். எங்கே விழிப்போடு காரியங்களைச் செய்ய வேண்டுமோ அங்கே விழிப்பாக இருப்பது கிடையாது. அனாவசியமாக வம்புக்கு இழுக்கின்ற காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். மத்திய அரசாங்கம் பெரிய மனதோடு கப்பல் வாணிகத்திற்கு அனுமதி கொடுத்திருந்தால் உங்களோடு சேர்ந்து நானும் பாராட்டுகிறேன். செய்கின்ற காரியங்களைத் துணிவோடு செய்ய வேண்டும்; காலாகாலத்தில் செய்ய வேண்டும். வம்பு இழுப்பதற்காகச் சில காரியங்களைச் செய்வதால்தான் நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: [illegible] பிரச்சினையில் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை [illegible] தமிழ்நாட்டிற்கு வருவதில் ஒரு துளியும் குறையக் கூடாது என்பதில் தமிழக அரசு திட்டவட்டமான கருத்தைக் கொண்டிருக்கிறது. அந்தக் கருத்தை எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைப்படி அழுத்தந்திருத்தமாக தமிழக அரசின் சார்பில் டில்லியில் வற்புறுத்தி வாதிடுகிறோம். அதிலே பின்வாங்கப் போவதில்லை. இதற்கிடையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் சொன்ன யோசனைகளைவிட வேறு என்ன யோசனையை அம்மையார் அவர்கள் சொல்லுகிறார்கள்? சொன்னால் அதுபற்றி யோசிக்க தமிழக அரசு தயாராக இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: நானும் யோசனை சொல்லி இருக்கிறேன். என்ன யோசனை சொல்லியும் காரியம் நடக்கவில்லை. அதில் விழிப்போடு இருக்க வேண்டும். எல்லா எதிர்கட்சிகளின் ஆதரவையும் கேட்டு, கொடுத்தும் கூட காவிரிப் பிரச்சினையில் தீர்வு காண முடியாமல் ஒத்திப் போட்டுக் கொண்டே போகிற நிலைமை இருக்குமானால் தமிழகம் உங்களுடைய திறமையைக் கண்டு பயப்படக்கூடிய கட்டத்தில் இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காவிரிப் பிரச்சினையில் எந்த வகையில் தமிழ்நாடு அரசு போராடவில்லை? அதை விளக்கினால் பரவாயில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் முதலில் உடனடியாகப் போய் தண்ணீர் குறையாத அளவுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கச் சொல்லுங்கள். மந்திரிமார்கள் எம். பி. சி. கூட்டத்திற்கு அடிக்கடி போகிறார்கள். அங்கே பேசி காரியத்தை முடித்துவிட்டு வராமல் போய்க் கொண்டிருப்பதில் என்ன பயன்? அன்றைக்கு இருந்த மந்திரிமார்கள் ஆறே மாதத்தில் தெர்மல் ஸ்டேஷனைக் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு நீங்கள் இரண்டு வருஷ காலமாக எழுதிக் கொண்டே இருக்கிறீர்கள். நீங்கள் திறமையோடு காரியத்தில் கவனமாக இருந்து முடிக்க வேண்டுமே தவிர, எங்களுக்குப் பதில் சொல்ல அறிக்கையைத் தயாரித்துக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. மக்கள் உங்களை எப்படி எடை போடுவார்கள் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். காவிரிப் பிரச்சினையில் காலதாமதத்திற்குக் காரணம் நம்முடைய திறமைக் குறைவு என்பதை உணர்ந்து வேகமாகப் பணியாற்ற வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தமிழ்நாடு வேகமாக முன்னேறிச் செல்ல வேண்டுமென்ற கருத்தை அரசை ஊக்கப்படுத்துகிற பேச்சாக ஏற்றுக் கொள்கிறேன். குறை கூறுகிற பேச்சாக எடுத்துக் கொள்ளவில்லை. எதிர்க்கட்சியிலிருந்து குறை கூறிப் பேசினால் சில நேரங்களில் அது அரசாங்கத்தை ஊக்கப்படுத்துகிற பேச்சு என்று ஜனநாயக மரபில் மதிக்கிறேன்.



நாம் நடத்திக் கொண்டிருக்கின்ற பேச்சு வார்த்தைகள், ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒப்பந்தங்கள் எந்த அளவில் இருக்கின்றன என்றால் காவிரிப் பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வராத வரையில் ஹேமாவதி அணைக் கட்டில் தண்ணீரைத் தேக்கக்கூடாது என்ற உறுதி மொழியைப் பெற்றிருக்கிறோம். அதுவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சாதகமான சூழ்நிலை, அரசு ஏமாந்துவிடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஏமாந்து விடவில்லை என்று எங்களுக்குச் சொல்லுகிறீர்கள். ஏற்றுக் கொள்கிறேன். காரியம் நடக்க வேண்டும்; அவ்வளவுதான். அது இன்னமும் பிரச்சினையாகத் தேங்கிக் கொண்டிருக்கிறது. முடிவு காண்பதில் துரிதமாக வேலை செய்ய வேண்டும். காவிரி ட்ரெய்னேஜ் ஸ்கீமுக்கு உலக பாங்கு ஒத்தாசை செய்கிறேன் என்று சொல்லி இன்று பின் வாங்கிக் கொண்டிருப்பதன் காரணம் என்ன? ஒரு வேளை தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுவிடும் என்று கருதுகிறார்களா? இப்படிப் பல சிக்கல்கள் இருக்கும்போது சாமர்த்தியமாகக் காரியங்களைக் காலாகாலத்தில் செய்ய முன் வரவேண்டும்.

கங்கை—காவிரி இணைப்புத் திட்டம் இருக்கிறது. காவிரியோடு, கோதாவரி, கிருஷ்ணா நதிகளை இணைக்கும் முயற்சிகளையும் எடுக்கலாம். இந்த யோசனைகளை எல்லாம் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம்.

பெரிய பெரிய அணைக்கட்டுத் திட்டங்களை எல்லாம் காங்கிரஸ் ஆட்சியிலிருந்தபோதே செய்து விட்டது. இனிமேல் எங்கே அணை கட்டுவது என்று கூடப் பேசினார்கள். பெரிய பெரிய அணைக்கட்டுகளை எல்லாம் காங்கிரஸ்காரனே கட்டி விட்ட நிலையில் நீங்கள் சிறிய குளங்கள், கண்மாய்கள், குட்டைகள் ஆகியவற்றைச் செப்பனிடும் பணியை மேற்கொள்ளக் கூடாதா? அதிலே சுறுசுறுப்புக் காட்டக் கூடாதா? இப்போதுதான் யோசித்து 25,000 ஏரிகளை இந்த ஆண்டு செப்பனிடப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். எப்போது அதை முடிக்கப் போகிறீர்கள்? அடுத்த ஆண்டு தேர்தல் வரப் போகிறது. 1967-ம் ஆண்டிலிருந்து இந்த வேலைகளைச் செய்ய தொடங்கியிருக்கக் கூடாதா? நான்கு வருஷத்திற்கு முன்னாலேயே ஆரம்பித்திருக்கக்கூடாதா? இரிகேஷனில் இந்தச் சிறு வேலைகளைத் தவிர வேறுவேலையே உங்களுக்குக் கிடையாதே. 1974-ல் தான் இந்த யோசனை உங்களுக்குப் பிறக்கிறது. 25,000 ஏரி குளங்களைச் செப்பனிடப் போவதாகக் கவர்னர் பெருமான் உரையிலே காணப்படுகிறது. இவற்றையெல்லாம் நிறைவேற்றி தீவிரமான முறையில் உற்பத்தியைப் பெருக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டாமா?

(மணி அடிக்கப்பட்டது).

என்னுடைய பேச்சில் நிறையக் குறுக்கீடுகள் இருந்தன, எனவே மேலும் நேரம் கொடுக்க வேண்டும்.

[திருமதி, த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 1

மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸை எடுத்துக்கொள்ளுங்கள். மொபஸ் வண்டிகளுக்கு, இதரப் பகுதிகளில் ஓடும் வண்டிகளுக்கு காலாண்டுக்கு வரி ரூ. 120 என்று விதிக்கப் போகிறீர்கள். ஒரு சீட்டுக்கு ரூ. 30, ரூ. 40 டாக்ஸ் அதிகம் கட்டவேண்டி வரும் ஒரு காலாண்டுக்கு. அப்படிக் கொடுத்தால் ஒரு பஸ்ஸுக்கு மூன்று மாதத்திற்கு ரூ. 2,400 உங்களுக்கு வருமானம் வரப்போகிறது என்றால் எவ்வளவு டாக்ஸ் வரும். 23 கோடி எதிர் பார்க்கிறீர்கள்.

பின்னர், என்டெர்டெயின்மெண்ட் டாக்ஸ். அதையும் ராஷனலைஸ் செய்யப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். எல்லாவற்றையும் சேர்த்து உங்கள் வரவை அதிகரித்துக்கொள்ள வழி செய்திருக்கிறீர்கள். கேளிக்கை வரி மூலம் வருகிற வருமானம் முந்திய ஆண்டைவிட குறைந்திருக்கிறது, குறைவாக எதிர்பார்க்கப்படுகிறது. ஏன் அந்த வருமானம் குறைகிறது? சினிமாக்கள் அதிகமாகாமல் இருக்கிறதா, அல்லது மக்கள்தான் சினிமாக் களுக்குப் போகாமல் இருக்கிறார்களா? ஆகவே, வரி ஏமாற்றுவதில் உங்களிடம் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இன்று சேல்ஸ் டாக்ஸ் பொறுத்து, 59 பொருள்களை ஒருமுனை விற்பனை வரியின்கீழ் கொண்டு வந்திருக்கிறீர்கள். வரவேற்கத்தக்கது. இவ்வளவு விலைவாசியேற்றம் இருக்கும்போது உணவுப் பொருட்களுக்கு வரி விலக்கு கொடுத்திருக்கக்கூடாதா?

விறகுக்கு விலக்களித்திருக்கிறீர்கள். ஆனால் விறகின் விலை குறைய வில்லை. ஐந்து ரூபாயிலிருந்து ஆறு ரூபாயாக ஆகியிருக்கிறது.

பருப்புக்கள், எண்ணெய்கள் விலை வாங்க முடியாத அளவிற்கு உயர்ந்து, மக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரிசி, மிளகாய், புளி இவற்றின் விலைகள் எல்லாம் ஏறிவிட்டன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி விலை ரூ. 4, ரூ. 4-50க்கு விற்கிறது என்று கடிதங்கள் வருகின்றன. பல மாவட்டங்களில் அரிசி ரூ. 4·50ஐ தொட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். அப்படியிருக்க, அரிசியை நாங்கள் மகாராஷ்ட்ராவிற்கு அனுப்புகிறோம், கேரளாவிற்கு அனுப்புகிறோம் என்று சொல்கிறீர்கள். இங்கிருப்பவர்களுக்கு இரண்டு மாதங்களில் அரிசி வாங்க சக்தியில்லாது போய்விடும் என்று பயப்படுகிறேன்.

ஆகவே, நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டும். அதிக வரு மானம் உள்ளவர்களுக்கும் கார்டு அடிப்படையில் அரிசி வழங்க வேண்டும். இப்போது ரூ. 300-க்கு மேல் வருமானம் உள்ளவர்களுக்கு கொடுப்ப தில்லை. ஆகவே, 750 ரூபாய் வருமானம் என்று வைத்து குடும்பக் கார்டுகள் கொடுத்து அதன் அடிப்படையில் நியாய விலையில் அத்தியா வசியப் பண்டங்கள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வழிவகை செய்தால் தான் மக்களுக்காக நாங்கள் நல்ல காரியங்கள் செய்கிறோம் என்று சொல்ல முடியும்.



V211,31 'N74
31N74.4932

1974 மார்ச் 11] [திருமதி. த. ந. அனந்தநாயகி]

மக்கள் நல்வாழ்வுத் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் முதியோர் பென்ஷனுக்கு என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு மேல் யாரும் முதியோர்கள் இருக்கக்கூடாது. இந்த ஒரு கோடி ரூபாய்க்குள் வருவது வரைதான் முதியோர்கள் இருக்கவேண்டும். அதற்குமேல் இருக்கக்கூடாது. எலிஜிபிளாக இருக்கிற எல்லா முதியோர் களுக்கும் முதியோர் பென்ஷன் கொடுத்தால் என்ன? நாலரைக் கோடி மக்கள் இங்கிருக்கும்போது, இந்த ஒரு கோடியை இரண்டு கோடி யாக ஆக்கினால் என்ன வந்து விடும்?

உண்மையான அனாதைகளுக்கு பென்ஷன் கொடுத்தால் என்ன? சில மாநிலங்களில் விதவைகளுக்கு, அனாதைகளுக்கு உதவித் தொகை அளிப் பதைப் பார்க்கிறோம். இங்கும் அப்படி ஏன் தரக்கூடாது? அனாதைகள் விதவைகள், முதியோர்—முதியோர்களுக்கு சோறு போட சொந்தக்காரர் கள் கூட மறுக்கிறார்கள்—இந்த விலைவாசி ஏற்றத்தினால். ஆகவே இப்படிப்பட்ட அனாதைகள், விதவைகள், முதியோர் இவர்களுக்கு மாதம் ரூ. 25 கொடுக்க ஏதாவது ஸ்கீம் இருக்கிறதா?

பென்ஷனர்கள் எவ்வளவோ கஷ்டப்படுகிறார்கள். எங்களுக்கு பஞ்சப் படியை உயர்த்த வேண்டும் என்று கேட்கிறார்கள். அதை உயர்த்த உங்களுக்கு மனம் வந்திருக்கிறதா? [illegible] வெல்பேர் ஸ்கீம்ஸ் என்பது அவைதான். பென்ஷன்கா[illegible] பஞ்சப்படியையும் கொடுக்கலாமே. 70-க்கு பின்[illegible] 70-க்கு முன்[illegible] என்று ஏன் வித்தியாசம் பாராட்ட வேண்டும்? இதை ஏன் சரிக்கட்ட[illegible]து என்று கேட்கிறேன். அரசாங்கத்திற்காக உழைத்தவர்களுக்கு ஏன் [illegible]ந்த நிலை இருக்க வேண்டும்?

சரி, இங்குள்ள அரசுச் சிப்பந்திகளுக்காவது நிம்மதி இருக்கிறதா என்றால் பத்து ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். கேட்டால் சொல்கிறார்கள், மத்திய சர்க்கார் கொடுத்தால் [illegible]ப்போம் என்று. மத்திய சர்க்காரிட மிருந்து எவ்வளவு வகைகளில், [illegible]ண்ட்-இன்-எய்ட், செண்ட்ரல் எக்ஸை ஸில் இருந்து வருமானம் இவை சிறிது சிறிதாக அதிகரித்துக்கொண்டே போகிறது. அவர்கள் மூன்று முறை கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் பத்து ரூபாய்தான் கொடுத்திருக்கிறீர்கள்.

சரி, அந்த உதவி இல்லை, வீட்டு வசதி வாரியத்தின் கீழ் உள்ள வீடு களில் குடியிருப்பவர்களுக்கு என்ன செய்கிறீர்கள்? ஹௌஸ் ரெண்ட் அலவன்ஸை எடுத்துக்கொள்கிறீர்கள், அதோடு சம்பளத்திலும் 10 சத வீதம் பிடித்துக்கொள்கிறீர்கள். எச்.ஆர்.ஏ. என்றால் என்ன? ஹௌஸ் ரெண்ட் அலவன்ஸ். அந்த ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸை பிடித்துக் கொள்ளுங்கள். பின் ஏன் சம்பளத்தில் 10 சதவீதத்தையும் பிடிக் கிறீர்கள்?

குடிசை மாற்றுவாரியம் என்று குடிசைகளில் இருந்தவர்களுக்கு கூட கோபுரம் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். 10 ரூபாய் என்று வாடகை போட்டீர்கள், லைட், வாட்டர் சப்ளை இருந்தால் ரூ. 15 என்று வைத்தீர்கள்.

6646

பட்டுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், பங்களா தேஷ் உதவி நிதிக்காக இந்த அரசு போட்டிருக்கும் வரிவிதிப்பை வாபஸ் செய்தால் அந்த வரிக் கஷ்டம் கொஞ்சம் குறையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அந்த வரிவிதிப்பை வாபஸ் வாங்க அரசு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய ஜனங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தின் கீழ் ஏழை மக்களுக்கு வீடு கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட திட்டம் அறிவிக்கப்பட்டும், ஓராண்டு, ஈராண்டு ஆகியும் அவர்களுக்கு வீடு கட்டித்தரப் படவில்லை. அப்படியே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட திட்டத்தின் கீழ் கிராம மக்களுக்கு அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தால் அவர்கள் வாழ்க்கை நடத்த உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அரிசன மாணவர்களுக்கு, பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு இன்னும் ஸ்காலர்ஷிப் வழங்கப்படவில்லை. வருஷ கடைசி வந்தும் பணம் கொடுக்கவில்லை. அவர்களுக்கு உடனடியாக பணம் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு கோவை ஆர்ட்ஸ் காலேஜில் நைட் காலேஜ் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் வழங்கப்படவில்லை. அவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஸ்காலர்ஷிப் பணம் அந்தந்த சந்தர்ப்பத்தில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்றைக்கு ஏழை எளிய மக்கள்தான், சாதாரண மக்கள்தான் கோவையிலும் சரி, மற்ற இடங்களிலும் சரி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். 9-வது வகுப்பு வரை படிப்பது என்பதே கடினமாக இருக்கிறது. ஆகவே, 10-வது வகுப்பு வரை படித்து இருந்தால் அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்தால்தான் சாதாரண ஏழை எளிய ஜனங்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற வழியாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பல இடங்களில் பூமி அக்கொயர் செய்து இருக்கிறார்கள். அப்படி அக்கொயர் செய்து இருந்தாலும் அவர்களுக்கு 2 சென்ட்தான் கொடுக்கப்படுகிறது. 2 சென்ட் நிலத்தில் அவர்கள் வீடு கட்டிக்கொண்டால் பழைய மாதிரியே குடிசைதான் கட்டிக்கொள்ள முடியும். நல்ல வீடு கட்டிக்கொண்டு, அவர்கள் மாடுகள் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமானால் அவர்களுக்கு ஒரு 5 சென்ட் நிலமாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்தது 3 சென்ட் நிலமாவது நகரத்தில் இருப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்த வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் ஒரு வாரத்திற்கு முன்பு தேர்தல் நடந்தது. அந்தத் தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் 103 பேர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்



கப்பட்டனர். அவர்கள் ஜாமீனில் வெளியே வந்தார்கள். அவர்கள் மீது இன்றைக்கு தீ வைத்ததாகக் கேஸ் போடப்பட்டு இருக்கிறது. இது குறித்து நல்ல விசாரணை செய்து, அது உண்மையா, நியாயமா என்று பார்த்து, தீ வைத்தவர்கள் யார், யார் இதற்கு பொறுப்பானவர்கள் என்று விசாரணை செய்து, அதன் மூலம் நியாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் நியாயமான முறையில் அரசு நடந்துகொள்ள வேண்டும். எங்கே பார்த்தாலும் கோயம்புத்தூரில் இதே பிரச்னையாகப் போய் விட்டது. 103 பேர் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் வந்த பிறகு அவர்கள் பேரில் தீ வைத்ததாகக் கேஸ் போட்டு, கேஸ் மேல் கேஸ் போட்டு நடத்துவது சரியல்ல என்று சொல்லிக்கொண்டு, உடனடியாக அந்தக் கேஸை ரத்து செய்து, அங்கே இருக்கும் சமூக விரோதிகள் யாரோ அவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் பேச்சை முடித்து கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·28 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

153. Notification issued with G.O. Ms. No. 428, Labour and Employment, dated the 21st June 1973, in regard to exemption from the provisions of the Tamil Nadu Catering Establishments Act, 1958 in respect of all the vegetarian refreshment rooms and restaurants run directly by the Railway Administration in the State of Tamil Nadu. [*Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Catering Establishments Act*, 1958 (*Tamil Nadu Act XIII of* 1958).

154. Notification issued with G.O. Ms. No. 2077, Rural Development and Local Administration, dated the 22nd September 1973. in regard to preliminary notification for declaration of the areas forming the Aruppukottai Local Planning Area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972).

155. Notification issued with G.O. Ms. No. 2078, Rural Development and Local Administration, dated the 22nd September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Shencottah Local Planning Area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972).

156. Notification issued with G.O. Ms. No. 2686, Public (Services-A), dated the 10th October 1973 in regard to certain amendments to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 relating to redesignation of certain non-Gazetted posts in Tamil Nadu Town Planning Subordinate Service. [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India*).

157. Notification issued with G.O. Ps. No. 6110, Revenue, dated the 28th September 1973 in regard to certain amendments to the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [*Laid on the table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).

B. *Reports, Notifications and Other Papers.*

* 62. Administrative Reforms Commissions Report on District Revenue and General Administration. (Tamil).

* 63. Booklet entitled the " Entrance to Secretariat Buildings Revised Instructions ". (English and Tamil).

' Circulated to Members on 8th March 1974.



## இணைப்பு I.



[ 6 ஆம் பக்கத்தில் 353-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட ுவிற்குரிய விடையைக் காண்க.]

"மாணவர் முழு வளர்ச்சி மதிப்பீட்டு முன்னோடித் திட்டம்" ுத்தப்பட்டுள்ள பள்ளிகளின் விவரம் வருமாறு :—

சன்னை மாவட்டம் :—

1. பச்சையப்பன் கல்லூரி உயர்நிலைப் பள்ளி, சென்னை-1.

2. பி.எ. கே. பழனிசாமி நாடார் உயர்நிலைப் பள்ளி, சென்னை-21.

3. தி. நகர் உயர்நிலைப் பள்ளி, தி. நகர், சென்னை-17.

4. அரசு உயர்நிலைப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை-24.

5. செயின்ட் தாமஸ் உயர்நிலைப் பள்ளி, செயின்ட் தாமஸ் மௌண்ட், சன்னை-16.

6. மாநகராட்சி பெண்கள் உயர்நிலைப் பள்ளி, நுங்கம்பாக்கம், சன்னை-34.

7. டாக்டர் ரத்னவேலு சுப்ரமணியம் பெண்கள் உயர்நிலைப் ள்ளி, முத்தியால்பேட்டை, சென்னை-1.

8. எ. ஆர். சி. பெண்கள் உயர்நிலைப் பள்ளி, முத்தியால்பேட்டை, சன்னை-1.

9. மாநில பெண்கள் உயர்நிலைப் பள்ளி, எழும்பூர், சென்னை—8.

10. அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, எழும்பூர், சென்னை—8.

11. என். கே. டி. தேசீய உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி, ன்னை-5.

12. சிறுவர் பூங்கா உயர்நிலைப் பள்ளி, மைலாப்பூர், சென்னை-4.

13. ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ராஜா ண்ணாமலைபுரம், சென்னை-28.

14. அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, தி. நகர், சென்னை-17.

15. குண்டூர் சுப்பையா பிள்ளை தி. நகர் பெண்கள் உயர்நிலைப் ளி, தி. நகர், சென்னை-17.

இணைப்பு I—தொடர்ச்சி.

16. சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

17. மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி, சென்னை-3.

18. லேடி சிவசாமி ஐயர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி
மைலாப்பூர், சென்னை-4.

19. மாதிரி உயர்நிலைப்ப ள்ளி, சைதாப்பேட்டை,

இணைப்பு II.

[ 15-ம் பக்கத்தில் 359 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வின
விற்குரிய விடையைக் காண்க.]

மீனளத் துறையின் தலையாய குறிக்கோள், வளர்ச்சி பெற்று
வருகின்ற, வளர்ச்சியடைந்த, மற்ற நாடுகளுக்கு இணையாக, அறிவியல்
வழிகளில், மீன்பிடி தொழிலைக் காலத்துக்கேற்ப மாற்றியமைப்பதே
ஆகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கிய நாட்களிலிருந்தே இத்
தொழிலைத் தற்காலத்துக்கேற்ப மாற்றியமைப்பதற்கான முயற்சிகள்
தொடங்கின. இத்துறையின் முதலீட்டில் பெரும்பான்மையும் மீன்பிடி
விசைப்படகுகளைப் புழக்கத்திற்குக் கொண்டு வருதல் ; இன்றைநாள்
அறிவியல் வளர்ச்சிக்கேற்ப மீன் குஞ்சுகளை வளர்த்தல், நீர் நிலைகளில்
பெருமளவில் மீன்களைப் பெருகச் செய்தல்) மீனளத்தின் பல்வேறு
கூறுகள் (மீன்பிடி தொழிலின் பிரச்னைகள் ஆகியவைப்பற்றி ஆராய்ச்சி
நடத்துதல் போன்ற, இத் தொழிலைக் காலத்திற்கேற்ப மாற்றியமைக்கும்
பணிகளுக்கே செலவிடப்படுள்ளது. இத் தொழிலைத் தற்காலத்துக்கேற்ப
மாற்றியமைப்பதற்கு முக்கியத்துவம் அளித்துள்ள திட்டங்கள் கீழே
கொடுக்கப்பட்டுள்ளன :

1. மீன்பிடி விசைப்படகுகளைப் பயன்படுத்துதல் :

2. புதிய " கியர்களைப் (Gear) " புகுத்துதல் ;

3. இயந்திரங்களின் உதவியால் மீன் பிடித்தல், புதிய " கியர் " களை
யும், அறிவியல் சாதனங்களையும் பயன்படுத்துதல் ஆகியவற்றை மீன
வர்கள் கற்றுக்கொள்ள அவர்களுக்குப் பயிற்சியளித்தல் ;

4. மீன்குஞ்சுகளை வளர்த்தல், நீர் நிலைகளில் மீன்களைப் பெருகச்
செய்தல் ;

5. மீனைப் பதப்படுத்துவதும் விற்பனையும்.



இத்துறையால் செயற்படுத்தப்படுகின்ற பிற திட்டங்கள் இவற்றுக்
குத் துணையாக அமைவன ஆகும். அவையும், பின் வருவன
வற்றைச் செய்யும் பொருட்டு, மீன் பிடி தொழிலைப் புதுமைப்படுத்துவதற்
குத் தம் பங்கினை ஆற்றுகின்றன.

மீன்களைப் பிடித்துக் கரை சேர்க்கும் அளவை உயர்த்துதல் ; மீன்களைப்
பக்குவப் படுத்திப் பாதுகாத்தலும், விற்பனையும் ; நவீன மீன்பிடி படகுகள்
பிடித்த மீன்களைக் கரைசேர்க்கும் வசதியும் ; படகுத் துறையில் நிறுத்தும்
வசதியும் ; மீன்களைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல சாலைகள், செய்தித்
தொடர்பு போக்கு வரத்து வசதிகளை அமைத்தலும், மீனவர்களுக்குப்
பயிற்சியும், கல்வியும் புகட்டி, சமூகத்தில் அவர்களது நிலையை உயர்த்து
தலும் ஆகும்.

The primary object of the Fisheries Department is to modernise the fishing industry on scientific lines keeping pace with the other developing and developed countries. The efforts to modernise the industry commenced from the beginning of the Five Year Plans and most of the investment by the department has been spent only towards modernisation, such as introduction of mechanised fishing boats application of latest science in fish breeding and stocking, conducting research into the various aspects of fisheries and the problems of the industry. The following are the specific schemes which lay emphasis on modernisation.

(1) Introduction of mechanised fishing boats ;

(2) Introduction of modern gear ;

(3) Training of fishermen to learn mechanised fishing and using modern gear and scientific apparatus ;

(4) Fish breeding and stocking; and

(5) Processing and marketing.

The other schemes implemented by the Department are ancillary and they also contribute towards the object of modernisation in order to increase the fish landings, fish preservation and marketing, landing berthing facilities for modern fishing crafts, roads and communication for fish to reach the markets and uplifting the fishermen educationally and socially.

[ 19-ம் பக்கத்தில் 364-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவுக்குரிய விடையைக் காண்க.]

A statement is placed on the Table of the House.

STATEMENT SHOWING THE MEMORIAL STRUCTURE ON PUBLIC ROADS AND THEIR LOCATIONS.

| *Name of Memorial Structure.* | *Location.* |
|---|---|
| (1) | (2) |
| 1 Anna Statue .. .. | Junction of Poonamallee High Road and Anna Nagar Main Road. |
| 2 Bashiyam Naidu Statue .. | In the compound of Bashiyam Naidu Park. |
| 3 Swami Naicken Statue .. | In the compound of Park at Harris Road, Pudupet. |
| 4 Mir Ansoordin Statue (Chief Presidency). | Structure at Binnys Road. |
| 5 C. N. Annadurai Statue .. | Sadasiva Iyer Street and P. V. Koil Street. |
| 6 Devadoss Statue .. .. | Do. |
| 7 Buddaun Statue .. .. | In the compund of Napier Park, Chintadripet. |
| 8 Anna Statue .. .. | Anna Salai, Madras-2. |
| 9 Munroe Statue .. .. | Body Guard Road. |
| 10 Ilango Adigal Statue .. | South Beach Road. |
| 11 Kambar Statue .. .. | Do. |







| *Name of Memorial Structure.* | *Location.* |
|---|---|
| (1) | (2) |
| 12 Caldwell Statue .. .. | South Beach Road. |
| 13 Triumph of Labour Statue. | Do. |
| 14 Bharathiyar Statue .. | Do. |
| 15 Kannagi Statue .. .. | Do. |
| 16 Dr. Anne Besant Statue .. | Dr. Besant Road. |
| 17 G. U. Pope Statue .. | South Beach Road. |
| 18 Valluvar Statue .. .. | Do. |
| 19 Tiruvalluvar Statue .. | Royapettah High Road. |
| 20 C. N. Annadurai Statue .. | Junction of V. M. Street and Royapettah High Road. |
| 21 Mahatma Gandhi Statue .. | South Beach Road |
| 22 Veerama Munivar Statue .. | Do. |
| 23 C. N. Annadurai Statue .. | Junction of Bazaar Road and G. N. Chetty Street. |
| 24 Gandhiji Statue .. .. | Junction of Chitrakulam North Street and East Mada Street. |
| 25 Mahatma Gandhi Statue .. | Opposite to No. 4, Cathedral Road. |
| 26 N. S. Krishnan Statue .. | Junction of G. N. Chetty Road and Dr. Nair Road. |
| 27 Dr. Ambedkar Statue .. | At the Junction of Arcot Road and Ashok Nagar. |

[1974 மார்ச் 11

| Name of Memorial structure. | Location. |
|---|---|
| (1) | (2) |
| 28 Anna Statue .. .. | At the Junction of Gandhi Mandapam, Kotur Main Road, and Ranjit Road. |
| 29 N. S. Krishnan Statue .. | Near Buckingham Canal Road, Kotur. |
| 30 V. O. Chidambaram Statue. | Harbour Port Trust Land. |
| 31 Avvaiyar State .. .. | Beach Road, P. W. D. Land. |
| 32 Bharathi Dasan Statue .. | South Beach Road, Public Works Department Land. |
| 33 Prakasam Statue .. | Opposit to Annamalai Mandram, Corporation Land. |
| 34 Edward VII Statue .. | Entrance to Rajaji Hall Anna Salai. |
| 35 Raja of Travancore Ramavarma Statue. | Opposite to Raja Annamalai Mandram. |
| 36 King George V Statue .. | Near Fort St. George. |
| 37 Thiru Vi-Ka Statue .. | Srinivasa Sannadhi Street, Royapettah. |
| 38 Jeevanandam Statue .. | Near Tower Clock, T. H. Road. |
| 39 War Memorial Structure. | At the junction of North Beach Road and Band Practice Road. |



1974 மார்ச் 11]

சென்னையில் சாலைகளில் உள்ள நினைவுச் சின்னங்கள், அவை வைக்கப்பட்ட இடங்கள் ஆகியவற்றைக் காட்டும் பட்டியல்.

| நினைவுச் சின்னம். | வைக்கப்பட்ட இடம். |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணா சிலை .. .. .. | பூந்தமல்லி நெடுஞ்சாலையும் அண்ணாநகர் பெரிய சாலையும் சந்திக்கும் இடம். |
| 2 பாஷ்யம் நாயுடு சிலை .. .. | பாஷ்யம் நாயுடு பூங்கா. |
| 3 சாமி நாய்க்கன் சிலை .. .. | புதுப்பேட்டையிலுள்ள ஹாரிஸ் சாலைப் பூங்கா. |
| 4 மீர் அன்சர் தீன் சிலை (முன்னாள் மாநிலத் தலைமை நீதிபதி). .. .. | பின்னிஸ் சாலை. |
| 5 அண்ணா சிலை .. .. .. | சதாசிவ அய்யர் தெருவும் பாதாள விக்னேசுவரர் கோவில் தெருவும் சந்திக்கும் இடம். |
| 6 தேவதாஸ் சிலை .. .. .. | சதாசிவ அய்யர் தெருவும் பாதாள விக்னேசுவரர் கோவில் தெருவும் சந்திக்கும் இடம். |
| 7 புத்தவுன் சிலை .. .. .. | சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள நேப்பியர் பூங்கா. |
| 8 அண்ணா சிலை .. .. .. | அண்ணா சாலை, சென்னை-2. |
| 9 மன்றோ சிலை .. .. .. | பாடி கார்ட் ரோடு. |
| 10 இளங்கோ அடிகள் சிலை .. .. | தெற்கு கடற்கரைச் சாலை |
| 11 கம்பர் சிலை .. .. .. | ஷை |
| 12 கால்டு வெல் சிலை .. .. .. | ஷை |
| 13 உழைப்பாளிகள் சிலை .. .. | ஷை |

[1974 மார்ச் 11

| நினைவுச் சின்னம். (1) | வைக்கப்பட்ட இடம். (2) |
|---|---|
| 14 பாரதியார் சிலை | தெற்கு கடற்கரை சாலை |
| 15 கண்ணகி சிலை | ஷை |
| 16 டாக்டர் அன்னிபெசண்ட் சிலை | டாக்டர் பெசண்ட் சாலை. |
| 17 டாக்டர் ஜி. யு. போப் சிலை | தெற்கு கடற்கரைச் சாலை. |
| 18 வள்ளுவர் சிலை | ஷை |
| 19 வள்ளுவர் சிலை | இராயப்பேட்டை நெடுஞ்சாலை. |
| 20 அண்ணா சிலை | வி. எம். சாலையும் இராயப் பேட்டை நெடுஞ்சாலையும் சந்திக்குமிடம். |
| 21 மகாத்மா காந்தியடிகள் சிலை. | தெற்கு கட்றகரைச் சாலை. |
| 22 வீரமா முனிவர் சிலை | ஷை |
| 23 அண்ணா சிலை | பஜார் தெருவும் ஜி. என் செட்டித் தெருவும் சந்திக்கு மிடம். |
| 24 காந்தியடிகள் சிலை | சித்திர குளம் தெற்குச் சாலையும் தெற்கு மாட வீதியும் சந்திக்கு மிடம். |
| 25 காந்தியடிகள் சிலை | கதீட்ரல் சாலை எண் 4-க்கு எதிரில். |
| 26 என். எஸ். கிருஷ்ணன் சிலை | ஜி. என். செட்டிச் சாலையும் டாக்டர் நாயர் சாலையும் சந்திக்குமிடம். |
| 27 டாக்டர் அம்பேத்கார் சிலை | ஆற்காடு சாலை மின் நிலையத் துக்கு எதிரில். |
| 28 அண்ணா சிலை | கோட்டூர் பெரிய சாலையும் ரஞ்சித் சாலையும் சந்திக்கும் இடம். |



1974 மார்ச் 11]

| நினைவுச் சின்னம். (1) | வைக்கப்பட்ட இடம். (2) |
|---|---|
| 29 என். எஸ். கிருஷ்ணன் சிலை | கோட்டூர் (பக்கிங்காம் கால்வாய் சாலைக்கு அருகில்). |
| 30 வ. உ. சிதம்பரனர் சிலை | துறைமுகம் (துறைமுகத்துக்குச் சொந்தமான இடத்தில்). |
| 31 ஔவையார் சிலை | தெற்கு கடற்கரைச் சாலை (பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம்). |
| 32 பாரதிதாசன் சிலை | ஷை |
| 33 பிரகாசம் சிலை | அண்ணாமலை மன்றத்துக்கு எதிரில் (சென்னை மாநக ராட்சி இடம்). |
| 34 ஏழாம் எட்வர்டு சிலை | அண்ணா சாலையில் உள்ள இராஜாஜி கூடத்தின் வாயி லுக்கு எதிரில். |
| 35 திருவாங்கூர் அரசர் இராமவர்மா சிலை. | அண்ணாமலை மன்றத்துக்கு எதிரில். |
| 36 ஐந்தாம் ஜார்ஜ் சிலை | கோட்டைக்கு அருகில். |
| 37 திரு. வி. க. சிலை | இராயப்பேட்டையில் உள்ள சீனிவாச சன்னதித் தெரு. |
| 38 ஜீவானந்தம் | திருவொற்றியூர் நெடுஞ்சாலை (மணிக் கூண்டுக்கு அருகில்). |
| 39 போர் நினைவுச் சின்னம் | வடக்குக் கடற்கரைச் சாலையும் பேண்ட் ப்ராக்டீஸ் சாலையும் சந்திக்குமிடம். |

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## செவ்வாய்க்கிழமை, 1974 மார்ச் 12.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### ஆரோவில் நகரமைப்புக்கு நிலம்

* குறுகிய கால வினா எண் 1— திரு. துரை முருகன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டு எல்லைக்குள் " ஆரோவில் " நகர அமைப்புக்கென தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளதற்கு மேல் நிலம் வாங்கப்பட்டுள்ளதென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மேற்படி சட்டத்திலிருந்து விலக்குக் கோரி, விண்ணப்பம் ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா ?

(உ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) & (இ):—ஆம்.

(உ) " ஆரோவில் " நிறுவனத்தின் விண்ணப்பம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, இந்த அரவிந்தர் ஆசிரமத்திற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இந்த " ஆரோவில் " டவுன்ஷிப் புதுவை இராஜ்யத்திற்குள் இல்லாமல் தமிழ்நாட்டுப் பகுதியில் இருக்கின்றது. இதை மேம்பாடு செய்வதற்கு அதிகமான தொகை மத்திய அரசு கொடுத்திருக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அந்தப் பணம் நமது சர்க்கார் மூலமாகக் கொடுக்கப்பட்டதா ? அல்லது நேரடியாகக் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த ஆசிரமத்திற்குக் கொடுக்கப்பட்ட பணம் பற்றிய விவரம் நம்முடைய அரசாங்கத்திற்குக் கிடையாது. நமது அரசாங்கத்தின் மூலமாகக் கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து—தமிழ்நாடு அரசு மூலமாகக் கொடுக்கப்படவில்லையா என்ற கருத்தைச் சொல்கிறார்கள். அப்படியொரு நிலைமை இப்பொழுது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. வஹாப்: தலைவர் அவர்களே, இந்த "ஆரோவில்" நகரம் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் உள்ளவர்கள் குடியேறுகிற ஒரு மாதிரி நகரமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நல்ல கருத்தை ஊக்குவிக்கும் வகையில் நம்முடைய தமிழக அரசு அதற்கு வேண்டிய நிலங்களை இனாமாகக் கொடுக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைக் கேள்வியையொட்டி சில விவரங்களை நான் சொல்லிவிடுவது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

"The Aurobindo Society, Pondicherry, applied to the Collector of South Arcot in 1967 for the acquisition of 9,873·55 acres of patta lands and for the assignment of 472·29 acres of Poramboke lands in 9 villages in Tindivanam taluk of South Arcot District for the establishment of Aurovile Project. When the request was under examination, objections were received from the ryots of the villages and also from Thiru A. G. Balakrishnan, Ex. M.L.A. of Vanur Constituency. As the proposal involved the displacement of 3,657 families, from their ancestral homes, the Board of Revenue, in its report sent in February 1972 did not recommend the proposal for acquisition of such a large extent of lands involving displacement of the ryots in 9 villages. It was further examined by the Government. The matter was placed before the Cabinet and the Cabinet decided as follows:—

(1) No land will be acquired for the Aurovile Project under the Land Acquisition Act;

(2) No Government land will be assigned for the Aurovile Society for the purpose of this Project;

(3) The society may be free to purchase any land they like and no exemption or reduction of stamp duty will be given for these purchases;

(4) The Society may apply for exemption from the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 and its application may be considered favourably in due course and, if necessary, suitable amendment to the Act considered.



Sri Aurobindo Society, Pondicherry has stated that it is now in possession of about 2,031 acres of land.

நம்முடைய சட்ட இலாக்கா பரிசீலனை செய்து, இது பப்ளிக் ட்ரஸ்டிலே வராது, இதற்கு விதி விலக்கு கொடுக்க நியாயம் இல்லை என்ற கருத்து தெரிவித்திருப்பதால், அரவிந்த ஆசிரமத்தாரால் கொடுக்கப்பட்ட மனு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். கே. பழனிசாமி: இந்த "ஆரோவில்" திட்டம் மோசடியான திட்டம். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதால் யாருக்கும் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. ஆகவே, நம்முடைய பூமியை அவர்களுக்குக் கொடுப்பதை சர்க்கார் நிறுத்திவைக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாங்கள் கொடுப்பதாக இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்து நம்முடைய வாதத்திற்கு வலுவூட்டும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பாண்டிச்சேரி தனி மாநிலம்; தமிழ்நாடு தனி மாநிலம். தமிழ்நாட்டிலுள்ள நிலத்தை விலைக்கு வேண்டுமென்றால் வாங்கிக் கொள்ளலாம் என்று அரசாங்கம் கருத்துக் கொண்டிருக்கிறது சரியானதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது பாண்டிச்சேரி மாநிலம். தமிழ்நாட்டிலிருந்து வாங்குவதாக இல்லை. அரசியல் சட்டத்தில் தனி நபருக்குள்ள உரிமையை உபயோகித்துத்தான் வாங்கிக் கொள்ள வேண்டுமே தவிர, அப்படி வாங்கிக் கொள்ள சட்டத்திலிருந்து விதி விலக்கு கொடுப்போம் என்று நாங்கள் உறுதி சொல்லவில்லை. அந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி சொன்ன கருத்தையும் கவனத்தில் கொண்டு, இதுபோன்ற திட்டங்களுக்கு ஆதரவு கொடுப்பது சரியல்ல என்றுதான் நம்முடைய அரசு கருதுகிறது.

திரு. எம். தேவராசன்: இந்த "ஆரோவில்" திட்டம் அமெரிக்க உளவு பார்க்கும் ஏஜெண்டுகளுக்கும், உளவாளிகளுக்கும் இங்கே உதவும் திட்டம் என்று பரவலாகப் பேசப்படுகிறதே அது உண்மையா? இதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஒன்றும் அறியேன் பராபரமே! (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல் அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 371, 372 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் தள்ளி வைக்கப்படுகின்றன.

[1974 மார்ச் 1

## பொது நூலகங்கள்

* 373 வினா திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக நூலக இயக்கத்தை மேம்படுத்துவதற்குரிய திட்டங்கள் எவையேனும் ஆய்வில் உள்ளனவா ?

(இ) ஆம் எனின், விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (இ). நூலகங்களைப்பற்றி ஆலோசனைகளைக் கூறக் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு மாநில நூலகக்குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நூலகப் பணியின் நோக்கத்தை நிறைவேற்றவும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலுமுள்ள நூலக அமைப்பைச் சீர்திருத்துவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து கூறவும் அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைத்தபின் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

*374 Q.—Thiru N. K. Palaniswamy: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Tamil Nadu Government have constituted a Committee for the re-organisation of the Libraries in the State; and

(b) if so, the composition of the Committee?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்குழு கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டதாகும்—

(1) திரு. வி. என். சுப்பராயன் (முன்னாள் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர்)—தலைவர்.

(2) திரு. பொன்னையா, முன்னாள் நூலக தனி அலுவலர் மற்றும் பெற்றோர்—ஆசிரியர் கழகச் செயலர்—உறுப்பினர்.

(3) திரு. சௌரிராயன், முன்னாள் தலைமை ஆசிரியர், கிறிஸ்துவக் கல்லூரி உயர் நிலைப்பள்ளி, சென்னை—உறுப்பினர்.

(4) திரு. டாக்டர் லெட்சுமணன் செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்—உறுப்பினர்.

(5) கன்னிமாரா பொது நூலகத்தின் நூலகர்—உறுப்பினர் மற்றும் செயலாளர்.



1974 மார்ச் 12]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இந்த நூலக ஆணைக்குழுக்கள் நூலகங்களுக்கு நூல்களை வாங்கும்போது அந்தந்தப் பதிப்பாசிரியர்கள் அணுகுகின்ற வகையில் அவர்களுடைய பட்டியலை வாங்கி நூல்களை வாங்கிக்கொள்கிறார்கள். ஆகவே தரமான நூல்கள் நூலகங்களில் இடம் பெறவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே நூல்களை வாங்குவதற்கென்று அரசாங்கமே குழு ஒன்றை அமைத்து நாட்டிலே வெளியாகும் அத்தனை நூல்களையும் பரிசீலனை செய்து, நல்ல நூல்களைத் தெரிந்தெடுத்து, பொதுப்பட்டியல் தயாரித்து, நூலகங்கள் நூல்கள் வாங்கும்போது இந்தப் பட்டியலிலிருந்துதான் வாங்கவேண்டு மென்ற ஒரு முறை வகுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதையெல்லாம்பற்றி ஆராய்வதற்காகத்தான் புதிய குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நூலகங்களை எப்படி ஏற்படுத்தலாம், நூல்களை வாங்குவது எப்படி, நூல்களை வாங்குவதற்கு எத்தனை சதவீதம் ஒதுக்கலாம், நிர்வாகத்திற்கு எவ்வளவு சதவீதம் ஒதுக்கலாம், நிதி நிலையை எப்படிச் சீர்படுத்தலாம் என்பதை ஆராய்ந்து யோசனை கூறுவதற்குக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அக்குழுவின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. அந்த அறிக்கை வந்த பிறகு அதனையொட்டி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. என். கே. பழனிசாமி : என்ன என்ன முறையில் நூலகங்களைச் சீர்செய்ய வேண்டுமென்பது குறித்து இக்குழுவிற்குக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படியானால் அதனுடைய விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற அமைப்பு முறைகளில் மாற்றம் செய்யலாமா, இப்பொழுது மாவட்ட ஆணைக்குழுவிற்குக் கொடுக்கப்படுகிற தொகை பெரும்பாலும் நிர்வாகச் செலவுக்குத்தான் போகிறது, புத்தகங்கள், மாகஸின்கள் முதலியவை வாங்கப் போதுமானதாக இல்லை என்பதைக் கருத்திற்கொண்டு, குறிப்பிட்ட விழுக்காடு புத்தகங்கள் வாங்கப் பயன்படுத்த வேண்டும் என்று வரையறை செய்ய இயலுமா, புதிய நூலகங்களை ஏற்படுத்துவதனால் எந்த அடிப்படையில் ஏற்படுத்தலாம் என்று இப்படிப் பல்வேறு நிலைமைகளை ஆராய்ந்து அறிக்கை கொடுக்கும்படி அந்தக் குழு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தக் குழுவானது பல மாவட்டங்களுக்கும் சுற்றுப் பயணம் செய்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் வந்திருக்கிறது. இங்கேயிருக்கிற 1948-ம் ஆண்டு லோகல் லைப்ரரீஸ் சட்டத்தை கன்னியாகுமரி பகுதிக்கும் விஸ்தரிக்கும் உத்தேசம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா ? அப்படியானால், இந்தச் சட்டத்தை உடனடியாக அங்கு கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா ?

[1974 மார்ச் 12

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அது பற்றியும் அந்தக் குழுவின் அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அது வந்தபிறகு ஒத்த நிலையை தமிழகம் முழுவதும், கன்னியாகுமரி உட்பட, கொண்டுவர வேண்டும் என்பது அரசாங்கத்தின் எண்ணமாகும். குழு அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை கொடுத்தபிறகு அதன் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, அரசாங்கம் நியமித்திருக்கிற அந்தக் குழுவை எதிர்த்து அங்கேயிருக்கக்கூடிய பணியாளர்கள் அரசாங்கத்திற்கு ஏதாவது முறையீடு செய்திருக்கிறார்களா ? அப்படியானால், அந்த முறையீட்டின்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறையீடு ஏதும் வந்ததாகத் தெரியவில்லை.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, the financial position of certain libraries like the one in Dharmapuri is very meagre and they are not able to pay even to the staff with that amount. There are some bilingual areas and they have to buy books in two or three languages. May I know from the Hon. Minister for Education and Tourism whether he would consider the proposal of giving more funds for the libraries in such areas so as to enable them to buy more number of books in two or three languages?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே சர்ச்சார்ஜ் மூன்று காசாக இருந்தது. ஈட்டுத் தொகையாக மூன்று காசு அரசு கொடுத்து வந்தது. இது ஐந்து காசு உயர்த்தப்பட்டது. அரசும் ஈட்டுத்தொகையாக ஐந்து காசாகத் தருகிறது. ஏற்கெனவே ஆறு காசு கிடைத்த இடத்தில் பத்து காசு கிடைப்பதால், ஒவ்வொரு மாவட்ட நூலகக் குழுவிற்கும் நிதி வசதி கொஞ்சம் பெருகியிருக்கிறது. ஆனால், இந்த நிதி பெரும்பாலும் நிர்வாகச் செலவிற்குச் சென்று விடாமல் ஒரு குறிப்பிட்ட பகுதி நூல்கள் மற்றவைகள் வாங்குவதற்குச் செல்ல வேண்டுமென்ற நோக்கத்தை நிறைவுசெய்யும் வகையில் இந்தக் குழுவினுடைய யோசனை கோரப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: மக்கள் கல்வி சதவிகிதம் அதிகரிக்கும்பொழுது நூலகங்களினுடைய தேவை மிக அதிகமாகிறது. ஆகவே, நூலகங்களை ஏதோ குறிப்பிட்ட இடங்களில் மேற்கொள்ளாமல், பரவலாக நூலகங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாக இருக்கிறது என்ற முறையிலே—அரசாங்கமே எல்லாம் செய்வது எளிது அல்ல—ஆங்காங்கு இருப்பவர்கள் தனியார்கள் யாராவது நூலகங்கள் ஆரம்பித்தால் அவர்களுக்கு ஏதாவது சர்க்காரிலிருந்து உதவிகள் செய்து, அவர்களை ஊக்குவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?



1974 மார்ச் 12]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறைந்தது 5,000 மக்கள் இருக்கிற இடத்தில் கிளை நூலகங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் இப்பொழுது நூலகங்களின் கிளைகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்படுகின்றன. தனியார் நூலகங்களை வைப்பதற்கு முயற்சி செய்ய முன்வருவார்களேயானால் அதைப்பற்றி அரசாங்கம் யோசிக்கும்.

திரு. கோ. இளங்கோவன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது செலவினங்களைச் சரிக்கட்ட ஸர்சார்ஜ் 3 பைசாவிலிருந்து 5 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது சரியாக வசூலிக்கப்படுகிறதா என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சரியாக வசூலிக்கப்பட வேண்டும். மற்ற சர்சார்ஜ் எப்படி வசூலிக்கப்பட வேண்டுமோ அதே மாதிரி தான் இதுவும் வசூலிக்கப்பட வேண்டும். அதிலே ஒரு குறைபாடு இருந்து வருகிற காரணத்தினால் வருவாய்த் துறையின் மூலம் வசூலிக்கப்படுவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. த. சோலையா : இந்த நூலகங்கள் ஆணைக் குழுவிற்கு, அரசாங்கம் தரமான நூல்களை வாங்குவதற்கு ஏதாவது யோசனை கூறியிருக்கிறதா ? சில நூலகங்களில் நல்ல நூல்கள் இல்லை. ஆகவே, பேரறிஞர் அண்ணா போன்ற பேரறிஞர்கள் எழுதிய நூல்கள் பல இருக்கின்றன. அவர்கள் பேசிய பேச்சுக்களும் நூலாக வெளிவந்திருக்கின்றன. அவைகளெல்லாம் நூலகங்களில் இருக்கவேண்டும் என்று இந்த ஆணைக் குழுவிற்கு அரசு ஏதாவது யோசனை கூறுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஒவ்வொரு மாவட்ட அளவிலும் அமைக்கப்பட்டிருக்கிற நூலகங்கள் ஆணைக்குழு பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு குழுவாக அமைந்திருக்கிறது. நூல்களைத் தேர்ந்தெடுக்கின்ற முழுப் பொறுப்பு அந்தக் குழுவினைச் சார்ந்ததாக அமைந்திருக்கிறது. அந்த வகையில் தான் எந்த எந்த அளவுக்கு இந்தக் குழுவை அமைக்கலாம் அல்லது மாநில அளவில் ஒரு பொதுக் குழுவை அமைத்து அது ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் நூல்களை மாநில அளவில் வாங்கித் தர இயலுமா, மாவட்டக் குழுக்களுக்கு எந்த அளவுக்கு அதிகாரம் வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் ஆராயவேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் புதுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டம் 1948-ல் ஏற்படுத்தப்பட்ட சட்டம். இவ்வளவு காலமாக அதை அமுல் நடத்துவதில் ஏற்பட்ட அனுபவங்கள் அடிப்படையில் என்னென்ன மாற்றங்கள் தேவைப்படுகின்றன. எப்படி எப்படி மாற்றி அமைக்க வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் யோசனைகள் வந்த பிறகு இதைச் சீர்திருத்தி அமைக்கலாம் என்ற கருத்தில் தான் அரசாங்கம் இருந்து வருகிறது.

திரு. கே. வகாப் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, நூலகக் குழுவினுல் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நூல்கள் சில நன்ருக அமையவில்லை. அந்தக் குறைபாடு எல்லா ஊர்களிலும் வளர்ந்திருக்கிறது. இந்த விஞ்ஞான யுகத்தில் விஞ்ஞான சம்பந்தமான நூல்கள் அங்கெல்லாம் அதிகமாக இடம் பெறவில்லை. அதேமாதிரி இஸ்லாமிய இலக்கியங்கள் போன்ற நூல்களும் அங்கே இடம் பெறவில்லை. ஆகவே, விஞ்ஞானத் துறையிலும், இஸ்லாமிய இலக்கியத் துறையிலும் மேம்பாடு அடைந்த சில உறுப்பினர்களை இந்த நூலகக் குழுவில் சேர்த்து அவர்களுடைய நல்ல ஆலோசனைகளைக் கேட்டு இம்மாதிரியான நல்ல நூல்களை நூலகங்களில் இடம் பெறச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட வகையிலும் ஆலோசனை சொல்வதற்குத் தகுந்த குழு அமைக்கப்பட்டிருக்கிறது. திரு வி. என். சுப்பராயன் அவர்கள் சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுத் தலைவராகப் பல ஆண்டு காலமாகப் பணியாற்றியவர் மிகச் சிறப்பான முறையில் செயலாற்றிக்கொண்டு வருகிருர்கள். அதுபோன்று திரு. பொன்னையா அவர்கள் ஏற்கெனவே கல்வித் துறையிலே அதிகாரியாக இருந்து நூலகத் துறையிலே பல்லாண்டு காலமாக இருந்து வருகிருர்கள். டாக்டர் லக்ஷ்மணன் செட்டியார் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சிறந்த பேராசிரியராக இருந்திருக்கிருர்கள். அவர் இந்தத் துறையிலும் சிறப்பாக இருப்பவர். கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் முன்னுள் தலைமை ஆசிரியர் திரு சவுரிராயன் அவர்களும் இந்தக் குழுவிலே இடம் பெற்றிருக்கிருர்கள்.

எந்தெந்த வகையிலே எவ்வளவு தூரம் சிறப்பான முறையிலே நூல்களைத் தேர்ந்தெடுக்க முடியுமோ, அதற்கான வழிவகைகளைக் காணுவதற்கும், அது சம்பந்தமாக யோசனைகளைச் சொல்வதற்கும் இந்தக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அறிக்கை விரைவிலே வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அறிக்கை வந்தபிறகு அதன் அடிப்படையில் நாம் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

திரு. கு. காமாட்சி : நூலகங்கள் சீரமைப்புக் குழு திருச்சியில் இருக்கிற பிராந்திய பொறியியல் கல்லூரியில் இருக்கிற நூலகத்தைப் பார்வையிட்டிருக்கிறதா ? அதன் மீது கருத்து தெரிவித்திருக்கிறதா ? இல்லாவிட்டால் பார்வையிடச் செய்து, அதனுடைய கருத்தை ஆராய்ந்து மாவட்டந்தோறும் அந்த மாதிரி நூலகங்களை அமைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் குழு அந்த நூலகத்தைப் பார்வையிட்டதா, இல்லையா என்பதற்கான தகவல் இப்பொழுது இல்லை. ஆனல் பல்வேறு மாவட்டங்களுக்குச் சென்று ஆங்காங்கு உள்ள பொது மக்களுடனும், நூலகங்களுடனும் தொடர்பு கொண்டு, தலைமை ஆசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள்., கல்லூரியிலிருக்கிற நூலகத்தினர் ஆகியவர்களைச் சந்தித்து, யோசனைகளைப் பெற்று வருகிறது.





திரு ஜே. ஜேம்ஸ் : 1948-ஆம் ஆண்டுச் சட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமுலில் இல்லாத காரணத்தினுல், அரசு நிதி உதவி இப்பொழுது அங்கே கொடுப்பதில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆகவே, புதிய ஏற்பாடு வரும் வரையிலும், இடைக் காலத்தில் அரசு உதவி அளிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றித் தனியாகக் கவனிக்க வேண்டும். விரைவிலே அந்த அறிக்கை வந்தவுடனே அதையும் சேர்த்துக் கவனிக்க வேண்டும் என்று அரசாங்கம் எண்ணிக்கொண்டிருக்கிறது. இடையிலே என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் அறிந்து சொல்லலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நூலகச் சீரமைப்பு, ஆணைக் குழு அறிக்கை அனுப்புவதற்கு ஏதாவது கால வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறதா ? அறிக்கை அனுப்புவதைக் கொஞ்சம் துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூன்று மாத காலத்திற்குள் அனுப்ப வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிருேம். இன்னும் சில இடங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிற காரணத்தினுல் விரைவிலே அந்த இடங்களுக்குச் சென்று வந்த பிறகு அறிக்கை தருகிருேம் என்று குழுவின் தலைவர் தெரிவித்திருக்கிருர்.

* 375. வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் லோக்கல் லைப்ரரி அதாரிட்டியால் இந்த நிதியாண்டில் புதிதாக எந்தெந்த ஊர்களில் நூலகங்கள் திறக்கப் பட்டுள்ளன ?

(இ) அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழுவால் இந்த நிதியாண்டில் புதிதாக நூலகங்கள் ஏதும் திறக்கப்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தி.சி.ஆ. சிவப்பிரகாசம் : இந்த நிதி ஆண்டில் எந்தெந்த ஊர்களில் புதியதாக நூலகங்கள் திறக்கப்பட இருக்கின்றன? ஒரு ஆண்டில் எத்தனை நூலகங்கள் திறக்கப்பட வேண்டும் என்ற அளவுக்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வருகின்ற நிதி ஆண்டில்
எவ்வளவு திறக்கப்பட வேண்டும் என்ற விவரங்களைப் பற்றிய குறிப்பு
இங்கே இல்லை. இவ்வளவுதான் திறக்கப்பட வேண்டும் என்று கட்டாய
விதி எதுவும் இல்லை. இந்த நூலகக் குழு தன்னிடத்தில் இருக்கிற நிதி
வசதி, ஆதாயம் இவைகளை அடிப்படையாக வைத்து, அவ்வப்பொழுது
முடிவு எடுத்து, நூலகங்கள் திறக்கப்படுகின்றன. நிதி வசதி இவ்வளவு
பெற்று நூலகங்களுக்கு இவ்வளவு செலவழிக்கலாம், நூல்களுக்கு இவ்வ
ளவு செலவழிக்கலாம் என்று குறிப்பு வந்ததற்குப் பிறகு ஒரு வரைமுறை
யான திட்டவட்டமான முறையினை நாம் மேற்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் : இந்த நூல் நிலையங்களி
லுள்ள புத்தகங்களைப் பயன்படுத்திக்கொள்ள மக்களுக்குப் போதிய
அவகாசம் இல்லை. ஆகவே, மூவிங் லைப்ரரீஸ், தெருத்தெருவாக வண்டி
களிலே புத்தகங்களைக் கொண்டு போய் எல்லா ஜனங்களும் படிப்பதற்கான
வகையில் வழங்கும் ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்னை, கோவை, வேறு
சில மாவட்டங்களில் இயங்கும் நூலகங்கள் இருந்து வருகின்றன. அம்
மாதிரி வேறு சில மாவட்டங்களிலும் நிதி வசதியைப் பொறுத்து அதை
விரிவுபடுத்தலாம் என்ற எண்ணமும் அரசுக்கு இருந்து வருகிறது.

திரு. கா. காளிமுத்து : புதியதாக நூலகங்களைத் திறப்பதோடுகூட, நூல
கங்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற உணர்வினைப் பொதுமக்களுக்கு
ஏற்படுத்துவதற்கான சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசாங்கத்திடம்
இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்
பொழுது பல மாவட்டங்களில் நூலகங்களில் ஒரு ஆண்டுக்கு அதிகமாக
வருகை தந்தவர்களுக்கும், அதிகமாக நூல்களைப் படித்தவர்களுக்கும் சில
பல பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சில மாவட்டங்களில்
அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பள்ளியிலிருக்கும்போதே நூல்களைப்
படிக்கின்ற பயிற்சி தந்தால் மேலும் நூல்களைப் படிக்க வேண்டும் என்று
ஆர்வம் பொது மக்களுக்கு எதிர்காலத்தில் ஏற்படும். நூல்களைப் படிக்க
வேண்டும் என்ற பழக்கத்தைப் பள்ளிப் பருவக்காலத்திலிருந்தே, கல்லூரிப்
பருவக் காலத்திலிருந்தே மேற்கொள்ளச் செய்ய வேண்டும். நூல்
களைப் படிக்கின்ற ஆர்வம் 25, 30 வயதில் திடீரென்று வந்துவிடாது.
ஆகவே, பள்ளிகளிலேயே நூல்களை அதிகமாகப் படிக்கும் ஆர்வத்தை
மாணவர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான்
நூலகங்களை மேலும் ஊக்குவிக்கும் முறையில் சில பல ஏற்பாடுகள்
செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. ஜி. இராமசாமி : ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திலும் நூலகங்களை
ஏற்படுத்த ஊராட்சி மன்றத்தின் நிதியிலிருந்து பணத்தைச் செலவு
செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி ஊராட்சி மன்றத்
திலேயே ஏற்பாடு செய்வது கடினம். பல ஊராட்சி மன்றங்களில் ஊராட்சி
மன்றப் பணிகளுக்கே போதுமான அளவுக்கு நிதி வசதி இல்லாமல்,
அந்த அளவுக்கு நிதி வசதியைப் பெற்றுத் தர வேண்டும் என்பது
மற்றொரு பக்கம் இருந்து வருகிறது. இருந்த போதிலும் இந்த நிதி
வசதியைப் பெருக்குவதற்கும் என்ன முறைகளைக் கையாளலாம் என்று
ஆராய்ந்து வருகிறோம். அறிக்கை வந்ததற்குப் பிறகு அந்த அறிக்கையில்
கண்டுள்ள கருத்திற்கு இணங்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

மருத்துவமனை ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரைகள்.

* 376—வினா—திரு. இராம. அரங்கண்ணல் : மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா :—

மருத்துவ மனைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுக்
கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் பற்றி நடவடிக்கை எடுக்க அரசு
செய்துள்ள ஏற்பாடு என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு மருத்துவ மனைகளுக்கான
ஆலோசனைக் குழுக்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட
மாவட்ட மருத்துவ அதிகாரிகளால், அத்தீர்மானம் ஒவ்வொன்று குறித்
தும் அவரது குறிப்புரைகளுடன், சுகாதாரப் பணிகள் குடும்பநலத் துறை
இயக்குநருக்கும் மருத்துவக் கல்வி இயக்குநருக்கும் அனுப்பப்படு
கின்றன. இத்தீர்மானங்களைச் செயல்படுத்துவது இயக்குநரின் நிதி வழங்கு
அதிகாரங்களுக்குள் இருந்தால், நிதி வசதிக்கு உட்பட்டு இன்றியமையாத
தேவை, வசதி அடிப்படையில் அவற்றிற்கு அனுமதி வழங்கப்படுகிறது.
அவர்களது நிதிவரையறைகளுக்கு மேற்பட்ட தீர்மானங்கள், பரிசீலனைக்
காகவும் ஒப்புதல் வழங்குவதற்காகவும் அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இந்த ஆலோசனைக்குழு
சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்து அந்தக்
குழு அமைக்கப்படுகிறதா அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லாமலே
எப்படி அமைக்கப்படுகிறது?
அமைக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த ஆலோ
சனைக் குழு ஒரு வட்டத்தில் அமைந்
திருக்குமானால் அந்தத் தொகுதியிலுள்ள ஒரு சட்டமன்றத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அங்குள்ள நகர
மன்றத் தலைவர், சமூக சேவையில் ஈடுபட்டுள்ள ஒரு பெண்மணி, மருத்துவத்
துறை அதிகாரி, மேலும் பல்வேறு அமைப்புகளிலுள்ள இரண்டு உறுப்பி
னர்கள் ஆகியோர் அடங்கிய 6 அல்லது 7 பேர்களைக் கொண்டு அமைக்கப்
படுகிறது. அந்தக் குழுவை யார் அமைக்க வேண்டுமென்று விதி இல்லை,
அமைக்கப்படும் முறை இப்படி இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டி
ருக்கிறது.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன் : தலைவரவர்களே, இந்த அடிப் படையில் எல்லா அரசு மருத்துவமனைகளிலும் இப்படிப்பட்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறதா ? இப்படி அமைக்கப்பட்ட குழு முறையாகச் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் குழு அமைப்பதே மருத்துவ மனைகளைக் கண்காணிப்பதற்குத்தான். அப்படி இருக்கும்போதே குழுவைக் கண்காணிக்கவேண்டுமென்றால் என்ன செய்வது? பொது நலனில் அக்கறை யுள்ளவர்கள் பொதுமக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற ஆர்வத் தால் முன்வந்து, அந்தப் பணியைச் செம்மையாகச் செய்யவேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி : சார், இந்த ஆலோசனைக் குழுவில் அந்தந்த வட்டாரத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். எல்லா ஆலோசனைக் குழுக்களிலும் சட்டமன்ற உறுப்பினர் கள் இடம் பெற்றிருக்கிறார்களா? இல்லை என்றால் இனிமேல் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று உத்திரவிட அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கடந்த ஓராண்டு அல்லது ஈராண்டு காலமாக அமைக்கப்படுகின்ற ஆலோசனைக் குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள் என்று எண்ணு கிறேன். சில இடங்களில் ஏற்கனவே உள்ள உறுப்பினர்கள் இடம் பெற்றிருப்பதால் புதிய உறுப்பினர்கள் இடம் பெறவில்லை. (குறுக்கீடு). திரு. வடிவேல் அவர்கள் பெயர் இடம் பெறவில்லை என்று சொல்கிறார்கள். தன்னுடைய பெயரைச் சேர்த்துக் கொள்வதற்கு இப்படி ஒரு கேள்வி வரும்போதுதான் சொல்லவேண்டும்என்றில்லை. சீர்காழியில் இப்படி ஒரு ஆலோசனைக் குழு அமைக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்யும்போது தன்னுடைய பெயரையும் சேர்த்துக் கொள்ளலாம். இனி அமைக்கப்படக்கூடிய குழுக்களில் அந்தந்த வட்டார சட்டமன்ற உறுப்பினர் இடம் பெறுவார். அவர் எந்தக் கட்சியாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலை இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : அமைச்சரவர்கள் அந்தந்த வட்டாரத் தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் குழுவில் இடம் பெறுவார்கள் என்று சொன்னார்கள். எங்கள் பகுதியில் உள்ள மருத் துவமனையில் அப்படி ஒரு குழு இருப்பதாகவே தெரியவில்லை. அந்தக் குழுவில் எங்களை எல்லாம் சேர்த்துக் கொண்டால் தக்க ஆலோசனைகளைச் சொல்லத் தயாராக இருக்கிறோம். ஏற்கனவே போடப்பட்ட குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பல் ஆலோசனைகள் ஓராண்டு, இரண்டாண்டு காலமா கியும், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கின்றன. அப்படி இருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கனம் அங்கத்தினர் அவர்களே, அதற்கான காரணத்தையும் சொன்னார்கள். குழு இருப்பதாகவே தெரிய வில்லை என்றார்கள். அதுவேதான் காரணமாக இருக்கலாம்.





THIRU K. S. KOTHANDARAMIAH: In many places there is stereo-typed list prepared half a century back. No new name is included and old names removed Will the Hon. Minister give an assurance that he would take action so that the list is prepared every year, so that new people are given a chance including MLAs?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்தக் குழு ஏறத்தாழ மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்படுகிறது என்று எண்ணுகிறேன். சில இடங்களில் உள்ள குழுக்களின் பரிந்துரைகளை மாவட்ட ஆட்சித் தலைவரும் மருத்துவ அதிகாரியும் ஏற்று நடைமுறைப்படுத்து வதற்காக அரசுக்கு அனுப்பி வைக்கிறார்கள். அந்தப் பரிந்துரைகளைச் செயல் படுத்த முனையும்போது பல்வேறு துறைகளுக்கு "பிரசாசிங்குக்காக" அவைகளை அனுப்பி வைக்கவேண்டியிருக்கிறது. அதிலே கூடக் கால தாமதம் ஆகலாம். இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் கவனித்து விரைவு படுத்த தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனையில் கடந்த இரண்டு ஆண்டு காலமாக இப்படிப்பட்ட குழு இயங்கவில்லை. அதற்குக் காரணம் குழுவின் உறுப்பினர் பட்டியலை மாவட்ட மருத்துவ அதிகாரி கலெக்டருக்கு அனுப்பவதும், கலெக்டர் மருத்துவ அதிகாரிக்கு அனுப்புவதுமாக இருக் கிறது. குழு அமைக்கப்படுவதில் இப்படிக் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே மருத்துவ அதிகாரி அங்கீகரித்த பின்னால் கலெக்டருக்குப் போகாமல் டி.எச்.எஸ்-க்கு வந்தால், உடனடியாக அதை அனுமதிப்பதற்கு ஏற்பாடு செய்துவிடலாம் ; காலதாமதம் தவிர்க்கப்படும். அதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த ஆலோசனை பரிசீலனை செய்யப்படும்

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, சாதாரணமாக இம்மாதிரியான ஆலோசனைக் குழுக்களிலிருந்து அனுப்பப்படும் தீர்மானங்களை அரசு நிறைவேற்றுவதில்லை என்ற ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. இந்தக் குழு உண்மையிலேயே நல்லமுறையில் செயலாற்ற வேண்டுமென் றால் குழுவின் சிபாரிசுகளை அரசு ஏற்றுக்கொண்டு செயல்படுத்தவேண்டும். அதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்தக் குழுக் கள் அன்றாட நடைமுறையில் மருத்துவ மனைகள் எப்படி இயங்கவேண்டு மென்று ஆலோசனைகளைச் சொல்லுகின்றன. டாக்டர்களும், செவிலியர் களும், மற்றவர்களும் சரியாகப் பணியாற்றுகிறார்களா இல்லையா என்று கண்காணிப்பது, நோயாளிக்குத் தேவையான வசதிகள் கிடைக்கின்றனவா, உரிய நேரத்தில் மருந்துகள் கொடுக்கப்படுகின்றனவா சிகிச்சை நல்ல முறையில் நடைபெறுகிறதா என்பன போன்றவைகளைக் கண்காணிப்பது

மருத்துவ மனையில் போதுமான அளவுக்குத் தண்ணீர், விளக்கு வசதிகள் இருக்கின்றனவா என்பதைக் கண் காணிப்பது- இவை போன்ற பணிகளை இந்தக் குழுக்கள் மேற்பார்வையிடுகின்றன. அவைகளிலே உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினால் மருத்துவ அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். ஆனால் ஒரு மருத்துவ மனைக்குப் பெரிய கட்டடம் வேண்டுமென்று சொன்னால், அந்த சிபாரிசு அரசுக்கு வருகிறது. அரசாங்கத்தின் நிதிநிலைமையைப் பொறுத்து, தலைமை மருத்துவ அதிகாரியைக் கலந்தாலோசித்து அந்த சிபாரிசை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படும். நான் ஏற்கெனவே குறிப்பிட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி, அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படாமல் எங்காவது இருக்குமானால், அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## பி.ஐ.எம். பட்டதாரிகள்.

***377** வினா—திரு நா. வெ. குருசாமி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பாளையங்கோட்டையிலுள்ள அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற பி.ஐ.எம். ( B.I.M. ) பட்டதாரிகளுக்கு உடனடி வேலைவாய்ப்பு வழங்க அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை யாது?

(இ) பி.ஐ.எம். பட்டதாரிகளில் தற்போது எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) பாளையங்கோட்டையிலுள்ள அரசு இந்திய முறை மருத்துவக்கல்லூரியிலும் அதைச் சார்ந்த மருத்துவ மனையிலும், சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா அரசு இந்திய முறை மருத்துவ மனையிலும், அரசு பி.ஐ.எம். பட்டதாரிகளை நியமித்து அவர்களுக்கு ஏற்கெனவே வேலை வாய்ப்பளித்துள்ளது. எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும், பத்து வட்ட மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவப் பிரிவுகள் திறக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் ஒரு பி.ஐ.எம் பட்டதாரி உதவி மருத்துவ அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் வேலைவாய்ப்பு அளிக்கும் நோக்கத்துடன் வருடத்திற்கு இருபதாக வட்டம் வட்டமல்லாத மற்றுமுள்ள நூறு மருத்துவமனைகளில் சித்த மருத்துவப் பிரிவுகள் திறப்பதற்காகத் தற்போதைய ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது. அரசின் அறிவுரைக்கேற்ப, ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும், கோயில்களும், தாங்கள் நடத்தும் சில மருத்துவமனைகளில் பி.ஐ.எம். பட்டதாரிகளை நியமித்துள்ளனர்.

(இ) **31-12-1973**-ல் உள்ளபடி, **45** பேர்கள்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, ஆண்டுதோறும் எத்தனை பி.ஐ.எம். பட்டதாரிகள் வெளிவருகிறார்கள்.?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒவ்வொரு ஆண்டும் சேர்க்கப்படுகிற வர்கள் தங்கள் முழு படிப்பையும் முடித்து வெளிவர ஐந்தாண்டு காலம் ஆகிறது. சில மாணவர்கள் பாதியிலேயே நிறுத்திவிடக்கூடிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. ஆண்டுதோறும் படிப்பை முடித்து வெளி வருகிறவர்கள் ஏறத்தாழ **30** பேர்கள் என்று கருதுகிறேன். முழு குறிப்பு என்னிடம் இல்லை.

திரு. த. சோலையா : தலைவரவர்களே, இந்த இந்திய மருத்துவ முறை பயிற்சி பெறுவதற்கு தேர்ந்தெடுக்கப்படுகின்ற மாணவர்களின் கல்வித் தரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பின்னால், கல்லூரியில் புகுமுக வகுப்பில் தமிழில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அது பற்றி தனிக்கேள்வி போட்டால் விபரம் தெரிவிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சார் இப்போது பி.ஐ.எம். பட்டம் பெற்றவர்களுக்கு மேல்பட்டப் படிப்புப் படிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா? இருக்கிறதென்றால் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பி. ஐ. எம். பட்டதாரிகள் எம்.டி. பட்டம் பெறுவதற்கு சித்த மருத்துவத் துறையிலும் குண படிப்புத் துறையிலும் வகுப்புகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு துறையிலும் **10** மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இப் போது வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது **45** பேர்கள் வேலையை எதிர்பார்த்து இருப்பதாகக் கூறினார்கள். இந்தப் படிப்பு முடிந்ததும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வேலை வாய்ப்பை அடிப்படையாக வைத்துத்தான் படிக்க வேண்டுமென்று கருதினால், சேர்த்துக் கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிவரும். அப்படிக் குறைக்கும் போது தனிப்பட்ட முறையிலே அவர்கள் மருத்துவப் பணியாற்றும் வாய்ப்பு இருக்காது. அரசாங்கம் தன்னுடைய சக்திக்கேற்ற முறையிலே வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது. மற்றவர்கள் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற முறையிலே தாங்களாகவே வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ள வேண்டும். இந்தப் படிப்பை முடித்தவர்கள் இப்போது **45** பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதே மாதிரி அலோபதி முறையில் பயிற்சி பெற்றவர்கள் ஏறத்தாழ **750** பேர்கள் வேலைக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மு. ப. 9–30)

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, இந்த இந்திய மருத்துவப் பட்டதாரிகளுக்கு அரசாங்க மருத்துவ மனையில் வேலை கொடுப்பது சாத்தியமில்லை என்றாலும், அவர்கள் தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழில் செய்ய அரசாங்கம் உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: டாக்டராக இருந்தாலும், இன்ஜினியராக இருந்தாலும், வேறு தொழில் வல்லுநராக இருந்தாலும் தனிப்பட்ட முறையில் தொழில் செய்ய மத்திய அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கடன் விரைவில் கிடைக்க அரசு உதவி செய்யும்.

திரு. நா. வீராசாமி: இந்திய மருத்துவக் கல்வியைக் கற்றுக் கொடுக்கிற இடம் பாளையங்கோட்டையாக இருப்பதால் அதற்கு வரவேண்டிய முக்கியத்துவம் வரவில்லை. அதற்குக் கிடைக்க வேண்டிய விளம்பரம் கிடைக்கவில்லை. சென்னை நகரில் அப்படிப்பட்ட கல்லூரியை வைத்தால் இந்திய மருத்துவக் கல்வியின் தரம் மேலும் உயர வாய்ப்பிருக்கும். அப்படிப்பட்ட யோசனையை அரசாங்கம் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நாற்றங்காலில் விதைத்துத்தான் இன்னொரு இடத்தில் பிடுங்கி பயிர் நடப்படுகிறது என்றாலும் பாளையங்கோட்டையில் இந்தக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டு 5 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆகவே, கதிர்விடுகிற பயிராகிவிட்டதால் இப்போது பிடுங்கி வேறு இடத்தில் நட முடியாது.

## கோவையிலுள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனை.

*378 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவையிலுள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனையில் புற்று நோய் சிகிச்சைப் பிரிவு உள்ளதா?

(இ) அம்மருத்துவ மனைக்கு அரசால் அளிக்கப்படும் சலுகைகள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) மருத்துவ மனையைப் பராமரிக்க தொடர் மானியமும், கட்டிடங்களைத் கட்டுவதற்காகவும், இயந்திரங்கள் கருவிகள் முதலியன வாங்குவதற்காகவும் தொடரா மானியமும் இந்த நிறுவனத்திற்கு அரசு வழங்கியுள்ளது.

திரு. எ. சுப்பிரமணியம்: குப்புசாமி நாயுடு மருத்துவ மனை பெண்கள் மருத்துவ மனை. ஆண்களுக்கு அதிகமாக புற்றுநோய் ஏற்படுகிற காரணத்தினால், கோவையில் இருக்கிற இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் ஆண் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருவார்களா?



மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அங்கத்தினர் சொல்கிற விவரம் தவறு. குப்புசாமி நாயுடு மருத்துவ மனையில் உள்ள கான்சர் வார்டில் 36 படுக்கைகள் இருக்கின்றன என்றால் அவற்றில் ஆண்களுக்கு 18 படுக்கைகள். பெண்களுக்கு 18 படுக்கைகள். பெண்களுக்கு மட்டும் என்ற முறை இல்லை. ஆண்களுக்கும் இந்தப் பணி அங்கே நடைபெறுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: கோவையிலுள்ள குப்புசாமி நாயுடு மருத்துவ மனையில் செலவு அதிகமாகிற காரணத்தினால், அங்கேயே இன்னும் கொஞ்சம் அதிகமாக தர்ம வார்டு படுக்கைகளை அதிகப்படுத்த அரசு சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசாங்க மருத்துவ மனைகளைவிட இன்னும் அதிகக் கவனத்தோடு நடைபெறுவது தனியார் மருத்துவ மனை தான். சிகிச்சை வழங்கப்படுகிறபோது சிறப்பாகக் கவனம் செலுத்துவதற்கு வசதி இருக்க வேண்டுமென்றால் படுக்கை எண்ணிக்கைகளை அதிகப்படுத்தக் கூடாது. இன்றைக்கே 250 படுக்கைகளில் 141 படுக்கைகள் இலவசப் படுக்கைகளாக அங்கே இருக்கிறபோது இதை அதிகப்படுத்துங்கள் என்று கேட்பது அவ்வளவு ஏற்புடையதாக இருக்காது என்று நான் அஞ்சுகிறேன்.

## *Primary Health Centre, Karingal.*

*379 Q. THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to convert the existing Primary Health Centre at Karingal in Kanyakumari district into a Dispensary?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: உறுப்பினர் அவர்கள் கரிங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக மாற்றும் உத்தேசம் அரசிடம் உள்ளதாவென கருத்துப்பட வினவியுள்ளார். அது குறித்து தற்போது அரசிடம் செயற் குறிப்பு எதுமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, அங்கே வேறு மருத்துவ மனை எதுவும் இல்லாத காரணத்தினால், மீண்டும் இதைப் பரிசீலனை செய்து இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசாங்க மருத்துவ மனையாக எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இது ஒவ்வொரு ஒன்றியத்திலும் 6 படுக்கை வசதிகளுடன் ஆரம்பச் சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் வருகிறது. ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசாங்க மருத்துவ மனையாக எடுத்துக்கொண்டால் மற்ற 378 பேர்களும் அப்படி எடுத்துக்கொள்ளும்படி கேட்பார்கள். நிதி வசதி

[1974 மார்ச் 12

## திருப்புடைமருதூர் அரிசனக் குடியிருப்பு.

*380 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்தில் உள்ள அரிசனங்களுக்குக் காலனி வசதியும், ரோடு வசதியும் செய்து கொடுப்பதற்கான செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம், எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) வீட்டு மனைக்காக நிலங்கள் ஆர்சிதம் செய்யப்பட்டு அரிசனங்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளன. ரோடு வசதிக்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இதற்கான செயல் திட்டம் எப்போது ஏற்பட்டது ? இதுநாள் வரை கால தாமதம் ஏற்படக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : செயல் திட்டம் எப்போது ஏற்பட்டது என்கிற குறிப்பு இல்லை. கால தாமதம் ஏற்பட்டதற்கான காரணமும் இல்லை.

திரு. எஸ். வடிவேல் : அரிசனங்கள் குடியிருக்கிற இடத்தில் இருந்து இடுகாட்டிற்குப் போகக் கூடிய பாதை இல்லாமல் இருக்கிறது. வயல் வழியே போகிறபோது பயிர் நாசமாகிறது என்கிற சுலவரம் ஏற்பட்டிருக்கிறது. உடனடியாகப் பாதை அமைக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கேள்வியே அதுதான் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றுதான் சொன்னேன்.

## *House-sites for Harijans at Ediarpakkam.*

*381 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in Ediarpakkam village, Sriperumbudur taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பிரிவு 6-ன் கீழ் விளம்பல் வரைவு அரசின் வாலாய எண் 1792 ச.ந., நாள் 1972-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ல் ஏற்கப்பட்டுள்ளது. விரைவில் அவார்டு பாசானதும் பட்டாக்கள் வழங்கப்படும்.



1974 மார்ச் 12]

## Utilisation of Cauvery waters.

*382 Q. Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether any Central Team of Officials visited this State to study the water utilisation of the Cauvery Waters at Thanjavur district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த ஆய்வுப் பணியை மேற்கொண்டதன் நோக்கம் என்ன ? ஆய்வு விவரம் அறிவித்து விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கடைசியாக அமைக்கப்பட்ட ஆய்வுக் குழு வந்து பார்த்தது. இதன் நோக்கம் காவேரி நீரை எந்த அளவு சிக்கனமாக உபயோகப்படுத்த முடியும் என்பதை ஆராய்வதாகும்.

திரு. என். கே. பழனிசாமி : இந்தக் குழுவின் மற்றொரு முக்கியமான நோக்கம் பல மாநிலங்களில் எந்த அளவுக்கு நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது, ஒப்பந்த அளவுப்படி உபயோகப்படுத்துகிறார்களா, அதிகமாக உபயோகப்படுத்துகிறார்களா என்பது பற்றி ஆராய்வதாகும். அது பற்றி அவர்கள் கொடுத்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள, ஒரு முடிவுக்கு வர மத்திய அரசிடம் என்ன திட்டம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தக் குழு எப்படி அமைக்கப்பட்டது என்பதற்கே ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. நேற்று பத்திரிகையில் கூட அது பற்றி வந்தது. இதைப்பற்றிய முழு விவரத்தையும் இந்த அவையில் தந்து விடுவது நல்லது என்று கருதுகிறேன். 1972-ம் ஆண்டு மே மாதம் 21-ம் தேதி அன்று இந்திரா காந்தி அம்மையார் சம்பந்தப்பட்ட மாநில முதலமைச்சர்களைச் சந்தித்து, காவேரி நீர் சம்பந்தமாக அவர்களை ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில், 1972-மே 29, 30, 31 தேதிகளில் இந்த மூன்று மாநில முதலமைச்சர்களும் சந்தித்தார்கள். இந்த மாநாடு டெல்லியில் கூடியது. அப்போதுதான் இன்று இருக்கக்கூடிய உண்மை நிலைமையை நேரில் கண்டறிய ஒரு குழு அமைக்கப்பட்டது.

1972-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ல் அந்தக் குழு தன் அறிக்கையை அளித்தது. 1973ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ல் மீண்டும் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. அன்று கூட்டப்பட்ட மாநாட்டில் மேற்கொண்டு சில விவரங்கள் வேண்டும் என்கிற அடிப்படையில் அந்தக் குழுவின் ஆயுள் காலத்தை மேலும் 3 மாதங்களுக்கு நீட்டித்து, எந்த வகையில் அந்தந்த மாநிலத்தில் பாசனத்திற்கு நீர் எடுத்துக்கொள்ளப்படுகிறது என்று கேட்டார்கள்.

மேலும் 3 மாநிலங்களைச் சேர்ந்த தலைமைப் பொறியாளர்களும் சேர்ந்து கபினியில் எவ்வளவு நீர் கிடைக்கிறது, எவ்வளவு நீர் பாசனத்திற்குப் பயன்படுகிறது, நீர்த் தேக்கத்திற்கு வரக்கூடிய அளவு என்ன என்பதை எல்லாம் கபினியைப் போய்ப் பார்த்து ஆராய்ந்து அறிக்கை தர வேண்டும் என்றார்கள். அதைப் போலவே அவர்கள் பரிசீலனை செய்து ஒரு அறிக்கை அளித்தார்கள்.

அதன்பிறகு 1973-இல் அக்டோபர் 9, 10 தேதிகளில் முன்னாள் அமைச்சர் கே. எல். ராவ் அவர்கள் தலைமையில் ஒரு மாநாடு நடந்தது. அப்போது பாக்ட் பைண்டிங் கமிட்டி அறிக்கையை கர்நாடக முதலமைச்சர் ஏற்றுக் கொள்ளாது மேற்கொண்டு சில தகவல்கள் வேண்டுமென்று கேட்டார்கள். அதன்பேரில் காவேரி நீரை எந்த அளவுக்குச் சிக்கனமாகப் பயன்படுத்தலாம் என்பதையும் கண்டறிய வேண்டும் என்பதாகக் கேட்டு இந்தக் குழு நியமிக்கப்பட்டது.

இன்னும் அந்தக் குழு தனது அறிக்கையை மத்திய அரசாங்கத்துக்குக் கொடுக்கவில்லை. இந்த அரசைப் பொறுத்த மட்டில் காவிரி நீரில், தமிழ்நாட்டிற்கு இப்பொழுது பாசனத்திற்கு உள்ள பூமியில் எந்த அளவு பாசனம் செய்யப்படுகிறதோ, அந்தப் பாசன அளவு குறையாமல் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். அதில் இந்த அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்து, நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று இந்த அவைக்கு நான் உறுதி கூற விரும்புகிறேன்.

**Dr. H. V. HANDE:** Sir, may I know whether it is a fact that because of the delay on the part of our Government in submitting the exact details with regard to the modernisation of the canals in the Cauvery delta, there is delay in receiving loan from the World Bank? The Central Government have also taken objection that we have not been able to submit detailed report earlier. So, may I know whether it is not possible to submit all the details? Also, with the quantity of water available to our State, we can improve the irrigation facilities without getting extra water. So will the Government submit their report without delay?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியில் வருவதையும் இதில் சேர்த்துக் கேட்கிறார் என்று கருதுகிறேன். ஏனென்றால், உலக வங்கியைப் பற்றியும் கேட்கிறார். எந்தக் கட்டத்திலும் தமிழக அரசைப் பொறுத்த மட்டில் கால தாமதம் செய்யப்படவில்லை என்பதை இந்த அவையிலே கூறுகிறேன். மத்திய அரசாங்கம் வைத்திருக்கிற எல்லா ரெக்கார்டுகளிலிருந்தும் அது தெரியும். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் காலதாமதம் செய்யப்பட்டது என்று சொல்வது வெறும் பிரச்சாரம்தான். நாம் காலதாமதம் செய்யவில்லை என்பதை மத்திய அரசு ஒத்துக்கொண்டது. தமிழக அரசைப் பொறுத்த மட்டில், நாம்தான் எவ்வளவு பாசனம் செய்கிறோம் என்கிற முழு ரெக்கார்டுகளையும் மத்திய அரசுக்கு தந்திருக்கிறோம்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த முக்கியமான காவிரி நீர்ப் பிரச்சினையில் கேரள அரசாங்கம் புதிதாகக் கொள்கைகள் கொடுத்திருக்கின்றதே, அவர்களும் சில கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்களே, அந்த அடிப்படையில் இந்தக் குழு ஏதாவது ஆராய்ச்சி நடத்தியதா என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நான் மூன்று மாநிலம் என்று சொன்னது, கேரளத்தையும் சேர்த்துத்தான். அவர்கள் இப்பொழுது உபயோகப் படுத்துவதை விட, அதிகமான நீரை உபயோகிக்க அனுமதி வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதுபற்றி இந்தக் குழு பரிசீலனை செய்திருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கு, அதன் விவரத்தைத் தந்ததற்குப் பிறகு, மீண்டும் 3 மாநில அமைச்சர்கள் மாநாடு நடக்கும். அப்பொழுது முடிவு கிடைக்கும் என்று நம்புகிறேன்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, நாம், எவ்வளவுதான் எதிர்ப்புக்களைச் சொன்ன போதிலும், கபினி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவது நடந்து கொண்டுதான் இருக்கிறது. அணை கட்டி முடிக்கப்பட்டவுடன், "ஃபெய்ட் அக்கம்ப்ளி" என்ற முறையில், ஒன்றுமே செய்ய முடியாமல் போய்விடும். அதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கு இப்பொழுது எவ்வளவு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறதோ, அந்த அளவு தண்ணீர் தொடர்ந்து வர வேண்டுமென்றுதான் இருக்கிறது. தமிழக அரசைப் பொறுத்த மட்டில், அதை வற்புறுத்திக் கொண்டுதான் இருக்கிறோம். மத்திய அரசாங்கம் இதுபற்றி முடிவு காண்கிற வரையில், கபினி அல்லது ஹேமாவதி போன்ற அணைகளைக் கட்டுவதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், அணைகளைக் கட்டி, அவற்றில் நீர் கொண்டு வந்து தேக்க மாட்டோம்—தேக்க அனுமதிக்க மாட்டோம் என்று உறுதி அளித்திருக்கிறார்கள். அதைததான் நேற்றைய தினம் முதலமைச்சரவர்கள் இங்கு அவையில் விவரமாகத் தந்திருக்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிற்குத் தேவையான தண்ணீர் பாதிக்கப்படாத அளவு புள்ளி விவரங்கள் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்த, சர்க்கார், இரண்டு போக சாகுபடித் திட்டத்தை அமுலாக்க வேண்டுமென்று, 7 லட்சம் ஏக்கரா நிலத்தை இருபோக சாகுபடி திட்டத்தின்கீழ் கொண்டுவர திட்டமிட்டிருக்கிறோம். இப்பொழுதுள்ள நிலைமையில், இந்த இருபோகத்திற்குப் பாதகம் ஏற்படுமா? அல்லது ஏற்கெனவே இருக்கிற 15 இலட்சத்தில் 7 இலட்சம் இருபோகத் திட்டத்திற்குப் பாதகம் ஏற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் மொத்தமாகத்தான் தெரிவித்தேன். தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில், இப்பொழுது சாகுபடிக்குப் பயன் படுத்துகிற நீர் குறையாத அளவு பெற நாங்கள் முயற்சி எடுத்துக் கொள்வோம் என்ற உறுதியைத் தெரிவித்திருக்கிறேன்.

காவிரி டெல்டாப் பகுதியை நவீனப்படுத்துதல்.

*383 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் வினா எண். 73-க்கு 11—8—1972 அன்று அளித்த விடையை யொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடன் பெறும் திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது?

(இ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) தஞ்சை மாவட்டத்திலுள்ள காவிரி டெல்டா பகுதியை ரூ. 49 கோடி. செலவில் புதுப்பிப்பதற்கான திட்ட அறிக்கை யொன்று தயாரிக்கப்பட்டு மத்திய நீர் மின் சக்தி ஆணைக் குழுவின் வாயிலாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து பெறும் இந்தக் கடன் தொகையிலிருந்து எந்த எந்த வகையில் நவீனப்படுத்தும் திட்டம் மேற்கொள்ள அரசு உத்தேசித்திருக்கிறது என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நாம் அனுப்பிய திட்டத்தில் பழைய காவிரி கழிமுகப் பாசன ஏற்பாட்டைக் காலச் சார்புடன் புதுப்பித்தலுக்காக ரூ. 21·70 கோடி; காவிரி கழிமுகப் பாசன ஏற்பாட்டில் வடிகால் திட்டத்திற்கு ரூ. 6·80 கோடி; காவிரி கழிமுகப்பகுதியில் குழாய்க் கிணறுகளை இறக்கி நில நீர்வளத்தை மேம்படுத்துவதற்காக ரூ. 7·75 கோடி. என்று அனுப்பியுள்ளோம்.

திரு. என். கே. பழனிசாமி: சார் ரூ. 40 கோடி இதற்குச் செலவாகும் என்று சொல்லப்பட்டது. உலக வங்கியிலிருந்து மாநில சர்க்கார் கேட்டது எவ்வளவு மத்திய சர்க்கார், அங்கிருந்து வாங்கக்கூடாது என்று நம்முடைய சர்க்காரிடம் சொல்லியிருக்கிறதா? அப்படியென்றால், அதனுடைய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ரூ. 40 கோடி அல்ல ரூ. 49 கோடி. திட்ட அறிக்கையை உலக வங்கிக்கு மத்திய நீர் மின்சக்தி ஆணைக் குழுவின் வாயிலாகத்தான் அனுப்பவேண்டும். நாம் அப்படித்தான் அனுப்பியிருக்கிறோம். இன்னும் அங்கிருந்து தகவல் இல்லை.



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பாசன வசதிகள்.

*384—வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டுக்குப் பின்னால் திருச்சி மாவட்டத்தில் பாசன வசதிகளைப் பெருக்கிட அரசு மேற்கொண்டுவரும் முக்கிய நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கியதாகவும், வறட்சிப் பகுதியாகவும் இருக்கக்கூடிய அரவக்குறிச்சியிலே பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு நொய்யலாறு திட்டத்தை எப்பொழுது அரசு மேற்கொள்ளும்? அதற்கு விரிவான திட்டம் எப்பொழுது போடப்படும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருச்சி மாவட்டம் முழுவதிலும் என்ன என்ன திட்டங்கள் என்ற விவரம் இங்கு அவையில் வைக்கப்பட்டிருக்கிறது. தொகுதிவாரியாகக் கேட்டால் விவரம் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிட்டதைப் பற்றி, மானியம் வரும்போது விவாதிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, காவிரியில் வெள்ளம் வருகின்ற நேரத்தில், நிறையத் தண்ணீர் கடலிலே சென்று வீணாகக் கலக்கிறது. அந்தச் சமயத்தில் வடிகால் வாய்க்கால் திட்டம் அமைத்து வீணாகும் தண்ணீரைப் புஞ்சைப் பகுதியில் உள்ள ஏரிகளில் நிரப்பினால் இப்பொழுதுள்ளதை விட இன்னும் அதிகமாகப் பாசன வசதியைப் பெருக்க முடியுமே, அதை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காவிரியில் புதிய பாசன வசதித் திட்டத்தை மேற்கொள்ள முடியாது என்று அங்கத்தினருக்கே தெரியும். காரணம், நீரைப் பற்றிய தகராறு இருக்கிறது. இன்றைக்கு அங்கு வருகின்ற வெள்ளத்தைத் தடுப்பதற்கு, தடுப்புச் சுவர் எழுப்ப ரூ. 2 கோடிக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அநேகமாக இந்த ஆண்டு வேலை தொடங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பயறு வகைகள் சாகுபடி

*385 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பயறு வகைகளின் சாகுபடியை ஊக்குவிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

@230-235—ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவர அறிக்கை @ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, பயிர் வகைகளை உற்பத்தி செய்வதில் ரொம்பக் கொஞ்சம் குறைவு ஏற்படுகிறது. காவேரி நீரை நாம் பிப்ரவரி மாதத்திலே அடைத்துவிடுகிறோம். தஞ்சை, திருச்சி போன்ற பகுதிகள் ஏறத்தாழ 4 மாதங்கள் தண்ணீர் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் புதிய திட்டம் தீட்டி, இந்தப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, தஞ்சை, திருச்சி போன்ற பகுதிகளில் தீவிர திட்டங்கள் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த அச்சிட்ட அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. இது ஊட்டப் பயிராகவும், கலவைப் பயிராகவும் அல்ல. அறுவடை ஆனபிறகு, ஜூன், ஜூலையிலே 3-வது பயிராகத்தான் நாம் ஊக்குவித்துக்கொண்டு வருகிறோம்.

திருச்சிராப்பள்ளியில் கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டம்.

*386 வினா—திரு. டெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கோழிப்பண்ணை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், எங்கெங்கே தற்போது துவங்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) விவர அறிக்கை † ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கோழிப் பண்ணைக்கென்று ஒரு தனி கார்ப்பரேஷன் நிறுவப்பட்டுள்ளதா ? ஆமென்றால், நிறுவியதன் நோக்கம் என்ன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கோழிப் பண்ணைக்கு என்று ஒரு கழகம், ஒரு கார்ப்பரேஷன் நிறுவப்பட்டிருக்கிறது. அதனுடைய அடிப்படை நோக்கம் என்னவென்றால், அந்தக் கார்ப்பரேஷனை நாம் அமைத்திருப்பதால், பாங்கிலிருந்தும் பைனான்ஸ் இன்ஸ்டிட்டியூஷன்களிடம் இருந்தும் கடன் வாங்க முடியும். அரசு, பாங்கிலிருந்து கடன் வாங்க முடியாது. அதன் மூலமாக, இதை அதிகமாக அபிவிருத்தி செய்ய முடியும் என்பது மட்டுமல்லாமல், கார்ப்பரேஷன் என்று சொல்லும் போது அது லாபத்தில் இயங்கவேண்டுமென்ற அந்த முறையையும் கடைப்பிடிக்கவேண்டும்.

---

236-237-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

† 238-241-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் கார்ப்பரேஷன் எப்போது துவங்கப்பட்டது ? நிர்வாகச் செலவு எவ்வளவு ஆகிறது ? தற்போது லாபத்தில் இயங்குகிறதா ? எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது? என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அது தொடங்கிய தேதி விவரம் கைவசம் இல்லை. ஆனால், கணக்கு அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. முதலாண்டு லாப நட்டக் கணக்கு இன்னும் வந்து சேரவில்லை.

மேட்டுப்பாளையம் நகரமன்றக் கட்டிடம்.

*387 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகர மன்றத்திற்குச் சொந்தக் கட்டிடம் அமைப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றம், ரூ. 4,43,000 மதிப்பீட்டில் அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டிக் கொள்ளத் தீர்மானித்து, அக்கட்டிட வேலையைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைக்க அரசின் அனுமதியை வேண்டியது.

நகராட்சி மன்றங்களின் கட்டிட வேலைகளை எடுத்துச் செய்ய, பொதுப் பணித்துறை உள்ளபோது அவ்வேலைகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் எடுத்துச் செய்ய அனுமதிப்பது சரியாகாது என்று அரசு கருதியதால் மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றத்திற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஆகவே, கட்டிடம் அமைப்பதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மேட்டுப்பாளையம் நகராட்சி மன்றத்திலே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. மே. சி. தூயமணி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே சொந்தக் கட்டிடம் இல்லாத நகராட்சி மேட்டுப்பாளையம் நகராட்சி ஒன்றுதான். அதற்காக கால்கோள் விழா நடைபெற்று ஆண்டு பலவாகிறது. இந்த ஆண்டிலாவது அதற்குப் புதிய கட்டிடம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, புதிய கட்டிடம் கட்ட அனுமதி ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதைக் கட்டுவது யார் என்பதிலேதான் விவகாரம் இருக்கிறது. மீண்டும் பரிசீலனை செய்து அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அனுப்பப்பட்டால் உடனடியாக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இந்த ஆண்டே அந்த வேலையை எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது.

## Permission to open Toys unit at Kodambakkam

* 388 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the resolution of the Licence Appeals Committee of the Madras Corporation approving the proposals to the manufacture of toys near the Kodambakkam Bridge at Madras has been cancelled by the State Government in October 1973; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் 49 என கதவிலக்கம் உள்ள இடத்தில் 3 பரித்திறன் உள்ள மின்சார மோட்டார் கொண்டு பொம்மைகள் செய்யும் தொழிற்சாலை நிறுவ உரிமம் வழங்குமாறு சென்னை மாநகராட்சிப் பொறுப்பதிகாரிக்கு ஒருவர் விண்ணப்பித்தார். அந்த இடம், நுங்கம்பாக்கம் மேற்குப் பகுதி 11 ஒப்பளிக்கப்பட்ட நகரமைப்புத் திட்டத்தின்கீழ் குடியிருப்புக் கட்டும் காரியத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பதால், உரிமம் வழங்க மாநகராட்சி பொறுப்பதிகாரி மறுத்துவிட்டார். உரிமம் கேட்டு விண்ணப்பித்தவர் மேல்முறையீடு செய்து கொண்டதன்மேல், மேல்முறையீட்டுக் குழு உரிமம் வழங்க முடிவு செய்தது. உரிம மேல்முறையீட்டுக் குழு உரிமத்திற்கு ஒப்பளிப்பு வழங்கிச் செய்த தீர்மானம் நகரமைப்புத் திட்ட சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட அறிவிப்பிற்கு புறம்பாக இருந்ததால், அது 1973 ஆகஸ்ட் திங்களில் அரசினால் ரத்து செய்யப்பட்டது.

THIRU K. M. SUBRAMANIAM : Are the Government aware that there are many instances wherein licences have been given by the Licence Appeals Committee in non-shopping areas and non-licensing areas and Government have objected issuing of various such licences? Will the Government think of taking action against such illegal licences issued?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அவர்கள் மேல் முறையீடு செய்துகொள்வதற்கும் உரிமம் கேட்டு விண்ணப்பித்துக்கொள்வதற்கும் அவர்களுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதிலே ஏதாவது முறைகேடாக வழங்கப்பட்டால் அதைப்பற்றி அரசு பரிசீலனைசெய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. இன்னமும் எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 389-ம், 390-ம் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



திரு. எ. சுப்பிரமணியம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், போக்குவரத்துத் போக்குவரத்துத்துறை அமைச்சர் இங்கே வரவில்லை. செய்துவிட்டார் துறை அமைச்சர் அமைச்சரவையிலிருந்து ராஜிநாமா என்ற தகவல் வருகிறதே, அதைப்பற்றிய தகவலை. . . "

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.

## (2) கவன ஈர்ப்பு

### கன்னியாகுமரி மாவட்டம் மூலகுமூடு என்னும் ஊரிலுள்ள ஆல்வின் நடுநிலைப்பள்ளியை மூட இருப்பதும் அப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியமும் குறித்து

THIRU J. JAMES : Sir, I call the attention of the Hon. Minister for Education and Tourism to a matter of urgent public importance, namely, the proposed closure of Allwin Middle School, Mulagumoodu, Thuckalay Education district, Kanyakumari district and the necessity to protect the teachers and students of that school.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கன்னியாகுமரி மாவட்டம், மூலகுமூடு என்னும் ஊரிலுள்ள ஆல்வின் நடுநிலைப்பள்ளிக்கு 1974 ஆம் ஆண்டு மே மாதம் முடிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இப்பள்ளியின் நிர்வாகி 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அரசுக்குக் கொடுத்துள்ள மனுவொன்றில், இப்பள்ளிக்கு அருகாமையிலுள்ள நான்கு ஆரம்பப்பள்ளிகளை நடுநிலைப்பள்ளிகளாக மேம்பாடு செய்து கல்வி அலுவலர்கள் ஆணையிட்டதால், தம் பள்ளியில் 6, 7 மற்றும் 8 வகுப்புகளில் மாணவர் வருகை குறைந்துவிட்டதென்றும், அதன் காரணமாகத் தம் பள்ளியைத் தொடர்ந்து நடத்தமுடியாமல் போகுமென்று தெரிகிற தென்றும், ஆகவே அடுத்த கல்வி ஆண்டான 1974–75 முதல் தம் பள்ளிக்கான அங்கீகாரத்தை நீடிப்பதற்குத் தாம் விண்ணப்பம் செய்யப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். அப்பள்ளியை அடுத்தக் கல்வி ஆண்டு முதல் மூடிவிடவேண்டிய சூழ்நிலை ஏற்படின் பள்ளியில் வேலை பார்த்துவரும் ஆசிரியர்களுக்குத் தக்க மாற்று வேலை வாய்ப்பு அளிக்கவேண்டுமென அரசைக் கேட்டுள்ளார்.

அரசு இம்மனுவின்மீது பள்ளிக் கல்வி இயக்குநரின் விரிவான அறிக் கையைக் கேட்டுள்ளது. இப்பள்ளியினை அடுத்த ஆண்டு முதல் தொடர்ந்து நடத்த வாய்ப்பு உண்டா எனவும், இல்லையெனில், இப்பள்ளியில் பணி புரியும் ஆசிரியர்களை வேறு பள்ளிகளில் பணியிலெடுத்துக்கொள்ளுவதற்கும், பிள்ளைகளையும் மற்ற பள்ளிகளில் சேர்த்துக்கொள்வதற்குமான சாத்தியக்

## கன்னியாகுமரி மாவட்டம் முலகுமூடு என்னும் ஊரிலுள்ள ஆல்வின் நடுநிலைப்பள்ளியை மூட இருப்பதும் அப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியமும் குறித்து



கூறுகளையும் ஆய்ந்து அவசுக் தந்து தெரிவிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். பள்ளிக் கல்வி இயக்குநரும் மேலே கூறப்பட்டவாறு தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறி இது பற்றி விளக்கமான அறிக்கையை அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார். பள்ளிக் கல்வி இயக்குநரின் விரிவான அறிக்கை கிடைத்தவுடன் இதுபற்றி அரசு ஆராய்ந்து தக்கதொரு முடிவெடுக்கும்.

திரு. ஜெ. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிக்கூடத்திலே, தலைமையாசிரியராக இருப்பவர் அந்தப் பள்ளிக்கூடத்தில் மானேஜராகவும் இருக்கிறார். அதோடு அவருடைய மனைவியும் கூட அந்தப் பள்ளியிலே ஆசிரியராக வேலை பார்க்கிறார். இருவரும் இந்த ஆண்டு ஓய்வு பெறுகிற காரணத்தினாலே இனிமேல் தொடர்ந்து அவர்கள் நிர்வாகத்தினை நடத்தத் தேவையில்லை என்பதால்தான் அவர்கள் அதை நடத்துவதற்கு முயற்சிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்த வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கமே அந்தப் பள்ளியை ஏற்று நடத்துவதற்கு முயற்சி செய்யுமா ? இல்லையென்றால், அந்தப் பள்ளிக்கூடத்திலே பணிபுரிகின்ற பல்வேறு ஆசிரியர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே அருகாமையிலே இருக்கின்ற அரசுப் பள்ளிகளில் அவர்களுடைய சர்வீஸ் பிரேக் ஆகாமல் அவர்களை அமர்த்துவதற்கும் மாற்றுவேலை அவர்களுக்கு அளிப்பதற்கும் அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிதான் நான் குறிப்பிட்டேன். அந்த இரண்டு சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து பார்த்து அறிக்கை கொடுக்கும்படி பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் மூலமாக அந்த மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். வேறு முறையிலே அதைத் தொடர்ந்து நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதும் ஆராயப்பட வேண்டும். அதற்கும் சட்டம் இடம் கொடுத்தால் ஆராயலாம். அப்படியில்லையென்றால், பள்ளியிலே வேலைசெய்கின்ற ஆசிரியர்களை வேறு பள்ளிகளிலே அமர்த்தவோ அல்லது பிள்ளைகளை வேறு இடங்களிலே சேர்க்கவோ ஆராயப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டு அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை வந்தபிறகு மீண்டும் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம்.

## (3) 1974-75-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. கே. டி. கே. தங்கமணி : சபாநாயகர் அவர்களே, 1974-75 ஆம் ருஷத்திய பட்ஜெட்டை நிதியமைச்சராக இருக்கும் முதல்வர் அவர்கள் கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த நிதிநிலை அறிக்கையின் பேரிலே



எங்கள் கட்சியைச் சேர்ந்த அழகர்சாமி, பழனிச்சாமி, வடிவேலு ஆகியவர்கள் எல்லாம் எங்கள் கட்சியினுடைய நிலையைப்பற்றி ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பொதுவாக, ஆளுநருடைய உரையில் அரசாங்கத்தினுடைய கொள்கையானது தெளிவுபடுத்தப்படும் என்று நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால், அம்மாதிரியாக அரசாங்கத்தின் கொள்கையானது தெளிவுபடுத்தப்படவில்லை. அதற்கு மாறாக, இந்த நிதிநிலை அறிக்கையிலே அரசாங்கத்தின் கொள்கையானது எடுத்துச் சொல்லப்படும் என்ற முறையிலே இந்தப் பிரசங்கத்திலே ஓரளவிற்கு அரசாங்கத்தினுடைய கொள்கை வெளியே வந்திருக்கிறது.

இதற்கு ஏற்கெனவே நடந்த ஒரு அனுபவத்தைக்கூட நான் எடுத்துக் காட்டலாமென்று நினைக்கிறேன். 1957-ஆம் வருஷம் கவர்னர் உரையின் பேரிலே பேசும்பொழுது அன்றைக்கு எதிர்க்கட்சி முக்கியத் தலைவராக இருந்தவர்கள் அதிலே அரசாங்கத்தின் கொள்கை எதுவுமே வரவில்லையே என்று கேட்டபொழுது சுட்டிக்காட்டப்பட்டது,

The Finance Minister in his budget speech will deal with the policy of the new Ministry.

என்பது ஆகும். ஆனால், அது நடைமுறையாக இன்றைக்கு வந்துவிட்டது. ஆளுநர் அறிக்கை வந்ததற்குப் பின்னால் இன்றைக்கு இந்த அறிக்கையிலே அரசாங்கத்தின் கொள்கை ஓரளவிற்குச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் கொள்கையின் அடிப்படையிலே விமர்சனங்கள் என்ற முறையிலே நாங்கள் சொல்லக்கூடிய விஷயங்களை அரசாங்கம் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையிலே இருந்தாலுங்கூட பொறுமையாக நாங்கள் பேசும்பொழுது அனுமதிக்கவேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கொள்கை அறிவிப்பைச் செய்தாலும்கூட கொள்கை அறிக்கையினுடைய பின்னணி என்ன என்பதைப் பார்க்கவேண்டும். பிப்ரவரி 24 ஆம் தேதியன்று உபதேர்தல் நடைபெற்றது. கோவை மேற்குத் தொகுதி சட்டமன்றத் தேர்தல், கோவை நாடாளுமன்றத் தேர்தல், புதுவை நாடாளுமன்ற உபதேர்தல், புதுவை இடைத் தேர்தல் இவைகளிலே மக்கள் கொடுத்த தீர்ப்பு இருக்கிறதே அதைக் கண்டிப்பாக கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

(முற்பகல் 10-00)

நான் நாடாளுமன்றத் தேர்தலைப்பற்றிச் சொல்ல விரும்பவில்லை. காரணம், அங்கே நாடாளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினராக இருந்த பாலதண்டாயுதம் அவர்களின் மறைவிற்குப் பிறகு இப்பொழுது நடந்த தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்தான் வெற்றி பெற்றிருக்கிறார். புதுவையைப் பொறுத்த வரையில் ஏற்கெனவே

ஆளும் காங்கிரசினுடைய உறுப்பினர் வெற்றிபெற்றிருந்த தொகுதியிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் பாலா அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அது ஒரு வேளை நேரடியாக இந்தச் சர்க்காருக்கு பாதகமில்லாமல் இருக்கலாம்.

ஆனால், கோவை மேற்குத் தொகுதியைப் பற்றி எடுத்துக்கொண்டால் ஏற்கெனவே அதிகமான ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது திராவிட முன்னேற்றக் கழகம். அங்கே காலஞ்சென்ற அருமை நண்பர் கோபால் அவர்களின் துணைவியாரைத்தான் இந்தத் தடவை வேட்பாளராக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நிற்க வைத்தார் கள். அதிலும், உப தேர்தல் என்றால் அரசாங்கத்திற்கு எவ்வளவோ வசதிகள், வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புகள் பூராவையும் பயன்படுத்தினார்கள். அப்படிப் பயன்படுத்தியும்கூட 15,000 ஓட்டுகள் தான் பெற முடிந்தது. நேரடியாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் போட்டி என்ற நிலை மாறி, அண்ணா திராவிட முன்னேறறக் கழகத்திற்கும், காங்கிரஸ் கட்சிக்கும் போட்டி என்ற நிலை உருவாகி, மூன்றாவது, ரொம்பக் குறை வான ஸ்தானத்தைத்தான் இவர்கள் பெறக்கூடிய நிலைமை இருந்தது. இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால்,

'Generally the by-elections are indicators and they are also political barometers'.

இன்றைக்கு இந்த அரசைப்பற்றி ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு இதுவொரு சான்றாக வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு பின்னணி இருக்கும்பொழுது கொண்டு வந்திருக்கும் இந்த நிதிநிலை அறிக்கை கொஞ்சம் நிதானமானதாகவும், தாங்கள் ஏற்கனவே செய்திருக்கக்கூடிய தவறுகளை மாற்றும் முறையிலும் வருமா என்று பார்த்தோம். ஆனால், அந்த முறையிலே இல்லை. அதற்கு மாறாக தாங்கள் ஏற்கனவே செய்த சிறுசிறு காரியங்களையெல்லாம் பெரிய சாதனை என்று சொல்லும் முறையில் இருக்கிறது.

இவை வேறு முறையில் சொல்ல வேண்டுமானால் இது ஒரு பஞ்சாயத்து ஆண்டறிக்கை, அல்லது பஞ்சாயத்து யூனியன் ஆண்டறிக்கை, அல்லது மாவட்ட அபிவிருத்தி கவுன்சிலின் ஆண்டறிக்கை எப்படியிருக்குமோ அப்படித்தான் பெருமளவில் இருந்து 70 நிமிஷ நேரம் அளவிலும் இந்த நிதி-நிலை அறிக்கையை வாசிக்கும் நிலையேற்பட்டது. தொகுத்துத்தொகுத்துப் பார்த்தால் கொள்கை இடைச்செருகலாக இருக்கும் பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டால் 10 அல்லது 15 நிமிஷங்களில் இதைச் சமர்ப்பித் திருக்கலாம். பொதுவாக, நல்ல விஷயங்களைக் கூர்மையாகச் சொல்ல முடியவில்லை என்றால் அதிகமான விஷயங்களை அதிகமாகப் பேசுவது வழக்கமாக இருக்கிறது என்று பேரறிஞர்கள் சொல்வார்கள். அந்த முறையில் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது என்று சொல்லக் கடமைப்பட் டிருக்கிறேன்.

அடுத்து, 1966-67 ஆம் ஆண்டுதான் அப்பொழுது ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி தன்னுடைய வரவு-செலவுக் கணக்கைச் சமர்ப்பித் தார்கள். அப்பொழுது இந்த மாநிலத்தினுடைய வருவாய் 194





கோடியே 55 இலட்சம் ரூபாய். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து, 1974-75-ஆம் வருஷத்தில் இப்பொழுது வரவு-செலவுக் கணக்கைச் சமர்ப்பிக்கும்பொழுது இன்றைக்கு நமக்கு வரவு 470 கோடியே 69 இலட்சம் ரூபாய், செலவு 483 கோடியே 25 இலட்சம் ரூபாய். அதாவது கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அதிகமாக வருமானம் நமக்குக் கிடைத்திருக்கிறது.

இந்த வருமானம் கிடைத்ததற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் இந்தக் காரணங்களுக்குமத்தியில் விற்பனை வரி என்ற அந்த ஒரு அயிட்டத்தை மட்டும் பார்த்தால் இந்த நடப்பாண்டில் 138 கோடியே 74 இலட்சம் ரூபாய் வரையிலே வரப்போகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்தக் குறிப்பிட்ட அயிட்டத்திலே மட்டும் 138 கோடியே 74 இலட்சம் ரூபாய் வருகிறது. 300 கோடி ரூபாய் அதிகமாக வருமானத் திற்குப் போட்டிருக்கிறோம். 10 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் போட்டிருக்கிறோம்.

இந்தப் புது வரிகளைப் பொறுத்தவரையில் ரொம்பவும் விவரமாகப் போகவில்லை. வரிகள் போடாமல் இருக்கலாமா என்று கேட்பார்கள். அப்படியிருக்கவேண்டுமென்று யாரும் சொல்லப்போவதில்லை. எங்களைப் பொறுத்தவரையில் இங்கே எதிர்க்கட்சியாக இருந்தாலும் சில மாநிலங் களிலே ஆளுங்கட்சியாகவும் இருக்கிறோம். இன்னும் பலயிடங்களில் ஆளுங்கட்சியாகவும் வரலாம். இங்குள்ள எந்தக் கட்சியைப் பார்த்தாலும் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் ஆளுங்கட்சியாக வரும் என்ற நிலை யிருப்பதால் இதைப்பற்றி நாங்கள் நிதானமாகச் சொல்லுகிறோம்.

மத்திய சர்க்கார் இப்பொழுது பட்ஜட் சமர்ப்பித்தார்கள். பட்ஜட் சமர்ப்பித்த நேரத்தில் எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் ஜனங் களுக்கு விரோதமான பட்ஜட் என்று எங்கள் தலைவர்கள் தெளிவுபடுத்தி யிருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் எந்த முறையில் சொல்ல வேண்டுமோ அந்த முறையில் அந்த விவாதம் வரும்பொழுது கண்டிப்பாகச் சொல்வார்கள். இதனால் சமீபத்தில்,—

'The prices of consumer goods have registered steep rise all over the country after the new taxes have been announced.'

This is according to Price Survey conducted by the Consumer Council of India.

என்ற ஒரு செய்தியைப் போட்டு, எப்படி சாதாரண ஜனங்கள் உபயோகிக் கின்ற பண்டங்களுக்கெல்லாம் விலை உயர்ந்திருக்கிறது, சிகரெட்டின் விலை உயர்ந்திருக்கிறது, நெருப்புப் பெட்டியின் விலை உயர்ந்திருக்கிறது, டூத் பேஸ்டின் விலை உயர்ந்திருக்கிறது, சோப் விலை உயர்ந்திருக்கிறது. இப்படி அத்தியாவசியப் பொருட்களின் விலைகளெல்லாம் கூடியிருக் கின்றன, என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படி

விலைவாசி கூடிக்கொண்டே போகிறது. அந்த நேரத்தில் மேலும் கொஞ்சம் ஏதாவது தொந்தரவு பண்ணும் முறையில் இங்கே 10 கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் போடப்பட்டிருக்கின்றன. வண்டியிலே பாரத்தை ஏற்றுகிறோம். அந்தப் பாரம் மயிற்பீலியாகவும் இருக்கலாம். அந்த மயிற்பீலியை ஏற்றினாலும்கூட அது தாங்குவதற்கு மேல் போட ஆரம்பித்தால் வண்டியின் அச்சுகூட முறிந்துவிடும் என்ற கருத்து தமிழகத்தில் வழங்கப்படுகிறது. மத்திய சர்க்கார் போடுகின்ற தாங்க முடியாத வரிகளுக்குமேலே எங்கள் பங்கையும் ஏற்றுக்கொள்ளுங் கள் என்று புதிய வரிகளைப் போட்டிருக்கிறார்கள் என்பதை இந்த இடத் திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மத்திய சர்க்கார் ஏதாவது நல்ல காரியம் செய்தாலும் அந்த அள விற்குக்கூட தமிழக சர்க்கார் செய்வதற்குத் தயாராக இல்லை என்பதற்கு ஒரேவொரு சிறு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தியா—பாகிஸ்தான் யுத்தம் வந்தபொழுது மத்திய சர்க்கார் பல வரிகளைப் போட்டார்கள். அதையொட்டி நாம் சில சர்சார்ஜுகளைப் போட்டோம். இன்றைக்கு என்ன நிலை? யுத்தம் முடிந்த பிறகு மத்திய சர்க்கார் வாபஸ் வாங்கினார்கள். ஆனால் தமிழக சர்க்கார் அப்படி வாபஸ் வாங்கு வதற்குத் தயாராக இல்லை.

இது பொதுவாக முதலாளித்துவ பட்ஜட்டில் வருகின்ற நிலைமை. அவர்கள்தான் ஏற்கனவே போட்ட வரிகளை வாபஸ் வாங்கத் தயாராக இருக்கமாட்டார்கள். போன வருஷம் போட்டதை ரத்து செய்தோம் அல்லது குறைத்தோம் என்று படிப்படியாக செய்வது எப்பொழுதுமே வருவதில்லை. அதற்கு எந்தவிதமான விதிவிலக்கும் இல்லாமல், மத்திய சர்க்கார் மாற்றினாலும் நாங்கள் மாற்றமாட்டோம் என்ற நிலையை இவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்ற அளவிற்கு இருப்பதை நான் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இந்தச் சர்க்காருக்கு பொதுவாக மத்திய சர்க்கார் உதவி செய்கிறார்கள். உதவி செய்வது குறைவாக இருக்கலாம். ஆனால் உதவி செய்கிறார்கள் என்ற ஒரு விஷயத்தை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நம்முடைய பட்ஜட் பேப்பரைப் புரட்டிப் பார்த்தால் 37 கோடி ரூபாய் மத்திய சர்க்கார் மானியமாக உதவி செய்கிறார்கள். மத்திய சர்க்கார் இன்றைக்குப் பலவிதமான வரிகள் வசூல் செய்கிறார்கள். அதன் பகுதியிலிருந்து நமக்கு 54 கோடி ரூபாய் வரையில் கொடுக்கிறார்கள். வேறு முறையில் பார்த்தால் 90 கோடி ரூபாய் வரையிலும் மத்திய சர்க்கார் நமக்குக் கொடுக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு அதற்கு மேலே இன்றைக்குப் பற்றாக்குறை வந்திருக்கிறது என்பதைப் பார்த்தால் அது மிகவும் வருத்தப்படக்கூடிய விஷயம் என்பதை இந்த இடத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நான் ஏற்கனவே சொன்னேன்—கொள்கையைப்பற்றி 39-வது பாராவிலே, இந்த பட்ஜட்டினுடைய பிரசங்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதே வார்த்தைகளைச் சொல்லாமல் அதனுடைய சுருக்கத்தை மட்டும் சொல்கிறேன். சுருக்கம் என்ன? வாக்குறுதிகளை நாங்கள்





நிறைவேற்றுவோம், சோஷலிசம் சமைப்போம், ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று இதுதான் அவர்களுடைய கொள்கையாக உருவாக்கப்பட்டிருக்கிறது. வாக்குறுதிகளை நிறைவேற்று வோம் என்று சொல்கிறார்கள் என்றால், நான் ஏதோ ஒரு விளம்பரத் திற்காக சொல்லவில்லை, நான் ரொம்ப சாதுர்யமான பேச்சாகப் பேசுகிறேன் என்பதற்காகச் சொல்லவில்லை.

ரூபாய்க்கு 3 படி என்ற ஒரு கோஷம் 1967-லே ரொம்பவும் கடுமையாக வந்தது. அது ஓரளவிற்கு ஜனங்கள் மத்தியிலே கவர்ச்சியை உண்டாக்கியது. ஆனால் இன்றைக்கு 1974-லே நல்ல அரிசி, படி அரிசி 3 ரூபாய்க்கு வந்திருக்கிறது. ரூபாய்க்கு 3 படி எங்கே? படி அரிசி 3 ரூபாய் என்ற நிலை எங்கே?

நான் இந்த இடத்தில் சொல்வேன், நியாய விலைக் கடைகளைத் திறந்து, 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்ற முறையிலே திறந்து, அங்கே அரிசி, கோதுமை, கோதுமைப் பண்டங்கள், சீனி, மண்ணெண் ணெய் போன்றவைகள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், அரிசி ஒரு கிலோ ஒரு ரூபாய் என்ற முறையில் வைத்தாலும்கூட இன்றைக்கு நல்ல கட்டுப்படியாகும், அந்த முறையில் செய்யவும் ஏற்பாடு களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாமல் நாங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறோம் என்று சொல்வது சரியாக இருக்காது என்பதற்காக இந்த ஒரேவொரு உதாரணத்தை மட்டும் சொன்னேன்.

அடுத்தபடியாக, சோஷலிசத்தைச் சமைப்போம் என்று சொல்கிறார்கள்.

If there has been any word which has been of much use it is the word 'Socialism'.

எல்லோருமே சோஷலிசம் என்று சொல்கிறார்கள். என்னைப் போன்ற சிலர்—நான் யாரையும் குறைத்துச் சொல்லவில்லை—அடிப்படை சோஷ லிசக் கருத்துக்களையெல்லாம் கொஞ்சம் ஆழமாகப் படிக்கும் வாய்ப்பு நான் சார்ந்திருக்கும் இயக்கத்திலே எனக்கு ஏற்பட்டது.

பஸ்கள் தேசியமயமாக்கப்படுவதையே சோஷலிசம் என்று சொல்லும் போது சிரிப்பதா அழுவதா என்றே தெரியவில்லை. பெரிய பெரிய முதலாளித்துவ நாடுகளிலும்கூட, இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் கூட பல நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு உற்பத்திச் சாதனங்கள் மக்களுடைய பொறுப்பில் வர வேண்டும்; அர சாங்கத்திற்குச் சொந்தமாக இருக்க வேண்டும், கண்ட்ரோல் பண்ணுவது மக்களாக இருக்க வேண்டும் என்ற திசையில் மேலும் மேலும் போய்க் கொண்டே இருக்க வேண்டுமே தவிர, ஏதோ ஒரு காரியத்தைத் தேசிய மயமாக்கிவிடுவது என்பது போதாது.

பஸ்ஸைத் தேசியமயமாக்குவதையேகூட எதிர்க்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். இதிலே எங்களுக்கு அடிப்படையில் சில கருத் கோட்டங்கள் உண்டு. எதையெடுத்தாலும் சோஷலிசம் என்று சொல்லு

வதைத் தயவு செய்து விட்டு விடுங்கள். கண்ணொளி கொடுத்தால் சோஷலிசம், வேறு எதாவது செய்தால் சோஷலிசம் என்று சொல்லுவது அந்தப் பதத்திற்கு இருக்கக்கூடிய விஞ்ஞான ரீதியான அர்த்தத்தையே வ்ாதத்திற்கு இழுத்துக்கொண்டு போகும் நிலைமை இருப்பதால் அதைப் பயன்படுத்த வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லு கிறார்கள்.

திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, மரியாதைக் குரிய நம்முடைய திரு தங்கமணி அவர்கள் சோஷலிசத்திற்கு நாம் கொடுத்திருக்கக்கூடிய விளக்கம் அல்லது சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய விளக்கம் தனக்குப் புரியவில்லை, தான் சோஷலிசத் திட்டத்தை நன்றாகப் படித்திருப்பதாகச் சொல்லுகிறார். சோஷலிசத்திற்கான விளக் கத்தை அவருடைய பேச்சில் கொஞ்சம் விளக்கினால் நன்றாக இருக்கு மென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சோஷலிசம் என்ற சொல்லுக்கான ஒரே ஒரு விளக்கத்தைத்தான் சொல்லுகிறேன்,—

'To each according to his ability.
From each according to his ability.
To each according to the work done.'

Thiru L. GANESAN : The hon. Member Thiru K.T.K. Tangamani said that socialism means 'to each according to his ability and from each according to his ability'. I would like to know whether this definition was derived from Karl Marx or Angels ?

Thiru K.T.K. TANGAMANI : This is for each according to his ability and to each according to the work done.

திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : வேலை இல்லாதவர்களுக்கு வேலை, தொழில் இல்லாதவர்களுக்குத் தொழில் கொடுக்க வேண்டு மென்று அவர் சொன்னார். இப்போது வகுத்திருக்கிற இந்த அரசின் திட்டப்படி அவை எல்லாம் செய்யப்படவில்லையா? அவை எல்லாம் சோஷலிசத்தைச் சார்ந்ததா அல்லவா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எல்லோருக்கும் வேலை கொடுக்க வேண்டும். வேலை கொடுக்கிறபோது—

'To each according to his ability'
'for each according to his ability'

அவருக்கு என்ன திறமை இருக்கிறதோ அந்தத் திறமைக்குத் தக்கபடி வேலை வாங்க வேண்டும்.





'To each according to the work done'

ந்த அவரவர் வேலை செய்திருக்கிறார்களோ அதற்குத் தகுந்தபடி ஊதியம் கொடுக்க வேண்டும். இருநான் சோஷலிசம். கம்யூனிசம் வேறு.

'To each according to his needs'

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை சோஷலிசக் கட்டமே இன்னும் வரவில்லை. நாங்கள் சொல்லுவது—ஜனநாயகக் கட்டமே இன்னும் சரியாக அமையவில்லை என்பதாகும். ஜனநாயகக் கட்டத்திலேயே முக்கிய மான காரியங்களைச் செய்ய வேண்டிய நிலைமையிலே இருக்கிறோம்.

உதாரணமாக, உற்பத்திச் சாதனங்கள் முடங்கிக் கிடக்கிற நிலைமை ஏற்படக் கூடாது. உற்பத்திச் சாதனங்கள் எல்லோருக்கும் பயன்படச் செய்ய வேண்டும். அதிலே அருமையான உற்பத்திச் சாதனம் நிலம். நிலத்தைப் பரிபூரணமாகப் பயன்படுத்துவதில் எல்லோரும் ஈடுபடக்கூடிய நிலைமை ஏற்பட்டால் பல பேருக்கு வேலை கிடைக்கும். அதைக் கூடச் செய்ய முடியாத அளவுக்கு இன்று நிலை இருக்கிறது. நிலச் சீர் திருத்தத்தைப் பற்றிய அம்சங்களை எல்லாம் பின்னாலே சொல்லலாம் என்று நினைத்தேன்.

இன்றைக்குத் தொழில் அபிவிருத்தி அடைய வேண்டுமென்று சொல் இப்போது சில தொழில்கள் பெரும் முதலாளிகளிடம், பெரும் கோடீஸ் வரர்களிடம் சிக்கியிருக்கிறது. ஏகபோக முதலாளிகள் உருவாக உருவாக எந்தெந்தச் சரக்குகளை அவர்கள் உற்பத்தி செய்கிறார்களோ அந்தச் சரக்குகள் எல்லாம் சாதாரணமாக மார்க்கட்டில் விலை கூடுகிறது.

'It may be based on the law of supply and demand'

ஏகபோகம் என்று உருவான பிறகு அவர்களைக் கண்ட்ரோல் பண்ண முடியாத நேரத்தில் உற்பத்தி அதிகமாக இருந்தாலும் விலை கூடும், உற்பத்தி குறைந்தாலும் விலை கூடும். அந்த அளவுக்குச் செய்யக் கூடிய சக்தி இருக்கும் காரணத்தால் ஏகபோக முதலாளிகளுடைய சொத்துக்களை எந்தவிதமான நஷ்ட ஈடும் அவர்களுக்குக் கொடுக்காது கொஞ்சம் மரியாதையோடு மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் என்று கொடுத்து விட்டுப் பறிமுதல் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த இரண்டு காரியங்களைச் செய்தால்தான் ஓரளவு பலன் கிடைக்க வழி ஏற்படும். அப்போதுதான் ஜனநாயக ரீதியில் மக்கள் வளர்ச்சியடைய உதவியாக இருக்கும். அதுகூட சோஷலிசத்தின் ஆரம்ப கட்டமாக இருக்குமே தவிர, அது சோஷலிசம் அல்ல.

இன்றைக்கு எந்தக் காரியத்தைச் செய்தாலும் சோஷலிச நடவடிக்கை என்று சொல்லப்படுகிறது. ஆகவேதான் இதைச் சொன்னேனே தவிர, செய்யக்கூடிய நல்ல காரியங்களை எதிர்க்க வேண்டுமென்பதற்காக அல்ல.

1957-ஆம் ஆண்டில் அண்ணா அவர்கள் பேசும்போது கூறியிருக்கிறார்கள்—"எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எதிர்த்து பல விமர்சனங்களைச் செய்வதுதான் கடமையே தவிர, லாலி பாடுவது எங்களுடைய கடமை அல்ல" என்று சொல்லியிருக்கிறார்கள். இதே கருத்தை வின்ஸ்டன் சர்ச்சில் சொல்லியிருக்கிறார் என்றுகூட எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

நீங்கள் காரியங்களைச் செய்யும்போது அதிலே இருக்கின்ற குறைபாடுகளை, காலதாமதங்களைச் சுட்டிக்காட்ட, எடுத்துச் சொல்ல எங்களுக்கு உரிமை உண்டு. அப்படிச் சொல்வது அரசாங்கத்திற்கு உதவியாக இருக்க வேண்டுமென்ற முறையில் சொல்ல வேண்டுமென்றுதான் பார்லிமென்டரி ஜனநாயகத்தில் அந்த முறையை வகுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஏழை எளிய தாழ்த்தப்பட்டவர்களைப் பற்றிச் சொன்னார்கள். பல கேள்விகள் வருகின்றன. ஏழை மக்கள் என்று சொல்லும்போது கிராமங்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள், நகரப் புறங்களிலும் ஏழைகள் இருக்கிறார்கள். கிராம ஏழை மக்கள் நகர்ப்புறத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை என்றால் ரத்தப் புரட்சி ஏற்படும் என்று வடிவேல் அவர்கள் சொன்னார்கள்.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகிக் கொண்டே போகிறது. கிராமத்திலுள்ள ஏழை மக்களில் எண்ணற்றவர்கள் நகரத்தை நோக்கி வரக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசின் கொள்கையும், அதையொட்டிப் போக வேண்டுமென்ற மாநில அரசின் கொள்கையும் சேர்ந்து இந்த நிலையை உருவாக்கியிருக்கிறது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அரிசன மக்கள் 44 பேர் சுட்டுப் பொசுக்கப்பட்டார்கள். அப்படிச் சுட்டுப் பொசுக்கப்பட்டவர்களுடைய உயிர் கிடைக்கப்போவதில்லை. ஆனால் அதைச் செய்தவர்கள் சமுதாய விரோதிகள் என்ற ரீதியில் தண்டிக்கப்படுவதற்குக் கூட முடியவில்லை. ஆகவேதான் திரு. ஜெயப்பிரகாஷ் அவர்கள் சொன்னார்கள்—"தமிழ் நாட்டைப் பொறுத்தவரை நிலப்பிரபுக்கள் தரப்பில் தாக்குவார்கள்; தண்டனைக்குள்ளாகிறவர்கள் விவசாயிகள், தொழிலாளிகள்", தாக்குபவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற போக்கு தமிழ்நாட்டில் இருக்கிறது என்று வேதனையோடு சுட்டிக்காட்டினார்கள். இதற்கு அரசாங்கம் பொறுப்பேற்காமல் இருக்க முடியுமா? நாங்கள் செய்வதைச் செய்து விட்டோம், ஆயினும் அவர்கள் விடுதலை ஆகிவிட்டார்கள் என்று சொல்லுவது சமாதானம் சொல்வதாக இருக்குமே தவிர சரியாகிவிடாது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் வேலைவாய்ப்பு ஒவ்வொரு இடத்திலும் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. எல்லா இடத்திலும் ஏன் கொடுக்கவில்லை? நேற்றுகூட ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்கள். அறநிலையத் துறையில் பணியாற்றக்கூடியவர்களில் 40 பேரை வேலைக்கு எடுத்ததில் ஒருவர்கூட அரிசன வகுப்பைச் சேர்ந்தவர் இல்லை. அரசியல்



சட்டம் சரியாக இங்கே அமல் நடத்தப்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்களுக்கு—பின்தங்கியவர்களைப் பற்றிச் சொல்லவில்லை—குறிப்பிட்ட பர்சன்டேஜைக் கொடுக்க வேண்டுமென்று இருந்தும்கூட கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. ஒவ்வொரு இலாகாவிலும் இந்த நிலைமை இல்லாமல் அவர்களுக்குரிய பர்சன்டேஜைக் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, அரசாங்கத்தினுடைய கொள்கையில்—

'It has been an attack against the Centre all along.'

என்று சொல்லுகிறார்கள். நாங்கள் நிதிக் கமிஷன் நியாயம் வழங்கவில்லை என்று சொல்லுகிறோம், அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதிக்காக என் காத்துக் கிடக்க வேண்டுமென்று 13 ஆலைகளைத் தேசிய மயமாக்க விரும்புகிறோம், கேட்கிறார்கள். நெய்வேலி, தூத்துக்குடி, மேட்டூர் பவர் திட்டங்களுக்கு போதுமான உதவி செய்யாமல் இருக்கிறார்கள், ஐந்தாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் குறைவாக இருக்கிறது, தனியார் துறையில் அதிகமான முதலீடு கொடுக்க உதவி செய்ய வேண்டும், உரம், நூல் இவைகளை எல்லாம் முழுமையும் எங்களிடம் கொடுக்க வேண்டும், வேறு முறையில் சொல்லப் போனால் எங்களுக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

மாநில சுயாட்சி பற்றி ஏற்கனவே எங்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறோம். நான் அதைப் பற்றிப் பேசுவது ஐந்தாவது தடவை என்று நினைக்கிறேன். மாநில சுயாட்சியை கம்யூனிஸ்ட் கட்சியோ, ஆளும் காங்கிரஸ் கட்சியோ, ஸ்தாபன காங்கிரஸ் கட்சியோ, சுதந்திராக் கட்சியோ ஆதரிக்கவில்லை என்று பல தடவை அவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலிருக்கக் கூடிய சில பத்திரிகைகள்கூட இதைக் கேலி பண்ணக்கூடிய நிலைமை வந்திருக்கிறது.

குறிப்பாக, 4-11-1973-ல் 'ஆனந்தவிகடனி'ல் ஒரு கேலிச்சித்திரம் வந்தது. அதில் மாநில சுயாட்சி வேண்டும், வேறு என்ன வேண்டும் (ஒரு உறுப்பினர்: விகடன் தானே.) விகடம் மூலம் நல்ல பல கருத்துக்களைச் சொல்ல முடியும். விகடமாக ஏதோ சொல்லலாம். அவை வேடிக்கையாகக் கூட இருக்கலாம். வேடிக்கையாக இருந்தாலும் கூட கருத்து வேடிக்கையாக இல்லாமல் ஆழமான கருத்துக்களைக் கூடச் சொல்லலாம். மாநில சுயாட்சி வேண்டும், வேறு என்ன வேண்டும்; அது சுயமரியாதையோடு வரவேண்டும் வேறு என்ன வேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் பாடிக்கொண்டிருப்பதைப் போலவும், அதற்கு கல்வி அமைச்சர் மிருதங்கம் தட்டிக் கொண்டிருப்பதுபோலவும், தம்புராவை பேராசிரியர் வைத்துக்கொண்டிருப்பதைப் போலவும், ம.பொ.சி. வயலின் வாசித்துக் கொண்டிருப்பதாகவும், அந்த நேரத்தில் பக்தவத்சலம் அவர்கள் பக்கத்தில் இருந்து கொண்டு அபசுரம், அபசுரம் என்று சொல்வதாகவும், உடனடியாக நாவலர் அவர்கள் திரும்பிப் பார்த்து உங்கள் காதில் ஏதோ கோளாறு இருக்கிறது என்று சொல்வது போலவும், இப்படி அந்தக் கருத்தை அவர்கள் பிரதிபலிக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் அதை அபசுரம் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கொஞ்ச நாட்களுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கும்போது காமராஜ் அவர்கள் சமதர்மவாதி, அவரோடு சேர்ந்து தி.மு.க. வை ஒழிப்போம் என்று கோஷம் எழுப்பப்பட்டது. இப்போதுள்ள தலைவரை, அவர் பெயரைச் சொன்னாலும் நல்லது.

திரு. கே. டி. கே. தங்கமணி : நாங்கள் ஒரு கொள்கை வைத்திருக்கிறோம். இப்போது ஒரு விவசாயப் போராட்டம் வருகிறது என்று வைத்துக் கொள்வோம். தி.மு.க. அவர்களுக்கு ஆதரவாக வந்தால் வேண்டாம் என்று சொல்லப் போகிறோம் ? ஸ்தாபன காங்கிரஸ் ஆளும் காங்கிரஸ் உறுப்பினர்கள் எல்லோரும் அன்று ஜெயிலில் இருந்தார்கள். குறிப்பிட்ட ஒரு இயக்கத்தில் பலரும் ஒன்று சேருகிறோம். அரசியலில் ஒரு நிலை எடுப்பதற்கும் இதற்கும் வித்தியாசம் உண்டு. திட்டம் என்பது வேறு, அதை அமல்படுத்தும் டாக்டிக்ஸ் வேறு. டாக்டிக்ஸ் என்று வரும்போது சிலரோடு சேரலாம், சிலரோடு சேராமல் இருக்கலாம். சில கொள்கைகளின் அடிப்படையில் நாங்கள் செயல்படுகிறோம். நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன். பிரிவினை கோஷத்தைப் பயன்படுத்திக் கொண்டு சில நல்லவர்கள் கூட தெரிந்தோ, தெரியாமலோ ஈடுபட்டால்—

**'It should be paved with good intentions'**

—நல்ல எண்ணமாக இருக்கலாம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பிரிவினை, பிரிவினை என்று திரும்பத் திரும்ப கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் வலியுறுத்திச் சொல்வது, அவர்களுடைய வாதம் ஏதோ பிரிவினை கேட்பதை வைத்து எதிர்வாதம் செய்வது போல் அவர்கள் விளக்குகிறார்கள். பிரிவினை இல்லாத மாநில சுயாட்சி என்று சொல்லிவிட்டால் அதற்கு அவர்கள் எந்த விளக்கத்தை வேண்டுமானாலும் தரலாம். நாங்கள் கேட்பது பிரிவினைக்கு இடம் இல்லாத மாநில சுயாட்சி.

திரு. கே.டி. கே. தங்கமணி : ஆட்டானமி என்றால் ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள மக்கள் தங்கள் மொழி, தங்கள் இனம்தான் பெரிது என்று சொல்லக் கூடிய காலகட்டத்தில் என்ன என்ன வரும் என்று பார்க்கவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பிரிவினைக்கு இடம் இல்லாத மாநில சுயாட்சி என்று சொன்னார்கள். மதுரை மாநாட்டில், அடைந்தால் மாநில சுயாட்சி, மறுத்தால் தனி ஆட்சி என்று கோஷம் போட்டார்களே, அதற்கான விளக்கத்தை பேராசிரியர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நாங்கள் கேட்பது மாநில சுயாட்சிதான். அதை விளக்கி வலியுறுத்துகிறவர்கள் அவரவர்களுக்குத் தோன்றிய விளக்கத்தைக் கூறுகிறார்கள். நாங்கள் கேட்பது





மாநிலச் சுயாட்சிதான். இதுதான் மாநிலச் சுயாட்சி என்று சொன்னால், அதற்கான விளக்கத்தைத் தந்தால் ஏற்றுக்கொள்ளத் தயாரா ?

திரு. கே. டி. கே. தங்கமணி : தமிழ் மொழியைப் பொறுத்த வரையில் தமிழனாகப் பிறந்த எவரும் தமிழ் மொழியைப் போற்றத்தான் செய்வார்கள். அப்படிப் பேசும்போது தமிழ் மொழி தான் பெரிது மற்ற மொழிகள் எல்லாம் மோசமானவை என்று சொல்லும் நிலை ஏற்படுமானால் அது ஹெஜிமொனிஸம்.

## Hegemonistic concept would be developed

[முற்பகல் 10-30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, பிரிவினை பற்றி விளக்கம் சொல்லிக் கொண்டு வந்தார்கள். அதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தை மறைமுகமாகச் சொன்னார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, மராட்டிய மாநிலத்தில் "சன்ஸ் ஆப் தி சாயில்" என்று சொல்லி ஒரு கட்சி துவங்கப்பட்டிருக்கிறதே, அது பற்றி உங்கள் கருத்து என்ன ? அந்தக் கட்சியின் கருத்துக்கு நீங்கள் ஆதரவு தருகிறீர்களா? அந்தக் கட்சியோடு தொடர்ந்து கூட்டுறவு வைத்து இருக்கிறீர்களா ?

திரு. கே. டி. கே. தங்கமணி : "சன்ஸ் ஆப் தி சாயில்" கொள்கையை நிராகரித்து அதிகாரப் பூர்வமாக சட்ட மன்றத்திலே திரு. அச்சுத மேனன் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இந்த இடத்தில் ஒரு விஷயத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த சிவசேனை விவகாரத்தைப் பொறுத்த வரையில் கேரள சட்டமன்றத்தில்—திரு. துரை முருகன் அவர்கள்தான் இதைப் பற்றி எடுத்துக் காட்டினார்கள் என்று நினைக்கிறேன்—ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள்.

**'This House expresses its grave anxiety at the continued harassment of and assaults on SouthIndian and especially Keralite citizens of Bombay by Siva Sainiks and requests the Government of India to urgently intervene so as to protect the lives, properties and right to work of these minorities in the City of Bombay'.**

அதைப்போன்ற ஒரு தீர்மானத்தை இங்கே கொண்டு வந்தால் கண்டிப்பாக நாங்கள் அதை ஆதரிக்க இருக்கிறோம். அந்த மாதிரித் தீர்மானம் போடுவதற்குத் தயாராக இல்லை. அதற்கு மாறாக வேறு சில திசை திருப்பும் விஷயங்கள் வருகின்றன. எனக்கு பம்பாயிலிருந்து கடிதம் வந்து கொண்டிருக்கிறது. ஏதோ கேரள மக்கள் மட்டும் தாக்கப்படுகிறார்கள் என்பது அல்ல. அதிலும் குறிப்பாக செம்பூர், சியான் பகுதிகளில் மதுங்கா, தாராவி பகுதிகளில் உள்ள எல்லோரும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த தாராவி பகுதியில் தமிழர்கள் அதிகமாக வசிக்கிறார்கள் அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சியின் சார்பாக திரு, இந்திரஜீத் குப்தா அவர்கள் எழுந்து பேசினார்கள்

ஆனும் காங்கிரசிலிருந்து பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் அங்கே இருந்த திராவிட முன்னேற்றக் கழக எம். பி.க்கள் குரல் கொடுப்பார்கள் என்று நினைத்தேன். எந்தவிதமான குரலும் கிளப்பவில்லை. ஆகவே, சிவசேனையின் ஒரு குறிப்பிட்ட போக்கு, சிவ சேனையை வளர்க்க அனுமதிக்கும் போக்கு ஜனங்களுக்கு விரோதமாக இருக்கும் என்று எடுத்துச் சொல்கிறேன். ஆகவே, சிவ சேனையை எதிர்க்க வேண்டுமென்று சொல்லுகிறபோது இங்கே சிவ சேனையின் அந்தப் போக்கு வந்து விட்டதோ என்று நினைக்கிறேன். வெளியேயும் இது குறித்துப் பேசினோம். இங்கேயும் அதைப் பற்றிப் பேசலாம் என்று நினைக்கிறேன்.

எண்ணூரில் 400-க்கு மேற்பட்ட மலையாளிகள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு சம்மேளனத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தாக்கப்பட்டு, அதில் இரண்டு பேர் வெட்டுப்பட்டு அவர்களிடத்தில் மரண வாக்குமூலம் கூட வாங்கும் நிலை ஏற்பட்டது. அங்கேயிருக்கும் சிவ சேனையைக் கருத்தில் கொண்டு, இங்கே மலையாளிகளை வேலைக்கு எடுப்பதா? கூடாது புதிதாக எடுப்பவர்கள் தமிழர்கள் சொல்லும் நபர்களாகத்தான் இருக்க வேண்டுமென்று ஒரு சங்கம் சொல்கிறது என்கிற குற்றச்சாட்டை நான் சொல்கிறேன். அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் தேர்தல் முடிந்த உடனே மலையாளிகள் வைத்து இருக்கின்ற கடைகள் தாக்கப்பட்டிருக்கின்றன. மலையாளிகள் அங்கே தொழில் நடத்த முடியவில்லை. அவர்கள் கடைகள் தாக்கப்பட்டது குறித்து போட்டோக்கள் கூட வைத்து இருக்கிறோம். எந்த விஷயத்திற்கும் உடனடியாக அறிக்கை விடும் நம்முடைய அமைச்சர்களும் முதலமைச்சர் இப்படி ஒரு சம்பவம் நடந்து கொண்டிருக்கிறது தமிழ் நாட்டில், அதற்கு ஒரு அறிக்கை விடவில்லை என்று பார்க்கிறபோது உண்மையிலேயே மன வருத்தமாக இருக்கிறது.

மலையாளத்திலிருந்து, ஆந்திராவிலிருந்து நம் நாட்டிற்கு வருகிறார்கள். ஏனென்றால் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கருத்து நம்மிடம் இருக்கிறது. அந்தக் கருத்தை மேற்கொண்டு படித்தால் இன்னும் நல்ல நல்ல கருத்துக்கள்கூட அறிந்து கொள்ளலாம். நாம் முதல் இருக்கும் விஷயம் மட்டும் தான் சொல்லி வருகிறோம். முதலில் இருக்கும் கருத்தை மட்டும் சொல்லி கோஷம் எழுப்பி விட்டு, அரசியல் கோஷம் வேறு விதமாகக் கிளப்புவது ரொம்பத் தவறு. கோஷம் இது ஒப்புக்கொள்ளக்கூடாத கோஷம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோவையைப் பற்றிச் சொன்னதாக நான் குறுக்கிட்டுச் சொல்கிறேன். அது மாதிரி நிகழ்ச்சி நடந்ததாக தகவல் இல்லை. சில நாட்களுக்கு முன்னால் கல்வியமைச்சர் அவர்களிடத்தில் அது மாதிரி நிகழ்ச்சி நடந்ததாகச் சொல்லப்பட்டவுடனே, அதற்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டு இருக்கிறது. இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, அப்படிப்பட்ட பேச்சை தயவு செய்து சொல்லாதீர்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கேரள மாநிலத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் இடையே இரண்டு நாட்களுக்கு முன்பு தான் சுமுகமாக ஒரு உடன்பாடு ஏற்பட்டு, இப்போது நல்லெண்ணம் வளர்த்து வைத்துக்கொண்டிருக்கிறோம். அந்த நல்லெண்ணத்தைக் கெடுக்கும் வகையில் இப்படிப்பட்ட பேச்சுக்கள் பேச வேண்டாம். அது நன்மை பயக்காது. அப்படிப்பட்ட முயற்சிகள் அரசியலுக்கு வேண்டுமானால் பயன்படலாம், உண்மை நிலைக்குப் பயன்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் அரசுத் தரப்பிலிருந்து நான் ஒரு உறுதியை அளிக்கிறேன், மலையாளிகளுக்கு நிச்சயமாக எல்லாப் பாதுகாப்புகளும் அளிக்கப்படும்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். மூந்தா நாள் 11 மணிக்கு ஜெயில் ரோடில் 3 மலையாளிகள் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டன. அப்படி நொறுக்கப்பட்டது மாத்திரமல்ல, சொல்லிச்சொல்லி அடித்தார்கள். "மலையாளிகளே, கேரளத்திற்கு ஓடுங்கள்" என்று. இது சம்பந்தமாக போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கொடுக்கச்சென்றபோது, ரிப்போர்ட் எடுக்க மறுத்து விட்டார்கள் என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அங்கேயிருக்கும் அதிகாரி ரிப்போர்ட் எடுக்க மறுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனையோ முறை ரிப்போர்ட் கொடுத்து இருக்கிறார்கள். அப்போதெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட போலீஸ் அதிகாரி அவர்களும் செய்யவேண்டிய காரியங்கள் எல்லாவற்றையும் செய்து இருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் இப்படிப்பட்ட அலிகேஷன் சொல்லிக்கள் சொல்கிறபோது, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

'The allegations are mischievous, malicious, politically motivated and entirely baseless'.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, வேண்டுமானால் போட்டோ கூட என்னிடத்தில் இருக்கிறது. தாங்கள் அனுமதி தந்தால் அவற்றைக் காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசும்போது ஆகட்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : என்னைப் பொறுத்தவரையில் அறிந்தவற்றை நான் தெளிவாகச் சொல்கிறேன். இப்படித் தாக்கப்படுவதாக செய்தி வருகிறது. அதே போல் எண்ணூரைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய நிகழ்ச்சி நடந்து இருக்கிறது. அந்த விவரம் எல்லாம் தருகிறேன். அப்படித் தாக்கப்பட்டதற்கு அங்கே தாக்குதல் ஏற்பட்டது உண்மை. பொறுப்பு அமைச்சர்களோ, அல்லது சட்டமன்றத்தில் இருப்பவர்களோ

ஏற்றுக்கொள்ள வேண்டாம், அப்படிப்பட்ட நிகழ்ச்சி நடக்கிறபோது, இனி அப்படித் தாக்கப்படமாட்டார்கள் என்று சொல்லவேண்டும். அண்ணாமலை முகம் அவர்கள் ஒரு உறுதியைத் தந்தார்கள், அமைச்சர் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. எங்களுக்குப் பல அது என் மனதிற்கு இன்றனை. (குறுக்கீடு) எண்ணூரில் நடந்தது முழுக்க முழுக்க உண்மை. அந்த விவரங்கள் பூராவும் என் கையில் இருக்கிறது. அங்கேயிருக்கும் எஸ்.ஈ-க்கு பாதுகாப்புக் கொடுங்கள். அவர் ஒரு மலையாள பிராமணர் என்ற முறையில் பாதுகாப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஏற்கெனவே மாண்புமிகு திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் 2 நாட்களுக்கு முன்னால் என்னிடத்தில் சொன்னார்கள். எண்ணூர் பிராஜெக்ட் பகுதியில் உள்ள கிராமத்தில் இருக்கும் இரு தரப்பாருக்கும் இடையே ஒரு மோதல் ஏற்பட்டதாக அரசுக்குச் செய்தி வந்தது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறப்பட்டு, போலீசில் இரண்டு தரப்பார் மீதும் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதை வைத்துக்கொண்டு மலையாளிகளுக்கும் தமிழர்களுக்கும் இடையே பிரச்சினை இருக்கிறது என்று சொல்வது—மாண்புமிகு திரு ப.உ.ச. அவர்கள் சொன்னதுபோல் அரசியலுக்கு வேண்டுமானால் பயன் படலாமே தவிர உண்மை நிலைக்குப் பொருந்தாது என்று சொல்லிக் கொள்கிறேன். உண்மையினைத் தெரிந்து கொண்டு பேசுவார்களானால், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கே.டி. கே. தங்கமணி : முழுமையான ரிப்போர்ட் என்னிடத்தில் இருக்கிறது. ஆகவே, நான் மீண்டும் சொல்கிறேன். அது பற்றி எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாததால் தான் இதைத் தெரிவித் தேன்.

அடுத்ததாக, மாநில சுயாட்சி விஷயமாக..........

(குறுக்கீடு)

**Sir, I am not yielding....**

திரு. எம். எ. லத்தீப் : அந்த எண்ணூர் விவகாரத்தில் எனக்குச் சம்பந்தம் இருக்கிறது. தவறான தகவல் கொடுத்தார்கள் அதற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு லத்தீப், நீங்கள் உட்காருங்கள்.

**Thiru K. T. K. Thangamani : Sir, I am not yielding..**

திரு. எம். சுரேந்திரன் : தவறான தகவல் இல்லை. நடந்தது உண்மை யானது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சுரேந்திரன், நீங்களும் உட்காருங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மாதிரி மத்திய சர்க்கார் மீது குறை கூறுவதற்காக . . (மணியடிக்கப்பட்டது).

**Sir, I have completed only 30 per cent of what I want to say..**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் 3/4 மணி நேரம் கேட்டீர்கள், இடையில் குறுக்கீடுகள் இல்லையென்றால். ஆகவே, உங்களுக்கு 3/4 மணி நேரம் கொடுத்தேன். நீங்கள் 9·55க்கு ஆரம்பித்தீர்கள். இடையில் குறுக்கீடு ஒன்றும் அதிகம் இல்லை. நீங்கள் கேட்ட நேரத்தில் இன்னும் 5 நிமிடம் இருக்கிறது. அதற்குள் முடித்து விடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நீங்கள் இன்னும் 20 நிமிடம் கொடுத்தால் நல்லது.

**Then only I will do justice..**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடத்தில் 16 பேர் பெயர் கொடுத்து இருக்கிறார்கள் இன்றைக்குப் பேசுவதற்காக. ஆகவே, இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 5 நிமிடம் என்று சொன்னால் கஷ்டமாக இருக்கும்.

அடுத்து, இம்மாதிரியாக சில குறைபாடுகளை இவர்கள் மத்திய சர்க்கார் பேரில் சொல்லி விட்டு இவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்த்தால்,

**But what happens ? They do not take a long-term view. They do not allow enough money for the development sector. Instead, Corporations are created.. Mini-Super bodies are increased to demoralise the administration, making room for political intervention, sabotage and wasteful expenditure.**

புதியதாக நான்கு கார்ப்போரேஷன்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. கைத்தறி கார்ப்பரேஷன், கப்பல் கார்ப்பரேஷன், டி.டி.வி. கார்ப்பரேஷன் இப்படிப் பல்விதமான கார்ப்பரேஷன்களைப் புதியதாக ஆரம்பிக்கப் போகிறார்கள். இது எதில் கொண்டு போய் விடப்போகிறது ?

**In the long run it is going tc demoralise the administration.**

டிபார்ட்மென்ட் நல்ல முறையிலே செயல்பட வேண்டும். **எதற்காக இம் மாதிரி கார்ப்பரேஷனை உண்டாக்க வேண்டும் ?**

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 12

கப்பல் கார்ப்பரேஷனைப் பற்றி ஏற்கெனவே திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது என்னுடைய கருத்தும். கப்பல் கார்ப்பரேஷன் அமைக்கப்போகிறோம், மத்திய சர்க்கார் உத்தரவு போட்டுவிட்டது என்று சொல்கிறார்கள். தமிழ் நாட்டின் நாகரீகத்தை உலகில் பல நாடுகளிலும் பரப்புவது தான் கருத்து என்று சொல்லப்படுகிறது. இது தனித் தமிழ் நாடு என்ற கருத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. தனித் தமிழ் நாடு என்ற கருத்துப்பட நான் முதல் அமைச்சர் அவர்கள் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

பல கமிஷன்கள் போடப்பட்டிருக்கின்றன........

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கார்ப்பரேஷனை நாம் வேண்டும் என்று ஆரம்பிப்பது இல்லை. மத்திய சர்க்காருடைய நிதிக் கொள்கை நேரடியாக வரி போட்டுச் சில திட்டங்களை நிறைவேற்றுவதைவிட, வரிப் பணத்திலிருந்து ஓரளவுக்கு போட்டு மத்திய சர்க்காருடைய பினான்ஸிங் இன்ஸ்டிட்யூஷன்களிலிருந்து பல மடங்கு பணத்தைப் பெற்று நாம் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. அந்தக் கொள்கை சரியில்லை என்று வாதாடுகிறார்களா?

திரு. கே. டி. கே. தங்கமணி: அது பற்றி வாதம் செய்வது என்றால் 10 நிமிடங்கள் ஆகிவிடும். அம்மாதிரி இருக்கிற டிபார்ட்மெண்டே போதும். கார்ப்பரேஷன்கள் தேவையில்லை. கார்ப்பரேஷன்களை ஏற்படுத்திக் கொண்டே போனால் அது எந்த அளவுக்குப் போகிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கடைசியில்,..

**It takes us to revivalist things. All obscurantist ideas come.** பாண்டியன் பெயர் வைக்கவேண்டும், பல்லவன் பெயர் வைக்கவேண்டும், இருப்பவர்கள் பெயரையெல்லாம் வைக்கவேண்டும் என்று தான் நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. அது ரொம்ப சரியில்லை. நான் எதற்காக எச்சரிக்கிறேன் என்று சொன்னால்

**Such a tendency was developed during the Nazi regime which had been rightly pointed out by the erstwhile leader in 1957. He created a particular pattern** இப்படி ஏன் வருகிறது? ஹிட்லர் செய்தது என்ன? தன்னுடைய பழைய ரோமன் காரக்டர்களையே கோதிக் காரக்டர்ஸாக மாற்றினார். ஆர்ய ஜாதி என்று இனப் பிரச்னையை உண்டாக்கினார்.

நான் பெரியார் இயக்கத்திலிருந்து வந்தவன். அவர்கள் மூட நம்பிக்கை கூடாது என்று சொன்னார்கள். கும்பாபிஷேகம் குடமுழுக்காகிவிட்டது. கும்பாபிஷேக விழா குடமுழுக்கு விழாவாகியது. கோவில்கள் போதாதா? பெரியார் பாதையில் போவதாக சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். இருக்கிற அருமையான கோவில்களை காப்பாற்றுங்கள்.



1974 மார்ச் 12] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அவைகள் அருமையான பொக்கிஷங்கள். அவைகளைப் பாதுகாப்பதே போதும். புதிதாகக் கோவில்கள் வேண்டாம். திருவள்ளுவர் கோவில் புதியதாக எதற்கு?

புதியதாக கோட்டைகள் கட்டப் போகிறார்களாம்? இதெல்லாம் எதற்கு? இம்மாதிரி ஏற்பாடுகள் கண்டிப்பாக வேண்டாம். இதெல்லாம் திசை திருப்பும் பாதையில் போகிறது என்பதை இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கமிஷன் ரிபோர்ட்கள் பல சமயங்களில் தாமதாமகச் சமர்ப்பிக்கப் படுகின்றன. ரொம்ப லேட் ஆகிறது.

**Reports are published belatedly.**

உதாரணமாக இளைவஸ் ஹாஸ்டல் சம்பவம் பற்றிய ரிபோர்ட், பாளையங் கோட்டை சம்பவம் பற்றிய ரிபோர்ட், சந்தானம் கமிட்டி ரிபோர்ட் என்று சொல்லலாம்.

**Reports are never published. The report of the Handloom Wage Committee has not seen the light of the day.**

ஏற்கனவே ஒன் மேன் கமிட்டி போடப்பட்டது.

அனாமலீஸைத் தீர்ப்பதற்கு ஒன்மேன் கமிட்டி என்று போட்டார்கள். ஒன்மேன் கமிட்டியின் சிபாரிசின் அடிப்படையில் அனாமலீஸைத் தீர்ப்ப தாகச் சொன்னார்கள். நான் கூட மாண்புமிகு ப. உ. சண்முகத்தினிடம் சொல்ல வேண்டும் என்று இருந்தேன். ரோடு இன்ஸ்பெக்டர்ஸ் இருக்கிறார்கள். அதே மாதிரி பி.டபிள்யூ.டி. வேறு இலாக்காக்களில் இருக்கக்கூடியவர்களுக்கு கிடைக்கின்ற சம்பளம் இவர்களுக்குக் கிடைக்க வில்லை. ஒன் மேன் கமிட்டி சிபார்சு என்று சொல்கிறார்கள். அது அமலுக்கு வருவது கிடையாது.

எண்ணூர் அனல் மின் நிலையம் குறித்து மகாலிங்கம் என்குயரி கமிட்டி ரிபோர்ட் வருவதைக் காணோம்.

ஸேல்ஸ் டாக்ஸ் என்குயரி கமிட்டி ரிபோர்ட் வரவில்லை. இப்படி பல ரிபோர்ட்கள் இங்கே வருவதே கிடையாது.

அதே மாதிரி குடியாத்தம் தீ விபத்து. அமைச்சர் போய் அங்கே பார்த்திருக்கிறார்கள். அது ரொம்ப பயங்கரமான தீ விபத்தாக இருக்கிறது. 600 வீடுகள் சேதமாகியிருக்கின்றன. எனக்கு என்ன தோன்றுகிறது. என்றால், திடீரென்று 600 வீடுகள் சேர்ந்தாற்போல் தீப்பிடிக்கிறது என்றால், ஒட்டுமொத்தமாக தீ பிடிக்கிறது என்றால

ஏதோ something has happened. It may be sabotage. ஏதோ ஒரு இடத்தில் தீ விபத்து என்று தெரிந்தவுடனேயே சில பேர் வெளியில் வந்து அதைப் பார்க்கப் போயிருந்தபொழுது, அவர் திரும்பி வந்தபொழுது, தன்னுடைய வீடு தரை மட்டமாகப் போய் இருக்கிறது. ஆகவே, இதில் ஏதோ இருக்கிறது. ஆடிக் காற்று வீசுகிறது some enquiry is necessary. A judicial enquiry is called for என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பல ஸெமினார்கள் நடக்கின்றன. 'Current problems of Police Administration' என்ற ஸெமினார் நேற்றும், இன்றும் நடந்துகொண்டிருக்கிறது. நம்முடைய ஹோம் செகரடரி திரு. எஸ். பி. ஆம்ப்ரோஸ் அவர்கள் அதிலே பேசியிருக்கிறார் :

'Certain drastic changes in the organisational structure methods of work and the attitude and approach of the police force were necessary to improve its image. There had been *ad hoc* changes but it should be from a total angle..........,

I am surprised to hear that each policeman is armed with a musket....'

போலீஸைப்பற்றி இதற்கு மேல் என்ன சொல்லவேண்டும் ? போலீஸ் என்ன செய்கிறது ?

கல்லக்குடி என்ற கிராமம், திருமங்கலத்திற்குப் பக்கத்தில் மதுரை ஜில்லாவில். போலீஸ் எஸ்.ஐ. ஏற்கெனவே சஸ்பென்ஷனில் இருந்தவர். அங்கே ஒரு கிராமத்தில் தகராறு ஏற்பட்டது எங்களுக்கெல்லாம் தெரியும். ரொம்பப் பக்குவமாக மேற்கொண்டு பெரிய சண்டையாக மாறக்கூடாது என்று நினைத்து சில ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அங்கே ஒரு கொலை கூட ஏற்பட்டது. அங்கே குழப்பம் உண்டாக்கி பல கொலைகளை உண்டாக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. போலீஸ் நிர்வாகம் அப்படியிருக்கிறது. திருமங்கலம் அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன். திண்டுக்கல்லில் தேர்தல் நேரத்தில் டி.எஸ்.பி. யை திடீரென்று மாற்றினார்கள். அதற்குப் பிறகு ஒரு டி.எஸ்.பி. வந்தார். அவரை நான் ஒன்றிரண்டு தடவை நேரடியாகக்கூட பார்த்திருக்கிறேன். அவர் ரொம்ப ஒழுக்கமான ஆள். அவர் திடீரென்று மாற்றப்பட்டுவிட்டார். போலீஸ் துறையைப் பொறுத்தவரையில் இப்படிப்பட்ட சில வேலைகள் செய்வது சரியல்ல என்றுதான் சொல்லுகிறேன்.

எஜுகேஷனைப் பொறுத்தவரையில் எஜுகேஷன் ஸெமினார் நடந்திருக்கிறது. எஜுகேஷன் ஸெமினாரில் டாக்டர் மால்கம் ஆதிஷேசய்யா அவர்கள் He is also one of the Members of the State Planning Commission கிறிஸ்டியன் காலேஜில் ப்ரொபஸராக இருந்தவர். யுனெஸ்கோவில் இருந்தவர். He is a good Educationist.



அவர் சொல்லியிருக்கிறார்: 'Educational system in Tamil Nadu is a wasteful educational system. Curriculum is outdated and irrelevant and the Pre-University Course is a complete waste. He also described the present examination system as the cholera of the educational system'. ஆகவே, எஜுகேஷனல் சிஸ்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமா, வேண்டாமா ? அதற்கு மாறாக என்ன நடக்கிறது ? "நாங்கள் சாதித்திருக்கிறோம். சாதாரணமாக எல்லா நாடுகளிலும் 20 சதவீதத்துக்கு மேல் கல்விக்காக ஒதுக்குவது கிடையாது. இங்கே நாங்கள் 30 சதவீதம் ஒதுக்கியிருக்கிறோம். 100 கோடிக்கு மேல் தாண்டிவிட்டோம்" என்றெல்லாம் சொல்கிறார்கள். **I say, that is a disqualification. You have no sense of proportion.** நாம் செலவழிக்கிற முறை சரியல்ல. 100 கோடி ரூபாய் செலவழிப்பது வேஸ்டு என்று சொல்கிறேன். எஜுகேஷனுக்காக செலவழிக்கப்படுகிற தொகை எந்த முறையில் செலவழிக்கப்படுகிறது ? அதைப்போலவே கல்லூரிகள் ஜாதியின் பெயரால் மதத்தின் பெயரால் ஆரம்பிக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கல்வித் துறையிலே செலவழிக்கப்படுகிற பணம் அதிகமாக இருப்பதற்கு மிக முக்கியமான காரணம் தமிழ் நாட்டில் எல்லாக் கட்டத்திலும் இலவசமாகக் கல்வி வழங்கப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. வேறு பல நாடுகளில் இலவசக் கல்வி என்பது மிகக் குறைவு. சாதாரணமாகத் தொடக்க நிலைப் பள்ளியில் படிக்கும் குழந்தைக்குக்கூட ஒரு கட்டணம் செலுத்த வேண்டும். மேல் நாடுகளில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இங்கே இலவசக் கல்வி என்னும் பெரும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : 5 லட்சம் பணம் தந்தால் ஜாதியின் பெயரால் கல்லூரி, மதத்தின் பெயரால் கல்லூரி, பணக்கார ஜாதியினர் 5 லட்சம், 10 லட்சம் என்று பணம் கொடுத்து விடுகிறார்கள். இன்னொரு ஜாதியினருக்குத் தேவையிருக்கலாம். ஆனால் அவர்களால் பணம் சேகரித்துத் தரமுடியாமல் இருக்கலாம். ஆகவே, ஜாதியைக் காட்டி, மதத்தைக் காட்டி புதிய புதிய கல்லூரிகள் ஏற்படுவதைக் கொஞ்சம் நிறுத்தி வையுங்கள். இப்பொழுது இருக்கிற கல்லூரிகளை விரிவுபடுத்துங்கள். அங்கெல்லாம் பி.காம். போன்ற கோர்ஸுகளைத் தொடங்குங்கள்.

இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன். நாம் அரசாங்கத்தினிடம் எதாவது ஒரு விஷயத்தை எழுப்பினால், குமாரபாளையம் சம்பவம் பாதிமா பீபி விஷயத்தை கிளப்பினால் கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது என்று சொல்வது போல் குற்றவாளிகளைக் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால், அந்த அம்மையாருடைய துணைவரையே ஜெயிலில்

வைத்திருக்கிறார்கள். அன்றைக்கு அவர்கள் பேசும்பொழுது அப்படிப் பட்ட நிலைமை வந்துவிட்டது என்று சொன்னார்கள். ஆகவே, அரசாங்கத் தினிடம் ஏதாவது சொன்னால், எதையாவது செய்துவிட்டு, செய்தபிறகு திசை திருப்பும் வேலை நடக்கிறது அந்த அளவுக்கு என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று உரம். உரத்தைப் பொறுத்தவரையில் உரம் அதிக மாகப் பெருகியிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே ஒரு விஷயத்தைச் சொல்கிறேன். சில பேர் கேட்கலாம். 1966-ல் பற்றாக் குறையாக இருந்த மாநிலம் இப்பொழுது அரிசியைப் பொறுத்த வரையிலே உபரியாக இருக்கிறது. ரொம்ப நல்லது. இன்னும் உபரியாக ஆகவேண்டும். அது மட்டுமல்ல.

இன்னும் பல பொருட்கள் இங்கே உற்பத்தியாவது நமக்குப் போதாது. அவைகளை எல்லாம் போதுமான அளவுக்கு உற்பத்திச் செய்ய வேண்டும். பருப்பு வகையில் "செல்ஃப் சஃபிஷியன்ட்" ஆக வேண்டும். பருத்தியில் செல்ஃப் சஃபிஷியன்ட் ஆகவேண்டும். அதற்கான திட்டங்களைத் தயாரித்து, அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு நமக்கு யூரியா உரம் அதிக மாகத் தேவைப்படுகிறது. இப்பொழுது இந்த யூரியா தாராளமாக கிடைக்கவில்லை. 55 ரூபாய் உள்ள உரம் ஓப்பன் மார்க்கெட்டில் 130 ரூபாய் 150 ரூபாய் விற்கிறது. அண்மையில் மதுரை மார்கெட்டிங் சொசைட்டி கோடவுணிலிருந்து 150 டன் உரம் — சுமார் 3,600 மூட்டை யூரியா மாயமாய் மறைந்துவிட்டது. அதன் மதிப்பு 2 லட்சம் ரூபாய். அதை 8 லட்சம் ரூபாய்க்கு வெளியே விற்றிருக்கலாம். ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில்கூட இதைப்பற்றிக் கேட்டோம். கலெக்டர் தயக்கம் காட்டுகிறார். அவர் என்ன செய்வார்? நிலைமை அப்படி இருக்கிறது. நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லி எதையோ செய்தார்கள். கடைசியில் வாட்ச்மேனை அரஸ்ட் செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். அதில் பயனில்லை. சம்பந்தப்பட்டவர்கள் மீது நட வடிக்கை எடுக்க வேண்டும். 2 லட்சம் பெறுமானமுள்ளதாக இருந் தாலும் 8 லட்சம் ரூபாய்க்கு விற்றிருப்பார்கள். அந்தப் பணம் திருப்பிக் கிடைக்க வேண்டும்.

அமைச்சரவர்கள் குடிமராமத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதைக் கைவிட வேண்டும். நீர்ப்பாசன வசதியை சர்க்காரே செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பல விஷயங்கள் இருக்கின்றன. ரோடு இன்ஸ்பெக்டர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அதுமாதிரி சம்பளம் கிடைக்கவில்லை என்று கிளார்க்குகள் ஸ்டிரைக் செய்கிறார்கள். அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

59 பொருட்களுக்கு ஒருமுனை வரி என்று லிஸ்டில் போட்டிருக்கிறீர்கள். அதைப்பற்றி இப்போது சொல்ல நேரம் இல்லை. சில பொருட்களுக்கு





வரி விலக்குக் கொடுத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாட்டுத் தீவனத்திற்கு வரி இல்லை என்று சொன்னாலும் பிண்ணாக்கு போன்ற பொருட்களுக்கு 3½ சதவீதம் வரி இருக்கிறது. அதைப்போல ஏரேட்டெட் வாட்டருக்கு வரி இருக்கிறது. இப்படி பல கோளாறுகள் இருக்கின்றன. அவைகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் மயிலாப்பூரிலிருந்து அண்ணா இன்டஸ்ட்ரீஸ் இன்ஸ்டிடியூட் ஒன்றை திடிரென்று மூடிவிட்டார்கள். அங்கே படித்துக்கொண்டிருந்த 100 பையன்கள் அவஸ்தைப்படுகிறார்கள். சர்ட்டிபிகேட் வாங்குவதற்குக் கூட வழியில்லாமல் இருக்கிறார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பை அரசு மதித்து செயல்பட வேண்டும். ஹவுசிங் போர்டு பற்றி ஹைகோர்ட் தெரிவித்த தீர்ப்பு இன்னும் செயல்படுத்தப் படாமல் இருக்கிறது. பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டி முதன் முதலாக எடுத்துக்கொண்ட சப்ஜெக்டே இந்த ஹவுசிங் போர்டு பற்றியதுதான். அவர்கள் பல குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். வரவு-செலவுக் கணக்கு கூட சரியாக வைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே தவறு இருக்கிறது என்று ஹைகோர்ட்டும் சுட்டிக்காட்டியிருக் கிறது. அந்தத் தீர்ப்புக்கு மரியாதை கொடுக்க வேண்டும். முறைகேடுகளை சரிப்பண்ண வேண்டும். 10, 12 பேர்கள் மீது கேஸ் போட்டாலும் மீதி இருப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் தப்பி விடக் கூடாது.

சில இடங்களில் முனிசிப்பாலிட்டிகள் அமைக்க வேண்டுமென்று தீர்மானங்கள் போட்டு அனுப்பினாலும் அதைப்பற்றி கவனிப்பார் இல்லை. வில்லிவாக்கம் இருக்கிறது. அதை முனிசிப்பாலிட்டி ஆக்கவேண்டுமென்று பலமுறை சொல்லியும் இன்னும் அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

புதியதாக பல இண்டஸ்ட்ரீஸ் நிறுவப்பட வேண்டும். "ப்ளே ஆஷ்" இண்டஸ்டிரீஸ் அமைக்க முடியும் என்று சொல்கிறார்கள். இண்டஸ்ட்ரீஸ் கண்ணோட்டம் இருக்குமானால் அதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லாண்ட் ரீஃபார்ம்ஸ் பற்றி இந்த அறிக்கையில் எந்த விதமான தகவலும் இல்லை. லேபர் வெல்பேரைப்பற்றி ஒன்றும் சொல்ல வில்லை. தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, அந்தத் துறை அமைச்சர் இரண்டு, மூன்று விஷயங்களில் தலையிட்டு நல்ல முடிவை எடுத்தார்கள். அதைப் பாராட்ட வேண்டும்.

என்.ஜி.ஓ.-க்களுக்கு 10 ரூபாய் கொடுத்துள்ளோம் என்று சொல் கிறார்கள். ஆனால் என். ஜி. ஓ-க்களுக்கு அதிருப்தி நிலவுகிறது, திருப்தி இல்லை. சர்க்கார் உத்தரவு அடிப்படையில் பார்த்தாலும் கூட 1—10—1971 முதல் 1—4—1972 வரையில் உரிய நேரத்தில் சம்பள உயர்வு கொடுக்காததால் சுமார் 4 கோடி ரூபாய் நஷ்டம். 1—8—1972 முதல் 1—4—1973 வரையில் சுமார் 5 கோடி நஷ்டம். 1—5—1973 முதல் 1—10—1973 வரையில் சுமார் 3 கோடி நஷ்டம் என்று

சொல்கிருர்கள். அது மட்டுமல்ல. 1—8—1973, 1—10—1973, 1—1—1974 1—2—1974 ஆகிய தேதிகளில் மத்திய அரசு ஊழியர்களுக்கு அறிவித்துள்ள பஞ்சப் படி எங்களுக்குக் கிடைக்கவில்லை இப்போதுதான் 10 ரூபாய் எங்களுக்குக் கொடுத்திருக்கிருர்கள் என்று குறை சொல்கிருர்கள். ஆனல் மத்திய அரசு உயர்வுப்படி கேரளத்தில் கூட கொடுத்திருக்கிருர்கள்.

இன்னும் பிரைவேட் பாரஸ்ட் இருக்கிறது. அதையெல்லாம் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சுகர் மில்ஸ் பற்றித் தகவல் இல்லை.

உணவுக் கொள்கை பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை.

கரும்பு விலையை உயர்த்துவதைப் பற்றி எதையுமே காணவில்லை.

மாணவர்கள் பற்றி பேச்சே இல்லை. இப்படிப் பல குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இறுதியாகக் குறிப்பிட வேண்டுமானல், உங்கள் கொள்கை ரொம்பவும் பலவீனமான கொள்கையாக இருக்கிறது. நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளுக்குப் புறம்பாக இருக்கிறது உங்கள் செயல்முறை. ஆகவே, உங்கள் திட்டத்தின்மீது திருப்தி இல்லை என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Speaker, Sir, it is customary at this time of the year, in season and out of season, to criticise Government for what we call its failures. But frankly, Sir, I am sure if Members were to ask themselves whether they would prefer to be Members of this State or some other State, I think they would choose Tamil Nadu, after all, because, Sir, here in Tamil Nadu we all enjoy a stable Government, which is a rarity in these days. Also on all sides we find that steps are taken to alleviate sufferings, to meet peoples' needs and to progress in various ways.

If we examine the progress made in agriculture and animal husbandry; with special regard to poultry farming, we find that great strides have been made. I think that Government will soon be self-sufficient with regard to poultry farming.

A word may be said here on behalf of the small-scale industrialists who last year fell upon very hard days when there was power-cut. Sir, if a thing like that happens, I think the small-scale industrialists should be given special protection so that he does not collapse altogether. He must be given a chance of survival. If it is small-scale industry, if there is power-cut, the unit has to be closed down because they just can not make their way.





I want to say a few words in matters in which I am interested. Regarding Health, it is gratifying to note that Government is putting up more buildings, hospitals and consequently are putting more beds for the sake of the sick and suffering. But these beds, Sir, can become beds of misery unless they are tended by adequate nursing and adequate number of nurses. It is said that 200 new posts are being created. If we examine our hospitals, we will find that, not 200, but if we have five times that number it would still not be sufficient to look after our sick. In other countries nurses go and enjoy praise. They are highly commended for their work. They are very well thought of in other countries. When we look at our own country and see the work of nurses in hospitals, we are sorry to find that they observe a sort of replacement system. The senior nurse hands it to junior nurse; who in turn hands it to Ayah; Ayah hands it to sweeper and the sweeper wants her palm crossed with silver to do her duty. I feel strongly that in selecting our nurses, more care should be taken. We must select people who want to serve, who want to give themselves and not necessarily those who want to earn a living. Also, Sir, at the training stage, they must be trained properly so that they know the object of service.

(முற்பகல் 11-00)

Under Education, Government are making a mammoth drive against ignorance and illiteracy and frankly in spite of criticisms and charges against Government regarding education, it is true that a change must take place, that syllabus must be changed and new subjects added; but in spite of all that I feel that soon we can look forward for a time when we can eradicate Illiteracy. Everybody will vote for the person on whom they have confidence and not this way by other emotional feelings. So, we can congratulate the Government on the stride it has taken in this direction. But I want to draw the attention of this House and also the Government to one factor. We find that in the ages of 14 to 18, there is a great leakage and wastage of young people. The boys in the age group of 14, 15, 16 and 17 before they leave the Schools, have a sort of restlessness and feel they can adopt some short-cut methods to get employment. Actually when they leave the school, they become totally unemployable. Now here something can be done. Both the Government and the people in institutions have to create a sort of atmosphers in which education can be given to acquire

knowledge. These people can be educated. We must re-educate them and we must form new schools, perhaps, evening schools, where we can bring them and teach them on those subjects in which they are interested, not of our academical subject. We have to teach them new subjects. We have to train them in a proper way and in common ways which will help them to earn their living. This needs a great deal of thought for the future. By this method, all these young people who are capable of doing so much of good will not be wasteful to society.

I have always a feeling of surprise and praise when I discovered the Government's interest in History, Art and Literature. It is highly commendable that this Government takes so much of interest in the cultural past, in historic monuments and it takes so much of trouble to renovate and build up these monuments. Sir, this creates a pride in people belonging to this country where each one can boast of his great culture and great traditions. This is a good thing and all of us as citizens of Madras should help to promote in people this feeling of pride. We must teach our children more about it. We must encourage them to go on excursions to see such historical places. The Government should also produce more films regarding these historical and important monuments which belong to us.

A word about Harijans and Backward Classes. We are fully aware of the fact that society and history owe a lot to these people. They have been given sanctions and grants not because of the whims of the Government, it is because during the last millennia these people have suffered a lot at the hands of the society. Now we know something about them; but now the issue gets clouded. There is a new fashion now. People want to join the ranks of backward class people in order to avail the concessions given to them. Now they think that by including their community in the backward list, they can leave absolutely out of difficult situation and thus make their living prosperous. It is like first class children in a school aiming for the backbenches, that is the last rank in the class. Of course, there are various people in various communities. I am sure, ifwe movethe Government, the Government will come forward to help them to stand on their own feet and get out of this difficult tut of Backwardness and this backwardness does not become the





fashion of the day and will not be a means of getting government aid or something. It means getting something for nothing, which is a wrong tendency.

Regarding Slum Clearance, Tamil Nadu has a good workable programme and very soon we will find slum-dwellers getting used to live in better houses. I think one question should be asked. Are they happy in these tenements, Sir ? Are they happier than in a warm thatched hut ? We have to examine what we can do to improve them. We should re-examine this situtaion, because the poor woman who comes from the slum has to live in a four storeyed building at a vulnerable point. I think this aspect should be looked at by the Government.

I would like to ask another question. Is it necessary that valuable sites should be allotted for slum-clearance ? Should we put up such slum tenements in the heart of the City down to Marina ? Some of the best and costly sites have been occupied by the slum tenements. The Government can better utilise these tenements, and let these tenements be constructed outside. I can quote the example of Gujarat. But at the present moment it may not be good. I would like to draw your attention to their slum clearance programme. It may be studied and perhaps a few lessons may be taken from them. I do not want to go into the details.

Sir, in Tamil Nadu and in Madras City, we can boast of good roads and very wide, lovely and wonderful bridges. Anybody with a camera would be able to take a couple of pictures of the bridges with their background and make picturous scenes. I want to mention about the waters that flow under the bridges. At one time the water was new and fresh. Now the water that flows is odourous and the citizens do not attempt to keep them clean. After all, we have to keep the city clean. I would like to draw your attention to a place near my place of stay where both the Corporation and the Police have failed to take action completely.

Sir, the Hon. Chief Minister has achieved many great feats. I would ask him to take up this challenge of seeing that this City and the State become the cleanest in the whole of India. Then,

[1974 மார்ச் 12

திரு. பெ. சீனிவாசன் : நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய ஆலோசனைக்கு என்னுடைய நன்றி. முதலில் என்னுடைய உள்ளத்திலே இருக்கிற வேதனையை வெளியிடாமல் நான் வேறு எதையும் பேசுவதற்குத் தயாராக இல்லை. நான் இந்த சட்டமன்றத்தினுடைய உறுப்பினன். என்னுடைய உரிமை பாதிக்கப்படுகிற நேரத்தில், நான் இந்தப் பக்கத்திலிருப்பதற்குக் காரணம் ஆளும் கட்சி என்பதால், அதை சுட்டிக் காட்டுகிறேன். இன்றைக்கு நாம் அதிகாரத்தில் இருக்கிறோம், 174 பேர் இருக்கிறோம் என்று எண்ணலாம். அதுகூட உடைந்து வருவதாகக் கேள்விப்பட்டோம். இருந்தாலும், உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது. இந்த நிலையில், நீங்கள் சொன்னால், கேட்கக் கூடிய பத்திரிகையில் இப்படிப்பட்ட விமர்சனங்கள் வருமானால், நாளைய தினம் அந்த விமர்சனத்திற்குப் பதில் அளிக்கக்கூடிய ஒரு தர்ம சங்கடத்தை நீங்கள் எனக்கு உருவாக்கிவிடாதீர்கள். அப்படிப் பதிலளிக்கக்கூடிய தர்மசங்கடம் வருமானால் நிச்சயம் இந்தப் பேரவை தாங்காது. உங்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

முன்னேற்றக் கழகத்திலே இருக்கக்கூடிய அமைச்சர்களாக இருக்கிற தலைவர்களின் மேல் எனக்கு இன்னும் இருக்கிற மதிப்பின் காரணமாக, மரியாதையின் காரணமாக நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசியலிலே போராடுங்கள், அடக்குமுறைகளை அவிழ்த்துவிடுங்கள் நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால், என்னுடைய மனைவியைப் பற்றி, என்னுடைய குடும்பத்தைப் பற்றி எழுதுவார்களானால் —எங்களுக்குத் தெரியும், எங்களிடத்திலே அப்பழுக்கு இல்லை—சொத்துசுகத்திலே இருக்கிற நீங்கள், ஆட்சியிலே இருக்கிற நீங்கள் அப்படி எழுதுகிறவர்களை அழைத்து, அப்படி எழுதாதீர்கள் என்று சொல்லுங்கள், எப்படிப்பட்ட போதையிலும் மயக்கத்திலும் அப்படி எழுத வேண்டாம் என்று சொல்லுங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே திறப்பு விழாக்களைப் பற்றியெல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சரித்திரப் புகழ்பற்றித் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். கட்டபொம்மன் கோட்டை எழுப்புவது, திருவள்ளுவருக்கு ஆலயம் அமைப்பது இதுபற்றியெல்லாம் எனக்கு ஆட்சேபனை இல்லை.

ஆனால், அறிஞர் அண்ணா மறைந்ததற்குப் பிறகு இன்றைய ஆட்சியில் மாறிய நிலைமை ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். அறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றல், உலகப் புகழ், அமெரிக்காவிலே அவருக்கு கொடுக்கப்பட்ட பட்டம், அந்தப் பட்டத்தின் மூலமாக உலகமெல்லாம் அவரைப் பாராட்டிய தன்மை இவையெல்லாம் தானாக இயற்கையாக அவருக்கு வந்து சேர்ந்தது. ஆனால் அதற்குப் பின்னாலேவந்த கலைஞர் அவர்கள் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தை, இதிலே இருக்கிற 4 இலட்சம் தொண்டர்களின் உழைப்பை, பொது மக்கள் காட்டிய ஆதரவை தன்னுடைய சுயவிளம்பரத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதை நான் அவர்களிடத்திலே தனிப்பட்ட முறையிலே பேசும்பொழுது கூட சொன்னேன், இங்கேயும் சொல்ல விரும்புகிறேன்.



1974 மார்ச் 12] [திரு. பெ. சீனிவாசன்]

எந்த விழாவாக இருந்தாலும், கண்ணொளி வழங்கும் விழாவைப் போன்ற பல விழாக்களிலும் கலைஞர் பெயர்தான், எல்லா விழாக்களையும் கலைஞர் பெயரால்தான் நடத்த வேண்டுமா ? ஊரெல்லாம் வசூல் செய்து நடத்துகின்ற விழாவிலே அண்ணாவை ஏன் மறந்துவிட்டார்கள் ? அண்ணாவின் பெயரை வைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் ?

பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் கலைஞர் பிறந்த நாள் விழா என்ற பெயரால், அதுபோல ரிக்‌ஷாக்கள் வழங்கும் விழா அதுவும் கலைஞர் படத்தோடுதான், சில இடங்களிலே அதைக் கூட சுரண்டி எடுத்தார்கள் என்றுகூடத் தெரிகிறது. இதையெல்லாம் அவர்கள் உணர முடியாமல் அவர்கூட இருக்கின்றவர்கள் அவர் அதைப் பார்க்கமுடியாமல் பார்வையை மறைத்தார்கள்.

இங்கே நாங்கள் பேசினால் உங்களில் பல பேர்கள் உரத்த குரலிலே எழுந்து கொள்கிறீர்களே, ஆனால் செய்தித் திரைப்படத்தைப் பாருங்கள், முதல் அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் திரைப்படத்திலே க்ளோஸ் அப்பிலே வருகின்ற நேரத்திலே மக்கள் என்ன எதிரொலி செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள். அப்பொழுது தெரிகிறது மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பது.

கண்ணொளி வழங்குகின்ற திட்டம் நல்ல திட்டம் என்பதில் ஆட்சேபனையில்லை. நானே இரண்டொரு இடங்களிலே நடத்தி இருக்கிறேன். ஆனால், அதிலேயும் தன்னுடைய படம், பெயர்தான் வரவேண்டும் என்ற எண்ணம் முதலமைச்சருக்கு இருப்பதாக மக்கள் கருதுகிறார்கள். பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம், அதிலேயும்கூட முதலமைச்சர் மட்டுமே விளம்பரம் பெறவேண்டுமென்ற அடிப்படையிலே செய்யப்படுகின்றது. இவர்களிடம் சலுகை பெறுகின்றவர்கள், பெற விரும்புகின்றவர்கள், இவர்களை நாடியிருப்பவர்கள் அப்படிச் செய்து விடுகிறார்கள், அதனாலே எந்தக் குற்றம் குறை இருந்தாலும் களையச் சொல்ல ஆள் இல்லை. அவர்களுடைய குற்றத்தை குறைச் சொல்லி அவர்களிடம் இடிப்பார் இல்லை. அவர்களை இடிப்பதற்கு ஆட்கள் இல்லை. அவர்கள் துன்பப்படுகின்றபொழுது அவரைத் தாங்கிப் பிடித்துக் கொள்ளக்கூடிய நண்பர்கள் அங்கே இல்லை.

அன்றைக்குக் கூட முனு ஆதி அவர்கள் கோபமாகச் சொன்னார்கள், அட பாவிகளே அவரை நடுத்தெருவிலே நிறுத்திவிட்டீர்களே என்று,. இல்லாவிட்டால் சென்ற ஆண்டில் ஒரு பெரிய விமான விபத்து சென்னையிலிருந்து சென்ற விமானம் டெல்லிக் கருகில் விபத்துக் குள்ளாகி அதிலே முன்னாள் அமைச்சராக இருந்த மோகன் குமாரமங்கலம், தமிழகத்திலே உள்ள ஒரு பெண் எழுத்தாளர் இவர்களை இழந்து தமிழகம் அந்த நேரத்திலே பெரிய அதிர்ச்சிக்குள்ளாகி இருந்த நேரத்திலே அது நடந்து மூன்றாவது நாளிலே முதலமைச்சர் அவர்களுடைய பிறந்த நாள் விழா கொண்டாடுவார்களா ? அந்த விபத்து நடந்து பெரிய அதிர்ச்சிக்குள்ளாகி நாடே அழுதுகொண்டிருக்கின்ற நேரத்திலே பிறந்தநாள் விழா நடத்தினார்கள், மாலைகளைக் குவிக்கிறார்கள், பத்திரிகையிலே 8 பத்தி அதைப்

[திரு. பெ. சீனிவாசன்] [1974 மார்ச் 12

பற்றி எழுதுகிறார்கள். இழவு வீட்டிலே விழா கொண்டாடுகிறார்கள் என்றுதான் மக்கள் நினைத்தார்கள். நேரு இறந்தபொழுது காமராஜ் பிறந்த நாள்விழா கொண்டாடியதை வைத்துக் கொண்டு நாம் 3 மணி நேரம் மேடைப் பேச்சு பேசவில்லையா? விமான விபத்து ஏற்பட்டு தமிழகமே அதிர்ச்சியடைந்திருந்த நிலையிலே அந்த மூன்றாவது நாளிலேயே முதல் அமைச்சருக்குப் பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது. அங்கே சென்று தலையைக் காட்டவில்லையென்றால் அவர்கள் மீது சந்தேகப்படுவது என்ற நிலைமைதான் இருந்தது.

கட்டமொம்மன் விழா நடத்தட்டும், அதைப்பற்றிப் பேசட்டும். ஆட்சேபணையில்லை. ஆனால் அந்த விழாவிலே பேசுகிறார்கள் எட்டப்பர்களை எச்சரிக்கிறேன் என்று சொல்கிறார்கள். எட்டப்பர்களை எச்சரிப்பதற்காக ஒரு கோட்டை.

பூம்புகாரிலே நடத்தப்பட்ட விழா எப்படி நடத்தப்பட்டது? அறிஞர் அண்ணா அவர்கள் இருந்தபொழுது உலகத் தமிழ் மாநாடு நடத்தினார்களே எப்படி நடத்தினார்கள், வெளியே இருக்கிறவர்களையெல்லாம் அழைத்து எதிர்க்கட்சிக்காரர்களையெல்லாம் உள்ளே அழைத்துக்கொள்கின்ற முறையிலே காமராஜரை வரவேற்றார்கள். பெரிய விழாவாக எல்லோரையும் அழைத்து நடத்தினார்கள், அதை ஒரு யுனிவர்சல் பங்க்ஷனாக நடத்தினார்கள், ஆனால் இங்கே இவர்கள் நடத்துகின்ற விழா ஒரு கம்யூனல் விழாவாக நடத்தப்படுகிறது, அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்சி விழாவாகத்தான் நடத்தப்படுகின்ற அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. எதிர்க்கட்சிக்காரர்களுக்கு சட்டசபையிலே மதிப்புக் கொடுக்காதது மட்டுமல்ல, வெளியேயும் மதிப்பதில்லை. சேரிகளுக்கு எல்லாம் மின்சாரம் தந்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள்.

திட்டத்தினுடைய நோக்கம் பொதுவாக எப்படி இருக்க வேண்டும்? ஒரு திட்டத்தினுடைய நோக்கம் ஜாப் ஓரியண்டட் ஆக, வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதாக, வறுமையை ஒழிப்பதாக இருக்க வேண்டும். திட்டம் என்றால் அதற்கு பெர்ஸ்பக்டிவ் எய்ம் இருக்க வேண்டும். ஆனால், இன்றுள்ள நிலையில் திட்டத்தின் முதல் நோக்கம் விளம்பரமாகத்தான் இருக்கிறது. கட்ட மொம்மன் விழா நடத்தினார்கள். நான் கூட ஒரு கருத்தைத் தெரிவித்தேன். வெள்ளைக்காரன் ஆட்சியிலே எட்டப்பன் பெயரால் நடத்தப்பட்ட தொல்லைகளுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாக்கப்பட்டவர்கள் மாடி வீடுகளிலே வசிக்கக்கூடாது என்று விரட்டியடிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், சிதறிக்கிடக்கின்ற நாயக்கர்கள் இருக்கிறார்கள் அவர்களையெல்லாம் கண்டுபிடித்து ஒரு ஊரை அமைத்து அந்த ஊரிலே அவர்களைக் குடியமர்த்தி பூகோளத்திலிருந்து நீக்கப்பட்ட பாஞ்சாலங்—குறிச்சியைத் திரும்பக் கொண்டு வாருங்கள் என்று சொன்னேன்.

வெட்ட வெளி கண்ட இடத்திலேயெல்லாம் சிலை வைக்கிறோம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்க வேண்டுமென்றால் ஒரு அமைச்சர் போகிறார் என்றால் போகிற வழியில் ஒரு வெட்ட வெளியைக் கண்டால்



1974 மார்ச் 12] [திரு. பெ. சீனிவாசன்]

இந்த இடத்தில் என்ன தொழிற்சாலை வைக்கலாம் என்றுதான் கேட்பார், ஆனால் இப்பொழுது இருக்கிற நிலைமை இந்த இடத்திலே சிலை வைத்தால் என்ன என்றுதான் தோன்றுகிறது.

கல்லூரிக்குப் பெயர் வைப்பது, நாவலர் உயர்நிலைப் பள்ளி என்று பெயர் வைப்பது. இது அவசியந்தானா? நான்கு மணி நேரம் இலக்கியத்தைப் பற்றித் தமிழிலே பேசி நாவலருக்கு வராத பெருமையா உயர்நிலைப் பள்ளிக்கு அவர் பெயரை வைப்பதன் மூலம் வரப்போகிறது?

திரைப்பட வசனங்கள், இலக்கியங்கள் எழுதி எழுதிக் கலைஞருக்கு வராத பெருமையா ரிக்‌ஷாவிலே அதுவும் பின்னாலே கீழே குனிந்துபார்த்தால் தெரியும்—படம் போடுவதால் வந்துவிடும்?

திட்டங்களுக்குப் போதுமான பணத்தை ஒதுக்கவில்லை, தேவையான அதிகாரங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். தேவையான அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்வதிலே அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்திற்கு ஆட்சேபணையில்லை. ஆனால், இருக்கிற அதிகாரங்களை சரியாக வைத்திருக்கிறீர்களா என்பதை மக்கள் பார்த்து, இருக்கிற அதிகாரத்தை விட்டு இறங்குங்கள் என்று மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

1965-ஆம் ஆண்டிலே காமராஜ், காங்கிரஸ் கட்சியின் நிலைமை என்னவாக இருந்ததோ அதைவிட மோசமான நிலையில் இன்றைக்கு மூன்றாவது இடத்தை உங்கள் கட்சி தேடிக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியாவது அப்பொழுது இரண்டாவது இடத்திலே இருந்ததாக எனக்கு ஞாபகம். உங்கள் கட்சி மூன்றாவது இடத்தைத் தான் பெற்றிருக்கிறது. கிடைத்த அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தி இருக்கிறீர்கள் என்று மக்கள் சொல்கிறார்கள்.

நூல் விநியோகத்திலும் உர விநியோகத்திலும் எவ்வளவு தாராளம் ஊழல்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்று மக்களுக்குத் தெரியும். சின்னாளப்பட்டியிலே நூல் கிடைக்கவில்லை, அங்கே கிடைக்காத நூல் அருப்புக்கோட்டையிலே உள்ள பிரமுகர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த நூலை சின்னாளப்பட்டியிலே விற்றுக்கூட பயனில்லை, தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் சென்னையிலே விற்கிறார்.

உர ஊழல் ஊரறிந்த ஊழல். உலகமறிந்த ஊழல். விவசாயிகளுக்குப் பயிர் வைக்கின்ற நேரத்திலே உரம் கிடைக்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரியும்.........

திரு. எ. எம். டி. நாகசுப்பையா : சின்னாளப்பட்டியிலே தி. மு. க. கட்சியைச் சேர்ந்த தலைவர் என்று சொன்னார், அவர் யார்? அவருடைய பெயர் என்ன என்பதைச் சொல்லமுடியுமா?

திரு. பெ. சீனிவாசன் : அதையும் சொல்கிறேன், இப்பொழுது அல்ல, பின்னாலே டிமாண்டிலே வரும்போது அதையெல்லாம் கட்டாயம் சொல்கிறேன்.

(முற்பகல் 11-30)

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : இப்பொழுதே சொல்லலாம் அல்லவா ?

திரு. பெ. சீனிவாசன் : இப்பொழுது தகவல் என்னிடத்தில் இல்லை. பிறகு பெயரைக் கொண்டு வந்து சொல்கிறேன், பயப்பட வேண்டாம்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : பயப்படவில்லை. இப்பொழுதே சொல்லலாமே என்றுதான் கேட்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு உரிய காலத்தில் கட்டாயமாகப் பதில் சொல்கிறேன். பொய்க் குற்றச்சாட்டு சொல்லவில்லை. ஆதாரமான குற்றச்சாட்டைத்தான் சொல்கிறேன்.

அடுத்து, மாநில சுயாட்சியைப் பற்றி எடுத்துக்கொண்டால், நம்முடைய முதலமைச்சரவர்கள் மாநில சுயாட்சியைப் பற்றிப் பேசும் நேரத்தில், திராவிட நாடு பிரிவினை கேட்டபொழுது பேசிய பேச்சுகளைப் போல் ஆக்ரோஷத்தோடு சொல்கிறார்கள். ஏதோ உயிர்த் தியாகம் செய்வோம், எதை வேண்டுமானாலும் செய்வோம் என்று ஐரிஷ் விடுதலைப் போராட்டத்தில் பேசுவதைப்போல முதலமைச்சரவர்களும், ஏனைய தலைவர்களும் சொல்கிறார்கள்.

இப்படியிருக்கும் நிலையில், மாநில சுயாட்சிக்காக நீங்கள் எழுப்பிய கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்ட நேரத்தில் நீங்கள் என்ன செய்தீர்கள்? உயிர்த் தியாகம் செய்ய வேண்டாம், இந்தப் பதவித் தியாகத்தையாவது செய்தீர்களா ? காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றி ரவுண்ட் டேபிளிலும், எட்டிலும் கான்ஃப்ரன்ஸ்களிலும் விவாதத்திலே இருக்கிறது. காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் முழுக்க முழுக்கத் தமிழக அரசு தோற்றுவிட்டது. அதை நீங்கள் நேரடியாக ஒப்புக்கொள்ளவில்லை. மாநில சுயாட்சிக்காக உயிர்த் தியாகம் செய்வோம் என்று சொல்கின்ற மதிப்பிற்குரிய தலைவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையில், தமிழனின் வயிற்றில் அடிக்கப்பட்ட அந்தப் பிரச்சினையில் ஏன் பதவியைக் கூட ராஜினாமா செய்யவில்லை ? ஏன் அந்த மிரட்டலையாவது மத்திய சர்க்காருக்கு அனுப்பவில்லை.

இன்னொன்றும் சொல்கிறார்கள், தாங்கள் இந்தியை எதிர்த்த வீரர்கள் என்று சொல்கிறார்கள். எங்களுக்கும் அதில் பங்கிருக்கிறது என்பது முதலமைச்சரவர்களுக்குத் தெரியும். அந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குப் பிறகுதான் இந்த அரசாங்கமே அமைந்திருக்கிறது. இந்தப் பிரச்சினையில் மக்களை நாம் ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதை முதலமைச்சரும், ஆளும் கட்சியும் மறுக்கக்கூடாது. குரூப்—1 சர்வீசுக்கு தமிழ் மொழியின் மூலம் எழுதலாம் என்று சொல்கிறீர்கள்.



ஆனால் பெரிய அளவில் உள்ள அகில இந்திய வேலை வாய்ப்பு உள்ள எல். ஐ. சி., யு. பி. எஸ். சி., இரயில்வே, போஸ்டல் போன்ற துறைகளில் இன்றைக்குத் தமிழன் வேலை பார்க்க முடியவில்லை. தமிழன் தமிழன் என்று கோயம்புத்தூர் கூட்டத்திலே பேசுகின்ற முதலமைச்சர், கேரளக் கணவாய் வழியாக வந்த கூட்டம், என்று சொல்லுகின்ற முதலமைச்சர், மடக்கே ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று சம்பாதிக்கக்கூடிய எல். ஐ. சி., இரயில்வே, போன்ற துறைகளில் தமிழ் படித்தவனுக்கு வேலையில்லை என்பதைப் பற்றிச் சிந்தித்தார்களா ?

இந்த நாட்டிலுள்ள தமிழனுக்கு, உங்களை நம்பி இந்தியை எதிர்த்தவனுக்கு அங்கே வேலை கிடைக்கவில்லை. இவர்கள், தமிழை யு. பி. எஸ். சியில், பாட மொழியாக ஆக்க வேண்டுமென்று செய்திருக்கிறார்களா? எல். ஐ. சி.யிலே எழுத்திலே இந்தி தேவையில்லை என்றிருந்தாலும்கூட இந்தி தெரியாதவர்கள் அங்கே வேலைக்குப் போக முடியாது என்ற நிலைமை இருக்கிறது. இங்கேயுள்ள குறிப்பிட்ட சிலர் இந்தியைப் படித்துவிட்டு சாமர்த்தியமாக வேலைகளில் நுழைந்து விடுகிறார்கள். ஆனால் உங்களை நம்பியவன், தமிழை நம்பியவன் இன்றைக்குக் கொதிப்பதற்குக் காரணமே அவனுக்கிருக்கும் வேலை வாய்ப்பை இழந்து, பிழைப்பைக் கெடுத்துக்கொண்டு அரசியல் கோஷத்தைக் கொடுத்து அதன் மூலம் ஒரு சிலர் அதிகாரத்திலே ............

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : இந்தி படிக்காத காரணத்தால் அகில இந்திய சர்வீஸ்களிலே வேலை வாய்ப்பு நம்முடைய மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதற்காகத் தமிழகத்திலே இந்தியைச் சொல்லித்தர வேண்டுமென்று வற்புறுத்துகிறார்களா ?

திரு. பெ. சீனிவாசன் : திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு இவ்வளவு சாமர்த்தியம் இருக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. இந்தியை வைக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : உங்களோடு சேர்ந்ததால்தான் சாமர்த்தியம் வந்தது.

திரு. பெ. சீனிவாசன் : பரவாயில்லை, சாமர்த்தியம் வருவதற்காக என்னுடன் சேர்ந்து விடுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

இந்தி படிக்க வேண்டாம் என்று சொல்லுகின்ற நோக்கில் அதற்குள்ள அகில இந்திய செல்வாக்கைத் தடுத்து நிறுத்த வேண்டாமா ? அதற்கு அகில இந்திய அளவில் உள்ள செல்வாக்கைத் தடுக்க வேண்டும் அல்லது தீக்குளிக்க வேண்டும். இல்லையென்றால் மரியாதையாகத் தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஒரு பக்கத்தில் இந்தியை எதிர்ப்போம் என்று சொல்கிறீர்கள். ஒரு பக்கத்தில் அதிகாரத்தை விட மறுக்கிறீர்கள். ஒரு பக்கத்தில் மாநில சுயாட்சிக்காகத் தியாகம் செய்வோம் என்று சொல்கிறீர்கள். இப்படி

சொல்லிக்கொண்டிருப்பதால் என்று நீண்ட நாளாக [illegible]. திண்டு[illegible] கல்லில் என்று [illegible] [illegible]. கொயம்புத்தூரிலோ என்று [illegible] [illegible] பதவிசெய்கொள்ளும் [illegible]. கொயம்புத்தூர், திண்டுக்கல்லை [illegible] உங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு வேறு இடம் கிடையாது. அங்கே பணத்தைத் செலவழிப்பதற்குப் பயன்படவில்லை அப்படியிருந்தும் என்று [illegible].

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : [illegible] என்று தெரிந்து கொண்ட பிறகு கீழே இறங்கி என்னுடையதை நன்றுடைது நான் [illegible] இறங்கி [illegible].

திரு. பெ. சீனிவாசன் : என்னுடையதை நன்றாவையும், கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் உள்ள காளைப் போன்று நல்ல காளைபோல் இருந்தால் நன்றாயிருக்கும். ஆனால், இது "[illegible]" செய்யப்பட வேண்டிய என்பது, [illegible] பாக்கம் இல்லாத என்பது, சக்கரம் இல்லாத வண்டி, யார் தள்ளினாலும் இது ஓடாது. இந்தக் காயலான் கடைக்குப் போக வேண்டியது தான்.

எனவே, இந்த அடிப்படையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை இங்கே படிப்பதற்கு—"மாரல் பைண்டிங்" என்று சொன்னார்களே—அப்படி [illegible] இந்த ஆட்சிக்கு இல்லை. எனவே இந்த அடிப்படையில் இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதையாவது சொல்ல வேண்டுமானால் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று நாங்கள் சொல்கிறோம். [illegible] பண்ணுகிறோம். அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் [illegible] இல்லை என்று சொல்லுவது உங்களுடைய வேலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய பழக்கமே பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு வேறு எதையாவது சொல்லி[illegible]றீர்கள்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : பாயாளருமன்ற முறைப்படிதான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் [illegible] செய்கிறோம்.

Whether it is in order or not, it is for the Hon. Speaker to decide.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று எழுந்திருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் பாயிண்ட் ஆஃப் ஆர்டரை [illegible], பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டு வேறு சில விளக்கங்களைச் சொல்கிறீர்கள்.





திரு. எம். சுரேந்திரன் : திரு. கிருஷ்ணமூர்த்தி எழுப்பியது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லவில்லையே.

திருமதி. த. ந. அனந்தநாயகி : எப்பொழுதும் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இருக்காது. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லி ஒருவருடைய பேச்சை நிறுத்த, தடுக்க, பேச்சின் போக்கைக் குறைக்க பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புகிறார்கள்.

Points of order can be raised. Sometimes it may be point of order and sometimes it may not be point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம், அப்படி எழுப்பும் பொழுது பாயிண்ட் ஆப் ஆர்டர் என்னவென்று சொல்ல வேண்டும். நான் சொல்வது என்னவென்றால், திருமதி அனந்தநாயகி அம்மையார் எழுந்திருக்கின்ற ஒவ்வொரு நேரத்திலேயும் பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொன்னதில்லை. அதிலே விளக்கம் சொல்ல, தங்கள் கருத்தைச் சொல்லப் பயன்படுத்துகிறார்கள். அது முறையல்ல என்பதற்காகத்தான் சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நாங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புகிறோம். சட்டசபை உறுப்பினர்களுக்கு விதிமுறைகள் தெரியவில்லை என்று சொல்லுகிறீர்கள். அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறதா இல்லையா என்று புத்திசாலித்தனமாக ஸ்பீக்கர் சொல்லுங்களேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ மேட்டர் ஆப் பிரிவிலேஜ் சார். மாண்புமிகு தலைவர் அவர்கள், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கூறும்பொழுது அது எப்பொழுதுமே பாயிண்ட் ஆப் ஆர்டராக இராது என்று ஜெனரலாகக் கூறியது சரியானது அல்ல. ஒரு வேளை சில நேரங்களில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் யார்பேரிலே பிரிவிலேஜ் எழுப்புகிறீர்கள்.

THIRU J. JAMES : Sir, what I say is , . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு வழக்கறிஞர். நீங்கள் பிரிவிலேஜ் எழுப்புகிறீர்கள் என்றால் யார் பேரிலே பிரிவிலேஜ் எழுப்புகிறீர்கள் ?

THIRU J. JAMES: Sir, what I say is, the Hon. Speaker himself has allowed on several occasions points of order raised by the hon. Member, Thirumathi Anandanayaki . . . [1974 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல முறை அவர்கள் எழுப்பியிருக் கிற பொழுதெல்லாம் நான் அனுமதித்து, அவர்கள் பேசிய பேச்சுக்களை யெல்லாம் பலமுறை கவனித்ததால்தான் சொல்கிறேன். அந்த அம்மையார் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகின்ற ஒவ்வொரு நேரத்திலேயும் பார்த்திருக்கிறேன். அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொல்வதில்லை, வேறு கருத்தைத்தான் சொல்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அதைத்தான் சொல்கிறேன். அந்த அம்மையார் ஒவ்வொரு முறையும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பியது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல என்று நாங்கள் கூறியது தவறு. பலதடவைகளில் அம்மையார் அவர்கள் எழுப்பியது பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, Generalization is not fair . . .

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பிய பொழுது, வழக்கமாக நீங்கள் இர்ரெலவெண்ட்டாக எழுப்புகிறீர்கள், பாயிண்ட் ஆப் ஆர்டராக இருப்பதில்லை என்று தாங்கள் சொன்னீர்கள், அதற்கு விளக்கம் சொன்னீர்கள், நான் பலமுறை பார்த்திருக்கிறேன், அனுபவத்தின் மூலமாகச் சொல்கிறேன் என்று கூறினீர்கள். அப்படி பத்து தடவை கள் எழுந்தால், 9 தடவைகளில் பாயிண்ட் ஆர்டர் இல்லாமலிருந்து ஒரு தடவை பாயிண்ட் ஆப் ஆர்டராக எழுப்பியிருந்தாலும் அதற்கு சட்டமன்ற உறுப்பினருக்கு உரிமையிருக்கிறது விதி முறைகளிலே. அந்த அம்மையார் அவர்கள் சொல்வதைக் கேட்டுவிட்டு பிறகு பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லையென்றால், இதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை, இப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று அடிக்கடி எழுகிறீர்கள் என்று சொல்லியிருந்தால் அதைப் புரிந்துகொள்ளலாம், அது சரியாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் சொல்வதற்கு முன்னாலேயே நீங்கள் சொல்கிறீர்கள். அது மட்டுமல்ல, நண்பரவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல் பல முறை அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது என்று ஒத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, இம்மாதிரி சொல்வது முறையல்ல, என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்பதற்கு முன்னாலேயே! இப்படிச் சொல்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. காமாட்சி அவர்கள் ஒரு விளக்கம் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். விளக்கம் சொல்வதற்கு இடமில்லை என்று சொல்லிவிட்டேன். ஆனால் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று குறிப்பிட்டால் அப்படி உட்கார வைக்க முடியாது. அந்த முறையிலே அந்த ஆயுதத்தை திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று . . .



1974 மார்ச் 12] [பேரவைத் தலைவர்]

விளக்கம் கேட்கிறார்கள் என்றுதான் சொன்னேன். விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் விளக்கம் சொல்லவேண்டுமென்று வாருங்கள். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லும் நேரத்தில் அவையின் விதிமுறைகள், மரபுகள் மீறும் நேரத்தில் பின்பற்ற வேண்டிய முறையாகும் என்ற கருத்தில் சொன்னேனே தவிர, பாயிண்ட் ஆப் ஆர்டரே எழுப்ப வேண்டா மென்று சொல்லவில்லை.

திரு. நா. வீராசாமி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது "புத்திசாலி ஸ்பீக்கர்" என்று . . .

திரு. முனு ஆதி : அவர் பேசுவதற்கு நீங்கள் பர்மிஷன் கொடுக்க வில்லை. அவருக்கு மட்டும் மைக் எப்படி வேலை செய்கிறது ? நாங்கள் பேச எழுந்தால் மைக்கை "ஆப்" செய்து விடுகிறீர்கள்.

திரு கே. டி. கே. தங்கமணி : May I make a submission? பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்பது என்பது ஒவ்வொரு உறுப்பினருக்கும் கொடுத்திருக்கக்கூடிய உரிமையாகும். "May at any time submit a point of order for the decision of the Speaker" என்று இருக்கிறது.

ஆகவே, பாயிண்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணும் போது இந்த விதிமுறைகள் ஒழுங்காகக் கையாளப்படுகின்றனவா என்று சில விஷயங்களைக் கூற முயற்சிக்கலாம். சொல்வது பூராவும் சரியில்லாமல் இருக்கலாம். அதிலே இறுதி முடிவு செய்ய வேண்டியது தாங்கள்தான். பத்து பாயிண்ட் ஆப் ஆர்டரை ரெய்ஸ் பண்ணியிருக்கலாம் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் தன்னிலை விளக்கம் என்று சொல்லியோ, விளக்கம் பெற விரும்புகிறேன் என்று சொல்லியோ உறுப்பினர்கள் எழுந்து நிற்க வேண்டாமென்று சொல்ல வில்லை, கேட்க வேண்டாமென்று சொல்லவில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து அப்படிக் கேட்கலாமா ?

திரு. கே. டி. கே. தங்கமணி : தெளிவாகச் சொல்லலாம். திருமதி அனந்தநாயகி போன்றவர்கள் சட்ட மன்றத்தில் பல ஆண்டுகள் இருந்தவர்கள். அவர்கள் விதி தெரியாதவர்கள் அல்ல. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று அவர்கள் எழுந்தவுடன் அவர்கள் என்ன சொல்லு கிறார்கள் என்று கேட்டுவிட்டு பிறகு "There is no point of order" என்று தாங்கள் முடிவு செய்யலாம். பலரும் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று விளக்கம் கேட்கிறார்கள், வேறு சிலவற்றைக் கூறுகிறார்கள். அதற்காக உறுப்பினர் கிளப்புகிற விஷயங்கள் எதுவுமே பாயிண்ட் ஆப் ஆர்டராக இருப்பதில்லை என்று சொல்வது இருக்கிறதே அது கொஞ்சம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் தொடர் கூட்டம் ஆரம்பித்ததிலிருந்து அம்மையார் அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எத்தனை தடவை எழுந்திருக்கிறார்கள்; அவற்றில் எல்லாவற்றிலேயே [illegible] தொகுத்துத் தருகிறேன். அதைக் கொண்டு நீங்களே பார்க்கலாம்.

திருமதி அனந்தநாயகி அவர்களை எழுந்திருக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன், எக்ஸ்பிளனேஷன் கொடுக்கிறார்கள் என்று சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நாங்கள் பேச ஆரம்பித்தால் டைம் ஆப் ஆகிவிடுகிறது. திடீரென்று டைம் ஆப் ஆகிவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பேசும்போது அங்கே "ஆப்" ஆகும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் வேதனையோடு சொல்ல விரும்புகிறேன், டைம் சம்பந்தமாக ஏற்கெனவே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். எங்களைப் போன்றவர்கள் எழுந்து பேசும்போது டைம் ஆப் ஆகிவிடுகிறது. ஆனால் சில பேருக்கு வேகமாக வருகிறது. டைம் ஆப்பரேட்டருக்குத் தாங்கள் கொஞ்சம் கைடன்ஸ் கொடுக்கவேண்டும். இருந்தாலும் பொதுவாக மெம்பர் பேசுகின்ற விஷயங்கள் பூராவுமே தவறு என்ற முறையில் சொல்லக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தவறு என்று சொல்லவில்லை. வழக்கமாக அந்த முறையைக் கையாள வேண்டாமென்பதற்காகத்தான் சொன்னேன். கேட்க வேண்டாமென்று சொல்லவில்லை.

*திரு. முனு ஆதி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, நாங்கள் எங்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியவர்கள். அவர்களும் இதே மாதிரி செய்திருக்கிறீர்கள். எழுந்த உடனே "உட்கார்—உட்கார்" என்று சொல்லிவிடுவீர்கள். நாங்கள் என்ன திரு. திருஞானமூர்த்தியைப் போல் எம். ஏ., பி. எல்லா? பாயிண்ட் ஆப் ஆர்டர் இருக்கிறதா என்று பார்த்து எழுப்புவதற்கு? நாங்கள் எழுப்புகின்ற விஷயங்களுக்கு நீங்கள் ரூலிங் கொடுக்கலாம். நீங்கள் எங்களுக்கெல்லாம் பயிற்சி கொடுக்க வேண்டும். எங்களுக்கு ஒன்றும் தெரியாது. நான் எழுந்து ஏதாவது சொல்வதற்கு முன்னாலேயே "முனு ஆதி உட்கார்—உட்கார்—உட்கார்" என்று சொல்லி விடுகிறீர்கள். தப்பு இருந்தால் திருத்துங்கள். எப்போது எழுந்தாலும் "முனு ஆதி—உட்கார்" தான். பேசிய பிறகுதான் உட்கார முடியும். எங்களுடைய கருத்தைச் சொல்லுகிறோம். சட்டத்திற்குப் புறம்பாக இருந்தால் திருத்திக் கொள்ளுகிறோம். எங்களுக்கு வாய்ப்பூட்டுப் போட வேண்டாம். உரிமையைப் பறிக்காதீர்கள். "உட்கார், உட்கார்" என்று சொல்லி என்னைப் பேச விடுவதே இல்லை.



திருமதி த. ந. அனந்தநாயகி: பர்சனல் எக்ஸ்பிளனேஷன். Rule 83 says that a point of order may be raised in relation to the business before the House at the moment. பேசிக் கொண்டிருக்கிற விஷயத்தைப்பற்றி பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். சான்ஸ் கொடுத்தால் பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் கேட்கலாம். தன்னைப் பற்றி இருந்தால் செல்ஃப் எக்ஸ்பிளனேஷன் கொடுக்கலாம். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று நடுவில் சொல்லுவதில் தவறு இல்லை. சிலவற்றைச் சொல்ல நடுவிலே எழுந்து நிற்கிறோம். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி விஷயத்தைச் சொல்லுகிறோம். அப்படிக் கேட்டு ஒரு நிமிஷம் பேசப் போகிறோம்; ஒரு பிரசங்கமா செய்யப் போகிறோம்? என்ன சொல்கிறோம் என்று கேட்டுவிட்டு தீர்ப்புச் சொல்லுங்கள். அங்கத்தினர்களுக்கு இருக்கக்கூடிய உரிமையைப் பாதுகாக்க வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை என்று சொன்னால் பரவாயில்லை. அனுபவத்தில்தான் கற்றுக் கொள்கிறோம். Every body learns by experience. ஆளும் கட்சி அங்கத்தினர்களாக இருந்தாலும் பரவாயில்லை. 174 பேர்கூடல் மெஜாரிடி-இருக்கிறார்கள். எதிர்க்கட்சிக்கு உள்ள உரிமையைப் பறிக்காதீர்கள். எதிர்க்கட்சியினரை உட்கார் என்று சொன்னால் அது என்ன நியாயம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் திருமதி அனந்தநாயகி அவர்களைக் கேட்பது—பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து பர்சனல் எக்ஸ்ப்ளனேஷனோ, மற்ற விளக்கங்களோ கொடுப்பதற்கு அதைப் பயன் படுத்திக் கொள்ளலாமா?

A member shall not raise a point of order to ask for information or to explain his position.

THIRUMATHI T. N. ANANDANAYAKI:—I have got to explain my position.

நாங்கள் பாலிசி கொஸ்டியனில் கிளாரிபை பண்ண உரிமை இருக்கிறது. கிளாரிபை பண்ண வேண்டுமென்று கேட்க உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று சொல்லிவிட்டேன். திரு மாணிக்கவாசகம்.........

*திரு. இரா. மாணிக்கவாசகம்: பேரவைத் தலைவர் அவர்களே அவைமுன் முதல்வர் அவர்களால் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன். இங்கே நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவில் ஒன்றை உணர்ந்து பார்த்திருப்பார்களேயானல் அது தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு ஏற்றதாக இருக்குமென்று கருதுகிறேன். இதைத்தான் வள்ளுவர்—

"கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம்; அஃதுஇன்றேல்
புண்ணென்று உணரப்படும்."

என்று கூறினர்.

[திரு. இரா. மாணிக்கவாசகம்] [1974 மார்ச்

இந்த வள்ளுவர் வாய்மொழியைக் கொஞ்சம் மனதில் ஏற்றுக் கொள்வோமேயானால் ஆளுகின்ற கட்சி—திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தந்துள்ள அறிக்கை, முதல்வர் டாக்டர் கலைஞர் தந்துள்ள அறிக்கை என்று பார்க்காமல், நேர்மையான கண்ணோட்டத்தில், நிதான மான கண்ணோட்டத்தோடு நடுநிலைக் கண்ணோட்டத்தோடு பார்த்திருப் பார்களேயானால் நிச்சயமாக நல்ல உள்ளம் படைத்த யாரும் மறுத் திருக்க மாட்டார்கள். ஆனால் இங்கு பார்ப்பதெல்லாம் அரசியல் கண்ணோட்டம் ஒன்றையே குறிக்கோளாக வைத்து விமர்சிக்கின்ற காரணத் தால் என்னைப் பொறுத்தவரை ஒன்று நினைக்கத் தோன்றுகிறது.

(திரு. குழ செல்லையா தலைமை)

ஓட்டு முறை இருக்கும் ஒரே காரணத்தால், ஓட்டுக்களைப் பெற வேண்டுமென்பதற்காக ஆள் சேர்க்கவேண்டுமென்ற ஒரே மனப் போக் கோடு வேண்டுமென்றே குற்றம் கூறுகின்ற தன்மை வளர்ந்திருக்கிற காட்சியை நாம் பார்க்க முடிகிறது. ஒரு புறத்தில் மீண்டும் மது விலக்கைக் கொண்டு வருகிற காரணத்தால் நம்முடைய வருவாயில் 25 கோடி ரூபாய்க்கு மேல் வருமானக் குறைவு வந்திருக்கிறது. மற் றொரு புறத்தில் மத்திய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய தொகையை முறையாக வழங்குவதற்கு மறுக்கின்றது, மறைக்கின்றது. இந்த இடைவெளியிலே நாம் நமக்குள்ள சக்தியை வைத்து, நமக்குள்ள ஆற்றலை வைத்து சிறுகக் கட்டிப் பெருக வாழவேண்டுமென்ற முதுமொழிக் கிணங்க கலைஞா அவர்கள் இந்த அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். மாற்றுக் கட்சியிலிருந்து பேசியவர்கள் இதை எதிர்க்கிறோம் என்றும் சொல்லவில்லை, வரவேற்கிறோம் என்றும் சொல்லவில்லை; வெறுமனே விமர்சனம் செய்திருக்கிறார்கள். இதிலிருந்து எப்படி எதிர்ப்பது என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அப்படி அதைச் சொல்லியிருக்கிறார்கள்.

எதற்கெடுத்தாலும் மத்திய அரசு, மத்திய அரசு என்று சொல் கிறீர்களே, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். அவர்கள் எதற்கெடுத்தாலும் மாநில அரசு, மாநில அரசு என்று சொல் கிற தன்மையை உணர்ந்துதான் சொல்கிறார்களா என்று கேட்க விரும்பு கிறேன்.

இங்கு சர்க்கரை விலை ஏறினாலும் சரி அல்லது உரத்தின் விலை ஏறின லும் சரி அல்லது சீமையெண்ணெயின் விலை ஏறினாலும் சரி அதற்குக் காரணம் மாநில அரசுதான் என்ற எண்ணத்தை மக்கள் மத்தியில் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தெரிந்து சொல்கிறார்களா அல்லது தெரியாமல் சொல்கிறார்களா என்பது சில சமயங்களில் நமக்குப் புரிவதில்லை. ஆனால் அரசியல்வாதிகள் எல்லாவற்றிற்கும் காரணம் மாநில அரசுதான் என்று மக்களிடையே குற்றஞ்சாட்டி வருகிறார்கள்.

நாங்கள் மத்திய அரசைப் பற்றிச் சொல்கிறோம் என்றால் உண்மை நிலையை உணர்ந்து எங்களுக்கு ஆதரவாக, எங்களுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும், நம் மாநில மக்களுக்கு நன்மை செய்வதற்காக என்பதற்காகத்தான் சொல்கிறோமே தவிர வேறு அல்ல. ஆனால் அதை எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள் என்று மட்டும்தான் அவர் கள் கருதுகிறார்கள்.



1974 மார்ச் 12]

திரு கே.டி.கே. தங்கமணி : அவர்கள் சொன்னார்கள் கேரளாவிற்கு அரிசி அனுப்புவது குறித்து நாடாளுமன்றத்தில் எங்கள் உறுப்பினர் தான் குரல் எழுப்பியிருக்கிறார்கள் என்று. பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் வரும் என்று எதிர்பார்த்திருந்தோம்.

கோவை மாவட்ட மக்களை இலவு காத்த கிளிபோல் ஆக்கிவிட்டார்கள். அத்திட்டம் குறித்து நாம் அத்தனைக் கட்சிக்காரர்களும் சேர்ந்து கேரள அமைச்சர்களிடம் சென்று மறு பரிசீலனை செய்ய வழி வகுப்போம் என்று திரு தங்கமணி அவர்கள் சொல்வார்கள் என்று நான் எதிர் பார்த்தேன். கோவை மாவட்ட மக்கள் மீது அவர்களுக்கு இரக்கம் இருந்திருக்குமானால் இப்போதே புறப்படுங்கள், அதற்கு ஒரு திட்டத்தை உருவாக்கவேண்டும். நாளையே சென்று அங்குள்ள அமைச்சர் பெரு மக்களைச் சந்திப்போம் என்று அதற்கு ஒரு வழி சொல்லியிருப்பார்களே யானால் நிச்சயமாக அவர்களுக்குத் தமிழ் மக்களின் மீது, கோவை மாவட்ட மக்கள் மீது அக்கறை இருக்கிறது என்று கருதியிருப்பேன். ஆனால் அவர்கள் அதுபற்றி ஒன்றும் சொல்லவில்லை. மராட்டிய மாநில உறுப்பினரைப் பற்றித்தான் சொன்னார்கள். மத்திய அரசு போட்டி ருக்கிற வரிகளைச் சுட்டிக்காட்டி அவைகளை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்னார்கள். ஒரு பக்கம் எதிர்க்கிறோம் என்று சொல்லிவிட்டு மறு புறம் அரசு அமைவதற்கு ஆதரவு தந்துகொண்டிருக்கிறார்கள். இரட்டை வேடம் போடுகிறார்கள். இரட்டை மனிதன் என்ற நாடகம் எனக்கு நினைவிற்கு வருகிறது. ஜார்ஜ் ஸ்டீவன்ஸன் தீட்டிய டாக்டர் ஜெக்கிள் அண்ட் மிஸ்டர் ஹைட் வருவதுபோல், உணவுப் பொருள்களின் விலை ஏறிவிட்டன என்றால், ஏறிவிட்டது ஏறிவிட்டது என்று சொல்லுகிறார் கள். அதே சமயத்தில் அவற்றை உற்பத்தி செய்பவர்களுக்கு விலையை அதிகரித்துத் தரவேண்டும் என்றும் சொல்கிறார்கள்.

*திரு. ஆர். பொன்னப்ப நாடார் : டாக்டர் ஜெக்கிள் ஆண்ட் மிஸ்டர் ஹைட் போல் என்று ஆளும் கட்சியை நாங்கள் கூறினால் அதை ஏற்றுக் கொள்ள நீங்கள் தயாராகயிருக்கிறீர்களா ?

திரு. இரா. மாணிக்கவாசகம் : எந்தக் கட்சியிலிருந்து சொன்னாலும யார் எதைச் சொன்னாலும், நல்லதைச் சொன்னால் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

என்பது வள்ளுவர் வாக்கு. உற்பத்தி செய்கிறவர்களுக்கு அதிக விலை கொடுக்கும்போது கொள்முதல் விலையும் அதிகரிக்கத்தான் செய் யும்—கொள்முதல் விலை அதிகரிக்கும்போது விற்பனைக்கு வரும்போது அதன் விலையும் அதிகரிக்கத்தான் செய்யும். (மணி அடிக்கப்பட்டது). நான் இப்போதுதான் பேசுவதற்கு என்னைத் தயார்படுத்திக் கொண்டி ருக்கிறேன். ஆரம்பித்து இரண்டு மூன்று நிமிடங்கள்தான் ஆகின்றன. அதற்குள் உட்கார வேண்டுமென்று சொன்னால் எப்படி? ஒரு ஆண்டாக எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லை. ஆகவே தாற்காலிகத் தலைவர் அவர்கள் கருணை கூர்ந்து எனக்கு சிறிது

நேரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூன்று நிமிடங் களாவதுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தேர்தலில் உங்கள் கட்சி தோற்றுவிட்டது, ஆகவே ராஜிநாமா செய்யுங்கள் என்று சொன்னார்கள்.

> "வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
> தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று."

என்று வள்ளுவர் சொல்கிறார். எங்கள் தோழர்கள் அடிபட்டிருக்கிறார்கள். ஒரு ஹரிஜனத் தோழர் மதுக்கரையின் பக்கத்தில் வாக்குக் கேட்கச் சென்றபோது கட்டி வைத்து உதைக்கப்பட்டிருக்கிறார். போலீஸில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் சொல்கிறார்கள், எங்கள் தோழர்கள் அடிபட்டார்கள் என்று. வேண்டுமென்றால் இதை குறித்து ஒரு விசாரணை செய்து நாணயமுள்ள அதிகாரிகளை, பொதுத் துறையில் இருப்பவர்களைக் கொண்டு அங்கு ஒரு விசாரணை வைப்பார் களேயானால் யார் யார் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை புலனாகும். அதை மக்கள் மன்றமும் தெரிந்துகொள்ளவேண்டும். ஆகவே அதற்கான வழிவகை காணவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதி பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விழை கிறேன். என் தொகுதியில் ஜம்புகொண்டி ஆறு அணைக்கட்டுத் திட்டம் மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்டது. ஆனால் அது இன்னும் நடைமுறைக்கு வந்தபாடில்லை. ஆகவே அதை அருள்கூர்ந்து விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாவட்ட மக்கள்தான் சென்னை உயர்நீதி மன்றத் தில் அதிகமான வழக்குகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். அங்கிருந்து இங்கு வர போக்குவரத்துச் செலவு அதிகமாகிறது. பொருளாதார வசதி குறைவாக இருப்பதால், கோவையில் ஒரு சர்க்யூட் பெஞ்ச் துணை நீதிமன்றம் ஒன்று நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பால் உற்பத்தித் திட்டத்திற்காகப் பண ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அத்திட்டத்தை மலைவாசி மக்க ளுக்குத் தருவார்களானால் அவர்கள் நிச்சயமாக அதனால் பலனடைய முடியும். அதனால் அவர்கள் பொருளாதார நிலையும் மேம்பாடு அடைய முடியும்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கக்கூடிய இந்த நேரத் தில் பல்வேறு இலாக்காக்களில் ஓவர்டைம் கொடுக்கிறார்கள். அப் படிக் கொடுப்பதன் காரணமாக அத்துறையின் வேலைகள் நிச்சயமாகப் பாதிக்கப்படுகின்றன. செய்யவேண்டிய நேரத்தில் வேலைகளைச் செய்வ தில்லை. பின்னர் வேலை செய்து ஓவர்டைம் வாங்குகிறார்கள். வேலை யில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கும் இந்த நேரத்தில் இப்படி ஓவர்டைம் கொடுப்பதைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறன்.





அதேபோல் விவசாயிகளுக்கு உரம் கிடைப்பதில்லை என்று சொல்கிறார் கள். கிடைக்கக்கூடிய உரமும் குறைக்கப்பட்டிருக்கிறது மத்திய அரசால்: ஒருமைப்பாடு பேசுகிறவர்கள் இதை நினைவில் கொள்ளவேண்டும். அன்று விவசாய அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், நம் உற்பத்தி யில் நான்கில் ஒரு பங்கு கூட உரம் நமக்குக் கிடைப்பதில்லை என்று. ஆகவே நமக்கு உரம் கூடுதலாகக் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

நம் மக்களுக்கு உழைக்கும் மனோபாவம் இருக்கிறது, உடல் வலிவு இருக்கிறது, மன வலிவு இருக்கிறது, ஆனால் நமக்கு " நீர்வளம்தான் இல்லை.

அடுத்து, கோவை மாவட்டத்தில் ஒரு உரத் தொழிற்சாலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பின்தங்கிய பகுதிகளில் நல்ல முறையில் முழுமையாக நீர்ப்பாசன வசதிகள் செய்து தரப்பட்டால் மற்ற மாநிலங்களுக்கு உணவு வழங்குவதில் நாம் தாராள மனப்பான்மையை இன்னும் விரிவுபடுத்தமுடியும். ஆக, முதல் இடம் உரத்திற்கு அளிக்க வேண்டுமென்று விரும்பிவேண்டிக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. சித. சிதம்பரம்</u> : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற 1974-75ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதோடு எனக்கு இதன் மீது பேசுவதற்கான வாய்ப்பு தந்தமைக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல பல திட்டங்களை உருவாக்கி நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கி பலரும் போற்றத்தக்க அளவிற்கு நிலைமைகளை உருவாக்கி மேலும் அதுபோன்ற நிலைமைகளை உருவாக்கக்கூடிய விதத்தில் இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் மட்டுமல்ல எல்லாப் பகுதியில் உள்ள உறுப்பினர்களும் இதை வரவேற்கிறார்கள் என் பதைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். பாசன வசதிகளை சிறப்பாக ஆக்கவேண்டும். அப்படிச் சிறப்பாக்கினால்தான் நம் வேளாண்மை உற்பத்தியில் நாம் மறுமலர்ச்சி காணமுடியும் என்ற நம்பிக்கையை இந்த நிதிநிலை அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

(நண்பகல் 12-00.)

குறிப்பாக, இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளில் பாசன வசதி களை சிறப்புப் படுத்துவதற்காக மதுரை—இராமநாதபுரம் மாவட்ட பெரியாற்றுக் கால்வாய் மேம்பாட்டுத் திட்டத்தை அறிவித்து இருக்கிறார் கள். இந்த நல்ல திட்டத்தை நாங்கள் வரவேற்று இந்த அரசாங்கத் திற்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். இந்தத் திட்டத்தின் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளில் பாசன வசதி

[திரு. சித. சிதம்பரம்] [1974 மார்ச் 1[illegible]

ில்லாத இடங்களுக்கும் பயன் அளிக்கும் வகையில்—இன்னும் கூடுதல் செலவாலும்—நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு 1 கோடி ரூபாய் கடன் அளித்ததை ரத்து செய்து ஒரு நல்ல நடவடிக்கையை எடுத்து இருக்கிறார்கள். இந்தக் கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நூலைச் சரியாக வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. இந்த ஒரு கோடி ரூபாய் கடனும் சரியாக விநியோகிக்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது. எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில், இந்த ஒரு கோடி ரூபாய் கடனைப் பெற்று அங்கேயிருக்கும் கைத்தறி நெசவாளர் களுக்கு நியாயமான முறையில் அளிக்கப்பட்டு இருக்கிறது. வழங்கப் பட்ட நூலையும் நியாயமாகப் பங்கு போட்டு வழங்கியிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட நல்ல நடவடிக்கைகளை எடுத்த இந்த அரசாங்கத்திற்கு என்னுடைய பகுதி மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டுப்பாடாக, நூல் போதுமானதாக இல்லை என்ற குற்றச்சாட்டை எல்லோரும் சொன்னார்கள். நான் மட்டுமல்ல, மற்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, நம்முடைய மாநில அரசாங்கமே மத்திய அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டியிருக்கிறது. நம்முடைய கைத்தறி நெசவாளர் களுக்கு வேண்டிய நூலை நாம் பிரித்து வழங்கும் பொறுப்பைத் தரவேண்டுமென்று மத்திய அரசுக்குப் பல முறை எழுதியிருக்கிறோம். எல்லா நெசவாளர்களுக்கும் நூல் நல்ல முறையில் கிடைப்பதற்கு அரசு மத்திய அரசிடம் வற்புறுத்திச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ வசதியைப் பொறுத்தவரையில் இந்த அறிக்கையில் நல்ல திட்டங்கள் பல இருக்கின்றன. பல ஒன்றியங்களில் இருக்கும் மருத்துவ மனைகளையெல்லாம் அரசு எடுத்து நடத்துமென்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அரசாங்கம் அந்த முயற்சியில் வெற்றியும் கண்டு இருக்கிறது. அதேபோல் காரைக்குடி நகராட்சி மருத்துவ மனையை அரசினர் மருத்துவ மனையாக ஆக்கி, கூடுதல் படுக்கை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை நாம் சொல்லி அதற்கு அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது. ஆகவே, கூடுதல் படுக்கை வசதியை உடனடியாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வி வசதியைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசாங்கம் சிறப் பாகக் காரியங்களைச் செய்து வருகிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் இப்போது இருக்கும் பல்கலைக்கழகங்கள் 2—3 போதாது என்பதைச் சுட்டிக்காட்டி, புதிதாகப் பல்கலைக்கழகங்கள் துவங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் புதிதாக பல்கலைக்கழகங்கள் ஆரம் பிக்கிறபோது காரைக்குடி அழகப்பா கல்லூரியையும் இணைத்து, ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 12] [திரு. சித. சிதம்பரம்]

நம்முடைய கல்வியமைச்சர் அவர்களும், மத்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களும் மத்திய மந்திரி சி. சுப்பிரமணியம் அவர்களும் காரைக்குடி அழகப்பா கல்லூரி வெள்ளி விழாவிற்கு வந்திருந்த போது அங்கேயிருந்த மக்கள், பல்கலைக் கழகம் வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மத்திய அரசாங்கத்தில் அதற்கு ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் இதைக் கவனித்து அங்கே காரைக்குடியில் ஒரு பல்கலைக்கழகம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிகளை நாம் அதிகமாகப் பெருக்கி வரும் நேரத்தில், பெண் களுக்கு என்று தனியாகப் பள்ளிகள் நிறுவ வேண்டுமென்று சென்ற ஆண்டு நம்முடைய அரசாங்கம் முடிவு செய்து இருக்கிறது. அந்த அடிப்படையில் காரைக்குடியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி வேண்டுமென்று சென்ற ஆண்டே கேட்டிருந்தோம். இந்த ஆண்டாவது அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகராட்சிகளைப் பொறுத்தவரையில் உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவது என்பது இயலாத காரியம் என்பதால் நம்முடைய அரசாங்கமே அவற்றை எடுத்து நடத்த வேண்டும். காரைக்குடி நகராட்சி உயர்நிலைப் பள்ளியையும் அரசு எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

வீட்டு வசதி வாரியம் பல இடங்களில் செம்மையாக, சிறப்புற பணி செய்து கொண்டிருக்கிறது. அது எல்லா இடங்களுக்கும் பரவ வேண்டும். மதுரையில் இருக்கும் வீட்டு வசதி வாரியத்தின் பகுதி காரைக்குடி பகுதியிலும் அமைக்கச் செய்ய வேண்டுமென்பதற்கு இந்த அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசாங்கம் குடிநீர் வாரியம் அமைத்து பல ஊர்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதன் பணி சிறப்புற நடைபெறுகிறது. அதனுடைய அடிப்படையில் இந்த நிதி நிலை அறிக்கையில் 11,814 குடிநீர் வசதித் திட்டங்களை செய்து தர அரசு முயற்சிகளைக் எடுத்துக்கொண்டு வருகிறது. அதேபோல் எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் சாக் கோட்டை ஊராட்சிக்கு எந்தவிதமான குடிநீர் திட்டப் பணிகளும் செய்யப்படவில்லை. அங்கே அப்படிப்பட்ட பணிகள் நடக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வாரியம் நகராட்சிப் பகுதிகளில் இரண்டு பிரிவுகளாகப் பிரித்து குடிநீர் வசதித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. காரைக்குடி நகராட்சியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, ஒரு பகுதியில் பணி முடிந்து விட்டது. இரண்டு பகுதிகளையும் முடித்தால் தான் குடி நீர் சப்ளைசெய்ய முடியும். காரைக்குடியில் மட்டும் இப்படி இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு வேலை நடக்கவில்லை. எல்லாப் பகுதிகளிலும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே, இந்த நிலைமையைப் பற்றி அரசாங்கம் நல்ல முறையில் பரிசிலனை செய்து அந்தத் திட்டங்கள் சிறப்புற அமைவதற்கு முறையான நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சித. சிதம்பரம்] [1974 மார்ச் 12

வணிக வரி வியாபாரிகளின், வர்த்தக சங்கங்களின் நீண்டநாளைய வேண்டுகோளை ஏற்று நம்முடைய அரசாங்கம் அதை இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறது. பலமுனை வரியாக இருந்ததை, 59 பொருள்களுக்கு ஒரு முனை வரியாக இந்த மாநில வரி விதிப்பின் மூலம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை வியாபாரப் பெருங்குடி மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். இந்த அரசாங்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதே போல் பல நல்ல திட்டங்களை உருவாக்கி, சிறப்பான முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்தின் நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எ. சுவாமிதாஸ் : மாற்றுத் தலைவரவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் பேரில் ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்க விழைகிறேன்.

சென்ற ஆண்டு பட்ஜெட் தொகையிலே ஒதுக்கிய தொகையை விட இந்த ஆண்டு வருவாய் பெருக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம். அதனாலே மட்டுமல்ல: செலவும் கட்டுப்பாடாக இருக்கிறது. அப்படியிருந்தும் ஒரு பற்றுக் குறை பட்ஜெட் கிட்டத்தட்ட $12\frac{1}{2}$ கோடி ரூபாய்க்கு இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள். நாம் ஆண்டு தோறும் பட்ஜெட் போடுகிறோம். ஆனால், நாம் எண்ணுகிற அளவிற்கு நாட்டு மக்கள் முன்னேற்றம் அடைந்து இருக்கிறார்களா ? அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் காணப்படுகிறதா ? நாம் நினைத்த அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம் தீர்ந்து இருக்கிறதா ? விலைவாசி குறைக்கப்பட்டு இருக்கிறதா ? மக்களுக்கு நிம்மதி கிடைத்து இருக்கிறதா ? அடித்தளத்திலுள்ள சாதாரண ஏழை எளிய மக்கள் முதல் நடுத்தர மக்களிலிருந்து பணக்காரர்கள் வரையில் யாருக்காவது இந்த பட்ஜெட்டால் நிம்மதி ஏற்பட்டு இருக்கிறதா ? என்று பார்த்தால் பணக்காரர்களுக்கும் நிம்மதி இல்லை. வரி எங்களுக்கு அதிகம் போடுகிறார்க என்று சொல்கிறார்கள். நடுத்தர மக்கள், அரசாங்க ஊழியர்க அவர்களுக்கும் நிம்மதி கிடைக்கவில்லை. அதைவிட அடித்தளத்தி இருக்கும் 60 சதவீத மக்கள் ஏழை எளிய நடுத்தர மக்கள் கூலி வேலை செய்து பிழைக்கும் மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் அவர்களுக்காவது ஏதாவது நன்மை கிடைக்கிறதா என்று பார்த்தால் மத்திய அரசு போட்டிருக்கும் பட்ஜெட்டாலும் கிடைக்கவில்லை, மாநி அரசு பட்ஜெட்டாலும் கிடைக்கவில்லை.

சென்ற ஆண்டு எந்த வேதனைகள் இருந்தனவோ அந்த வேதனைகள், அந்த விளைவுகள் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கின்றன. என்றைக்குத்தான் இந்த நாட்டு மக்களுக்கு விமோசனம் கிடைக்குமோ—மத்திய அரசு பட்ஜெட்டானாலும் சரி, மாநில பட்ஜெட்டா னாலும் சரி—அது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.



1974 மார்ச் 12] [திரு. எ. சுவாமிதாஸ்]

இந்த ஆண்டு பார்த்தால், சென்ற ஆண்டை விட மோசமான நிலை இருக்கிறது. பட்ஜெட் போடுவதற்கு முன்னாலேயே நாட்டில் விலைவாசி, பண்டங்களின் விலை ஏறிவிடுகிறது. அதைத் தடுப்பதற்கு இந்த நாட்டிலே யாருக்கும் அதிகாரம் இல்லையா ? மத்திய அரசுக்கும் இல்லையா ? மாநில அரசுகளுக்கும் இல்லையா ? பின்னர் யாருக்குத்தான் அதிகாரம் இருக்கிறது என்று தெரியவில்லை. பட்ஜெட் வருவதற்கு முன்னாலே எல்லாப் பொருள்களும் பிளாக் மார்க்கெட், பதுக்கல் ஆகிவிடுகிறது என்பதைப் பார்க்கிறோம். மாநில அரசாங்கத்தைக் கேட்டால் மத்திய அரசாங்கம் பொறுப்பு என்று சொல்கிறார்கள். மத்திய அரசாங்கத்தைக் கேட்டால் மக்கள் பொறுப்பு என்று சொல்கிறார்கள். விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசு, மாநில அரசு என்று வேறுபாடு சொல்ல முடியாது. யார் இந்த விலை ஏற்றத்தைப் பொறுத்துக்கொள்வது,

ஆள்வோருக்கு நாடு பூராவிலும் இருக்கிற மக்கள் வாழ வேண்டுமென்ற நல் உணர்வு இல்லை. மக்களுக்கும், தங்களுடைய வாழ்க்கையில் நிம்மதியாக வருங்காலத்தில் வாழ முடியும் என்று நம்பிக்கையில்லை. ஆகவே, பணக்காரர்கள் இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்தால் அதனால் தன் சந்ததி பலன் அடையுமே என்று சொல்லிப் பாடுபடுகிறார்கள். சமூகத்தின் நடுநிலையில் இருப்பவர்கள் இன்னும் கொஞ்சம் பணம் சேர்த்து பணக்காரர்களாக ஆக வேண்டுமென்று விரும்புகிறார்கள். அடித்தளத்தில் இருக்கிறவர்கள்? என்ன நினைக்கிறார்கள் ? நாமும் சுகமாக வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

இது ஒரு வெல்ஃபேர் ஸ்டேட், நமக்கு இந்த நாட்டில் பாதுகாப்பு உண்டு. எப்படியாவது வாழ முடியும், வருங்கால சந்ததிக்குக் கூட வாழ வழி வகை இருக்கிறது, நிம்மதியாக வாழலாம் என்ற எண்ணம் ஒரு மனிதனுக்கு ஏற்பட வேண்டும். அந்த எண்ணம் இருந்தால்தான் பிளாக் மார்க்கெட் இருக்காது, பதுக்கல் இருக்காது, ஆனால், தற்போது எப்படியாவது சம்பாதிக்க வேண்டும், திருடியாவது சம்பாதிக்க வேண்டும். ஆள் மேலே கிருஸி செய்தாவது சம்பாதிக்க வேண்டும் என்ற அடிப்படை எண்ணம் மனதிலே இருக்கிறது. அந்த அடிப்படை எண்ணத்தை மாற்றி அமைக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான திட்டங்களை வகுக்க வேண்டும்.

எந்த வரி போட்டுப் பணம் வாங்கினாலும் சரி, மக்கள் மனதிலே நல்லெண்ணம் ஏற்பட வேண்டும். சாதாரணமாக ஊழியர்களை எடுத்துக்கொள்ளுங்கள். என். ஜி. ஓக்கள் 500 ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்கள் நிம்மதியாகத் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியும் என்ற எண்ணம் இப்பொழுது அவர்களிடத்தில் இல்லை. தங்களுடைய குழந்தைகளுக்கு ஒழுங்காகக் கல்வி புகட்ட முடியும்,

வருங்காலத்தில் அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை. அந்த நம்பிக்கை இல்லை. அந்த நம்பிக்கை இழப்பின் காரணமாக இத்தகைய நிலை நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு வெல்ஃபேர் ஸ்டேட் என்பதற்கு என்ன திட்டங்கள் வேண்டுமோ அவைகளை அடிப்படைத் திட்டங்களாக வைத்துக்கொண்டு நாம் செயல்பட வேண்டும். அதற்குரிய காரண காரியங்கள் இந்த பட்ஜெட்டில் இல்லை என்பது குறித்து நான் வேதனைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த நிதி நிலை அறிக்கையிலே மக்களுடைய நல் வாழ்வுக்குத் தேவையான திட்டங்களெல்லாம் இல்லை இல்லை என்று குறைப்படுகிறார்கள். எப்படிப்பட்ட திட்டங்களை இன்றைய பொருளாதார நிலையில் கொண்டுவர முடியும் என்று ஒரு காலத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தவர் சொல்ல வேண்டும்.

திரு. எ. சுவாமிதாஸ் : 1966-ல் நான் இந்த மன்றத்தில் இருந்தேன். 1966-67-ல் அன்றிருந்த பொருளாதார அடிப்படையில் 194 கோடி ரூபாய்க்கு, கிட்டத்தட்ட 195 கோடி ரூபாய்க்கு வரியைப் போட்டு அன்றிருந்த அரசு ஓரளவுக்கு திட்டங்களை மேற்கொண்டது. விலைவாசிகளை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும், ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 1966-67-ல் இருந்த விலைவாசி, அன்றிருந்த நிதி நிலைமை, மக்கள் உள்ளத்தில் இருந்த பயமற்ற தன்மை இன்று இருக்கிறதா? அப்படியிருந்தபொழுது எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் மக்கள் மன்றத்தில் என்ன சொன்னார்கள் ?....

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : 1966-67-ல் அரிசி என்ன விலை விற்றது ? இன்றைக்கு என்ன விலை விற்கிறது ?

திரு. எ. சுவாமிதாஸ் : நான் அந்த நேரத்தில் இங்கு இருந்தேன். சென்னையிலேயே ரூபாய் 1, $1\frac{1}{2}$ விற்றது படி அரிசி. நீங்கள் ரூபாய்க்கு 3 படி போடுவதாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கன்னியாகுமரியிலிருந்து கேரளாவுக்கு அரிசி போகிறது என்று இந்த அவையிலே பல முறை சொல்லப்படுகிறது. போகிற இடத்திலுள்ள விலையைப் பார்க்கக் கூடாது. இருக்கிற இடத்திலுள்ள விலையைப் பார்க்க வேண்டும். தமிழ் நாட்டில் என்ன விலை ? அன்றைக்குத் திருச்செங்கோட்டில் படி அரிசி 3 ரூபாய். இன்றைக்கு நாமக்கல், மோகனூரில் படி அரிசி ரூபாய் $1\frac{1}{4}$, $1\frac{3}{4}$.

திரு. எ. சுவாமிதாஸ் : அன்று சென்னையில் அரிசி வாங்குவதற்குக் கிடைக்கவில்லை. படி அரிசி விலை ரூபாய் 1, 2 என்று இருந்தது. அன்றைக்கு இருந்த நிலைமை நாட்டில் நான்கு வருடங்களாகத் தொடர்ச்சியாக மழை இல்லை. உற்பத்து இல்லை'



உற்பத்தி இல்லாத காரணத்தினால் மக்களுக்கு அரிசி கிடைக்க வழியில்லை. பல இடங்களில் அரிசி கிடைக்காத நிலை. அதை எதிர்க்கட்சியினர் பயன்படுத்திக்கொண்டார்கள். இல்லை என்று சொல்லவில்லை.

சென்னையில் கூட நான் கண்ணாலே பார்த்தேன் . 500 பேர்கள் ஒரே சமயத்தில் க்யூ வரிசையில் நின்று கொண்டிருப்பார்கள். அரிசி கிடைக்கவில்லையென்றால் அதற்கு பதுக்கல் தான் காரணம். நாங்கள் கேள்விப்பட்டது உண்மை. அன்றிருந்த ஃபுட் சப்ளை கார்ப்பரேஷன் செயலாளர் 50,000 டன் அரிசியை வைத்துக்கொண்டு சென்னை நகர மக்களைப் பட்டினி போட்டார்கள். அரிசி இருந்தும் பட்டினி போட்டார்கள். அரசாங்க இயந்திரத்தை அன்றிருந்த ஆளும் கட்சியினர் ஒழுங்காகப் பயன்படுத்தியிருந்தால் அந்த நிலை ஏற்பட்டிருக்காது. அது தப்பு தான், ஒத்துக்கொள்கிறேன்.

இன்று விலைவாசி எப்படியிருக்கிறது? அன்றைக்கு நீங்கள் சொன்ன வாக்குறுதிகள் என்ன ஆயிற்று ? ஒரு ரூபாய்க்கு 3 படி அரிசி போடுவோம் என்று கூறினீர்கள். போட்டீர்களா ? நான் சொன்ன, அடித்தளத்தில் இருக்கிற, தினசரி கூலி வேலை செய்கின்ற, ரூ.2, ரூ. 3 சம்பாதிக்கிற கூலி வேலை செய்பவர்கள் பிரச்னை இன்னும் தீர்க்கப்படவில்லை. காங்கிரஸ் ஆட்சியிலும் தீர்க்கப்படவில்லை 20 ஆண்டுகளாகியும். இப்பொழுதும் அந்தப் பிரச்னை தீர்க்கப்படவில்லை. அதனால் தான் நாட்டில் ஆளும் கட்சிக்கு எதிர்ப்பு அதிகமாக இருந்துகொண்டிருக்கிறது. எதிர்க்கட்சிகளுக்கு வரவேற்பு அதிகமாக இருக்கிறது. மக்கள் மத்தியில் ஆளும் கட்சிக்கு வரவேற்பு இல்லை. 60 சதவிகிதம்—ஏழை மக்கள்—ஆளுகின்றவர்கள் பேரில் நம்பிக்கை இழந்து இருக்கிறார்கள். அன்றைக்கு காங்கிரஸ் கட்சிக்கு அதே கதி தான் ஏற்பட்டது. இப்பொழுது ஆளுகின்ற தி.மு.க.விற்கும் அதே கதி தான் ஏற்பட்டிருக்கிறது.

ஆளும் கட்சியைப்பற்றி அவர்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்தால், எதிர்க்கட்சியினருக்கு அதிக ஆதரவு கிடைக்கிறது. அதன் காரணமாகத் தான் அண்ணா தி.மு.க. ஜெயித்திருக்கிறது. அவர்களுக்கு எதிராக இன்னொரு கட்சி ஏற்பட்டால், ஆளும் கட்சிக்கு எதிராக அவர்கள் பிரசாரம் செய்தால், அவர்களுக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும். இந்த அரசின் பேரில் மக்களுக்கு நம்பிக்கை இல்லை. மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் இன்னும் தீரவில்லை.

இன்றைக்கு இருக்கிற பட்ஜெட்டில் மக்களுக்குச் செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நாம் யாருக்குத் திட்டங்களைப் போட்டிருக்கிறோம் ? அரசாங்க ஊழியர்களுக்கு, மத்திய தர வர்க்கத்தினருக்குப் போட்டிருக்கிறோம். ஆனால் அடித்தளத்தில் இருக்கும் கூலி வேலை செய்பவர்களுக்குப் போகவில்லை. பணக்காரர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஏழை மக்களுக்கு இல்லை. இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு பாதுகாப்பு இருக்கிறது. கூலி வேலை செய்பவர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது. அதனால் தான் ஆளுகின்றவர்கள் பேரில் அவர்களுக்கு எப்பொழுதும் வெறுப்பு. ஒரு விரக்தி ஏற்படுகிறது.

[திரு. எ. சுவாமிதாஸ்] [1974 மார்ச் 12

தேர்தலுக்கு முன்னால் எதையெதையோ பேசுகிறோம். "நீங்கள் தான் இந்த நாட்டு மன்னர்கள், எங்களுக்கு வோட்டுப் போடுங்கள்" என்று கேட்கிறோம். "ரூபாய்க்கு 3 படி அரிசி போடுகிறோம். வரியைக் குறைத்து வசதியைப் பெருக்குவோம். நாங்கள் ஆட்சிக்கு வந்தால், வோட்டுப் போடுங்கள் எங்களுக்கு" என்று சொன்னீர்கள். ஆனால் அவர்களுடைய பிரச்னை இன்னும் தீரவில்லை. அண்மையில் நடந்த தேர்தலில் ஆளும் கட்சி தோற்றதற்கு அது தான் முக்கிய காரணம்.

திரு. சீனுவாசன் அவர்கள் பேசுகின்றபொழுது கட்சிக்குள் பேசிய பேச்சுக்களையெல்லாம் மன்றத்தில் பேசினார். அவர்கள் வேதனையை கட்சிக்குள்ளே சொல்லியிருக்கலாம். எந்தக் கட்சி ஆகட்டும், மக்களுக்குச் செய்யவேண்டிய நலன்களை உறுதியாகச் செய்துகொண்டிருக்க வேண்டும். எங்கேயோ இருந்துகொண்டு எதையெதையோ சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது.

1965-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம். அன்று ஆட்சி செய்த காங்கிரஸ்காரர்கள் நன்றாகச் சொன்னார்கள். இந்தியைக் கட்டாய பாடமாகத் திணிக்கவில்லை. படிக்க விரும்புகிறவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். யார் படிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்களோ அவர்கள் படிக்கலாம். யாரும் படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தவில்லை. தேர்வு எழுத வேண்டாம். அதற்கு மார்க்கு வேண்டியதில்லை. காங்கிரஸ்காரர்கள் பன்னிப் பன்னிச் சொன்னார்கள். யார் கேட்டார்கள் ? கட்டாய பாடமில்லை என்று சொன்னார்கள். அப்பொழுது இந்தி அரக்கி என்றெல்லாம் சொன்னீர்கள். இப்பொழுது தி.மு.க. தோழர்களே சொல்கிறார்கள். மாணவர்களுக்கு மத்திய அரசில் வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை, காரணம் இந்தி படிக்கவில்லை என்கிறார்கள். அவர்களே மாறிவிட்டார்கள். இதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நாம் செய்த தவறுகளை உணர்ந்து, மக்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டும். எல்லா கட்சிகளும் சேர்ந்து 60 சதவீதம் மக்களுக்கு, கூலி வேலை செய்கின்ற மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க முன்வரவேண்டும். பட்ஜெட்டில் அதைப்பற்றிய திட்டம் ஒன்றும் இல்லை.

அரசாங்கம் கல்விக்காக எவ்வளவோ செலவழிக்கிறது. வரவேற்கிறோம். சுகாதாரத்திற்காக செலவழிக்கிறது.

குறைந்த பட்சம் சேரிவாழ் மக்களுக்கு குடிக்கின்ற தண்ணீர் கிடைக்கின்றதா என்றால், இல்லை. சேரி என்றால் அரிசன சமூகத்தைச் சேர்ந்த மக்கள் மாத்திரம் என்பது அல்ல. எல்லா சமுதாயத்தில் இருக்கிற மக்களும் சேரி வாழ் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். நாட்டை வாழ வைக்கிறவர்கள் அவர்கள் தான். நிலத்தில் வேலை செய்வதும் அவர்கள் தான். வீடு கட்டுபவர்களும் அவர்கள் தான். மற்றபடி கூலி வேலை செய்பவர்களும் அவர்கள் தான். மண் சுமக்க வேண்டுமென்றாலும் அவர்கள் தான் சுமக்கிறார்கள். விறகு வெட்ட வேண்டுமென்றாலும்



1974 மார்ச் 12] [திரு. எ. சுவாமிதாஸ்]

அவர்கள் தான் வெட்டிக்கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட வேலைகளைச் செய்பவர்கள் அடித்தளத்தில் இருக்கிற 60 சதவீத மக்கள் தான். அவர்களுக்குப் பாதுகாப்பு கிடையாது. மதுவிலக்குத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் அவர்களின் நிலையை எண்ணியேதான் மகாத்மா காந்தி அடிகள் மதுவிலக்கைக் கொண்டு வந்தார்கள். அவர்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்ற அடிப்படையில் தான் மதுவிலக்கு கொண்டுவரப் பட்டது. முதலில் மதுவிலக்கு முழுமையாக எடுக்கப்பட்டது. இப் பொழுது மறுபடியும் மதுவிலக்கை படிப்படியாக அமுலுக்குக் கொண்டு வருகிறார்கள். ஆனால், முழுமையாக மதுவிலக்கைக் கொண்டுவந்துவிட வேண்டும். வருவாயை மட்டும் பார்ப்பது என்பது கூடாது. அடித் தளத் தில் இருக்கிற மக்கள் நம்பிக்கையோடு வாழவேண்டும். பூரண மது விலக்கைத் தாமதம் இல்லாமல் அமுலாக்க வேண்டும்.

கல்வியைப் பொறுத்தவரையில் அறிவு வேறு, நல்ல குணம் வேறு. ஒருவர் எம்.ஏ. படித்திருக்கலாம். பி.ஏ.பி.எல். படித்திருக்கலாம். நல்ல குணம் வேறு. படித்துவிட்ட காரணத்தினாலேயே நல்ல குணம் வந்து விடாது. படிக்காதவர்களிடம் நல்ல குணம் இருக்கும். படித்தவர்களிடம் நல்ல குணம் இல்லாமல் இருக்கலாம். ஆகவே, நம்முடைய கல்வி முறையில் தகுந்த மாற்றம் செய்யவேண்டும்.

இப்பொழுது சமீப காலமாக இருக்கிற போக்கைப் பார்த்தால், ஒழுங் கான போக்காக இல்லை. எங்கும் ஒரு கட்டுப்பாடு இல்லை. இண்டிஸிப் பிளிண்டு லைஃப். அதற்குப் பரிகாரம் கல்வி தான் பள்ளி களில் கல்வி புகட்டும்பொழுதே நன்னடத்தை, நல்லொழுக்கம், போதிக் கப்பட வேண்டும். ஒரு நியாயமான நம்பிக்கை மக்கள் மத்தியிலே ஏற்பட வேண்டும். இளம் சிறுர்கள் வருங்கால சந்ததியினர். இப் பொழுது உள்ள சமுதாயம் போகட்டும், வருங்கால சந்ததிகளாவது கட்டுப்பாடு, நல்லொழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். அரசாங் கம் அதற்குத் தகுந்தபடி தங்களுடைய திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டும். கல்வி முறையை மாற்றி சீரமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறுபது சதவீதம் மக்களுக்கு அரிசி கிடைக்கவில்லை. மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை. இப்படியிருக்கும்பொழுது பூம்புகாருக்கு என்ன அவசியம் இருக்கிறது ? கூவம் சீரமைப்புக்கு என்ன அவசியம் இருக்கிறது ? இருக்கிறது ? கூவம் சீரமைப்புக்கு என்ன அவசியம் இருக்கிறது ? கரெண்டு பற்றாக்குறை இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது கூவத்தின் நடுவே ஒரு ஸ்பிரிங். அங்கே லைட் போட்டு இல்யூமினேஷன். "கும்பி எறிகிறது, குடல் கருகுகிறது, குளு குளு ஊட்டி உனக்கு ஒரு கேடா" என்றெல்லாம் அன்றைக்குச் சொன்னார்கள். இன்றைக்கு பூம்புகார், கூவம், கட்டபொம்மன் நினைவுக்கோட்டை இதற்கெல்லாம் என்ன அவசியம் இருக்கிறது ? முதலில் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டு, பிறகு வேண்டுமானால் அப்படிப்பட்ட கலை, இலக்கியம், வரலாறு ஆகிய துறைகளில் செலவழிக்கலாம். திரு. சீனுவாசன் அவர்கள் சொன்னதுபோல், இதெல்லாம் விளம்பரத்திற்காகச் செய்வதுதான். அரசு இதை உணர்ந்து திருத்திக் கொள்ள வேண்டும்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 மார்ச் 12

தமிழ் மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும். மத்திய அரசிடம் எதை எதையெல்லாம் கேட்டு வாங்க வேண்டுமோ அவைகளைக் கேட்டு வாங்கி நமக்கு உரிய பங்கைப் பெறவேண்டும். அது விஷயத்தில் நாங்கள் ஆளும் கட்சிக்கு ஒத்துழைப்பு அளிக்கத் தயாராக இருக்கிறோம். நமக்கு வேண்டிய உரிமைகளை மக்கள் தொகையின் அடிப்படையில், 4½ கோடி மக்களுக்கு அந்த விகிதாசாரப்படி மாநில அரசு கேட்டுப் பெற வேண்டும். அதே மாதிரி மாநில அரசும் மக்கள் தொகையின் அடிப்படையில், அந்த விகிதாசாரத்தில் பஞ்சாயத்துக்களுக்கும், முனிசிபாலிடிகளுக்கும் பாகுபாடு இல்லாமல், நேர்மையான, நியாயமான முறையில் உரிமைகளைப் பெற்றுத் தந்து, உதவிகளைச் செய்யத்தான் வேண்டும்.

இப்பொழுது எம்.எல்.ஏ ஹாஸ்டலில் போய்ப் பார்த்தால் தெரியும். ஒவ்வொரு எம்.எல்.ஏ.வையும் சுற்றி 200, 300 பேர் காத்திருக்கிறார்கள். எல்லோருமே வேலை வாங்கித் தாருங்கள். வேலை வாங்கித் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாட்டு மக்கள் முன் ஞல் நாங்கள் ஒரு தரகர் கூட்டம் போல இருக்கிறோம். அரசாங்க அதிகாரிகளுக்கும், நாட்டு மக்களுக்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்ற தரகர் போல இருக்கிறோம். அரசாங்க அதிகாரிகள் தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்தால் எங்களுக்கு இந்தத் தரகர் வேலை இருக்காது. நிர் வாகத்தில் இருக்கிற கோளாறுதான் இதற்குக் காரணம்.

நிர்வாக இயந்திரத்தை முடுக்கிவிட்டு, அதிகாரிகள் ஒழுங்காகப் பணி யாற்றுகிறார்களா என்று நீங்கள் கண்காணித்து வந்தால் மக்களும் எங்களிடம் வரமாட்டார்கள். மக்கள் குறைகளை இங்கே எடுத்துச் சொல்ல தாங்கள் இருக்கிறோம். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சரவை இருக்கிறது. ஆகவே, நீங்கள் சரியாகச் செயல்பட்டால், நியாயமான காரியங்களை அதிகாரிகள் செய்யத் தவறினால், நீங்கள் அவர்களைக் கூப்பிட் டுச் சொன்னால் மக்கள் குறைகள் தீரும், அதிகாரிகள் ஒழுங்காகக் கடமை யாற்றுவார்கள்; எங்களுக்குத் தரகர் வேலை இருக்காது; உங்களுக்கும் பொறுப்பு குறையும்; நீங்கள் நிம்மதியாகத் தூங்கலாம். இப்போது உங்களுக்குத் தூக்கம் கூட சரியாக வராது. அந்த அளவுக்குத் தொல்லைகள் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்கு உங்களுடைய நிர்வாகம்தான் காரணம். அதிகாரிகள் சரியாக பணியாற்றாமல் இருக்கிறார்கள் இப்போது. ஆளும் கட்சிக்காரர் போனால் ஒரு பதில் சொல்கிறார்கள்; எதிர்க்கட்சிக் காரர்கள் போனால் ஒரு பதில் சொல்கிறார்கள். அப்படி இல்லாமல் யார் போனாலும் அதிகாரிகள் ஒழுங்காகக் கடமையாற்றுகிறார்களா என்பதை நீங்கள் கண்காணித்து கொள்ளவேண்டும். அந்த அளவுக்கு நிர்வாகத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் பேச முற்படுகிறேன். 1967-க்குப் பின்னால் ஒரு பைசா வேலை கூட அங்கே நடைபெறவில்லை. ஒரு தொழிற்சாலை கூட தொடங்கப்பட வில்லை. அங்கே கன்னியாகுமரி மாவட்டத்திலிருக்கிற மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு ஓட்டுப் போட்டார்கள் என்ற காரணத்தினாலோ என்னவோ அந்த மாவட்டம் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. ஆட்சி நடத்துகின்றவர்கள்



1974 மார்ச் 12] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

அந்த மாதிரி எண்ணக்கூடாது. ஒரு ஜனநாயக நாட்டிலே வாழ்கின்ற மக்கள் தங்கள் விருப்பம்போல் ஓட்டுப்போட உரிமை பெற்றவர்கள். அவர் களை இன்னாருக்குத்தான் ஓட்டுப்போட வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. தங்கள் விருப்பம் போல் யாருக்கு வேண்டுமானாலும் ஓட்டுப் போடலாம். அதற்காக, காங்கிரஸ் கட்சிக்குத்தானே ஓட்டுப் போட்டார்கள் என்பதற்காக எங்கள் மாவட்ட மக்களைப் புறக்கணிக்கக்கூடாது. அமைச்சர் களின் கருணை அந்த மாவட்டத்திற்கும் இருக்க வேண்டும். கொஞ்சம் கருணை காட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பைப் பொறுத்தவரையில், 1972-73, 1973-74 ஆகிய ஆண்டுகளில் படித்த மாணவர்கள், பட்டதாரிகள், நல்ல திடகாத்திரமான வர்கள் எஸ்.ஐ. செலக்ஷனுக்காக வந்தார்கள். அவர்களில் ஒருவருக்குக் கூட செலக்ஷன் கிடைக்கவில்லை. அதனால் அங்கே உள்ளவர்கள் என்ன பேசுகிறார்கள் தெரியுமா? 10,000, 20,000 ரூபாய் இருந்தால் எதாவது ஒரு எம்.எல்.ஏ.யைப் பிடித்து வேலை வாங்கிவிடலாம்; இல்லாவிட்டால் நமக்கு ஒன்றும் கிடைக்காது என்று சொல்கிறார்கள். அந்த எண்ணம் அவர்களுக்கு வரக் கூடாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 10,000, 20,000 ரூபாய் ஒரு சட்ட மன்ற உறுப்பினருக்குக் கொடுத்து வேலை வாங்கிவிடலாம் என்று கருத்துப்பட அங்குள்ள மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படி சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர் பணம் வாங்கிக்கொண்டு, வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறார் என்ற தகவலை நடவடிக்கை எடுப்பதற்காக அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: என் கையில் அப்படிப்பட்ட ஆதாரம் எதுவும் கிடையாது. மக்கள் மத்தியிலே இந்தமாதிரியான ஒரு எண்ணம் பரவிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மக்கள் மத்தியிலே தவறான எண்ணம் ஏற்பட்டுவிட்டால் அதைப் போக்க வேண்டியது உங்களைப் போன்றவர்களுடைய கடமை. ஆதாரம் இல்லாதபோது ஒரு சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையுமே மக்கள் இப்படிக் கருதுகிறார்கள் என்ற தவறான கருத்தை இந்த அவையிலே வைக்க லாமா?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

திரு. ஏ. சுவாமிதாஸ்: அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி. சட்டமன்ற விடுதியில் வந்து பார்த்தால் தெரியும். அங்கே எவ்வளவு பேர் எம்.எல்.ஏ.க்களைப் பார்ப்பதற்காகக் கூடியிருக்கிறார்கள் என்பதை அங்கே பார்க்கலாம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கூட்டம் வருவது பாப்புலாரிட்டி யைக் காட்டுகிறது. அங்கத்தினரைச் சுற்றிக் கூட்டம் வருகிறது என்றால் அது அவர்களுடைய செல்வாக்கைக் காட்டுகிறது என்றுதான் அர்த்தம்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : அப்படி ஒன்றும் எனக்கு செல்வாக்கு இல்லை. 400, 500 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்து, இந்த எம்.எல்.ஏ-ஐ அழைத்துச் சென்றால் வேலை கிடைக்குமா, அந்த எம்.எல்.ஏ-ஐ அழைத்துச் சென்றால் வேலை கிடைக்குமா, எந்த அமைச்சரைப் பார்க்கலாம் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் வருகிறார்களே தவிர, செல்வாக்குக்காக யாரும் வரவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கனம் அங்கத்தினர் அவர்கள் எந்தக் காரியத்திற்கும் எந்த அமைச்சரையும் பார்க்கக்கூடாது என்ற நியதி ஏதாவது வைத்திருக்கிறார்களா ? அல்லது யாரையாவது பார்த் திருக்கிறார்களா ?

திரு. ஏ. சுவாமிதாஸ் : பார்க்காமல் இருக்க முடியுமா ?

திரு. கு. காமாட்சி : நீங்களே போய்ப் பார்க்கும்போது நாங்கள் பார்க்காமல் இருக்க முடியுமா ?

திரு. ஏ. சுவாமிதாஸ் : சில முக்கியமான காரியங்களுக்கு அமைச்சர் களைப் பார்க்கிறோம். ஆனால் அமைச்சர்களையே சுற்றிக் கொண்டிருக்க மாட்டோம்.

அரசியலிலே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கருத்து வேறுபாடு எதனால் ஏற்பட்டது ? ஆரம்பத்தில் இப்படிக் கொஞ்சம் கொஞ்சம் விட்டுக் கொடுத்ததால்தான். அவ்வப்போது தவறுகள் நடப்பதாகத் தெரிந்ததும் அதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது.

1971-லே மதுரையிலே நடைபெற்ற மாநாட்டிலே பேசினீர்கள். எம்.ஜி.ஆர். அவர்களும் மேடையிலே பேசினார்கள். அப்போது எம்.ஜி.ஆர். என்ன பேசினார் ? பெரியோர்களே, தாய்மார்களே, சகோ தரர்களே, சகோதரிகளே, இந்த காமராஜர் கலைஞரைப் பார்த்து லஞ்சம் வாங்கினார் என்று சொல்கிறார் ; எங்கே பார்த்தாலும் ஊழல் ஊழல் என்று சொல்கிறார் ; அது முழுக்க முழுக்க பொய் என்று சொன்னார். அப்படிச் சொல்லி ஆறு மாதம்கூட ஆகவில்லை. தி.மு.க. ஆட்சியில் ஊழல், ஊழல், லஞ்சம் என்று சொல்லி ஊழல் பட்டியல் எல்லாம் போட்டார்கள். பொதுமக்கள் எப்போதும் ஆமா போடுகிறார்கள் காமராஜர் பொய் சொல்கிறார் என்று சொன்னபோதும் ஆமா போட்டார்கள் தி.மு.க. தான் நல்ல ஆட்சி நடத்துகிறது என்று சொன்ன போதும் ஆமா போட்டார்கள் ; இப்போது தி.மு.க. ஊழல் ஆட்சி நடத்து கிறது என்று சொல்லும்போதும் ஆமா போடுகிறார்கள். பொதுமக்கள் ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்றால் அவர்களுக்கு இருக்கின்ற வேதனைதான். யாராவது வந்து நம்முடைய குறையைப் போக்க மாட்டார்களா என்ற எண்ணம் பொதுமக்களுக்கு. தாழ்ந்த நிலையிலே இருக்கின்ற 60 சதவிகித மக்களின் தேவை பூர்த்தியாவதற்கு வழி ஏற்படவில்லை. அதனால்தான் அப்படிச் சொல்கிறார்கள்.



ஆளும் கட்சியில் இருந்தபோது எம்.ஜி.ஆர். அப்படிச் சொன்னாரே ; இப்போது இப்படிச் சொல்கிறாரே என்று யாரும் சிந்திக்கவில்லை. அப்படிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டால் இப்படிச் சொல்ல மாட்டார்கள். அவர் களுடைய நிலைமை அப்படி இருக்கிறது. ஊர்ப் பிரச்சினையைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : மக்கள் சிந்திக்கவில்லை என்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இதை—மக்கள் நிலையை—சிந்தித்துப் பார்க்கவில்லை என்பதை அவர்கள் அறிவார்களா ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சிந்திக்கின்ற திறமையும் ஆற்றலும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் துணைத்தலைவருக்கு மாத்திரமல்ல; காங்கிரஸ் கட்சியில் இருக்கிறவர்களுக்கும் இருக்கிறது என்பதை, தலைவரவர் களே, தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : சிந்திக்கின்ற ஆற்றல் இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கும் இருக்கிறது, வெளியிலே இருக்கின்ற மக்களுக்கும் இருக்கிறது என்பதை காங்கிரஸ் கட்சித் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மக்களை அவ்வளவு ஏமாளிகள் என்று கருதுகிறீர்கள் ?

திரு. சி.வே. வேலப்பன் : மக்கள் ஏமாளிகள் அல்ல என்பதைக் கோவையிலே காட்டினார்கள்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : மக்கள் ஏமாளிகள் அல்ல என்பதை திண்டுக் கல் தேர்தலிலிருந்து கோயம்புத்தூர் தேர்தல்வரை பார்த்திருக்கிறோம். திண்டுக்கல்லில் பெற்ற ஓட்டுமாதிரி பெற்றுவிடலாம் என்று நினைத்தீர்கள். ஆனால் கோவையில் கிடைத்தது 500 ஓட்டு, 2,000 ஓட்டு என்றுதான் இருக்கிறது. அடுத்த தேர்தல் வந்தால் இன்னும் எப்படி இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : இது குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று சொல்வதைப்போல் இருக்கிறது.

திரு. மு. சுருளிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1974-75ஆம் ஆண்டுக் கான—இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கின்ற—நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கி றேன்.

[திரு. மு. சுருளிவேல்] [1974 மார்ச் 12

இந்த மாநிலத்திற்கு இருக்கின்ற குறைந்தபட்ச அதிகாரத்தைக்கொண்டு
திருமதி இந்திரா காந்தி தலைமையில்
அரசு காட்டுகின்ற மாற்ருன்தான் மனப்பான்மையிலும், இருக்கக்கூடிய மத்திய
கட்சிதான் ஆட்சிபீடத்திலே அமரவேண்டுமென்று அரசியல் தன்னுடைய
பயன்படுத்துகின்ற ஆருவது நிதிக் குழுவினுல் தமிழகத்திற்கு ஆயுதமாகப்
இன்னலிம தமிழகம் இருந்தபோதிலும் ஒரு சிறப்பான ஏற்படுகின்ற
டாக்டர் கலைஞர் அவர்கள் அமைத்திருக்கிருர்கள். ஆட்சியை
தேவைகள் ஆருவது நிதிக் குழுவினுல் தூக்கி எறியப்பட்டிருக்கின்றன; தமிழகத்தின்
தமிழகத்திற்கு இன்னல்கள் ஏற்படுகின்றன என்பதை இந்த நிதி நிலை
அறிக்கையில் தெளிவாகக் கூறியிருக்கிருர்கள்.

[பிற்பகல் 12-30]

இருக்கின்ற குறைந்தபட்ச அதிகாரத்தை வைத்துக்கொண்டு, இந்த
மாநிலத்திலே இருக்கக்கூடிய சாதாரண மக்களுக்கு, உழைக்கக்கூடிய
மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த
அளவுக்குத் திட்டங்களைத் தீட்ட முடியுமோ அந்த அளவுக்குத் திட்டங்களைத்
தீட்டி, தாங்கக்கூடியவர்கள்மீது வரி விதித்து, தாங்க முடியாதவர்களுக்கு,
பொருளாதாரத்திலே நசுக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு வரி விலக்களித்து,
ஒரு புரட்சிகரமான சமதர்ம சமுதாயத்தை அமைக்கின்ற முறையில்
ஒரு மைல் கல்லாக இந்த பட்ஜெட்டை டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்
பித்திருக்கிருர்கள். ஆனுல் நேற்றையதினம் இந்த மன்றத்திலே பேசிய
மாண்புமிகு ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள்
திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் திறமை இல்லை ; ஆளுகின்ற ஆற்றல்
இல்லை என்றெல்லாம் கூறினுர்கள். மத்திய சர்க்கார் நம் மீது காட்டுகின்ற
மாற்ருந்தாய் மனப்பான்மையை நான் இந்த மன்றத்தில் உள்ள உறுப்பி
னர்களுக்கும், இந்த மன்றத்தின் மூலமாக வெளியில் உள்ள மக்களுக்கும்
சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எந்த எந்த வகையில் மத்திய அரசாங்கம்
நம்முடைய கோரிக்கைகளை எல்லாம் நிராகரித்திருக்கிறது என்பதைப்
பார்க்க வேண்டும். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் திராவிட
முன்னேற்றக் கழகத்துக்கு ஆளுகின்ற திறமை இல்லை என்று கூறினுர்கள்.
நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சாதாரண தொண்டன் என்ற
முறையில் சொல்லிக் கொள்வேன். திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத்
திறமையோ, ஆற்றலோ என்றைக்குமே பஞ்சம் வந்ததில்லை. இனியும்
பஞ்சம் வரப்போவதில்லை. இருக்கின்ற பிரச்னைகள் எல்லாம், திராவிட
முன்னேற்றக் கழகம் வைக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்று
வதற்கு அவர்களது கட்சியைச் சார்ந்தவர்களுக்கு சக்தி இல்லை என்பது
தான்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆற்றல் இல்லை என்பது பிரச்னை
இல்லை. இந்த மன்றத்தில் வீற்றிருக்கக்கூடிய மதிப்பிற்குரிய உறுப்பினர்
திருமதி அனந்தநாயகி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆருவது
நிதிக்குழு ஆகட்டும், அல்லது ஐந்தாவது நிதிக் குழு ஆகட்டும், அல்லது
1952-ல் இருந்து 1974வரை போடப்பட்ட நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களில்
ஆகட்டும் தமிழ்நாடு எந்தளவுக்குப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை
உணர்ந்து பார்த்தாக வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப்
பாடுபடுவதாக வாக்களித்து தமிழ்நாட்டு மக்களின் ஓட்டுக்களைப் பெற்று



1974 மார்ச் 12] [திரு. மு. சுருளிவேல்]

இங்கே வந்திருக்கக்கூடிய தமிழ் மகன் ஒவ்வொருவரும் இந்திரா காந்திக்கு இங்கே டமாரம் அடிக்க வேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டு, உண்மையான தமிழினப் பற்ருேடு சிந்தித்து ஆகவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : திருமதி இந்திரா காந்திக்கு டமாரம் அடிக்க வேண்டாமென்று பேசுகிருர். இது சட்ட சபையில் பேசக்கூடிய பேச்சா என்பதைத் தாங்கள் தயவுசெய்து சிந்திக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : டமாரம் அடிப்பது என்ற வார்த்தை அன்பார்லிமென்டரி அல்ல, ஜாலரா அடிப்பது என்பதில் இருந்து தொடங்கி டமாரம் அடிப்பதுவரை வந்திருக்கிறது. டமாரம் அடிப்பது என்பதற்குப் பதிலாக ஆதரிப்பது என்ற சொல்லை மாற்றிக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தச் சொல்லை நீங்களே மாற்றிக் கொள்ளுங்கள்.

திரு. மு. சுருளிவேல் : இந்திரா காந்தியை ஆதரிக்கின்ற மனப்பான் மையை விட்டுவிட்டு தமிழ் மகன் என்கின்ற உணர்ச்சியில் தங்களது மனச் சாட்சிக் கதவைத் திறந்துவிடும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய சர்க்கார் எல்லா மாநிலங்களிலும் சேர்ந்து 2,500 கோடி ரூபாயை எக்சைஸ் டியூட்டியாகப் பெறுகிறது என்ருல் அதில் 20 சத விகிதம், 500 கோடியை மாநிலங்களுக்காகவே ஒதுக்குகிறது. அப்படி ஒதுக்குகின்ற அந்த 500 கோடியை மாநிலங்களுக்கிடையே எந்த அடிப்படையில் பிரித்துக் கொடுக்கிருர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். மாநிலங்களில் உள்ள மக்கள் தொகை அடிப்படையில் 80 சத விகிதத்தைப் பிரித்துக் கொடுக்கிருர்கள். பாக்கியுள்ள 20 சத விகிதத்தை பின்தங்கிய நிலைமையைப் பார்த்து ஒதுக்குகிருர்கள். ஆனுல் துர்ப்பாக்கியமாகவோ, பாக்கியமாகவோ நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தமிழகத்தில் தீவிரமாகச் செயல்படுத்தி வந்திருப்பதின் காரணமாகக் கணிசமான அளவு மக்கள் தொகை குறைந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு கண்டிருக்கிற பல வெற்றிகளில் ஒன்று குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் நாம் அடைந்துள்ள வெற்றியாகும். ஆக, இந்திராகாந்தி அம்மையார் எக்ஸைஸ் டியூட்டி வருமானத்தை மக்கள் தொகை அடிப்படையில் 80 சத விகிதம் என்ற அடிப்படை யில் பிரித்துக் கொடுக்கிறபோது மக்கள் தொகை மிகுதியாக உள்ள பீஹார், உத்திரப்பிரதேசம் ஆகிய வடமாநிலங்கள்தான் அதிகப் பயனைப் பெறு கின்றன, நாம் பெற முடியவில்லை என்பதை வேதனையோடு இந்த அவைக்கு உணர்த்தாமல் இருக்க முடியவில்லை.

அதுமட்டுமல்ல, பின்தங்கிய நிலைமை என்று சொல்கிறபோது திரு. டி. பி தார் அவர்கள் எந்த அடிப்படையில் பின்தங்கிய நிலைமையை நிர்ணயித்து இருக்கிருர்கள் என்பதைப் பார்க்க வேண்டும். சமீபத்தில்

அவர் ஒரு அறிக்கையையே வெளியிட்டார். நேஷனல் பர் கேப்பிட்டா இன்கம், தனி நபர் வருமானம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கிறார்கள். இன்றைக்கு ஒட்டுமொத்தமாக இந்தியாவில் பர் கேப்பிட்டா இன்கம் 551 என்றால் திராவிட இனத்தைச் சேர்ந்த நான்கு தென் மாநிலங்களில் பர் கேப்பிட்டா இன்கம்—தமிழ்நாடு 558, ஆந்திரா 537, கேரளா 555, கர்நாடகம் 552—என்பதைத்தான் பெற்றிருக்கிறது.

திரு. டி.பி. தார் அவர்களின் அறிக்கையின்படி பாவர்டி லைன்—வறுமைக் கணக்கு அளவுகோல் என்று பார்த்தால், கிராமப் புறங்களில் உள்ளவர்கள் மாதம் 20 ரூபாய் வருமானந்தான் பெறுகிறார்கள். சென்னை, மதுரை போன்ற நகர்ப்புறத்தில் உள்ளவர்கள் மாதம் 30 ரூபாய்தான் பெறுகிறார்கள். திராவிட இனத்தைச் சேர்ந்த நான்கு மாநிலங்களையும் பாண்டிச்சேரியையும் சேர்த்துக் கொண்டால் இந்த ஐந்து மாநிலங்களிலும் உள்ள மொத்த ஜனத்தொகை இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் 13·58 கோடிதான். இதில் மிகவும் ஏழைகளாக இருப்பவர்கள் 7·12 கோடி. இவர்களும் 13·58 கோடியில் அடங்கியிருக்கிறார்கள். இந்த ஏழைகளின் மொத்த சத விகிதம் 53 சத விகிதமாகிறது.

அதே நேரத்தில், மேற்கிந்தியா என்கிற மகாராஷ்டிரா, குஜராத், கோவா, ஆகிய மூன்று மாநிலங்களிலும் அடங்கியுள்ள ஜனத்தொகை 7·80 கோடியாகும். இதில் ஏழைகள் 3·63 கோடி. மொத்தம் மக்கள் தொகையில் இது 46 சத விகிதமாகும்.

கிழக்கிந்தியா என்று சொல்லப்படுகிற பெங்கால், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா பீஹார், மணிப்பூர், நாகாலாந்து ஆகியவற்றில் மொத்த ஜனத்தொகை 14·24 கோடியாகும். இதில் ஏழைகள் 6·28 கோடி. இவர்களின் சத விகிதம் 44 சத விகிதம்.

வட இந்தியா என்று சொல்லக்கூடிய மத்தியபிரதேசம், உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, டெல்லி ஆகியவற்றின் ஜனத்தொகை 18·72கோடி. இதில் ஏழைகள் 7·6 கோடி. இவர்களின் சத விகிதம் 41 சதவிகிதம். இந்தியாவின் ஒட்டுமொத்தமான மொத்த ஜனத்தொகை 54·34 கோடி என்றால் அதில் ஏழைகள் மொத்தம் 24·69 கோடியாகும். இந்தக் கணக்கை எடுத்துக் கொண்டு பார்த்தால் திராவிட இனத்தைச் சேர்ந்த ஐந்து மாநிலங்களிலும் உள்ள ஏழைகளின் விகிதாச்சாரம் அதிகமாக இருந்துங்கூட கிராமந்தரங்களில் உள்ளவர்கள் 20 ரூபாய்தான் பெறுகிறார்கள். நகர்ப்புறங்களில் உள்ளவர்கள் 30 ரூபாய்தான் பெறுகிறார்கள் என்கின்ற உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டுங்கூட நமக்குரிய பங்கு ஒதுக்கப்படாதது ஏன் என்பதைத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஜனத்தொகை அடிப்படையைப் பார்த்தாலுங்கூட இந்தியா என்றால் உத்திரப்பிரதேசம்தான் என்பதாக பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் காலத்தில் இருந்தே கேலி செய்யப்பட்டு வந்துங்கூட இன்றையதினம்



மக்கள் தொகை அடிப்படையில் என்று சொல்லி உத்திரப் பிரதேசத்திற்கும், பீஹாருக்கும் எந்தளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஆர்டிகிள் 275-ன்படி பீஹார், உத்திரப்பிரதேசம் ஆகிய இரண்டுக்கும் ஐந்தாவது நிதி ஆணைக்குழுவில் எவ்வித தொகையும் ஒதுக்கப்படவில்லை. அலாட்மெண்ட் பெறுவதற்குரிய தகுதியையே அவை பெறவில்லை. ஆனால் தமிழகத்துக்கு ரூ. 22·82 கோடி அப்பொழுது ஒதுக்கப்பட்டது.

இன்று நான் கேட்க விரும்புகிறேன். ஆறாவது நிதி ஆணைக் குழுவின் நிலைமை என்ன ? டெல்லிக் கோட்டையில் உத்திரப்பிரதேசத் தேர்தலில் வெற்றி பெற்றால்தான் வீற்றிருக்க முடியும் என்கிற அடிப்படையில் இந்திராகாந்தி அம்மையார் ஒரு ஆண்டு வருமானத்தையே அந்த மாநிலத்தில் முடக்கியிருக்கிறார்கள் என்பதை மன்ற உறுப்பினர்கள் உணர்ந்தாக வேண்டும். ஐந்தாவது நிதி ஆணைக் குழுவில் ஒரு பைசா கூட பெறுவதற்கான தகுதிகள் எதுவும் இல்லாமல் இருந்த பீஹார், உத்திரப்பிரதேசத்துக்கு ஆறாவது நிதி ஆணைக்குழு பீஹாருக்கு 106.28 கோடியும், உத்திரப்பிரதேசத்திற்கு 198·83 கோடியும் பாபுலேஷன், பேக் வேர்டுனெஸ் என்ற அடிப்படையில் ஒதுக்கியிருக்கிறார்களே, தமிழகத்துக்குத் தரப்பட வேண்டிய பங்கு தரப்பட்டுள்ளதா என்பதை எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் குறிப்பாக திரு. பொன்னப்பநாடார் போன்ற காங்கிரஸ் காரர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஆறாவது நிதி ஆணைக்குழுவின் தலைவராக திராவிட இனத்தைச் சேர்ந்த மாநிலங்கள் ஒன்றிலிருந்து வந்தவர்தானே தலைமை வகித்தார்? அவர் அநீதி விளைவித்து விட்டார் என்று சொல்கிறாரா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நிதிக் குழுவின் தலைவர் நம்மைச் சேர்ந்தவர்தான். நம்மிடத்தில் அனுதாபம் உள்ளவர்தான். ஆனால் வரையறுத்துக் கொண்ட கொள்கை—பார்முலா யாருக்குப் பயன் தந்திருக்கிறது, நாம் உள்ளபடியே எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் தான் உறுப்பினர் எடுத்துக் காட்டி வருகிறார்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆல்இண்டியா லெவலில் மொத்த பாபுலேஷன், மொத்த தனி நபர் வருமானம் என்ன என்று பார்த்து அதற்குக் கீழாக உள்ள மாநிலங்களுக்கு உதவி செய்வது என்கிற ஒரு கொள்கையை கெயிடு லைன் ஆக வைத்துக்கொள்கிறபோது நம் மாநிலத்திற்கு எந்த வகையில் அநீதி ஏற்பட்டது? அல்லது நீங்கள் அதற்கு மாற்றாகக் கொடுத்த யோசனை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆல் இந்தியா பர்-காப்பிட்டாவை விட, அந்த அளவு அதிகமாக இருந்தால் முன்னேறிய மாநிலம் என்று வேற்றுமை காட்ட வேண்டும். ஆல் இந்தியா பர் காப்பிட்டாவை விட, ஸ்மால் பர்செண்டேஜ் ஹையர் என்பதற்காக

முன்னேறிய மாநிலம் என்று தள்ளிவைக்கப்பட்டு, ஸ்மால் பர்செண்டேஜ் லெஸ் என்பதற்காக மிகவும் பின்தங்கிய மாநிலம் என்று எடுத்துக்கொண்டு அவர்களுக்கு அதிக நிதி உதவி அளிப்பதால், தமிழ்நாடு போல் முன்னுக்கு வருகின்ற மாநிலங்கள் நிச்சயம் பாதிக்கப்படும். அப்படி பாதிக்கப்படாத வகையிலேதான் இந்த ஃபார்முலாவை மேற்கொள்ளவேண்டுமென்று தமிழக அரசு எடுத்துச் சொன்னது. ஆனாலும், தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய பங்கு கிடைக்காவிட்டால், தனக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்று மாண்புமிகு திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறார். you cook up your accounts and show the per capita income lower and then get it.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய கட்சியைச் சேர்ந்தவர்களே பொய்க் கணக்கைக் காட்டுங்கள், பலன் தேடுங்கள் என்று சொல்கிறார்கள். இந்த ஆலோசனையை இந்த வழக்கறிஞரிடம் நான் எதிர்பார்க்கவில்லை.

திரு. மு. சுருளிவேல் : இந்த நிலைமைக்குப் பரிகாரம் என்ன என்பதை மன்றத்திலே இருக்கிற அனைத்து உறுப்பினர்களும் தயவுசெய்து பரிசீலனை செய்ய வேண்டும். இன்றைய தினம் அரசியல் ஜனநாயகத்தைப் படுகொலை செய்வதில், நாட்டு மக்கள் ஆள அளித்த அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதில், திருமதி இந்திரா காந்தி அவர்கள் முன்னணியில் இருக்கிறார்கள். இந்த நாட்டிலே இருக்கிற பிரச்சினையைத் தீர்க்க இன்றைய தினம் முதல்வராக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிற டாக்டர் கலைஞர் காலடியிலே ஒரு பணிவான வேண்டுகோளை விடுக்கிறேன். இன்றைய தினம் பம்பாயிலே சிவசேனை மெனேஸ் இருப்பதைப்போல், இந்தியாவிலே இந்திரா காந்தி மெனேஸ், இந்திரா காந்தி வேவ் பரவிக் கொண்டிருக்கிறது. திருமதி இந்திரா காந்தி மெனேஸ்..

திரு ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்திரா காந்தி மெனேஸ் என்று சொல்ல வேண்டுமா என்பதை இந்த மன்றம் ஆலோசிக்க வேண்டிய விஷயம். மெனேஸ் என்று சொல்வது, பேராபத்து என்ற முறையிலே இருக்கிறது. அந்த வார்த்தையிலே கொஞ்சம் கடுமை இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்த மன்றம் அந்தக் கடுமை இல்லையென்று சொன்னால், நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒவ்வொருவரும் பேசும்போது வார்த்தைக்கு வார்த்தை இந்திரா காந்தி, இந்திரா காந்தி என்று சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல. எப்படி இருந்தாலும் அவர் 55 கோடி



மக்களுக்குப் பிரதமர். இப்படி எதற்கெடுத்தாலும் இந்திரா காந்தி, இந்திரா காந்தி என்று சொல்வது இந்த சட்டசபையினுடைய கண்ணியத்திற்கு உகந்ததா என்பதை சபாநாயகர் அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. நா. தருமலிங்கம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இந்தியப் பெரு நாட்டின் பிரதமராக இருக்கிற காரணத்தாலே, ஒவ்வொரு குடிமகனுக்கும் கேட்க உரிமை இருக்கிறது. அதை மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் தடுத்துப் பேசுவது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, உறுப்பினர் சுருளிவேல் பேசுகிறபோது, மத்திய சர்க்கார் தமிழ்நாட்டுக்கு மட்டும் பாதகம் செய்கிறது என்பது மாதிரி அவருடைய புரப்பகண்டா இந்த சட்ட மன்றத்திலே சொல்லப்படுகிறது. அதே நேரத்திலே, தமிழ்நாட்டிலே ஒவ்வொரு தொகுதிக்கும் வித்தியாசம் காட்டாமல், திராவிட முன்னேற்றக் கழகம் நடந்திருக்கிறதா என்பதை உலகம் அறியும். எதிர்கட்சி உறுப்பினர்களது தொகுதிகளுக்குப் பாரபட்சம் காட்டுகிறார்கள். பாக்வார்ட் ஏரியா ஏரியாவை எடுத்துக்கொண்டால், இராமநாதபுரம் பாக்வார்ட் ஏரியா என்று போட்டிருக்கிறார்கள், சரி மற்றவற்றில், எந்த எந்த ஏரியாவெல்லாம் பாக்வார்டாக இருக்கிறது? அதில், இந்த சர்க்கார் பாரபட்சம் காட்டுகிறதா, இல்லையா?

மத்திய அரசு, ஆறுவது நிதி ஆணைக்குழுவின் திட்டத்தைத் தள்ளி வைத்திருக்கிறது. அந்தக் குழுவிலே என்ன முடிவு எடுக்கப்படுகிறது என்று முடிவு இன்னும் வெளிவரவே இல்லை. அறிக்கையிலே மறுக்கப்பட்டது என்று ஒரு புரப்பகண்டா. இந்த புரப்பகண்டாவை வைத்துக் கொண்டு, இந்திரா காந்தி தமிழ்நாட்டிற்குப் பாதகம் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். இதே முதலமைச்சரவர்கள், இந்திரா காந்தி அம்மையாரைப் புகழ்ந்ததைப் போல், அகில உலகில் வேறு யாருமே புகழவில்லையென்பதை இப்பொழுது ஞாபகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதே இந்திரா காந்தி அம்மையாரை முன்பு புகழ்ந்ததிலிருந்தே, வேண்டுமென்றே இந்திரா காந்தியை யாரும் எதிர்க்கவில்லையென்பது மிகத் தெளிவாகத் தெரியும். தவறு இழைக்கின்ற சூழ்நிலை வரும்போது அதைக் கண்டிக்கின்ற கடமை நமக்கு இருக்கிறது. இரண்டு மாவட்டைத்தை பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என்று அறிவித்துவிட்டு, வேறு மாவட்டத்திலுள்ள தாலுக்கா பிற்பட்ட தன்மையில் இருப்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்குத்தான் இந்த அரசு மத்திய அரசுக்கு ஆலோசனை சொல்லியிருக்கிறது. மாவட்ட தன்மையிலே மட்டும் பிற்பட்ட தன்மையை எடுத்துக்கொள்ளக் கூடாது. ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பிற்பட்ட வட்டம் இருக்குமானால், அதை பிற்படுத்தப்பட்ட வட்டம் என்று, இவ்வரசு சொல்கின்ற பரிந்துரையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அந்தக் கொள்கையை அவர்கள் ஒப்புக்கொள்வார்களானால், ஒவ்வொரு மாவட்டத்

திலேயும் இருக்கிற பின் தங்கிய வட்டமும் நிச்சயமாகப் பின்தங்கிய பகுதியாக மத்திய அரசிடம் அறிவிக்கப்பட்டு, அதற்கு வேண்டிய திட்டங்கள் முறையாகக் கைக்கொள்ளப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : ஒவ்வொரு மாநிலத்திலும் பிற்பட்ட மாவட்டங்கள் இருக்கின்றன. எந்த ஒரு மாநிலமும் நம்மோடு சரி சமமாக வளர்ச்சியுற வேண்டுமென்பதற்காக மத்திய சர்க்கார் திட்டம் இடுகிறது என்பது எல்லோரும் ஒத்துக்கொள்கிற கொள்கை. அந்தக் கொள்கையின் காரணமாக, தமிழ்நாட்டிற்கு வரவேண்டியது போய் விட்டது, தமிழ்நாடு ஒதுக்கப்படுகிறது, மாற்றுந்தாய் மனப்பான்மை காட்டப்படுகிறது என்று சொல்வதெல்லாம், அரசியல் நோக்கத்திற்காக செய்கிற பிரச்சாரமேயல்லாது வேறு உள்நோக்கம் அல்லவென்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிச் சொல்வதால், அந்த உண்மை மறைந்து போகாது. தமிழ்நாட்டு மக்களுடைய தேவை என்ன என்பதை அடிப்படையாக வைத்துத்தான் தமிழக அரசு திட்டம் தயாரித்திருக்கிறது. அதற்காகவே, திட்டக்குழுவை அமைத்திருக்கிறது. அந்தக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் கோரப்படும் திட்டத்தில் பெரும் பகுதி விடப்படுமானால், தமிழக அரசு கொடுக்கும் திட்டங்களை வேறு கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்களோ என்ற சந்தேகம் வருகிறது. அதனாலேதான் சொல்லப்படுகிறது.

திரு. மு. சுருளிவேல் : மாண்புமிகு முதல்வர், கழகத்தினுடைய தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், அன்றையதினம் குடியரசுத் தலைவர் தேர்தலின்போது, எதிர்க்கட்சிகளுடைய ஒட்டுமொத்தமான ஆதரவைத் திரட்ட டெல்லி சென்றதைப்போல் மத்திய சர்க்காரை, மத்திய சர்க்காரை ஆளுகிற இந்திரா காங்கிரஸை எதிர்த்து இடதுசாரி ஜனநாயகக் கட்சியை அமைக்கின்ற முயற்சியிலே, இந்திய துணைக் கண்டத்திலே இருக்கிற இடதுசாரி சக்திகளின் சார்பாக வேண்டுகோள் விடுக்கிறேன்.

மாநிலங்களுக்கு மத்திய அரசு காட்டுகின்ற பாரபட்சம், கடைப்பிடிக்கின்ற மக்கள் விரோதக் கொள்கைகள், பணவீக்கத்துக்குத் துணை, முதலாளித்துவத் துணை, சோஷலிஷம் என்று சொல்லிக் கொண்டு பொருளாதாரத்திலே கையாலாகாத் தன்மையைக் கொண்டிருக்கின்ற இந்திரா காந்தியை எதிர்த்து, பல கட்சிகள்—மார்க்கிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியும் சோஷலிஸ்ட் கட்சியும், மேற்கு வங்காளத்திலே இருக்கக் கூடிய பார்வார்ட் பிளாக் கட்சியும், இன்னும் புரட்சிக்கர சோஷலிஸ்ட் கட்சியும் இன்றைய தினம் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றன. இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி, இந்திய நாட்டு மக்களுக்கு இருக்கிற, திருமதி இந்திரா காந்தி மூலமாக இருக்கிற ஆபத்தை, எதிர்க்க இடதுசாரி கட்சியை ஏற்படுத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வரவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.



திரு. எ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இங்கே பட்ஜெட்டின் மீது கடந்த சில நாட்களாக நடைபெற்ற உரைகளை நான் கவனித்த போது, "இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன், கெடுப்பார் இலானும் கெடும்" என்ற வள்ளுவர் குறள்தான் எனக்கு நினைவுக்கு வந்தது. இங்கே பேசிய ஆளும் கட்சி உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப இந்த பட்ஜெட்டைப் புகழ்ந்து பேசிக்கொண்டே இருந்தார்கள். இதேபோல் தான், நாட்டிலே இப்படியே ஆட்சி செய்கின்ற குற்றங்களைச் சொல்லாமல் மறைத்து புகழ் பாடி, புகழ் பாடி, மலர்க் கிரீடம் சூட்டிச் சூட்டி, தவறுக்கு மேல் தவறுகச் செய்துவிட்டதால், இன்றைக்கு என்ன நிலையாகியிருக்கிறது? கெடுப்பார் இல்லாமலேயே, உள்ளே இருந்தே கெடுப்பார் என்ற நிலையில் ஆட்சி கவிழ்கின்ற நிலை வந்திருக்கிறது.

தேர்தலிலே, திரும்பத் திரும்ப தோற்று, 1976-வரையிலே சமாளிக்க முடியுமா என்ற ஐயப்பாட்டிற்கு ஆளுகின்ற கட்சி ஆளாகின்ற நிலை வந்திருக்கிறது. இந்தத் தேர்தல் தோல்விக்குப் பிறகாவது, அரசுக்கு ரைட்டிங் ஆன் தி வால்-என்ற முறையில் இருக்கிற நிலைமை, மக்கள் போக்கு என்ன என்பதைப் புரிந்துக்கொண்டு, அதற்கேற்றவாறு இந்த பட்ஜெட்டிலே மக்களுக்கு நலம் பயக்கின்ற பல்வேறு திட்டங்களைச் சொல்வார்களோ என்ற ஒரு சபலம் எனக்கு இருந்தது. ஆனால், இந்த அறிக்கையிலே பார்க்கும்போது, அத்தகைய போக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவேளை, இந்த மக்கள், நம்மைக் கைகழுவி விட்டார்கள், ஆகவே, அவர்களுக்கு எதுவும் செய்ய வேண்டாம், எப்படியோ 1976 வரையில் தாக்குப் பிடித்தால் போதும் என்று அரசு முடிவு செய்து விட்டதோ என்று நினைக்கிறேன்.

இந்த பட்ஜெட்டைப் பார்க்குபோது எனக்கு—லிமிடெட் கம்பெனிகளுடைய தலைவர்கள் ஆண்டறிக்கைகளைப் படிப்பார்கள், நாளேடுகளிலே வரும் அதனுடைய ஞாபகம்தான் வருகிறது. கம்பெனியிலே சென்ற ஆண்டு இவ்வளவு உற்பத்தி இருந்தது, இவ்வளவு வியாபாரம் நடந்தது என்றெல்லாம் சொல்வார்கள். அரசியலைப் பற்றியும் வழக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்வார்கள். பிறகு அரசாங்கம் இந்தச் சலுகைகளைத் தரவேண்டும். அந்தச் சலுகைகளைத் தரவேண்டும், இந்தச் சலுகையைத் தரவில்லை, வரி அதிகமாகப் போட்டுவிட்டார்கள் என்றெல்லாம் குற்றச்சாட்டுகளைப் படித்து அறிக்கைகளைத் தருவது முறை. அதே முறையிலேதான் மாநில முதலமைச்சரவர்கள் இங்கே வழங்கி இருக்கிற பட்ஜெட்டும் இருக்கிறது. மத்திய அரசின் மீது பழி போட்டுத் தப்பித்துக் கொள்கிற முறையாக இருக்கிறது. ஒருவேளை, எப்படியும் தேர்தலிலே தோற்கப் போகிறோம், அடுத்த தேர்தலுக்கு வரும்போது மக்கள் கணக்கு கேட்பார்கள், கணக்கு கேட்கும் போது இதற்கெல்லாம் நாங்கள் பொறுப்பு இல்லை, எல்லாம் மத்திய அரசுதான் என்று அவர்கள் மேல் பழிபோட்டு மாநில சுயாட்சி என்ற கோரிக்கைக்கு வலுவூட்ட இந்த அறிக்கை போடப்பட்டிருக்கிறதோ என்று நான் கருதுகிறேன்.

எனக்கு முன்னே பேசிய சுருளிவேல் அவர்கள் கூட குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள், மற்றவர்களும் சொன்னார்கள். மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டுகிறது என்று சொன்னார்கள். இந்த அறிக்கையிலேகூட அத்தகைய கருத்து வரும் வாசகங்கள் பல சொல்லப்பட்டிருக்கின்றன.

இந்த நேரத்திலே ஒரே ஒரு கணக்கை, சட்ட மன்றத்தில் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற கணக்கைமட்டும், எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1966–67ம் ஆண்டிலே காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே இன்கம் டாக்ஸிலே நம்முடைய பங்கு, எஸ்டேட் டியூட்டியிலே பங்கு, எக்சைஸ் டியூட்டியிலே பங்கு இவை எல்லாம் சேர்ந்து மொத்த வருவாயில் 27 சதவீதம் வந்தது, ஆனால் இப்பொழுது 1974–75-ம் ஆண்டிலே அந்தத் தொகை 30·6 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது. இது மாற்றாந்தாய் மனப்பான்மையையா காட்டுகிறது ? என்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். உண்மையிலேயே மாற்றாந்தாய் மனப்பான்மையாக இருந்தால் 1966–67 ஆண்டிலிருந்ததைவிட இன்று குறைவாக இருக்கவேண்டும். நான் சொல்வது ரெவின்யூ அக்கவுண்ட், இதைத் தவிர கேபிடல் ஸ்கீம்ஸ், சென்டரலி ஸ்பான்ஸர்ட் ஸ்கீம்ஸ், வெள்ள நிவாரண நிதி, புயல் நிவாரண நிதி இதற்கெல்லாம் கோடி கோடியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது—அதையெல்லாம் சேர்த்தால் இன்னும் அதிகமாக வரும். இவ்வளவு வருவாய் இருந்தும்கூட மத்திய அரசு செய்யவில்லையென்று சொன்னால் அது நம்முடைய கையாலாகாத்தனத்தைத்தான் காட்டுகிறது. மத்திய அரசு பணம் கொடுத்துத்தான் நாம் பார்க்க வேண்டுமென்று சொன்னால், அதற்கு சர்க்கார் தேவையில்லை, அதிகாரிகள் பார்த்துக் கொள்வார்கள். . . .

<u>மாண்புமிகு திரு க. அன்பழகன் :</u> தலைவர் அவர்களே, மத்திய அரசு பணம் கொடுத்து மாநில அரசு செய்யவேண்டுமென்பதில்லை, அதிகாரிகள் போதும் பார்த்துக்கொள்வார்கள் என்ற கருத்துப்பட சொல்கிறார்கள். மத்திய அரசு தன்னிடத்திலேயிருந்து மாநிலங்கள் பணத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய முறையில் தன்னிடம் பணத்தைப் பெற்றுத்தான் மாநில அரசுகள் நடக்க வேண்டுமென்று அரசியல் சட்டத்திலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டிலே மத்திய அரசு மாநிலங்களிலே இருந்து பெறுகின்ற வருமானத்திலே அந்த அந்த மாநிலங்களுக்குப் பங்கிட்டு அளிக்கிறார்கள், அதைத்தான் அதிகமாகத் தர வேண்டுமென்று கேட்கிறோமே தவிர, நாமாகத் தனிப்பட்ட முறையிலே பங்கு வேண்டுமென்று கேட்கவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எ. சுப்பிரமணியம் :</u> மத்திய அரசு அதிகமாக நிதி தரவேண்டுமென்றோ, திட்டங்களுக்கு அதிகமாகப் பணம் தரவேண்டுமென்றோ கேட்பதிலே தவறில்லை. நான் தமிழ் மாநிலத்தைத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலே நம்முடைய மாநிலத்திற்கு அதிகமாக வரவேண்டுமென்று கேட்பதை ஆதரிக்கிறேன். கூடுதலாகக் கொடுக்கவேண்டுமென்று எல்லா மாநிலங்களும் கேட்பார்கள். அந்த வகையிலே நாமும் கேட்பதிலே தவறில்லை.





மாநிலங்களுக்குக் கொடுப்பதற்காக மத்திய அரசோ அல்லது நிதி ஆணைக் குழுவோ சில கிரைட்டிரியா வைத்திருக்கிறார்கள், அதன்படிதான் பங்கிட்டுக் கொடுக்கிறார்கள். தங்களுடைய தவறை மறைப்பதற்காக, மத்திய அரசு பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் அதை நம்புவதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநிலத்திற்கு மத்திய அரசு தனியாக ஓர வஞ்சனை காட்டுவதாக இருந்தால் சொல்லலாம். புயல் நிவாரண நிதியென்றும், வெள்ள நிவாரண நிதியென்றும் அதிகமாகக் கொடுத்துவிட்டார்கள் நம்முடைய மாநிலத்திற்கு என்று மற்ற மாநிலங்களிலே உள்ளவர்கள் புகார்கள் சொன்னார்கள். அந்த அளவிற்கு மத்திய அரசு கொடுத்து இருக்கிறது. கூடுதலாக வேண்டுமென்று கேளுங்கள், நான் குறைசொல்லவில்லை, அவர்கள் தரவில்லை, அதனால்தான் எதும் செய்ய முடியவில்லை என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள முயன்றால் ஏமாறுவதற்குத் தமிழ் மக்கள் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே சொல்லப்பட்டிருக்கிறது—"தூத்துக்குடியில் 85 கோடி ரூபாய் அளவில் உரத் தொழிற்சாலை நிறுவப்பட்டு விரைவில் உர உற்பத்தி தொடங்க இருக்கிறது. மின் அணுக் கருவிகள், காஸ்டிக் சோடா, மீன்பிடி இழு படகுகள், சாயம் போன்ற ரசாயனப் பொருட்கள், வெப்பந்தாங்கிக் கற்கள் முதலிய உற்பத்திக்கான திட்டங்களுக்குக் கூட்டுத் துறையில் அனுமதிக் கடிதம் பெறப்பட்டு, பல்வேறு கட்டங்களில் பணிகள் நடந்து வருகின்றன" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்படியெல்லாம் செய்த பிறகும்கூட மத்திய அரசுமீது குற்றஞ்சாட்டித் தப்பித்துக்கொள்ள வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பட்ஜெட் எஸ்டிமேட் கொடுத்திருக்கிறார்கள். இதிலே எவ்வளவு வருவாய் என்று கொடுக்கிறார்களோ அதனைவிடக் கூடுதலாக வருவாய் வரும் என்ற நிலைமைதான் இருக்கிறது. சென்ற ஆண்டு கூட சேல்ஸ் டாக்ஸ் மட்டும் சுமார் 8 கோடி அளவிற்குக் குறைவாக எஸ்டிமேட் கொடுக்கப்பட்டது. அதேபோன்று டாக்ஸஸ் ஆன் வெகிகிள்ஸ், எக்ஸைஸ் டியூட்டி இவற்றைப் பொறுத்தவரையிலும் கூட குறைவாக வருமானம் வரும் என்றுதான் போட்டிருந்தார்கள். ஆனால் அதிகமாக வந்திருக்கிறது. இந்த ஆண்டுகூட குறைவாக மதிப்பிடவில்லை என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? குறைவாக எஸ்டிமேட் காட்டி, வரவுகளைக் குறைவாகக் காட்டி, எதும் செய்ய முடியவில்லை என்று நம்மை நம்ப வைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். இந்த ஆண்டு திட்டத்திற்கு 118 கோடி ரூபாய் மத்திய அரசு அனுமதித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். மெய்யாகப் பார்த்தால் 6-வது நிதி ஆணைக்குழு கடன்களைத் திருப்பிக் கொடுப்பதிலே சலுகை கொடுத்திருக்கிறது. கூடுதலாக நிதி கொடுக்கப்பட்டிருக்கிறது. கமர்ஷியல் டாக்ஸஸ் வரி கூட்டியிருக்கிறீர்கள். அதிலேயும் மதிப்பீடு குறைவாகத்தான் போட்டிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். இவ்வளவும் அவர்கள் கொடுக்கிறார்கள், இருந்த போதிலும் சாதாரண மக்கள் நலனைக் காப்பாற்றுவதற்காகத் திட்டமிடவில்லை நீங்கள்,

[திரு. எ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 12

வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக இருக்கிறது. ஏற்கெனவே இளைஞர் அணி அமைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் புதிதாகத் திட்டங்களைக் காணோம். தமிழகத்து மக்கள் குறிப்பாக படித்த வாலிபர்களை வாட்டுகின்ற பிரச்னையைக் கவனிப் பதற்குப் புதிய திட்டம் ஒன்றும் இதிலே சொல்லப்படவில்லை. போகட்டும். கிடைக்கிற வேலையாவது வேலை கேட்கிறவர்கள் லஞ்சம் கொடுக்காமல், ஆள் பிடிக்காமல், தரகர் பிடிக்காமல் பெறக்கூடிய முறையிலே இருக்கிறதா என்றால், இல்லை.

நான் ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே சொல்கிறேன். எந்த வேலையாக இருந்தாலும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த தரகர்களைப் பிடிக்காமல் பணம் கொடுக்காமல் நடக்காது என்ற நிலைமைதான் இருக்கிறது. அதை மாற்றுவதற்கு ஒன்றும் வழியைக் காணோம். விலை வாசிகள் ஏறிக்கொண்டேயிருக்கின்றன. மத்திய அரசுதான் அதற்குப் பொறுப்பு என்று சொல்கிறார்கள். உணவுப் பண்டங்களின் விலை மராட் டியத்திலும், குஜராத்திலும் ஏறியதைப் போல் இங்கே ஏறவில்லை என்று பெருமைப்பட்டுக்கொள்ளப்படுகிறது.

தமிழகம் அரிசிக்கு மற்ற அண்டை மாநிலங்களை எதிர்பார்ப்பதில்லை, ஆனால் அந்த மாநிலங்கள் அப்படியல்ல. அது மட்டுமல்ல. நமக்குத் தேவை யான உணவு இங்கே உற்பத்தியாகி மற்ற மாநிலங்களுக்கு நாம் தரு கிறோம் என்று சொல்கிறோம். அப்படியிருந்தும்கூட கன்னியாகுமரி மாவட்டத்திலே படி அரிசி 4 ரூபாய் விற்கிறது. சென்னையிலே மூன்று ரூபாய் விற்கிறது, இதற்கு மத்திய அரசா பொறுப்பு? இங்கே விளை கின்ற புளியின் விலை ஏறுகிறது, இங்கே விளைகின்ற அரிசி விலை ஏறிக் கொண்டிருக்கிறது என்றால் அதனைத் தடுப்பதற்கு என்ன செய்திருக் கிறீர்கள்?

மத்திய அரசின் பட்ஜெட் வந்ததற்குப் பிறகு பல பண்டங்களுக்குட் போடப்பட்ட வரியினால் என்ன விலை ஏறவேண்டுமோ அதற்கு மேலாக விலை ஏறியிருக்கிறது என்று கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் சொல்லியிருக்கிறது. மத்திய அரசின் இன்ஸ்ட்ருமெண்ட் மாநில அரசுதான். அவர்கள் போடுகின்ற சட்டதிட்டங்களை நிறைவேற்றுவது மாநில அரசுதான். பல் வேறு மாநில அரசுகளுக்குப் பணம் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே தான் வரிகளைப் போடுகிறார்கள். ஆனால் போடப்படுகின்ற வரிக்குமேல் விலை ஏறுகிறதே, அதைத் தடுப்பதற்கு யார் பொறுப்பு? மாநில அரசு தானே?

மராட்டியத்தைப்போல் விலையேறவில்லை என்று தற்பெருமையடித்துக் கொள்கிறீர்கள். **You are completely complacent** என்றுதான் சொல்லவேண்டும். நீங்கள் பணம் வேண்டும், அதிகாரம் வேண்டும் என்று கேட்கிறீர்கள். கிடைக்கின்ற பணத்தை வைத்து, அதிககாரத்தை வைத்து எப்படிச் செலவு செய்கிறீர்கள் என்பதைப் பாருங்கள், நேற்றுவரையில் ஆளுங்கட்சியிலிருந்த திரு. சீனிவாசன் அவர்கள் சொன்னார்கள்



1974 மார்ச் 12] [திரு. எ. சுப்பிரமணியம்]

எப்படியெல்லாம் சுயவிளம்பரத்திற்காகப் பணத்தை வீணடிக்கிறார்கள் என்று சொன்னார்கள். நானும் பார்க்கிறேன். நல்ல ஆர்ட் பேப்பரிலே எத்தனை புத்தகங்கள், எத்தனை சுவரொட்டிகள் அடிக்கிறார்கள்.

[பிற்பகல் 1-00]

வயது வந்தோருக்கு முதியோர் பென்ஷனை அதிகப்படுத்த வேண்டும், அப்படிக் கொடுத்தால் அதனால் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் அல்ல, பல லட்சங்கள்தான் செலவாகும். ஆனால் அதற்குச் சாத்தியமில்லை, நிதிநிலை இடம் தரவில்லை என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். முதியோர்களுக்கு, திக்கற்றவர்களுக்குப் பென்ஷன் அதிகமாக வழங்கு வதற்குப் பணமில்லை என்று சொல்லக்கூடிய இந்த அரசு பூம்புகாரில் விழா எடுக்கிறது, சாரல் விழா எடுக்கிறது. சாரல் விழா நடத்தப்போய் மழையே பெய்யவில்லை, சாரலே போய்விட்டது. ஆகவே, பெரும் பெரும் விழாக்களை நடத்தி, பண்டைக்காலப் பெருமைகளை எண்ணிக் கொண்டு, 500, 600, 1,000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மன்னர் களின் பெருமைகளைத் திரும்பக் கொண்டு வர வேண்டுமென்று செலவு செய்கின்றவர்கள் இப்பொழுது வாழும் இந்த மன்னர்களுக்கு, இவர்கள் வாழ்வதற்குச் செலவிடக்கூடாதா? அம்மாதிரி செய்யாமல் வீண் ஆடம்பரச் செலவுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதிகாரம் இல்லை, அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். கிடைத்த அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்துகிறார்கள்? நூல் வி நி யோகத்தை எங்களிடத்தில் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். உங்களுடைய அதிகாரத்திற்கு வந்த பொழுது என்ன செய்தீர்கள்? மத்திய சர்க்காரின் "யார்ன் கண்ட்ரோல் ஆர்டர்" வந்ததற்குப் பிறகு நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்தால் யார் யாருக்கோ கிடைக்கிறது. ஏராளமாக நெசவாளர்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குச் சென்று பார்த்தால் இவ்வளவும் தெரியும்.

அரிசிக் கொள்முதலை யாரிடத்தில் கொடுத்தீர்கள்? எப். சி. ஐ. இருக்கிறது, உங்களுடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. இதையெல்லாம் விட்டு விட்டு ஏன் தனியாரிடத்தில் கொடுத்தீர்கள்? தனியாரிடம் கொடுத்ததால் வந்த விளைவைத் தென்னாற்காடு மாவட்டத்தில் பார்த்தோம். நேற்றுகூட பத்திரிகையில் வந்திருக்கிறது, ஏதோ பிடித் தார்கள் என்று. எனவே கிடைத்துள்ள அதிகாரத்தைக் கொண்டு மக்களுக்கு நலம் பயக்கின்ற முறையில் செலவு செய்யாமல் தனியாரிடத் தில் விட்டு விடுகிறீர்கள். தனியாரிடத்தில் உரம் கொடுக்கக்கூடாது என்று சொல்கிறீர்கள், எங்கே அரிசியைக் கொடுத்தீர்கள்? எனவே நீங்கள் அதிக அதிகாரம் கேட்பது மக்களுக்கு நலம் பயப்பதற்காக அல்ல, ஏற்கெனவே செய்யும் தவறுகளை மறுபடியும் அதிகமாகச் செய்ய வாய்ப்பு வேண்டுமென்பதற்காகக் கேட்கிறீர்கள். ஏற்கெனவே ஆளுங் கட்சியி லிருந்து பிரிந்தவர்கள் ஊழல் என்று சொன்னார்கள். அந்த ஊழலைக் கூடுதலாகச் செய்வதற்கு வாய்ப்பு கேட்கிறீர்கள் என்று சொன்னால் அது எப்படித் தவறாகும்?

[திரு. எ. சுப்பிரமணியம்] [1974 மார்ச் 1

கைத்தறியாளர்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். கைத்தறிப் பிரச்சனை யைப் பொறுத்தவரையில் சந்தானம் கமிட்டி அமைத்தார்கள். நான் கவர்னர் உரையிலேயே சொன்னேன், காலம் கடத்தக்கூடாது என்று சொன்னேன். அதில் 4 பரிந்துரைகளை மட்டும் நிறைவேற்ற யோசித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இருக்கின்றன. 9 சஜஷன்கள் இருக்கின்றன. அதில் 151 பரிந்துரைகள் துரைகளை மட்டும் நிறைவேற்றுவோம் என்று சொல்கிறார்கள். ஆனால் அதில் 4 பரி கமிட்டியால் சொல்லப்பட்ட சில பரிந்துரைகள் மத்திய சர்க்காரால் செய்ய பட வேண்டியவை. அதை விட்டுவிடுவோம். ஆனால், மாநில சர்க்கா நிறைவேற்றக்கூடிய பல பரிந்துரைகளைத் தந்திருக்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலைகளிலும், கார்ப்பரேஷன் நூற்பாலைகளிலும் உற்பத்தியாகும் நூலில் இத்தனை விழுக்காடு ஹேங்காக உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் ஹேண்ட்லூம் போர்டு ஏற்படுத்துவதைப் பற்றியும், ஹேண்ட்லூம் பண் ஏற்படுத்துவது பற்றியும், வீட்டு வசதி பற்றியும் சொல்லியிருக்கிறார்கள்.

நெசவாளர் குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே வட்டியை வசூலித்திரு தால் முதலில் அதைக் கழித்துவிட வேண்டுமென்றெல்லாம் சொல் யிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல பரிந்துரைகளை, மாநில சர்க்கார் நிறைவேற்றக் கூடியவைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றி யெல்லாம் இவர்கள் ஒன்றுமே செய்யாமல் இருக்கிறார்கள்.

அடுத்து, வேளாண்மையைப் பொறுத்தவரையில் பசுமைப் புரட்சி என்று சொல்கிறார்கள். பசுமைப் புரட்சி நடக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். பாசனத் திட்டம் பற்றிச் சொல்கிறார்கள். பாண்டியாறு புன்னம்புழா திட்டம் பற்றி நேற்று அறிக்கை தந்திருக்கிறார்கள். கோவை, அவினாசி, பல்லடம் தாலுக்காக்களிலுள்ள மக்கள், வறண்ட பகுதிகளில் உள்ள மக்கள், இப்படியே போனால், 15 ஆண்டுகளுக்குப் பிறகு. வேளாண் மையே செய்ய முடியாது, ஊரைவிட்டுப் போக வேண்டியதுதான் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். ஏற்கெனவே குந்தா கழிவு நீர்த் திட்டம் என்ற திட்டம் இருந்தது. அதை இவர்கள் கழிவு நீரிலேயே விட்டுவிட்டார்கள். இதற்கு முன்னாலிருந்த காங்கிரஸ் அரசாங்கம் அந்தத் திட்டத்தை வகுத்தது. நீங்கள் வந்ததற்குப் பிறகு இந்தத் திட்டத்தை என் கைவிட்டுவிட்டீர்கள் ? பிறகு இன்றைக்கு பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தையும் கோட்டை விட்டாகி விட்டது. இனிமேல் கைவிட்டுவிட்டோம் என்று சொல்லியாகிவிட்டது. இப்படியிருந்தால் அவர்களுக்கு நீர்ப் பாசனத்திற்கு வழி என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தைக் கோட்டை விட்டது காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தான். 1965-ஆம் ஆண்டு, மதிப்பிற்குரிய வெங்கட்ராமன் அவர்கள் அமைச்சராக இருந்தபொழுது ஏற்பட்ட ஒப்பந்தத்தால்தான், இந் நான்கைந்து ஆண்டுக் காலமாக இந்த அரசு பேசியும் கூட முடியா நிலைமை, அந்தக் காலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தால்தான் என்று உறுப்பினரவர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன்.



1974 மார்ச் 12]

திரு. எ. சுப்பிரமணியம் : அந்த ஒப்பந்தம் ஒன்றுக்கு மட்டும் ஏற்பட்ட ஒப்பந்தம், மின்சார உற்பத்திக்கு மட்டும் ஏற்பட்ட ஒப்பந்தம். அதற்குப் பிறகு பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை எழுந்து, அந்தக் கோரிக்கைகளுக்கான உங்களது முயற்சியில் குறையிருந்ததால் தோற்றிருக்கிறீர்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் குடிதண்ணீருக்காக நெல்லித்துறை திட்டம் இருந்தது. 1971-ஆம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் திரு.சாதிக் பாட்சா அவர்கள் சொன்னார்கள், ஏற்பாடு செய்கிறோம் என்று. அதற்குப் பிறகு பல ஊர்களுக்கு. குடிநீர்த் திட்டத்திற்காக 60 இலட்சம், 80 இலட்சம் என்று செலவழிக்கிறார்கள். ஆனால் இந்த நெல்லித்துறைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒன்றுமே இல்லாமலிருக்கிறது. எத்தனை முறை நாங்கள் சொன்னாலும், திரும்பத் திரும்பச் சொன்னாலும் அதைக் காதில் போட்டுக் கொள்ளத் தயாராக இல்லை. மத்திய சர்க்காரைச் சொல்கிறீர்களே, அந்தப் பகுதி மக்கள் என்ன பாவம் செய்தார்கள் நீங்கள் இப்படிச் செய்வதற்கு ? ஆனால் அவர்கள் ஒன்றைச் செய்தார்கள். நீங்கள் செய்த தவறுகளை எதிர்த்தார்கள், விவசாயப் போராட்டம் நடத்தினார்கள், உண்மைதான். அதற்காகப் பழி வாங்குகிறீர்களா ? குடிநீரும் வேண்டாம், நீர்ப்பாசனமும் வேண்டாம் என்று பழி வாங்குகிறீர்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பழி வாங்குவதாகச் சொல்கிறார்கள். பழி வாங்கவில்லை. 1965-இல் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தை யார் செய்தது ? மாவட்ட விவசாயிகள் நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையைச் சொன்ன பொழுது வெங்கட்ராமன் அவர்கள் சொன்னார்கள், 'This aspect was not brought to our notice' என்று. அப்படி கோட்டை விட்ட பிறகு, நாங்கள் எவ்வளவோ முயற்சித்தும் கேரள அரசு இணங்கவில்லை. திருவனந்தபுரத்தில் பேசினோம், பலன் கிடைக்கவில்லை. 1965-ஆம் ஆண்டிலிருந்து 9 ஆண்டுகள் கழிந்த பிறகு, ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல், மின்சார உற்பத்தி பாதிக்கப்படும் என்ற காரணத்தால் வேறு வழியில்லாமல் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது என்பது உறுப்பினரவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

திரு. எ. சுப்பிரமணியம் : அமைச்சரவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி.

திரு. கே. என். குமாரசாமி : ஒரேயொரு பாயிண்ட் கூற விரும்புகிறேன்.

[1974 மார்ச் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது கருத்துச் சொல்வதற்காக எழுந்து நிற்பது முறையல்ல. நீங்கள் பேசும்பொழுது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அமைச்சரவர்கள் சொன்னார்கள்; 'This aspect was not brought to our notice' என்று முன்னாள் அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் சொன்னதாகச் சொன்னார்கள். This aspect was not brought to their notice by the then opposition.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : "அப்போசிஷனிலே" கொண்டுவரவில்லை என்று சொன்னார்கள். அதிகாரிகள் கொண்டுவர வில்லை, அந்த அமைச்சருக்குக்கூட தெரியாமல் காரியம் நடந்துவிட்டன என்று அவர்களே சொன்னார்கள். உறுப்பினரவர்கள் எதிர்க்கட்சி என்று சொல்லிவிடக் கூடாது. இன்றைக்கு அவர்கள் எதிர்க்கட்சியிலே இருக்கி றார்கள். அவர்கள் தங்களுடைய செல்வாக்கை இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடம் பயன்படுத்தி, கேரள அரசாங்கத்திற்குச் சொல்லிக்கூட இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால் நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிப்போம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் நேற் றைய தினம் படிக்கும்பொழுதே படித்தேன். பிரதமர் அவர்கள் நம்முடைய முதல்வருக்கு எழுதிய கடிதத்தையும் படித்தேன். அதை யெல்லாம் கோர்வையாகச் சேர்த்துச் சொல்ல வேண்டும்... பிரதமர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள், பாண்டியாறு-மோயாறு திட் டத்தால் முதுமலை வனவிலங்கு சரணாலயத்திற்குப் பாதகமான விளைவுகள் ஏற்படுமென்றும், ஐந்து மைல் நீரில் மூழ்கும், அதனால் விலங்குகளுக்குப் பாதகம் ஏற்படும், உய்விடம் பாதிக்கப்படும் என்று கடிதம் எழுதியிருக் கிறார்கள். அதையும் சேர்த்துச் சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அவர்கள் திட்டத்தைக் கைவிட்டுவிட வேண்டு மென்று சொல்லவில்லை. திருத்துங்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதைத்தான் சொல்கிறேன். மாற்று யோசனை செய்யுங்கள் என்று சொல்லியிருக் கிறார்கள். இப்பொழுது சொன்னால்கூட பரிசீலிக்கலாம். ஆனால் மாற்று யோசனைக்கு வழியே இல்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் விவரம் புரிந்து பேசுகிறார்களா அல்லது தெரிந்துகொள்ள வேண்டு மென்பதற்காகப் பேசுகிறார்களா என்று தெரியவில்லை. மாற்று யோசனை பரிசீலிக்கப்பட்டது. ஆனால் வழியே இல்லை. மோயாற்றில் கட்டுவதைத் தவிர வேறு வழியேயில்லை. இது நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியும். வழியே இல்லாத நிலையிலே கேரள அரசாங்கத்தோடு வாதிட்டோம். கடைசியிலேதான் இந்த ஒப்பந்தத் திற்கு வந்தோமே தவிர வேறு வழியில்லை.



1974 மார்ச் 12]

திரு. ஏ. சுப்பிரமணியம் : திரும்பத் திரும்பச் சொன்னதற்குப் பிறகும் முடியவில்லை என்று சொல்கிறீர்கள். அப்படி முடியாமற் போனது இந்த அரசினுடைய திறமைக் குறைவைத்தான் காட்டுகிறது அல்லது போதுமான அக்கறை செலுத்தவில்லை என்பதைத்தான் காட்டுகிறது என்று சொல்கிறேன்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். ஒரு செயலைக்கொண்டு மட்டும் நான் உங்களுடைய திறமைக்குறைவைத் தீர்மானிக்கவில்லை. என்னுடைய தொகுதியில் சின்னவேடம்பட்டி குளம் கட்டாயமாகக் கட்டப் படும் என்று 1968-லே மாண்புமிகு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் உத்தரவாதத்தோடு பேசி விட்டு வந்தார்கள். ஆனால் இன்றைக்கு ஆறாண்டுக்காலமாகியும் அந்தக் குளம் இல்லை. வேறு எங்கேயோ அணை கட்டி தண்ணீரைத் தடுக்கப்போவதாகக் கேள்விப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப் பினரவர்கள் சின்னவேடம்பட்டி குளம் பற்றிச் சொன்னார்கள். நான் வந்தபொழுதே சொன்னேன், அதை ஏற்றுக்கொள்வதற்குப் பொதுமக்க ளின் சார்பாக காண்ட்ரிப்யூஷன் கொடுக்க வேண்டுமென்று சொன்னேன். அதற்கு உறுப்பினரவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்று சொன்னால் உதவியாக இருக்கும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : திட்டத்திற்கு சாங்ஷன் கொடுக்கவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காண்ட்ரிப்யூஷனுக்கு ஏற்பாடு செய்த பிறகுதான் சாங்ஷன் வழங்க நடவடிக்கை எடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பகுதியைச் சொல்லி இன்னொரு பகுதியைச் சொல்லவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்தத் திட்டத்திற்குப் பொதுமக்களிட மிருந்து நிதி வசூலித்துக்கொடுக்க வேண்டுமென்றால் அதற்குத் தயாராக இருக்கிறோம் என்று ஏற்கனவே அமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இந்த விளக்கத்திலிருந்து அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்ற உறுதியைச் சொல்வார்களானால் வர வேற்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நெல்லித்துறைத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதாகப் பேசினார்கள். மத்திய நீர் மின் கழகத்தின் ஆணைக்கு அது காத்திருக்கிறது. கேரள அரசாங்கம் எந்தவிதத்திலும் ஆட்சேபிக்கவில்லை. குந்தாவின் கடைசிப் பகுதியாக இருப்பதால் ஆட்சேபிக்கக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். விரைவில் மத்திய அரசாங்கத்தின் அனுமதி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வந்த வுடன் வேலை துவங்கும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மிக்க நன்றி.

தொழில் துறையைப் பொறுத்த வரை............(மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் 17 பேர் இருக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் 13 பஞ்சாலைகளைத் தேசவுடைமையாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஆலைகள் கோவையில் இருக்கின்றன. அந்தப் பஞ்சாலைகளில் தொழில் உறவுகளில் எப்படி இன்று அரசியல் புகுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன். அங்கிருக்கும் அதிகாரிகள் சுயமாக இயங்க முடியாமல் தொழில் தகராறுகளில் எந்த முடிவும் எடுக்க முடியாமல் அரசியல் காரணமாக தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்டு ஓரவஞ்சனை செய்யப்படும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை மாற்ற வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு பல சோஷலிசக் காரியங்களைச் செய்வதாகச் சொன்னார்கள். நகர்ப்புற சொத்துக்களுக்கு உச்ச வரம்பு நிர்ணயிப்பது பற்றி ஆளும் கட்சியினர் பரிசீலனையெல்லாம் செய்தனர். அதுபற்றிப் பட்ஜெட் அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். அதைப் பற்றி ஒன்றும் காணோம்.

பம்பாயில் நடக்கின்ற சிவசேனா அட்டூழியங்களைக் கண்டிக்கிறார்கள். ஆனால் அதேபோன்ற காரியங்கள் தமிழகத்திலும் நடந்து கொண்டிருக்கின்றன. ஆளும் கட்சியின் துணையோடு அது நடந்துகொண்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

குறிப்பாக, கோவையில் வேறு மாநிலத்தவர்கள் கடை வைத்திருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன்னால் அந்தக் கடைகள் முத்தமிழ்ச் சேனை என்பவர்களால் சூறையாடப்பட்டது. அது பற்றிப் போலீஸ் நடவடிக்கை எடுக்காமல் இருந்தது. கட்டாயப்படுத்திய பிறகு நடவடிக்கை எடுத்து அவர்களைக் கைது செய்தார்கள். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை ஆளும் கட்சியைச் சேர்ந்த மேலவை உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினரும் ஜாமீனில் வெளியே கொண்டு வருகிறார்கள். இதிலே ஆளும் கட்சி உட்பட்டிருக்கிறது என்பது இதிலிருந்தே விளங்கும்.

எண்ணூர் தொழிற்சாலையிலும் இதுபோன்ற நிலைமை நடந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கோவை வந்தபோது சொன்னார்கள் "மலையாளிகள் மாப்பிள்ளைத் தோழர்களாக இருக்கலாம்; ஆளும் கட்சியை ஆதரிப்பதாக இருந்தால் முழு உரிமை உண்டு" என்று கண்டிஷன் போட்டுப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இதுபோன்ற



காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்குமானால் தமிழகத்திலுள்ள அமைதி கெடும் நிலைமை ஏற்படும். ஆனால் இந்த நிலைமைகளைத் தடுக்க வேண்டுமென்றாலும் அவர்கள் தடுக்கமாட்டார்கள் என்று ஏற்கனவே நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

இந்தக் காரணங்களால் இந்த அரசு இனிமேல் நீடித்து இருப்பதற்கு தனக்குத் தகுதி இல்லை என்று தானே ஒத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பட்ஜட்டை ஆதரிக்க முடியாது என்று கூறி இதை எதிர்த்து விடை பெறுகிறேன்.

*திரு. எல். கணேசன் : மாமன்றத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை ஆதரித்து எனது கருத்தைச் சொல்வதில் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியப் பொருளாதாரம் முற்றும் முடமாகிப் போய் முழுவதும் சீர் குலைந்து போய்க் கிடக்கிறது என்று என்னைப் போன்ற சாதாரணமானவர்கள் கூறவில்லை, பொருளாதார மேதைகள் என்பவர்கள் இதை அபாய அறிவிப்பாக இன்றைய தினம் இந்தியா முழுமையிலும் அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பயங்கரமான பொருளாதாரச் சீர்குலைவுக்கு மத்திய அரசினுடைய பொருளாதாரப் போக்கும், நிதிக் கொள்கையுந்தான் காரணம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

மத்திய அரசு பற்றுக்குறை நிதிநிலையை ஈடுகட்ட பண வீக்கத்தையும், பண வீக்கம் உருவாக்கப்படுவதால் குரல்வளையை நெரித்துக்கொண்டிருக்கும் விலைவாசி ஏற்றத்தையும் உருவாக்கிக் கொண்டிருப்பது—இவ்வளவு கொடுமைகளுக்கும் இன்றையதினம் அடிப்படையாக இருக்கக் கூடிய இந்திய நாட்டின் ஒட்டுமொத்தமான பொருளாதாரத்தை நிர்ணயிக்கக்கூடிய சக்தியும் ஆற்றலும் பெற்றிருக்கும் மத்திய அரசுதான் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இவ்வளவு இடர்பாடு மிகுந்த வேளையில், இருள் சூழ்ந்த நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை நமக்கு நம்பிக்கை ஒளியாக, வழிகாட்டும் தீபமாக இருப்பதில் மெத்தப் பெருமைப்படுகிறேன்.

இங்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசியதைக் கண்டு நான் மெத்த வருத்தப்படுகிறேன். தமிழர்கள் இவ்வளவு பயங்கரமாகக் காட்டிக் கொடுக்கப்படுவார்கள் என்ற நிலையைத் தமிழகத்துச் சட்டமன்றத்தில் கூடப் பார்க்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது அதிருப்தி இருக்கலாம்; கண்டிக்கலாம். ஆனால் அதே நேரத்தில் தமிழ் சமுதாயத்தைக் காட்டிக் கொடுத்து வேறுயாருக்கோ வக்காலத்து வாங்குகிறார்களே.

தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்; பல்வேறு துறைகளில் பாதிக்கப்படுகிறார்கள். சிவசேனைக் கொடுமை, இலங்கை இந்தியர் அவதி, இவைபற்றி பேசுகிறபோது வராத உணர்ச்சி, எங்கோ அங்கொன்றும், இங்கொன்றுமாக நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லுகிறபோது வருகிறது.

மரியாதைக்குரிய மாண்புமிகு சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்
டார்கள்—மத்திய அரசு அதிகமாக உதவி செய்கிறது என்று. நான்
கேள்விப்பட்டதே இல்லை. எந்த மாநிலத்திலும் அந்த மாநிலத்துச்
சட்ட மன்ற உறுப்பினர்களே தங்களுடைய உரிமையைப் பாதிக்கக் கூடிய
வகையில் அதிகமாக மத்திய அரசு உதவி செய்துகொண்டிருக்கிறது
என்று சொல்லுவதை. அப்படிச் சொல்லுகின்ற நிலைமை இங்கேதான்
இருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன்
அவர்கள் பிரசாரத்திற்காக வேண்டுமென்றால் அப்படிப் பேசட்டும். நான்
தப்பாகச் சொல்லவில்லை. மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு புயல்
நிவாரணத்திற்காகக் கூடுதலாகக் கொடுத்ததாக மற்ற மாநிலங்களில்
புகார் சொல்லுகிறார்கள் என்ற அந்த அளவுக்குத்தான் சொன்னேன்.

திரு. எல். கணேசன் : இதை அவர்கள் நல்ல ஆதாரமாகப் பயன்
படுத்திக் கொண்டு தமிழக அரசின் கோரிக்கையை மறுக்கவும்,
நிராகரிக்கவும் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்குப் பேசியதற்காக நன்றி.
தமிழ்ச் சமுதாயம் நன்றி செலுத்தக்கூடிய ஒன்று.

மரியாதைக்குரிய திரு. கே.டி.கே. அவர்கள் பேசினார்கள். எனக்கு
இருக்கிற வருத்தம்—நான் இதயத் தூய்மையோடு கேட்கிறேன். திராவிட
முன்னேற்றக் கழக அரசின் நிதிநிலை அறிக்கை, கலைஞர் அவர்கள்
அளித்த நிதிநிலை அறிக்கையில் கொள்கை இல்லை, சோஷலிசம் இல்லை,
வெறும் பிரகடனமாக இருக்கிறது என்று சொன்னார்கள். சோஷலிசம்
என்ற வார்த்தையைப் பற்றி அவர்களே சொன்னார்கள்.

**If at all there is a word which is much abused, it is tho werd socialism.**

என்றார்கள். நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்த
சோஷலிசம் என்ற வார்த்தைக்கு வியாக்கியானமோ, பொருளோ கூறுவ
தற்கான அதிகாரமும், உரிமையும் உங்களுக்கே இருக்கிற தனி உடைமை
என்று கருதாதீர்கள் ; அது பொதுவுடைமை. அந்தப் பொது
வுடைமைத் தத்துவத்தின் அடிப்படையில் கேட்கிறேன். திராவிட முன்
னேற்றக் கழகத்தின் சோஷலிசத் திட்டம் பஸ்களைத் தேசிய
மயமாக்கியது ஒன்றுதானா ? இருக்கிற அதிகாரவரம்பை வைத்துக்
கொண்டு, இந்தியப் பொருளாதார சூழ்நிலையைக் கணக்கில் எடுத்துக்
கொண்டு சோஷலிசத்தை நிர்மாணிக்கத்தக்க படிக்கட்டுகளை ஒன்றன்
பின் ஒன்றாக இந்த அரசு செய்து வருகிறது என்பதை தாங்கள்
ஏற்றுக் கொள்ள வேண்டாமா ? அவருக்கே தெரியும். முன்பு
நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்தார்கள். அதிலே எவ்வளவு
பயங்கரமாக திசை திருப்புகிற நிலை இருந்தது ? தஞ்சை மாவட்டத்
தில் திடீரென்று நஞ்சை நிலத்தில் கரும்பு பயிரிட்டார்கள்.





இதற்கு முன்னால் கரும்பு பயிரிட்டதில்லை. நெல்லைத் தவிர வேறு
பயிரிட்டதே இல்லை. பிறகுதான் தெரிந்தது. ஆரூரான் ஷுகர் பாக்டரி
வருகிறது. கரும்புத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு உண்டு என்பதை
முன்கூட்டியே அறிந்து கொண்டு தஞ்சைத் தரணி நெல்தான் விளைகிற
ஒரு பகுதி—இப்படி ஒரு ஏற்பாட்டினை முன்கூட்டியே செய்துகொண்
டிருக்கிறார்கள். கரும்புத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்
டிருந்ததை திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்து ரத்து செய்திருக்
கிறது. அது சோஷலிச நிர்மாணத் திட்டத்தில் ஒன்று அல்லவா ?
தயவு செய்து சொல்லுங்கள் .

மணலியார் அவர்களுக்குத் தெரியும். தஞ்சைத் தரணியில்
விவசாயக் கூலிகள் குடியிருக்கும் இடம் தோட்டத்துக்கு—நிலத்திற்கு—
சொந்தக்காரர்களுக்குள்ள இடமாக இருந்ததால் அவர்கள் கொத்
தடிமைகளாக, ஆமைகளாக, ஊமைகளாக இருந்த நேரத்தில் அவர்
களுக்கு குடியிருக்கும் பாதுகாப்பு மட்டும்தான் கேட்டு அதற்காகத்தான்
போராடிக் கொண்டிருந்தார்கள், பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள்.
அப்போராட்டத்தில் சுட்டு வீழ்த்தப்பட்டனர் சிவராமன், இரணியன்
போன்றவர்கள்.

**They wanted only protection.**

குடிசைகளைப் பிய்த்து எறியாமல், குடியிருப்புகளிலிருந்து அப்புறப்படுத்
தாமல் இருக்க பாதுகாப்புத்தான் கேட்டார்கள். அதற்கு அவர்கள்
பெற்ற பரிசுகள் குண்டுகள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக
அரசு, நான் உளப்பூர்வமாகக் கேட்கிறேன். இன்றைய தினம் அவர்
களுக்கு அந்நிலங்களை பட்டா செய்து கொடுக்கவில்லையா ?
குடியிருப்பதற்குப் பாதுகாப்பு கேட்டது நீங்கள், பட்டா செய்து கொடுத்தது
தமிழக அரசு. அதற்கு இதயபூர்வமாக நன்றி பாராட்ட வேண்டாமா ?
கேட்கிறேன்.

எங்களுக்கு எதிராகப் பல சக்திகள், முதலாளித்துவ சக்திகள் போன்
றவை எதிர்க்கிறபோது நீங்களும் எங்களை பின்னால் இருந்து
குத்திக்கொண்டிருக்கிறீர்கள்.

**You are stabbing behind our back** இதுதான் பொதுவுடைமைத் தத்து
வத்தை நிலை நாட்டவேண்டுமென்று கற்பனை செய்துகொண்டிருக்கிற நீங்கள்
செய்கிற நியாயமான பணியா, தயவு செய்து இதயத்தைத் தொட்டுச்
சொல்லுங்கள். மின்சாரக் கழகங்களை எல்லாம் தேசியமயமாக்கியிருக்கிறது
கழக அரசு. அவர்கள் சொன்னார்கள். அவர்களுக்குள்ள பாண்டித்துவத்
தில் எனக்கு நம்பிக்கைக் குறைவு இல்லை. பொதுவுடைமைச்
சித்தாந்தத்தை அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதில் எனக்கு
ஐயப்பாடு இல்லை. ஆனால் அதைத் திருப்பி திராவிட முன்னேற்றக்
கழக அரசுக்கு எதிராக வேறு வகையில் பொருள் கூறுகிறார்கள்.
அந்த இடத்தில்தான் நான் மெத்த வேதனைப்படுகிறேன்.

[திரு. எல். கணேசன்] [1974 மார்ச் 12

தேசியமயமாக்கப்பட்டால்தான், உற்பத்திச் சாதனங்கள் பொது
வுடமையாக்கப்பட்டால் தான் இந்நாட்டில் சோஷலிசத்தை நிர்
மாணிக்க முடியும் என்பது அடிப்படைக் கொள்கை. அதன் படிக்கட்டு
களாகப் பல காரியங்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்திருக்
கிறது. அதை நன்றியறிதலோடு ஒப்புக் கொண்டு ஆதரவு அளிக்க
வேண்டும். அதுதான் நியாயம்.

அவர்கள் சொன்னார்கள், இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க
உங்களுக்கு உரிமை உண்டா, தகுதி இருக்கிறதா, இடைத் தேர்தல்
களில் தோல்வி அடைந்ததற்குப் பின்னால் இதைச் செய்யலாமா என்று.
அதை ஹாண்டே அவர்கள் கேட்கிறார்கள்; என் மதிப்பிற்குரிய நண்பர்
சீனிவாசன் அவர்களும் கேட்டார்கள். ஹாண்டே அவர்கள் கேட்டதில்
எனக்கு வருத்தமில்லை. காரணம், அவர் பிறந்தது எங்கேயோ,
வளர்ந்தது எங்கேயோ, சேர்ந்திருக்குமிடம் எங்கேயோ. ஆகவே
அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்பதில் எனக்கு வருத்தம் இல்லை.
ஆனால் நண்பர் சீனிவாசன் அவர்கள் கேட்கிறார்கள். இடைக்காலத்தில்
ஏற்படுகிற வெற்றிடத்தை நிரப்ப நடக்கின்ற தேர்தலில் தோல்வியுற்றால்
பதவி நீக்கம் செய்யவேண்டுமென்ற புதிய வாதத்தை முன்வைக்
கிறார்கள். இடைத் தேர்தல் என்பது, இடையில் ஏற்படுகிற வெற்றிடத்தை
நிரப்ப,

They can even be co.opted if the Constitution is so amended.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : That is the political barometer reflecting the political fall of the ruling party.

THIRU L. GANESAN : Does the same remark apply to Mr. Indira Gandhi, whose party has been defeated decisively in many by-elections in the North ? Have you got so much courage and guts to ask for the resignation of Mrs. Indira Gandhi ?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : You have been bitterly defeated in Dindigul.

THIRU L. GANESAN : In the recent by-elections in North, Mrs. Indira Gandhi's party had been defeated. Even in Dindigul, her party's candidate lost the deposit. Have you the guts to ask Indira Gandhi to resign?

TIRUMATHI T. N. ANANDANAYAKI: That is a stray incident. You were totally rejected in both the Assembly elections.



1974 மார்ச் 12]

THE HON. THIRU P. U. SHANMUGAM: How can you say two Assembly elections. There was election only to one Assembly , How can you say we were defeated in two Assembly elections ?

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, திண்டுக்கல் காங்கிரஸ்
வீட்டாக இருக்கவில்லை. கோவை பார்லிமெண்ட் வீட்டும் காங்கிரஸ்
வீட்டாக இருக்கவில்லை. கோவை மேற்குத் தொகுதியும் காங்கிரஸ் வீட்
டாக இருக்கவில்லை. காங்கிரஸ் யு.பி. யிலும், ஒரிசாவிலும்,
சென்ற தேர்தலைவிட அதிக இடங்களைத்தான் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பாராளுமன்றத் தொகுதியில்
பம்பாயில் என்னவாயிற்று என்று நாங்களும் கேள்வி கேட்கலாம்.

திரு. எல். கணேசன் : பலர் தங்கள் மேதாவிலாசத்தைக் காட்டிக்
கொள்கிறார்கள். அதற்கு இந்த மன்றத்தைப் பயன்படுத்திக்கொள்வதைக்
கண்டு நான் மெத்த வருத்தமடைகிறேன். புதுப்புது ஜனநாயக விளக்கங்
கள், வியாக்கியானங்கள் இந்த மன்றத்தில் கொடுக்கப்பட்டு வருகின்றன.
ஐந்தாண்டுகளுக்கு நீங்கள் ஆளுங்கள் என்று உரிமை அளித்தார்கள்
மக்கள்.

It is the mandate of the people who have voted us to power to govern for five years.

அதுதான் மக்கள் தீர்ப்பு. அதற்கு எதிராக, இடைத் தேர்தலில் தோற்று
விட்டீர்கள், எனவே வெளியேறுங்கள் என்று சொல்கிறார்கள்..
மெஜாரிட்டியே இல்லாமல் தொடக்கத்திலேயே ஜனநாயகக் கொலையைப்
புரிந்துவிட்டு அங்கு ஆளும் கட்சியாக வரத் துடிக்கிற நடிகர் கட்சித்
தோழர்களைக் கண்டு வருத்தப்படுகிறேன். தொடக்கத்திலேயே ஜனநாயகக்
கொலை. விலைவாசியேற்றத்தைப்பற்றிப் பேசுகிறார்கள். இங்கே பொரு
ளாதாரம் படித்தவர்கள் இருக்கிறார்கள். நான் கேட்கிறேன். பொரு
ளாதார அடிப்படையில் உள்ள உண்மைகளை நீங்கள் என் இப்படி நிரா
கரிக்கிறீர்கள் ? மகன் இறந்தாலும் பரவாயில்லை மருமகள் தாலி அறுக்க
வேண்டும் என்ற இந்தச் சித்தாந்தத்தைக் கடைப்பிடிப்பீர்களானால்
திராவிட முன்னேற்றக் கழகம் பதவியைவிட்டு இறங்கலாம், அதைப்
பற்றிக் கவலையில்லை. ஆளும் கட்சியில் 174........

திருமதி த. ந. அனந்தநாயகி : இதற்கு முன்பு இம்மாதிரிச் சொன்
னதற்கு நீங்கள் மிக்க பண்போடு அதை எக்ஸ்பஞ்ச் செய்திருக்கிறீர்கள்.
அதேபோல்..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்று சொன்ன முறை வேறு,
இன்று சொல்கிற முறை வேறு.

திரு. எல். கணேசன் : It is perfectly parliamentary. திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்க்கிற அந்த இயக்கத்திற்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் இருந்து நீக்கவேண்டும் என்று செய்கிற அந்த முயற்சிக்கு, என்றென்றும் தமிழ்ச் சமுதாயத்திற்கு துரோகம் செய்யும் செயலை நீங்கள் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ செய்து விடாதீர்கள் என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்வதற்காகத்தான் அந்தப் பழமொழியைச் சொன்னேனே தவிர வேறு அல்ல.

விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது. ஏன் ? இந்த விலையேற்றத்திற்கு அடிப்படைக் காரணகர்த்தாக்கள் யார் ? என்ன அடிப்படையில் விலைவாசிகள் ஏறுகின்றன ? பற்றாக்குறை நிதியை ஈடுகட்டுவதற்கு நோட் அடிக்கிறார்கள்.

No proportion between production of commodities and services and production of currency notes. That is the elementary principle which the hon. member knows well.

நோட் அடிப்பதை யார் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் ? இந்தப் பண வீக்கத்திற்கான அடிப்படைக் காரணம் என்ன ? பண வீக்கம் மட்டுமல்ல. இன்னொரு காரணம்—கறுப்புப் பணம் இந்த அடிப்படைக் காரணங்களில் ஒன்று என பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். விலை வாசியேற்றத்திற்கு கள்ளப் பணம், பிளாக் மணி, அண்–அக்கவுண்டெட் மணியும் ஒரு காரணம்.

un-accounted money is one of the causes.

முழுக் காரணம் என்று சொல்லவில்லை. பல காரணங்களில் ஒன்று, இதில் வேதனை என்னவென்றால் கறுப்புப் பணத்தின் சொந்தக்காரர்களை, அதிபதிகளை அவர்களுக்கு வழிகாட்டிகளாகவும், ஆதரவு தருகிறவர்களாகவும் ஏற்றுக்கொள்கிறார்கள். அது என்ன நியாயம் ? கறுப்புப் பணத்தை வெளிக் கொணர முடியவில்லை என்பதில் கூட வருத்தம் இல்லை. கறுப்புப் பணத்திற்கான காரணங்களில் ஒன்று,

One of the causes for block money is tax evasion.

நிச்சயமாக கறுப்புப் பணம் வரி ஏய்ப்பின் காரணமாக குவிகிறது. ஆனால் அதிலே பெயர்போனவர்களோடு சேர்ந்து கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்குவதில் என்ன சுகம் காண்கிறீர்களோ எனக்குத் தெரியவில்லை. சுருக்கமாக முடித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு இடர்ப்பாடான சூழ்நிலையிலும் இந்த நிதிநிலை அறிக்கையில், நம்பிக்கைக்குப் பாத்திரமான பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. எப்போதும் வரி போட்டுக்கொண்டிருந்த நேரத்தில் இப்போது வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது.



மண்ணெண்ணெய்யின் விலை ஏறிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் —அதற்குப் பொறுப்பு மத்திய அரசினர்—இங்கு விறகுக்கான கரிக்கு விலக்களித்திருக்கிறோம். அதற்காக அம்மையார் அவர்கள் நன்றி தெரிவித்திருப்பார்கள் என்று கருதினேன். இப்போது படி அரிசி மூன்று ரூபாய்க்கு விற்கிறது என்று சொன்னார்கள். விறகுக்கு இப்போது வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 50,000 வரையில் வியாபாரம் செய்கிறவர்களுக்கு வணிக வரி விலக்கு அளித்திருக்கிறோம். கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்த கடனைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். மாநில அரசு ஊழியர்களுக்குக் பத்து ரூபாய் பஞ்சப்படியை உயர்த்திக் கொடுத்திருக்கிறோம். இப்படிப் பல அருமையான திட்டங்களை திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த நிதி நிலையில் அளித்திருக்கிறது. நான் அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-30]

THIRU K.T.K. TANGAMANI : It is already 1-30 p.m., Sir

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடித்து விடுவார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நாளைக்கு வேண்டுமானால் அவர் பேசிக்கொள்ளட்டும்.

THIRU L. GANESAN : I can continue tomorrow, if the Hon. Speaker permits me.

THIRU K.T.K. TANGAMANI : The Hon. Member may be asked to continue tomorrow. How long can we be kept hungry? Now the time is 1-30 p.m.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்குப் பேச வேண்டிய உறுப்பினர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஆகவே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுங்கள்.

திரு எல். கணேசன் : வேளாண்மையைப் பற்றி ஒரு கருத்தை சொல்கிறேன். காவிரியின் உபதங்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகச் சொல்கிறேன். காவிரியின் உபநதிகளில் மைசூர் மாநிலம் அணைகளைக் கட்டுகிறது. அதனால் காவேரியில் தண்ணீர் குறையும் அப்படிக் குறைந்த அளவு தண்ணீரில் பழைய ஆற்றுப் பாசனப் பகுதிக்கே முன்னுரிமை இடைக்கும். ஆகவே புது ஆற்றுப் பாசனப் பகுதியாகிய ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டங்கள் மிகுதியும் பாதிக்கப்படும். அப்படி ஏற்படும் இடர்களைத் தவிர்க்கும் வகையில் முன் ஏற்பாடாக பல திட்டங்களை அப் பகுதியில் நிறைவேற்றிட வேண்டும். அந்த நோக்கோடு எங்கள் பகுதியில் நிலத்திற்கு அடியில் உள்ள நீரைப் பயன்படுத்துவதற்காக ஆழ்குழாய்க்

[திரு. எம். கணேசன்] [1974 மார்ச் 12

கேணிகள் தோண்டும் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். ஆனால் அதை நிறைவேற்றுவதில் பல இடர்பாடுகள் இருக்கின்றன. அவைகளை உடன் நீக்கி ஆழ்குழாய்க் கேணிகள் தோண்டிட முழு உதவியைச் செய்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மிகவும் முக்கியமான ஒரு பிரச்சினை, புதுக்கோட்டை மாவட்டம் தனியாகப் பிரிந்ததால் ஏற்பட்டிருக்கிறது. அறந்தாங்கி வட்டம் புதுக்கோட்டையில் சேர்க்கப்பட்டதால், பட்டுக்கோட்டை கோட்டம் அமைப்பதில் சிக்கல் எழுகிறது. அச் சிக்கலை சுமுகமாகத் தீர்க்க ஒரு யோசனை சொல்கிறேன். பேராவூரணி துணை வட்டத்தை, வட்டமாக உயர்த்தி பேராவூரணி வட்டம், பட்டுக்கோட்டை வட்டம் ஆகியவற்றை இணைத்து " பட்டுக்கோட்டை டிவிஷனாக " வைத்துக் கொண்டு, தஞ்சைக் கோட்டத்தை " ஆஸ் இ டீஸ் " இருக்கிற நிலையிலே வைத்துக் கொண்டால் பிரச்னைகள் வராது என்பதை எடுத்துச் சொல்லி, இந்த அறிக்கையை மனப்பூர்வமாக வரவேற்று நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-33 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## 4. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

158. Notification issued with G.O. Ms. No. 2050, Rural Develpoment and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Ambur Local Planning Area. [*Laid on the Table of the House under section* 123(2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972].

159. Notification issued with G.O. Ms. No. 2063, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Periyakulam Local Planning Area. [*Laid on the Table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972.]

160. Notification issued with G.O. Ms. No. 2448, Rural Development and Local Administration, dated the 14th November 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Bhavaniasgar Local Planning Area. [*Laid on the Table of the House under Section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972].



161. Notification issued with G.O. Ms. No. 2076, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Udumalaipettai Local Planning Area. [*Laid on the Table of the House under Section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972.]

162. Balance Sheet and Profit and Loss Account of the Tamil Nadu Warehousing Corporation, Madras for the year 1971–72 [*Laid on the Table of the House under section* 31 (11) *of the Warehousing Corporation Act*, 1962 (*Central Act* 58 of 1962.)]

B. Reports, Notifications and other papers:—

*Nil.*

[1974 மார்ச் 12

இணைப்பு — I.

[139-ம் பக்கத்தில் 384 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

திருச்சி மாவட்டத்தில் 1972–73ஆம் ஆண்டிற்குப் பிறகு பாசன வசதிகளைப் பெருக்கிட நடுத்தரத் திட்டமாக (medium scheme) பொன்னியாறு நீர்த் தேக்கத் திட்டம் அமைக்கப்பெற்று 95 சத விகித வேலைகள் முடிவு பெற்றுள்ளது. இதுவரையிலும் ரூ. 78,79,915 செலவிடப்பட்டுள்ளது. திட்ட வேலைகள் 3/74-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தினுல் 2,101 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

2. இம் மாவட்டத்தில் தனி சிறுபாசனத் திட்டத்தின்கீழ் 1972–73ஆம் ஆண்டில் 3 புதிய திட்டங்கள் ரூ. 7·317 லட்சம் மதிப்பீட்டிலும் 1973–74ஆம் ஆண்டில் 4 புதிய திட்டங்கள் ரூ. 6·09 இலட்சம் செலவிலும் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இவைகளினுல் 1,039 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். 710 டன்கள் உணவு உற்பத்தி பெருகும்.

இன்னும் "தூர் வாரும்" திட்டத்தின் கீழ் ஒரு வேலை ரூ. 30,500 செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதனுல் பாசன வசதி பெறும் நிலங்கள் 196 ஏக்கராகும். அதிக உணவு உற்பத்தி 28 டன்கள்.

மேலும் 1972–73ஆம் ஆண்டில் 214 பழைய ஏரிகள் மராமத்து வேலைகள் ரூ. 24,09,100 செலவிலும், 1973–74ஆம் ஆண்டில் 54 பழைய ஏரி வேலைகள் ரூ. 6,49,300 செலவிலும் மராமத்து செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதனுல் பாசன வசதி பெறும் நிலம் 10,068 ஏக்கர். கிடைக்கும் அதிக உணவு உற்பத்தி 3,720 டன்கள்.

இதுதவிர "குட்டை" திட்டத்தின் கீழ் 1972–73 மற்றும் 1973–74ஆம் ஆண்டுகளில் 13 திட்டங்கள் ரூ. 3,77,800 செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இதனுல் பாசன வசதி பெறும் நிலம் 1,215 ஏக்கர். கிடைக்கும் கூடுதல் உணவு உற்பத்தி 572 டன்கள்.

தற்பொழுது இம் மாவட்டத்தில் 513 வேலைகள் ரூ. 94,89,580 மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகளினுல் பாசன வசதி பெறும் நிலம் 17,173 ஏக்கர்கள். கிடைக்கும் அதிக உணவு உற்பத்தி 8,277 டன்கள்.

1973–74-ஆம் ஆண்டில் 5 புதிய திட்டங்கள் ரூ. 12,66,700 செலவில் அங்கீகரிக்கப்பட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது. இதனுல் 1,766 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். எதிர்பார்க்கும் உணவு உற்பத்தி 761 டன்கள்.



1974 மார்ச் 12]

மேலும் 1973–74ஆம் ஆண்டில் 83 நீர்ப்பாசன மராமத்து வேலைகள் ரூ. 11,72,700-க்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனுல் பாசன வசதி நிலம் 4,053 ஏக்கர். கிடைக்கும் அதிக உணவு உற்பத்தி 1,964 டன்கள்.

இன்னும் இம் மாவட்டத்தில் 55 புதிய திட்டங்கள் ரூ. 2,37,06,000 மதிப்பீட்டிற்குத் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுவதற்கான பல்வேறு நிலையில் உள்ளது. இத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் சுமார் 26,760 ஏக்கர் நிலம் பாசனம் பெறும். இதனுல் எதிர்பார்க்கப்படும் உணவு உற்பத்தி 12,115 டன்கள். இவையல்லாமல் அவ்வப்போது தேவைப்பட்ட ஏரிகளும் மராமத்து செய்யப்படுகின்றன.

1972-73 ஆண்டுக்குப் பின்னுல் திருச்சி மாவட்டத்தில் பாசன வசதிகளைப் பெருக்கிட அரசு மேற்கொண்டுவரும் திட்டங்கள்.

| எண்ணும் விபரங்களும். | திட்டங்கள் | | மதிப்பு இலட்சத்தில் | பயனடையும் நிலங்களின் பரப்பு. | அதிகப்படியான உணவு உற்பத்தி (டன்னில்). | குறிப்புரை. |
|---|---|---|---|---|---|---|
| | நிறைவேற்றப்பட்டது. | வேலைகள் நடந்துக் கொண்டிருப்பவை. | | | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. சிறப்பு சிறுபாசன திட்டங்கள். | 7 | 5 | 26 | 2,805 | 1,471 | |
| 2. சிறப்பு சிறுபாசன திட்டத்தின் கீழ் பழுது பார்த்தல். | 268 | 596 | 137 | 31,276 | 13,961 | |
| 3. குட்டைகள் அமைத்தல். | 13 | .. | 3.8 | 1,215 | 572 | |
| 4. தூர்வாரி புனரமைக்கும் திட்டங்கள். | 1 | .. | 0.3 | 196 | 28 | |
| 5. நடுத்தர திட்டங்கள் (பொன்னனியாறு நீர்த் தேக்கத் திட்டம்). | .. | 1 | 100 | 2,101 | 910 | இது வரை ரூ. 78.8 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இத் திட்டம் 3/74ல் முடிவுறும். |



*Medium Projects.*—To improve the irrigation facilities in Tiruchirappalli District after 1972-73, one medium project named, Ponnaniar Reservoir Scheme is under execution. Ninety-five per cent of the work has been completed. The expenditure incurred so far is Rs. 78,79,915. The ayacut to be benefited under this scheme is 2,101 acres. The scheme is expected to be completed in March 1974.

*I. Works Completed—Special Minor Irrigation Programme Schemes.*—Special Minor Irrigation Programme Schemes completed during 1972-73 are three numbers at an estimated cost of Rs. 7,31,700 and during 1973-74 are four numbers at an estimated cost of Rs. 6,09,000. The ayacuts benefited under these schemes are 1,039 acres. The additional Food Production expected is 710 tonnes.

*Desilting-cum-Reclamation Schemes.*—Under Desilting-cum-Reclamation one work has been completed during 1972-73 at an estimated cost of Rs. 30,500. The ayacut benefited under this scheme is 196 acres and the additional food production expected is 28 tonnes.

*Special Repair Works Under Special Minor Irrigation Programme* :—During 72-73, 214 numbers of Special Minor Irrigation Programme (Special repairs) works at an estimated cost of Rs. 24,09,100 and during, 73-74, 54 numbers of Special Minor Irrigation Programme Works at an estimated cost of Rs. 6,49,300 have been completed. The ayacut benefited under these works are 10,068 acres and the additional food production expected is 3,720 tonns.

*Pond Schemes.*—Apart from Special Minor Irrigation Programme during, 72-73 and 73-74, 13 numbers of ponds schemes have been completed at an estimated cost of Rs. 3,77,800. The ayacut benefited under these Pond Schemes is 215 acres and the additional Food Production expected is 572 tonnes.

II. Works Under Execution.—Five hundreds and thirteen works at an estimated cost of Rs. 94,39,580 are under execution numbers of Special Minor Irrigation Programme (Special repairs) in the district. The ayacut benefited under these works are 17,173 acres. The additional Food Production expected is 8,277 tonnes.

*Special Minor Irrigation Programme Shemes.—During* 1973-74, 5 new schemes to benefit an ayacut of 1,766 acres have been sanctioned for Rs. 12,66,700/- and are under execution. On completion this will yield an additional food of 761 tonnes.

During 1973-74, 83 numbers of Special Minor Irrigation Programme, S.R. works have been sanctioned to an estimated cost of Rs. 11,72,700/- and are in various stage of progress the ayacut to be benefited under these works are 4,035 acres and the additional Food Production expected is 1,964 tonnes. Also three Special Minor Irrigaion Programme Schemes have been sanctioned by Government at an estimated cost of Rs. 12·72 lakhs and they will be taken up for execution shortly.

*III. Special Minor Irrigation Programme Schemes under various levels.*—There are 55 numbers of Special Minor Irrigation Programme schemes proposed to be executed in the distrct at an estimated cost of Rs. 2,37,06,000 and are in various stage of sanction. If sanctioned, the ayacut benefited under these schemes will be 26, 760 acres and the Additional Food Producion expected is 12,115 tones.



STATEMENT SHOWING IRRIGATION FACILITIES PROVIDED IN TIRUCHI DISTRICT APRIL 1972-73.

| Serial No. | Description | Schemes | | Cost in lakhs of Rupees. | Ayacut benefited in acres. | Additional Food production anticipated in Tonnes. | Remarks. |
|---|---|---|---|---|---|---|---|
| | | Completed | Under Execution. | | | | |
| 1 | Special Minor Irrigation Programme Schemes. | 7 | 5 | 26 | 2,805 | 1,471 | |
| 2 | Special Minor Irrigation Programme (Special repairs) works. | 268 | 596 | 137 | 31,276 | 13,961 | |
| 3 | Pond Scheme. | 13 | .. | 3.8 | 1,215 | 572 | |
| 4 | Desilting-*Cum*-Reclamation Schemes. | 1 | .. | 0.3 | 196 | 28 | |
| 5 | Medium Schemes (Ponnaniar Reservoir Scheme). | .. | 1 | 100 | 2,101 | 910 | Expenditure so far incurred is Rs. 78.8, lakhs. The Scheme will be completed by 3/74. |

[1974 மார்ச் 12

## இணைப்பு - 11.

[140-ம் பக்கத்தில் 385 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட, வினாவிற்குரிய விடையைக் காண்க.]

பயறு வகைகளின் சாகுபடியை ஊக்குவிக்க அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது :—

(1) முக்கியமான பருப்புவகைகளை கலவைப் பயிராக மற்ற பயிர்களுடன் சாகுபடி செய்ய அதிக நிலப்பரப்பைக் கொண்டு வருதல்.

(2) முக்கிய பருப்புவகை வித்துக்களை சேகரித்து விவசாயிகளுக்கு விநியோகித்தல்.

(3) புதிய பருப்புவகைகளைப்பற்றி விவசாயிகளைப் படிப்பிக்க முன்னோடி செயல் விளக்கப்பாத்திகளை நிறுவுதல். மேற்படி விளக்கப் பாத்திகளை நிறுவ ரூ. 60 எக்கர் ஒன்றுக்கு சாகுபடி செலவிற்காக உதவித் தொகையாக அளித்தல்.

(4) விதைப்பண்ணைகளை விவசாயிகள் நிலத்தில் உயர்தர பருப்பு வகை இனத்தைக் கொண்டு நடத்துதல், விதைகளை அவர்களிடமிருந்து சேகரித்தல் மற்றும் அவைகளின் விநியோகம்.

(5) திருவரங்குளத்தில் அடிப்படைய வித்துக்களை இரண்டாம் தர விதைப் பண்ணைகளுக்கு விநியோகிக்க உற்பத்தி செய்தல்.

மத்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டத்தில் கீழ்க்கண்டவாறு உதவித் தொகை அளிக்கப்படுகிறது :—

(1) ஒரு எக்கருக்கு ரூ. 150 வீதம் வித்துக்கள், உரம், பயிர் பாதுகாப்பு, ரசாயனப் பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் குடுவைகளாக விளக்கப் பாத்திகள் அமைக்க உதவி அளித்தல்.

(2) மூல வித்துக்கள் உற்பத்திக்காக ஒரு எக்கருக்கு ரூ. 200 மானியமாக மூல வித்துப் பண்ணைகளுக்கு அளித்தல்.

(3) பயிர்பாதுகாப்பு மருந்துகள் வாங்க மற்றும்,

(4) தேசிய விதைக் கழகம், அரசு பண்ணைக் கழகம், டாரை அபிவிருத்திக் கழகம் ஆகியவைகளிடமிருந்து வித்துக்களை வாங்க ஒரு கிலோகிராமிற்கு ரூ. 1 வீதம் உதவித் தொகை வழங்குதல்.

(5) நுண்ணுயிர் குடுவைகள் தயாரிக்கும் நிலையங்களுக்குத் தேவையான சாமான்கள் வாங்க ரூ. 1,00,000 சலுகையாக ஒதுக்கப்பட்டுள்ளது.



1974 மார்ச் 12]

The steps taken by this Government to augment the production of pulses are as follows :—

(i) Bringing more area under important pulses as mixtures with various crops.

(ii) Procurement of improved varieties of seeds of the important pulses and distribution to the ryots.

(iii) Laying out pilot demonstration plots to educate the ryots about new varieites of pulses with a subsidy at Rs. 60 per acre towards the cost of inputs for the demonstration plots.

(iv) Running of seed farms in ryots' holdings with improved strains of pulses, procurement of seeds from them and their distribution.

(v) Multiplication of foundation seeds in Tiruvarangulam for distribution to the secondary farms.

2. The centrally sponsored scheme sanctioned by the Government of India provides subsidy for the following:—

(*a*) for demonstration plots by way of seeds, fertilisers, plant protection chemicals and bacterial culture flasks at Rs. 150 per acre.

(*b*) for breeder seed farms for urgent multiplicationof breeder seeds at Rs. 200 per acre.

(*c*) for the purchase of pesticides.

(*d*) for purchase of seeds at Re. 1 per kg. from the National Seed Corporation, State Farms Corporation and Tarai Development Corporation ; and

(*c*) an amount of Rs. 1 lakh has been sanctioned for equiping the laboratories for production of rhizobium culture.

## இணைப்பு 111.

[140-ம் பக்கத்தில் 386-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

"ஒருங்கிணைந்த ஒரு பெரும் கோழி அபிவிருத்தித் திட்டம் ஒன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் "திருச்சிராப்பள்ளி மாவட்ட 170,000 கோழி அபிவிருத்தித் திட்டம்" எனும் பெயரில் 1972-ம் ஆண்டில் ஸ்டேட் பாங்கின் கடன் உதவியுடனும், கால் நடை பராமரிப்புத்துறை அலுவலர்களின் தொழில் நுட்ப உதவியுடனும் துவக்கப்பட்டது. ஸ்டேட் பாங்கின் இந்த கடனுதவித் திட்டத்திற்கு மேல் மட்ட பொறுப்பதிகாரிகள் வங்கி மேலாளரும் வங்கியினால் நியமிக்கப்பட்ட கோழி வளர்ப்புத் தனி அதிகாரியும் ஆவர். கீழ்க்கண்ட மையங்களில் இத் திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கிறது.

| தொடர்ச்சி எண்ணும் மையத்தின் பெயரும். | கோட்டத்தின் பெயர். | வங்கியின் மிக அருகாமையிலுள்ள கிளை. | கிளையிலிருந்து தொலைவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 கொம்பம் பட்டி | துறையூர் | துறையூர் | 12 மைல்கள். |
| 2 துறையூர் | துறையூர் | துறையூர் | .. |
| 3 தாதைங்கர்பட்டி | முசிறி | முசிறி | 12 மைல்கள். |
| 4 தொட்டியம் | முசிறி | முசிறி | 8 மைல்கள். |
| 5 மனசநல்லூர் | லால்குடி | லால்குடி | 8 மைல்கள். |
| 6 அரும்பவூர் | பெரம்பலூர் | பெரம்பலூர் | 16 மைல்கள். |
| 7 அரியலூர் | அரியலூர் | அரியலூர் | .... |
| 8 புதுக்கோட்டை | ஆலங்குடி | புதுக்கோட்டை | .... |
| 9 பொன்னமராவதி | திருமயம் | திருமயம் | 12 மைல்கள். |
| 10 கரையூர் | திருமயம் | திருமயம் | 11 மைல்கள். |
| 11 திருமயம் | திருமயம் | திருமயம் | .... |
| 12 திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | .... |
| 13 குழுமனை | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி | 8 மைல்கள். |
| 14 பெட்டவைத்தலை | குழித்தலை | குழித்தலை | 8 மைல்கள். |
| 15 கரூர் | கரூர் | கரூர் | .... |
| 16 கிருஷ்ணராயபுரம் | குழித்தலை | குழித்தலை | 15 மைல்கள் |
| 17 மணப்பாறை | மணப்பாறை | மணப்பாறை | .... |

அனுபவங்கள், விவசாயிகளின் முற்போக்கு இயல்பு, கால்நடை மருத்துவ வசதிகள் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு இந்த மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் 100 கோழிகளுக்கு ஒரு பண்ணை வீதம் ஒவ்வொரு மையத்திலும் ஏற்படுத்தப்படும். ஸ்டேட் வங்கி நடுத்தர, குறுகியகால கடனுதவி மூலம் ஒவ்வொரு பண்ணைக்கும் ரூ. 2,250-ஐ கொடுக்கிறது. இக்கடன் நான்கு ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். கொட்டகை கட்டுதல், உபகரணங்கள், கோழிக்குஞ்சுகள் முதலியன வாங்குவதற்காக கொடுக்கப்படும். குறுகியக்காலக் கடன் 1½ ஆண்டுகளுக்குள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். 1,541 பண்ணைகள் அமைப்பதற்காக ரூ. 34,88,073·04 வங்கியினால் இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,449 கோழிப்பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டு அங்கு கோழிகள் முட்டையிடும் நிலையில் உள்ளன. ஒவ்வொரு மையத்திலும் கோழி வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோழி வளர்ப்போருக்கு கால்நடை வளர்ப்புத்துறை எல்லாவிதமான தொழில் நுட்ப உதவிகளும் செய்யும். இத்திட்டம் துவக்கப்பட்ட அக்டோபர் 1972ல் இருந்து 1973 அக்டோபர் 31 வரையில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளின் மொத்த எண்ணிக்கை 35,23,377 ஆகும். இம்முட்டைகள் திருச்சிராப்பள்ளி கோழி வளர்ப்போர் கூட்டுறவு சங்கம், சென்னை கோழி வளர்ப்புக் கழகம் இவைகளின் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. கோழி வளர்போருக்குத் தேவையான கோழிக் குஞ்சுகளும், தீவனமும் ஸ்டேட் வங்கியினால் நியமிக்கப்பட்ட உற்பத்தி நிலையங்களால் கோழி வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக வழங்கப்படுகிறது.

A massive package scheme for development of poultry in Tiruchirappalli district known as "Tiruchirappalli District 170,000 Poultry Development Scheme" has been introduced during the year 1972 with the loan assistance from the State Bank of India under the differential rate of interest scheme and the technical aid of Animal Husbandry Department staff. The officer in-charge of the scheme at apex level is the Bank Manager of State Bank of India, Tiruchirappalli, and one Special Officer for Poultry appointed by the Bank. The scheme has been implemented at the following centres:—

| *Serial number and name of the centre.* | *Name of the taluk.* | *Nearest branch of the bank.* | *Distance from the branch.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 Koppampatti .. | Thuraiyur .. | Thuraiyur .. | 12 miles. |
| 2 Thuraiyur .. | Thuraiyur .. | Thuraiyur .. | .. |
| 3 Thathaingerpet | Musiri .. | Musiri .. | 12 miles. |
| 4 Thottiam .. | Musiri .. | Musiri .. | 8 miles. |
| 5 Manachanallur. | Lalgudi .. | Lalgudi .. | 8 miles. |
| 6 Arumbavur .. | Perambalur | Perambalur. | 16 miles. |
| 7 Ariyalur .. | Ariyalur. .. | Ariyalur .. | .. |
| 8 Pudukottai .. | Alangudi .. | Pudukottai | .. |
| 9 Ponnamaravathi. | Tirumayam. | Tirumayam. | 12 miles. |
| 10 Karaiyur .. | Tirumayam | Tirumayam. | 11 miles. |
| 11 Tirumayam .. | Tirumayam | Tirumayam. | .. |
| 12 Tiruchirappalli. | Tiruchirappalli. | Tiruchirappalli. | .. |
| 13 Kuzhumanai .. | Tiruchirappalli. | Tiruchirappalli. | 8 miles. |
| 14 Pettaivaithalai. | Kulithalai. | Kulithalai .. | 8 miles. |
| 15 Karur .. | Karur .. | Karur .. | .. |
| 16 Krishnarayapuram. | Kulithalai .. | Kulithalai .. | 15 miles. |
| 17 Manaparai .. | Manaparai | Manaparai | .. |

The centres are selected keeping in view the expertise already vailable, progressive nature of the farmers and availability of 'eterinary facilities, Under the scheme, the Poultry Units



will be established in each centre at 100 birds in each unit. The State Bank of India will give loan to the extent of Rs. 2,250 per unit by way of medium and short-term loan to be recovered in four years and short-term loan to be recovered in one and half years to meet the cost of construction of sheds, etc., purchase of equipment and chicks, etc. A sum of Rs. 34,88,073·04 has so far been sanctioned by the Bank as loan for establishment of 1,541 units. So far 1,449 units have been started with birds and they are in laying stage. Poultry co-operatives have been formed in each centre and the Department will render all technical help to the breeders. up to 31st October 1973, a total of 3,523,377 eggs have been produced from the inception of the scheme in October 1972. The eggs are being marketed through the respective Poultry Breeders' Co-operative Societies to the Poultry Breeders, Co-operative Societies, Tiruchirappalli and Poultry Development Corporation, Madras. The chicks and feed required for breeders are being supplied by the firms appointed by the State Bank of India through the Poultry Breeders' Co-operative Societies.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

புதன்கிழமை, 1974, மார்ச் 13.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 391, 392, 393 ஆகியவை பிறகு எடுத்துக் கொள்ளப்படும். கேள்வி எண். 394, திரு. கா. வேழவேந்தன் அவர்கள் கேள்விக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விடையளிப்பார்கள்.

### (1) நடைமுறைக் கேள்விகள்

(அ) வினா நேரத்தில் அவைக்கு வராத அமைச்சர்களுக்கு உரிய வினாக்களை ஒத்தி வைப்பது குறித்து

DR. H. V. HANDE : Sir, on a point of order. The Hon. Speaker has just now stated that three questions would be taken up later. May I know whether any communication has been received from the Hon. Minister for Education that they can be taken up later because yesterday the Hon. Speaker had stated that some questions were postponed at the request of the Hon. Minister for Transport. But we are told that the Hon. Minister for Transport has not contacted the Hon. Speaker and yesterday he was not available. Still the Hon. Speaker told the House that they were postponed at the request of the Hon. Minister for Transport. I want to know whether the Hon. Speaker was right in guiding the House in an incorrect and wrong manner and whether he has received any written communication from him........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க முதல் இரண்டு கேள்விகள் ஒத்திவைக்கப்பட்டன. இரண்டாவது, போக்குவரத்து அமைச்சர் அவர்களுடைய கேள்விகள் ஒத்திவைக்கப்பட்டபோது, "பிறகு எடுத்துக் கொள்ளப்படும்" என்று சொல்லியிருக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேப்பரில் வந்ததை இன்று கூடப் பார்த்தேன். "கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது" என்று நேற்று சொன்னீர்கள். குறிப்பிலே கூட இருக்கிறது. ஆகவே, அவர் கேட்டுக்கொள்ளவில்லை. ட்ரான்ஸ்போர்ட் மினிஸ்டரை எட்டாம் தேதியிலிருந்து பார்க்க முடியவில்லை என்று பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆல் இந்தியா ரேடியோவிலேயும் சொல்லியிருக்கிருர்கள். அவையில் நமக்கு சரியான தகவலைக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரின் பர்ஸனல் அஸிஸ்டென்டிடமிருந்து வந்த கடிதத்தையே படித்துவிடுகிறேன்.

**'I am directed to request that the questions included to-day (12th March 1974) for the Hon'ble Minister for Transport may be postponed.**

**A letter in this regard from the Hon'b'e Minister will be obtained and submitted later'** என்று கடிதம் வந்திருக்கிறது.

கேள்வி 394. திரு. வேழவேந்தன் அவர்கள் கேள்விக்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து, அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒரு வேண்டுகோள் தெரிவிக்க விரும்புகிறேன்.

கேள்வி நேரத்தில் எந்தவிதமான அரசாங்கப் பணியாளர்களைப் பற்றியோ, அமைச்சர்களைப் பற்றியோ, தனிப்பட்ட முறையில் அவர்கள் வாராததைப்பற்றியோ கேள்விகளை எழுப்புவது என்பதும், சபாநாயகர் அவர்கள் சில கேள்விகளை ஒத்திவைத்ததற்குப் பின்னர், அல்லது "பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்" என்று தெரிவித்ததற்குப் பின்னர், சபாநாயகருக்கு அப்படி ஒரு குறிப்பு வரவில்லை, அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை என்ற கேள்வியை ஒரு மதிப்பிற்குரிய உறுப்பினர் எழுப்புவதும் இந்த அவையின் சிறப்புக்கும் கௌரவத்திற்கும் தலைவருடைய மதிப்பிற்கும் குறைவு ஏற்படுத்துவதாகும். எனவே, இப்படிப்பட்ட முறைகளை இந்த அவையில் எப்பொழுதும் அனுசரிக்கக்கூடாது என்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார் எழுந்தார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : கேள்விகளை ஒத்திவைத்ததையொட்டிக் கேட்டேனே தவிர வேறொன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "அமைச்சருடைய வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டது" என்று பேரவைத் தலைவர் சொன்னால், அதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வதுதான் மரபு. அதை ஏற்றுக்கொள்ளாமல், "பேரவைத் தலைவர் சொன்னதில் உண்மை இருக்கிறதா? இல்லையா," என்று கேட்பது மரபல்ல. பேரவைத் தலைவர், அமைச்சர் வேண்டுகோளின்படி கேள்விகளை ஒத்தி வைப்பதாகச் சொன்னால், பேரவைத் தலைவரை அவையில் உள்ளவர்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளபடியால், அவர் சொல்வதை நம்ப வேண்டும். அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை "க்வெஸ்டின்" பண்ணுவது முறையல்ல. அதைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது சொன்னார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, our rules regarding list of business are governed by rule No. 21 which says—

'(1) A list of business for each day shall be prepared by the Secretary and circulated to all members.

(2) Except as provided in these rules, no business not included in the list of business for the day shall be transacted at any sitting except business of a formal or ceremonial nature ......'

Rule 22 says—

'The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion extend the time for questions.'

Now the point of order which has been raised by the hon. Member, Dr. Hande, relates to the questions which have been postponed. I do not think there is anything inappropriate or wrong in raising the point of order with regard to the list of business that is before the House and some questions have been postponed......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகளை எப்படி எடுத்துக் கொள்ளலாம், எப்படி ஒத்திவைக்கலாம் என்றுதான் இருக்கிறது.

THIRU R. PONNAPPA NADAR : That is also governed by the rules. Now this is an important business and the Hon. Minister who is to answer the questions was not available. Several reports have appeared in the newspapers and by way of clarification, the House is entitled to know what has transpired and the House should be taken into confidence.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 35 (5)இல்—

' The Speaker may, at the request of the concerned Minister, postpone one or more questions entered in the list of questions for a day to a subsequent date.' என்று இருக்கிறது.

"அமைச்சரின் வேண்டுகோளின்படி கேள்விகள் ஒத்திவைக்கப்படுகின்றன" என்று பேரவைத் தலைவர் சொன்னால், அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, " நீங்கள் உண்மையாகச் சொல்கிறீர்களா ? மந்திரி கேட்டிருக்கிறாரா " என்ற முறையில் கேட்பது முறைதானா என்று உறுப்பினர் அவர்கள் யோசிக்க வேண்டும்.

THIRU R. PONNAPPA NADAR : In this particular case, conflicting reports have appeared in the newspapers. The reported statement made by the Hon. Chief Minister has also appeared in the Press and also broadcast by the All India Radio....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையில் வந்த செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப் போகிறீர்களா, பேரவைத் தலைவர் சொல்வதற்கு முக்கியத்துவம் கொடுக்கப் போகிறீர்களா ? அதைத்தான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையில் ஏதேதோ வருகிறது. அதையெல்லாம் ஒத்துக்கொள்வதா ? பேரவைத் தலைவர் சொல்வதை ஒத்துக்கொள்வதா ? பேரவைத் தலைவர் சொல்வதை ஒத்துக்கொள்வதுதான் முறையாகும்.

இப்போது கேள்வி எண். 394 எடுத்துக் கொள்ளப்படுகிறது.



## (2) வினாக்கள்—விடைகள்.

## வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### ஆரம்பாக்கம் மருத்துவமனை.

*394 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஆரம்பாக்கம் கிராமத்தில் உள்ள மருத்துவமனை சீராக நடைபெறவில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆரம்பாக்கத்தில் உள்ள ஆயுர்வேத மருந்தகம் 1971-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை மருத்துவ அதிகாரி வேலைக்கு வராததாலும், பிறகு சரிவர பயிற்சி பெற்ற ஆயுர்வேத மருத்துவ அதிகாரி கிடைக்காததாலும் இயங்கவில்லை. அம்மருந்தகம் 29—5—1973 அன்று திறக்கப்பட்டு, கண்ணம்புகுளம் மருந்தகத்தில் திங்கள் வெள்ளி ஆகிய தினங்களில் இயங்கி வந்தது. ஆயுர்வேத உள்ள மருத்துவ அதிகாரியின் உதவியுடன் இயங்கி வந்தது. அதிகாரி இம்மருந்தகத்தை பயிற்சி பெற்ற "ஏ" வகுப்பு மருத்துவ அதிகாரி இம்மருந்தகத்தை 8—11—1973-லிருந்து கவனித்து வருகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவ அதிகாரி வேலைக்கு வராததற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஊராட்சி ஒன்றியத்தால் நடத்தப்படுகிற மருந்தகமாகும். மேற்பார்வை இடுகிற அதிகாரம் மட்டும் அரசுக்கு இருக்கிறது. மருத்துவ அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் சில குற்றங்களைப் புரிந்திருந்தார். அவரும் பதிவு செய்துகொள்ளப்பட்ட மருத்துவர்தான். அவர் ஒழுங்காக வேலைக்கு வரவில்லை. அவர் பின்னர் வேலையிலிருந்து விலக்கப்பட்டுவிட்டார்.

### திருப்பத்தூர் மருத்துவ மனை.

* 395 வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

[1974 மார்ச் 13

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) தற்போது அத்தகைய திட்டம் இல்லை.

(இ) வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசு மருத்துவ மனையில் 48 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றைக் கூடுதலாகக் கட்டவும், எக்ஸ்-கதிர் பிரிவு ஒன்றை அமைக்கவும், 1972-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே, அங்குள்ள படுக்கை களின் எண்ணிக்கை 72-லிருந்து 120 ஆக அதிகப்படுத்தப்படும். இந்தக் கட்டடம் கட்டி முடிந்தவுடன் படுக்கைகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட விருக்கிறது.

திரு. ஜி. ராமசாமி : திருப்பத்தூரிலும் அதற்கு அருகாமையிலும் உள்ள கிராமங்களில் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால், இன்னும் அதிகமாக படுக்கை வசதிகளை ஏற்படுத்தவும், டாக்டர்களின் எண்ணிக்கை யை அதிகப்படுத்தவும் அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டிருந்தால் அதற்கு ஆஸ்பத்திரி கட்டினால் மட்டும் போதாது ; அதற்காகத்தான் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கு மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஒத்துழைக்க வேண்டும். (சிரிப்பு)).

## அடிப்படை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம்.

* 396 விளு.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் " Basic Medical Science Research Institute " என்றொரு நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) விவர அறிக்கையொன்று @ சட்டப் பேரவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

@ 347–349-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 மார்ச் 13]

## *Drinking water supply for Alandur.*

*397 Q. THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Health be pleased to state :—

(a) whether the over head tank constructed near Alandur has been completed ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ and இ) பேரவை முன் விவர அறிக்கை * ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, ஆலந்தூர் குடிநீர் வழங்கு நீர்த்தேக்கப் பணி ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு வேலை நடை பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய இடம் கூட மாற்றப்பட்டு, பைப்கள் கூட வேறு இடத்திற்கு மாற்றப்பட்டு ஸ்டாக் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தத் திட்டத்திற்கு மொத்த தொகை எவ்வளவு செலவிடப்படுகிறது ? அதில் எல்.ஐ.சி.-யிடமிருந்து பெறப்பட்ட பணம் எவ்வளவு? மாநில அரசு கொடுத்த கடன் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆலந்தூர் குடிநீர்த் திட்டம் ஏறத்தாழ 44·28 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட முடியும் என்று முதலில் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், அதற்குப் பக்கத்திலே உள்ள கண்டோன்மெண்ட் பகுதி—பரங்கிமலை என்று கருது கிறேன்—அதுவும் இந்தத் திட்டத்துடன் சேர்த்து இணைக்கப்பட்டதன் காரண மாக இது பெரிய அளவில், செலவு மிச்சமாகும் என்ற அடிப்படையில்— 67 லட்சம் ரூபாய் மொத்தச் செலவில் அந்தத் திட்டம் நிறைவேற்றப் படலாம் என்று கருதப்பட்டது. 1969–70-ம் ஆண்டுக்கு பத்து லட்சம் ரூபாய், 1970–71-ம் ஆண்டுக்கு 15·67 லட்சம் ரூபாய், 1971–72-ம் ஆண்டுக்கு 1·64 லட்சம் ரூபாய், அதாவது ஏறத்தாழ 26 லட்சம் ரூபாய் அளவுக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் வழங்கியிருக்கிறது. அதற்குமேல் அரசு மேற்கொண்ட இந்தத் திட்டத்தில் வெவ்வேறு பகுதிகளுக்கான குடிநீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒரு முக்கியமான பகுதியில் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அந்த இடம் இன்னும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. மாற்று இடம் கேட்கப்பட்டிருக்கிறது. நகரசபை இன்னும் அந்த இடத்தை வழங்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 398, 399 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

* 349–350-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## மேலமாயனூர் பகுதி புறம்போக்கு நிலங்கள்.

*100 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், மேலமாயனூர் கட்டளைப் பகுதிகளில் உள்ள ஆற்றுப் புறம்போக்கு நிலங்களை நீண்ட காலமாக அனுபவித்து பயிரிட்டு வரும் தாழ்த்தப்பட்ட விவசாயிகளை நிலத்தை காலி செய்து ஒப்படைக்க வேண்டுமென 1973 ஜூலை மாதம் நோட்டீசு அனுப்பப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், இதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் கரூர் நீதி மன்றத்தில் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். இல்லை என்று பதில் சொல்வதற்கு என்ன காரணம் ? சரியான விவரம் அனுப்பப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்னிடம் இருக்கிற தகவலைத்தான் தெரிவித்தேன். அந்த ஆற்றுப் படுகையில் குகநாத நாடார் ஒருவருக்குத்தான் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்று அரசுக்குத் தகவல் இருக்கிறது. அங்கு இருக்கிற அரிசன மக்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்படவில்லை என்ற தகவலும் இருக்கிறது. மேற்கொண்டு ஏதாவது தகவல் அங்கத்தினர் அவர்கள் தந்தால், அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அந்த ஊர் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. அங்கும் கட்டளை கிராமத்திலும் ஏராளமான தாழ்த்தப்பட்ட மக்கள் படுகை நிலத்தை நீண்ட காலமாகச் சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். மேலமாயனூர், கட்டளைப் பகுதிகளில் அவர்கள் வெளியேற்றப்பட்டிருப்பது உண்மை. பொதுப் பணித் துறை பொறியாளரையும் இது சம்பந்தமாகச் சந்தித்ததும் உண்மை. இப்பொழுதுதான் கோர்ட்டுக்குச் சென்று வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. இந்த விவரத்தைக் கேட்டு இனி மேலாவது அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசுக்கு அப்படி அதிகாரிகள் தவறான தகவல்களைத் தந்திருப்பார்கள் என்று நினைக்கவில்லை. அங்கத்தினர் சொல்வது உண்மையாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும். வந்திருக்கிற தகவல்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அப்புறப்படுத்தப்பட்டதாகத் தகவல் இல்லை. அவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை. பொதுவாக ஆற்றுப்படுகை நிலங்களை





யாராவது ஆக்கிரமித்துக் கொண்டிருந்தால், அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 1969-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ஆம் நாளில் பொதுப் பணித் துறையிலிருந்து ஆணை போயிருக்கிறது. ஆனால், இதுவரையில் இவர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை, குகநாத நாடார் இன்னும் காலி செய்யவில்லை என்ற தகவல் இருக்கிறது. அங்கத்தினர் சொன்ன தகவல் உண்மையானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : ஆற்றுப்படுகைகளில் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருந்தால் உடனே அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தமிழ் நாட்டிலுள்ள அத்தனை மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஏற்கனவே ஆக்கிரமிப்பு செய்துகொண்டிருப்பவர்களுக்கு பட்டா கொடுத்து விடலாம் என்ற பிரபோஸலை அரசாங்கத்திற்கு அனுப்பியிருப்பதாகத் தெரியவருகிறது. ஆகவே, அரசு இது குறித்து ஃபைனல் டெஸிஷன் எடுக்கவேண்டும். அருள்கூர்ந்து அதைப் பற்றி பரிசீலிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆட்சேபனை இல்லாத ஆக்கிரமிப்பாக இருந்தால் பட்டா கொடுப்பது பற்றி எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. பரிசீலிக்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆற்றங்கரையின் ஓரத்திலிருப்பவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றால், அவர்களுக்கு அதற்குப் பதிலாக வேறு இடம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஆற்றுப்படுகையில் ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருக்கிற விவசாயிகள் வேறு இடங்கள் காட்டுவார்களேயானால், அது காலியாக இருந்தால் அரசாங்கம் தரும். இல்லையென்றால் அரசாங்கம் நிலத்தை உற்பத்தி செய்து தர முடியாது.

திரு. எ. சுப்பிரமணியம் : ஆட்சேபனைக்குரிய ஆற்றுப்படுகையாக இருந்தால் பட்டா மறுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆட்சேபனைக்குரியது என்பதற்கான விளக்கம் என்ன ? ஆட்சேபனைக்குரியது என்று யார் தீர்மானிப்பது, எந்த அடிப்படையில் தீர்மானிப்பது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எது ஆட்சேபனைக்குரியது, எது ஆட்சேபனைக்குரியது இல்லை என்பதற்கெல்லாம் போர்டு ஸ்டாண்டிங் ஆர்டர்ஸ் இருக்கின்றன. அங்கு இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் தீர்மானிப்பார்கள். ஆட்சேபனைக்குரியதாக இருக்குமானால் அப்புறப்படுத்தத்தான் வேண்டும். அதற்கு அங்கத்தினர்கள் ஒத்துழைக்க வேண்டும். ஆட்சேபனைக்குரியதில்லை என்று சொன்னால் அதைப் பட்டா செய்து கொடுப்பதில் அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது.

[1974 மார்ச் 13

திரு. கே. என். குமாரசாமி: ஆற்றுப் படுகை, குளத்தினுடைய படுகை, கால்வாய் புறம்போக்கு இதுபோன்ற ஏரியாக்களில் பட்டா கொடுக்கக்கூடாது என்று அரசாங்க விதிமுறையிலே இருக்கிறது. அதையும் மீறி பல இடங்களில் ஆக்கிரமித்து குடியேறியிருக்கிறார்கள். அதைப் பற்றி அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுப்பதில்லை. புகார் சொன்னாலும் அந்தப் புகாரின் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு எந்தவிதமான ஆதாரங்களையும் அவர்கள் உண்டாக்குவதில்லை. இதன் மூலம் குளம் புறம்போக்கு, கால்வாய் புறம்போக்கு போன்ற பகுதிகளில் பாசனத்தை சரியாகச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. விவசாயத்திற்கு தண்ணீர் போவதற்கு இடைஞ்சல் ஏற்படுகிறது. எனவே, அரசு இது குறித்து தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அங்கத்தினர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதுதான் அரசின் கொள்கை. அதை வைத்து ஆக்கிரமிப்பு செய்து கொள்வதினால் விவசாயம் அல்லது வேறு வேலைகளுக்கு குந்தகம் ஏற்படுமேயானால் நிச்சயம் அரசு அப்புறப் படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்: மதுரையில் ஆற்றங் கரை ஓரத்தில் ஏராளமான குடிசைகள் போடப்பட்டு, ஆற்றங்கரையி லிருந்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று நகரசபையிடம் பல தடவை முறையிட்டும் அப்புறப்படுத்தப்படவில்லை. பிறகு வெள்ளம் வந்த பொழுது எல்லாக் குடிசைகளும் அடித்துக்கொண்டு போகப்பட்டது. இப் பொழுது கரை நன்றாக அழகாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இனிமேலாவது அம்மாதிரி ஆற்றங்கரையில் குடிசைகள் போடுவதை தடுப் பதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மதுரையில் வெள்ளம் வந்து ஆற்றுப் படுகையிலுள்ள குடிசைகள் அப்புறப்படுத்தப்பட்டன என்று சொன்னார். அதுமாதிரி மற்றப் பகுதிகளிலும் வெள்ளம் வந்து குடிசை களைப் பாழாக்க வேண்டும் என்று நினைக்க வேண்டியதில்லை. அரசு சட்டத்தின் துணைகொண்டு செய்யலாம் என்று நினைக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: ஆற்றுப் புறம்போககு, மநதைப் புறம் போக்கு, நத்தம் புறம்போக்கு என்று கிராம அதிகாரிகளின் அடங்கலில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அப்படியிருக்கிற நிலங்களில் பல காலமாக விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்குப் பட்டா கொடுப் பதற்கு ஆட்சேபனை இருக்க வேண்டியதில்லை. அதிகாரிகளுடைய ரிகார்டில் அப்படிச் சொல்லியிருந்தாலும், அவர்கள் அப்படி விவசாயம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டு பல வருஷங்களாகப் பல இடங்களில் விவசாயம் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அம்மாதிரி அடங்கலில் இருக்கிற ரிகார்டு எப்படியிருந்தாலும் கூட, உண்மையாகவே பல நாட்களாக அவர்கள் விவசாயம் செய்ய அந்த நிலங்களைப் பயன்படுத்திக்கொண் டிருந்தால், அந்த உண்மையை ஆராய்ந்து, அம்மாதிரி இருக்கிற நிலங் களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?



974 மார்ச் 13]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆற்றுப் படுகை ஓரத்தில் இருக்கிற ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவது பற்றித்தான் கேள்வி. பட்டா கொடுப்பதைப்பற்றி வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும்.

பெரணமல்லூர் நெடுங்குளம் பகுதிகளுக்குப் பாசன வசதி.

*401 வினா—திரு பூ. எட்டியப்பன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுக்கா பெரணமல்லூர் நெடுங் குளம் பிர்க்கா நிலங்களுக்கு செய்யாற்றிலிருந்து பாசன வசதி கொடுக்க விண்ணமங்கலம் சமீபம் தடுப்பு அணை சம்பந்தமாக 1969ல் ஆய்வு செய்யப்பட்ட திட்டம் தற்போது எந்நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வந்தவாசி தாலுக்கா பெரணமல்லூர் நெடுங்குளம் பிர்க்காக்களில் உள்ள ஏரிகளுக்கு செய்யாற் றிலிருந்து பாசன வசதி அளிக்கும் திட்டம் ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக செய்யாற்றின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் முழுமையாகப் பயன்பெற முடியாத நிலை உள்ளது. ஆகையால் மேற்சொன்ன திட்டம் தற்காலிகமாக தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

திரு. பூ. எட்டியப்பன்: இந்தத் திட்டம் இன்று நேற்று அல்ல. வெள்ளையன் ஆண்ட காலத்திலிருந்தே நீண்ட பல நாட்களாக கோரிக்கையில் இருந்து வருகிறது. இதனால் மூன்று போகங்கள் பாசன வசதி ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதுகுறித்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. தண்டறை ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. கமண்டலா அணைக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. கமண்டலா நதியில் அது இருக்கிறது. செய்யாற்றுப் பாசனத்திற்கு எந்தவிதமான பாதகமும் ஏற்படாது. ஆகவே, அரசு இதை உடனடியாகக் கவனித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நான் தண்டறை அணையைப் பற்றிக் குறிப்பிடவில்லை. செய்யாற்றுப் பாசனத்தின் கீழ் இருக்கும் ஆயக்கட்டுகள் முழுவதும் பாசன வசதி பெறவில்லை என்ற தகவல் அரசுக்கு இருக்கிறது. ஏற்கனவே இருக்கிற ஆயக்கட்டுகள் பாசன வசதி பெறாமல் இருக்கும்பொழுது புதியதாக நிலங்களைச் சேர்த்து பாசன வசதி செய்துகொடுப்பது இயலாத காரியம் என்பதால் இது தற்காலிக மாக தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. பின்னால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. கே. எ. வகாப்: செய்யாற்றுக்குக் குறுக்கே ஆரணி அருகே ஒரு அணைக்கட்டு கட்டி பாசன வசதி செய்து வருகிறார்கள். சுமார் 100 ஆண்டு காலமாக அந்த அணை இருக்கிறது. அந்த அணையை அபிவிருத்தி செய்தால் வந்தவாசி தாலுகாவில் வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆகவே, செய்யாற்றில்

ஆரணிக்கு அருகே உள்ள இந்த அணையை விரிவுபடுத்தி, இன்னும் அதிகமான நிலங்களை விவசாயம் செய்வதற்கு பாசன வசதி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, செய்யாற்றில் உத்தரமேரூருக்கு அருகில் கால்வாய்க்குக் கீழே இடமச்சியில் ஒரு அணை கட்டும் திட்டம் நீண்டகாலமாக பரிந்துரையில் இருந்துவருகிறது. இத் திட்டத்தை நிறைவேற்றினால் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கர் நிலம்—20, 30 ஊர்கள்—பாசன வசதி பெறும். செய்யாற்றின் தண்ணீர் இந்த ஆண்டு கூட வீணாகக் கடலில் போய் கலந்தது. ஆகவே, இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதுபற்றிய விபரம் இல்லை.

## *Kaveripoompattinam.*

* 402 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the State Government to develop Kaveripoompattinam in Thanjavur district as a Major Port ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : No, Sir.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அரசாங்கம் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை துவக்க இருக்கிறது. ஆகவே, இந்தப் புகார் பட்டினத்தை மீண்டும் பழைய காலத்து—சோழர்கள் காலத்து துறைமுகம்போல மாற்றி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒரு நல்ல ஆலோசனையை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதுகுறித்து—இந்தத் துறைமுகத்தை மேம்படுத்துவது பற்றி எதாவது ஆய்வு செய்யப்பட்டுள்ளதா ? ஆய்வு நடத்தப்பட்டால் அதன்மீது என்ன முடிவு மேற்கொள்ளப்பட்டது ? வருவாய் பற்றிய விபரத்தை கணக்கிட்டிருக்கிறார்களா ? அதுபற்றிய விபரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் ஆய்வு செய்யபபடவில்லை.



## திருப்பூர் பகுதியிலுள்ள வீட்டுமனைகள்.

*403 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு வருவாய்த் துறை மைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதியில் உள்ள அரசு நிலங்களில், வீட்டு மனைப் டா கொடுக்கத் தகுதி உள்ள இடங்கள் எவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : விவர அறிக்கை* ன்று சட்டப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. என். குமாரசாமி: இந்த அரசாங்கம் நத்தம் புறம்போக்கு லங்களில் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்கும்போது, முன்கூட்டியே னுமதி இல்லாமலேயே பல இடங்களில் பல வருஷங்களாக வீடு கட்டி ருக்கிறார்களே, அதையும் கணக்கில் எடுத்து அவர்களுக்கு ட்டா வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பட்டா வழங்குவதற்கு சில திமுறைகள் இருக்கின்றன. அதன்படி வழங்கப்படும்.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, சொந்த வீடு இல்லாத ழை மக்கள் பற்றிய சென்சஸ் எடுக்கப்பட்டதே, அதன்படி எத்தனை பேர் டு இல்லாமல் இருக்கிறார்கள்? வீட்டு மனை கொடுக்க மத்திய அரசும் ண உதவி கொடுக்க இருக்கிறதல்லவா? ஆகவே, சொந்த வீடு இல்லாதவர் ளுக்கு வீட்டு மனை வழங்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ன்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வீட்டு வசதி வாரிய மைச்சருக்கு இந்தக் கேள்வியைப் போட்டால் விபரம் தருவார்கள் ; ன்னிடம் இல்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், பட்டா வழங்குவதற்கு விதிமுறைகள் இருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். எல்லா விஷயங்களுக்குமே விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறை இல்லாமல் எதுவும் இருக்கக் கூடாது. ஆனால் வீட்டு மனைகள் வழங்குவது பற்றிய விதிமுறைகள் பழமையானதாகவோ, பலனற்றதாகவோ அல்லது பொருந்தாததாகவோ இருந்தால் அவற்றை ஆராய்ந்து பார்த்து சில விஷயங்களில் விலக்களித்து, பட்டா வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போதே ஏராள மானவர்களுக்கு பட்டா கொடுத்திருக்கிறோம். விதிமுறைகளை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

* 350–351-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## வக்பு சொத்துக்கள்.

*404 வினா திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது தமிழகத்தில் உள்ள மொத்த வக்பு சொத்துக்களின் மதிப்பு என்ன ?

(இ) இதன் மூலம் வரும் வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ரூபாய் 11,17,81,58

(இ) ரூபாய் 77,92,849.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இவ்வளவு அதிகமா சொத்துக்கள் இருந்தும்—இன்னும் வழக்குமன்றத்திற்குச் சென்றால் ப கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்கள் வக்பு வாரியத்திற் வருவதாகத் தெரிகிறது. இப்போது பொருளாதார நெருக்கடியில் இந் வாரியம் இருந்துகொண்டிருக்கிறது. எதிர்காலத்திலே வருகின் வருமானத்தை உத்தேசித்து, இப்போது இந்த வாரியத்திற்கு இருக்கு பொருளாதாரச் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரு கணிசமான தொகை பண உதவி செய்யுமா ? பொருளாதாரச் சிக்கல் இருப்பதால்தான் இந்த வக் வாரியத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு காலாகாலத்தில் சம்பள வழங்கமுடியாத நிலை இருப்பதாகத் தெரிகிறது. அதுமட்டுமல்லாம பல ஊழியர்கள் ரெகுலரைஸ் பண்ணப்படாமலும் இருப்பதாகச் சொல்ல படுகிறது. ஆகவே, இந்தப் பொருளாதார நெருக்கடியை நீக்க அரசாங்கம் பண உதவி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்த வக்பு வாரியத்திற்குச் சொந்தமான சொத்துக்களிலிருந்து வருகின்ற வருமானம் கான்ட்ரிபியூஷனாக சுமார் 6 சதவிகிதம், அதாவது சுமார் 4½ லட்சம் ரூபாய். ஏற்கெனவே அரசாங்கம் 4 லட்சம் ரூபாய் அவர்களுக்கு கடன் வழங்கி இருப்பதாக நினைக்கிறேன். அதை அவர்களினால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. நிதி நெருக்கடியின் காரணமாகத்தான் சம்பளம் வழங்குவதிலும் தாமதம் ஏற்படுகிறது என்று கருதுகிறேன். வக்பு வாரியத்தின் சொத்துக்களிலிருந்து வருகின்ற வருமானத்தின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால், அதைப் பெருக்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்கள் முயற்சி செய்தால் வருமானத்தைப் பெருக்க முடியும் ; அதன்மூலம் பல நல்ல காரியங்களைச் செய்யமுடியும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, சுமார் 11 கோடி ரூபாய்க்கு சொத்து இருந்தும், குறைந்த வருமானமே வருவது மட்டுமல்லாமல் கடன் வேறு பட்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் ? வக்பு வாரியத்தில் குறைபாடு இருக்கிறதா ? குறைபாடுகளை எப்படி நீக்கப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கெனவே விளக்கமாகச் சொன்னேன். சொத்தின் மதிப்பு சுமார் 11 கோடி ரூபாய். வருமானம் சுமார் 77 லட்சம் ரூபாய். ஆனால் வக்பு வாரியத்திற்கு 6 சதவிகிதம் கான்ட்ரிபூஷனாக வருகிற வருமானம் இட்டத்தட்ட 4½ லட்சம் ரூபாய்தான். அதை வைத்துத்தான் நிர்வாகம் நடத்தவேண்டும். வக்பு போர்டின் சொத்துக்களை சரியாக பராமரித்து வந்தால் வருமானத்தைப் பெருக்க முடியும். ஆகவே, அந்தச் சொத்துக்களைப் பராமரிக்கின்ற "முக்த அலி" களோடு தொடர்புகொண்டு வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம்.

திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மதுரையிலுள்ள வக்பு வாரியத்தினால் நடத்தப்படுகின்ற கல்லூரி ஆசிரியர்களுக்கு முறையாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறதே, அந்தக் குறையைப் போக்குவதற்கு அரசு என்ன நடவடிக்கையை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது ரொம்ப பழைய புகார். இப்போது ஒழுங்காக சம்பளம் கொடுக்கப்படுகிறது. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களேகூட போய் பார்க்கலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார் இந்த வக்பு போர்டிலிருந்து வருகின்ற வருவாய் குறைவாக இருப்பதால் இந்த போர்டைச் சேர்ந்த பல கட்டடங்கள் பழுது பார்க்கப்படாமல், பராமரிப்பு இல்லாமல் இருக்கிறன. ஆகவே, பழுதடைந்த கட்டிடங்களை விற்றுவிட்டு, வேறு கட்டிக்கொள்ள அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்களா ? அதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சில 'சொத்துக்கள் பழையவைகளாக இருக்கின்றன. அவைகளிலிருந்து வருமானம் இல்லை. அப்படிப்பட்ட சொத்துக்களை விற்றுவிட்டு, வேறு நல்ல சொத்துக்களை வாங்கலாம் என்று முடிவு செய்து அதன்படி செய்திருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அனுமதி அளிக்கவேண்டியது இந்த வக்பு போர்டே தவிர அரசாங்கம் அல்ல.

திரு. கே. எ. வகாப்: இப்போது இருக்கின்ற வக்பு போர்டினுடைய கடந்த 2, 3 ஆண்டுகளாக எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக வருவாய் கூடி இருக்கிறதா அல்லது அவர்கள் முயற்சியிலும் தாமதம் இருக்கிறதா ? வருமானம் இல்லாமல் இருக்கின்ற பழைய சொத்துக்களை—வீடுகளை விற்றுவிட்டு, அதற்கு ஈடாக புதிய கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விட்டால் அதன்மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். அரசாங்கம் அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல் முயற்சி எடுக்கப்பட்டது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, எல். ஐ. சி. மூலமாகக் கடன் கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் எல். ஐ. சி. கடன் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டதால் இந்த முயற்சி வெற்றிபெறவில்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, மதுரையிலே ஒரு மாஸ்க் விஸ்தரிப்புக்காக வக்பு போர்டைச் சேர்ந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய 5 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டது. அந்தத் தொகை வக்பு போர்டுக்குச் சேருவதற்கு இன்னும் காலதாமதம் ஆகிறது. அந்தப் பணம் வக்பு போர்டு சபைக்கு வந்து சேர்ந்ததா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கனம் உறுப்பினர் அவர்கள் நகரசபைத் தலைவராக இருந்தார்கள். அதனால் அவர்களுக்கே அந்த விபரம் நன்றாகத் தெரியும்.

திரு.மா.வெ. நாராயணசாமி: தலைவரவர்களே, வக்பு போர்டுக்குச் சொந்த மான இடங்களில் 20, 30 ஆண்டு காலமாக சாலைகள் பழுது பார்க்கப் படாமல் இருக்கின்றன. அந்தச் சாலைகளை நகராட்சிகள் ஊராட்சி ஒன்றியங் களிடம் ஒப்படைத்தால் செப்பனிட வாய்ப்பு இருக்கும். ஆகவே, நம் முடைய அரசாங்கம் பழுதடைந்த சாலைகளை நகரசபைகளிடமும், ஊராட்சி ஒன்றியங் களிடமும் வழங்க வக்பு போர்டுக்கு ஆலோசனை வழங்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நகரசபைகளும், ஊராட்சி ஒன்றியங்களும் சம்பந்தப்பட்ட சாலைகளைப் பராமரிப்பதில் ஆட் சேபணை இருக்காது என்று கருதுகிறேன். இதுபோன்ற முயற்சிகளுக்கு வக்புபோர்டு சாதகமாகத்தான் இருக்கும்.

*Sale of vegetables, etc., through Co-operatives in Madras.*

* 405 Q.— THIRU R. R. MUNUSAMI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether the Nilgiris Co-operative Marketing Society Limited has undertaken the wholesale supply of vegetables to the Super markets in Madras City ; and

(*b*) if so, the details there of ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) and (இ) : உதக மண்டலத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பயிராகும் காய்கறிகளை 16—6—1973 முதல் 12—7—1973 வரையில் சென்னை மாநகரிலுள்ள திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கம் (T. U. C. S.), காமதேனு சிறப்பங்காடி ஆகியவற்றின் மூலம் வழங்கும் பொறுப்பை நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மேற்கொண்டது. காய்கறிகளைக் கொள்முதல் செய்தல், எடுத்துச் செல்லுதல், சென்னையில் விற்பனை செய்தல் ஆகிய வகைகளில் இச்சங்கத்திற்குப் பல இடையூறுகள் ஏற்பட்ட காரணத்தால், இச்சங்கம் காய்கறி விற்பனையை 12—7—1973 முதற்கொண்டு நிறுத்தி விட்டது. சென்னையிலுள்ள இச்சங்கத்தின் கிளை, முதற்கண் உருளைக் கிழங்கு, முள்ளங்கி, முட்டைக்கோஸ் ஆகியவற்றின் விற்பனையுடன் 1—1—1974 முதற்கொண்டு தன் வணிகத்தைத் தொடங்கியுள்ளது. மாற்றியமைக்



கப்பட்ட திட்டத்தின்படி, இக்கிளை முக்கியமாகச் சில்லறை விற்பனையை மட் டுமே மேற்கொள்ளும். பெருமளவில் காய்கறிகள் வரும்போது மொத்த விற்பனையை இக்கிளை மேற்கொள்ளும்.

(முற்பகல் 9–30)

DR. H. V. HANDE : Sir, may I know the steps taken by this Government to reduce the exorbitant increase in the cost of the vegetables and whether it is possible for the Government to ask a few such co-operative societies to reduce the cost of vegetables as the people are finding it difficult to buy them. It is also stated that the transport charge between the point of production of vegetables and the point of their delivery has increased so much that they are not able to sell them cheaply. So, may I know the active and definite steps taken by the Government to reduce the cost of vegetables ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, முதலில் டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகிறது என்றுதான் நிறுத்தப் பட்டது. இப்போது சீசனில்- உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ் ஆகியவை மட்டும் கொண்டுவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பெங்களூரில் இருந்து இங்கே கொண்டுவருகிறபோது, மற்ற இடங்களில் இருந்தும் இங்கு வருவதால் பெங்களூர் மார்க்கெட்டோடு நிற்க முடியவில்லை. ஆகவே எவ்வளவு குறைந்த அளவில் கொடுக்கலாமோ அந்த அளவுக்குக் குறைந்த விலையில் கொடுப்பதற்கான புதிய முயற்சிகள்தான் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, இந்த விற்பனைச் சங்கத்திற்கு நான்தான் தலைவராக இருக்கிறேன். அங்கிருந்து வாடகை லாரி மூலமாகத்தான் காய்கறிகளைக் கொண்டு வரவேண்டியதாக இருக்கிறது. சொந்தமாகவே ஒரு லாரி வாங்குவதற்கு போர்டில் தீர்மானம் போட்டிருக்கிறோம். சொந்த லாரி இருந்தால் ஒருநாள் விட்டு ஒருநாள் சென்னைக்குக் காய்கறி கொண்டுவர வசதியாக இருக்கும். ஆகவே, அரசுக் கோட்டாவில் இருந்தோ, வேறு வழியிலோ அந்தச் சங்கத்திற்கு லாரியைக் கொடுப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மேற்கொண்டு வியாபா ரத்தை நல்லமுறையில் துவங்க என்ன என்ன செய்யவேண்டும் என் பதைப் பற்றித்தான் இப்போது யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, not only in big towns and cities but even, in rural areas, the cost of vegetables has gone so high that an ordinary family is not able to purchase them. Even in Hosur and Krishnagiri towns the brinjals which

used to cost about eight annas per kilo , now costs Rs. 1·50 or Rs. 2 because they are exported to other cities. So, may I know whether the Hon. Minister will make arrangements to see that the cost of vegetables is reduced ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதற்கான முயற்சிகளை விவசாய இலாககா செய்துகொண்டிருக்கிறது. அரசாங்கமே உற்பத்தி செய்து கொடுப்பதா அல்லது விவசாயிகளுக்கு வேறுபல வகைகளில் ஊக்கம் அளித்து உற்பத்தி செய்து கொடுப்பதா என்பது எல்லாம் பரிசிலனையில் இருக்கிறது. வெளிமார்க்கெட் விலை அதிகமாக இருக்கிற போது அவர்கள் அங்கே விற்றுவிடுகிறார்கள். ஆகவேதான் சீசனில் விவசாயிகளை அணுகி எந்த முறையில் மலிவான முறையில் பெற்றுத் தரலாம் என்பது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

* 406 *Q*—THIRU N. DENNIS :
THIRU G. R. EDMUND : } Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Co-operative Marketing Federation has undertaken the sale of Kashmir apples in this State ; and

(*b*) if so, the details therof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைச் சம்மேளனம் ரொக்கம் செலுத்தி, சரக்குகளைப் பெறுதல், சரக்கு ஒப்படை ஆகிய அடிப்படைகளின் பேரில் 31—12—1973 வரை காஷ்மீர் பழ உற்பத்தியாளர் கூட்டுறவுச் சம்மேளனத்தினிடமிருந்து 4,506 பெட்டி ஆப்பிள்களை இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்துள்ளது. இந்த சம்மேளனம் 31—12—1973 வரை 1,572 பெட்டி ஆப்பிள்களை விற்று மொத்தம் ரூ. 570 வருவாய் ஈட்டியுள்ளது. குளிர்ப்பதனச் சாதனத்திற்காக கட்டண வகையில் ரூ. 13,793 கிடைத்தது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : காஷ்மீர் ஆப்பிள் வெளிமார்க்கெட்டில் குறைவாக இருப்பதாகவும், கூட்டுறவு மார்க்கெட்டில் அதிக விலைக்கு விற்பதாகவும் பொதுமக்கள் கருதுகிறார்கள். ஆகவே காஷ்மீர் ஆப்பிள் என்ன விலைக்கு வாங்கப்படுகிறது ? இங்கே என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, காஷ்மீர் ஆப்பிள் வெளிமார்க்கெட்டில் கிலோ ரூ. ஆறு, ஏழுக்கு விற்கிறார்கள். கூட்டுறவு மார்க்கெட்டில் விற்பதற்கு நாம் மொத்த



வியாபாரிகளுக்கு கிலோ ரூ. 3 அளவில்தான் கொடுக்கிறோம். அவர்கள் லாபம் வைக்கிறபோதும் கூட ரூ. 6-க்குக் குறைவாகவேதான் இருக்கும். வெளிமார்க்கெட்டைவிட நிச்சயமாக இது கூடியிருக்க முடியாது.

*Wages for employees in Cinchona Plantations.*

* 407 *Q*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Minimum Wages Committee has recommended recently to the Government that the wages to the workers in Cinchona Plantations should be on a par with workers in other plantations ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) and (இ): சின்கோனு தோட்டத்தில் வேலைக்கான குறைந்த அளவு ஊதியங்களை நிர்ணயம் செய்யும்போது, ஏனைய மலைத்தோட்டப் பயிர்கள் குறித்து நிலவிவரும் ஊதிய வீதங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டுமென்றும், மேற்படி காரியத்திற்காக காப்பித்தோட்டங்களில் கொடுக்கப்படும் ஊதிய வீதங்களையேனும் பின்பற்றலாமென்றும் குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனைக் குழு பரிவுரை செய்தது.

திரு. என்.கே. பழனிசாமி: 1959 ஆம் ஆண்டு மினிமம் வேஜஸ் ஆக்ட் பிரகாரம் 3 வருஷங்களுக்கு ஒரு முறை குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்கப்படவேண்டும். அப்படி இருக்கிறபோது, இப்போது ஏறியுள்ள விலைவாசிகளைக் கணக்கில் கொண்டு, அவர்களது குறைந்த பட்ச கூலியை உயர்த்த அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்த அரசு வந்த பிறகு 1—2—1973 அன்றுதான் குறைந்த சிங்கோனு தொழிலாளர்களுக்கு பட்ச கூலி நிர்ணயித்து நடைமுறைக்கு வந்திருக்கிறது. தற்போதுள்ள விலைவாசி உயர்வைக் கணக்கில் கொண்டு மீண்டும் இவர்களது குறைந்த பட்சக் கூலியைப் பரிசீலனை செய்யவேண்டுமென்றால் பரிசிலனை செய்ய அரசு தயார். ஆனால் காப்பி, தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல கொடுப்பதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : 1973 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ல் புதிய குறைந்த பட்சக் கூலி விகிதம் வந்த பிறகு 1973-லும், 1974 தொடக்கத்திலும் விலைவாசிகள் ஏகமாக ஏறிவிட்டன என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவே அவர்களது கூலி விகிதத்தை காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலைசெய்பவர்களுக்கு உள்ளதுபோல உயர்த்த முன்வருவார்களா ?

[1974 மார்ச் 1

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதைத்தான் சொன்னேன் காப்பி, தேயிலைத் தோட்டங்கள் லாபம் வருகிற தொழில், அதுபோன்றத் அல்ல இது. அங்கே கொடுக்கப்படுகிற கூலியை இங்கே கொடுக் முடியாது. இவர்களது குறைந்த பட்சக் கூலியை எப்பட உயர்த்தலாம் என்பதுபற்றிக் தனியாகப் பரிசீலனை செய்யவேண் மென்றால் செய்வதற்கு அரசு தயார்.

திரு என். கே. பழனிசாமி: மற்ற தொழில்களுக்கு எல்லாம் போனஸ் கொடுக்கப்படுகிறது, அதேமாதிரி இந்தத் தொழிலிலும் 10 லட்சம் லாபம் வந்திருக்கிற காரணத்தினால் இவர்களுக்கும் போனஸ் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சிங்கோனா தொழிலில் தொடர்ந்து நட்டம் தான் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு லாபம் வந்திருப்பதாக உறுப்பினர் சொல்லித்தான் அறிகிறேன். லாபம் வந்திருக்கிறதா என்று பார்த்து, அவர்களுக்கு என்ன பரிகாரம் காண முடியும் என்பதை ஆலோசனை செய்யலாம்.

திரு. எம். சுரேந்திரன் : சிங்கோனா தோட்டம் அரசாங்கத்தினால் நடத்தப்படுகிறது. தனியார் நடத்துகிற காப்பி, தேயிலைத் தோட்டங்களில் லாபம் ஏற்பட்டு வருகிறது. இதில் நட்டம் ஏற்பட்டு வருகிறது. ஆகவே இங்கே குறைந்தபட்சக் கூலி தரப்படுவதாகச் சொன்னார்கள். இரண்டு இடத்திலும் செய்யப்படுகிற வேலை ஒன்றே தவிர, லாபம் வருகிறதா, நட்டம் வருகிறதா என்பது பிரச்சினை அல்ல. ஆகவே, வாழ்வுக்குத் தேவையான அடிப்படையில், எந்த வேலையாக இருந்தாலும் கூலி கொடுத்தாக வேண்டியது கடமை. இன்றைக்குக் குறைந்த பட்ச கூலியாக இவர்களுக்கு என்ன அளிக்கப்படுகிறது, மற்ற இடத்தில் என்ன அளிக்கப்படுகிறது என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு: க. இராசாராம் : காப்பி, தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதைவிட, சிங்கோனா தோட்டத்தில் வேலை செய்வது மிகவும் சுலபமானது. ஆகவேதான் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கூலி விகிதம் இங்கே கொடுக்கப்படவில்லை. இரண்டாவதாக, அவர்களுக்கு இன்றைய தினம் என்ன கூலி விகிதம் அளிக்கப்பட்டிருக்கிறது என்கிற விவரம் என்னிடம் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன். கிரேட் 1 தொழிலாளர்களுக்கு முன்பு 2·80 கொடுக்கப்பட்டது 1—2—1973 இல் 2·95 காசாக நிர்ணயிக்கப்பட்டது.

திரு. எம். தேவராசன் : போனஸ் சட்டத்தின் கீழ் லாபம் இல்லை என்றாலும் மினிமம் போனஸ் கொடுக்க வேண்டுமே, அதை இங்கே கொடுத்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : போனஸ் சட்டம் இதுவரையிலே பிளான்டேஷன்களுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு வரும்போது இதுவும் சேர்ந்து கவனிக்கப்படும் என்று கருதுகிறேன்.



1974 மார்ச் 13]

## நடுவர் முடிவிற்கு விடப்பட்ட தொழில் தகராறுகள்.

* 408—வினா.—திரு. தி.சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1973-74-ல் சென்னை நகரில் உள்ள ஹோட்டல்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகளுள் எத்தனை இண்டஸ்டிரியல் டிஸ்பியூட் சட்டப்படி மத்தியஸ்தத்திற்கு விடப்பட்டன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஐந்து.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த டிரிபியூனலுக்கு விடப்பட்ட தொழில் தகராறுகளிலே எத்தனை தீர்ந்திருக்கிறது—தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது ? தீர்ப்பு வழங்கப்படாமல் மிச்சம் இருப்பவை எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழில் தகராறு தீர்ப்புக்கு விடப்பட்டவை மொத்தம் 31. இதுவரையிலே தீர்க்கப்பட்டவை 29. மீதமுள்ளவை 2.

## தீப்பெட்டித் தயாரிப்புப் பிரிவு.

* 409—வினா : திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக தீப்பெட்டித் தொழிற்சாலை திறக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) திருவண்ணாமலை வளர்ச்சி மாவட்டம், பத்தியாவரத்தில் குடிசைத் தொழில் முறையில் தீக்குச்சித் தயாரிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மூலப்பொருள்கள், இரசாயனப் பொருள்கள் முதலியவற்றைக் கொள்முதல் செய்தல் போன்ற தொடக்க ஏற்பாடுகள் பெரும்பாலும் செய்து முடிக்கப்பட்டு விட்டன. உரிமம் வழங்குவதற்காக வேலூர் மாவட்ட வருவாய் அதிகாரி மாவட்ட சுகாதார அதிகாரியின் அறிக்கையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். உரிமம் பெறப்பட்டவுடன், இப்பிரிவு உற்பத்தியைத் தொடங்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் தீப்பெட்டி தொழிற்சாலையைத் துவங்குவதற்கு எவ்வளவு செலவாகும் ? இந்தப் பணி எப்பொழுது முடியும் என்று எதிர் பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எவ்வளவு செலவாகும் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை. 1973–74-வது ஆண்டில் புதிதாக 6 பிரிவுகளைத் திறக்க வேண்டுமென்று கதர்

கிராமத் தொழில் ஆணைக்குழு, தேவையான நிதியை முதலில் ஒதுக்கியது. ஆனால், இப்பொழுது நிதிப் பற்றாக்குறை காரணத்தினால், ஏற்கனவே தொகை ஒதுக்கப்பட்டிருந்தாலும், 1973–74-ல் புதிய பிரிவுகள் எவையும் தொடங்கப்படக் கூடாது என மீண்டும் அறிவுரைகள் ஆணைக்குழுவின் சார்பிலே விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுபற்றி மேற்கொண்டு என்ன செய்வது என்பதைப்பற்றி நமது மாநில வாரியம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, அண்மைக் காலம் வரையில் 6 பைசாவுக்கு விற்ற தீப்பெட்டி இப்பொழுது 12 பைசாவுக்கு விற்கிறது. இதனால், புகைபிடிப்பவர்களுக்குச் சங்கடமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் தொழிற்சாலைகளைப் பல இடங்களில் விரிவாக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வரி உயர்வின் காரணமாகத்தான் விலை ஏறி இருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆனால், நம்முடைய கதர்-கிராமத் துறையைப் பொறுத்தவரையில், ஏற்கனவே 14 தொழிற்சாலைகளைத் தமிழ் நாட்டிலே நடத்திக் கொண்டு வருகிறோம். ஆனால், தனியார் தொழிற்சாலைகளோடு போட்டி போட முடியாத நிலைமையிலே இந்தத் தொழிற்சாலை நடந்துகொண்டிருக்கிறது. ஆயத் தீர்வை, நாடா சுற்றும் முறை ஆகியவை நீக்கப்பட்டிருந்தாலும், தனியார் துறை பல்வேறு முறைகளைக் கையாண்டு லாபத்திலே நடத்துகிறார்கள். பல காரியங்களைச் செய்கிறார்கள். ஆனால் துறையின் மூலமாக அவைகளைச் செய்ய இயலாத—முடியாத காரணத்தினால்—அவர்கள் தகாத காரியங்களைச் செய்கிறார்கள்—அவைகளை நாம் செய்ய முடியவில்லை. ஆகவே, துறையாலே நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகள் நஷ்டத்திலே நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Already there are small match factories in our State. They are being run as a cottage industry. For want of aid, they are continuously getting loss. They are not able to run it profitably. In Hosur there is a match factory which is not being run properly because they want some more funds. May I know from the Hon. Minister whether some aid is given for such poor industries ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நஷ்டத்தில் நடப்பதற்கான காரணத்தை நான் ஏற்கனவே தெரிவித்தேன். ஹோசூரிலே நடக்கின்ற அந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை நிதிப் பற்றாக்குறையின் காரணத்தினால் நஷ்டத்தில் நடைபெறுவதாக இருந்தால், அதைப் பரிசீலனை செய்து தேவையான நிதியை ஒதுக்கலாம்.



## மேட்டுப்பாளையம் பகுதியில் மணவிழா மண்டபம்.

* 410 வினா :—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியைச் சேர்ந்த வனபத்ரகாளி கோவிலில் மணவிழா மண்டபம் அமைப்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்து சமய அறநிலையத் துறையைச் சார்ந்த தலைமைப் பொறியாளர், இப்பணிக்கான மதிப்பீட்டைத் தயாரிக்குமாறு பணிக்கப்பெற்றுள்ளார். மதிப்பீடு கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப் பெறும்.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியிலே வனபத்ரகாளி அம்மன் கோவில் பவானி ஆற்றின் கரையிலே மிகச் சிறப்பாக அமைந்திருக்கிறது. எல்லா பகுதிகளிலிருந்தும் மக்கள் அக்கோவிலுக்கு திரண்டு வருகிறார்கள். அங்கு மணவிழா மண்டபம் கட்டவேண்டுமென்ற அம்மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை இந்த ஆண்டாவது நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீடுகள் கொடுக்கப்பட்டவுடன் உடனடியாக வேலை தொடங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## *Tamil medium students in Colleges*

* 391. *Q* —THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the number of students in Tamil medium classes in colleges in Tamil Nadu who have been paid incentive money for the academic year 1973–74 ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1973–74-ஆம் ஆண்டில் புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு வகுப்புகளில் தமிழ் பயிற்று மொழி வகுப்புகளில் கற்று வருகின்ற 30,058 மாணவர்கட்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : இந்த மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை கொடுப்பதற்குப் பதிலாக, ஆங்கில மீடியத்திலே படிப்பவர்களுக்கு உத்தியோகச் சலுகை அதிகமாக இருக்கிற காரணத்தினால்,

மாணவர்கள் ஆங்கிலத்தைத்தான் விரும்புகிறார்கள். ஆகவே, எதில் படித்தாலும், இரண்டுக்கும் வித்தியாசம் இல்லாமல், தமிழில் படித்தாலும் அதே அளவில் சலுகை கிடைக்கும் என்பதைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டால், அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை கூட அவசியம் இல்லையென்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பைத் தருவதைப் பொறுத்தவரையிலும் எந்த வேறு பாடும் காட்டப்படுவதில்லை. புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழி யாகப் பெற்று படித்தவர்களுக்கு எந்தவகை வேறுபாடும் காட்டுவது இல்லை. சில குறிப்பிட்ட துறைகளில் தமிழில் படித்தவர்களுக்கு முன் சலுகை தரவேண்டுமென்று தேர்வு ஆணைக் குழுவினர் கேட்டுகொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, தமிழ் பயிற்சி மொழி வகுப்பிலே சேருகின்ற அனைத்து மாணவர்களுக்கும் இந்த ஊக்குவிப்புத் தொகை கொடுக்கப்படுகிறதா ? அல்லது தேர்வுகளுக்கு மட்டும் சலுகை கொடுக்கப்படுகிறதா ? இந்த மாணவர்களுக்கு வேறு சிலவசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்து, புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.எஸ்ஸி. யில் படிக்கிற அத்தனை மாணவர்களுக்கும் ஊக்குவிப்புத் தொகை அளிக் கப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : Is the Hon. Minister for Education aware of the fact that in spite of the assurances given that the students who had taken Tamil medium will be given this amount, there are several colleges including the college at Cheyyar wherein the students who had taken Tamil medium had not received this amount. I have received number of complaints regarding this. May I know from the Hon. Minister what is the reason for this inordinate delay in giving this amount because the students had taken Tamil medium ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறையீடுகள் வருமேயானால், அது குறிப்பிட்டுக் காட்டப்படு மானால், கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும். புகுமுக வகுப்பிலும், பட்டப் படிப்பிலும் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிப்பவர் களுக்கு ஊக்குவிப்புத் தொகை தரப்படுகிறது. முதல்வர்கள் அந்த "லிஸ்டை"— பட்டியலை அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டால், இதைக் கொடுப்பதிலும் காலதாமதம் ஏற்படுகிறது. எங்காவது கொடுக்கப்படாம லிருக்குமானால், அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படு மானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, இந்த முயற்சியால் தமிழில் படிக்கிறவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் ஏறியிருக்கிறதா? இல்லையென்றால், இப்பொழுது கொடுக்கின்ற ஊக்குவிப்புத் தொகையை அதிகமாகக் கொடுக்கின்ற உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த முயற்சியால் மாணவர்களின் எண்ணிக்கை ஓரளவு கூடியிருக்கிறது. ஊக்குவிப்புத் தொகையைக் கூட்டுகின்ற உத்தேசம் இல்லை.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, அகில இந்திய பரிட்சை களான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பரீட்சைகள் ஆங்கிலத்திலேயோ, இந்தியி லேயோ நடைபெறுகின்றன. தமிழைப் பயிற்சிமொழியாகக் கொண்டு படித்த மாணவர்கள் இதிலே பதில் அளிக்கக் கொஞ்சம் சிரமப்படுகிறார்கள். அதனால் பலபேர் தோற்று விடுகிறார்கள். ஆக, ஐ.ஏ.எஸ்., போன்ற தேர்வுகளைத் தமிழிலும் நடத்த ஏற்பாடு செய்யுமாறு தமிழக அரசு மத்திய அரசை வேண்டி இருக்கிறதா ? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முக்கியமான அனைத்து இந்தியமொழிகள் அனைத்திலும் ஐ.ஏ.எஸ்., போன்ற அகில இந்தியத் தேர்வுகளை நடத்த வேண்டுமென்ற முறையிலே, தமிழையும் சேர்க்க வேண்டுமென்று மத்திய அரசை இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது. அதற்கான முயற்சிகள் அரசாங்க அளவிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் மத்திய அரசு முடிவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரையிலே, தமிழைப் பாடமொழியாகக் கொண்டு படித்தவர்களுக்கு, தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டிருக்கிற சிலபல துறைகளில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற கருத்து இருக்கிறது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பி.யூ.சி. யில் தமிழ் பயிற்சி மொழி அளிக்கும் விஷயத்தில், பி.யூ.சி.யை முடித்த பிறகு, அவர்கள் எந்தெந்த துறைக்குச் செல்லவிருக்கிறார்கள் என்பதை அறிந்துகொண்டு அதற்கேற்றவாறு மாணவர்களுக்குத் தமிழில் இடம் கொடுத்தால் நன்றாக இருக்கும். குறிப்பாக, எம்.பி. பி.எஸ். அல்லது வேறு தொழில்துறை கல்லூரிகளில் படிக்கிறவர்கள் பி.யூ.சி.யில் தமிழில் படிக்கிறார்கள் ; பி.யூ.சி.யில் தமிழில் படித்துவிட்டு, எம்.பி. பி.எஸ். அல்லது மற்ற துறைகளில் ஆங்கிலத்தில் படிக்கும்போது மிகவும் அல்லல்படுகிறார்கள். ஆகவே எம்.பி. பி.எஸ்., பி.இ., போன்றவற்றைப் படிக்க விரும்புகிறவர் களுக்கு ஆங்கிலத்திலேயே பயிற்சி அளிக்கவும், மற்ற துறைகளுக்கும் செல்ல விரும்புகிறவர்களுக்குத் தமிழிலேயே பயிற்சி கொடுக்கின்ற ஏற்பாடு களைச் செய்யவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட பாகுபாடு கொடுத்து கேள்வி கேட்பது என்றால், எல்லோருமே எம்.பி. பி.எஸ்.லே தான் சேருவோம் என்று கேட்பார்கள். அது மிகவும் சிரமம் அளிக்கும். எந்த வகுப்பில் படிப்பது போன்றவற்றை முடிவு செய்ய வேண்டியது மாணவர்களுடைய பொறுப்பாகும்.

## உலகப் பல்கலைக் கழக உதவிப்பணி நிறுவனம்.

* 392 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாணவ, மாணவியர்களுக்கு உதவும் வகையில் உலகப் பல்கலைக் கழக உதவிப்பணி (World University Services Centre) நிறுவனம் ஏதேனும் செயல்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில் இது எப்போது முதல் செயல்பட்டு வருகிறது ?

(உ) இது மாணவர்களுக்கு எந்தெந்த வகைகளில் உதவி புரிகிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1951-ம் ஆண்டு முதல்.

(உ) சென்னையில் உள்ள உலகப் பல்கலைக் கழக உதவிப்பணி மையத்தின் கட்டிடத்தில் மாணவர்களுக்காக தங்கும் வசதி, உணவு விடுதி, வைத்திய வசதி, புத்தகங்களைக் கடனாகப் பெற்று படிக்கும் வசதி அளிப்பதுடன் அங்கு ஒரு கூட்டுறவு விற்பனை நிலையமும் இயங்கி வருகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்திற்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா ? இந்த நிறுவனத்தை மாவட்டத் தலைநகரங்களுக்கும் விரிவாக்க அரசு முயற்சி யெடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கான கட்டடங்களைக் கட்டுவதற்கான இடத்தை இலவசமாக அரசு தந்திருக்கிறது. அதைத்தவிர ஒன்றரை லட்சம் ரூபாய் கடனாகக் கொடுத்து உதவப்பட்டிருக்கிறது. அதைத் தவிர டேனிஷ் அரசாங்கம் 16 இலட்சம் ரூபாய் வரையில் கட்டடங்கள் எழுப்புவதற்காக என்ற முறையிலே தந்திருக்கிறது. இந்த வகையிலே மாநில அரசால் எந்தெந்த அளவிற்கு உதவிசெய்ய இயலுமோ அதைச் செய்துவருகிறது. இதையெல்லாம் தனிக்குழுவினர் தான் கவனிக்க வேண்டும். பல்கலைக் கழகத் துணைவேந்தர்தான் துணைவேந்தர் என்ற முறையிலே அந்தக் குழுவிற்குத் தலைவராக இருக்கிறார். சென்னையில் உள்ள கல்லூரிகளின் முதல்வர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஒரு கல்லூரி மாணவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தக் குழுவிலே இடம்பெற்றிருக்கிறார். மற்ற மாவட்டங்களுக்கு அதை விரிவுபடுத்துவதைப்பற்றி நேஷனல் கவுன்சிலும், இந்த மாநிலக் கவுன்சிலும்தான் முடிவு செய்ய வேண்டும்.



திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த சென்டருக்கான நிதிவசதிகளை யார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ? அரசு கொஞ்சம் பணம் கொடுக்கிறது. டேனிஷ் நிறுவனம் கொடுக்கிறது என்று சொன்னார்கள். எங்கெங்கே யிருந்து நிதி அதற்குத் தரப்படுகிறது ? ஐ.நா. நிறுவனத்திடமிருந்து பண உதவி இதற்குத் தரப்படுகிறதா என்பதையும் அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முழு விவரங்கள் அதைப் பற்றி கிடைக்கவில்லை. மாணவர்களுக்கு வசதிகள் செய்வதற்கு Madras Committee of the World University Service என்று இருக்கிறது, "Indian National Committee of the World University Service" என்று இருக்கிறது. இவற்றிற்கு ஐ.நா.வின்சார்பிலே ஓரளவுக்கு உதவி கிடைக்கலாம் என்று நினைக்கிறேன். அதைப்பற்றிய முழுத் தகவலும் என்னிடத்திலே இல்லை. மாணவர்கள் தங்குவதற்காக வசதிகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஒரு வாடகைத் தொகை வசூலித்து அதன்மூலம் சரிக்கட்டுகிறார்கள். அதைத்தவிர, அடக்கவிலைக்கு பொருள்களைக் கொடுக்கக்கூடிய முறையிலே கூட்டுறவு முறையிலே சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். மற்ற என்ன என்ன வகைகளிலே நிதி வசதிகள் தரப்படுகின்றன என்ற விவரம் வேண்டுமானால் தனிக்கேள்வி கேட்டால் விவரங்கள் சேகரித்துத் தரலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, எக்மோரிலே இருக்கின்ற வொர்ல்ட் யூனிவர்சிடி சர்வீசில் பயிட்சையில் தேறாத மாணவர்களும் தங்கியிருக்கிறார்கள் என்று பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் வருகின்றனவே, அதையெல்லாம் தடுக்கக்கூடிய முறையிலே கல்லூரி முதல்வர்களை அரசு கேட்டுக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படி வற்புறுத்துகின்ற நிலைமை அரசுக்கு இல்லை. அந்தக் குழுவினர் தான் இதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

## *Grants to Bala Vihar.*

* 393 *Q.*—THIRU G. R. EDMUND :
THIRU N. K. PALANISAMY : } Will the Hon the Minister for Education and Tourism be pleased to state :—

(*a*) whether the Government have issued orders providing full grants to Bala Vihar, an Institution for the mentally retarded in Madras City ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the details of other facilities offered to the Institution ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) & (உ) சென்னை கீழ்ப்பாக்கத்திலுள்ள பால் விஹார் என்ற மனவளர்ச்சியற்ற பிள்ளைகளின் பள்ளிக்கு முழு மான்யம் பெறும் மற்ற பள்ளிகளைப்போல் முழு போதனை மான்யமும் மற்றும் பராமரிப்பு மான்யமும் அளிக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த மாதிரி இன்னும் கோயம்புத்தூரிலும், சேலத்திலும் தனி நிறுவனங்கள் ஏற்படுத்துவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதைப்பற்றி குறிப்பு இல்லை தனிக்கேள்வி போடவும்.

## மீன்பிடிப் படகுகள்.

* 398 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மத்திய அரசு சோவியத் நாடுடன் ஆழ்கடலில் மீன் பிடிக்கக் கூடிய சிறந்த வசதி கொண்ட விசைப்படகுகளை வாங்குவதற்கு ஒரு ஒப்பந்தம் செய்திருக்கிறதா ?

(இ) அந்த ஒப்பந்தத்தின் கீழ் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த விசைப் படகுகள் எத்தனை ?

(உ) அவற்றை விநியோகம் செய்ய அனுசரித்த முறை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) (இ) & (உ) ஆழ்கடலிலும், உள்நாட்டிலும்கூட்டுறவு முறையில் மீன் பிடிப்பதற்கான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள ருஷிய நாட்டுடன் பேச முயற்சி எடுத்து வருவதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது. இந்திய அரசின் வேளாண்மை அமைச்சகத்துடன் ருஷிய நாட்டு வாணிகக் குழு ஆலோசனை நடத்தியது. ஆழ்கடல் மீன்பிடி படகுகளை உள்நாட்டிலேயே கட்டுவதற்கான திறனை முழு அளவு பயன்படுத்துவதென்றும் எஞ்சிய தேவைகளை உத்தேச ஒப்பந்தத்தின்கீழ், ருஷியாவிலிருந்து அப்படகுகளை இறக்குமதி செய்து கொள்வதன் மூலம் சரிக்கட்டுவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரஷ்ய நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில குறிப்பீடுகளைக் கொண்ட படகுகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக் கூறினை ஆய்வு செய்யலாம் என்றும், அத்தகைய படகுகளின் தேவை எவ்வளவு என்பதைத் தங்களுக்குத் தெரிவிக்கலாம் என்றும் அப்போதுதான் ரஷ்ய அதிகாரிகளுடன் மேற்கொண்டு பேச்சு நடத்தும்போது அந்தப் படகுகளின் தேவை பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்றும் இந்திய அரசு இந்த அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.



மாநில அரசு இக்கருத்து குறித்து பரிசீலனை செய்து, நிதி இடர்ப்பாடு காரணமாக, தற்சமயம் படகுகள் தேவையினை முன் வைக்கும் செயற் குறிப்பைத் தள்ளி வைத்துள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்த ருஷிய நாட்டிலிருந்து படகுகள் வந்துசேருவதைத்தவிர நம்மிடம் ஏதேனும் ஆழ்கடலில் மீன்பிடிக்கக்கூடிய முறையிலே அமைந்துள்ள படகுகள் உண்டா ? ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு இப்பொழுது என்ன நடவடிக்கைகளை அரசு செய்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நம்மிடம் இப்பொழுது கைவசம் இரண்டு டிராலர்ஸ் இருக்கின்றன, மேலும் இரண்டு டிராலர்ஸ் கட்டிமுடிக்கப்படக் கூடிய நிலைமையில் இருக்கின்றன. இருக்கின்ற இரண்டு டிராலர்களை வைத்துக்கொண்டு நாம் ஆய்வையும் மீன் பிடித்தலையும் நடத்தி வருகிறோம்.

திரு. பெ. சௌந்தர பாண்டியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் ருஷ்ய நாட்டிலிருந்து எவ்வளவு படகுகள் வாங்கவேண்டு மென்று திட்டமிடப்பட்டிருக்கிறது ? அரசாங்கமும் தனியார் நிறுவனமும் அங்கிருந்து கூடுதலான அளவிற்குப் படகுகளைக் கொண்டுவருவதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாநில அரசு, தனியார் நிறுவனங்கள் இவையெல்லாம் 20 முதல் 30 மீட்டர் நீளமுள்ள படகுகள்தான் கேட்டுள்ளார்கள். அந்த முறையிலேதான் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். ஆனால், அதற்காக 75 லட்சம் வரை செல வாகுமே என்ற காரணத்தினால் இப்பொழுது அதை மாநில அரசு ஒத்திவைத்திருக்கிறது. இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமை ஏற்படவில்லை.

* 399 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மீனவர்களுக்கு மீன்பிடி விசைப்படகுகள் வழங்கப்படுவதற்கான தற் போதுள்ள முறையினை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய் வில் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீனவர்களுக்கு வழங் கப்படுவதற்காக கட்டப்பட்ட 30 அடி, 32 அடி நீளமுள்ள படகுகளில் 5 சதவீதப் படகுகள், பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய இடங்களிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள், வேலையிழந்த பொற்கொல்லர்கள் போன்ற சிறப்பு வகையினருக்கு இது வரையில் ஒதுக்கப்பட்டு வந்தது. தங்கக் கட்டுப்பாடு நீக்கியுள்ளதையும், வேலையிழந்த பொற்கொல்லர்களுக்குத் தங்களுடைய முந்திய தொழிலில் வேலைவாய்ப்புப் பெற தடை ஏது மில்லாதிருப்பதையும் கருத்தில் கொண்டு, படகு ஒதுக்குவதற்கான சிறப் புப் பட்டியலிலிருந்து அவர்களின் பெயர்களை அரசு நீக்கியுள்ளது.

[1974 மார்ச் 13

திரு மு. வேதாசலம் : தலைவர் அவர்களே, மீனைச் சாப்பிடாதவர்களுக்கு எல்லாம் படகுகள் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா ? ஐயர் போன்றவர்களுக்கு படகுகள் வழங்கினால் மீனவ சமுதாயத்திற்கு அதனால் கேடு விளையும் என்பதால் அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மீனவர்களுக்குப் படகுகள் வழங்கப்படுகின்றன, அவர்களுக்கு மானியத் தொகை என்ற முறையிலே வழங்கப்படுகிறது. ஆனால் மீனவர்களாக அல்லாதவர்களுக்கு கடன்கள்தான் வழங்கப்படுகின்றன. இதைத்தவிர சொந்தமாகப் படகுகளை வாங்கி இந்தத் தொழிலை நடத்துகிறவர்களும் இருக்கலாம். தொழில் நடத்துவதிலே ஜாதி பார்ப்பது சரியல்ல.

திரு இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, தனிப்பட்டவர்களுக்குப் படகுகளைக் கொடுப்பதற்குப் பதிலாக ஆங்காங்கே கூட்டுறவு அமைப்புகளின் மூலம் படகுகளைக் கொடுக்கவேண்டும், கூட்டுறவு அமைப்புகள் இல்லாத இடங்களிலே கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்திய பிறகுதான் படகுகள் தரப்படும் என்ற முறையிலே ஒரு கொள்கையை அரசு எடுத்து இருக்கிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கூட்டுறவு மூலமாகத்தான் தரப்படுகின்றது. தனிப்பட்ட ஒருவருக்கு என்ற முறையிலே படகுகள் தரப்படுவதே இல்லை. 3 பேர்கள், 5 பேர்கள் என்று சேர்ந்து ஒரு குழுவாக வரும்பொழுதுதான் படகுகள் தரப்படுகின்றன. தனிப்பட்ட ஒரு நபருக்கு படகு கொடுக்கப்படுவதில்லை.

திரு எல். கணேசன் : தலைவர் அவர்களே, மீனவர்கள் அல்லாதவர்களும் பர்மா அகதிகள் என்று சொல்லியும் படகுகளை வாங்கி அவர்கள் மற்றவர்களுக்கு, அதிக விலைக்கு விற்றுவிடுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படியானால் அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பர்மா அகதிகளில் மீனவர்கள் என்று சொல்ல எதுவும் எதிர்பார்ப்பது சரியல்ல. பர்மா அகதிகளுக்கு நாம் உதவி செய்கிறோம். அவர்கள் எந்தத் தொழிலைச் செய்யவேண்டுமென்று சொல்கிறார்களோ அதற்கு உதவிகளைச் செய்கிறோம். அவர்கள் அகதிகளாக வந்ததற்குப் பிறகு மீன் பிடிக்க பயிற்சி பெற்றுக்கொண்டு அந்தத் தொழிலைச் செய்யலாம் என்ற ஆலோசனை கூட முன்பு இருந்தது. அவர்கள் அகதிகள் என்ற காரணத்தினாலே படகுகளை வாங்கி அதற்குப் பிறகு மற்றவர்களுக்கு விற்கிறார்கள் என்று புகார்கள் வந்தால் அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

திரு எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மீன் பிடிக்கும் தொழில் தெரியாதவர்களுக்கும் விஷயம் தெரியாதவர்களுக்கும் படகுகளைக் கொடுத்தால் அவர்கள் என்ன செய்யமுடியும் என்று தெரியவில்லை.



1974 மார்ச் 13]

அரசாங்கம் விசைப்படகுகளை வழங்குவதிலே இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது அதன் நோக்கமா அல்லது மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது நோக்கமா ? மீனவர்கள் அல்லாதவர்களுக்குப் படகுகள் கொடுக்கப்படும்பொழுது என்ன என்ன முறைகள் கையாளப்படுகின்றன என்பதை அறிவிப்பார்களா ? அவர்கள் லாபம் சம்பாதிப்பதற்கும் தங்கள் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும்தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறார்கள். பெரியவர்களின் செல்வாக்கும், பணமும் பயன்படுத்தினால்தான் படகுகள் வழங்கப்படுகின்றன என்பது உண்மையா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசு மூலம் தரப்படுவது எல்லாம் மீனவர்களுக்குத் தரப்படுகிறது. மானியம், சலுகைகள் எல்லாம் அவர்களுக்குத்தான் கொடுக்கப்படுகின்றன. மீனவர்களல்லாதவர்கள் அவர்களே சொந்தமாக படகுகளைக் கட்டிக்கொள்கிறார்கள், தனியார்களுக்கும் படகுகளைக் கொடுப்பது என்பது இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற முறையிலே இந்தத் திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகத்தான் கொண்டுவந்தோம். அதிலே பணம் இருபது சதவீதம் மீனவர்கள் அல்லாதவர்கள் ஒதுக்கவேண்டும், 20 சதவீதம் மாநில அரசு கொடுக்கிறது, 60 சதவீதத்தை வங்கிகளிலிருந்து அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் மீனவர்களல்லாதவர்களாக இருந்தாலும் கூட மீன் பிடிக்கின்ற தொழிலைச் செய்துவருகிறார்கள். மீன் பிடிக்கின்ற தொழிலிலே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் திறமையாக இருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் விசைப்படகுகள் வைத்துக்கொண்டு யாராக இருந்தாலும் கடலிலே சென்று மீன் பிடிக்கலாம் என்று வைத்திருக்கின்ற முறைப்படி பயிற்சி கொடுத்து மீனவர்களல்லாதவர்களையும் மீன்பிடிக்கச் செய்கின்ற தொழிலிலே ஈடுபடுகின்ற முறையிலே அனுப்பவும் முடிந்திருக்கிறது.

(முற்பகல் 10.00)

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், விசைப் படகுகளை மீனவர்களுக்குக் கொடுக்கும்பொழுது 3 பேர், 4 பேர் சேர்ந்திருந்தால்தான் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். யாராவது ஒருவர்தான முதல் போடுகிறார். 3 பேர், 4 பேர் என்றால் பிறகு கையெழுத்துப் போடுவதற்கு கஷ்டம் ஏற்படுகிறது. எனவே, அப்படியில்லாமல் ஒருவர் பெயரிலேயே கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 3 பேர், 4 பேர் என்று இருந்தாலும் கையெழுத்துப் போட்டு "கரெஸ்பாண்டென்ஸ்" நடத்துவதற்கு ஒருவரால்தான் முடியுமே தவிர 3 பேரும் கையெழுத்துப் போட்டு மூன்று பேருமே செய்ய முடியாது. ஒருவர்தான் பொறுப்பேற்றுக் கொள்கிறார். அவர்தான் அரசோடு தொடர்பு கொள்கிறார். மற்றவர்களும் மீனவர்களாகத்தான் இருக்க வேண்டும். நான்கைந்து பேர்களுக்கு என்று 40,000 ரூபாய், 50,000 ரூபாய் படகைக் கொடுப்பதால் அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த ஐந்தாறு குடும்பங்களுக்கு உதவி செய்ய முடிகிறது.

தலை ஒருவருக்குக் கொடுக்கக்கூடாது என்று சற்றுமுன் மாண்புமிகு உறுப்பினரொருவர் கேள்வி கேட்டார். தனியொருவருக்கு கொடுக்கா மல் இப்படிக் கொடுப்பதால் பலருக்கு உதவி செய்ய முடியும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இம்மாதிரி கொடுக்கப்பட்ட விசைப் படகு களைச் சரியாகப் பயன்படுத்துகிறார்களா அல்லது மீன் பிடிப்பதற்குப் பதிலாக வேறு யாருக்காவது விற்று விடுகிறார்களா என்று கண்காணிப் பதற்கு அரசு என்ன ஏற்பாடு செய்திருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மீன் பிடிக்கும் படகுகளை வைத்து மீன்களைத்தான் பிடிக்கவேண்டும். ஆனால் அந்தப் படகுகளை வாங்குபவர்கள் அதை என்ன செய்கிறார்கள் என்பதை அரசு கண்காணிக் கிறது. அவர்கள் பெயரிலேயே படகு இருக்கிறதா ? படகில் மீன் பிடிக்கிறார்களா என்பதை அரசு கண்காணிக்கிறது. ஆனால் தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதை அரசு கவனிக்கிறது. அதுபற்றித் தனிப்பட்ட புகார் வந்தாலும் பரிசீலிக் கிறது. ஆனால் எந்தப் புகாரிலும் தவறு கண்டுபிடிக்க முடிய வில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, all the four or five persons have to go and sign before the allotment of the boat. Because of that there is delay in the allotment. Sometimes partners refuse to come and sign and consequently the boat is not allotted in time. So, will the Government think of some method to set right the defect and avoid delay in the allotment of the boat ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : குழுக்களாகச் சேர்ந்து அவர்கள் கையெழுத்துப் போட்டு விண்ணப்பிக்கிறார்கள். பிறகு அந்த விண்ணப்பங்களையெல்லாம் ஒன்று சேர்த்து குலுக்கல் போட்டு எந்தக் குழுவிற்குப் படகு என்று குலுக்குச் சீட்டு மூலம் எடுக்கப்படுகிறார்கள். அப்படி எடுத்துவிட்ட பிறகு, அதில் குரூப் லீடர் என்று நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். அவர்தான் கையெழுத்துப் போட்டு அவர்கள் சார்பில் வாங்குகிறார். அவருக்குத்தான் பணம் கட்ட வேண்டிய பொறுப்பு இருக்கிறது. அவர் மூலம்தான் எந்தத் தொடர்பும் அரசு வைத்துக் கொள்ள முடிகிறது. ஆனால் அத்தனைபேரும் சேர்ந்து தொழில் நடத்த வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1974-75-ம் ஆண்டுக் கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்.

(1) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) போக்குவரத்துத் துறை அமைச்சர், அவைக்கு வராதது குறித்து.

*திரு. கோவை செழியன் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, இந்த சட்டமன்றம் நடைபெற்றுக்கொண் டிருக்கிற இந்த நேரத்திலே முக்கியமான ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டரை எழுப்புகிறேன். தலைவரவர்கள் தயவுசெய்து நான் பேசுவதைப் கடைசிவரையிலும் கேட்டு விட்டுத் தங்கள் தீர்ப்பைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே உட்காருங்கள் என்று தயவுசெய்து சொல்லாதீர்கள்.

இப்பொழுது சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் பத்திரிகைகளிலும், வெளியிலேயும், ஒரு அமைச்சரைக் காணோம், அவரை யாரோ கடத்திக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த எங்களுக்கெல்லாம் மிகவும் கவலையாகவும், எதிர்க்கட்சியிலே சார்ந்திருக்கின்ற எங்களுடைய பொறுப்பை உணர்ந்தும் அவருடைய நிலைமை என்னவாயிற்று என்பதில் அக்கறையோடும் இருக்கிறோம். நேற்றைய தினம் பத்திரிகைக் காரர்களும், எங்களைப் போன்ற நண்பர்களும் அவருக்கு என்ன ஆயிற்று என்ற கவலையில் பலமுறை போன் செய்தும், வீட்டிற்கு ஆள் அனுப்பியும் பார்த்தோம், அமைச்சரைக் காணோம். இந்த மன்றத் தில் முதலமைச்சராக இருப்பவரோ போலீஸ் அமைச்சராகவும் இருக்கிறார் கள். அவர்கள் கூட நேரடியாகக் கூப்பிட்டுச் சொல்ல வேண்டிய செய்தியைப் பத்திரிகைகளின் மூலமாக அந்த அமைச்சருக்கு வேண்டுகோள் விட்டிருப்பதால் அவர்களுக்கும் இடம் தெரிய வில்லையோ என்று நாங்கள் சந்தேகப்பட வேண்டிய நிலையிலிருப்பதால், அவர் என்ன ஆனார், அமைச்சராக இருக்கிறாரா இல்லையா, இராஜிநாமா செய்துவிட்டாரா என்ற விவரங்கள் தெரியவில்லை. அவர் எங்கே இருக்கிறார் எந்த இடத்தில் இருக்கின்றார் என்பதை தயவுசெய்து சொல்ல வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அவருக்கு என்ன நிலை ஏற்பட்டது என்பதையும் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நண்பர் செழியன் அரவர்கள் ஒரு அமைச்சர் காத்தப்பட்டுவிட்டார் என்றும், அவர் எங்கே இருக்கிறார் என்றும், அடிக்கடி அவர்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் தேடியதாகவும் சொன்னார்கள். அவர்களுக்கு ரொம்ப அக்கறை இருக்கிறது என்பது எனக்கு நன்றாகப் புரிகிறது. (குறுக்கீடு) நீங்கள் பேசும்பொழுது நான் குறுக்கிடவில்லையே.

[1974 மார்ச் 13

திரு. முனு ஆதி : நண்பர் என்ற முறையில் அக்கறை இருக்கக் கூடாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர் எங்கும் போய்விடவில்லை. இன்னும் சிறிது நேரத்தில் அவைக்கு வருவார். காலையிலேகூட என்னை என்னுடைய இல்லத்திலே சந்தித்து நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். ஆகவே, செழியன் அவர்களும், அவருடைய நண்பர்களும் கொஞ்சமும் கவலைப்பட வேண்டாமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அவரைக் கடத்திச் சென்றுவிட நான் நிச்சயமாக அனுமதிக்க மாட்டேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற விதி 41-ன் கீழ் தருகின்ற "கால் அட்டென்ஷன்" இன்ன காரணத்தால் ஒப்புக்கொள்ளப்பட வில்லை என்று சொல்லாமல், எந்தக் காரணமும் இல்லாமல் தள்ளப்பட்டிருக்கிறது. மேட்டூர் "பியர்ட்செல்" சம்பந்தமாக வும், அதே நேரத்தில் குமாரபாளையம் சம்பந்தமாகவும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பல முறை சொல்லியிருக் கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் மறுக்கப்பட்டாலும், கால் அட்டென் ஷன் அறிவிப்புகள் மறுக்கப்பட்டாலும், கேள்விகள் மறுக்கப்பட்டாலும் அதை இந்த அவையில் கேட்கக்கூடாது. என் அறையிலேதான் கேட்க வேண்டுமென்று பலமுறை சொல்லியிருக்கிறேன். எனவே, அதை இங்கே கேட்கக்கூடாது, அங்கேதான் கேட்க வேண்டும்.

## (3) 1974–75-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் இருக்கும் 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்றுச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான் 3 கோணங்களில் பரிசீலிப்ப தாக இருக்கிறேன். முதலிலே, நம்முடைய அரசுக்குத் தேவையான உதவியை மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு அதிகமாகப் பெற முடியுமோ அந்த அளவிற்கு நாம் பெறுவதற்கு முயற்சி எடுத் திருக்கிறோமா இல்லையா என்பது. இரண்டாவது, நம் முன்னாலுள்ள சோஷலிசத் திட்டங்களை அமல்படுத்துவதிலே முயன்றிருக்கிறோமா என்பதைப்பற்றியது. மூன்றாவது, நம்முடைய நிதிக் கொள்கையின் காரணமாக, வரிவிதிப்புக் கொள்கையின் காரணமாக வரிச் சுமைகளின் காரணமாக ஏழை மக்களுக்கு ஏதாவது பாதிப்பு இருக்கிறதா என்பதைப் பற்றியது.

இந்த மூன்று கோணங்களிலிருந்தும் இந்த நிதிநிலை அறிக்கையை நான் பார்க்கும்பொழுது நிச்சயமாகச் சொல்வேன், இந்த பட்ஜெட் வரவேற்கின்ற முறையிலேதான் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக இந்த அரசின்



1974 மார்ச் 13] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

நோக்கம், வரிவிதிப்புக் கொள்கையின் காரணமாக ஏழை மக்கள் கஷ்டப்படக் கூடாது, அவர்கள் மீது உள்ள வரிப்பளு குறைய வேண்டுமென்பதற்காக இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைச் சொல்வது அவசியம் என்று கருதுகிறேன்.

இந்தப் புதிய வரி விதிப்பு முறையிலே விறகு, மாட்டுத் தீவனம், கண்ணாடி வளையல்கள் ஆகியவற்றிற்கு வரியை நீக்கியிருக்கிறார்கள் என்பது ஏழை மக்களுக்கு வரிச்சுமை கூடாது என்பதில் இந்த அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

அதே நேரத்திலே மோட்டார் வாகன வரிச் சீரமைப்புத் திட்டத்தின் மூலமாக இனிமேல் ஒவ்வொரு பிரயாணியும் தான் செல்லக்கூடிய பிரயாணத்திற்குக் கொடுக்கின்ற கட்டணம் எவ்வளவு தூரம் உயரும் என்பதையும் நாம் சற்றுக் கடுமையாகப் பார்க்க வேண்டிய ஒருநிலையில் இருக்கிறோம். இந்த நிலையில் இந்தப் புதிய வரிச் சீரமைப்பினால் ஒவ்வொரு பிரயாணியும் தான் கொடுக்க வேண்டிய பணம், இப்பொழுது கொடுப்பதைவிட ஒன்றரை மடங்கு அல்லது அரை மடங்கிலிருந்து ஒன்றரை மடங்கு வரையில் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அப்படி ஏற்படாமல் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாம் மத்திய சர்க்காரிடத்திலிருந்து அதிகமான பணத்தைப் பெற வேண்டுமென்பதற்காக இன்னின்ன முயற்சிகளை அரசு எடுத்திருக்கிறது என்பதிலே நான் சில கருத்துக்களைச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். முன்னாலே பேசியவர்கள் சொன்னார்கள், மாநில சுயாட்சி கோரக்கூடிய ஒரு மறைமுக அம்சமாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நான் இதை அந்தக் கோணத்திலிருந்து பரிசீலனை செய்யாமல் மாநிலத்திற்கு வேண்டிய பணம், மத்திய சர்க்காரின் உதவி, கடன் ஆகியவை கிடைப்பதிலே என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைப்பற்றிப் பார்க்க விரும்புகிறேன்.

அப்படிப் பார்க்கும்போது சில குறைபாடுகள் எல்லாம் மத்திய அரசின் மீது, நிதி ஆணைக் குழுவின் மீது எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து இன்னும் அதிகமாக நிதி உதவியும், கடனுதவி யும் பெறுவதற்காகத்தான் இந்த முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக் கிறோம் என்ற நோக்கத்துடன் பார்க்க வேண்டுமே தவிர வேறு முறையில் பார்ப்பது நல்லதல்ல என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நம்முடைய மாநிலத்திற்கு ஐந்தாண்டுத் திட்டத்திற் கான கடன் தொகையும், உதவியும் நிர்ணயிக்கப்படவில்லை, பல்வேறு தொழில்களில் மத்திய அரசு ஒதுக்க வேண்டிய முதலீட்டைத் தமிழ் நாட்டுக்கு ஒதுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.

நிதி ஆணைக்குழு நிதியைப் பகிர்ந்தளிக்கும் முறையைப் பற்றியும் சொல்லி இருக்கிறார்கள். அதனால் தமிழ்நாட்டுக்கு எந்தவிதமான ப னும் ஏற்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகச் சீர்திருத் தம் என்ற அடிப்படையில் மாநிலத்திற்கு அதிகப் பணம் ஒதுக்கவேண்டு மென்பது பற்றியும் கூறியிருக்கிறார்கள். நாம் மேலும் அதிகமாகப் பணம் பெற வேண்டுமென்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை என்று இதை எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர வேறு வகையில் எடுத்துக் கொள்ளக்கூடாது.

சோஷலிசத் திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு முயற்சி செய்திருக் கிறதா என்று பார்க்கும்போது அதிலும் இந்த அரசு சில காரியங்களைச் செய்திருக்கிறது; சில அடிகளை எடுத்து வைத்திருக்கிறது என்பதைக் காண்கிறோம். சர்க்கரைத் தொழில் இனிமேல் தனியார் துறையில் செயல் பட விடப்பட மாட்டாது; பொதுத் துறையில் செயல்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். டெக்ஸ்டூல், ஸ்பென்சர் போன்ற நிறுவனங்களை அரசுடைமையாக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். போக்கு வரத்து நிர்வாகத்திலே தொழிலாளர்களைப் பங்கு பெறச் செய்து புதிய புதிய ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது சோஷலிசப் பொருளாதாரக் கொள்கையை நோக்கி சில அடிகளை எடுத்து வைத்திருக்கிறோம் என்று சொல்ல முடியும். பூராவுமே சோஷலிச லட்சியத்தை அடைந்து விட்டோம் என்று சொல்ல முடியாது. சோஷலிச லட்சியத்தை நோக்கி இந்த அரசு அடிப்படையான காரியம் எதையும் செய்யவில்லை என்று யாராவது சொன்னால் அதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

மத்திய அரசின் மேல் குறைபாடுகளைச் சொல்லக்கூடிய நேரத்தில் பண வீக்கத்தைத் தடுக்க மத்திய அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்க வில்லை; அங்கே திட்டம் நின்று விடுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது; வெறும் முழக்கம் மட்டுந்தான் இருக்கிறது; திட்டத்தைச் செயல்படுத்தக் கூடிய நிலையில் மத்திய அரசு இல்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே கருத்து வேறுபாடு நிச்சயமாக எனக்கு உண்டு. நம்முடைய அரசுக்கு மட்டுந்தான் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம் இருப்பது போலவும் மத்திய அரசுக்கு இல்லையென்று சொல்வது சரியல்ல.

மத்திய அரசுக்கு இருக்கக்கூடிய பொருளாதாரச் சிக்கல், சிரமமான நிலையில் கூட, தமிழகத்திற்கு 180 கோடி ரூபாய் வரை மத்திய அரசு ஒதுக்கியிருப்பதைப் பார்க்கும்போது மத்திய அரசும் திட்டத்தைச் செயல் படுத்த அக்கறை காட்டுகிறது என்பதையும் புரிந்து கொள்ள முடியும். தேசிய மட்டத்தின் பொருளாதார நிர்வாகம் சீராகக் கையாளப்படவில்லை என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைகளை நிச்சய மாகச் சொல்ல வேண்டியது அவசியந்தான் என்று பார்க்கும்போது ஒட்டுமொத்தமாக ஒரு காரியத்தை மனதில் வைத்துக்கொள்ள வேண் டும். சில ஆண்டுகளுக்கு முன்னால்தான் "ப்ராப்ளம் ஆப் ப்ளெண்டி" என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். சில ஆண்டுகளுக்குள்ளாக





ஸ்கேர்சிடி என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இப்போது விலையேற்றத்தின் காரணமாக ஏற்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை யைக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

இப்போது அரசு ஊழியர்களுக்கு 10 ரூபாய் பஞ்சப்படி அதிகமாகக் கொடுத்திருக்கிறோம். இந்த உயர்வு விகிதத்தைவிட விலைவாசி அதிக மாக உயரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. 10 ரூபாய் கொடுத்திருக் கிறோம் என்றால் வெளியே 30 ரூபாய் அதிகமாகச் செலவழிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 20 ரூபாய் அளவுக்கு மேலும் அதிகமான பஞ்சப் படியை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விலைவாசி ஏற்றம் நம் சக்திக்கு அப்பாற்பட்டு நாம் பிடிக்க முடியாத அளவுக்கு உயர்ந்து கொண்டே போகிறது என்பதை இவை எல்லாம் காட்டுகிறது.

இதைத் தடுக்க நம்முடைய அரசும், மத்திய அரசும் செய்யவேண்டிய முறைகள் என்ன என்று சொல்ல விரும்புகிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியவில்லை; உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. பல அத்தியாவசியமான பண்டங்கள் எல்லாம் கிடைக்கவில்லை. அதனால்தான் விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமானது அல்ல. அதிக உற்பத்தி இல்லாத நிலை யில் அதை நாட்டு மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுதற்கான முறையில் கடமைகளைச் சரியாகச் செய்கிறோமா என்று நினைத்துப் பார்க்க வேண் டும். விநியோக முறையை நாம் சீராகக் கையாண்டால், எவ்விதத் தவறும் விநியோக முறையில் இல்லாது பார்த்துக் கொண்டால் நிச்சய மாக விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். மத்திய அரசும் சரி, நம் முடைய அரசும் சரி அதைச் சீரான முறையில் கையாளவில்லை என் பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொன்னால் சரியாக இருக்குமென்று கருது கிறேன். உர விநியோகத்தை எடுத்துக் கொள்வோம். விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை. பற்றாக்குறை இருக்கிறது என்பது உண்மை. நமக்குக் கிடைத்திருக்கக் கூடிய உரத்தை எப்படி விநியோகம் செய் கிறோம் என்று பார்க்க வேண்டும். சரியான முறையில் விநியோகம் செய்திருந்தால், 150 ரூபாய், 200 ரூபாய் என்று விற்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்காது. **I would call it as fraudulent and dishonest distribution system** அதே போன்று இதிலே மத்திய அரசு கையாளக் கூடிய முறையும் சரியாக இல்லை. விநியோக முறையைச் சீராக நம் முடைய அரசும், மத்திய அரசும், செய்திருந்தால் நிச்சயமாக இந்த விலைவாசி ஏற்றத்தைத் தடுத்திருக்க முடியும். அதிகமாகக் கிடைக்கக் கூடிய காலத்தில் எல்லாம் சரியாக இருந்திருக்கலாம். குறைவாக இருக் கக் கூடிய காலத்தில் விநியோக முறையைச் சீராகச் செய்தோமா என்று சிந்தித்துப் பார்கக வேண்டும். அந்த முறையில் பார்த்தால் நிச்சயமாக நாம் வெற்றி அடையவில்லை; தவறி இருக்கிறோம். இனிமேல் விளைச்சல் அதிகமாக இருந்தாலும் சரி, குறைவாக இருந்தாலும் சரி சீராக விநி யோகம் செய்வதற்கு என்ன முறைகளைக் கையாள வேண்டுமென்று பார்க்க வேண்டும்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1974 மார்ச் 13

உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் நாம் நெல் உற்பத்தியில் உபரி மாநிலமாக இருக்கிறோம். சென்ட்ரல் பூலுக்கு அதிகமாக, 50,000 டன் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வெளி மாநிலங்களுக்கும் நாம் வேண்டிய அளவிற்கு அரிசி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்படி எல்லாம் கொடுத்தும் கூட நம் மாநிலத்தில் அரிசி என்ன விலைக்கு விற்கப்படுகிறது என்று பார்த்தால் காலேயரைக்கால் படி ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. (மணியடிக்கப்பட்டது). சிறிது நேரம் கூட கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதே பதினைந்து நிமிடங்கள் ஆகிவிட்டன.

THIRU SOWDI S. SUNDARABHARATHI: I will finish within ten miniutes.

அடுத்து, புது ரக விதைகளை உபயோகித்து விளைச்சலை அதிகப்படுத்த முயல்கிறோம். விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய விதைகள், தரமான விதைகள் அவர்களுக்குப் போய் சேருகின்றனவா என்பதை அரசு கண் காணிக்க வேண்டும். கொடுக்கப்படுகிற விதைகளில் கூட கலப்படம், (Adulteration), இருக்கிறது. நல்ல ரக விதைகளோடு வேறு விதை களையும் கலப்படம் செய்து கொடுக்கிறார்கள். அப்படி விதைகளில் கலப் படம் செய்யப்படுமானால் அதனால் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படும். ஆகவே அதையும் சரியான முறையில் கண்காணிக்க வேண்டும்.

அடுத்து, பாசனத்தைப் பொறுத்தவரையில் ஜமீந்தாரி ஒழிப்புச் சட்டத்தின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட ஏரிகள், குளங்கள் இவற்றைச் செப்பனிடுவதற்காக அரைக் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருபது, முப்பது ஆண்டுகளுக்கு மேலாக செப்பனிடப்படாமல் இருந்தவை களைச் செப்பனிடுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியது. இருந்தபோதிலும் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது. எனவே, அதற்கு அதிகப்படியான தொகை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாய்க்கால் குடிமராமத்து பூரா வையும் அரசே எடுத்து செயல்படுத்த வேண்டும்.

பின்னர், கைத்தறி. கைத்தறிக்காக நம் அரசு 2·01 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இதற்கு முன்பு கைத்தறியாளர்களுக்குக் கொடுக்கப் பட்ட ஒரு கோடி ரூபாய் கடன் தொகை பூராவையும் இப்போது தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதற்காக அரசுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நம் நாட்டிலுள்ள எல்லாக் கைத்தறியாளர்களையும், கூட்டுறவுத் துறைக்கு வெளியே இருக்கிற கைத்தறியாளர்களையும் கூட்டுற வுத் துறைக்குக் கொண்டு வந்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன். அப்படி எல்லாக் கைத்தறியாளர்களையும் கூட்டுறவுத் துறைக்குள் கொண்டு வருவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட் டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றே நான் கருதுகிறேன். ஆகவே அதற்காக வேண்டிய தொகையை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 13] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

பின்னர், கல்வியைப் பொறுத்து ஒரு வார்த்தை கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். பட்ஜெட் உரையில் பார்க்கிறபோது, 6 வயது முதல் 11 வயது வரையில் படிக்கிற குழந்தைகளின் சதவிகிதம் 90·2 சதவீதம் என்றிருக்கிறது. 11 முதல் 14 வயது வரை படிக்கிற குழந்தை களின் சதவிகிதம் 52·3 சதவீதம். 14 முதல் 17 வயது வரையில் படிக்கிற குழந்தைகளின் சதவிகிதம் 33 சதவீதம். கடைசியாக வந்து சேரும்போது, அதாவது எஸ்.எஸ்.எல்.சி.க்கு வந்து சேரும்போது முதலில் ஆரம்பத்தில் எவ்வளவு பேர்கள் படிக்கிறார்களோ அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு குழந்தைகள் அதில் காணாமல் போய்விடுகிறார்கள். அதா வது விடுபட்டுப் போகிறார்கள். திரு வடிவேல் அவர்கள் கூட இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்படி விடுபடுகிறவர்கள் யார் என்ற கேள்வியை எழுப்பி அதற்குப் பதில் சொல்லும்போது இந்த மூன்றில் இரண்டு பங்கு படிக்காமல் போகிற குழந்தைகள் விவசாயிகளின் குழந்தை கள் ஏழை ஹரிஜனங்களின் குழந்தைகள் என்று சொன்னார்கள். முதலில் படிப்பதற்குச் சென்றாலும் கூட கடைசியில் இப்படி ஒதுங்கி விடுகிறார்கள். இவர்கள் பழையபடி பள்ளிக்குச் சென்று படிப்பதற்கு என்ன நடவடிக்கைகளை அரசு எடுத்திருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

இதற்கு முன்பு மதிய உணவுத் திட்டம் என்ற திட்டத்தைக்கொண்டு வந்தார்கள். ஏழை ஹரிஜனங்கள், ஏழை விவசாயிகள் இவர்களின் குழந்தைகள் வறுமையின் காரணமாகப் படிக்க முடியாதிருக்கும் நிலையில் அவர்களுக்கு மதிய உணவு அளித்து பள்ளிக்கு வரும்படிச் செய்யும் ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தத் திட்டம் நல்லமுறையில் செயல்படவில்லை என்பதைக் காண்கிறோம். அதனால் எல்லாம் பள்ளிக்கு வராமல் இருப்பதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்பதைக் கணக்குகள் காட்டுகின்றன. ஆகவே குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கூடங் களுக்கு ஒழுங்காக வந்து சேர்ந்து படிக்கக்கூடிய அளவிற்கு ஒரு புதிய திட்டத்தை அரசு உருவாக்க வேண்டும்.

இப்போது மாலை நேரக் கல்லூரிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. வருவாயைத் தேடிக்கொள்ளாமல் படிக்க முடியாது என்று பல பேர்கள் இருக்கிறார்கள் என்பதைத்தான் அது எடுத்துக் காட்டுகிறது. அதேபோல், ஏழைக் குழந்தைகள் சம்பாதிக்கவும் வேண் டும். பெற்றோர்களுக்கு உதவியாகவும் இருக்க வேண்டும். அதோடு கூட படிக்கவும் வேண்டும் என்று இருக்கிற ஏழைக் குழந்தைகள் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் படிப்பு சொல்லிக் கொடுக்க வேண்டும். வருவாயைத் தேடிக்கொள்ளுவதோடுகூட அவற்றில் வந்து படிக்கவும் செய்கிறார்கள்.

ஆகவே, மாலை நேரக் கல்லூரிகள் இருப்பது போல், வருவாய் தேடிக் கொண்டு அதோடு கூட மேற்படிப்பு படிப்பதற்கான வசதி இருப்பதைப் போல், சம்பாதித்துத் தங்கள் குடும்பத்திற்குக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்றிருக்கிற ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கக் கூடிய விதத்தில் ஒரு புதிய முறையை ஏற்படுத்த வேண்டும். பாதி நேரம் தங்கள் தகப்பனாரின் தொழிலுக்கு ஒத்தாசை செய்வதற்கான ஒரு

வாய்ப்பையும், மிச்ச நேரத்தில் அதாவது தன் தகப்பனுருக்கு ஒத்தாசையாக இருக்குமளவிற்கு இல்லாத நேரத்தில் படிப்பு சொல்லிக் கொடுக்கக் கூடிய முறையில் மாலைநேரக் கல்லூரிகளைப் போல் மாலை நேரப்பள்ளிக் கூடங்கள் துவங்கினால் அதன் மூலம் ஏழை ஹரிஜனக் குழந்தைகள், ஏழை விவசாயிகளின் குழந்தைகள் கல்வி அறிவு பெற வாய்ப்பளித்தால் நிச்சயமாக அந்த காப் இருக்காது. எனவே, அந்த முறையில் அரசு ஆலோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி ஆசிரியர்கள் இருக்கிருர்கள் அவர்களுக்கு வேலைப் பாதுகாப்பு கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களின் வேலைப் பாதுகாப்பிற்கான சட்டதிட்டங்கள் இருப்பதைப் போல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் வேலைப்பாதுகாப்பிற்கான சட்டதிட்டங்களை பள்ளி ஆசிரியர்களோடு சேர்த்து வேண்டிய சட்ட திட்டங்களைக் கொண்டுவர முடியுமா என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. தொ. க. சிறைமீட்டான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் ஏழை எளிய பாட்டாளி மக்களுக்கும், நெசவாளர்களுக்கும், சிறு வியாபாரிகளுக்கும் பயன்படும் முறையில் உருவாக்கியிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

குறிப்பாக சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் குடிமராமத்துக் கால்வாய்களையெல்லாம், ஜமீன் காலத்தில் இருந்து முறையாகச் செப்பனிடப் படாமல், சிறிய விவசாயிகளுக்குப் பயன்படாமல் இருந்தவற்றையெல்லாம் நம் அரசு முழுமையாக மராமத்து செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதை வரவேற்கிறேன். அதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பயன் அடைவார்கள் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து சிறிய நீர்ப்பாசனக் கண்மாய்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவை முழுமையாக மராமத்துச் செய்யப் படாமல் பழுதடைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் பொதுப்பணித் துறையில் சேர்த்து முழுமையாக மராமத்து செய்ய ஒரு சிறப்புத் திட்டத்தினை அரசு ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்பாலும் இருப்பவை புன்செய் நிலங்கள்தான். அந்தப் பகுதி ஊற்றுகள் இல்லாத பகுதியாகும். அங்கு ஊரணிகளைத் தோண்டுவதற்கு நிலவள வங்கிகள் மூலம் தனியார்களுக்குக்கூட கடன் வழங்கலாம். அப்படிச் செய்தால் அந்த வசதியைப் பயன்படுத்திக்கொண்டு அவரவர்கள் தங்கள், தங்கள் விவசாயத்தை விருத்தி செய்து கொள்ள முடியும். ஆகவே கண்மாய்கள், ஊரணிகள் இவைகளைத் தங்கள் சொந்தத்தில் வெட்டிக் கொள்வதற்குத் தனியார்களுக்கு அரசு நிதி வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் பகுதி மிகவும் பின் தங்கிய பகுதியாகும். அந்தப் பகுதியில் ஒரு உப்பளத் தொழிற்சாலையை ஏற்படுத்துவது நம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அதை விரைவில் ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிழக்குக் கடற்கரைச் சாலைபற்றி நீண்ட நாட்களாக ஒரு பெரிய கோரிக்கை இருந்து வருகிறது. அதையும் கூடிய விரைவில் அமைத்துத் தர மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சேது சமுத்திரத் திட்டமும் அதேபோல்தான். சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால் தூத்துக்குடி உரத் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகளுக்கு அங்கிருந்து உரங்கள் போன்றவற்றை இராமநாதபுரம் பகுதிக்கு, தொண்டி போன்ற பகுதிகளுக்குக் கொண்டுவர நல்ல வாய்ப்பாக இருக்கும். அதோடுகூட கிழக்கு இராமநாதபுரம் பகுதி முன்னேறுவதற்கும், குறிப்பாக தென் மாநிலங்கள் முன்னேறுவதற்கு அந்த கிழக்குக் கடற்கரைச் சாலை மிகவும் அவசியம்.

(முற்பகல் 10–30)

அதேபோல், சேதுசமுத்திரத் திட்டத்தையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பரமக்குடியில் காகிதத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்துவதற்கான எல்லாவிதமான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் புளிச்சாறு செடிகள் அதிகமாகப் பயிராகின்றன. காகிதத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்குப் புளிச்சாறு செடிகள் வரப்புகளில் தானுகவே வளரும் நிலை இருக்கிறது. ஆகவே, அங்கேயொரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க நமது அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன். அதைக் கூடிய விரைவில் முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நெசவாளர்கள் முன்னேற்றத்திற்காக இந்த அரசு பல வகைகளில் உதவிகளைச் செய்து வருகிறது. தேக்கம் இல்லாத நிலையிலும், அவ்வப்போது போதுமான வசதி செய்து வருகிறது. மேலும் எல்லா நெசவாளர்களையும் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ்க் கொண்டுவரவேண்டும் என்பதற்காக அரசு முயற்சி எடுத்து வருவதைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதே போல், அவர்களுக்கு ரூ. 100 வீதம் கடனுகக் கொடுக்கப்பட்டிருந்த ரூ. 1 கோடியை இப்போது ரத்து செய்து இருப்பதாக அறிவித்து இருக்கிருர்கள். அதற்காக நெசவாளர்கள் இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

நெசவாளப் பெருமக்களில் பெரும்பாலோர் சொந்தத்தில் தறி வாங்க முடியாத நிலையில் " மாஸ்டர் வீவர் " என்று சொல்லப்படுகிறவர்களிடத்தில் நெசவுத் தொழில் செய்து வருகிருர்கள். அவர்களுக்கு எல்லாம்—தறி இல்லாதவர்கள் எத்தனை பேர் என்று கணக்கு எடுத்துக்

[Thiru K. S. Kothandaramiah] [1974 மார்ச் 13

With regard to irrigation schemes, seven schemes have been included in the budget. But unfortunately not a single scheme pertaining to Dharmapuri district has been added. There are two schemes pending since so many years. When the Hon. Chief Minister was the Minister for P.W.D. he sanctioned a big scheme in Denkanikota taluk, called the Doddahalla Scheme. That was five or six years before. But so far, it is not sanctioned. People are now suffering and are pressing us to request the Hon. Chief Minister to see that that scheme is sanctioned.

Then comes the Kalavarpalli dam in Hosur taluk which can irrigate 5 to 6,000 acres. I hope it would be included. I request the Hon. Chief Minister and Hon. Minister for P.W.D. to include that scheme also and implement it quickly.

Now regarding Kudimaramath schemes, Government have done well and have stated that they would take up such works. Those schemes are in ex-zamindari areas, many channels which have been dug long ago, but not repaired. I am happy to learn that Government would hereafter attend to such Kudimaramath works. They have long been neglected.

I have to say with regard to this one more thing. Now the Government have stated that only channels having long distance will be taken up for repairs. It has been mentioned in the Budget speech of the Hon. Chief Minister. But in Zamindari areas, there are a number of small channels. For example, in my Constituency, almost all the channels come within the zamindari areas. There are 3 or 4 small channels constructed long long ago and channels measuring about 1 or 1½ miles. But they are in a very bad condition and the people are not able to take water to their fields. I, therefore, request the Hon. Minister for Public Works to consider this and issue orders to repair these small channels, without expecting anything from the people because the people in those areas have not been able to get crops since the past 7 or 8 years, because water is not sufficient to reach these channels. These should be taken up by the Government without giving them to the Panchayats because the Panchayats have no funds and they are also not able to execute the works satisfactorily.



1974 மார்ச் 13] [Thiru K. S. Kothandaramiah]

Another good thing is, that a good item has been included in the Budget Speech that is with regard to repairs to zamindari tanks. When the Hon. Minister Thiru S. J. Sadiq Basha was handling this portfolio, he came to Dharmapuri and at that time he assured us that he would issue orders to repair the tanks in zamindari areas. In Dharmapuri district, there are a number of zamindari tanks. They are completely ruined. Unless some special schemes are formulated and implemented, it would be very difficult to repair them. Now it has been stated in the Budget Speech that the repairs to these tanks would be done by the Department directly. It is a good thing and I hope they will be executed very quickly. Dharmapuri district is declared as a backward area and I plead that preference should be given to the tanks there and repairs should be done quickly.

With regard to rural roads and bridge programme, I would like to say that the Panchayat Unions have laid a number of roads. I would like to point out one thing here. The Central Government and the State Government are committing the same mistake. They lay the roads but they are not metalling them. Sometimes, the roads disappear. The farmers plough the fields and it is difficult to get back the land. Laying of the roads and metalling of the roads should be done simultaneoulsy and adequate funds should be provided for that purpose. Otherwise, the money spent on laying of the roads would become waste and the Government will have to spend money for that purpose again.

Another important thing which Hon. the Chief Minister has said is this. With regard to village roads, it has been stated that for connecting with the main roads every village with a population of 1,500 would be taken up. The Department was not able to have clear idea about this. They say that the villages are having less than 1,500 population and they will not be taken up. They went on getting clarification from the Department and still they were not able to take up the works. Sometimes back, the Hon. Chief Minitser has clearly stated that those villages which are having less than 1,500 population should be clubbed together with some other villages having less population and get 1,500 population and then the work be executed. It shows the real human consideration of the Hon. Chief Minister and his capacity to tackle the problems. Having said this, I think the Engineers

[Thiru K. S. Kothandaramiah] [1974 மார்ச் 13

and District Collectors will take into consideration all the villages having population of less than 1,500 and provide adequate roads for them.

Now, coming to the question of fertilisers, I have to say that it has got a very sorrowful history. Many hon. Members have brought to the notice of the House the difficulties experienced by the ryots in getting fertilisers in various parts of the State. The Central Government has given the distribution of fertilisers to Co-operative Societies and private merchants. The Societies which are entrusted with the work, are not distributing them properly. That is a general complaint. The same complaint has been levelled by all the M.L.As. here and also by the M.L.Cs. in the Council. Steps should be taken immediately to check such malpractices and also to punish the erring officials. The Government also must see that these fertilisers do not disappear in lorries but they are distributed to the people properly.

In regard to private merchants, they can also take action and see that they are distributed in a proper way. Now a situation has arisen that without applying fertilisers, the farmers are not able to grow crops. They are not able to grow any crop or vegetable without fertilisers. If there is no fertiliser, the production goes down. The Government should give immediate consideration for the proper distribution of fertilisers to the farmers adequately.

In the budget, it has been suggested about the formation of District Development Corporations. No doubt the idea is good. There it is said that the Collector will be the head of the Corporation. The Government is going to give some funds and some more funds are to be collected from the people without taking them. My fear is this. Even now in the name of small savings, people are compelled to pay huge sums to the local officers, because targets are fixed somewhere without taking into consideration the conditions of the localities. Target is fixed for the local officers and are asked to collect. Teachers are asked to pay fitfy or sity rupees as savings. Now the prices are going up and they are finding it difficult to have a square meal a day. It would be difficult for them to pay money towards small savings. They should be given freedom to contribute as they like. In what way the Development Corporations are going to get money? Many



1974 மார்ச் 13] [Thiru K. S. Kothandaramiah]

of the Corporation officials will be going to compel the people to pay money. The Government, therefore, should take steps to see that the scheme is formulated properly and the people are not harassed for getting more funds. The whole thing should be examined cautiously and carefully.

I would like to say a word about the supply of rice in belt areas. There are border areas in Dharmapuri District. In such areas the Government must make arrangements with the other neighbouring Governments—between Mysore and Tamil Nadu, between Andhra and Tamil Nadu—to see that smuggling is not allowed or encouraged. It is difficult to stop smuggling in ordinary and usual methods. People in belt areas are not able to get rice. They are classified as separate class people and they are not able to get anything from the neighbouring State or from our State. They are hanging in the air. This matter must be settled soon. My idea is that we should take away the checkposts or locate at the exact border spots. Checkposts are the source of corruption and are giving a lot of trouble to the people and officials there.

Another point is with regard to supply of rice to people in deficit areas. In Hosur, it is difficult to get rice. There one measure of rice costs Rs. 3·50 or Rs. 4·00. No doubt the Government gives permission to many merchants there. But they are not doing properly. The people should not be put to difficulties. The Government should take action against those officials for not supplying rice and see that the poor people are not made to wait at the shops and waste time, but get their quantity without waste of time.

For example, Kerosene, is not easily available at Hosur. Just to get a bottle of kerosene, they have to stand in long queues for hours together. The Government must see that fertilisers, rice, cement, kerosene and other things are made available to the people in the border areas easily and in time.

Another thing that is left out in the Budget speech of the Hon. Chief Minister is reference to linguistic minorities. The Government has given a lot of money for education. But even in the Governor's Address, no reference has been made to the problems pertaining to linguistic minorities. Perhaps His Excellency does not see that there are a large number of linguistic minorities here.

[Thiru K. S. Kothandaramiah] [1974 மார்ச் 13

Only a few days back during the Question Hour, the Hon. Speaker witnessed a number of people from all parties putting questions with regard to facilities to be given to linguistic minorities. According to the present census figures, one-fourth of the population of this State belong to the linguistic minority group. They are working for the betterment of the State. They have identified themselves as people of this State and working for the betterment of the State. They form part of this State. They require facilities for their education. They want to protect their culture and language. No doubt, the Hon. Chief Minister, Minister for Education and other Ministers have been kind enough to accept the recommendations of the Commissioner for Linguistic Minorities. They have been accepted by the Central Government and State Government. But they have not been properly and fully implemented. I wish that there must be a Special Officer to see all these things.

For example, with regard to printing of receipts in Telugu in Hosur and other areas, it has not been done, though the taluk has been recognised as a telugu-speaking area and recognised by the Government and accepted by the Central Government. I got a letter from the Commissioner for Lingusitic Minorities that it should be printed in Telugu and I have referred this to the Government.

Now though it is more than six or seven months since they have accepted it, it is not printed. So, I request the Government to see that the question of linguistic minorities gets preference.

Moreover in Ramanathapuram and other places there is a large demand for the opening of Telugu schools. In Rajapalayam a Telugu school was opened and a Telugu Pandit has been appointed. But the difficulty is that he is asked to teach Telugu after school hours. He should be permitted to teach within the school hours, and he should be paid accordingly. So also in Coimbatore and Madurai and also in the Madras Corporation areas, there is a large demand for opening more Telugu schools.

Sir, only a few days ago I had been to the University for a meeting and I saw that only 37 Telugu students have been reading in the colleges. There are more than four or five lakhs of Telugu-



1974 மார்ச் 13] [Thiru K. S. Kothandaramiah]

speaking people living in this city but there are only 37 Telugu students studying in the Government Colleges. There should be at least 300 or 400 students studying in the colleges. That shows that elementary education is not imparted in their mother tongue i.e., Telugu. Therefore, I would appeal to the Hon. Chief Minister and the Hon. Education Minister to see that the linguistic minorities who have identified themselves as people of this and who have been working hard for the improvement of this State are given all facilities. With these words, I close my speech.

திருமதி வி. ப. பழனியம்மாள்: பேரவைத் தலைவரவர்களே, 1974-75 ஆம் ஆண்டுக்கான இந்த நிதி நிலை அறிக்கையை ஆதரித்து ஒன்றிரண்டு கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன்.

அகில இந்திய அளவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, உற்பத்தி குறைந்து அதன் காரணமாக விலையேற்றம் கட்டுப்படுத்த முடியாது இருக்கும் இந்த நேரத்தில் நமது முதலமைச்சரவர்கள் ஓரளவு வரிகளைக் குறைத்து, இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய மன்றத்தில் சமர்ப்பித்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய பங்குத் தொகையைக் கிடைக்கச் செய்யாமல் அநீதி இழைத்த போதிலும், நமது உழைப்பினாலும், அரசின் சீரிய திட்டங்களினாலும் சிறப்பான ஏற்பாடுகளினாலும் வசதிகள் பெருக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

வேளாண்மை வளர்ச்சிக்கென இந்த நிதிநிலை அறிக்கையில் 68·8 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதை பாராட்டுகிறேன். இந்த ஒதுக்கீட்டினால் பல விவசாயிகள் மேலும் கடன்களைப் பெற்று பம்புசெட்டுகள், மோட்டார்கள் போன்றவைகளுக்குப் பயன்படுத்தி, விவசாயத்தில் மேலும் மேலும் சிறப்பாக ஈடுபட்டு, விவசாயிகள் பெரிதும் நன்மையடைவார்கள்.

தவிர விவசாயத்திற்கு இன்றியமையாத கால்நடை திட்டத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் 5.2 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன். மேலும் எங்கள் பக்கத்தில் காங்கேயம் மாடுகளும், பர்கூர் மலைமாடுகளும் அதிகமாக உபயோகத்தில் இருந்து வருகின்றன. தற்சமயம் அந்த இன மாடுகள் விருத்தி அடையாமல் இருப்பதால் அவைகளின் விலை அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அரசாங்கம் இந்த கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் அந்த இன மாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு எந்தெந்த இடங்களில் வாய்ப்பு இருக்கிறதோ அந்தந்த இடங்களிலே எல்லாம் மாட்டுப்பண்ணைகளை ஏற்படுத்தி, அந்த இன மாடுகளை அபிவிருத்தி செய்தால் விவசாயிகளுக்கு பெரிதும் உதவியாக இருக்கும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாசன வசதித் திட்டத்திற்கு 30·8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனால் மேலும் பல இடங்கள் பாசனவசதி அடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் பி. ஏ.பி. வாய்க்கால் வெட்டும் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்த்துக்கொள்வார்கள் என்று எதிர் பார்த்தேன். அந்தத் திட்டம் இல்லாதது குறித்து பெரிதும் ஏமாற்றம் அடைகிறேன். நிதிநிலை அறிக்கையிலே அதைப்பற்றிச் சொல்லாமலிருந்தாலும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. துரைமுருகன் தலைமை)

மேலும் போதிய அளவில் மின்சாரம் இல்லாத இந்த நிலையில், தமிழ்நாட்டிலுள்ள 24,000 அரிசன குடியிருப்புக்களில் 23,000 அரிசன குடியிருப்புக்களுக்கு மின்சார வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருப்பதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இருக்கின்ற ஆயிரம் அரிசன குடியிருப்புக்களுக்கும் விரைவிலேயே மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, அரிசன குடியிருப்புப் பகுதிகளிலுள்ள தெரு விளக்குகளுக்கு ஆகும் மின்சார கட்டணத்தை அரசே ஏற்றுக் கொண்டிருப்பதையும் பாராட்டுகிறேன்.

தவிர, தற்சமயம் வேளாண்மைத் துறைக்கு 25 சதவீதம் மின்சாரத்தைதான் உபயோகப்படுத்திவருகிறோம். மற்ற துறைகளுக்குக் கொடுக்கப்படும் மின்சாரத்தைக் குறைத்து, வேளாண்மைத் துறைக்கு 40 சதவிகிதம் மின்சாரம் கொடுத்தால் உணவு உற்பத்தி மேம்பாடு அடைந்து, அதிலே முன்னேற்றம் அடைவோம் என்ற என்னுடைய கருத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மருத்துவம், குடும்ப நலத் திட்டங்களுக்கு 48·34 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியாகிய தாராபுரத்தில் இருக்கின்ற தலைமை மருத்துவ மனையில் இருக்கின்ற வசதிகள் மிகவும் குறைவு. புதிதாக எந்தவிதமான வசதியும் அந்தத் தலைமை மருத்துவ மனைக்கு செய்யப்படவில்லை. போதுமான அளவு படுக்கை வசதிகள் கூட அங்கே இல்லை. தாராபுரம் பெரிய வட்டம்; 4 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்டது. மேலும் அந்தப் பிரதேசம் ஒரு பஞ்சப் பிரதேசம் என்று வகுக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கின்ற மக்களிடமிருந்து எந்தவிதமான நிதி உதவியையும் நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே இப்படிப்பட்ட பின்தங்கிய நிலையிலிருக்கும் தலைமை மருத்துவ மனைக்கு அரசாங்கமே முழு நிதிஉதவியையும் செய்து, அந்த மருத்துவ மனைக்கு வேண்டிய பல வசதிகளையும் படுக்கை வசதிகளையும் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகளில் போதுமான வசதிகள் இல்லை. தேவையான மருந்துகள் கூட இல்லை. அதனால் மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். டாக்டர்களைக் கேட்டால் எங்களுக்குப் போதுமான அளவிற்கு மருந்துகள் கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். இந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் நலத்திற்காக 16·06 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் வீட்டுவசதி கழகம் என்ற ஒரு கழகத்தையும் நம்முடைய அரசு இப்போது ஏற்படுத்தியிருக்கிறது. அதற்காக அரசை பாராட்டுகிறேன். இத்திட்டத்தை நகரப்புறத்திலே நிறைவேற்றாமல் முதன் முதலாக கிராமப்புறத்திலே இந்தத் திட்டத்தை செயல்படுத்தி, கிராம மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் குடிநீர் வசதிக்காக 40 கோடி ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர்வசதி இல்லாத எல்லாக் கிராமங்களுக்கும் விரைவில் குடிநீர் வசதி செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள அலங்கியம் பகுதியில் கடந்த மூன்றாண்டுக் காலமாக குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பாடுபட்டு வருகிறேன். இன்னும் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை. விரைவில் அந்தத் திட்டத்தை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, என்னுடைய தொகுதியில் உடுமலை வட்டத்தில் கடத்தூர் பகுதியில் குடிநீர் வசதியே இல்லை. பேப்பர் ஆலையிலுள்ள கழிவுப் பொருட்கள், மற்றும் பல்வேறு கழிவுப் பொருட்கள் அமராவதி ஆற்றில் கலக்கின்றன. அதனால் தண்ணீர் சிவப்பு கலராக இருக்கிறது. பார்ப்பதற்கே அருவருப்பாக இருக்கிறது. அதைத்தான் என் தொகுதி மக்கள் குடிக்கிறார்கள். வருவாய்த்துறை அமைச்சரவர்கள் நல்ல குடிநீர் வழங்குவதற்கு எவ்வளவோ முயற்சி செய்தார்கள்; நடவடிக்கை எடுத்தார்கள். இருந்தபோதிலும் இன்னும் அதற்கு வசதி செய்ய முடியவில்லை. அதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை. எப்படியாவது அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து, குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முதலமைச்சரவர்கள் அளித்திருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு குப்பம் கே. எஸ். இராமகிருஷ்ணன்: கனம் மாற்றுத் தலைவர் அவர்களே, 1974–75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது, அதை வரவேற்று, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இதிலே பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். நான் இந்த அறிக்கையின்மீது பேசும்போது, இதை ஒரு அரசியல் மேடையாகக் கருதி, எதிர்கட்சிக்காரர்களை தாக்கிப் பேசாமல் என்னுடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

நேற்று அ.தி.மு.க. உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் பேசும்போது "மெஜாரிட்டி அங்கத்தினர்கள் விரும்பாததால் நான் ராஜிநாமா செய்து விட்டேன். அதேபோல் மெஜாரிட்டி மக்கள் விரும்பாததால் நீங்கள் ராஜிநாமா செய்வீர்களா" என்று பேசியிருக்கிறார்கள். இந்தச் செய்தி பத்திரிகைகளிலெல்லாம் வந்திருக்கிறது; படித்துப் பார்த்தேன். அவர்கள் இருக்கிற நிலைமை வேறு. நாங்கள் இருக்கிற நிலைமை வேறு.

[திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்] [1974 மார்ச் 13

அவர்கள் ராஜிநாமா செய்யவில்லை என்றால் ராஜிநாமா செய்ய வைப்போம் அல்லது நீக்கி விடுவோம். ஆனால் அவர்களால் அப்படிச் செய்யமுடியாது. ஐந்தாண்டுக்காலத்திற்கு இந்த நாட்டை ஆளுங்கள் என்று மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், கட்சி மாறிச் செல்லும்போது எம். எல். ஏ. பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, இப்படிச் சொல்லியிருந்தால் பரவாயில்லை. அவர்தான் சொல்கிறார் மாரல் பைண்டிங் என்று. இப்படிப்பட்ட ஒருவருக்கு மாரல் பைண்டிங்கைப் பற்றி பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது ? திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஏ.டி.எம்.கே.யில் போய் உட்கார்ந்து கொண்டு மாரல் பைண்டிங்கைப் பற்றி பேசுகிறார் என்றால் என்ன அர்த்தம் ? அவருடைய பேச்சுக்கு அர்த்தமே இல்லை. இவைகளை எல்லாம் அரசியல் மேடைகளிலே பேசவேண்டும். இந்த மன்றத்தில் பேசக்கூடியவைகள் அல்ல இந்த வார்த்தைகள். இது ஒரு அரசியல் மேடையல்ல ; ஆகவே, இங்கே அப்படிப் பேசுவது சரியல்ல.

(முற்பகல் 11–00)

பொதுவாக பட்ஜெட் என்று சொல்லும்போது, ஜனங்களிடத்திலே ஒரு கருத்து. "பட்ஜெட் மீட்டிங்குக்குப் போகிறீர்கள், என்ன வரி போடப்போகிறீர்களோ ?" என்று மாநில பட்ஜெட்டாக இருந்தாலும் சரி, மத்திய பட்ஜெட்டாக இருந்தாலும் சரி, ஒரு கஷ்டமான நிலையில் ஜனங்கள் பேசுகிறார்கள். அப்படிப்பட்ட சாதாரண, ஏழை எளிய ஜனங்கள் எல்லாம் மகிழ்ச்சி அடையும்படியாக இவ்வாண்டு டாக்டர் கலைஞர் அவர்கள் நமது மாநில பட்ஜெட்டை அளித்திருப்பதற்கு நான் அவரைப் பாராட்டுகிறேன். சோஷலிசத்தின் உயிர்நாடியாக இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. நான் எத்தனையோ பட்ஜெட், எத்தனையோ இடங்களில் கேட்டிருக்கிறேன். அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவார்கள். பென்ஷனை அளிப்பார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டிலேதான்—சாதாரணமாக கூலி வேலை செய்கிறவர்கள் கூட—அரசு ஊழியத்தில் இல்லாதவர்கள் கூட 30-வது ஆண்டு முதல் 55-வது ஆண்டு வரை மாதம் 10 ரூபாய் செலுத்தினால் போதும், அவர்களுடைய 55 வது வயது முதல் மாதம் 100 ரூபாய் பென்ஷன் அளிக்கிற புரட்சிகரமான திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக நான் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் ஒன்று எவ்வளவு நல்ல திட்டமாக இருந்தாலும் அதில் ஒன்றிரண்டு குறைகள் ஏற்பட்டு விடலாம். அப்படி இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் தம்முடைய 33 வது வயதில் இருந்து ஒருவர் 10 ரூபாய் கட்ட ஆரம்பித்தால், அவர் ஐந்தாறு ஆண்டுகளில் இறந்து விட்டார் என்றால் அதுவரை அவர் கட்டிய தொகையை மட்டும், வட்டியோடு அவரது குடும்பத்திற்குத் தந்துவிடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு சர்க்கார் சிப்பந்தி மாதம் 10 ரூபாய் கட்டி வருகிறபோது இரண்டொரு ஆண்டுகளில் இறந்துவிட்டாலும் கூட, அவரது குடும்பத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் தருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல



1974 மார்ச் 13] [திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்]

நான் இங்கேயும் பத்தாயிரம் தரவேண்டுமென்று சொல்லாவிட்டாலும் 2,500 ரூபாய், 5,000 ரூபாய் என்ற அளவுக்காவது அவரது குடும்பத்திற்கும் கொடுப்பதுதான் நல்லதாக இருக்கும். ஆகவே டாக்டர் கலைஞர் அவர்கள் இதையும் பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தில் இதுபோன்ற ஒரு ஏற்பாட்டினையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் 59 பொருள்களுக்கு ஒருமுனை விற்பனை வரியைக் கொண்டுவந்திருப்பதையும், 10 லட்சத்திற்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களுக்கு வரி விதிக்கப்படும் என்பதாகவும் சோஷலிச அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது முற்றிலும் பயன்தரக்கூடிய ஒன்றாகும். இப்படிப் பார்க்கிறபோது இந்த அறிக்கை ஏழைகளுக்கு பல நல்ல சலுகைகளை அளிக்கிற திட்டமாகும்.

வேளாண்மையை எடுத்துக் கொண்டாலும் 115 கோடிக்குப் பல புதுத் திட்டங்களைப் போட்டிருப்பதையும், மேலும் அதிகமான ஏக்கரா நிலம் சாகுபடியின் கீழ் வரும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். இந்த ஆட்சி வருவதற்கு முன் எப்படி ஜனங்கள் அரிசிக்குத் தவித்தார்கள், வாரத்திற்கு 3 நாள் சாப்பிடு, 5 நாள் சாப்பிடு என்றெல்லாம் சொல்லப்பட்டது, மக்கள் அரிசிக்காக வேலைக்குக் கூடப் போகாமல் எப்படி நீண்ட க்யூவாக நின்றார்கள் என்பதை எல்லாம் நாம் அறிவோம். வேளாண்மைத்துறையில் இந்த அரசு வந்த பிறகு போட்டிருக்கிற பலவிதமான திட்டங்களின் காரணமாகத்தான் நம் மாநிலம் தன்னிறைவு பெற்றிருக்கிறது. அதற்காக நான் பெரிதும் இந்த அரசைப் பாராட்டுகிறேன். வேளாண்மை வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு மதுரை மாவட்டத்தில் வைகையாற்றில் அணை கட்டி, இராமநாதபுரத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல இருப்பதைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறவர்கள் எல்லாம் அங்கே ஆஸ்பத்திரிகள் எவ்வளவு சுத்தமாகவும், சத்தமின்றியும், நெருக்கடி இல்லாமல் இருக்கிறது என்பதைச் சொல்கிறார்கள். ஆனால், மதுரையைப் பொறுத்தவரை அங்கே ஆஸ்பத்திரியில் இருந்த இடநெருக்கடியை உணர்ந்து டி. வி. எஸ். கொடுத்த 5 லட்சம் நன்கொடையைக் கொண்டு மதுரை நகராட்சி கொடுத்த மனையில் புதிய கட்டிடம் கட்ட இருப்பதை நான் பாராட்டுகிறேன். மதுரை மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கைத்தறி விஷயமாக, நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கடன் ஒரு கோடி ரூபாயை ரத்து செய்திருப்பதை பல அன்பர்களும் பாராட்டினார்கள். ஆனால், இதன் மூலம் கைத்தறியாளர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் இருக்காது என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்களுக்குச் செய்ய வேண்டிய நிரந்தரமான நன்மைகளில் ஒன்று அவர்களுக்கென வீடு கட்டும் திட்டத்தை விரைவுபடுத்துவதாகும். இது பற்றி தொழில் அமைச்சர் அவர்களும் ஆர்வமாக இருக்கிறார்கள். ஏதாவது சப்சிடி கொடுத்து, நெசவாளர்களுக்கு ஐநூறு, ஆயிரம் என்று

அவர்கள் ராஜிநாமா செய்யவில்லை என்றால் ராஜிநாமா செய்ய வைப்போம் அல்லது நீக்கி விடுவோம். ஆனால் அவர்களால் அப்படிச் செய்யமுடியாது. ஐந்தாண்டுக்காலத்திற்கு இந்த நாட்டை ஆளுங்கள் என்று மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், கட்சி மாறிச் செல்லும்போது எம். எல். ஏ. பதவியை ராஜிநாமா செய்துவிட்டு, இப்படிச் சொல்லியிருந்தால் பரவாயில்லை. அவர்தான் சொல்கிறார் மாரல் பைண்டிங் என்று. இப்படிப்பட்ட ஒருவருக்கு மாரல் பைண்டிங்கைப் பற்றி பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது? திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஏ.டி.எம்.கே.யில் போய் உட்கார்ந்து கொண்டு மாரல் பைண்டிங்கைப் பற்றி பேசுகிறார் என்றால் என்ன அர்த்தம்? அவருடைய பேச்சுக்கு அர்த்தமே இல்லை. இவைகளை எல்லாம் அரசியல் மேடைகளிலே பேசவேண்டும். இந்த மன்றத்தில் பேசக்கூடியவைகள் அல்ல இந்த வார்த்தைகள். இது ஒரு அரசியல் மேடையல்ல; ஆகவே, இங்கே அப்படிப் பேசுவது சரியல்ல.

(முற்பகல் 11–00)

பொதுவாக பட்ஜெட் என்று சொல்லும்போது, ஜனங்களிடத்திலே ஒரு கருத்து. "பட்ஜெட் மீட்டிங்குக்குப் போகிறீர்கள், என்ன வரி போடப்போகிறீர்களோ ?" என்று மாநில பட்ஜெட்டாக இருந்தாலும் சரி, மத்திய பட்ஜெட்டாக இருந்தாலும் சரி, ஒரு கஷ்டமான நிலையில் ஜனங்கள் பேசுகிறார்கள். அப்படிப்பட்ட சாதாரண, ஏழை எளிய ஜனங்கள் எல்லாம் மகிழ்ச்சி அடையும்படியாக இவ்வாண்டு டாக்டர் கலைஞர் அவர்கள் நமது மாநில பட்ஜெட்டை அளித்திருப்பதற்கு நான் அவரைப் பாராட்டுகிறேன். சோஷலிசத்தின் உயிர்நாடியாக இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது. நான் எத்தனையோ பட்ஜெட், எத்தனையோ இடங்களில் கேட்டிருக்கிறேன். அரசு ஊழியர்களுக்கு சம்பளத்தை உயர்த்துவார்கள். பென்ஷனை அளிப்பார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டிலேதான்—சாதாரணமாக கூலி வேலை செய்கிறவர்கள் கூட—அரசு ஊழியத்தில் இல்லாதவர்கள் கூட 30-வது ஆண்டு முதல் 55-வது ஆண்டு வரை மாதம் 10 ரூபாய் செலுத்தினால் போதும், அவர்களுடைய 55 வது வயது முதல் மாதம் 100 ரூபாய் பென்ஷன் அளிக்கிற புரட்சிகரமான திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக நான் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் ஒன்று எவ்வளவு நல்ல திட்டமாக இருந்தாலும் அதில் ஒன்றிரண்டு குறைகள் ஏற்பட்டு விடலாம். அப்படி இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டால் தம்முடைய 33 வது வயதில் இருந்து ஒருவர் 10 ரூபாய் கட்ட ஆரம்பித்தால், அவர் ஐந்தாறு ஆண்டுகளில் இறந்து விட்டார் என்றால் அதுவரை அவர் கட்டிய தொகையை மட்டும், வட்டியோடு அவரது குடும்பத்திற்குத் தந்துவிடுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு சர்க்கார் சிப்பந்தி மாதம் 10 ரூபாய் கட்டி வருகிறபோது இரண்டொரு ஆண்டுகளில் இறந்துவிட்டாலும் கூட, அவரது குடும்பத்திற்கு ரூபாய் 10 ஆயிரம் தருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல



நான் இங்கேயும் பத்தாயிரம் தரவேண்டுமென்று சொல்லாவிட்டாலும் 2,500 ரூபாய், 5,000 ரூபாய் என்ற அளவுக்காவது அவரது குடும்பத்திற்கும் கொடுப்பதுதான் நல்லதாக இருக்கும். ஆகவே டாக்டர் கலைஞர் அவர்கள் இதையும் பரிசிலனை செய்து, இந்தத் திட்டத்தில் இதுபோன்ற ஒரு ஏற்பாட்டினையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையில் 59 பொருள்களுக்கு ஒரு முனை விற்பனை வரியைக் கொண்டுவந்திருப்பதையும், 10 லட்சத்திற்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களுக்கு வரி விதிக்கப்படும் என்பதாகவும் சோஷலிச அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளது முற்றிலும் பயன்தரக்கூடிய ஒன்றாகும். இப்படிப் பார்க்கிறபோது இந்த அறிக்கை ஏழைகளுக்கு பல நல்ல சலுகைகளை அளிக்கிற திட்டமாகும்.

வேளாண்மையை எடுத்துக் கொண்டாலும் 115 கோடிக்குப் பல புதுத திட்டங்களைப் போட்டிருப்பதையும், மேலும் அதிகமான ஏக்கரா நிலம் சாகுபடியின் கீழ் வரும் என்று அறிவிக்கப்பட்டிருப்பதையும் நான் பாராட்டுகிறேன். இந்த ஆட்சி வருவதற்கு முன் எப்படி ஜனங்கள் அரிசிக்குத் தவித்தார்கள், வாரத்திற்கு 3 நாள் சாப்பிடு, 5 நாள் சாப்பிடு என்றெல்லாம் சொல்லப்பட்டது, மக்கள் அரிசிக்காக வேலைக்குக் கூடப் போகாமல் எப்படி நீண்ட க்யூவாக நின்றார்கள் என்பதை எல்லாம் நாம் அறிவோம். வேளாண்மைத்துறையில் இந்த அரசு வந்த பிறகு போட்டிருக்கிற பலவிதமான திட்டங்களின் காரணமாகத்தான் நம் மாநிலம் தன்னிறைவு பெற்றிருக்கிறது. அதற்காக நான் பெரிதும் இந்த அரசைப் பாராட்டுகிறேன். வேளாண்மை வளர்ச்சியை கருத்தில் கொண்டு மதுரை மாவட்டத்தில் விளவனூரில் அணை கட்டி, இராமநாதபுரத்திற்கு தண்ணீர் கொண்டு செல்ல இருப்பதைப் பாராட்டுகிறேன்.

அடுத்து, வெளிநாடுகளுக்குச் சென்று வருகிறவர்கள் எல்லாம் அங்கே ஆஸ்பத்திரிகள் எவ்வளவு சுத்தமாகவும், சத்தமின்றியும், நெருக்கடி இல்லாமல் இருக்கிறது என்பதைச் சொல்கிறார்கள். ஆனால், மதுரையைப் பொறுத்தவரை அங்கே ஆஸ்பத்திரியில் இருந்த இடநெருக்கடியை உணர்ந்து டி. வி. எஸ். கொடுத்த 5 லட்சம் நன்கொடையைக் கொண்டு மதுரை நகராட்சி கொடுத்த மனையில் புதிய கட்டிடம் கட்ட இருப்பதை நான் பாராட்டுகிறேன். மதுரை மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கைத்தறி விஷயமாக, நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த கடன் ஒரு கோடி ரூபாயை ரத்து செய்திருப்பதை பல அன்பர்களும் பாராட்டினார்கள். ஆனால், இதன் மூலம் கைத்தறியாளர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் இருக்காது என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்களுக்குச் செய்ய வேண்டிய நிரந்தரமான நன்மைகளில் ஒன்று அவர்களுக்கென வீடு கட்டும் திட்டத்தை விரைவுபடுத்துவதாகும். இது பற்றி தொழில் அமைச்சர் அவர்களும் ஆர்வமாக இருக்கிறார்கள். ஏதாவது சப்சிடி கொடுத்து, நெசவாளர்களுக்கு ஐநூறு, ஆயிரம் என்று

[திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்] [1974 மார்ச் 13

கொடுத்து, லாங்பேஸ்டு ப்ரோக்கிராமாகவாவது ((Long phased programme) அமைத்து அவர்களது வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடியாக முன்வந்தாக வேண்டும். நெசவாளர்களுக்கென கட்டப்படுகிற வீடு என்றால் அது ஒரு தனிப் பிரச்சினை—அவர்களுக்கு ஒரு அறை—பாவு நீள ஹால் அமைக்கப்படுவது மிகவும் முக்கியம். அந்த மாதிரி வீட்டுக்கு நகரத்தில் அவர்கள் 70, 80 என்று வாடகை கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, இது பற்றியும் உடனடியாக செயல் பட்டு, அவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் மொத்த நெசவாளர்களில் மூன்றில் ஒரு பங்கினர் தான் கூட்டுறவு சொஸைடியின் கீழ் வந்திருக்கிறார்கள். பாக்கி மூன்றில் இரண்டு பங்கினர் வெளியில்தான் இருக்கிறார்கள். வெளியில் உள்ளவர்களுக்கும் நூல் கிடைக்கும்படியாக—அங்கங்கே சென்டர்களை ஆரம்பித்து—விரைவில் ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டும். இது ஏனோ காலதாமதமாகிறது. இதில் ஏற்படுகிற காலதாமதத்தை தவிர்க்க வேண்டும். தவிர நம் மாநிலத்தில் உள்ள நெசவாளர்களுக்கு பம்பாயில் இருந்து பட்டு வந்தாக வேண்டியிருக்கிறது. அதில் உள்ள சங்கடங்களை நீக்கி, பட்டு நூல் அவர்களுக்குகு கிடைக்க தக்க மார்க்கத்தைக் கண்டாக வேண்டும் என்று தொழில் இலாக்கா அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மின் இணைப்புப்பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. நம்முடைய அன்றாட மின்விசைத் தேவை சராசரியாக 235 லட்சம் யூனிட் என்றால், நம்முடைய உற்பத்தி அளவு 196 இலட்சம் யூனிட்டுகள்தான். எனவே, நமது பற்றாக்குறை 39 இலட்சம் யூனிட்டுகளை அண்டை மாநிலங்களில் இருந்து அதிக விலைக்கே பெற்றாக வேண்டிய நிலையில் இருக்கிறோம். மேட்டூரிலும், தூத்துக்குடியிலும், நெய்வேலியிலும் நாம் துவக்க வேண்டும் என்று கோரியிருக்கிற அனல் மின் திட்டத்தை மத்திய அரசு கொண்டுவந்தாலேயே நம்முடைய பற்றாக்குறை நீங்கும். இன்றைக்கு நம்முடைய மாநிலத்தை எடுத்துக் கொண்டால் 206 நூற்பாலைகள் இருக்கின்றன. மொத்த நூல் உற்பத்தி 10 இலட்சம் பேல், நம்முடைய தேவை 5 லட்சம் பேல் தான். சிமிண்டை எடுத்துக்கொண்டால் 24 லட்சம் டன் இங்கே உற்பத்தியாகிறது. நம்முடைய தேவை 12 லட்சம் டன்தான். சர்க்கரை ஆலைகளை எடுத்துக் கொண்டால் 14 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. நமக்குத் தேவை முக்கால் லட்சம் டன்தான். நம்முடைய மாநிலத்திற்குத் தேவையானதை சப்ளை பூர்த்தி செய்துக் கொண்டு, மற்றவற்றை வெளியே அனுப்பிட நமக்கு அதிகாரம் இல்லை. இதைத்தான் நாம் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லி வருகிறோம்.

படித்தவர்களிடையே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வேலை கொடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன். பல பகுதி நேர ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக ஆக்க திட்டமிட்டிருப்பதையும் வரவேற்கிறேன். படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதைப் போலவே, படிக்காதவர்களுக்கும் வேலை



1974 மார்ச் 13] [திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்]

வாய்ப்பை ஏற்படுத்துவது மிக மிக முக்கியமாகும். அந்த அடிப்படையில் படிக்காதவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து, பால் பண்ணைகளில் பால் உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தின் அடிப்படையில் படிக்காதவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க இருப்பதை வரவேற்கிறேன். அதேபோல கால்நடைப் பண்ணைகளிலும் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை அதிகப்படுத்திக் கொடுத்திருப்பதை வரவேற்கிறேன்.

தவிர அங்கஹீனர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இருப்பதையும் வரவேற்கிறேன். முக்கியமாக ''மூகம் கரோதி வாசாலம் பங்கும் லங்கயதேகிரிம் யத் கிருபா தமஹம் வந்தே பரமானந்த மாதவம். என்பதாக ஊமைக்கு பேசும் திறமை கொடுப்பவர், கால் முடவனுக்கு மலையைத் தாண்டும் திறமை கொடுப்பவர் கடவுள் என்று சொல்லுவார்கள். இன்றைக்கு கடவுளைப் போல டாக்டர் கலைஞர் அவர்கள் இப்படிப்பட்ட அங்கஹீனர்களுக்கும் எல்லாம் உறுதுணையாக இருக்கும் வகையிலும், வாழ்வளிக்கும் வகையிலும் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரித்தளித்திருப்பதற்கு நன்றி கூறி, இதனை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

*திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றையதினம் இந்தியா பூராவிலும் ஒரு மாபெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருப்பதும், அந்தப் பொருளாதார நெருக்கடியின் வேகத்திலே சிக்கி, இன்றைக்கு எல்லா மாநிலங்களிலே இருக்கிற மக்களும் தவித்துக் கொண்டிருப்பதும், அதனால் ஒரு சில மாநிலங்களிலே பெரிய போராட்டங்கள் நடைபெற்றுவருவதும், நாமறிந்தவைகளாகும்.

இன்றைக்கு குஜராத் மாநிலத்தில் கடந்த இரண்டு மூன்று மாதங்களாகத் தொடர்ந்து மாபெரும் போராட்டத்தை மக்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள். போராட்டம் என்றால் சாதாரணக் கிளர்ச்சி என்று மட்டும் அல்லாமல், அங்குள்ள மக்கள் உணவுக்காகவும் இருக்கைக்காகவும்—அன்றாட தேவைகளுக்காகவும் போராட்டம் நடத்துகிறார்கள். ஆனால், அவர்கள் விடுக்கின்ற அந்தக் கோரிக்கைகளுக்குப் பதிலாக இன்றைக்கு அவர்கள் எதிரிலே அவர்கள் கேட்கிற பொருள்களை கொடுக்காமல், துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் அவர்கள் முன்னே நிறுத்திவைத்து, அவர்களுடைய கிளர்ச்சிகளுக்குப் பதில் தந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையிலேதான், மத்திய பட்ஜெட், மத்திய அரசாங்கத்தினால் ஒரு சில தினங்களுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்பட்டது. போராட்டம் நடைபெற்றுக் கொண்டு வருகிறது குஜராத்தில். விலைவாசிகள் இன்றைக்கு வேகமாக ஏறிவருகின்ற நிலையிலே மக்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய உயிரைக் கூடப் பயணம் வைத்து அன்றாட தேவைகளுக்காகக் குரலை எழுப்புகின்ற நேரத்தில், மத்திய

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 13

ஆட்சியினுடைய பட்ஜெட் வருகிறது. ஒரு பட்ஜெட், நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள் என்றால், அதனுடையப் பொருளாதார விளைவுகள் என்ன; அந்த நிதி நிலை அறிக்கையிலே சொல்லப்படுகிற முக்கியமான மாற்றங்களின் காரணத்தினால், விலைவாசிகளை அது எந்த அளவு பாதிக்கும் என்பதையெல்லாம் நினைவுபடுத்தித்தான், ஆராய்ந்துதான், பொருளாதாரச் சிக்கலினைத் தீர்க்கும் வகையிலே, சமர்ப்பிக்க வேண்டும். ஒருபுறத்திலே மக்கள் குரல் எழுப்பி வருகிறார்கள், வாழ்வது கடினமாக இருக்கிறது என்று. குரல் எழுப்புகின்ற அந்தக் குரலுக்குரியவர்களை துப்பாக்கிக்கும், பீரங்கிக்கும் இரையாக்கிவிட்டு, மத்திய அரசு ஒரு பட்ஜெட்டை சமர்ப்பித்தது. அதன் விளைவாக, இன்றைக்கு நாட்டிலே பல்வேறு பொருள்களின் விலை பன்மடங்கு உயர்ந்திருப்பதை நாம் பார்க்கிறோம்.

பெட்ரோலியப் பொருள்களை எடுத்துக்கொண்டாலும், இன்றைக்கு நாட்டிலே உணவுப் பொருள்களை எடுத்துக்கொண்டாலும், சாதாரண மக்கள் பிரயாணம் செய்கின்ற ரெயில்வே துறையை எடுத்துக்கொண்டாலும் அல்லது ரயிலிலே யாராவது நண்பர்கள் வருவார்கள் என்று உள்ளே சென்று வரவேற்பு கொடுப்பவர்களாக இருந்தாலும், எல்லோருக்கும் இன்றைக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை மத்திய பட்ஜெட் கொடுத்திருக்கிறது. 25 பைசாவாக இருந்த பிளாட்ஃபார்ம் டிக்கட் 50 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அத்தகைய பட்ஜெட் வந்தபிறகு, எந்த அளவுக்குச் சுமையைக் குறைக்க வேண்டும், இதனால் ஏற்பட்டிருக்கிற, பொருளாதார விளைவுகளினால் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிற மக்களை நாம் எவ்வாறு காப்பாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே ஒன்றை ஒன்று ஒத்துப் பார்த்து, விளைவுகளை ஆராய்ந்து பார்த்து, மக்களுக்கு நன்மை செய்கின்ற வகையிலே அல்லது ஏற்கனவே மற்றவர்களால் ஏற்படுத்தி விடப்பட்டிருக்கிற கடினங்களைக் குறைக்கின்ற வகையிலே எந்த வகையிலே எல்லாம் நாம் பட்ஜெட்டை சமர்ப்பித்தால், பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்கமுடியும் அல்லது சமாளிக்க முடியும் என்ற கருத்தின் அடிப்படையிலே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றைக்கு இந்த பட்ஜெட்டினை, இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இதிலே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், பல்வேறு திட்டங்களை மக்களுடைய முன்னேற்றத்திற்கான திட்டங்களை இந்த மாநிலம் வைத்திருக்கிறது; ஆனால் அந்தத் திட்டங்களை நிறைவேற்றக்கூடிய உரிமை, அவைகளுக்கு உரிமை வழங்கக்கூடிய அதிகாரம் மாநில அரசிடம் இல்லாமல் மத்திய அரசிடம் இருக்கிற காரணத்தினால், இன்றைக்குப் பல திட்டங்களை நாம் நிறைவேற்ற முடியவில்லை என்ற ஒரு சோகமான குரலை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தம்முடைய பட்ஜெட் உரையிலே உயர்த்தியிருக்கிறார்கள்.



1974 மார்ச் 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

ஆறாவது நிதிக் கமிஷனின் வாயிலாக, நாம் எதிர்பார்த்த அளவுக்கு மாநிலங்களுக்குக் குறிப்பாக, தமிழ் மாநிலத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அதன் காரணமாகவும், பல்வேறு திட்டங்களை நாம் குறைத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றோம், அல்லது விட்டுக் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கின்றோம் என்பதைக்கூட அவர்கள் இன்றைக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நாம் இன்றைக்குச் சொல்கிறோம் மாநில சுயாட்சி என்று. அதைப் பற்றி நேற்றையதினம்கூட இங்கே சர்ச்சை நடந்தது. மாநில சுயாட்சி என்பது, இந்திய ஐக்கியப்பாட்டிற்கு எந்தவகையிலும் குந்தகம் விளைவிக்கும் நோக்கத்தோடு எழுப்பப்பட்டது அல்ல என்பதை மாநில சுயாட்சியைப் பற்றிப் பேசக்கூடியவர்கள் பல்வேறு காலங்களில், பல மேடைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், நாம் பேசுகின்ற பேச்சுக்கள், நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு உதவிடும் வகையிலே இல்லாமல், மத்திய அரசு, தமிழ்நாடு சட்ட மன்றத்தில் பேசப்படுகின்ற பேச்சுக்களை வைத்துக்கொண்டே, தமிழ்நாடு சட்டமன்றத்திலேயே மத்திய அரசு நியாயம் செய்கின்றது, நீங்கள் தான் அநியாயமாகப் பழி போடுகிறீர்கள், என்ற அந்தப் பேச்சுக்களை விவாதத்திற்கு எடுத்துக்கொண்டு, நம்முடைய வாதத்தை எடுத்துச் சொல்கின்ற வகையிலே, அமைந்துவிடுமானால், நான் மெத்த வருத்தத்தோடு சொல்கிறேன். நாம் நம்முடைய தமிழ் மக்களுக்கு நியாயம் செய்தவர்களாக இங்கே இருக்கமாட்டோம், தமிழ் நாட்டு மக்களின் சார்பாக இந்த அவையிலே வீற்றிருக்கிறோம் அவர்களுடைய நன்மையைக் காப்பதற்காக என்று சொல்வதிலே அர்த்தம் இல்லாமல் போய்விடும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாநில சுயாட்சி எதற்காகத் தேவை? நாட்டிலே இருக்கிற பொருளாதாரத் திட்டங்களை, வரையறுக்கின்ற திட்டங்களை, வேண்டிய அளவிலே, வேண்டிய நேரத்திலே நிறைவேற்ற அதிகாரம் வேண்டும், மாநிலத் திட்டங்களுக்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்கு, நிதி உதவிகளைப் பெறுவதற்கு வாய்ப்புகளையும் அதிகாரங்களையும் பெற்றிடல் வேண்டும்; அந்த அதிகாரங்களைப் பெற்றவுடன், நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் போது இந்த நிதி நிலைகளை நாம் தீட்டுகின்ற திட்டங்களுக்கு ஒப்ப, அந்தத் திட்டங்களை நிறைவேற்றும் வகையிலே, நாம் நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தைப் படைத்திருக்க வேண்டும். அதற்காகத்தான் மாநில சுயாட்சி கேட்கப்படுகிறது. இன்றைக்கு எல்லா மாநிலங்களிலும் அந்தக் குரல் எழுப்பப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே மட்டும் அல்லாமல், வேறு எல்லா மாநிலங்களிலும் இன்றைக்கு அந்தக் குரல் எழுப்பப் பட்டிருக்கிறது.

கடந்த 2 வாரங்களுக்கு முன்னதாக, நான் "மெயில்" பத்திரிகையிலே ஒரு கட்டுரையைப் படித்தேன். பேராசிரியர் பிலஸ்ஸட் சிங் என்கிற ஒரு பொருளாதார நிபுணர் ஓர் அழகான கட்டுரையை எழுதியிருக்கிறார். இந்தத் திங்கள் 2-ந் தேதி மெயில் இதழிலே அது வெளியிடப்பட்டிருக்கிறது. அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள், இன்

றைக்கு மாநில சுயாட்சி என்பது வாஸ்தவத்திலே பொருளாதார சுயாட்சியைப்பற்றிக் கூறுவதாகும், நிதி சுயாட்சி, "ஃபிஸ்கல் அட்டானமி" என்று சொல்லக்கூடிய நிதிநிலை சுயாட்சியைக் கூறுவதாகும். மாநில சுயாட்சி என்பது பிரிவினை என்ற ஒரு வாதத்தினை எழுப்பி, நிதிநிலை சுயாட்சிக்காகவும், பொருளாதார சுயாட்சிக்காகவும் எழுப்பப்படுகின்ற கோரிக்கைகளை திசை திருப்புகின்ற முயற்சிகள் நடந்தால், அது கடைசியிலே இந்திய ஐக்கியத்திற்கு மாபெரும் குந்தகத்தை விளைவித்துவிடும் என்று அந்தப் பேராசிரியர் எச்சரித்திருக்கிறார். இன்றைக்கு நாம் வேண்டுவது, ஃபிஸ்கல் பாலிசி என்ற நிதிநிலை தயாரிக்கின்ற அதிகாரம் இந்த மாநிலத்திற்கு இருக்க வேண்டும். இந்த மாநிலத்திற்கு என்ன வேண்டுமோ அவைகளை நிறைவேற்ற அதிகாரம்.

தமிழ் மாநிலம் இந்த நாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாக இன்றைக்கு விளங்குகின்றது. ஏனென்றால், இந்த மாநிலத்திலேதான், முதன் முதலாக மாநிலத் திட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழ் மாநிலத்திற்கு மட்டுமல்லாமல், எல்லா மாநிலங்களிலும் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டாக வேண்டும். அப்படி அமைக்கப்பட்டால் தான் எங்கோ டெல்லியிலே உட்கார்ந்துகொண்டு—நாங்கள் கூடச் சொல்வோம், "டெல்லி தூர் அஸ்த்" என்று பாரசீக மொழியிலே சொல்வார்கள், சொல்வோம்—டெல்லி வெகு தூரத்திலே இருக்கிறது, டெல்லியை எதிர்பார்த்துக்கொண்டு இருந்தால் முடியாது, என்று. இது இப்பொழுது சொல்லப்படுவது அல்ல. பல நூறு ஆண்டுகளாக வழங்கப்பட்டு வருகிறது. டெல்லி தூர் அஸ்த், டெல்லி வெகு தூரத்திலே இருக்கிறது, டெல்லியை எதிர்நோக்கிக் கொண்டிருந்தால் காரியம் நடைபெறாது என்று அந்தப் பேராசிரியர் விளக்கமாகச் சொல்கிறார்கள்.

இந்த நாட்டிலே பொருளாதாரம் வளர்ச்சியுற வேண்டுமானால், ஒவ்வொரு மாநிலமும் தனது பொருளாதாரத் திட்டத்தைத் தீட்டி நிறைவேற்ற வேண்டுமானால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் பொருளாதாரத் திட்டங்களைத் தீட்டுகின்ற சுயாட்சி உரிமை கொடுக்கப்பட வேண்டும். அதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியாகப் பொருளாதாரத் திட்டங்களை வகுக்கின்ற ஸ்டேட் பிளானிங் கமிஷன்களை நியமிக்க வேண்டுமென்று அவர்கள் வாதிடுகிறார்கள். அதைத்தான் நாம் இங்கே சொல்கிறோம். ஆனால், இங்கே என்ன நடக்கிறது?

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் நம்முடைய திட்டங்களை வகுத்திருக்கிறோம். சென்ற ஐந்தாண்டுக் காலத்திற்கு என்ன திட்டங்களை வகுத்தோமோ, என்ன நிதியை ஒதுக்கீடு செய்தோமோ அதன் அடிப்படையில், வளர்ந்து வருகின்ற பொருளாதாரக் கட்டத்திலே நாம் கொஞ்சம் உயர்ந்த நிதி நிலையை 5 ஆண்டுகளுக்கு வகுத்தால் அதைக் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு சொன்னால் எப்படி நாம் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தம்முடைய உரையிலே கேட்டிருக்கிறார்கள்.





இதிலே எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் அதுமட்டுமல்ல, இன்றைக்கு ஒவ்வொரு மாநிலத்திலும் அமெரிக்கநாட்டிலே இருப்பதைப்போல ரீஜினல் ரிசர்வ் பாங்குகள் இருக்க வேண்டும். இப்பொழுது இந்தியா பூராவிற்குமாக ஒரே ஒரு ரிசர்வ் பாங்கைத்தான் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்தியா பூராவிற்குமாக மானிட்டரிபாலிசியை அவர்கள்தான் வகுக்கிறார்கள், இந்தியா பூராவிற்கும் கிரெடிட் பாலிசியை அவர்கள்தான் வகுக்கிறார்கள். ஏதோ ஒரு இடத்தில் உட்கார்ந்துகொண்டு இந்திய பூபாகத்திற்கு முழுவதற்குமுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து என்ன என்ன பகுதியிலே என்ன என்ன தேவை என்பதை அறிவிக்கிறது என்று தொ[illegible] ஒரு இடத்திலே உட்கார்ந்துகொண்டிருக்கிற ஒரு குழு ந[illegible] முழுவ[illegible]கும் அப்படி செய்யும் பொழுது அது நல்ல முறையிலே [illegible] என்று எதிர் பார்ப்பது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும் என்றுதான் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

**Autonomous reserve bank for every State and a separate financial unit should be there. We must have an autonomous body like the Regional Reserve Bank as we have in the United States.**

என்றுதான் அந்த ஆசிரியர் அவர்கள் சொல்கிறார்கள். இன்றைக்கு இந்த வாதத்தை முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை, இந்த மன்றத்திலே இருக்கிற மற்றவர்கள் சொல்லவில்லை. ஆனால் நாங்கள் தெளிவாகச் சொல்கிறோம். முஸ்லீம் லீக்கைப் பொறுத்தவரையிலே மாநில சுயாட்சி கேட்பது பிரிவினைக் கொள்கையை வலியுறுத்துவதற்காக என்று இருந்தால் அதை எதிர்ப்பதிலே நாங்கள்தான் முதலாக நிற்போம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன், ஆனால் மாநில சுயாட்சி கேட்பது பொருளாதார சுயாட்சிக்காக, மாநில சுயாட்சி கேட்பது தொழில் துறையிலே சுயாட்சிக்காக, மாநில சுயாட்சி கேட்பது கிரடிட் சுயாட்சிக்காக அல்லது பேங்க் சுயாட்சிக்காக என்று இருக்குமானால் அதை ஆதரிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம் . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், மாநில சுயாட்சிபற்றி ஆராய்வதற்காக போடப்பட்ட ராஜமன்னார் குழு அறிக்கையிலே கூட இப்படிப்பட்ட சஜ்ஜஷன் கிடையாதே, ஆகவே, உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொல்வது அவர்களுடைய சொந்த சஜ்ஜஷனா? அல்லது அரசாங்கத்திலேயிருந்து கேட்டிருக்கிறார்களே அந்த மாநில சுயாட்சியினுடைய சஜ்ஜஷனா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இன்னொரு உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று குறுக்கிட்டால் இந்த அவையே அதிர்ச்சிக்குள்ளாகிறது, பேசிய உறுப்பினர் ஏதோ அன்பார்லிமெண்டரியாக தவறாகப் பயன்படுத்திப் பேசிவிட்டார் என்ற முறையிலேதான் பாயின்ட்

ஆப் ஆர்டரை எழுப்பியிருக்கிறார்கள் என்று கருதி இந்த அவையும் அமைச்சர்களும் என்ன தவறு செய்துவிட்டார்களோ என்று அதிர்ச்சிக்குள்ளாகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து அப்படி ஒன்றும் இல்லாமல் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் மூலமாகக் கேட்கவேண்டியதைக் கேட்கிறார்கள். அப்படியென்றால் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்றுதான் எழுந்து கேட்க வேண்டும், அப்பொழுதுகூட பேசிக்கொண்டிருக்கின்ற உறுப்பினர் அதற்கு யீல்ட் பண்ணினால்தான், அதாவது அதற்கு இணக்கம் தெரிவித்தால்தான் அதற்காக இடம்கொடுத்து அவர் உட்கார்ந்துவிட்ட பிறகுதான் எழுப்பமுடியும். ஆகவே பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதற்குப் பதிலாக கிளாரிபிகேஷன் கேட்க வேண்டுமென்றால், அதற்காக பாயின் ஆப் கிளாரிபிகேஷன் என்று சொன்னால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : Let me explain what is the point of order பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது நம்முடைய விதி 83ஐ பார்த்தால் it must be about the business of the House at the moment என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே அந்த மோமண்டிலே என்ன நடந்துகொண்டிருக்கிறதோ அதைப்பற்றி ரெய்ஸ் பண்ணலாம் என்று இருக்கிறது. நாங்கள் எழுப்பிய பிறகு அது பாயின்ட் ஆப் ஆர்டரா அல்லது இல்லையா என்பதை சபாநாயகர் அவர்கள் சொல்லலாம். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி இன்பர்மேஷனோ அல்லது எக்ஸ்பளனேஷனோ கேட்கக் கூடாது என்று விதியிருக்கிறது. நான் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பியது இன்பர்மேஷனைக் கேட்கவோ அல்லது எக்ஸ்பளநேஷனைக் கேட்கவோ இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் ஒழுங்குப் பிரச்னை என்ற பொருளில்தானே அது வரும். அவர்கள் பேசியதிலே ஒழுங்குப் பிரச்னை எதுவும் வரவில்லை. ஆகவே பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்புவது சரியல்ல, நீங்கள் ஏதாவது அவர்களுடைய பேச்சிலே விளக்கம்பெற வேண்டுமானால் பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் என்று கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு துரை முருகன்) : அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு எம். எ. லத்தீப் : அவர்கள் ஒழுங்குப் பிரச்னை எழுப்ப வேண்டும் என்பதை மாத்திரம் கொண்டிருக்காமல் பேசுகின்ற பேச்சைத் தடைப்படுத்துவதற்கும் எழுப்பப்பட வேண்டும் என்பது அம்மையார் அவர்களுடைய வாதமாகும். என்னுடைய பேச்சின் வேகத்தைத் தடை செய்வதற்கு நீங்கள் எழுந்து நிற்கிறீர்கள். ஆனால் இந்த நாட்டிலே உயிரோட்டமாக ஓடிக்கொண்டு இருக்கின்ற எண்ணத்தின் வேகத்தை





தடைப்படுத்த வேண்டுமென்று நீங்கள் நின்றாலோ அல்லது உங்களைச் சேர்ந்தவர்கள் நின்றாலோ அதை நிறுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைத்தான் இன்றைக்கு குஜராத் மாநிலம் உங்களுக்கெல்லாம், எங்களுக்கெல்லாம் இந்த நாட்டிலேயுள்ள மக்களுக்கெல்லாம் ஒரு படிப்பினையாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கு நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நான் சொல்வது என் சொந்தக் கருத்தாக இருக்கலாம். அல்லது பொதுவான ஒரு எண்ணத்தின் பிரதிபலிப்பாக இருக்கலாம். இன்னொருவர் எண்ணத்தை நான் எடுத்துக் கொண்டிருக்கலாம். எண்ணம் என்பது சமயங்களிலே தானாக வருவதாக இருக்காலம் அல்லது எண்ணங்களோடு எண்ணங்கள் மோதும்போது பிறிதொரு எண்ணம் உருவாகலாம். நாட்டு மக்களிடத்திலே இன்றைக்கு இருக்கின்ற எண்ணம், மக்களுக்கு உண்ண உணவு வேண்டும், இருக்க இருக்கை வசதி வேண்டும், உடுக்க உடை பெறவேண்டும் எல்லோருக்கும் சம வாய்ப்புகள், சம அந்தஸ்துகள் அளிக்கப்பட வேண்டுமென்பதுதான். அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் மாநிலங்களுக்குத் திட்டமிடுகின்ற பொழுது அதிகமான அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்கின்ற எண்ணம் எழுகின்றது.

இந்த நிலையில் ஒரே இடத்திலே உட்கார்ந்துகொண்டு காரியங்களைச் செய்துவிட முடியும் என்று இல்லாமல், டிவிஷன் ஆப் லேபர் என்று சொல்வார்களே அந்த முறையிலே ஒவ்வொரு மாநிலத்தினுடைய தேவைகள் என்ன என்ன எந்த எந்தப் பகுதிகளுக்கு என்ன என்ன தேவைகள் என்று திட்டங்கள் தீட்டப் படுமானால் பயனுள்ளவையாக இருக்கும், அப்படித் திட்டங்கள் தீட்டக்கூடிய அதிகாரங்கள் இல்லாவிட்டால் இந்த நாடு நிச்சயமாக முன்னேறாது என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் ஒருமித்தக் கருத்தாக இன்றைக்கு இருக்கிறது. அந்தக் கருத்தைத் திசை திருப்புகின்ற முயற்சியிலே ஈடுபட்டு பிரிவினைவாதம் பேசப்படுகிறது என்று, அது உண்மையில்லை என்று தெரிந்திருந்தும் கூட விதண்டா வாதமாக சர்ச்சைகளைக் கிளப்புகிறார்கள். அப்படிப்பட்ட சர்ச்சையினால் ஏதாவது நன்மைகள் நாட்டிற்கு விளையுமானால் நான் கூட அப்படிப்பட்ட சர்ச்சைகளைக் கிளப்புவதற்குத் தயாராக இருக்கிறேன்.

ஒரு கருத்து ஒருவருக்குப் பிடிக்காததாக இருக்கலாம். ஒருவருக்குப் பிடித்தமாக இருக்கலாம், ஆனால் நாட்டிற்கு நன்மையா என்பதைத்தான் பார்க்க வேண்டும். எனக்குப் பிடிக்காத கருத்தாக இருந்தால் கூட நாட்டிற்கு நன்மை பயக்கின்ற கருத்தாக இருந்தால் நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே அவர்கள் எல்லாம் இந்தக் கருத்தைத் தங்களுக்குப் பிடிக்காத கருத்து என்று நினைத்தாலும் நாட்டு நன்மையைக் கருதி எனக்குப் பிடிக்காத கருத்தை நான் நாட்டு நன்மைகாகப் பிரச்சாரம் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று சொல்வார்களானால், மத்திய அரசு மாநிலங்களுக்குக் கஷ்டங்களை ஏற்படுத்துகின்றது என்ற நிதியமைச்சரின், முதலமைச்சரின் குரலுக்குப் பக்கத்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 13

துணையாக இருந்து அவர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்தால் தமிழ் நாட்டிற்கு அதிகமான அதிகாரங்களும், வசதிவாய்ப்புகளும் ஏற்படுத்தினுல்தான் நன்மைகள் விளையும். அப்படியில்லாமல் இது பிரிவினை வாதத்தினுடைய விளைவுதான் என்று எண்ணி உதாசீனப்படுத்தினுல் அவர்கள் இந்த நாட்டு மக்களுக்குப் பிரதிநிதிகளாக இருந்து கொண்டு இந்த நாட்டிற்கு, நாட்டு மக்களுக்கு, நன்மை செய்யவில்லை என்பதைத்தான் எடுத்துக்காட்டும்.

மாயையான எண்ணத்திலே ஒரு சுழற்சியிலே மக்கள் சிக்கிவிடலாம். அந்த நிலைமையில் உண்மை நிலைமை தெரிவது கஷ்டமாக இருக்கலாம், ஆனுல் அந்த சுழற்சி நீங்கும் போது, அந்த எண்ணங்கள் நீங்கும் போது, அந்தக் கருமேகங்கள் அகலும் போது சூரியனின் வெளிச்சம் தோன்றும், அந்த வெளிச்சத்திலே எல்லா அந்தகாரங்களும் அகன்று விடும் என்ற நிலை இந்த நாட்டிலே ஏற்படத்தான் போகிறது என்னைப் போன்றவர்களுக்கு ஒரு கொள்கை பிடிக்காலம்.

முஸ்லீம் லீகிலே இருக்கிற நான் ஆட்சிப் பீடத்தைப் பிடிக்க வேண்டுமென்று எண்ணினுல் அது முட்டாள்தனமாகும். சிறுபான்மையோர்களுக்கு என்று தேர்ந்தெடுக்கப்பட்டு சிறுபான்மையோர்களுடைய பிரதிநிதிகளாக இங்கே வந்திருக்கின்ற நாங்கள் அங்கே உட்கார வேண்டுமென்று நினைத்தால் அது பைத்தியக்காரத்தனம் ஆகும்.

[முற்பகல் 11-30]

அடுத்து ஆளுங்கட்சியாக வரப்போகிறவர்கள் என்று சொல்லிக்கொள் கிறவர்கள் நாம்தான் ஆட்சியமைக்கக்கூடியவர்கள் என்று மாற்று சர்க்கார் அமைக்கக்கூடிய வாய்ப்பிலே இருக்கக் கூடியவர்கள் மக்கள் செல்வாக்கை நாம் பெற்றிருக்கிறோம் என்று சொல்லக் கூடிய சிலர் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கூடாது என்று சொல்வதுதான் எனக்கு மிகவும் வேடிக்கையாகவும் விந்தையாகவும் இருக்கிறது. இதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் அம்மையார் அவர்களைக்கூடக் கேட்டுக் கொள்வேன், அம்மையார் அவர்களுடைய பேச்சிலே வலிவு இருப்பதை நான் அறிவேன், அவர்கள் வாதத்திறமையுள்ளவர்கள் என்பதை நான் அறிவேன். என்னுடைய சகோதரி, வழக்கறிஞராகப் பணியாற்றக்கூடிய அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குச் செல்வாக்கு இருக்கிறது என்ப தையும் நான் அறிந்தவன். ஆகவே, அவர்கள் சட்டமன்றங்களி லேயும், மக்கள் மன்றங்களிலேயும் மட்டும் வாதிடாமல், மத்திய சர்க்காரை ஆளுகின்ற கட்சியோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கக்கூடிய அவர்கள் இந்த மாநிலத்திற்காக வாதிட வேண்டியவர்களாகவும் இருக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழில் துறையைப்பற்றி நான் மெத்த அக்கறை கொண் டிருக்கிறேன். தொழில் துறையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டுமே என்ன்றுல், தொழில்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டால்தான் வே



1974 மார்ச் 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

வாய்ப்பு வசதிகளை நாம் அதிகமாக நாட்டிலே ஏற்படுத்த முடியும். இதற்குச் சரியானமுறையில் நம்முடைய திட்டங்கள் இருக்க வேண்டும் இந்தத் தொழில் துறையில் நமக்கு இருக்கும் அறிவு மேலும் வளர வேண்டும். இதை கண்ட்ரோல் செய்யவும், நம்முடைய பிடிப்பு, அதிகாரம் மேலும் பெற வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கையாகும்.

இன்றைக்கு நாட்டிலே எத்தனை தொழிற் சாலைகள் இருக்கின்றன. ஆனுல் அவைகளில் எத்தனை தொழிற்சாலைகள் க்ஷீண நிலையில் இருக்கின்றன. எத்தனை தொழிற்சாலைகள் பலகீனப்பட்டிருக்கின்றன என்று பார்க்க வேண்டும். அதற்குக் காரணம் என்ன! இந்த பலகீனங்களைப் போக்க வேண்டுமென்றுல் நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்று பார்ப்பதற்குத் தனித்துறை இல்லாவிட்டாலும் இப்போதிருக்கின்ற இண்டஸ்ரீஸ் டிபார்ட்மெண்ட்டை, இரண்டாகப் பிரிக்கவேண்டும். அந்த இரண்டு பிரிவுகளிலே ஒரு பிரிவு, ஏற்கெனவே இருக்கின்ற தொழிற்சாலைகளின் அடிப்படைகளை எப்படி வலுப்படுத்த வேண்டும். எப்படி விரிவடையச் செய்ய வேண்டும். ஏற்படுகின்ற குறைகளை எப்படி நிறைவுடையதாக மாற்ற வேண்டுமென்பதிலே மட்டும் கவனம் செலுத்த வேண்டும். இன்னொரு பிரிவு, "இண்டஸ்ட்ரியல் பொட்டன்ஷியாலிட்டிஸ்" இந்த நாட்டிலே எத்தனை தொழிற்சாலைகள் ஏற்படுத்த முடியும், ஏற்படுத்தக் கூடிய வசதி, வாய்ப்புகளைப் பெற்றிருக்கிறோம். எத்தனை தொழிற்சாலைகளை, எந்த வகையிலான தொழிற் சாலைகளை ஏற்படுத்தினுல் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை மேலும் அதிகமாகத் தர முடியும் என்பதிலே கவனம் செலுத்துவதற்காக ஏற்படுத்தப் பட வேண்டும். இவைகளையெல்லாம் ஒன்றுக வைத்து நாம் இன்றைக்குக் கவனித்ததால்தான் அதிகமாக வெற்றி பெற முடியவில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அது மட்டுமல்லாமல் இன்றைக்கு "இண்டஸ்ரியல் டி-சென்ட்ரலைசேஷன்" என்று சொல்கிறுர்கள், தொழிற் துறை பரவலாக்கப்பட வேண் வேண்டும் என்பதற்குக் பல காரணங்களைச் சொல்லலாம். நான் ஒரேயொரு உதாரணத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். வடஆற்காடு மாவட்டத்தைச் எடுத்துக் கொண்டால் ஒரு சில இடத்திலே நாம் "இண்டஸ்ட்ரியல் கான்சென்ட்ரேஷனை" அதிகமாக ஏற்படுத்தி விடுகிறோம். அதற்கான காரணங்களைக் கூறும்போழுது வாய்ப்பு இருக்கிறது, வசதி இருக்கிறது என்று சொல்கிறோம். வாய்ப்புகள், வசதிகள் இருக்கின்ற இடத்திலே தொழிற்சாலைகளை ஏற்படுத்தினுல் அது ஏதோ ஒரு பெரிய "அச்சீவ்மெண்ட்" என்று நான் சொல்ல மாட்டேன்.

ஆனுல், நம்முடைய திட்டங்களெல்லாம் நாட்டிலே வேலைவாய்ப்பு ஏற்படுத்த வேண்டும், பொருளாதாரத்தைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலே தான் இருக்க வேண்டுமே தவிர, வாய்ப்பு வசதிகளை வைத்துத்தான் ஒரு காரியத்தை நடத்த வேண்டுமென்றுல் அதற்குத் திட்டம் தேவையில்லை. ஆகவே, திட்டங்களை நிறைவேற்றும் பொழுது எந்தெந்தத் துறைகளில், எந்தெநதத இடத்தை தேர்ந்தெடுத்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 13

தால் ஒரு குறிப்பிட்ட இடத்திலே வேலைவாய்ப்பு அதிகமாகும், பொருளாதார மறுமலர்ச்சி ஏற்படும் என்ற நிலையை வைத்துத் திட்டங்கள் தீட்ட முயற்சியெடுக்க வேண்டும். அந்த வகையில் நம்முடைய தொழில் துறையை மாற்றியமைக்க வேண்டுமென்றுதான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைய தினம் உத்திரப்பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் எந்தெந்தத் தொழிற்சாலைகளை எங்கெங்கே ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டமேயில்லாமல் பல்வேறு மாவட்டங்களில், பல்வேறு ஊர்களில் கால்கோள் விழாக்கள் நடத்துகிறார்கள். ஒரு ஊரிலே 4 கோடிக்குத் திட்டம், இன்னொரு ஊரிலே 25 கோடிக்குத் திட்டம், இன்னொரு ஊரிலே 50 கோடிக்குத் திட்டம் என்று நடத்துகிறார்கள். இதற்கான "ஃபீசிபிலிட்டி சர்ட்டிபிகேட்" யார் கொடுத்தார்கள் ? யார் எஸ்டிமேட் வகுத்துக் கொடுத்தார்கள் ? அவர்களாகவே செய்துவிடக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அரசியல் நோக்கத்திற்காகக் கூடச் செய்கிறார்கள் என்றால் நாம் பொருளாதார நோக்கத்திற்காக அப்படி ஏன் செய்யக்கூடாது? இன்றைக்கு எல்லா மாவட்டங்களுக்கும், மாவட்டங்களிலுள்ள எல்லாப் பகுதிகளுக்கும் சம நிலையிலே உரிமை, சமநிலையிலே பங்கு கிடைக்கும் நிலையிலே தொழில்துறை மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளாக இருக்கிறது.

இதேமுறையிலே இன்றைக்கு "லேபர் பாலிசி" என்று வைத்திருக்கிறோம். தொழிலாளர்களுக்கு ஊதியங்களை உயர்த்திக் கொடுப்பதிலே எந்த ஆட்சேபத்தையும் நான் சொல்ல மாட்டேன். இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு ஊதியத்தை உயர்த்தித்தான் தர வேண்டும். ஆனால் ஒன்று கேட்கிறேன். சில தொழிற்சாலைகளில் "ஓவர் டைம்" என்று சொல்கிறார்கள், கேட்கிறார்கள். மாலை 5 மணி அளவில் வேலை செய்கிறார்கள், பிறகு இரவு 8 மணி அளவில் வேலை செய்தால் அதிகப்படியான அந்த 3 மணி நேரத்திற்கு ஓவர் டைம் என்று ஓவர் டைம் வேஜ், ஓவர்டைம் பேமெண்ட், காம்பென்சேஷன் என்று கொடுக்கிறார்கள். ஏன் அப்படிக் கொடுக்கிறார்கள் ? எந்தெந்த இடத்தில் வேலை அதிகமாக இருந்து ஆட்கள் குறைவாக இருக்கிறார்களோ அந்தந்த இடத்தில், எந்தெந்த இடத்தில் ஓவர் டைம் செய்தால்தான் அங்கேயுள்ள உற்பத்தியைப் பெருக்க முடியும் என்ற நிலை இருக்கிறதோ அந்தமாதிரி தொழிற்சாலைகளிலே அதிகமான ஆட்களை, விகிதாசாரப்படி கணக்கிட்டு அந்த அளவிற்கு அதிகமான வேலையாட்களைச் சேர்க்க வேண்டுமென்று கட்டாயமாகச் சட்டம் கொண்டுவர வேண்டும்.

போனஸ், மற்ற வசதிகளை நாம் தொழிலாளர்களுக்குக் கொடுக்கிறோம். ஆனால் தொழிலாளர்களுக்கு 10 ரூபாயை நாம் ஏற்றினால் அந்த ஏற்றத்தோடு இன்றைக்கு 100 ரூபாய் அளவிற்கு வாழ்க்கையில், செலவு அதிகமாகிறது. "ஃபிக்செட் இன்கம் க்ரூப்" என்று சொல்லப்படுகின்ற, குறிப்பிட்ட வருமானத்தை மட்டும் பெறக் கூடியவர்கள் நாட்டிலே எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை பிக்செட் இன்கமாகப் பெறக்கூடியவர்கள் தான் தெரிந்திருப்பார்கள். 10 ரூபாய் ஏற்றுகிறோம், ஆனால் விலையேற்றம்



1974 மார்ச் 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

எப்படியிருக்கிறது, பாலிலிருந்து பெட்ரோலியப் பொருட்கள் வரையில், சாதாரணமாக வீட்டிலே பயன்படுத்தக் கூடிய கெரசின் எண்ணெய் வரையில் ஒவ்வொரு பொருளிலும் விலையேற்றத்தைப் பார்க்கிறோம்.

"What is given by way of increment is neutralised by the price increase."

என்று சொல்லும் "நியூட்ரிலிசேஷன்" மட்டுமல்ல, அதைவிட அதிகமாக ஏற்றி இன்றைக்கு நாட்டிலே பெரிய சிக்கல் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, இத்தகைய முறைகளை மட்டும் கையாளாமல் விலைவாசி யேற்றத்தைத் தடுப்பதற்காக என்ன திட்டங்களை வகுக்க வேண்டும் என்று பார்க்க வேண்டும் என்றால் யார் கட்டுப்படுத்துவது?

நேற்றுகூட அம்மையார் அவர்கள் சொன்னார்கள், இங்கே இருக்கின்ற பொருள்களை நீங்கள் கட்டுப்படுத்தி வைக்கலாமே, இங்கேயிருக்கின்ற பொருள்களின் விலைகளை ஒரு கட்டுக்கோப்பிற்குள் வைத்திருக்கலாமே என்று அவர்கள் சொன்னார்கள். பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதிலே மட்டும் தமிழகம் தனித்த தமிழகமாக அம்மையார் அவர்களுக்குத் தெரிகிறது. இந்தியப் பொருளாதாரம் தமிழகத்திற்கு மட்டும் அல்ல. இந்த நாட்டின் சட்டப்படி வியாபாரம், வணிகம், பொருளாதார நடவடிக்கைகள், தொழில்கள் ஆகியவைகளை எல்லாம் யாரும் எந்த மாநிலத்திலேயும் செய்யலாம் என்ற அடிப்படையில் தான் நாம் வேலை செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, பொருள்களின் விலைகளைக் குறைக்கவும், பொருள்களின் விலைகளைக் கண்ட்ரோல் செய்யவும் அதிகாரம், வாய்ப்புகள் எல்லாம் மத்திய சர்க்காருக்குத்தான் இருக்கிறது. ரிசர்வ் பேங்குக்குத்தான் இருக்கிறது. அவர்கள் எங்கேயோ உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் ஆகவே தான் இந்தப் பிரச்னைகள் எழுகின்றன.

அருமை நண்பர் துரைமுருகன் அவர்கள் சொல்லியதைப்போல், மராட்டிய மாநிலத்திலே 85 சதவிகித வேலை வாய்ப்புக்கள் அங்கேயிருக்கின்ற மராட்டிய மக்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று, அம்மையார் அவர்கள் சேர்ந்துள்ள கட்சியினுடைய சர்க்கார் அங்கே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அவர்களுடைய எண்ணத்தை நான் குறை சொல்லவில்லை. மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மராட்டிய மக்கள் முன்னுக்கு வரவேண்டுமென்றுதான்..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : 30 நிமிஷங்கள் பேசியிருக்கிறீர்கள். 25 நிமிஷங்கள்தான் உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது.

திரு. எம். ஏ. லத்தீப் : 6 பேரிலே நான் 3-வது நபராகப் பேசுகிறேன். 5 பேர் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஒரு மணி நேரம் பேசினார்கள். நான் சிறுபான்மை மக்களின்........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரைமுருகன்) : நேரம் வேண்டுமென்று கேளுங்கள். அதற்காக சிறுபான்மை, பெரும்பான்மை பற்றி எடுக்க வேண்டாம். இன்னும் 15 பேர்கள் இருக்கிறார்கள். எனவே, சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : அவர்கள் திட்டங்களை இன்றைக்குச் செய்திருக்கிறார்கள் என்று நான் குறை சொல்லவில்லை. ஆனால் அதே திட்டத்தை இங்கே நாம் சொன்னால் பல மாச்சரியங்களையும், வேற்றுமைகளையும் உண்டாக்கும் வகையிலே பொறுப்புள்ளவர்கள்கூடப் பேசுகிறார்கள் என்பதை நினைத்துப் பார்த்தால் எங்களைப் போன்றவர்களுக்கு உண்மையாகவே வேதனை ஏற்படுகிறது.

எண்ணூரிலே நடந்ததைப் பற்றி அன்றையதினம் சொன்னார்கள். இரண்டு மொழி பேசுகின்ற மக்களுக்கிடையே உள்ள பிரச்சினை என்று சர்ச்சை செய்தார்கள். தயவு செய்து யாரும் இந்த அவையில் அந்த வகையில் பேசக்கூடாது என்று அவர்களுக்கு அன்பு வேண்டுகோள் விடுக்கிறேன். சட்டசபையில் பேசுகின்ற பேச்சு தமிழ்நாடு முழுவதும் பரவுகிறது. திட்டமிட்டுப் பேசுவதாக இருந்தால் நிச்சயமாகப் பேசலாம். உரிமை இருக்கிறது. ஆனால் பேசும்போது பொறுமை இருக்க வேண்டும்; பொறுப்பு இருக்க வேண்டும். எனக்கும் வேண்டும்.

எண்ணூரில் நானே சென்று பார்த்தேன். விசாரணை செய்து பார்த்த போது இரு மொழி பேசுகின்றவர்களுக்கிடையே ஏற்பட்ட பிரச்சினை அல்ல இரு தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினை என்று இரண்டு சங்கங்களைச் சேர்ந்தவர்களும் என்னிடம் சொன்னார்கள் இருந்தபோதிலும் இரவு 11 மணிக்கு முதலமைச்சர் அவர்களுடைய உதவியாளரோடு தொடர்பு கொண்டு அவர்கள் வாயிலாக ஐ.ஜி. அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். இரவு 11 மணிக்கு மேல் முதல் அமைச்சர் அவர்கள் வெளியிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் ஐ.ஜி. அவர்களுக்குக் கட்டளையிட்டு டி.ஐ.ஜி., எஸ்.பி., ஆகியோர் அந்த இடத்திற்குச் சென்றார்கள். கலெக்டர் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டு அவர்களும் சமாதானப் பேச்சு நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அந்த சமாதானப் பேச்சில் எல்லோரும் ஒருமித்து, நடந்ததற்கு வருத்தம் தெரிவித்து சகோதரர்களாக இருப்போம் என்று கையெழுத்திட்டுத் தந்தார்கள். பொதுவாக அந்த விஷயத்தைப் பற்றிப் பேச வேண்டுமே தவிர, இந்த மொழிக்காரர்கள் என்ற வகையில் நம்முடைய சகோதரர்கள் பேசக்கூடாது. ஆகையால் அந்த வகையில் அணுக வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, திராவிட முன்னேற்றக் கழக அரசை நாங்கள் ஏன் ஆதரிக்கிறோம்? எப்போது பேச எழுந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறீர்களே என்று சொல்லுகிறார்கள். நம்முடைய சட்டமன்றப் பேச்சுக்களைத் தயவு செய்து எடுத்துப் பாருங்கள். என்



கெங்கு இடித்துக் கூற வேண்டுமோ அங்கெல்லாம் அப்படியே கூறியிருக்கிறோம். எங்கெங்கு பாராட்ட வேண்டுமோ அங்கெல்லாம் நிச்சயமாகப் பாராட்டத் தவறியதில்லை.

இன்றைக்கு நான் தெளிவாகச் சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தை நாங்கள் ஏன் ஆதரிக்கிறோம்? நம்முடைய பண்டித ஜவஹர்லால் நேருவின் காலத்திலிருந்து, காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சி இருந்த காலத்திலிருந்து, பிரகாசம் காலத்தில், ஓமந்தூர் ரெட்டியார் காலத்தில், குமாரசாமி ராஜா காலத்தில், சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரி காலத்தில், மதிப்பிற்குரிய பெருந்தலைவர் காமராஜர், பக்தவத்சலம் காலத்தில் நாங்கள் விடுத்த வேண்டுகோள் ஒன்றே ஒன்றுதான். சிறுபான்மை சமுதாயத்தின் ஏகபோகப் பிரதிநிதித்வ ஸ்தாபனம் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் ஒன்றுதான். இந்தச் சட்டமன்றத்தில் பல்வேறு காலங்களில் ஆதரவு தந்திருக்கிறோம். ரெட்டியாருக்கு ஆதரவு தந்திருக்கிறோம். சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி அவர்கள் இந்த அவையில் நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்த நேரத்தில் முஸ்லிம் லீக் ஆதரவு இல்லாமல் வெற்றி பெறமுடியாது என்ற நிலையில் முஸ்லீம் லீகை அங்கீகரிக்காவிட்டாலும் ஆதரவு தந்திருக்கிறோம். சிறுபான்மையாக வாழ்கின்ற எங்களுக்கு உங்களுடைய பெரும்பான்மை மக்களுடைய நல்லெண்ணமும், அங்கீகாரமும் வேண்டுமென்று கேட்டோம். அந்த வேண்டுகோளை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த நாட்டில் இருந்த ஒரே ஒரு அரசியல்வாதி, இந்த நாட்டின் பெருமகன், மூத்த மகன், தமிழ்த் தாயின் தலைசிறந்த மகன், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மட்டுந்தான் இந்தச் சமுதாயத்தை, முஸ்லீம் லீகை ஏற்றுக் கொண்டார்கள். அண்ணா அவர்களுடைய பெயரை வைத்துக் கொண்டிருப்பவர்கள் இந்தச் சிறுபான்மைச் சமூகத்தாருக்கு முஸ்லீம் லீக் தவிர வேறொரு ஸ்தாபனமும் இருக்கிறது என்று இந்தச் சட்டமன்றத்தில் பதித்துக் கொள்ள முன்வருவார்களேயானால், இந்தச் சமுதாயத்தைப் பிளவு செய்ய முன்வருவார்களானால் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி இந்த நாட்டில் முயற்சித்தோர் மிகப் பலர். அன்றையதினம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பாராளுமன்றத்தில் சொன்னார்கள். (மணி அடிக்கப்பட்டது). இன்னும் பத்து நிமிஷத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : ஏற்கனவே 40 நிமிட நேரம் ஆகிவிட்டது. இனிமேல் நேரம் கொடுக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : இன்னும் 3 நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். உங்களுடைய குறுக்கீட்டாலேயே 5 நிமிஷம் போய்விட்டது.

அன்றைக்குச் சொன்னார்கள். சட்டத்திலே இடம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் முஸ்லீம் லீகை இந்த நாட்டில் அனுமதிக்க மாட்டேன் என்று சொன்னார்கள்.,

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 13

" Whetever may be the law, whatever may be the constitutional law, I am not bothered about the Constitution provision. I shall see that the Muslim League is annihilated in the country and it is crushed and its corpse is sent to the Museum."
என்று முழங்கினர்கள். பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு அன்றைக்கு காயிதே மில்லத் அவர்கள் பாராளுமன்றத்தில் பதில் சொன்னர்கள்.

' Mr. Speaker, Sir,

I am rather amused at the unusual abuse of Pandit Jawaharlal Nehru. I submit to you, Sir, that our Hon'ble Prime Minister will be no more . This Ismail will be no more, Hon. Prime Minister will be no more and for that matter pardon me, Mr Speaker. I say this with a sense of responsibility at my command that you, the Presiding Officer will be no more and the hon. Members will be no more, but the Muslim League will be there for ever and ever and no force on earth can crush the Muslim League.'

Today, the Muslim League is a living force.

நான் அதைத்தான் இன்றைக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படு கிறேன். இன்றைக்கு இந்தச் சிறுபான்மை சமுதாயதத்திலே பிளவுகளை ஏற்படுத்த யாராவது முயற்சித்தால் நாங்கள் அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் ஒன்றைச் சொல்லுகிறேன். எங்களுக்குக் கட்சி தான் முக்கியம். அவர்கள் சொல்லுகிறார்கள் ஆளும் கட்சிக்கு ஒத்துப் போவதாக. பண்டித நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் ஆகியோர் முடிசூடா மன்னர்களாக இருந்த காலத்திலேயே காயிதே மில்லத் அவர் கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். இந்தச் சபையில் இருந்த அத்தனை முதலமைச்சர்கள் காலத்திலும் எதிர்க்கட்சித் தலைவராக வீற் றிருந்தார்கள்.

இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரிக்கிறோம் என்றால் பட்டம் பதவிகளுக்காக அல்ல. அவர்களுக்குப் பயந்தும் அல்ல. பயப்படுபவர்கள் நாங்கள் அல்ல. உயிரைச் சாதாரணமாக நினைத்து மானத்தையும், கொள்கையையும் பெரிதாக மதிக்கிற மறக்குலத்து மக்கள் நாங்கள். எங்கள் கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டோம். அண்ணா அவர்களின் உணர்ச்சிக்கு, அண்ணா அவர்களின் அன்புக்கு, அண்ணா அவர்களின் பண்புக்கு, அண்ணா அவர்களின் சகோதரத்திற்கு, அண்ணா அவர்களின் பெருந்தன்மைக்குத்தான் நாங்கள் ஆதரவு தந்தோம். அந்தப் பெருந்தன்மை இருக்கிற வரையில் இவர்களுக்கு ஆதரவு தரு வோம. நாங்கள் யாருக்கும் கட்டுப்பட்டவர்கள் அல்ல. எங்களுடைய அரசியல் கொள்கையை வகுக்க எங்களுக்குத் தெரியும். ஆகவே,



1974 மார்ச் 13] [திரு. எம். ஏ. லத்தீப்]

தயவு செய்து இந்தச் சமுதாயத்தைப் பிளவு படுத்துகிற முயற்சியில் என்னுடைய நண்பர்கள் ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நாம் வெற்றியிலே அகங்காரத்தைக் கொள்ளக் கூடாது. வெற்றியிலே நிதானத்தை இழந்து விடக்கூடாது. வெற்றியிலே அன்பை யும், பண்பையும், பெருந்தன்மையையும் பெற வேண்டும். தோல்வி வந்தால் துவண்டு விடாமல், தோல்வி வந்தாலும் மானம் காக்கப்பட வேண்டும். கொள்கை ஏற்றம் பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு, நிதானத்துடனும், அடக்கத்துடனும், பெருந்தன்மையுடனும் தோல்வியை ஏற்றுக்கொண்டு தோல்வியைக் கண்டு அஞ்சாமல் கொள்கையின் பாதை யிலே நடைபோடுவதுதான் விவேகமானது.

இன்றைக்குக் கூண்டுக் கிளிகளாக வருணிக்கப்பட்டவர்கள், நினைவில் கொள்ள வேண்டும். மக்கள் கூண்டுக் கிளிகளாக இருக்கலாம். ஆனால் பயிர்களை அழிக்கின்ற வெட்டுக் கிளிகளாக இருக்கக்கூடாது. இன்றைக்கு முஸ்லீம் லீக் உங்களுக்குச் சுண்டைக்காயாகத் தெரிகிறது. அதைச் சாப்பிடுவது வயிற்றுக்கு நல்லது. சுண்டைக்காயாக இருக்கலாம். ஆனால் யாருடைய அரசியல் சதுரங்கத்திலும் பகடைக் காய்களாக இருக்க மாட்டோம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பல நல்ல அம்சங்கள் இருப்பதால் ஆதரித்து அமர்கிறேன்.

திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற வரவு-செலவுத் திட்ட விவாதத்திலே கலந்து கொண்டு என்னுடைய ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க முன் வருகிறேன்.

வருகிற ஆண்டுக்கு வரவு 473 கோடி என்று மதிப்பிட்டு, செலவு 483 கோடி என்ற அளவுக்கு வரையறுத்து இந்த வரவு செலவை விளக்கி விவரமான அறிக்கையை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம் கையில் தந்திருக்கிறார்கள்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் வேளாண்மைத் துறை, தொழில் துறை, கல்வித் துறை, மருத்துவத் துறை இதுபோன்ற ஏனைய துறைகளுக்கு வேண்டிய அளவிற்கு நிதி ஒதுக்கி இந்தத் திட்டங்கள் மூலம் நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்காக எத்தனை எத்தனையோ திட்டங்கள் இதில் உருவாகியிருப்பதைப் பார்க்கின்றோம், அப்படிப் பார்க்கிறபோது நாம் நினைக்கிற அளவிற்கு மத்திய அரசு நமக்கு ஆதரவாக இருக்கிறதா அல்லது நமது திட்டங்களுக்குத் தடையாக இருக்கிறதா என்பதை எடுத்துச் சொல்லி நாம் கேட்கிற பல காரியங்களிலே தாமதம் ஏற்படுவதால் நாம் செய்ய நினைக்கிற காரியங்கள் தாமதப்பட்டு அதன் மூலம் இந்த நாட்டு மக்கள் வளர்ச்சி, நாட்டு வளர்ச்சி பாதிக்கப் படும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. கே. பி. கந்தசாமி] [1974 மார்ச் 13

குறிப்பாக, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதில் ஏற்படு கிற தாமதம் அதன் மூலம் அங்கு துவங்க இருக்கிற ஆயிரம் மெகாவாட் மின்சார நிலையம் ஏற்படுவதில் இருக்கிற தாமதத்தைச் சுட்டிக்காட்டி இப்படிப்பட்ட காரியங்களில் மத்திய அரசு தாமதம் காட்டக்கூடாது என் பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அனைத்து இந்திய மட்டத்தில் பொருளாதாரம் குமுறிக்கொண்டிருக்கிறது என்பதை ஆணித்தரமாக வெகு அழகாக அவர்கள் இந்த உரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நெருக்கடிக்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால், எவ்வளவோ காரணங்கள் இருந்தாலும்கூட, குறிப்பாகச் சொல்லப் போனால் நாட்டில் உள்ள தட்டுப்பாடு, எந்தத் துறையினை எடுத்துக் கொண்டாலும் நாட்டில் உள்ள பற்றுக்குறைதான் இதற்குக் காரணம் என்பதைத் தெளிவாகச் சொல்ல முடியும். இந்தப் பற்றுக்குறை எப்படி ஏற்படுகிறது, அதற்குக் காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் மத்திய அரசு அவ்வப்போது எடுக்க வேண்டிய முடிவுகளைத் தாமதமின்றி எடுத்திருக்குமானால் பல்வேறு துறைகளில் இந்தப் பற்றுக்குறை இருக்கவே முடியாது.

குறிப்பாக, தமிழ்நாட்டில் மின்சாரப் பற்றுக்குறை இருக்கிறது என்று சொன்னால் எத்தனை எத்தனையோ திட்டங்கள் செயல்பட வேண்டியதற் கான அனுமதி தருவதில் தாமதம் இருக்கிறது. அந்தத் தாமதத்தைத் தவிர்த்து கேட்கிறபோது அனுமதி கொடுக்கப்பட்டிருக்குமானால் நிச்சயமாக இந்தப் பற்றுக்குறை இருக்க முடியாது. இந்த மாநிலத்தில் உற்பத்தி யைப் பெருக்குவதில் எத்தனை எத்தனையோ தடங்கல்கள் உள்ளன. எந்த ஒரு தத்துவமானாலும் சரி, எந்த ஒரு தத்துவத்தின் அடிப்படையில் உண்டாகும் வழிமுறைகளானாலும் சரி, எந்த ஒரு இயக்கமானாலும் சரி, உற்பத்தியைப் பெருக்குவதில் தடை இருக்குமானால் அது நாட்டு முன் னேற்றத்திற்குத் தடையாகத் தான் இருக்கும். அதை ஒரு தீய சக்தி என்றே நினைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் பற்றி ஒரு பிரச்னை எழுப்பப் பட்டது. திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசுகிறபோது இப்படிப்பட்ட ஒரு கப்பல் போக்குவரத்துக் கழகத்தை எப்படி நடத்த முடியும். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி அது சென்ட்ரல் சப்ஜெக்ட்டில் அல்லவா இருக்கிறது—கன்கரண்ட் லிஸ்ட், ஸ்டேட் லிஸ்ட் என்றெல்லாம் இல்லையா.. ஆகவே ஒரு மாநிலம் அப்படிப்பட்ட ஒரு போக்குவரத்துக் கழகத்தை நடத்தமுடியுமா என்று ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். சப்ஜெக்ட் யாருடையதாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஒரு சப்ஜெக்ட் என்றால் அதை யார் டீல் செய்வது என்ற ஒன்றுதானே தவிர அந்த சப்ஜெக்ட் அவர்களின் அதிகாரத்தின் கீழ் வருகிறது என்ற காரணத்தினால் மற்ற வர்கள் யாரும் அதை இயக்க முடியாது என்ற அளவில் இல்லை.

அதாவது, சாதாரணமாக இண்டஸ்ட்ரீஸ் சென்ட்ரல் லிஸ்டில் இருக் கிறது. ஆனால் இண்டஸ்ட்ரீஸ் சென்ட்ரல் லிஸ்டில் இருப்பதன் காரணத் தால் தனிப்பட்ட ஒருவர் அல்லது தமிழகம் ஒரு தொழிலையும் ஆரம்பிக்க முடியாது என்பதல்ல. அதேபோல்தான் இந்த ஷிப்பிங்க்கும். தமிழக



1974 மார்ச் 13] [திரு. கே. பி. கந்தசாமி]

அரசு நிச்சயமாக அந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி நடத்த வழி இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கழகத்தினைத் துவக்கி நடத்த முன் வந்துள்ளதற்காக அரசுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI**: Sir, on a point of clarification. The hon. Member has refererd to my speech..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர்—(திரு. துரை முருகன்): அவர்கள் "ஈல்ட்" செய்தால் கேளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர்கள் ஈல்ட் செய்கிறார்கள். நான் சொன்னது என்னவென்றால் கப்பல் போக்குவரத்துக் கழகமே இங்கு ஆரம்பிக்கக்கூடாது என்று சொல்லவில்லை. ஷிப்பிங் சப்ஜெட் சென்ட்ரல் லிஸ்டில் இருக்கிறது என்றுதான் சொன்னேன். ஆரம்பிக்கக்கூடாது என்று தடை சொல்லவில்லை. அதற்கெல்லாம் போய் உத்தரவு வாங்கி வரத் தெரிகிறதே மத்திய அரசிடமிருந்து உங்களுக்கு பெருமை, ஆர்வம், கப்பல் விட்டுப் பார்க்க ஆசையாக இருக்கிறது. அதற்கெல்லாம் போய் உத்தரவு வாங்கி வரத் தெரிகிறதே, ஆனால் காவேரி திட்டம் போன்ற திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் செய்யவில்லையே, செய்ய வில்லையே என்று இங்கே ஒத்திகை பார்க்கிறீர்களே என்றுதான்—**A new Corporation which you are going to start now.** அதே மாதிரி மற்ற சப்ஜெக்ட்களிலும் ஆர்வம் காட்டுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஷிப்பிங் என்பது சென்ட்ரல் சப்ஜெக்ட். ஆனால் ஷிப்பிங் கம்பெனி ஏற்படுத்துவதற்கு ஒரு தனி நபர் கூட ஏற்படுத்தலாம். ஆக, தனி நபர்கள் ஏற்படுத்து வதைப்போல் நம் மாநில அரசும் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கு உரிமை உண்டு. அந்த சப்ஜெக்டை டீல் செய்வது மத்திய அரசு. அது சென்ட்ரல் லிஸ்டில் இருக்கிறது. பொதுவாக கப்பல் போக்குவரத்து பொறுத்தவரையில் நாம் எந்த அளவிற்குப் பொருள்களை ஏற்றுமதி இறக்கு மதி செய்யவேண்டும் என்பதைப் பார்க்கும்போது இன்று போதுமான அளவிற்கு நம்மிடம் கப்பல்கள் கிடையாது. ஆகவே, மாரிடைம் ஸ்டேட்ஸ், இந்தியாவிலுள்ள கடலோரப் பகுதிகளிலுள்ள மாநிலங்கள் கப்பல் போக்குவரத்துக் கழகங்களை ஆரம்பிக்க அனுமதி தேவை என்று போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டில் வற்புறுத்தியதற்கு ஒப்ப நாம் ஆரம்பித்திருக்கிறோம். இதற்கு அனுமதி அவர்களாக தந்ததல்ல. நாமாக ஆரம்பித்திருக்கிறோம்.

திரு. கே. பி. கந்தசாமி: கப்பல் போக்குவரத்துக் கழகம் போன்ற எத் தனை எத்தனையோ கழகங்கள் அமைக்கப்பட வேண்டும். இந்த நாட்டு மக்களின் நன்மைக்கு அப்படிப்பட்ட கழகங்கள் தேவையாக இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு கழகத்தினை அமைக்க இருப்பதற்காக மாநில அரசை நான் பாராட்டுகிறேன். இந்தக் கழகம் எந்த நோக்கத்தோடு துவக் கப்பட இருக்கிறது என்றால்........

[திரு. கே. பி. கந்தசாமி] [1974 மார்ச் 13

கடந்த ஆண்டு இந்த மாநிலத்தில் மின்சார பற்றுக்குறை ஏற்பட்டது. அப்போது நமக்கு வேண்டிய நிலக்கரி இந்த மாநிலத்திற்கு வந்து சேரமுடியவில்லை. ரெயில்வே வாகன்ஸ் தட்டுபபாடு என்ற காரணத்தினால் குறித்த காலத்தில் நிலக்கரி வந்து சேரமுடியவில்லை என்ற காரணத்திற்காக கப்பல் மூலம் நிலக்கரி கொண்டு வர முயற்சி நடந்தது. கப்பலில் கூட நினைத்த நேரத்தில் நிலக்கரி கொண்டுவர முடியாத ஒரு சூழ்நிலை இருந்தது. ஆகவே இப்படிப்பட்ட ஒரு கழகத்தைத் துவங்கினால் நம் நிலக்கரி பற்றுகுறை நீங்கும் என்று இப்படிப்பட்ட ஒரு கழகத்தைத் துவக்க நம் அரசுக்கு ஒரு எண்ணம் ஏற்பட்டது.

இங்கு நேற்றுப் பேசிய திரு. தங்கமணி அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இது பிரிவினைப் பிரச்சாரத்திற்கு வழிவகுக்கும் என்று. தமிழ்நாடு என்று சொன்னவுடனே பிரிவினை என்றுதான் சொல்கிறார்கள். இதில் என்ன பிரிவினைப் பிரச்சாரம் என்று பார்க்கவேண்டும். இப்படிப்பட்டதொரு கழகம் அமைப்பதால், வட மாநிலங்களில் இருந்து நமக்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டு வருவதற்கும் அந்த நிலக்கரியை இங்குள்ள அனல் மின்சார நிலையங்களுக்கு மட்டுமின்றி தனியார்கள் கூட பயன்படுத்தக் கூடிய முறையிலே இருக்கவேண்டும். சென்ட்ரல் பட்ஜட்டில் கூடச் சொன்னார்கள் கம்பெனிகள் தொழிற்சாலைகள் எரிக்கிற ஆயிலுக்குப் பதிலாக நிலக்கரியைப் பயன்படுத்துவார்களானால் பல சலுகைகள் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். கொண்டுவரப்படுகிற நிலக்கரி இங்குள்ள அனல் மின் நிலையங்களுக்கு மட்டுமல்லாமல் தனியார் தொழிற்சாலைகளுக்கும் உதவும் படி இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12–00]

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் சிலவற்றை சொல்ல விரும்புகிறேன். இந்த வரவு-செலவு திட்டத்தில் எத்தனையோ திட்டங்கள் போடப்பட்டு இருப்பதைப் பார்க்கிறேன். ஏறத்தாழ 725 சிறுபாசன திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட திட்டங் களில் ஒன்றுதான் என்னுடைய தொகுதியில் இருக்கும் சடையனேரி கால்வாய்த் திட்டம். அந்தத் திட்டத்திற்கு அனுமதி தந்து கடந்த ஆண்டில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது அந்தத் திட்டத்தை துவக்கி வைத்தார்கள். அந்தத் திட்டத்தின் மூலமாக கீழே இருக்கும் விவசாயிகளுக்குத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் என்று அ. தி. மு. க. உறுப்பினர் எட்மண்ட் அவர்கள் பிரச்னை கிளப்பியதாகக் கேள்விப்பட்டேன். அவர்களுக்கு நிச்சயமாகத் தெரியும், அப்படிப்பட்ட சூழ்நிலை வராது என்று. ஏனென்றால், எப்போது உபரி தண்ணீர் வருகிறதோ, அப்போது தான் சடையனேரி கால்வாய் திட்டத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்று எழுதப்பட்டிருக்கிறது. அதை மீறி எதுவும் நடக்காது. ஆகவே, உறுப்பினர் அவர்கள் அச்சம் கொள்ளத் தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதை மனதில் வைத்துக் கொண்டுதான் அமைச்சர் அவர்களும் அது பரிசீலிக்கப்படும் என்று



1974 மார்ச் 13] [திரு. கே. பி. கந்தசாமி]

பதில் கூறினார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அந்தத் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற, அந்தக் காரியங்கள் விரைவில் நடக்க உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் மணப்பாடு என்ற ஊரில் ஒரு பனைப் பொருள் கழகம் இருக்கிறது. அங்கே செய்யப்படும் பொருள்கள் பாரீஸ், லண்டன் போன்ற இடங்களுக்கு அனுப்பப்படுகிறது. அங்கேயுள்ள மக்கள் இவற்றை விரும்பி வாங்கும் அளவுக்கு அந்தப் பொருட்கள் செய்யப் படுகின்றன. அந்தக் கழகம் ரூ. 25,000 மானியம் கேட்டு இருக்கிறது. அதைத் தொழில் அமைச்சர் அவர்கள் கொடுக்கவேண்டுமென்று வலி யுறுத்தி இத்தனை நேரம் இந்த அவையில் பேச அனுமதியளித்த தலைவரவர்களுக்கு நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. மா. வெ. கரிவேங்கடம்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே மாண்புமிகு கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை இந்த அவை முன்னால் வைக்க ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில்—நான் 1962-முதல் 1967 வரையில் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்திருக்கிறேன். இப்போது ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிறேன்—எதிர்க் கட்சித் தரப்பில் எந்தக் கட்சியில் உள்ளவர்களாக இருந்தாலும் இந்த நிதிநிலை அறிக்கை யில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டங்கள், அரசால் அளிக்கப் பட்டிருக்கும் சலுகைகள், நடைமுறைத் திட்டங்கள், கொள்கைகள் ஆகிய வற்றைப்பற்றி நல்லமுறையில் விமர்சனம் செய்தார்களா என்றால் நிச்சய மாக யாரும் செய்யவில்லை. அதை விடுத்து, ஏதோ வெளி அரசியலை இங்கே எடுத்து வந்து அங்கே தோல்வி, இங்கே தோல்வி, ஆகவே, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்க முதல்வர் அவர்களுக்கு அருகதை கிடையாது—அருகதை இருக்கிறது என்று தெரிந்தும்—என்று சொன்னார் களே, தவிர இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி நியாயமான விமர்சனம் எதிர்கட்சிகள் செய்யமுடியாத காரணத்தால், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாது.

இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கும் நல்ல பல கருத்துக்களை ஆளும் கட்சியில் இருப்பவர்களும், எதிர்க்கட்சியில் இருக்கிற நல்ல உள்ளம் கொண்டவர்களும் வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் இராமநாதபுரம், கோவை, தர்மபுரி, தஞ்சை ஆகிய மாவட் டங்களில் "மாவட்ட வளர்ச்சிக் கழகம்" அமைக்கப்படும் என்ற கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். அதற்காக மாநில அரசின் பங்காக ரூ. 2 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கித் தந்து இருக்கும் இந்த நேரத்தில் அந்த மாவட்டத்திற்குத் தேவையான வளர்ச்சிப் பணிகளை சீராகவும், விரைவாகவும் நிறைவேற்றவும் அதற்கான நிதி ஆதாரங்களை மாவட்ட அளவிலேயே வரிவிதிப்புத் தவிர்த்த முறைகள் வாயிலாகத் தேடிக்கொள்ளவும் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

கோவை, தஞ்சை மாவட்டங்களைப்போல் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்கள் இல்லை. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களை எடுத்துக் கொண்டால் அவைகள் இரண்டும் மிகமிகப் பின்தங்கிய மாவட்டம். தஞ்சை மாவட்டம் வேளாண்மையில் சிறப்புப் பெற்று இருக்கிறது. கோவை மாவட்டம் வேளாண்மையில் மட்டுமல்ல, தொழில் துறையிலும் முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. அந்த மாவட்டங்கள் நிதிநிலை ஆதாரங்களைத் தேடுவதற்கு முற்பட்டால் எந்த அளவுக்குத் தேட முடியும் என்பதைப் பார்க்கலாம். ஆனால் இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் அத்தகைய நிலை இல்லை.

ஆகவே, அந்த மாவட்டங்கள் மாவட்ட அளவிலேயே நிதி ஆதாரங்களைத் திரட்டுவது என்பது மிகவும் கடினமான காரியமாகும். ஆகவே, அவற்றில் மாவட்ட வளர்ச்சிக் கழகம் நிதி ஆதாரங்களைத் திரட்ட ஆரம்பித்தால் வெற்றி கிடைக்குமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயத் துறையானாலும் சரி, கல்வித் துறையானாலும் சரி, எல்லாத் துறைகளிலும் அந்த மாவட்டங்கள் பிற்போக்கான நிலையில் இருக்கின்றன. நமது முதலமைச்சர் அவர்கள் இந்த மாவட்டங்கள் பிற்போக்கான மாவட்டங்கள் என்று மத்திய அரசோடு போராடி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 2 கோடி ரூபாய் பெற்று வந்தார்கள்.

ஆனால் இப்போது நான்கு மாவட்டங்களுக்கும் சேர்த்து 2 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களோடு இதையும் இணைத்து அவைகளுக்குச் சமமாக இந்த மாவட்டங்களைப் பார்க்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா மாவட்டங்களுக்கும் சமமாக இந்த மாவட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னால், அந்த மாவட்டங்களில் பொருளாதார, தொழில் இயல் நிபுணர்களைக்கொண்ட குழுக்களை அமைத்து, அவர்கள் அந்த மாவட்டங்களில் சுற்றிப் பார்த்து, அந்த மாவட்டங்கள் முன்னுக்கு வரவேண்டுமானால் எந்தெந்தத் திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று பார்த்து, அந்த முறையில் ஒரு மாஸ்டர் பிளான் தயாரித்து, அதற்கு ஒரு 5 ஆண்டு, 10 ஆண்டு காலக் கெடு வைத்து, அதற்குள் முடித்து விடவேண்டுமென்று கூறி, அந்த வகையில் அந்த மாவட்டங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்றுதான் நீலகிரி மாவட்டமும் பிற்போக்கான மாவட்டம், அதற்கும் தனி மாஸ்டர் பிளான் தயாரித்து மற்ற மாவட்டங்களுக்கு இணையாக, சமமாக ஆக்கத் திட்டம் தீட்ட வேண்டும். அந்த நிபுணர்கள் கொடுக்கும் திட்டத்தை சிறப்புத் திட்டமாக ஏற்று நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் 1962-லிருந்து 67 வரை எதிர்க்கட்சித் தரப்பிலிருந்த நேரத்தில், ஆளும் கட்சித் தரப்பில் இருந்தவர்கள் எத்தனை சதவிகிதம் வேளாண்மைக்காக செலவழித்தார்கள் என்று கணக்கு எடுத்துப் பார்த்தேன். எப்படிக் கணக்கு எடுத்துப் பார்த்தாலும் 2-3 சதவிகிதத்திற்கு மேல் அவர்கள் வேளாண்மைக்கு ஒதுக்கியதாக இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 68·81 கோடி ரூபாய்





ஒதுக்கியிருக்கிறார்கள். இது ஏறத்தாழ 17 விழுக்காடு வருகிறது. அந்த அளவுக்கு வேளாண்மை முன்னேற்றத்தில் கருத்து கொண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலே தான் அதிகப் பணம் இந்தத் தலைப்பில் ஒதுக்கப்படுகிறது. அதன் விளைவாகத் தான் நம்முடைய மாநிலம் உணவுத் துறையில் தன்னிறைவு பெற்று இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், ஆந்திரா, மராட்டியம், மைசூர், குஜராத் போன்ற மாநிலங்களுக்கும் நாம் உணவு தான்யம் வழங்குகிறோம். ஆகவே, "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்" என்ற வள்ளுவரின் பொன்மொழிக்கிணங்க நம் அரசு நடந்து வருகிறது என்று சொன்னால் மிகையாகாது.

அடுத்தாற்போல் சமூகப் பாதுகாப்புத் திட்டம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரையில் அகில இந்தியாவிலும், எந்த மாநிலத்திலும், எந்த நிதி அமைச்சருக்கும், எந்த முதலமைச்சருக்கும், தோன்றாத ஒரு நல்ல எண்ணம் நமது அரசுக்கு, நமது முதல்வருக்குத் தோன்றியிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. ஒய்வு பெற்றவர்கள் அரசு ஊழியத்தில், அல்லது வேறு தொழில் நிறுவனங்களில் இருந்தால், அவர்கள் 3/4 பங்கு அல்லது வேறு விகிதத்தில் ஓய்வூதியம் பெற்று வந்தார்கள். ஆனால் எந்த ஊழியத்திலும் நிலையாக இல்லாத சாதாரணக் குடிமகனுக்கு அந்த நிலை இல்லை. அவர்களுக்கு வயதான காலத்தில் உதவி செய்யும் வகையில் ஒரு ஓய்வூதியத் திட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒருவன் திங்கள்தோறும் ரூ. 10 கொடுத்து வந்தால், 55 வயதானவுடன் அது ரூ. 3,000 வருகிறது. ஆனால், அவனுக்கு 55 வயது ஆனவுடன் ரூ. 100 திங்கள்தோறும் தருவதற்கு அரசு உத்தரவாதமளிக்கிறது.

ஒரு பழமொழி சொல்வார்கள். பிள்ளை இல்லாதவன் அண்ணன் பிள்ளையை நம்ப வேண்டாம், தென்னம் பிள்ளையை நம்பலாம் என்று ஒரு பழமொழி உண்டு. இப்பொழுது தென்னம் பிள்ளையை நம்ப வேண்டியதில்லை, டாக்டர் கலைஞர் அரசுப் பிள்ளையை நம்பலாம். மாதம் ரூ. 10 தந்தால் 55 வயதுக்குப் பின்னால் ரூ. 100 என்ற சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சிறப்புத் திட்டம், ஒரு சிறப்பு அம்சம்.

பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஒரே ஒரு முக்கியமான பிரச்னையை எங்களுடைய மாவட்டத்தைப்பற்றிய பிரச்னையை அரசு தீவிரமாக கவனித்து உடனடியாக செயல்பட வேண்டும். அந்தப் பிரச்னையைப் பற்றிக் கூறி எனது உரையை முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். நமது அரசைப் பொறுத்தவரையில் 1973-74, 1974-75-ம் ஆண்டுகளுக்கு ஒரு ஆண்டுக்கு, கிராமப் பாதைகளை நெடுஞ்சாலையோடு இணைக்க வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாக வைத்து,

1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் உள்ள பாதைகளை நெடுஞ்சாலையோடு இணைக்க வேண்டும் என்பது அரசின் கொள்கை என்ற அடிப்படையில் ரூ. 3 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள்.

ஆனால், இந்தத் திட்டம் தர்மபுரி மாவட்டத்தில் செயல்பட்டதா என்று கேட்டால், இல்லை. அதைப்போலத் தான் இராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்பட்டதா என்று கேட்டால், இல்லை. ஏனென்று கேட்டால், இந்த மாவட்டம் வரட்சியான மாவட்டம், வளம் இல்லாத மாவட்டம், பிற்போக்கான மாவட்டம். இந்த மாவட்டத்தில் மக்கள் பரவலாக இருக்கிறார்கள். ஸ்பார்ஸ்லி பாபுலேடட், திக்லி பாபுலேடட் இல்லை. நெரிசலாக இல்லை. ஆகவே, 1,500 மக்கள் தொகை என்று வைத்திருப்பது இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் சரி, இராமநாதபுரம் இமாவட்டமாக இருந்தாலும் சரி, தர்மபுரி மாவட்டமாக இருந்தாலும் சரி, நீலகிரி மாவட்டமாக இருந்தாலும் சரி, இந்த மாவட்டங்களுக்கு 750 என்கின்ற அளவுக்கு வைத்தால் தான் இந்தத் திட்டம் செயல்படும். இல்லாவிட்டால், இந்த மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயல்படாது.

வளர்ச்சி அதிகமாக உள்ள மாவட்டங்களில், அதிகமாக மக்கள் தொகை உள்ள மாவட்டங்களில் இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல்படும். அதே நேரத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 3 கோடி என்றாலும், தர்மபுரி மாவட்டத்திற்கு ரூ. 5 லட்சம் அளவுக்குக் கூட இந்தத் திட்டத்தினால் பலன் கிடைக்கவில்லை. காரணம், நான் ஏற்கனவே கூறியிருப்பதைப்போல மக்கள் பரவலாக இருக்கிறார்கள். நெரிசலாக இல்லை. திக்லி பாபு லேடெட் ஆக இல்லை, ஸ்பார்ஸ்லி பாபுலேடெட் ஆக இருக்கிறது. ஆகவே, இதை 750 ஆகக் குறைக்க வேண்டும் என்று நாங்கள் கோரிக்கை விடுத்த நேரத்தில் அப்பொழுதிருந்த மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்களும், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. இராசாராம் அவர்களும் எங்களுக்கு என்ன பதில் தந்தார்கள் என்றால், இந்தத் திட்டம் தங்கள் கையில் இல்லை, மத்திய அரசின் வாயிலாகச் செயல் படுகிறது, மத்திய அரசுக்கு எழுதுகிறோம், என்று சொல்லி இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 750 அல்லது 1,000 என்று குறைத்தால்தான் இந்தத் திட்டம் செயல்பட முடியும் என்பதை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் அப்படி ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்கு எழுதியது என்ன ஆயிற்று என்பது தெரியவில்லை.

ஆகவே, இந்த நேரத்தில் இந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 750 அல்லது 1,000 என்கின்ற அளவுக்கு மத்திய அரசுக்கு எழுதி, அந்த விதியை கொஞ்சம் தளர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை நம்முடைய அமைச்சர் அவை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதே நேரத்தில் என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இன்னொரு விஷயத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



சின்னாறு என்ற நீர்த்தேக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதனுடைய ஆரம்ப மதிப்பீடு ரூ. 107 லட்சம், இன்றைக்கு அதற்கு செலவாவது ரூ. 170 லட்சம் லட்சம். அந்த சின்னாற்றுக்குச் செல்ல வேண்டிய மென் அண்டு மெடீரியல்ஸ், ஆட்களும் பொருள்களும் மாரண்ட் அல்லி சின்னாறு வழியில் அத்திமுட்லு வழியாக செல்ல வேண்டும். குறுக்கே 3, 4 மைல்களுக்கு வெள்ளம் வந்துவிடுகிறது. ஆகவே, மாரண்ட் அல்லி சின்னாறு வழியில் அத்திமுட்லுக்கு அருகில் ஒரு மேம்பாலம் கட்ட வேண்டும். ரூ. 3 லட்சம் செலவு செய்து அந்த மேம்பாலம் கட்டாத காரணத்தினால் ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே முடிய வேண்டிய திட்டம் இன்னும் முடியவில்லை. எனவே அன்று ரூ. 107 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது இன்று ரூ. 170 லட்சம் செலவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அருள்கூர்ந்து சிந்தித்து ரூ. 3 லட்சம் செலவில் அந்த மேம்பாலத்தைக் கட்டிக்கொடுத்து வெள்ளம் வந்தாலும் போக்கு வரத்து இருக்கிற அளவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற வேண்டு கோளை நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு விடுத்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஆன் ஏ பாயின்ட் ஆப் ஆர்டர் நம்முடைய மன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் பேசிய பிறகு எதிர்க் கட்சி உறுப்பினர் பேச வைப்பது என்பதை வழக்கமாகக் கொண் டிருக்கிறோம். அதைத் தான் நடைமுறையில் வைத்திருக்கிறோம் ஆனால், இன்றையதினம் தொடர்ந்து ஆளும் கட்சி உறுப்பினர்களே பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டு, இறுதியிலே எதிர்க்கட்சியினர்களின் பெயர்கள் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இது முறை தானா பத்திரிகைகளில் செய்திகள் வரக்கூடாது என்பதற்காக இந்த ஏற்பா செய்யப்பட்டிருக்கிறதா? இனிமேல் எந்த முறையைப் பின்பற்ற இருக் கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்): இப்பொழுத ஆளும் கட்சி உறுப்பினர்கள் திரு. கந்தசாமி அவர்களும், திரு. க வேங்கடம் அவர்களும் பேசினார்கள். இப்பொழுது திருமதி ஜோதி அம்மாள் பேசப் போகிறார்கள். பிறகு ஆளும் கட்சி உறுப்பினர்கள் அடுத்து நீங்கள் பேசப்போகிறீர்கள். இப்படி வரிசையாக மாறி மாறி தான் பேசுவதற்கு உறுப்பினர்களும் அழைக்கப்படுகிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஏற்கனவே திருமதி பழ யம்மாள் பேசினார்கள். பிறகும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் தா பேசினார். எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினருக்கு வாய்ப்பு அளிக்க படவில்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனியாக நேரம் ஒதுக்குவது என்ற முறை இல்லை. கட்சிகளுக்கு என்று நேரம் ஒதுக்கப்படுகிறது. ஆளும் கட்சிக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேர பங்கிடப்படுகிற வகையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் குறைந்த நேர

தான் பேசுகிறார்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் நீண்ட நேரம் பேசி, குறைந்த எண்ணிக்கையுள்ள உறுப்பினர்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்கிறார்கள். அதற்குச் சமமாக குறைந்த நேரம் எடுத்துக் கொண்டு ஆளும் கட்சி உறுப்பினர்கள் இரண்டு இரண்டு பேர்கள் பேசு கிறார்கள். ஆகவே, நேரம் குறைவு தான்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஆளும் கட்சியினர் ஒருவர் பேசிய பிறகு எதிர்க்கட்சி உறுப்பினரை பேசவிட்டுவிட்டு, என் திருப்பி ஆளும் கட்சியினருக்கு அந்த நேரத்தை கொடுக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆளும் கட்சிக்கு ஒதுக்கப் பட்டிருக்கிற மொத்த நேரத்தில் ஏராளமான அங்கத்தினர்கள் ஆளும் கட்சியின் சார்பிலே பேசவேண்டியிருப்பதால், குறைந்த நேரத்தை எடுத்துக் கொண்டு பல பேர் பேசுகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர்களும், அடுத்த நிலையிலே உள்ளவர்களும் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டு பேசுகிறார்கள். ஆளும் கட்சிக்கு நேரம் பங்கிடப்படும் பொழுது குறைந்த நேரத்தில் இரண்டு பேர் பேசுகிறார்கள். அப்படியில்லை என்றால், கடைசியில் 15 பேர்கள் சேர்ந்தார்போல் பேசவேண்டி வரும்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, 1974–75-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை ஒட்டி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிற இந்த அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களையும் கூற விரும்புகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டும். காரணம், துவக்கத்தி லேயே கடமை எப்படி ஆற்ற வேண்டும் என்று வள்ளுவர் திருக் குறளில் கூறியதைச் சொல்லி, எப்படி கடமை ஆற்றவேண்டும் என்று கூறியதற்கு இணங்க இந்த அரசு கடமையாற்றிடும் என்பதை எடுத்துக் கூறி, அதற்குப் பிறகு அறிக்கையை ஆரம்பித்திருக்கிறார்கள்.

குறிப்பாக, எல்லா அங்கத்தினர்களும் விலைவாசி உயர்வு, மற்றும் இந்த மாகாணத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கிற நிதி குறைக்கப் பட்டிருக்கிறது என்பதைப்பற்றியெல்லாம் எடுத்துக் கூறினார்கள். சில மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால் பசுமைப் புரட்சியின் காரணமாக அதிகப்படியான உணவை நாம் உற்பத்தி செய்திருக்கி றோம் என்று பெருமைப்படுகிற வகையிலே அமைந்திருக்கிறது. உற்பத்தி அதிகப்படியாக இருந்தாலும் கூட, மக்களுக்கு உணவு கிடைக்கின்ற தன்மையில் எவ்வாறு உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்ந் திருக்கிறது என்பதைக் கூறுகின்றபொழுது மத்திய அரசுதான் இதற்குக் காரணமாக இருக்கிறது என்றும் இந்த நிலை நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மத்திய அரசாங்கத்தைச் சுட்டிக்காட்டி ஓரளவுக்கு விலைவாசி உயர் வுக்கு அது காரணமாக இருக்கிறது என்று கூறப்பட்டாலும், பதுக்கல் காரணமாகவும், பண வீக்கத்தின் காரணமாகவும் ஏற்கனவே சமயத்தில் கூரம்; எண்ணெய் மற்றும் விவசாயத்திற்கு வேண்டிய சாதனங்கள்





தக்க முறையிலே கிடைக்கவில்லை என்ற ஒரு குறைபாட்டின் காரணமாக இப்படி விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று கூறுவதிலே நான் என்னு டைய கருத்தை கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாகாண அரசினிடத்தில் இருக்கக்கூடிய சலுகைகளையும், அவர்களுக்கு இருக்கக் கூடிய அதிகாரத்தையும் வைத்து இவர்களே தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுக்கக்கூடிய உணவுப் பொருள்களின் விலையைக் குறைப்பதிலும் பதுக்கல்காரர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதிலும் அதிக அக்கறை செலுத்தவேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு உரிய நிதி மத்திய அரசாங் கத்தினால் ஒதுக்கப்படவில்லை என்று இந்த நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அது மிகவும் வருந்தத்தக்கதுதான். இருந்தாலும் நாம் இங்கே உற்பத்திச் செய்யக் கூடிய உணவுப் பொருட்கள் மற்ற மாகாணங்களுக்கும் கொடுக்கப்படுகின்றன. இங்கே உற்பத்திச் செய்யப் படுகின்ற உணவுப் பொருள், மற்றும் பல பொருட்கள் மத்திய அரசாங் கத்தின் மூலமாக மற்ற மாகாணங்களுக்கு விநியோகம் செய்யப்படு கின்றன. இதைப் பார்க்கும்போது நமக்குத் தக்க அளவிலே அவர்கள் நிதி கொடுக்காத காரணம் எதுவாய் இருந்தாலும் நாம் அவர்களிடத்தில் ஒரு கட்சியின் சார்பாக எடுத்துக் கூறாமல், தமிழ்நாட்டு மக்களுக்கு உணவு, உடை, இருப்பதற்கு வீடு ஆகியவை கிடைப்பதற்கு தடை யில்லாமல் நிதி உதவி வேண்டுமென்று கேட்க வேண்டும்.

நம்முடைய மாநிலம் ஒரு உபரி மாநிலமாக இருந்தாலும் கூட நமக்குப் போதிய அளவிலே உதவி கொடுக்க முடியாததற்கு காரணம் என்ன என்பதை "பொலிட்டிக்கல் மோட்டிவ்வில்" கொண்டுவராமல் அதற்கானப் பரிகாரத்தை எடுத்துக் கூற வேண்டும். கட்சிக் கண்ணோட்டத் தோடு தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்படுகின்ற வகையிலே அவர்கள் நமக்குக் கொடுக்க வேண்டிய நிதியைக் குறைத்திருப்பார்களேயானால், அதை நான் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப் பாசன திட்டங்கள் எல்லாம் இந்த அறிக்கை யிலே கூறப்பட்டிருக்கின்றன. நமக்கு முக்கியமாகத் தேவைப்படுவது உணவு. உணவுப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குப் போதுமான அளவு தண்ணீர் வேண்டும். இந்தத் தண்ணீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நிலத் தின் கீழ் இருக்கும் நீரைப் கண்டுபிடித்து பாசன வசதி, மக்களுக்குத் தண்ணீர் வசதி செய்வதற்காக "கிரவுண்ட் வாட்டர் ரீசர்ச் இன்ஸ்டிடியூட்" என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தினார்கள். அதைப்பற்றி இந்த அறிக்கை யில் ஒன்றும் சொல்லவில்லை. இந்த அமைப்பு 1970-ம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் அத னுடைய பலன் என்ன என்பது நமக்குத் தெரியவில்லை. அதற்குத் துரித நடவடிக்கை எடுத்து, சீக்கிரமாகத் தண்ணீர் கிடைக்க ஆவன செய்ய அரசு முன்வர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இருப்பது காவேரி நீர்ப் பிரச்சனை. இந்த காவேரி நீர் பற்றி 1924-ம் ஆண்டு செய்துக் கொண்ட ஒப்பந்தம் 1974-ல் முடிவடைகிறது என்று நினைக்கிறேன். ஆகையால் அதற்கு முன்பாக அந்தப் பிரச்சனைக்கு ஒரு "பாக்ட் ஃபைண்டிங் கமிட்டி" அமைத்து, அந்தக் கமிட்டியின் அறிக்கை மத்திய அரசாங்கத்தின் பாசன-மின்சார அமைச்சகத்திடம் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதனுடைய ரிப்போர்ட் என்ன என்பதை இந்த அறிக்கையில் கூறியிருக்க வேண்டும். இந்த அறிக்கையில் கூறப்படாதது ஏமாற்றமாக இருக்கிறது. காவேரி நீர் பிரச்சனையை நாம் எடுத்துக் கொண்டு, ஓரளவு தீர்வு காண வேண்டும் என்றும், அதற்கு ஆவன செய்ய வேண்டியது இந்த மாகாண அரசின் பொறுப்பாகும் என்றும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டுக்கு என்று மற்றொரு பல்கலைக் கழகம் ஆரம்பிக்கவேண்டுமென்று அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பல கல்லூரிகள் தோன்றிய பிறகு ஒரு யூனிவர்சிட்டி அடிப்படையில் இருப்பதை விட, இன்னொரு யூனிவர்சிட்டி வருவது மிகவும் அவசியமாகும். இதை யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷனிடம் வலியுறுத்திக் கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் தேவையைக் கூறி, எப்படியாவது இங்கே மற்றொரு யூனிவர்சிட்டி ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு வசதியைப் பொறுத்தமட்டில் காவலர்களுக்கு வீட்டு வசதிக்காக 54 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது காவலர்களுக்கு ஆண்டு தோறும் வீடு கட்டுகின்ற திட்டத்தை நாம் ஒவ்வொரு நிதி நிலை அறிக்கையிலும் பார்த்துவருகிறோம். மண்ணடியில் இருக்கிற காவலர் வீடுகள் என்றோ எப்போதோ வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் கட்டப்பட்டவை. இன்றைக்கும் அந்த வீடுகளைப் புதுப்பிக்கின்ற நிலை இல்லை. புதுப்பிக்க வேண்டும்; இல்லையென்றால் மாற்றி அமைத்து அல்லது வேறு இடங்களிலே கட்டிக் கொடுக்க அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த ஆண்டிலாவது அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று ஒரு வீட்டுவசதி வாரியத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இதைச் சென்ற முறை நான் "வெகிமெண்ட்டாக" எதிர்த்து இருக்கிறேன். இப்போதும் அதே நிலைதான்; என் நிலையில் மாற்றம் இல்லை. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு அரிசன நல அமைச்சரவர்கள் இங்கே கேள்வி நேரத்தில் பதில் கூறும்போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு உயர் நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டபோது, இந்த அரசுக்கு அரிசனங்களைப் பொறுத்தவரையிலே தனிப்பட்ட பள்ளியை அமைத்து, அது அரிசனங்களுடைய பள்ளி என்று வைக்க விரும்பவில்லை; அவர்கள் எல்லோருடனும் சம நிலையில் இருக்க வேண்டுமென்ற காரணத்தினால் ஜாதியின் பெயரால் பள்ளி வைக்கக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால் இப்போது ஒரு வாரியம் அந்தப் பெயரிலே வந்திருக்கிறது என்றால் அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.





தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், தாழ்த்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று அவர்களை தாழ்த்திக்கொண்டே போவதை நான் வெகிமெண்டாக எதிர்க்கிறேன். தாழ்த்தப்பட்டவர்கள் தனியாக இருக்கக்கூடாது; அவர்கள் முன்னேற வேண்டும் (அரிசன நல அமைச்சர் அவைக்குள் வருகிறார்). அரிசன் வெல்பேர் அமைச்சரவர்களும் வந்துவிட்டார்கள். அரிசனங்களுக்கு குறைந்த செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே அரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்டிலிருந்து கட்டிக் கொடுத்த வீடுகள் எப்படி இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். இப்போது விலைவாசி உயர்ந்துவிட்டது. செங்கல், சிமிண்ட், மற்றுமுள்ள வீடுகட்டும் பொருட்களின் விலை எல்லாம் மிகவும் உயர்ந்து விட்டது. இந்தச் சூழ்நிலையில் குறைந்த செலவில் அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும் அந்த வீடுகளுக்கு எத்தனை ஆண்டுக் காலம் ஆயுள் இருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னால் கேள்வி நேரத்தின் போது கூட அரிசன மக்களுக்குத் தனியாக பள்ளிக்கூடம் இருக்கக்கூடாது என்கின்ற அளவுக்குத் தெரிவித்தார்கள். ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் என்று அப்போதே கேட்டேன். அவர்களுக்குத் தனிப் பள்ளிக்கூடம் கட்டிக் கொடுத்து அவர்கள் நிலையை உயர்த்த வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கொள்கை. ஆனால் கடந்த இரண்டாண்டு காலமாக மத்திய அமைச்சரவையிலே இருக்கின்ற சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் அவர்களுக்குத் தனிப்பள்ளிக்கூடம் என் வைக்க வேண்டும்? கல்வித் துறை மூலமாக கல்வித் தரும்போது அரிசன மாணவர்களுக்கு தனிப் பள்ளிக்கூடங்கள் தேவையில்லை என்று சொல்லி, அதற்காக கல்வித் துறைக்கு ஒதுக்கித் தருகின்ற நிதி ஒதுக்கீட்டையும் நிறுத்தி விட்டார்கள். அது அவர்கள் திட்டம். அதைத்தான் பதிலாக அப்போது சொன்னேன்.

ஆனால், வீடு கட்டுகின்ற திட்டம் நம்முடைய மாநில அரசின் திட்டம். அதனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டவேண்டுமென்ற காரணத்தினால் இந்த அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்; அதற்கு இந்தப் பெயரை வைத்திருக்கிறோம். அவர்களுக்கு தனியாக வீடு கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் இப்போதும் இருக்கிறது. எல்லாச் சமுதாய மக்களுக்கும் சேர்த்து ஹவுசிங் போர்டு கட்டுகின்ற வீட்டில் 10 சத வீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படுகிறது. அதைப்போலவே "ஸ்லம் க்ளீயரன்ஸ் போர்டு" கட்டுகின்ற வீடுகளில் 50 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்படுகிறது. கிராமப்புறங்களில் ஏற்கெனவே தாழ்த்தப்பட்ட மக்கள் பரவலாக வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்கின்ற இடம் சுகாதாரமான முறையில் இல்லை. அரசுக்குச் சொந்தமான நிலம் இல்லாத இடங்களில் நோட்டீஸ் கொடுத்து, நில ஆர்ஜிதம் செய்து, அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அப்படிக் கட்டப்படுகிற வீடுகள் ஓரளவு நல்ல வீடுகளாக இருக்க வேண்டுமென்பதுதான் இந்தக் கழகத்தின் நோக்கம்.

[1974 மார்ச் 13

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பிரிந்து வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட மக்களை இன்றைக்கு மற்ற சமூகத்தினர்களோடு ஒன்று சேர்ந்து வாழச் செய்வது அரசின் கொள்கையா? அல்லது மற்ற சமூகத்தினர்களிடம் இருந்தே பிரித்து விடுவது கொள்கையா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இன்றைக்கும் கிராமப் புறங்களில் மேல் சாதி மக்கள் ஒரு பகுதியிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றொரு பகுதியிலும்தான் வாழ்கிறார்கள். மேல் சாதி மக்களோடு சேர்ந்தே வாழ வழி இருக்க வேண்டும் என்பதற்காக நாம் சில இடங்களில் மேல் சாதியினர் இருக்கக்கூடிய பகுதிகளிலேயே இவர்களுக்கு மனைவீடுகள் அமைத்தோம். அரிசனங்கள் இங்கே வந்து குடியேறுவதை மேல் சாதியினர் எதிர்க்கிறார்கள். சில இடங்களில் இவர்களே அங்கு போய் வாழ அஞ்சுகிறார்கள். இதுதான் இன்றுள்ள நிலை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. போர்ஷோர் எஸ்டேட்டில் உள்ள வீடுகளை ஹவுசிங் போர்டு கட்டியபோது அவற்றை மீனவர்களுக்கென்றே கட்டினார்கள். மீனவர்கள் அங்கு போய் குடியேற மறுத்த காரணத்தினால், அதை அரசாங்க ஊழியர்களுக்கு ஒதுக்கினார்கள். அரசாங்க ஊழியர்கள் அங்கே போய் குடியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது இன்றைக்கு இந்தச் சாதியின் அடிப்படையில் இவர்கள் மேல் சாதிக்காரர்களோடு போய் வாழ அஞ்சுகிறார்கள் என்று சொல்லி—மேல் சாதிக்காரர்கள், அரிசனங்கள் என்று பிரித்து பிரித்து வைக்கின்ற நிலையில் வீடுகளைக் கட்ட இந்த சாதியின் பெயராலேயே ஒரு போர்டை அமைப்பது—அதற்கு ஒரு எஞ்சினியரை—அவரும் அரிசனர்தான்—அங்கே கொண்டுபோய் மானேஜிங் டைரக்டர் என்று போடுவது—என்ஜினியருக்கு மானேஜிங் டைரக்டர் உத்தியோகத்திற்கு என்ன சம்பந்தம்? இவர் இலாக்காவிலேயே சீப் இன்ஜினியராக இவரை அமர்த்தினால் சரி—ஏதோ பிரமோஷன் கொடுக்கவேண்டும் என்பது போல அங்கே கொண்டு போய் போடுவது சரியல்ல.

What is the function of Managing Director? This sort of perpetuating the community, I vehemently oppose. கட்டிக்கொடுக்கும் போது அரிசனங்களுக்கு என்று தனியாக இல்லாமல் மற்றவர்களுக்கும் சேர்த்துக் கட்டுங்கள். அப்படியின்றி இதுபோலச் செய்வது ரொம்பத் தப்பு—இதை நான் ஆட்சேபிக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, 1,000, 1,500-க்கு மேற்பட்ட நெடுஞ்சாலைகளை அமைக்கிறபோது ரொம்பக் கவனமாக இருக்க வேண்டும். ஹைவேஸ் வரும்போது கிராமங்களிலுள்ள மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ப்ரொவிஷன் பண்ணிவிட்டு, அவர்களுக்கு எந்த அளவிலும் பாதகம் ஏற்படாத வகையில் இதை அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 13] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

ஒரு ஹோமியோபதி காலேஜ் இங்கே வரப்போகிறது என்று இங்கே கூறப்பட்டிருக்கிறது. இது நீண்ட நெடுங்காலமான கோரிக்கை. அது வருவது பெரும் மகிழ்ச்சி. அது வரும்போது—பல்லாண்டுகளாக ஹோமியோபதியில் நல்ல அனுபவம் உள்ளவர்களை—அந்த காலேஜ் அட்மினிஸ்ட்ரேஷனில் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திற்காக 6½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை இன்னும் நல்ல முறையில் அமல் படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. நாம் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கிறபோது, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம், தற்சமயம் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சமூகப் பொதுப் பாதுகாப்புத் திட்டத்தை மிக மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். மாதம் 10 ரூபாய் என்று 30-வது வயதில் இருந்து 55 வயது வரை கட்டுகிறவர்களுக்கு 55 வயதுக்குப் பிறகு 100 ரூபாய் பென்ஷன் தரப்படும் என்பது வர வேற்கவேண்டிய ஒன்று. ஏற்கெனவே ஓய்வு பெற்றிருப்பவர்களையும் எப்படியாவது இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவர உங்கள் நிதி இலாகாவினரை கேட்கவேண்டும். அவர்கள் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசர் அதிகமாக ஆகும் என்றுதான் கணக்குக் கொடுப்பார்கள். எப்படியோ பல்லாண்டுகள் பணிபுரிந்து, இன்றைக்கு ஓரளவே ஓய்வூதியம் பெறுகிற அவர்களும் பயன்பெறத்தக்க அளவுக்கு இதில் ஏதாவது செய்ய வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிசைமாற்று வாரியம்—பலயிடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. நான் சென்ற முறையும் கூட கேள்வி நேரத்தில் கூறியிருக்கிறேன். மைலாப்பூரில் உள்ள குயில் தோட்டம் என்ற இடத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்ட, அங்கு இருந்தவர்களை கடற்கரையோரத்தில் தற்காலிகமாக குடியமர்த்தியிருக்கிறார்கள். இந்த இடத்தில் இவர்கள் குடியமர்த்தப்பட்டு எட்டு, ஒன்பது மாதங்கள் ஆகின்றன. ஆனால் இங்கே எந்தவிதமான வசதியும் இல்லை. லைட் வசதி இல்லை, கக்கூஸ் வசதி இல்லை, தண்ணீர் வசதி இல்லை, ரோடு வசதியும் இல்லை. அங்குள்ளவர்கள் ஒன்வே டிராபிக் போல-சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கிறார்கள். அங்குள்ளவர்களுக்கு வேண்டிய வசதிகளை உடனடியாகச் செய்துதர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கட்டிடம் கட்டிக் கொடுக்கின்ற வரையில் மினிமம் அமெனிடீஸ் என்ற முறையில் இவை தேவைப்படுகிற காரணத்தினால் அதைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரிசன ஹாஸ்டல்கள் பலயிடங்களில் அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்றன. எனக்கு வந்திருக்கிற தகவல் 75 சத விகிதம் பாக்வர்டு கம்யூனிடி ஸ்டூடெண்டும், 25 சத விகிதம் அரிசன் ஸ்டூடெண்டும் இருக்கிற விடுதிகளில் பொங்கலுக்கு, தீபாவளிக்கு என்று இரண்டு செட் யூனிபாரம் கொடுக்கப்படுகின்றன. ஆனால் 25 சத விகிதம் மற்ற சமூகத்

தைச் சேர்ந்தவர்களும், 75 சத விகிதம் அரிசனங்களும் இருக்கிற விடுதி களில் முன்பு அதுபோல கொடுத்து வந்தார்கள். அது இப்போது, நிறுத்தப்பட்டு விட்டது என்பதுதான். இதை இங்கே மட்டும் என்ன கார ணத்திஞல் நிறுத்திஞர்கள் என்பது புரியவில்லை. இப்படி ஒரு பாகுபாடு செய்வது அரசுக்கு நல்லதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரிசனப் பிள்ளைகள் இருக்கிற விடுதிகளில் உடைகளைப் பொறுத்த வரையில் கொடுத்துக்கொண்டு தான் வருகிறோம். ஏற்கெனவே 3 வகுப்பு என்று இருந்ததை 5 வகுப்பு வரை என்றும், பெண்களுக்கு என்று மட்டும் இருந்ததை ஆண்களையும் சேர்த்து அங்குள்ள சிறுவர்களுக்கும் தருகிறோம். பெண்களுக்கு பொங்கலுக் கும், தீபாவளிக்குமாக, 2 செட் கொடுத்துக்கொண்டுதான் வருகிறோம். எங்கும் நிறுத்தப்பட்டதாக தகவல் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் எங்கே, எந்த இடத்தில் எந்த விடுதியில் நிறுத்தப்பட்டது என்கிற விவரங் களைத் தந்தால் நான் விசாரிக்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : என்னுடைய குற்றச்சாட்டு 25 சத விகிதம் அரிசன மாணவர்கள் உள்ள விடுதியில் கொடுக்கப்பட்டு வருகி றது. ஆனால், 75 சத விகிதம் அரிசன மாணவர்கள் உள்ள விடுதியில் உள்ளவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது நிறுத்தப்பட்டிருக்கிறது என் பதுதான். இது உண்மையா இல்லையா என்பதை நீங்கள் உங்கள் இலாக்கா டைரெக்டரிடம் கேட்டால் சரியான தகவல் கிடைக்கும். நாங்கள் எங்களுக்குக் கிடைத்த விவரத்தை வைத்துக்கொண்டு சொல்கிறோம்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் சொல்வது இலாக் காவில் ஒரு கொள்கை வைத்திருக்கிறோம். அந்தக் கொள்கையின் அடிப் படையில் 2 செட் உடைகள் நான் முன்பு சொன்னது போல் அளிக்கப் பட்டு வருவதாகும். எங்காவது கொடுக்கப்படவில்லை என்கிற விவரம் இருந்தால் நான் அது பற்றி குறிப்பாக விசாரிக்க முடியும் என்பதுதான்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான் விவரத்தைத் தனியாக அளிக்கி றேன். இப்போது எந்த இடம் என்கிற விவரம் என்னிடம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இரண்டுபேரும் அரிசன் மெம்பர்கள்— இப்படி வேறுபடுகிறார்களே, எது சரி?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இரண்டு அரிசன் மெம்பர் களும் இந்தச் சமுதாயத்தின்மீது அக்கறை கொண்டிருப்பதுதான்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது பொது நலம். கொடுப்பது குறைக்கப்பட்டால் ஏன் கொடுக்க வில்லை என்று அந்த அம்மாள் கூடக் கேட்கலாம்.



ஆகவே, இந்த வித்தியாசம் இருக்கிறது. தயவு செய்து இலாகாவிலே சரியாக விசாரித்து, அவ்வாறு கொடுத்திருப்பதை, நிறுத்தியிருப்பதை இவ்வாண்டு சேர்த்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரிஜிஸ்டிரேஷன் டிபார்ட்மெண்ட். அந்த டிபார்ட்மெண்டிலே ஒரு அரிசனப் பெண்மணி 1969-ம் ஆண்டு சப்-ரிஜிஸ்டிரார் கிரேட்-2 ஆக அப்பாய்ன்ட் செய்யப்பட்டார்கள். எப்படி அப்பாய்ன்ட்மெண்ட் கொடுக் கப்பட்டது. கன்பிக்குவஸ் மெரிட் என்ற முறையில் கொடுக்கப்பட்டது. அவரை ரிவர்ட் செய்து (குறுக்கீடு) ஓராண்டுக்குப் பிறகு அவர்கள் போகாத இடமெல்லாம் போய் (குறுக்கீடு) நான் முதலிலே சொல்லிவிடுகிறேன் —மெரிட்டிலே கொடுத்திருக்கிறார்கள். பிறகு, எல்லாக் குறிப்பேடுகளை யும் எடுத்துப் பார்த்திருக்கிறார்கள். ஓராண்டுக் காலம் சென்று கொடுத் ததற்கு மிக்க நன்றி. இனிமேல் அவ்வாறு நடக்காமலிருப்பதற்காகத் தான் நான் இதைக் கூறுகிறேன். அவர்களை ரிவர்ட் செய்து, பிறகு ஓராண்டு கழித்து திரும்பவும் ப்ரமோஷன் கொடுத்திருக்குகிறார்கள். ப்ரமோஷன் கொடுத்தபிறகு, 8 ஆண்டு காலம் அவர்கள் அசிஸ்டெண்டாக இருந்திருக்க வேண்டும், அதன் பிறகுதான் இந்த பிரமோஷனுக்கு உரியவர்களாவர் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ரூல்ஸை எல்லாம் ரிலாக்சேஷன் செய்தபிறகுதானே பிரமோஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்த ரிலாக்சேஷனுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்களும் காரணமாக இருந்த பிறகு, அவர்களுக்கு ரிவர்ஷன் கிடைத்திருக்கிறது.

அவர்களுக்காகப் புது பேனல் போட வேண்டியதாக இருந் திருக்கிறது. புது பேனல் எப்படி போட்டிருக்கிறார்கள்? ஏற்கனவே பிரமோஷன் பெற்றவர்கள், பிரமோஷன் லிஸ்டிலே உள்ளவர்கள் எல் லாரையும் சேர்த்து 300 பேர் கொண்ட பேனல் போட்டிருக்கிறார்கள். ஒரு போஸ்டுக்கு எப்படி பேனல் கிரியேட் பண்ணுவது ? 6 பேர், 10 பேரைக் கொண்டு பேனல் போடுவார்கள். 300 பேர் கொண்ட பேனல் என்ன பேனல் ? 300 பேர் அந்த கிரேடை reach செய்ய எத்தனை ஆண்டுக் காலம் ஆகும் ? அந்த அம்மையாருடைய குடும்பம் ஓராண்டுக் காலம் ''அரசு posting கொடுக்காத காரணத்தினால் எவ்வளவு கஷ்டப் பட்டிருக்கும் என்பதை நினைத்துப் பார்த்தீர்களா ? நீங்கள் டிபார்ட் மெண்டைக் கேளுங்கள், செக்கரடட்டரியைக் கேளுங்கள், எப்படி panel பிரிப்பேர் பண்ணினார்கள் என்று ? எலிஜிபிலா, இல்லையா என்பதைப் பார்க்காமல் எப்படி பிரிப்பேர் பண்ணினார்கள் ?

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

இன்றைக்கு, ஐ.ஜி. ஆப் ரிஜிஸ்டிரேஷனாக இருக்கக் கூடியவரைப் பற்றி ஒன்றை நான் கூறித்தான் ஆக வேண்டும். அவரும் தாழ்த்தப் பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். . ஒவ்வொரு டிபார்ட்மெண்ட்டிலேயும், நான் முக்கியமாக என்ன சொல்கிறேன் என்றால், தாழ்த்தப்பட்டோருக் காக அமைக்கப்பட்ட வீட்டு வசதி வாரியத்திலே கூட, ஹரிஜனை மானேஜிங் டைரக்டராகப் போட்டிருப்பது தவறு. நான் எத்தனையோ தடவை சொல் லியிருக்கிறேன். இதில் எனக்கு சுயநலமே கிடையாது. பொது நலத்தை ஒட்டித்தான் சொல்கிறேன், நீங்கள் ஒரு நான்-ஹரிஜனைப் போடுங்கள்— நீங்கள் ஹரிஜனங்களுக்கு ஏதாவது செய்யவேண்டுமென்று நினைத்தால். You put a non-Harijan there.

இன்றைக்கு ஐ. ஜி. ஆப் ரிஜிஸ்டிரேஷன் இருக்கிறார். அவர்மேல் தனிப்பட்ட முறையிலே எனக்கு எந்தக் கோபமும் கிடையாது. ஆனால், அவருடைய டிபார்ட்மென்டிலே இருக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. எல்லோருக்கும் ஒரு குறைபாடு ஏற்பட்டிருக்கிறது. திடீரென்று மெமோ இஷ்யூ பண்ணுவது, முக்கியமான வர்களுடைய கேஸ்களை எல்லாம் நாங்கள் பார்க்கிறோம். அவர்களைப் பார்த்து, நீங்கள் ஏன் எம். எல். ஏக்களிடம் போகிறீர்கள் என்று கேட்பது. எம். எல். ஏக்கள் எதற்கு இருக்கிறார்கள். we are representatives of thousands and thousands of people. அதை எப்படி இந்த ஐ. ஜி. மறுக்க முடியும்.? அவ்வாறு அவர்கள் கேட்பது தவறு, நாங்கள் கேட்பது தவறா ? அவர்களையெல்லாம் நசுக்குவதிலே இருக்கிறாரேயொழிய, அவர்கள் முன்னேறி வரவேண்டுமென்ற எண்ணமே அவருக்கு கிடையாது. அவர்களை முன்னேறச் செய்யவில்லையென்றாலும்கூட, கெடுதல் பண்ணக் கூடாது. அவர்மேல் தனிப்பட்ட முறையிலே எனக்குக் கோபமே கிடையாது. அவர் நண்பர் தான். ஆனால், ஒரு அட்மினிஸ்டிரேஷன் செய்யும்போது, நீங்கள் தயவு செய்து அவற்றையெல்லாம் பார்த்து, ஐ.ஜி. ஆப் ரிஜிஸ்டிரேஷன் எப்படி இருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டும். திடீரென்று சப்ரிஜிஸ்டிரார் ஆபிஸிலே (குறுக்கீடு) என்ன கதியிலே அது இருக்கிறது என்று நமக்குத் தெரியும். அங்குள்ள அதிகாரி உட்கார்ந்து கொண்டிருப்பதே ஓர் ஓட்டை நாற்காலியிலே. அதற்கு ஒரு மெமோ, அதற்கு ஒரு எக்ஸ்பிளனேஷன். Sub-Registrar ஐ மற்ற ஊழியர்கள் முன்பே கேவலப்படுத்துவது. இப்படி இருந்தால் சப்ரிஜிஸ்டிரார்கள் பிழைப்பதா அல்லது சாவதா என்று எனக்குப் புரியவில்லை.

இப்பொழுது ஒரு முனைவரி போட்டிருக்கிறீர்கள் அரிஷ்டத்திற்கு 30 சத வீதம் போட்டிருக்கிறீர்கள். இந்த அரிஷ்டத்திற்கு எப்படி 30 சத விதம் என்று டிசைட் பண்ணினார்கள் என்று புரியவில்லை.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : இந்த அரிஷ்டம், மருந்து அரிஷ்டமாக ஆயுர்வேதத்தில், சித்த வைத்தியத்தில் இருப்பது ஒன்று. ஆனால், மக்கள் இப்போழுது பல்வேறு கடைகளிலே அரிஷ்டம் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். பெரும்பாலும் அது போதைப் பொருளாக இருக்கிறது என்ற காரணத்தினால், அந்த போதைப் பொருள் அதிகமாக வேறு மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டிற்குக் கொண்டு வந்து விற்கப்படுகிறது என்று சொல்லப்பட்ட காரணத்தினால், அதைத் தடுக்க வரியாவது போடப்பட்டால் நன்றாக இருக்கும் என்று இவ்வாறு போடப்பட்டிருக்கிறது. மருந்து அரிஷ்டம் தனியாக, எந்த எந்த கடைகளிலே இருக்கிறது, எங்கெங்கு உபயோகிக்கப்படுகிறது என்று சொல்லப்படுமானால், அதை நிச்சயமாக பரிசீலிப்போம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரிஷ்டத்தில் 5 அல்லது 10 சத விகிதம் தான் ஆல்கஹால் இருக்கும். மதுக் காசம் சாப்பிடுகின்ற பழக்கம், விற்பனை, கேரள மக்களிடத்தில் கேரளாவில் இருக்கிறது.





நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை என்று படித்திருக்கிறோம். ஆனால், இப்பொழுது, பொல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் கெடுதல் ஏற்படும் என்று மாற்றிக்கொள்ள வேண்டும்போல் இருக்கிறது.

அதற்காக டிரக் இன்ஸ்பெக்டர்களை வைத்து எங்கெங்கு தவறாக உபயோகிக்கிறார்கள். என்பதைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு ஹெவி ஃபைனைப் போடுங்கள். அதிலே ஆட்சேபணை கிடையாது. ஆனால், அதற்காக இன்றைக்கு இப்படி வரி விதித்தால் அது எங்கே போகும் என்று தெரியவில்லை. அதனால் ஆயுர்வேத மெடிசின் பிரிப்பேர் செய்வதற்கு இடைஞ்சல் ஏற்பட்டுவிடும். ஆகையால், அதையும் சற்று கவனிக்கவேண்டுமென்று கேட்டு, சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டின் நிதிநிலை அறிக்கைமீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இறுதியாக என்னுடைய கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பினை அளித்தமைக்காக நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை
என்பது வள்ளுவர் காட்டும் வீட்டுப்பொருளாதாரம். அதேபோல்தான்

நாட்டின் வருவாய்க்குத் தக்கபடி நிதிநிலை அறிக்கையையும் திட்டத்தையும் சமர்ப்பிக்கவேண்டும். அப்பொழுதுதான், பற்றாக்குறை இல்லாத பட்ஜெட்டாகவும், பரிதாபகரமான நிலைமைகளை மக்களுக்கு ஏற்படுத்தாமலும் காப்பதற்கு ஒரு வழிவகை ஏற்படும். இந்த நாட்டுப் பொருளாதாரத்தை காக்க வழிவகை காணக்கூடிய வகையிலும் அது அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கை மீது என்னுடைய விளக்கத்தையும் இல் புகார்களையும் கோட்டையிலிருந்து தொடங்கலாம் என்று கருதுகிறேன். தமிழக அரசுத் தலைமைச் செயலகத்தில் கூட்டுறவுக் கடன் வழங்கும் சங்கம் இருப்பதை நாம் அத்தனைபேரும் நன்றாக அறிவோம். அந்தச் சங்கத்தின் பொருளாளர் போலிக் கையெழுத்திட்டு வங்கியிலிருந்து ஏறத்தாழ ரூ. 38,000-யை எடுத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டதாகவும் பிறகு அது கண்டுபிடிக்கப்பட்டு, ஏறத்தாழ ரூ. 8,000 அவரிடமிருந்து கைப்பற்றப் பட்டிருக்கிற சூழ்நிலையையும் கேள்விப்படும்போது உள்ளபடியே நான் மெத்த வருத்தப்படுகிறேன். இது உண்மையா இல்லையா என்பதற்கு இந்த அரசாங்கம் தக்க பதிலை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கோட்டையிலே விழுந்த ஊழல் ஓட்டை உண்மை தானா ? அந்த அதிகாரியைப் பதவி நீக்கம் செய்யாமல், நம்முடைய வராண்டாவில் பவனி வரச் செய்திருப்பது நேர்மைதானா ? என்பதை நாமெல்லாம் இன்றைப் பார்த்து தகுந்த பரிகாரம் தேடவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திருக்கோயிலூருக்கு அருகில் இருந்த சேமிப்புக் கிடங்கிலே 1972-ம் ஆண்டு சேமித்து வைக்கப்பட்டு இருந்த எட்டாயிரம் மூட்டை நெல்லை பெண்ணை யாற்றிலே ஏற்பட்ட வெள்ளம் அடித்துச் சென்றதாக நாம் கேள்விப்பட்டோம். நல்ல உள்ளம் படைத்தவர்களின் எல்லா உள்ளங்களும் மிக்க வேதனைப்பட்டன, நான்கூட ஆச்சரியப்பட்டேன். என்னடா இந்த சேமிப்புக் கிடங்கை ஊருக்கு நடுவிலே கட்டாமல் பெண்ணை யாற்றின் நடுவிலேயா கட்டியிருப்பார்கள் என்று. ஆனால் பிறகு விசாரித்துப் பார்த்ததில் அது ஊருக்கு நடுவிலேதான் கட்டப்பட்டு இருக்கிறது. என்பதை அறிந்துகொண்டேன். பிறகு அதைப் பற்றி விசாரணை நடத்தப்பட்டு அதிலிருந்து தெரியவந்திருப்பது, வெள்ளம் அடித்துச் செல்லவில்லை, அதிகாரிகள் கையாடல் செய்ததால்தான் அப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டது என்று. உள்ளபடியே நாமெல்லாம் மிகவும் வேதனைப்படுகிறோம். அதனுடைய மதிப்பு நான்கு லட்சத்து 87 ஆயிரம் ரூபாய் என்றும் இந்தக் கையாடலின் கதாநாயகன் அங்கே அப்போது பணியாற்றிய தாலூகா சப்ளை ஆபீஸர் என்றும் தெரிகிறது. இந்த அரசாங்கம் உடனடியாக விசாரணை செய்ததா ? இதைப்பற்றி விசாரணை செய்யப்பட்டு அந்த அதிகாரிமீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இப்படி 1972-ம் ஆண்டு நடந்த கையாடல் 1974-ம் ஆண்டிலே தான் கண்டுபிடிக்க முடிந்தது என்றால் இந்த அரசாங்கம் எவ்வளவு தாமதமாக ஊழல் புகார்களை விசாரித்துக் கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு நல்ல ஆதாரமாகும்.

அதுமட்டுமல்ல, கிண்டியிலே ஒரு சிறுவர் பூங்கா இருக்கிறது. 1973-ம் ஆண்டில் அங்கே சூபரின்டென்டாக பணியாற்றிய நத்தகோபால் என்பவர் அங்கே உள்ள பிராணிகள், பறவைகள் மற்றும் ஊர்வன வற்றிற்கு மீன், மாமிசம், தானியம் இவை எல்லாம் விலைக்கு வாங்கிப் போட்டதாக போலி ரசீதுகள் தயார் செய்து ஒரு லட்சம் ரூபாய்வரையில் கையாடல் செய்திருக்கிறார். அதற்காக அவர் கைதுசெய்யப்பட்டு பெங்களூரிலே தங்கியிருந்து நிபந்தனை ஜாமீனில் விடப்பட்டிருக்கிறார். இப்படி ஒவ்வொன்றாக பார்த்தால் ஒவ்வொரு ஆண்டும் ஊழல் ஊழல் என்று வளர்ந்துகொண்டு இருக்கிறதே தவிர குறைந்ததாகத் தெரியவில்லை. இதற்கெல்லாம் பரிகாரம் காணவேண்டுமென்று விரும்பி வேண்டி நான் கேட்டுக்கொள்கிறேன்........

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, தவறுசெய்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், நடவடிக்கை எடுக்கப் பட்டு இருக்கிறது. உறுப்பினர் அப்படி கைது செய்தது நியாயமில்லை என்று சொல்கிறார்களா ? அப்படி நடவடிக்கை எடுத்தது தப்பு என்று சொல்கிறார்களா ?

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, [illegible] செய்ததை நானும் அறிந்தேன். ஆனால் காலதாமதம் ஏன் [illegible] கேட்கிறேன்.





மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : காலதாமதம் ஏன் என்றால் வழக்கு விசாரிக்கப்பட்டு பப்ளிக் பிராஸிக்யூட்டர் குற்றவாளி என்று சொல்லிய பிறகுதான் நடவடிக்கை எடுக்கமுடியும், அப்படியில்லாமல் விசாரிக்காமல் உடனடியாக நடவடிக்கை எடுத்து கைது செய்யவேண்டு மென்று சொல்கிறார்களா ? வழக்கறிஞரான அவர்கள் விளக்கம் அளிக்க வேண்டும்.

திரு. பெ. சௌந்தரபண்டியன் : வழக்குப் போட்டவுடன்தான் பப்ளிக் பிராஸிக்யூட்டருக்கும் அதற்கும் சம்பந்தமாகிறது. ஆகவே விசாரணை செய்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுப்பதில் ஏன் தாமதம் என்பதை அமைச்சர் சொன்னால் நலமாக இருக்கும்,

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எந்த விஷயத்திலேயும் பப்ளிக் பிராஸிக்யூட்டர்தான பிராஸிக்யூஷனை எடுக்கிறார்கள், அதுதான் முறை வழக்கு விசாரணை நடத்துவதும் பப்ளிக் பிராஸிக்யூட்டர்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊழல் நடந்திருப்பதை உள்ள படியே ஒத்துக்கொண்டதற்காக நான் நன்றி கெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அந்த கையாடலை செய்தவர் பெங்களூரிலேயே நிபந்தனை ஜாமீனிலே இருக்கிறார். ஊழல் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பல ஆண்டுகளாக நடந்து கொண்டிருந்த ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன, இப்பொழுது ஊழல்கள் குறைந்துகொண்டு வருகின்றன. இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு ஊழல்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்ததால்தான் ஊழல்கள் குறைந்து கொண்டு வருகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஊழல்கள் பெருகிவிட்டதால்தான் முன்னேற்றக் கழகத்தை ஆட்சியிலே அமர்த்தினார்கள் மக்கள். ஆனால் அதைக் கண்டுபிடிப்பதிலே........

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஊழலையே முதலாக வைத்து, ஊழல், ஊழல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பெருகிவந்த ஊழல்களை முன்னேற்றக் கழக ஆட்சிதான் கண்டுபிடித்தது, கண்டுபிடித்து நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது, நடவடிக்கை எடுக்காமல் இருக்கவேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்களா ?

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, யார் ஊழலை முதலாக வைத்திருக்கிறார்கள் என்று என்னையும் அவர்களையும் பார்த்தாலே நன்றாக தெரியும்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதை அவரவர்கள் ஊரிலே போய் விசாரித்தால் நன்ருகத் தெரியும். சும்மா ஊழல் ஊழல் என்று கூறிக்கொண்டே ஏதோ இங்கே உட்கார்ந்து உள்ளவர்கள் எல்லாம் ஊழல் செய்கிறவர்கள் போலவும் அங்கே உட்கார்ந்து இருக்கிறவர்கள் எல்லாம் ஊழல் இல்லாதவர்கள் போலவும் பேசுகின்ருர்கள். 31-ஆம் தேதி ஊழல் என்றும் 2-ஆம் தேதி ஊழல் போய்விட்டது என்றும் சொன்னவர்கள். ஆகவே அவரவர்கள் ஊரிலே போய் கேட்டால் நிச்சய மாகத் தெரியும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் சுட்டிக் காட்டியவைகள் எல்லாம் உண்மைக்கு மாருக இருந்தால் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனுல் அவை எல்லாம் உண்மையாக இருந்தால் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பெறுப்பேற்றுக் கொள்ள எந்த இடத்திலும் நான் தயார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஏதோ இங்கே உட்கார்ந்திருக்கிறவர்கள் எல்லாம் ஊழல்களிலே ஈடுபடுகிருர்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிருர்கள். எங்களைப் போன்றவர்கள் எல்லாம் அப்படியில்லை, எங்களைப் போன்றவர்களையெல்லாம் விசாரிக்க மக்கள் மன்றத்திலே விசாரணை வைத்தாலும் அதற்கும் தயாராக இருக்கிருேம். அரசாங்கத்திலிருந்து நீதிவிசாரணை வைத்தால் அதற்கு வேண்டுமானுலும் தயாராக இருக்கிருேம் அல்லது சி.பி.ஐ. மூலமாக விசாரணை வைத்தால் அதற்கும் தயாராக இருக்கிருேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனுல் அதேமாதிரி அவர்களும் தயார்தானு என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் யாரையும் சேர்த்துச் சொல்லவில்லை. 31-ஆம் தேதி ஊழல் என்று சொல்கிறவர்கள் 2-ஆம் தேதி மன்னிப்புக் கேட்டார்கள் என்றுதான் சொன்னேனே தவிர யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அப்படியிருக்கும்பொழுது பொன்னப்ப நாடார் அவர்கள் ஏன் அந்த ஊழலிலே சேர்ந்து கொள்கிருர்கள் என்று எனக்குப் புரிய வில்லை. நமக்கு எல்லாம் அப்படிப்பட்ட பழக்கம் இடையாது, அப்படிப் பட்ட பழக்கம் உள்ளவர்களோடு சேர்வதும் இடையாது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தக் கூட்டத்திலே சேரவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அந்த ஊழல் கூட்டத்தில் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் இங்கே வந் திருக்கிருேம் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. நான் ஒன்றை



ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் என்னுடைய தொகுதியில் கொசூரில் பணியாற்றிய கணக்குப்பிள்ளை ஒருவர் ஒரு லட்ச ரூபாய் கையாடல் செய்தார் என்று புகார் மனு ஒன்று என்னிடம் பொது மக்களால் கொடுக்கப்பட்டு நான் அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணு அவர்களிடத்தில் கொடுத்தேன். பேரறிஞர் அண்ணு அவர்களும் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து, விசாரித்து, அது உண்மை என்றுஅ றிந்தவுடன் அந்த கணக்குப்பிள்ளையின் வேலை நீக்கம் செய்யப்பட்டது. ஆனுல் மதிப்பிற்குரிய கருணுநிதி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, அறிஞர் அண்ணு அவர்கள், யார்மீது ஊழல் குற்றம் சாட்டப்பட்டு யாரை வேலை நீக்கம் செய்தார்களோ அவருக்கு திரும்பவும் வேலை கொடுக்கப்பட்டிருக் கிறது என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் உறவுக்குக் கை கொடுப்போம் என்று சொல்வார். ஆனுல் இப்போது ஊழல் செய்தவரை கைதூக்கி விட்டுக்கொண்டிருக்கிருர் என்பதை எண்ணி மிகவும் வேதனைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : நான் விவரம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன். முதலமைச்சர் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதற்காகக் கேட்கிறேன். யார், எந்த ஊர் என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் தெளிவாகச் சொல்லியிருக் கிறேன். கொசூர் கணக்குப்பிள்ளை, குளித்தலை வட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுப்பணித்துறை அமைச்சர் விவரம் கேட்டார். கொசூர், குளித்தலை வட்டம் என்னுடைய தொகுதி. கவர்னர் உரை விவாதத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் . . . . . . . . . . . :

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் விவரம் தெரிந்து கொள் வதற்காக கேட்கிறேன். அறிஞர் அண்ணு அவர்கள் காலத்திலே வேலை நீக்கம் செய்யப்பட்டவர் கலைஞர் காலத்திலே வேலை கொடுக்கப்பட்டார் என்று சொன்ஞர்கள். பின்னுலே வேலைக்குச் சேர்த்துக்கொண்டது ஒன்றுமே தவறில்லை என்று சொல்லி சேர்த்துக்கொள்ளப்பட்டாரா ? அல்லது விசாரணை நடைபெற்று அவர் குற்றவாளி என்று தெரிந்து கொண்டதற்குப் பிறகு வேலைநீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பிறகு வேலை யில் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா ? அல்லது ஒன்றுமே தவறு செய்ய வில்லையென்பதால் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா !

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : விசாரணை செய்து வேலைநீக்கம் செய்யப்பட்டார். மீண்டும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, அதைத்தான் சொன்னேன். கவர்னர் உரை விவாதத்தில் நான் சில புகார்களைச் சொன்னேன். அதற்குப் பதில் சொல்லும்பொழுது முதலமைச்சர் பல குடம் பால் இருக்கிறது, அதிலே ஒரு குடம் பாலிலே ஒரு துளி விஷம் விழுந்துவிட்டால் எல்லாக் குடங்களையும் கீழே ஊற்றிவிடுவதா என்று சொன்ஞர்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதை அவரவர்கள் ஊரிலே போய் விசாரித்தால் நன்ருகத் தெரியும். சும்மா ஊழல் ஊழல் என்று கூறிக்கொண்டே ஏதோ இங்கே உட்கார்ந்து உள்ளவர்கள் எல்லாம் ஊழல் செய்கிறவர்கள் போலவும் அங்கே உட்கார்ந்து இருக்கிறவர்கள் எல்லாம் ஊழல் இல்லாதவர்கள் போலவும் பேசுகின்ருர்கள். 31-ஆம் தேதி ஊழல் என்றும் 2-ஆம் தேதி ஊழல் போய்விட்டது என்றும் சொன்னவர்கள். ஆகவே அவரவர்கள் ஊரிலே போய் கேட்டால் நிச்சயமாகத் தெரியும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, நான் சுட்டிக் காட்டியவைகள் எல்லாம் உண்மைக்கு மாருக இருந்தால் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனல் அவை எல்லாம் உண்மையாக இருந்தால் அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பெறுப்பேற்றுக் கொள்ள எந்த இடத்திலும் நான் தயார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, ஏதோ இங்கே உட்கார்ந்திருக்கிறவர்கள் எல்லாம் ஊழல்களிலே ஈடுபடுகிருர்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிருர்கள். எங்களைப் போன்றவர்கள் எல்லாம் அப்படியில்லை, எங்களைப் போன்றவர்களையெல்லாம் விசாரிக்க மக்கள் மன்றத்திலே விசாரணை வைத்தாலும் அதற்கும் தயாராக இருக்கிருேம். அரசாங்கத்திலிருந்து நீதிவிசாரணை வைத்தால் அதற்கு வேண்டுமாஞலும் தயாராக இருக்கிருேம் அல்லது சி.பி.ஐ. மூலமாக விசாரணை வைத்தால் அதற்கும் தயாராக இருக்கிருேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனல் அதேமாதிரி அவர்களும் தயார்தானு என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நான் யாரையும் சேர்த்துச் சொல்லவில்லை. 31-ஆம் தேதி ஊழல் என்று சொல்கிறவர்கள் 2-ஆம் தேதி மன்னிப்புக் கேட்டார்கள் என்றுதான் சொன்னேனே தவிர யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். அப்படியிருக்கும்பொழுது பொன்னப்ப நாடார் அவர்கள் ஏன் அந்த ஊழலிலே சேர்ந்து கொள்கிருர்கள் என்று எனக்குப் புரிய வில்லை. நமக்கு எல்லாம் அப்படிப்பட்ட பழக்கம் கிடையாது, அப்படிப் பட்ட பழக்கம் உள்ளவர்களோடு சேர்வதும் கிடையாது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் அந்தக் கூட்டத்திலே சேரவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அந்த ஊழல் கூட்டத்தில் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் நாங்கள் இங்கே வந் திருக்கிருேம் என்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. நான் ஒன்றை





ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் என்னுடைய தொகுதியில் கொசூரில் பணியாற்றிய கணக்குப்பிள்ளை ஒருவர் ஒரு லட்ச ரூபாய் கையாடல் செய்தார் என்று புகார் மனு ஒன்று என்னிடம் பொது மக்களால் கொடுக்கப்பட்டு நான் அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணு அவர்களிடத்தில் கொடுத்தேன். பேரறிஞர் அண்ணு அவர்களும் அதைப்பற்றி நடவடிக்கை எடுத்து, விசாரித்து, அது உண்மை என்றுஅ றிந்தவுடன் அந்த கணக்குப்பிள்ளையின் வேலை நீக்கம் செய்யப்பட்டது. ஆனல் மதிப்பிற்குரிய கருணநிதி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, அறிஞர் அண்ணு அவர்கள், யார்மீது ஊழல் குற்றம் சாட்டப்பட்டு யாரை வேலை நீக்கம் செய்தார்களோ அவருக்கு திரும்பவும் வேலை கொடுக்கப்பட்டிருக் கிறது என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் உறவுக்குக் கை கொடுப்போம் என்று சொல்வார். ஆனல் இப்போது ஊழல் செய்தவரை கைதூக்கி விட்டுக்கொண்டிருக்கிருர் என்பதை எண்ணி மிகவும் வேதனைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : நான் விவரம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகக் கேட்கிறேன். முதலமைச்சர் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்பதற்காகக் கேட்கிறேன். யார், எந்த ஊர் என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் தெளிவாகச் சொல்லியிருக் கிறேன். கொசூர் கணக்குப்பிள்ளை, குளித்தலை வட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுப்பணித்துறை அமைச்சர் விவரம் கேட்டார். கொசூர், குளித்தலை வட்டம் என்னுடைய தொகுதி. கவர்னர் உரை விவாதத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்...........

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நான் விவரம் தெரிந்து கொள் வதற்காக கேட்கிறேன். அறிஞர் அண்ணு அவர்கள் காலத்திலே வேலை நீக்கம் செய்யப்பட்டவர் கலைஞர் காலத்திலே வேலை கொடுக்கப்பட்டார் என்று சொன்ஞர்கள். பின்னலே வேலைக்குச் சேர்த்துக்கொண்டது ஒன்றுமே தவறில்லை என்று சொல்லி சேர்த்துக்கொள்ளப்பட்டாரா ? அல்லது விசாரணை நடைபெற்று அவர் குற்றவாளி என்று தெரிந்து கொண்டதற்குப் பிறகு வேலைநீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பிறகு வேலை யில் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா ? அல்லது ஒன்றுமே தவறு செய்ய வில்லையென்பதால் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா !

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : விசாரணை செய்து வேலைநீக்கம் செய்யப்பட்டார். மீண்டும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது, அதைத்தான் சொன்னேன். கவர்னர் உரை விவாதத்தில் நான் சில புகார்களைச் சொன்னேன். அதற்குப் பதில் சொல்லும்பொழுது முதலமைச்சர் பல குடம் பால் இருக்கிறது, அதிலே ஒரு குடம் பாலிலே ஒரு துளி விஷம் விழுந்துவிட்டால் எல்லாக் குடங்களையும் கீழே ஊற்றிவிடுவதா என்று சொன்ஞர்கள்.

பிற்பகல் 1.00

இரண்டு, மூன்று ஊழல் புகார்களை மட்டும் நான் கொடுக்கிறேனே
தவிர, எல்லாவற்றையும் கொடுக்கவில்லை. காரணம், எல்லாவற்றையும்
சொல்வது என்றால் அதற்கு நேரம் போதாது, பேரவைத் தலைவரவர்
களும் அந்த அளவிற்கு அனுமதியும் வழங்க மாட்டார்கள். ஆகவே
தான் எல்லாவற்றையும் சொல்லவில்லையே தவிர வேறொன்றுமில்லை.
ஏறத்தாழ ஒவ்வொரு ஆண்டும் ஓராயிரம் புகார்களுக்கு மேல் வருகின்
றன. எனவே, ஓராயிரம் குடத்திலே விஷம் கலக்கப்பட்டிருக்கிறது.
ஆகவே, நிர்வாகத்தைச் சீர்படுத்த வேண்டும், நிர்வாகிகளிடம் கண்டிப்பு
காட்டி நேர்மையாக நடப்பதிலே மிகுந்த அக்கறை எடுத்துக்கொள்ள
வேண்டும், அப்படி இந்த நாட்டைக் காக்க வேண்டுமென்றுதான் சொல்
கிறேனே தவிர, எனக்கு எந்தவிதமான கருத்து மாச்சரியமோ, மன
மாச்சர்யமோ இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படு
கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கல்விக்காக 110·15 கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சரவர்கள் ஏறத்தாழ 53 பக்கங்கள்
கொண்ட நிதிநிலை அறிக்கையை இங்கே படித்துக் காட்டினார்கள். இந்த
53 பக்கங்களில், பணம் மட்டுமல்ல, பக்கங்கள் கூட கல்விக்காகத்தான்
அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ நான்கேகால் பக்கங்கள்
ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

நம்முடைய நாட்டின் கல்வித் தரம் என்ன? எந்தச் சூழ்நிலையில்
கல்வியின் தரத்தை உயர்த்தியிருக்கிறோம், கட்டுப்பாட்டை எந்த அளவில்
வளர்த்திருக்கிறோம்? கல்விக்கூடங்களை எவ்வளவு நாட்கள் திறந்து
வைத்திருக்கிறோம் என்பதை இந்த அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்
டும். ஆசிரியர்கள்-மாணவர்கள் வீதாச்சாரம் குறையவும், ஆசிரியர்கள்-
மாணவர்கள் மத்தியில் கட்டுப்பாடு வளரவும், ஆசிரியர்கள்-மாணவர்கள்
மத்தியில் அவர்களது உறவு பாதிக்காமல் இருக்கவும், கல்விக்கூடங்களில்
வேலைநிறுத்தங்கள் நிகழாமல் முன்கூட்டியே கவனித்துக் கொள்ளவும்,
கல்வியின் தரத்தை உயர்த்தவும், அறிவைப் புகச்செய்து அரசியல் புகாமல்
தடுக்கவும் முயற்சிகளை இந்த அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று
வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறையைச் சீரமைக்க வேண்டுமென்று
1970-ம் ஆண்டில் இந்த அரசாங்கம் முடிவெடுத்தது. எடுத்த முடிவு
இதுவரையில் ஊறுகாய் பானைக்குள் போடப்பட்ட ஊறுகாயைப் போல்
ஊறிக்கொண்டு இருப்பதற்கு என்ன காரணம்? ஒவ்வொரு மாவட்டத்
தையும் எடுத்துக்கொண்டால் வேளாண்மைத் துறையில், பருத்திக்காக
ஒரு மாவட்ட வேளாண்மை அதிகாரி, எண்ணெய் வித்துக்களை கவனிப்
பதற்காக ஒரு அதிகாரி, கரும்பு சாகுபடியைக் கவனிப்பதற்கு ஒரு அதி
காரி, பொதுவாக ஒரு வேளாண்மை அதிகாரி என்று இப்படிப் பல
வாருகப் பிரிக்கப்பட்டு, பல அலுவலகங்கள் திறக்கப்பட்டு இருக்கின்ற
சூழ்நிலை இருக்கிறது அதனால் படிக்காத விவசாயி அலுவலகங்களை





தேடி அலைகின்ற சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. அந்தத் துறையிலேயே உள்ள பெரிய அதிகாரிகள், அனுபவம் உள்ளவர்கள் இதைச் சீரமைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியும் கூட இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டும் கூட இதற்கு இவ்வளவு கால தாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

உரத்தைப் பொறுத்த வரையில் எடுத்துக்கொண்டால் உள்ளபடியே சொல்கிறேன், நாம் அதற்காக மெத்த வருத்தப்பட வேண்டும். விவசாயிகள் இயற்கை உரத்தை முன்பு பயன்படுத்தினார்கள். மாட்டு எரு, பன்றி எரு, தழைகள், அவுரிச்செடி, கொழுஞ்சிச்செடி .போன்றவற்றைப் பயன்படுத்தினார்கள். ஆனால் இடைக்காலத்தில் இந்த அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் இரசாயன உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று விளம்பரம் செய்ததால் பாஸ்பேட் உரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பொழுது அந்த பாஸ்பேட் உரம் பாஸ்போர்ட் எடுத்துக் கொண்டு, தான் வந்த நாட்டிற்கு சென்று விட்டதோ என்று கருத வேண்டியுள்ளது. அதைப்போல் யூரியாவை அறிமுகப்படுத்தினார்கள். கடையிலே சென்று யூரியா கொடு என்றால், நீ யாரையா என்று கேட்கும் சூழ்நிலை இருக்கிறது. மீண்டும் இயற்கை உரத்தையே பயன் படுத்த அரசு தீவிர திட்டம் வகுத்து செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கால்நடைத்துறையில் ஒரு கார்ப்பரேஷனை அரசு நிறுவி இருக்கிறது. 1973-ம் ஆண்டில் கோழி வளர்ப்பு கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தை இந்த அரசு துவக்கியிருக்கிறது. இது அவசியம்தானா, தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் இப்பொழுது கால்நடை வளர்ச்சித் துறை நெறியாளரின் கண்காணிப்பில் இருக்கிறது. மற்றவை இந்த கோழி வளர்ப்பு கார்ப்பரேஷனிடம் ஒப்படைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டுவருகிறது. அதனால் நிர்வாகச் செலவு பல லட்சக்கணக்கான ரூபாய் வீணாகிறது என்று கூற விரும்புகிறேன்.

பஞ்சாபில் இதேபோல் கோழி வளர்ப்பு கார்ப்பரேஷனைத் துவக்கினார்கள். "ப்ரக்யூர்மெண்ட் அண்ட் டிஸ்ட்ரிப்யூஷன் " என்ற பணியை மட்டும் பஞ்சாப் கார்ப்பரேஷன் ஏற்றுக்கொண்டிருக்கிறதே தவிர எல்லாப் பொறுப்புகளையும் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவேதான் அங்கே லாபகரமாக நடக்கிறது, இங்கே நஷ்டம் ஏற்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, நிர்வாகச் செலவும் வீணாகி பொருளாதார விரயத்தை ஏற்படுத்துகிறது. எதற்கு இந்த கார்ப்பரேஷன்? இன்னும் கொஞ்சநாள் போனால் கோழி முட்டைக்கு ஒரு கார்ப்பரேஷன், கோழிக் குஞ்சுக்கு ஒரு கார்ப்பரேஷன், ஆட்டுக்கு ஒரு கார்ப்பரேஷன், மாட்டுக்கு ஒரு கார்ப்பரேஷன் என்று இப்படி வளர்த்து நம்முடைய பணத்தை வீணாக்கக் கூடாது என்றுதான் சுட்டிக்காட்டுகிறேனே தவிர வேறு எதற்காகவும் அல்ல என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள

விரும்புகிறேன். எனவே, தயவு செய்து கோழி வளர்ப்புக் கழகத்தை இந்த நாட்டு மக்கள் கேலி பேசும் அளவிற்கு உண்டாக்க வேண்ட மென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கார்ப்பரேஷன்களை அதிகமாகப் போட்டு காரியங்களைச் சுலபமாகக் ஆக்குவதற்கும், பண வசதிகளை பேங்க் மூலமாகப் பெறுவதற்கும் அரசு ஏற்பாடு செய்தது தவறு அல்ல. அதற்காக கோழிக்கு ஒரு கார்ப்பரேஷன், முட்டைக்கு ஒரு கார்ப்பரேஷன் குஞ்சுக்கு ஒரு கார்ப்பரேஷன் என்றெல்லாம் இண்டல் செய்வது முறை யல்ல. சில கட்சிகள் 18, 20 செயலாளர்களை போட்டு, அதிகாரத்தைப் பரவலாக்கி காரியங்களை பார்க்கிறார்கள்.

**திரு பெ. சௌந்தரபாண்டியன் :** கட்சியையும், ஆட்சியையும் இணைப்பது மாட்சியா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இது என்ன காட்சி என்றே புரியவில்லை.

**திரு பெ. சௌந்தரபாண்டியன் :** இதுதான் கோரக் காட்சி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :**—பார்த்தாலே தெரிகிறது.

**திரு பெ. சௌந்தரபாண்டியன் :** முன்புதான் பார்த்தோமே இதே அவையில்.

அடுத்து, உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில் இன்னொன்றும் நான் சொல்ல விரும்புகிறேன். நாம் கேட்கிறோம், மத்திய சர்க்காரில் ஒரு சுகாதார அமைச்சரா? மாநிலத்தில் ஒரு சுகாதார அமைச்சரா? அங்கே ஒரு கல்வியமைச்சரா? இங்கே ஒரு கல்வி அமைச்சரா என்று அடுக்கிக் கொண்டே போகிறோம். ஆனால் இங்கே என்ன வாழ்கிறது? உள்ளாட்சித் துறையை எடுத்துக் கொண்டால் சாலை பராமரிப்புப் பணி களையும் கவனிக்கிறது. பொதுப்பணித்துறையும் அதைக் கவனிக்கிறது. மருத்துவப் பணியை எடுத்துக் கொண்டால் உள்ளாட்சித் துறையும் கவனிக்கிறது, அரசாங்கமும் கவனிக்கிறது. கால்நடைப் பண்ணைகளை அரசாங்கமும் கவனிக்கிறது..................

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** பொதுப்பணித் துறையும் கவனிக்கிறது, உள்ளாட்சித் துறையும் கவனிக்கிறது என்று சொல்கிறார் கள். உள்ளபடியே அவர்கள் விவரம் தெரிந்து பேசுகிறார்களா, அல்லது தெரியாமல் பேசுகிறார்களா என்று ஐயமாக இருக்கிறது. பொதுப் பணித் துறை கவனிப்பது தனி ரோடுகள். உள்ளாட்சித் துறை கவனிப்பது தனி ரோடுகள். அது கூடத் தெரியாமல், பாவம் அவர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவரைச் சொல்லிப் பயனில்லை, தேர்ந் தெடுத்த முதலமைச்சரைத்தான் சொல்ல வேண்டும்.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, உள்ளபடியே நான் மிகவும் அனுதாபப்படுகிறேன். சாலையைக் கவனிக்க என்றுதான் நான் சொன்னேன், அமைச்சரவர்கள் சோலையில் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, இதனால் வீண் நிர்வாகச் செலவுதான் ஏற் படுகிறது. இதைக் குறைப்பதற்கு நிர்வாகச் சீர்திருத்தம் மிகமிக தேவை என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் துறை ரிப்பன் காலத்திலிருந்து தொடங்கப்பட்டது. அதில் இதுவரையில் ஏற்படாத ஒரு வரலாற்றைக் தமிழகம் கண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுது உள்ளபடியே நான் வேதனைப்படுகிறேன். போடிநாயக்கனூர் நகராட்சித் தலைவர், நிர்வாக அதிகாரியின் நிர்வாகத் தில் குறுக்கிட்டதால் அவர் நிர்வாகத்தைச் சரிவர நடத்த முடியாத சூழ்நிலை உருவானதால் இருவருக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டு, கசப்பு மனப்பான்மை உருவாகியது, தகராறு முற்றியது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நகராட்சி மன்றத் தலைவர் ஹைகோர்ட் டிலே அந்த நிர்வாக அதிகாரிமீது ரிட் மனு தாக்கல் செய்திருக்கிறார். இது நியாயமா? இதைத் தடுத்திருக்கக்கூடாதா? நிர்வாக இயந்திரத்தை ஒழுங்காக நடத்தி, வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கக் கூடாதா?

திருச்சி மாவட்டத்தில் உள்ள ஆரம்ப ஆசிரியர்களை சில ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அறுவைச் சிகிச்சைக்கு ஆள் பிடிக்கும் பணியில் ஈடுபடுத்தவும், அவர்கள் சம்பளத்தில் கொஞ்சம் நன்கொடை பெறவும் எவ்வளவு கடுமை காட்டுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்து அதைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே புதுக்கோட்டையில் இதுபோன்ற சம்பவம் நடந்து அது சம்பந்தமாக நடந்த சூழ்நிலைகளை மறந்துவிடக்கூடாது. ஆரம்ப ஆசிரியர்கள் ஒரு மாபெரும் கிளர்ச்சியைத் துவக்கியிருக்கிறார்கள். அதற்கு அணை போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டோர் நல இலாகாவில், திருச்சி மாவட்டத் தில் ஏற்கெனவே வெளி மார்க்கெட்டில் பொருள்களை விடுதிகளுக்கு வாங்கினார்கள். ஆனால், இப்பொழுது அங்கேயுள்ள அதிகாரியின் ஆலோசனையின்பேரில் கூட்டுறவு மார்க்கெட்டில் வாங்குகின்ற சூழ் நிலையைப் பார்க்கிறோம். வெளி மார்க்கெட் விலைக்கும், கூட்டுறவு மார்க்கெட் விலைக்கும் எவ்வளவு வித்தியாசம் உள்ளது என்பதை சிந்தித்துப் பார்க்க சில சான்றுகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசி 75 கிலோ கொண்ட மூட்டை வெளி மார்க்கெட்டில் 90 ரூபாய். சூப்பர் மார்க்கெட்டில் 123 ரூபாய். புளி ஒரு கிலோ வெளி மார்க்கெட்டில் 2·75 ரூபாய் ; சூப்பர் மார்க்கெட்டில் ரூ. 5·50 ; பருப்பு ஒரு கிலோ வெளி மார்க்கெட்டில் ரூ. 2·20 ; சூப்பர்மார்க் கெட்டில் ரூ. 2·60 ; பொட்டுக் கடலை ஒரு கிலோ வெளி மார்க்கெட்டில் ரூ. 2·25 ; சூப்பர் மார்க்கெட்டில் ரூ. 3; மிளகாய் ஒரு கிலோ வெளி மார்க்கெட்டில் ரூ. 3·50 ; சூப்பர் மார்க்கெட்டில்..

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளி மார்க்கெட்டுக்கும் சூப்பர்
மார்க்கெட்டுக்கும் இடையே இருக்கிற விலை வித்தியாசத்தைப் படித்துக்
கூறுகிறார்கள். விலை வித்தியாசம் இருக்கலாம். வெளி மார்க்கெட்டில்
வாங்குகிற பொருள்கள் கலப்படமாக இருக்கலாம். அளவில் குறைவாக
இருக்கலாம். சூப்பர் மார்க்கெட்டில் அப்படி இருக்க முடியாது.
சூப்பர் மார்க்கெட்டில் வாங்குவதால் அவர்களே சாமான்களை வண்டியில்
வைத்து விடுதிக்குக் கொண்டு வந்து கொடுத்து விட்டுப் போகிறார்கள்.
எல்லாவற்றுக்கும் மேலாக கூட்டுறவு மார்க்கெட்டில்தான் வாங்க
வேண்டுமென்று 1956-ம் ஆண்டிலிருந்தே விதி முறை வகுக்கப்பட்டுத்
தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். கூட்டுறவு மார்க்கெட் இல்லாத
இடங்களிலே வெளி மார்க்கெட்டில் வாங்கிக் கொண்டிருக்கிற நிலை
இருந்துகொண்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வெளி மார்க்கெட்டில் பொருள்
களின் தரமும் நன்றாகத்தான் இருக்கிறது. அவர்களே விடுதிக்குக்
கொண்டு வந்து போட்டுக் கொண்டுதான் இருந் தார்கள். கேள்வி
நேரத்தில் நான் கேட்டபோது கூட அதிகாரிகள் அனுப்பிய ஆலோசனை
பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்
கள். ஆகவே, நான் சொல்லுகின்ற கருத்தில் எந்தவிதமான மாறுபாடும்
இல்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரிசிக்கு மட்டும் ஒரு மாணவனுக்கு மாதம் ஒன்றுக்கு ஆகின்ற
செலவுத் தொகை 24 ரூபாய். அரசாங்கம் ஒரு மாணவனுக்குத்
தருகிற பணம் ஒரு மாதத்திற்கு 23 ரூபாய்தான். எஞ்சியிருக்கும் உப்பு,
புளி ஆகியவற்றை எப்படி வாங்குவது என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.
அதே போல் கல்லூரி மாணவர்களுக்கு விலைவாசி ஏற்றத்தால் விடுதிக்
கட்டணத்தை ஏற்றிக் கொண்டே போகிறார்கள். ஆகவே, அவர்
களுடைய உபகாரச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க இந்த அரசாங்கம்
மத்திய அரசோடு வாதாடிப் பெற வேண்டுமென்று வேண்டி விரும்பிக்
கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டத்திற்காக நாம் ஏராளமான பணத்தை ஒதுக்கி
இருக்கிறோம். இதில் கண்ணோட்டம் செலுத்த வேண்டியது காவிரி
ஆற்றுப் பகுதிகளைவிட வறண்டிருக்கின்ற பகுதிகளுக்கெல்லாம் குடி
தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றுவதில் முக்கியத்துவம் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் சங்கரி
நகரத்தில் தற்போது கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் இருந்து வருவதைப்
பத்திரிகை வாயிலாகப் பார்த்திருக்கலாம். நகரத்திலுள்ள பெரும்பா
லான கிணறுகள் வரண்டு விட்டன. மக்கள் குடிக்கத் தண்ணீர்
இல்லாது அலைந்து கொண்டிருக்கிற சூழ்நிலையைப் பார்க்கிறோம்.
காசு கொடுத்து தண்ணீர் வாங்க வேண்டிய சூழ்நிலை உருவாகி
இருக்கிறது. ஏற்கெனவே, காவிரியிலிருந்து நீர் கொண்டு வரத்
திட்டம் தீட்டப்பட்டது. காலதாமதமாவது ஏன் என்று அந்தப்





பகுதி மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற பின்தங்கிய பகுதிக்கு முக்கியத்துவம் கொடுத்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு பேசிய பெரும்பான்மையான உறுப்பினர்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் கோவைத் தேர்தலைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். கவர்ச்சியைக் காட்டி, நடிகரைக் காட்டி ஓட்டு வாங்கிய காரணத்தால்தான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது என்று கேலியும் கிண்டலும் பேசினார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் காரைக்காலில் பேசும்போது "கவர்ச்சியை வைத்து மக்களை ஏமாற்றி விடலாம் என்று ஒரு கட்சி நடத்தப்பட்டு வருகிறது" என்று சொன்னார்கள். அதற்குப் பின்னால் நான் ஆதாரத்தோடு பதிலளிக்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் "நாங்கள் அண்ணாவைக் காட்டி ஓட்டுகளைக் கேட்கிறோம்; சிலர் முகத்தைக் காட்டிக் கொண்டு அரசியல் நடத்துகிறார்கள்" என்று புதுவையில் பேசினார். அவருக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். மக்களிடம் மூளையைக் காட்டினீர்கள்; பார்த்த அவர்கள் "இல்லை" என்று தெரிந்த காரணத்தால் உங்களுக்கு ஓட்டு இல்லை என்று சொல்லிவிட்டார்கள் என்பதுதான் என்னுடைய பதிலாகும்.

திரு. எல். கணேசன் அவர்கள் பேசும்போது நடிகர் கட்சி என்று சொன்னார்கள். நடிகர் கட்சி என்று இங்கே எந்தக் கட்சியும் இல்லை. சட்ட மன்றத்திலே பேசிய அவர் இப்படிக் குறிப்பிடுவது நம்முடைய சட்டமன்ற மரபை இழிவுபடுத்துவதாகும். சினிமா கவர்ச்சியால்தான் மக்கள் ஓட்டுப் போட்டுவிட்டார்கள் என்று மெத்த வருத்தப்பட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சினிமா கவர்ச்சியைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் கருணாநிதி அவர்களே 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 7-ம் தேதி அன்று எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில் நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேசுகின்ற போது சொன்னவற்றை நான் சுட்டிக் காட்டுவது சாலப் பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

"முரண்பட்ட கொள்கைக்குத் தான் தமிழ் நாட்டு மக்கள் அண்மைக் காலத்தில் தங்களுடைய மேலான தீர்ப்பை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தீர்ப்பு திருச்செங்கோட்டில் வழங்கப்பட்டது. பிறகு திருவண்ணாமலையில் தொடர்ந்தது. இப்பொழுது சென்னை மாநகராட்சித் தேர்தலிலே வழங்கப்பட்டிருக்கிறது. தோல்வி அடைந்த காங்கிரஸ் நண்பர்கள் அந்த நல்ல தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாதது மட்டுமல்ல, கேலி பேசும் அளவுக்கு முற்பட்டிருக்கிறார்கள். 'அது கொள்கைக்குக் கிடைத்த வெற்றி அல்ல, ஏதோ சில சினிமா நடிகர்களுக்காகக் கிடைத்த வெற்றி என்றும், சினிமா நடிகர்கள் தேர்தல் பிரசாரம் செய்யலாமா" என்றும் சட்டமன்றத்திலே கேள்விகள் எழுப்பப்பட்டன என்பதை நாம் நன்றாக அறிவோம். சினிமா நடிகர்கள் திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டால் அது தங்களுடைய உள்ளத்தில் பெரிய

எரிச்சலை ஏற்படுத்தும் என்று கருதுகிறார்களோ அவர்கள் அமெரிக்க நாட்டு ஜனாதிபதி தேர்தலில், கென்னடி வெற்றி பெற்றதற்குப் பாடுபட்டது சினிமா நடிகர்கள் என்பதை மறந்து விட்டார்களா ? இந்தியத் துணைக் கண்டத்தில் கிருஷ்ணமேனன் பம்பாயிலே தேர்தலில் போட்டியிட்ட நேரத்திலே, கிருஷ்ணமேனன் வெற்றிக்குப் பாடுபட்டது வட பாகத்தில் இருக்கிற பிரபல சினிமா நடிகர்கள் என்பதை ஏனோ மறந்து விட்டார்கள். சினிமா என்றால் ஏதோ ஒரு தீண்டத்தகாத ஒன்று என்றும், சினிமா என்றாலே நாட்டிலே இருக்கக்கூடாத ஒரு கலை என்றும் எண்ணக்கூடிய எண்ணம் காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஒரு சில அமைச்சர்களுக்கு இல்லாவிட்டாலும், காங்கிரஸ் கட்சியிலே இருக்கிற ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் பெரும் பாலோருக்கு இருப்பது ஏனோ எனக்குப் புரியவில்லை " என்று அன்று பேசியிருக்கிறார்.

அதையேதான் நானும் இன்று கேட்கிறேன். உறுப்பினர்கள் இப்படிப் பேசினாலும் தலைவர்கள் அப்படிச் சொல்லலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சினிமா கவர்ச்சியால் வெற்றி பெற்றதல்ல ; கொள்கையைச் சொல்லி வெற்றி பெற்றிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1966-ம் ஆண்டு கோவையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரே நாளில் 30,000 ரூபாயைத் தேர்தல் நிதியாகத் திரட்டித் தந்த நேரத்தில் முரசொலியில் தலையங்கம் எழுதினார் கருணாநிதி. அது இதோ ! "கொடுக்க ஒரு கரம், கொடியவரின் கொடுக்கை நறுக்க மறுகரம் கொண்டவர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்."

1966-ல் இருந்த நிலைமை மாறி 1974-ல் என்ன நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணும் போது உள்ளபடியே பரிதாபப்படுகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் பற்றி முரசொலியில் கருத்துத் தெரிவித்திருக்கிறார். 1974-ம் ஆண்டு மார்ச் திங்கள் 5-ம் நாளில் "உடன் பிறப்பே" என்ற கடிதத்தில் "சட்டியில் உள்ள மாவைக் கொண்டு நம்மால் செய்ய முடிந்த பலகாரம் இது. சூடும் சுவையும் குன்றாமல் இருக்கிறது" என்று எழுதியிருக்கிறார். இது அவருடைய விமர்சனம்.

மாவுக்குத் தகுந்த பலகாரந்தான் செய்ய முடியும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன், ஆனால் தற்போது சுட்டுவைத்த பலகாரம் ஏற்கனவே மக்கள் முன்னால் புட்டு வைக்கப்பட்டு ஆறிப் போனவை என்பதை மட்டும் தயவு செய்து மறந்து விடக்கூடாது என்று சொல்லிக் கொள்கிறேன்.

"கூனன் நிமிர, குருடன் பார்வை பெற இந்த அரசு புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறது" என்று சொன்னார்கள். 53 பக்கங்கள் கொண்ட நிதிநிலை அறிக்கையை அவையில் படிக்கின்ற நேரத்தில் நான் நன்றாகக்





கூர்ந்து கவனித்தேன். சட்டமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் முதுகு வலி தாங்காமல் நிமிர்ந்து உட்கார்ந்தார்களே தவிர, நாட்டிலுள்ள கூனன் நிமிரவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தாங்களாவது நிமிர்ந்ததில் எனக்கு மகிழ்ச்சி.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நீங்களும் சேர்ந்துதான் நிமிர்ந்தீர்கள்.

நாவின் நடனங்களும், நளினங்களும் ஏராளமாக உள்ளன. நாட்டு மக்களுக்குத் தேவையான திட்டங்கள் குறைந்துள்ளன. நிதிநிலை அறிக்கையில் பக்கங்கள் நீண்டிருக்கிறதே தவிர, நாட்டு மக்களின் துக்கங்கள் குறைய என்ன ஆலோசனை சொல்லப்பட்டிருக்கிறது என்று இனி மேல்தான் பொறுத்துப் பார்க்கவேண்டும். (குறுக்கீடு) முதலமைச்சர் அவர்கள் ஏதாவது கருத்துச் சொல்ல வேண்டுமென்றால் எழுந்து சொல்லலாம்.

எனவே இந்த நான்கு ஆண்டு அனுபவத்தை வைத்துப் பார்க்கின்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் புதிதாக ஒரு கழகத்தைத் துவக்கி இருக்கிறார். பூம்புகார் போக்குவரத்துக் கழகத்தை— காலையிலே கூட "புகாரிலே ஆரம்பிக்கலாமே" என்று கேட்ட நேரத்தில் அது சிறந்த ஆலோசனை என்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்களே தவிர, "செய்வோம்" என்ற உறுதியைத் தரவில்லை. புகார் நகரத்திற்கு ஒரு சிறப்பு ஏற்படுத்துவதற்காக இந்தப் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடமாக பூம் புகார் நகரில் துவங்கவேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது கப்பல் போக்குவரத்துக் கழகம். பூம்புகார் ஓரத்தில் கப்பல் நிற்கக்கூடிய அளவிற்கு—ஏற்கனவே இருந்த நகரம் மூழ்கிப் போய்விட்டது—ஐந்து மைல் தொலைவில், ஆறு மைல் தொலைவில் கூட கப்பல் நிற்கமுடியாது. வேண்டுமானால் கட்டு மரத்தை விடச் சொல்லலாம். பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என்பது அந்த நிறுவனத்தின் பெயரே தவிர, அந்த ஊரிலிருந்து புறப்படுவது என்பதல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வேண்டுமானால் கட்டுமரத்தை விடச் சொல்லலாம் என்று சொல்கிறார் அமைச்சர் அவர்கள். நீங்கள் யாரையும் கட்டுமரத்தில் கட்டி கடலில் விடாமல் இருந்தால் சரி, அந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை நிறுவும் போது அதன் தலைமை யிடத்தை அங்கு வைத்தால் என்ன என்றுதான் நான் கேட்கிறேன். அது ஒரு நிறுவனத்தின் பெயர் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கப்பல் விடும்போது என்னென்ன சொல்வார்களோ பொருத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

முதல் அமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் ஏராளமான திட்டங்களை எல்லாம் கோடிட்டுக் காட்டியிருக்கிறார். செய்த திட்டங்கள் அத்தனையையும் சுட்டிக் காட்டுவது என்பது அரசாங்கத்தின் பெருமையை உயர்த்துவதற்கு என்றாலும் ஏற்கனவே அரசியல் அனுபவம் பெற்று, முதல் அமைச்சராக இருப்பதையும் வைத்தும், தன் அனுபவத்தை வைத்துக்கொண்டும், தன் எண்ணத்தை நிறைவேற்ற ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி இன்னொரு டாக்டர் பட்டம் பெறுவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையை அளித்துள்ளார் என்று கூறி இந்த நிதிநிலை அறிக்கையை என்னால் வரவேற்க முடியாமைக்கு மெத்த வருத்தப்பட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. க. மு. இராசகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, 1974–75ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப் பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரி வித்துக்கொள்கிறேன். குறிப்பாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் அரை மணி நேரம் கொடுத்தால்தான் தொகுதி பற்றிய பிரச்னைக் குறித்து பேச முடியும். ஆனால் நேரம் இல்லை. கடைசியில் நான் தள்ளிவிடப் பட்டிருக்கிறேன்.

மக்களுக்கு வேண்டியது முதன் முதலாக உணவு, உடை, இருப்பிடம். இந்த மூன்றையும் கொடுக்கத் தவறி விட்டது டெல்லி பாராளுமன்றத்தைக் கட்டிக் காத்துக்கொண்டிருக்கிற மைய அரசு. அப்படி கிட்டத்தட்ட 25, 26 ஆண்டுகளாக ஆண்டுக் கொண்டிருக்கிற அந்த அரசை இந்த நாட்டில் தட்டிக் கேட்க நாதி இல்லை. விலைவாசி ஏறிக்கொண்டிருக்கிறது என்று எதிர் கட்சி உறுப்பினர்கள் சிலர் எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால், ஒரு சினிமா நடிகர், எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இந்த நாட்டின் வரிப்பணத்தைக் கட்டாமல் இந்த நாட்டுக்குச் சேர வேண்டிய தொகையைக் கட்டாமல் கடன் காரனாக இருக்கிற எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்—நான் இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் ஒரு அரசாங்கத்திற்கு ஒரு விவசாயி அல்லது ஒரு குடிமகன் கடன் வாங்கியிருப்பானால் அந்தத் தொகையை அவன் கட்டியதற்குப் பின்னால் தான் மீண்டும் அந்தத் துறையிலிருந்து அவன் கடன் பெறமுடியும். அது கூட்டுறவுத் துறையானாலும் சரி, அல்லது விவசாயத் துறையானாலும் சரி, விதிமுறைகள் அப்படித்தான் இருக்கிறது.

ஆனால், உலகம் சுற்றும் வாலிபனுக்காக வாங்கிய கடன் அப்படியே இருக்கிறது. வழக்குக்குப் போய்க்கொண்டிருக்கிறது. அப்படி இருக்கிற போது மீண்டும் வெளிநாட்டுக்குச் செல்வதற்கு, ரஷ்ய நாட்டுப் பயணத்திற்கு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது இந்திய அரசால். அடுத்து மீண்டும் வெளிநாடு செல்வதற்குப் பணம் கொடுக்கிறது இந்திய நாட்டு சர்க்கார் என்று சொன்னால் 55 கோடி மக்கள் நம்பியிருக்கிற இந்த சர்க்கார் எந்த அளவிற்கு ஒரு சினிமா நடிகருக்கு, இந்த நாட்டை கொள்ளையடிக்கிற ஒரு நபருக்கு பாதுகாப்பு கொடுக்கலாம். அதன் காரணமாகத்தான் இன்று பாண்டிச்சேரியில் ஜனநாயகம் படு கொலை செய்யப்பட்டிருக்கிறது.





திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர். எங்கள் கட்சியின் தலைவர் புரட்சித் தலைவர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக இந்த மன்றத்தில் வீற்றிருக்கிறார்கள். ஒரு கட்சியின் தலைவரைப் பார்த்து சினிமா நடிகர், என்று குறிப்பிடுவது பொருத்தமா? அல்லது இந்தக் கட்சியை அவமதிக்கிறாரா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பாயிண்ட் ஆப் கிளாரிபிக்கேஷன். திரு சௌந்தரபாண்டியன் அவர்கள் அவர்களது கட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்கள் கட்சித் தலைவராக அவையில் வீற்றிருப்பதாகச் சொன்னார்கள். அப்படி அவர்கள் வந்து அமர வேண்டும் என்பதுதான் எங்கள் கருத்தாகும். தயவுசெய்து அவர்கள் தலைவரிடம் சொல்லி இந்த மன்றத்திற்கு வந்து இங்கு நடக்கிற விவாதத்தில் கலந்துகொண்டு இந்த அரசின் மேல் உள்ள குறைகளை அவர்கள் மூலம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது அவர் மறைமுகமாகப் பேரவைத் தலைவரைத் தாக்குகிறார். 1971-ம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்த அவைக்கு எப்போதாவது வந்து உட்கார்ந்தார்கள் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. சி. ஆறுமுகம் : உங்கள் கட்சித் தலைவரைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். மன்றத்தில் வந்து அமர்ந்து, விவாதத்தில் கலந்து கொண்டு நாட்டு மக்களுக்கு அவர்கள் மூலம் செய்திகள் அனுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அவர் சார்பாகத்தான் நாங்கள் நாட்டு மக்களுக்குச் செய்திகள் அனுப்பிக்கொண்டிருக்கிறோம். இதையே தாங்கமுடியாமல் நண்பர் அவர்கள் வேதனைப் படும்போது அவர் வந்து ஏன் உங்களை வேதனைப் படுத்த வேண்டும் என்றுதான் வராமல் இருக்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம்: அப்படியானால் வேறு யாராவது ஒரு உறுப்பினரைத் தலைவராக ஆக்கி அவர்களை முன்னிலையில் உட்காரச் சொல்லலாமே அதற்கு எங்களுக்கு ஆட்சேபனை இல்லை.

திரு. சி. வே. வேலப்பன்: அவர்களைப் போல் ஆபீஸையும் காலி செய்து விட்டு, வீட்டையும் காலி செய்து விட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ராசகோபால், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. க. மு. இராசகோபால் : ஊழல் ஊழல் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் குற்றச்சாட்டுக்களைச் சொன்னவர்கள் இங்கிருந்து பிரிந்து ஒரு வருடம் நான்கு மாதங்களுக்கு முன்பு சென்றவர்கள் சொன்னார்கள். ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இப்போது ஒரு நான்கு நாட்களுக்கு முன்னால், ஒரு பத்து நாட்களுக்கு முன்னால் போயிருக்கிற சீனிவாசன் இங்கிருக்கிற போது ஊழலைப்பற்றிச் சொன்னார்களா? இப்போது சீனிவாசன் அவர்கள் அங்கு சென்றிருக்கிறார்கள். அப்போது சீனிவாசன் புனிதமானவரா? எம்.ஜி.ஆர். அவர்கள் இந்தத் தமிழ் நாட்டில் இருக்கிற ஒரு குடிமகன். ஒரு வசதியான பணக்காரர். யாரும் மறுக்கமுடியாது. எப்படியோ சம்பாதித்திருக்கிறார். அரசாங்கச் சொத்தைப் பெற்றிருக்கிறார். ஏன் அதைத் திருப்பிக்கொடுக்கவில்லை?

திரு. சி. வெ. வேலப்பன்: நாட்டில் கடன் பெற்றிருக்கிறவர்கள் எல்லாம் கொடுத்துவிட்டார்களா, அவர்கள் முறையாகக் கொடுத்துக் கொண்டு வருகிறார். பாக்கி வைத்திருப்பது முறைதான்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களை, எம். ஜி. ஆர். அவர்கள் அரசாங்கத்திடமிருந்து வாங்கிய நிலத்தை சும்மா வாங்கவில்லை. குத்தகைக்குத்தான் வாங்கியிருக்கிறார்கள். ஆகவே பொறுப்புள்ள ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பற்றி இம்மாதிரி குற்றச்சாட்டை இந்த அவையில் எழுப்புவது எந்த விதத்தில் பொருந்தும், இது நியாயமா வெளியில் வேண்டுமானால் பேசட்டும். (சிரிப்பு) சிரிக்காதீர்கள், சிந்தியுங்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த அவை உறுப்பினைப் பற்றி இந்த அவையில் எழுப்பலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஏற்கெனவே ஒரு மரபு வைத்திருக்கிறீர்கள். எந்த உறுப்பினர் மீதும் ஒரு குற்றச்சாட்டு எழுப்பவேண்டுமென்றால் தங்களிடம் காட்டிவிட்டு தங்கள் ஒப்புதல் பெற்ற பிறகுதான் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது டாக்குமென்ட்ஸ்பற்றியது. அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டு நிலம் அடமானம் பெற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு மறுக்கப்படவில்லை. அது இந்த மன்றத்தில் பல தடவை சொல்லப்பட்டிருக்கிறது. நான் வாங்கவில்லை என்று அது மறுக்கப்படவில்லை. திரும்பக் கொடுக்கவில்லை என்பதுதான் அவர்கள் குற்றச்சாட்டு.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆப் ஆர்டர். எங்கள் தலைவர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசிடமிருந்துதான் அதை குத்தகைக்கு எடுத்திருக்கிறார்கள். ஆகையால் இந்த அரசு அப்போது செய்தது சரி என்பதை ஏற்றுக் கொள்கிறதா இல்லையா என்பதை



முதலில் அறிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனெனில் அரசு பணத்தை வாங்கிக்கொண்டுதான் ஒரு இடத்தை குத்தகைக்கு விட்டிருக்கிறது. குத்தகைக்கு எடுப்பது பாவம் என்கிறீர்களா, தவறு என்கிறீர்களா, எதற்காக திரும்ப கேட்கிறார்கள் என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன். தயவு செய்து முதலமைச்சரே பதில் சொல்ல வேண்டும்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் சொல்கிறேன். நண்பர் செழியன் அவர்கள் நானே விளக்கம் சொல்ல வேண்டுமென்று கேட்டார்கள். கொடுத்ததில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் சில பேர் இப்படி நிலங்களை வாங்கிக்கொள்ளுகிறார்கள் என்று திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் குறை கூறியபோது, நீங்கள் வாங்கிக்கொண்டிருக்கிறீர்களே என்று கேட்டபோது, அவர் உடனடியாக நான் அவற்றைத் திருப்பித் தருகிறேன் என்று—கட்சியை விட்டு விலகிய உடனேயே திருப்பித் தருகிறேன் என்று—72-லேயே—அறிக்கை விட்டு இருக்கிறார்கள். இதுவரையில் திருப்பித் தரவில்லை என்று சொல்கிறேன். வேறு எந்த விளக்கமும் நான் சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## (4) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

**163.** Notification issued with G. O. Ms. No. 2064, Rural Development and Local Administration , dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Idappadi Local Planning Area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972).]

**164.** Notification issued with G. O. Ms. No. 2061, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Courtallam Local Planning Area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 1972).]

165. Notification issued with G. O. Ms. No. 3532, Revenue, dated the 30th December 1972 in regard to certain amendments to the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Rules, 1962. [*Laid on the table of the House under section* 112 (2) *of the Tamil Nadu Land Reforms Fixation of Ceiling on Land*) *Act*, 1961 (*Tamil Nadu Act* 58 *of* 1961.]

166. Notification issued with G. O. Ms. No. 2687, Public (Services-A), dated the 10th October 1973 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of the post of Special Officer (Administration) in the Directorate of Tamil Development from the Commission's purview. [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India*).]

167. Notification issued with G. O. Ms. No. 2646, Public (Services-A), dated the 4th October 1973 in regard to amendments to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for inclusion of the post of Educational Officer, Government Museum, Madras within the Commission's purview. [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

***B. Reports, Notifications and Other Papers.***

**Nil.**



## இணைப்பு I.

[ 248-ம் பக்கத்தில் 396 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட விடையைக் காண்க.]

தமிழ்நாட்டில் தற்போதுள்ள பட்ட மேற்படிப்பு வசதிகள் இருப்பதைக் கொண்டும், உடற்கூறு இயல், சிசுநோய் இயல், மேகநோய் இயல், கதிரியக்க நூல், மகப்பேறு இயல், முதலியவை போன்ற பாடப்படிப்புகளில் தரம் உயர்ந்த துறைகள் பல இருப்பதன் காரணமாகவும் இம் மாநிலம் மருத்துவ பட்ட மேற்படிப்புக் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் ஏற்ற சீரான நிலையம் இருப்பதாகக் கருதப்பட்டுள்ளது. இத்தகைய வாயில்களையும், அவற்றைக் கொண்டு பெற்ற அனுபவத்தையும் வைத்து, இம் மாநிலத்தில் மருத்துவம், அறுவை மருத்துவம் இவற்றில், உயர்ந்த துறைகளிலும் மிகவும் மேலான துறைகளிலும் பட்டமேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன:

2. அடிப்படை மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் கீழ்க் காணும் ஆசிரியர்களைக் கொண்டு 1—3—1968-ல் சென்னைப் பல்கலைக் கழகத்தால் தொடங்கப்பட்டது.

உயிர் வேதியியல் துறை :

துணைப் பேராசிரியர் (Reader) ஒருவர்,

விரிவுரையாளர் இருவர்.

உட்சுரப்பி இயல்துறை :

துணைப்பேராசிரியர் ஒருவர்

விரிவுரையாளர் ஒருவர்.

மரபியல் துறை :

விரிவுரையாளர் ஒருவர்.

3. அடிப்படை மருத்துவ அறிவியல், பட்ட மேற்படிப்பு நிறுவனம் ஒன்றைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதற்காக, 1965-66 ஆம் ஆண்டிலிருந்து நான்காண்டு காலத்திற்கு ரூபாய் 12·50 லட்சத்திற்கு மேற்படாத தொடரா இன மானியமும், ஆண்டொன்றுக்கு ரூபாய் ஒரு லட்சம் தொடர் மானியமும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்க அரசு அனுமதி அளித்தது.

4. மேற்சொன்ன நிறுவனத்தை ஏற்படுத்துவதற்காக சென்னைப் பல்கலைக்கழகத்திற்குத் தொடரா இன மானியமாக ரூ. 183,33,3-ஆம் தொடர் மானியமாக ரூபாய் 14,550-ம் வழங்கப்படுவதற்கு 1965-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் அரசு அனுமதியளித்தது. இந்த நிறுவனத்தின் தொடர் செலவுக்காக ரூபாய் ஒரு லட்சம் மானியமாக 1967-ஆம்

[1974 மார்ச் 13

மண்டலம் III-B.

பாதுகாப்புப் பகுதியில் முதலில் ஒதுக்கப்பட்ட மனைக்குப் பதிலாக மற்றொரு மனை, நாவலர் திடலில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. இங்கு நீர்த்தேக்கம் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு கடைக்கால் போடும் பணி நடந்தேறி வருகிறது.

(*a*) No, The work is in progress.

(*b*) The Alandur town is divided into five zones and the progress of Service Reservoir work in various zones is given below

*Zone I* : The site for the service reservoir is yet to be handed over by the Municipality. Since, the original site is encroached by the unauthorised persons, a case is pending at Poonamallee Panchayat Court. The Municipality has been asked to hand over the land opposite to the original site for the construction of service reservoir. The matter is being pursued with the municipal authorities.

*Zone II A* : The Service Reservoir is completed in all respects.

*Zone II B* : The Service Reservoir is completed in all respects.

*Zone III A* : The Service Reservoir is completed. The pipe connection works and the testing works are in progress.

*Zone III B* : In lieu of original site in Defence area, alternate site is selected in Navalar Thidal and the construction of Service Reservoir is takenup and the work is in progress at foundation level.

## இணைப்பு III.

[255-ம் பக்கத்தில் 403-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

கீழ்க்கண்ட இடங்களில் வீட்டுமனை பட்டா கொடுக்க தகுதி உள்ளது:—





| வரிசை எண்ணும், கிராமத்தின் பெயரும். | வீட்டு மனைக்காக இடங்கள் உள்ள நிலங்களின் எண்ணிக்கை. | மொத்த விஸ்தீரணம். ஏ. செண்ட் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 பட்டாம்பாளையம் .. .. .. .. | 4 | 1·86 |
| 2 சொக்கனூர் .. .. .. .. | 4 | 1·40 |
| 3 மேற்குபாதி .. .. .. .. | 2 | 1·75 |
| 4 வள்ளிவரம் .. .. .. .. | 14 | 12·06 |
| 5 தொரவலூர் .. .. .. .. | 15 | 4·65 |
| 6 எட்டி வீரம்பாளையம் .. .. .. | 4 | 1·35 |
| 7 பெர்மாநல்லூர் .. .. .. .. | 1 | 1·26 |
| 8 காலிபாளையம் .. .. .. .. | 8 | 6·10 |
| 9 கணக்கம்பாளையம் .. .. .. | 1 | 0·25 |
| 10 பொங்கு பாளையம் .. .. .. .. | 3 | 1·49 |
| 11 செட்டிபாளையம் .. .. .. .. | 3 | 3·00 |
| 12 மண்ணரை .. .. .. .. | 3 | 2·10 |
| 13 தொட்டிபாளையம் .. .. .. | 2 | 2·10 |
| 14 ஆண்டிபாளையம் .. .. .. .. | 2 | 2·97 |
| 15 திருப்பூர் .. .. .. . .. | 3 | 3·12 |
| 16 நல்லூர் .. .. .. .. .. | 12 | 19·36 |
| 17 முத்தனம் பாளையம் .. .. .. | 1 | 2·00 |
| 18 வீரபாண்டி .. .. .. .. | 4 | 5·00 |
| மொத்தம் .. | 86 | 71·82 |

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

## வியாழக்கிழமை, 1974 மார்ச் 14.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள். கேள்வி 411. திரு என். கே. பழனிசாமி அவர்கள் கேள்விக்கு மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் விடையளிக்கலாம்.

### 1. தகவல் கோரல்.

ஒத்திவைக்கப்படும் வினாக்கள் பற்றி உறுப்பினர்களுக்கு முன்னதாக அறிவிப்பது குறித்து.

THIRU K. T. K. TANGAMANI: Before questions are taken up, I would like to make a submission. The questions are entered in the list of business and we found that yesterday and day-before-yesterday some questions were postponed. We would like to know whether any of the questions are going to be postponed today and if so, we would like to know when questions postponed yesterday and day-before-yesterday are likely to come?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றைய பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட கேள்விகள் இன்றைய பட்டியலில் இருந்தால் அவை இன்று எடுத்துக்கொள்ளப்படும் என்று அர்த்தம். இன்றைய பட்டியலில் உள்ள கேள்விகளைப் பொறுத்த வரையில், அவற்றில் ஏதாவது ஒத்திவைக்கப்படுமா என்பது, அமைச்சர் யாராவது வரவில்லையானால், அல்லது ஒத்திவைக்கவேண்டும் என்று அமைச்சர்களிடமிருந்து தகவல் வந்தால் அவை ஒத்திவைக்கப்படும். இன்றையகேள்விகளைப்பொறுத்து, அப்படிப் பட்ட தகவல் ஏதும் வரவில்லை.

THIRU K. T. K. TANGAMANI: Sir, the Ministers have got the right to request you to get the questions postponed. Normally the practice is, they address you; but if such a thing happens we would like you to inform us, in advance before the questions are taken up, 'that the following questions addressed to a particular Minister will be taken up on a particular day.' Otherwise, what happens is, we come preparing ourselves for putting supplementary questions but then we are informed that some questions are going to be postponed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விப் பட்டியலில் கண்டுள்ள கேள்விகளை வரிசையாக எடுத்துக்கொள்ளும்போது, யாராவது அமைச்சர் தம்முடைய கேள்விகளை ஒத்திவைக்கவேண்டுமென்று கோரி வேண்டு கோள் விடுத்திருந்தால், அந்தக் கேள்விகள் வரும்போது, "வேண்டு கோளின்படி ஒத்திவைக்கப்படுகின்றன" என்று சொல்கிறேன். ஒவ்வொரு நாளும் கேள்விகளை எடுத்துக்கொள்ளும்போது, இந்த இந்தக் கேள்விகள் ஒத்திவைக்கப்படும் என்று முன்கூட்டியே தெரிவிக்குமாறு சொல்கிறீர்கள். அது முடியுமா என்று பார்க்கலாம்.

## 2. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### *Tourist Bungalows.*

* 411 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal to provide boarding houses and travel facilities at cheaper rates for foreign tourists in the Tourist Centres?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பல இடங்களில் சுற்றுலா மாளிகைகளை நடத்தி வருகிறது, இந்த விடுதிகளில் உணவு, உறையுள் ஆகியவற்றுக்கான கட்டணங்கள் மிதமாகவே உள்ளன. சுற்றுலா பயணிகளின் வசதிக்காக முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிடுவதற்கான வரையறுத்த சுற்றுப் பயணங்களும் (Package Tours) கழகத்தினால் நடத்தப் படுகின்றன. இத்தகைய சுற்றுப் பயணங்களுக்குப் பயணிகள் அதிகமாக ஆதரவளிக்கின்றனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்துகிற சுற்றுலா மாளிகைகள், வரையறுத்த சுற்றுப் பயணங்கள் ஆகியவற்றிற்கு விதிக்கும் கட்டணங்கள் தரத்தைக் கருதிப் பார்க்கும்போது மிதமானவை என்று வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும், பயண முகவர்களும் பாராட்டியுள்ளனர்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, மாமல்லபுரம் போன்ற இடங்களில் உள்ள காட்டேஜ்களில் 60 முதல் 110 ரூபாய் வரை ரூம்களுக்கு மட்டும் வாடகை வாங்குகிறார்கள். டாக்சி கட்டணமாக 150 முதல் 200 ரூபாய் வரை வாங்குகிறார்கள். இதைக் குறைக்கவேண்டும். வாடகைகட்டணம் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது ஆகவே, எல்லா இடங்களிலும் கட்டணங்கள் ஒரே மாதிரியாக இருக்க சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சார்பாகவும், தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் சார் பாகவும் கட்டப்படுகிற மாளிகைகளுக்குத்தான் நாம் கட்டண விகிதங்களை நிர்ணயிக்க முடியும். மற்ற இடங்களில் தனியார் நடத்துகிற அத்தகைய



சுற்றுலா மாளிகைகளில் அவரவர்கள் கட்டணங்கள் விதிக்கிறார்கள். இந்திய சர்க்காரின் சார்பாக, சுற்றுலா காட்டேஜ் என்ற முறையில் அவர்கள் கட்டி யிருக்கிறார்கள். தமிழக அரசின் சார்பாகவும் கட்டுவதற்கான முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அது கட்டி முடிக்கப்படவில்லை. மற்றவர் களைக் கட்டுப்படுத்துவதற்கு வசதி இல்லை. அதற்காகத்தான் ஒரு தனிச் சட்டம் கொண்டுவரலாமா என்பதைப்பற்றி இப்பொழுது சுற்றுலாத்துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

டாக்சிகள் போன்றவற்றுக்கு அதிகக் கட்டணங்கள் வாங்குகிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இப்போதே சட்டம் இடம் தருகிறது. அதிகமாக வாங்கக் கூடாது என்றும் காவல் துறையினர் மூலமாக அவர்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உரிய கட்டணம் எதுவோ அதைத்தான் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று வரையறுக் க பட்டிருக்கிறது. ஏதாவது புகார்கள் வருமானால், அப்படிப்பட்டவர் கள்மீது டாக்சி ஓட்டுபவர்கள் மீதோ, டாக்சி சொந்தக்காரர் மீதோ உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அங்கங்கே சுற்றுலா மாளிகைகளை நடத்தி வருவதாகச் சொன்னார் கள். வெளி நாடுகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு வருகை தருபவர்கள் தமிழ்நாட்டைப்பற்றி அறிந்துகொள்ளவும், தமிழ் வளர்ச்சிக்காகப் பாடு பட்டவர்கள், தமிழக வரலாற்றில் புதிய ஏட்டை உருவாக்கியவர்கள் ஆகிய இப்படிப்பட்ட தமிழக அறிஞர்களைப்பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள வசதி செய்யும் வகையில் ஆங்காங்கு உள்ள சுற்றுலா மாளிகை களில் நூலகங்கள் திறக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளாக வருகிறவர்களுக்குப் பல்வேறு நோக்கங்கள் இருக் கும். சில பேருக்கு மொழியைப்பற்றி, வரலாற்றைப்பற்றி, புதை பொருள் ஆராய்ச்சியைப் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் இருக்கும். அப்படிப்பட்டவர்கள் சரஸ்வதி மகால் நூலகம், கரை சேத்திரா நூலகம், கன்னிமாரா நூலகம், ஓரியண்டல் நூலகம் போன்றவற்றிற்குச் சென்று வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்குத் தனி வசதிகள் தேவைப் படும்போது அவற்றைச் செய்து தருவதற்கு சுற்றுலாத் துறையினர் ஆயத்தமாக இருக்கிறார்கள். ஆனால், சுற்றுலா மாளிகைகளில் நூலகங்கள் வைக்கும் அவசியம் ஏற்படுமானால் அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டும்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்த சுற்றுலா மாளிகை களில் வெளிநாடுகளிலிருந்து வந்து தங்கும் பயணிகளுக்கு அளிக்கப் படுகிற அசைவ உணவு நல்ல தரமான நிலையில் இல்லை என்று கூறப்படுகிறது. ஆகவே, சென்னையில் உள்ள சில மிக நல்ல தரமான ஓட்டல்கள் போன்றவற்றோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு, பயணி களுக்கு நல்ல தரமான அசைவ உணவு தர அரசு ஆவன செய்யுமா ? ஜப்பான் போன்ற நாடுகளுக்குச் செல்லும் பயணிகளுக்கு அங்கே நல்ல

விளக்கத்தாள்கள் கொடுக்கிறார்கள். ஏர் போர்ட்டில் இறங்கினவுடனேயே, பஸ் கட்டணம் எவ்வளவு, டாக்சி கட்டணம் எவ்வளவு போன்ற எல்லாவிதமான விவரங்களும் குறிக்கப்பட்ட விளக்கத் தாள்கள் தரப் படுகின்றன. அப்படிப்பட்ட வசதியை இங்கும் செய்துதர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முக்கியமான நகரங்களில், தமிழக சுற்றுலா வாரியத்தின் சார்பாக, சுற்றுலா மாளிகைகள் திருச்சி, மதுரை, உதகை, கன்னியாகுமரி, திருச் செந்தூர், ஏற்காடு, கோடைக்கானல் ஆகிய இடங்களில் வைத்திருக் கிறோம். அங்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. குளிர் சாதன வசதிகள் கூட செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன. மேல் நாட்டி னருக்கு எந்தவிதமான உணவில் விருப்பமோ அத்தகைய உணவு செய்ய வழிவகைகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். மேல் நாட்டாருக்கு மட்டுமல்ல ; இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து வருகிற பயணி களுக்கு எத்தகைய உணவில் விருப்பமோ அத்தகைய உணவு அளிக்கும் வசதியும் செய்துகொடுக்கும் வகையில், அங்கங்கு உள்ள சுற்றுலா மாளிகைக் கண்காணிப்பாளர்கள் முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள். தனிப்பட்ட சிலபல வசதிகள் தேவை என்று கோரிக்கைகள் வரும்போது, அவ்வப் போது பார்த்து அவைகளை சுற்றுலாத் துறை நிர்வாக இயக்குநர் கவனித்து வருகிறார்.

திரு. எஸ். ஆறுமுகம் : வெளிநாடுகளிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலா மாளிகையில் முறையாகப் பயின்ற வழிகாட்டிகள் இருக்கிறார்கள் என்றாலும், சில நேரங்களில் தவறான முறையில் வழி காட்டி, தமிழ்நாட்டுக்குக் கெட்ட பெயரை உண்டாக்கிவிடுகிறார்கள். ஆகவே, விவரம் அறிந்த, தமிழ்நாட்டினுடைய எல்லாவிதமான தன்மைகளையும் படித்தவர்களை சுற்றுலா மாளிகைகளில் வழிகாட்டிகளாக நியமிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட மேற்கண்ட முக்கியமான ஊர்களில் இப்படிப்பட்ட வழி காட்டிகள் இருந்து வருகிறார்கள். வெளி நாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வருகிறவர்களுக்கு நல்ல முறையில் வழிகாட்டும் அளவுக்கு இத்தகைய வழிகாட்டிகளுக்குத் தனிப் பயிற்சி தரலாமா என்பதையும் சுற்றுலா வாரியத் துறை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போது, இந்த வழிகாட்டிகள் நல்ல தொரு பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு வசதி ஏற்படும். அதையும் சுற்றுலாத் துறையினர் ஆராய்ந்து வருகின்றனர்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை யினரால் கட்டப்படுகிற மாளிகைகளில் மத்திய வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்குவதற்கு இயலவில்லை. அதாவது, விதிக்கக்கூடிய கட்டணம் அவர் களால் தாங்கக்கூடியதாக இல்லை. ஆகவே, உள்நாட்டில் இருக்கிறவர் களுக்கென்று அதாவது அவர்களால் தாங்கக்கூடிய கட்டண விகிதத்தில், தனியாகக் கட்டட வசதி செய்துகொடுக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழகச் சுற்றுலா வாரியத்தின் சார்பாக இருக்கும் கட்டடங்களில் வசூலிக்கப் படும் கட்டண விகிதம் அதிகமானது என்று சொல்வதற்கில்லை. 15, 20, 25 ரூபாய் என்ற அளவிற்குத்தான் இருக்கிறது. மாமல்லபுரத்தில் தனியார் வைத்திருக்கும் கட்டிடங்களில் 75 முதல் 100 ரூபாய் என்று இருக்கலாமே தவிர, நான் சொன்ன முக்கியமான ஊர்களில் உள்ள சுற்றுலா மாளிகைகளில் மிகவும் குறைந்த கட்டணம்தான் வசூலிக்கப் படுகிறது.

திருக்கழுக்குன்றம்—மாமல்லபுரம்—காஞ்சீபுரம் ஆகிய இடங்களுக்குப் போய் சுற்றிப்பார்த்துவர 15 ரூபாய்தான் பஸ் கட்டணமாக பாக்கேஜ் டூருக்கு வாங்குகிறார்கள். டாலர் கணக்குப்போட்டால் இரண்டு டாலர்தான் ஆகிறது. இரண்டு டாலர்கள்தான் இந்தப் பயணத்திற்கு ! கட்டணம் இவ்வளவு "சீப்"பாக இருக்கிறதே என்று வெளிநாட்டார்கள் சொல்கிறார்கள். அமெரிக்காவில் ஒரு "டை" வாங்குவதற்கே இரண்டு டாலர் கொடுக்க வேண்டும். நாம் மூன்று ஊர்களுக்குப் போய்வர 15 ரூபாய்தான் வாங்குகிறோம். அதேபோல், ஏழு நாட்களில் 17 இடங்களை சென்று சுற்றிப் பார்த்துவர வரையறுக்கப்பட்ட பஸ் கட்டணம் 175 ரூபாய் தான். 175 ரூபாய் பஸ் கட்டணத்தில் ஏழு நாட்களில் 17 இடங்களுக்குச் சென்று சுற்றிப் பார்த்துவர இவ்வளவுதான் வசூலிக்கிறார்கள். டாலர் கணக்கில் பார்த்தால் 25 டாலர் ஆகிறது. மேல் நாட்டில் ஒரு நாள் ஒரு ரூமில் தங்கியிருக்கவே 25 டாலர் செலவாகிவிடும். இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மேல்நாட்டார் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்வதற்கோ சுற்றுலா மாளிகைகளில் தங்குவதற்கோ நாம் விதிக்கும் கட்டணம் மிக மிகக் குறைந்த கட்டணம் என்பதை நாம் நன்றாகக் காணலாம்.

* 412 வினா — திரு பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :—

கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக குடில்கள் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக குடில்கள் அமைக்கும் செயற்குறிப்பு ஏதுமில்லை. ஏனெனில், தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சீர்வளி வசதிகள் செய்யப்பட்ட அறைகள் ஒன்பது, இருவர் தங்கும் அறைகள் 19, குடும்ப அறை ஒன்று ஆகியவற்றுடன் கூடிய சுற்றுலாப் பயணிகள் மாளிகைகள் இரண் டினை ஏற்கெனவே நடத்தி வருகிறது.

[1974 மார்ச் 14

*** 413 வினா.—** திரு கோ. இளங்கோவன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலா துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கல்லணையில் ஒரு சுற்றுலா மாளிகை அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது, எத்தனை ரூபாய் செலவில் அமைக்கப் படவிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*** 414 வினா.—** திரு மே. சி. தூயமணி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்காண் வினாவுக்கு விடையளிப் பாரா —

மேட்டுப்பாளையம் தொகுதி கல்லாறு பகுதியில் சுற்றுலா விடுதி அமைப்பது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேட்டுப்பாளையம் தொகுதி கல்லாறில் சுற்றுலா மாளிகையொன்று கட்டுவதற்கான செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கன்னியாகுமரிக்கு வெளிநாட்டி லிருந்தும் நம் நாட்டிலிருந்தும் நிறைய சுற்றுப்பயணிகள் வருகிறார்கள். அங்கே இப்பொழுது இருக்கிற இடம் போதவில்லை என்ற காரணத் தினால் ஏற்கனவே சுற்றுலாத் துறை இது போன்ற குடில்கள் அமைப் பதற்கான திட்டம் வகுத்திருந்ததே அது கைவிடப்பட்டதா ? இப் பொழுது ஏதாவது அதை நிறைவேற்றுவதற்கு திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி குடில்கள் கட்டுவதற்கான திட்டம் எதுவுமில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்ட படி 9 ஏர்கண்டிஷன் அறைகளும், இருவர் தங்கும் அறைகள் 19-ம் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது தவிர ஒரு டார்மெடரியும் வைத்திருக் கிறோம். இதுவே போதுமான அளவுக்கு அங்கே அமைந்திருக்கிறது. மேலும் தேவைப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட வேண்டும். நாம் கட்டினால் வருமானம், மற்றவைகள் வரவில்லை என்று சூழ் நிலை ஏற்பட்டால், அதனால் நமக்கு நட்டம்தான் ஏற்படும்.



1974 மார்ச் 14]

திரு. கோ. இளங்கோவன் : கழக அரசு அங்கே முன்னாலேயே ஒரு மாளிகை கட்ட திட்டமிட்டிருந்ததோடு அல்லாமல், கண்ணுக்கு காட்சிக்குரிய இடமாக அமைந்திருப்பதினால், கரிகாலச் சோழனுக்கு நினைவுச் சின்னம் அமைந்திருக்கும் இடமாக இருப்பதினால், இரு பெரிய மாவட்டங்கள் இணையகூடிய இடமாக அமைந்திருப்பதினால், அரசு ஒரு கருத்தரங்கு நடத்துவதற்கு கூடுகின்ற இடமாக அமைந் திருப்பதினால், நாள்தோறும் பல நூறு பயணிகள் வந்துசெல்கின்ற இடமாகவும் அமைந்திருப்பதினால், அந்த மாளிகையை அங்கே மீண்டும் கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சுற்றுலா மாளிகை கட்டவேண்டும் என்றால், அங்கே சுற்றுலாப் பயணிகள் ஒரு நாள், இரண்டு நாட்களுக்கு தங்குகின்ற வாய்ப்பு ஏற்படுகின்ற நிலையிலும் ஒரு கருத்தரங்கு, மகாநாடு நடந்து, அங்கிருந்து பல இடங்களுக்குச் சென்றுவிட்டு அந்த இடத்தில் மறுபடியும் வந்து தங்குகின்ற சூழ்நிலை ஏற்படுகின்ற நிலையிலும், அப்படிப்பட்ட இடங்களில் தான் நாம் சுற்றுலா மாளிகைகளை அமைக்க முடியும். கல்லணைக்கு வருகிறவர்கள் அது கரிகால் சோழனால் கட்டப்பட்டது என்று சற்று நேரம் பார்த்து வியக்கும் அளவிலும், காரில் வந்துவிட்டு இறங்கி $\frac{1}{2}$ மணி, $\frac{1}{4}$ மணி நேரம் பார்த்து மகிழ்ந்துவிட்டு மறுபடியும் ஏறிப்போகிற சூழ்நிலைதான் இருப்ப தாலும், இறங்கிப் பார்த்துவிட்டு மறுபடியும் திருச்சி போன்ற இடங் களுக்குச் சென்று தங்குகின்ற சூழ்நிலை இருப்பதாலும், அங்கு வந்து வெளிநாட்டுப் பயணிகள் ஒரு நாள், இரண்டு நாட்கள் தங்குகின்ற நிலை ஏற்படவில்லை என்பதாலும், அங்கே சுற்றுலா மாளிகை கட்டு வதற்கான சூழ்நிலை இல்லை. இப்பொழுதே ஓய்வு மாளிகைகள் இருக் கின்றன. சுற்றுலாப் பயணிகளுக்கு தனி வசதிகள் கூடிய மாளிகைகள் கட்டவேண்டுமென்றால் அதற்குப் போதுமான அளவுக்கு வருமானம் இல்லாத சூழ்நிலையில் கட்டுவது கடினம். கல்லணையில் இப்படிப் பட்ட மாளிகைகள் கட்டுவதைவிட, அதைவிட தேவைப்படுகின்ற வேறு பல இடங்களில் கட்ட வேண்டியது அவசியமாக இருக்கிறது.

திரு. மே. சி. தூயமணி : மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள கல்லாறில் இயற்கை காட்சிகளை காண்பதற்கும், அங்குள்ள தொன்மை வாய்ந்த அரசு பழ ஆராய்ச்சிப் பண்ணையை பார்வையிடுவதற்கும் ஏராளமான சுற்றுப் பயணிகள் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அங்கே தங்கி ஓய்வு பெற ஒரு சுற்றுலா மாளிகையை அமைக்கின்ற முயற்சியை அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குன்னூர், ஊட்டிக்குச் செல்கின்ற வழியில் கல்லாறில் இறங்கி பழ ஆராய்ச்சிப் பண்ணையை பார்த்துவிட்டுச் செல்கின்ற நிலைதான் இருக்கிறது. அங்கே $\frac{1}{2}$ மணி நேரம், $\frac{1}{4}$ மணி நேரம் இறங்கிப் பார்த்துவிட்டு, மறுபடியும் குன்னூர் அல்லது ஊட்டிக்குப் போய் தங்குகின்ற நிலைதான் இருக்கிறது. யாரும் கல்லாறில் ஒரு நாள், இரண்டு நாள் தங்கிச் செல்வதில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : கன்னியாகுமரிக்கு வருகிறவர்கள் ஸன் செட் அண்டு ஸன் ரைஸ் இரண்டையும் பார்ப்பதற்கு வருகிறார்கள். அதோடு இப்பொழுது அதிகமாக வட இந்திய பக்தர்கள் வருகிறார்கள். விவேகநந்தா நினைவுச் சின்னத்தைப் பார்ப்பதற்கும் வருகிறார்கள். இப்பொழுது அமைந்திருக்கிற மாளிகையில் வசதிபடைத்தவர்கள் தான் தங்குவதற்கு முடிகிறது. அங்கே இப்பொழுது அதிகமாக வருகிற ஏழை பக்தர்களுக்கு தங்குவதற்கு வசதி செய்கின்ற வகையில் குறைந்த கட்டணம் விதிக்கின்ற முறையில் சுற்றுலா மாளிகைகள் ஏதாவது மீண்டும் கட்டுவதற்கு திட்டம் வகுக்குமா அரசு என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதனுடைய தன்மைகளைப் பற்றியெல்லாம் நாம் நன்றாக ஆராயவேண்டும். சுற்றுலா பயணிகளுக்கு எல்லா வசதிகளோடும் கூட, அதற்கேற்ப செய்யப்படுகிற வசதிகளுக்கு ஏற்ப விதிக்கப்படுகின்ற கட்டணத்தை செலுத்துகிற அளவுக்கு அமையவேண்டும். இல்லாவிட்டால் அங்கே இருக்கிற ஊராட்சி அமைப்பு அல்லது டவுன்ஷிப் சில குடில்களை அமைக்க முன்வர வேண்டும். உதாரணமாக குற்றாலம் டவுன்ஷிப் அங்கே இப்படிப்பட்ட பயணிகள் தங்குவதற்கு சில குடில்களைக் கட்டியிருக்கிறார்கள். கன்னியாகுமரியிலிருக்கிற ஊராட்சி அமைப்பும் அத்தகைய முயற்சிகளை எடுத்துக்கொள்ள முன்வரவேண்டும். ஏற்கனவே இங்கே சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதிகள் செய்திருக்கிறோம். அது போதாமல் இட நெருக்கடி ஏற்பட்டு, மேலும் குடில்கள் கட்டினால் நல்ல லாபம் இருக்கும், மற்றவைகள் இருக்கும் என்று குறிப்பு கிடைக்குமானால், அதுபற்றி நாம் ஆராயலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, in Kanyakumari, there is a Government Tourist Bungalow ; the rent charged is comparatively higher ; even for M.L.As. who go there with Assembly Committees, they charge higher rates. May I know from the Hon. Minister for Education and Tourism whether at least for M.L.As. the rent will be reduced considerably?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சுற்றுலாப் பயணிகள் என்ற முறையில் வருகிற நிலை வேறு. வேறு பல அலுவல்கள் காரணமாக கன்னியாகுமரிக்குச் செல்கின்ற நிலை வேறு. சுற்றுலாப் பயணிகள் தங்குவதென்றால், அவர்கள் தங்குவதற்கு சில பல வசதிகள் செய்யப்பட்டு, அதற்குரிய கட்டணமும், சற்று அதிகமாக இருக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கட்டணம் குறைவாக இருக்க வேண்டுமென்றால், மற்ற இடங்களில் இருப்பதைப்போன்று, ரெஸ்டு ஹவுஸ், ஓய்வு அறைகள் கட்டவேண்டும். அப்படிப்பட்ட அறைகளை தற்பொழுது வேறு பல அமைப்புகள் கட்டுகின்றனவே தவிர, சுற்றுலாத் துறை சார்பாக இருக்கிற பணத்தை அப்படிப்பட்ட வசதிகள் செய்வதற்கு செலவழிப்பது என்பது இயலாது.



சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரவேண்டும், அதற்கு இட வசதி செய்து தரவேண்டும் என்கின்ற அடிப்படையில், சுற்றுலா மாளிகை கட்டினால் அது முழுவதும் பயன்படுத்தப்படும் என்ற நிலை ஏற்பட்டால், அதனால் நட்டம் வராது, லாபம் கிடைக்கும் என்ற நிலையில் தான் அப்படி கட்ட இயலும். கன்னியாகுமரி ஒரு நாள் இரண்டு நாட்களுக்குத் தங்கி மகிழ்வதற்குரிய இடமாக இருக்கிறது, அங்கு இப்பொழுது இருக்கிற இடம் போதவில்லை என்கின்ற நிலை ஏற்படுமேயானால், அதிகமான இடங்களை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பை இந்தத் துறை ஆராயும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நமது இலாகாவிலிருந்து நடத்துகின்ற சுற்றுலாப் பயண விடுதிகளில் ஆகாரம் சரியான முறையில் இல்லை என்றும், கேரள அரசாங்கம் நடத்துகின்ற டூரிஸ்டு பங்களாவில் தங்குவசதிகள் நன்றாக இருக்கின்றன. அதே மாதிரி அங்கே கட்டணமும் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால், அங்கே எப்பொழுதும் கிராக்கி இருக்கிறது. ஆதலால், இருக்கிற நிலைமைகளை ஆராய்ந்து சரியான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ? அதேமாதிரி மேட்டுபாளையம் பகுதியில் ஒரு ரெஸ்டு ஷெட் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்கின்ற இரு விவரங்களையும் அரசு அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் குறிப்பிட்டதுபோன்ற குறைபாடுகள் இருக்குமேயானால், அந்தக் குறைபாடுகளை ஆராய்ந்து அவைகளைக் களைவதற்கான முயற்சிகளை இந்தத் துறை மேற்கொள்ளும். அவர்கள் குறிப்பிடுகின்ற அளவுக்கு அப்படிப்பட்ட ஒரு ஷெட் கட்டவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதைப்பற்றி தனியாக ஆராயலாம்.

திரு நா. வீராசாமி : எங்கெங்கோ இருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் இங்கே வந்து நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய மிக முக்கியமான இடங்களைச் சுற்றுப் பயணிகள் வந்து பார்த்துச் செல்கிறார்கள். ஆனால், இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்களில் இன்னும் பல பேர்கள் பல இடங்களைப் பார்த்ததாகத் தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் தலைமையில் சட்ட மன்ற உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு எங்கேயாவது சில இடங்களுக்கு சுற்றுலா போவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: என்னுடைய தயவு இல்லாமலேயே பல் பேர்கள் பல இடங்களுக்குச் சென்று சுற்றிப்பார்த்துவிட்டு வந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, நான் வரையறுத்து அமைக்கிற சுற்றுப்பயணத்துக்கு வருவார்களா என்பதும் சந்தேகம்தான்.

திரு வா.மை. அப்துல் ஜப்பார்: அரசியலில் ஈடுபட்டவர்களுக்கு சில சமயங்களில் கடுமையான மன உளச்சல் ஏற்படுகிறது. ஜனசஞ்சார மற்ற இடங்களுக்குச் சென்று ஒன்றிரண்டு நாட்காளாவது தங்கி, நிம்மதியாக இருந்து, இயற்கை காட்சிகளை அனுபவிக்கவேண்டுமென்ற எண்ணம்

ஏற்படுகிறது. அதற்கு கல்லணை, கல்லாறு போன்ற இடங்கள் பொருத்தமாக அமைந்திருக்கின்றன. ஆகவே, அங்குள்ள வசதி வாய்ப்புக்களை அதிகப்படுத்தி, மன உளச்சல் ஏற்படுகிற சமயத்தில் மன நிம்மதியோடு அங்கே போய் தங்குவதற்கான முறையில், அங்கு சுற்றுலா விடுதிகள் அமைப்பதற்கு அமைச்சர் முன்வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலில் குறிப்பிட்டபடி புள்ளிவிவரங்கள் கணக்கின் அடிப்படையில் வசதிகளைச் செய்துதரவேண்டும். தமிழகத்தில் இன்னும் சுற்றுலா மாளிகை கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிற பல்வேறு இடங்கள் இருக்கின்றன. போதுமான அளவுக்கு நிதி வசதி இல்லாத காரணத்தினால் அங்கெல்லம் இன்னும் நாம் சுற்றுலா மாளிகைகளைக் கட்ட முடியவில்லை. சுற்றுலாப் பயணிகள் வந்து தங்குகின்ற இடமாக இல்லாவிட்டால், அப்படிப்பட்ட பயணிகள் போதுமான அளவுக்கு வந்து தங்கிப்போகின்ற இடமாக இல்லாவிட்டால் அங்கே சுற்றுலா மாளிகைகள் அமைப்பது கடினம். இதிலே பல்வேறு வகைகள் இருக்கின்றன. ஊட்டி, குன்னூர் போன்ற இடங்களில் 10, 15 நாட்கள் அல்லது ஒரு மாதம் சுற்றுலாப்பயணிகள் வந்து தங்குதவற்கேற்ற இடங்கள். கன்னியாகுமரி போன்ற இடம் ஒன்றிரண்டு நாட்கள் தங்குவதற்கேற்ற இடம். சென்னை, மகாபலிபுரம் போன்ற இடங்கள் ஒன்றிரண்டு நாட்கள் தங்கிப் போவதற்கேற்ற இடம். இன்னும் பல இடங்கள் ½ மணி நேரம், ஒரு மணி நேரம், இறங்கிப் பார்த்துவிட்டு போகக்கூடிய இடங்களாக இருக்கின்றனவே தவிர, அங்கே தொடர்ந்து தங்குவதற்கான இடங்களாக இல்லை.

குறிப்பாகச் சொல்லப்போனால் திருச்செந்தூரில் ஒரு பயணிகள் விடுதி கட்டப்பட்டது. அது நாம் எதிர்பார்த்த அளவுக்கு பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. 30, 35 சதவீதம்தான் பயன்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. திருச்செந்தூருக்குப் போகிறவர்கள் அங்கே இருக்கும் கோவிலைச் சுற்றிப்பார்த்துவிட்டு, திரும்பி ஊருக்குப் போகிற வேலையைத் தான் பார்க்கிறார்களே தவிர, அங்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் தங்கிப் போவது என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. சுற்றுலாப் பயணிகள் விடுதி கட்டியும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது.

ஆகவே, புள்ளிவிவரங்களின் அடிப்படையில் தான் கட்டவேண்டும் என்று பார்க்கிறபொழுது கல்லாறு, கல்லணை போன்ற இடங்களில் சுற்றுலா பயணிகள் வந்து தங்கும் நிலை ஏற்படவில்லை. அங்கு இறங்கி சற்று நேரம் பார்த்துவிட்டுப் பிறகு திரும்பிப்போகிற நிலை தான் இருக்கிறது. அந்தமாதிரி நிலை ஏற்படுமேயானால், எங்கு ஏற்பட்டாலும், சுற்றுலாப் பயணிகளிடமிருந்து வருகின்ற வருவாயை நாங்கள் விடுவதாக இல்லை. வருவாய் வருவதற்கு இடம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்ததில், இந்த இரண்டு இடங்களிலும் இப்பொழுது சுற்றுலா மாளிகைகள் கட்டத் தேவையில்லை என்று தான் கருதப்படுகிறது.



## கும்முடிப்பூண்டி பகுதியில் நீர் வழங்கல்.

*415. வினா— திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், காணுபுத்தூர் அரிசனக் காலனியில் குழாய்க் கிணறு குடிநீர்த்திட்டம் நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

(இ) இது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) கும்முடிப் பூண்டித் துணை வட்டம் சாணுப்புத்தூர் அரிசன காலனியில் குழாய் கிணறு குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு முதலில் குழாய்கிணறு நடப்பு ஆண்டிலேயே அமைக்க செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் சென்ற ஆண்டே தொடங்கப்பட்டும், இன்னும் முடிவடையவில்லை. ஆகவே, எப்போது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, குழாய்க் கிணறு திட்டத்திற்கு 5,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த போர் வெல்லிலிருந்து கிடைக்கின்ற தண்ணீர் குடிப்பதற்கு லாயக்கு உள்ளது தானு என்பதை கண்டறிவதற்காக கிண்டியிலுள்ள கிங் இன்ஸ்டிடியூட்டுக்கு அனுப்பப்படும். அங்கே இருந்து பதில் கிடைத்தவுடன் அது குடிப்பதற்கு ஏற்ற நல்ல தண்ணீர்தான் என்று பதில் கிடைத்தால், திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

*416 வினா—திரு கா. வேழவேந்தன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுபுழல் பேட்டை அரிசனக் காலனியில் குடிநீர்த் திட்டம் அமைப்பதில் காலதாமதம் ஆவதன் காரணம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுபுழல் பேட்டை அரிசனக் காலனியில் குடிநீர் வசதி அளிப்பதற்காக ரூ. 5,000 மதிப்பீட்டுச் செலவில் ஒரு குழாய் கிணறு அமைக்க செங்கல்பட்டு மாவட்ட நல அதிகாரி நடவடிக்கை எடுத்து வருகிறார். நடப்பு நிதிஆண்டில் வேலை முடிவடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

திரு கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஆவதற்குக் காரணம் மாவட்ட நல அதிகாரி ஒருவரே இருந்து கவனிக்கவேண்டியிருப்பதுதான்,

அதுமட்டுமல்லாமல், இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் சில மெட்டீரியல்ஸ் கிடைப்பதிலும் காலதாமதம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, துரித நடவடிக்கை எடுப்பதற்கு, திட்டங்களை நிறைவேற்றும் அதிகாரத்தை ஒன்றியங்கள் அளவில் பகிர்ந்தளித்தும், தேவையான மெட்டீரியல்ஸ் உடனடியாக கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இத்திட்டத்தை தயார் செய்வது சூப்பர்வைசர். பிறகு அது ஹைவேஸ் ரூரல் ஒர்க்ஸில் பரிசீலனை செய்யப்படுகிறது. அதன் பிறகு ஒன்றியங்கள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட நல அதிகாரி இத்திட்டங்களை நிறை வேற்றுவதில்லை.

(பல உறுப்பினர்கள் கையை உயர்த்திக்கொண்டிருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாள்தோறும் அரிசன நலன்கள் பற்றிய கேள்விகள் வருகின்றன. அதை ஒரு பொதுவான கொள்கை யாக்கி எல்லா உறுப்பினர்களும் கேள்விகள் கேட்கவேண்டுமென்பது தேவையில்லை. ஒவ்வொரு நாளும் வருகின்ற கேள்விகளில், அந்தந்த குறிப்பிட்ட பகுதிகளைப் பற்றி மட்டும் கேள்வி கேட்டால் போதும். இப் போது கும்முடிப்பூண்டி வட்டத்தைப்பற்றிய கேள்வி வருகிறது என்றால் அதைப்பற்றி மட்டும் கேட்கலாம்.

திரு வ. சுப்பிரமணியம் : தலைவர்வர்களே, தமிழகத்திலே இருக்கின்ற பல அரிசன குடியிருப்புகளுக்கு இன்னும் குடிதண்ணீர் வசதி இல்லை. பொதுக் கிணறுகளிலிருந்து அவர்கள் தண்ணீர் எடுப்பதற்கும் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் மாதத்திற்கு இத்தனை என்று தீர்மானித்து இவ்வாண்டு இறுதிக்குள் எல்லா அரிசன குடியிருப்புகளுக்கும் குடி தண்ணீர் வசதி செய்துகொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: சில இடங்களில் கிணறுகள் வெட்டும்போது, அந்தக் கிணறுகளில் தண்ணீர் கிடைப்பதில்லை. சில இடங்களில் போர்வெல் போட வேண்டும். இத்திட்டங்கள் ஒரே அதிகாரியால் மட்டும் நிறைவேற்றப்படக்கூடியவை அல்ல. தாசில்தார் மூலமாக நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவேண்டும். சூப்பர்வைசர் திட்டத்தைத் தயாரிக்கவேண்டும். பிறகு ஹைவேஸ் ரூரல் ஒர்க்ஸி லிருந்து டெக்னிகல் சேங்ஷன் வரவேண்டும். அதன் பிறகுதான் ஒதுக்கப்பட்ட நிதியை ஒழுங்காகச் செலவிடவேண்டும். ஆகவே, திட்டங் களை நிறைவேற்றுவதில் சற்று தமாதம் ஏற்படுகிறது. கடந்த ஆண்டு 17 லட்சம் ரூபாய் இத்தகைய காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டது இருந்தாலும் ஏறத்தாழ 20 லட்சம் ரூபாய் செலவழித்திருக்கிறோம். ஆகவே, அரிசன மக்களுக்கு நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்த அரசு விரைவாக செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு எஸ். வடிவேல்: தலைவரவர்களே, மின் விளக்கு வசதி இல்லாத அரிசன குடியிருப்புக்களே இருக்கக்கூடாது என்று ஒரு திட்டத்தைத் தீட்டி செயல்பட்டதைப்போல, குடிதண்ணீர் வசதி இல்லாத அரிசன குடியிருப்புக்களே இருக்கத் கூடாது என்ற முறையில் ஒரு தீவிரத் திட்டத்தைத தயாரித்து, அதன்படி அரசாங்கம் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சுப்பிரமணியம் அவர்கள் இதே கேள்வியைத்தான் கேட்டார்கள். அதற்கு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். உங்கள் கேள்விக்கும் அதே பதிலைத்தான் சொல்ல வேண்டும்.

## திருப்பாச்சேத்தி அரிசன குடியிருப்பு.

*417—திரு த. சோனையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் திருப்பாச்சேத்தியில் உள்ள அரிசனங்களுக்கு மயானம் இல்லை என்பது உண்மையா?

(இ) ஆம், எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இரண்டு மயானங்கள் உள்ளன.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்தத் திருப்பாச்சேத்தியில் அரிசன மக்களுக்கு என்று தனியாக மயானம் இல்லை. பொது மயானத் திற்குச் சென்றால் தகராறு வரும் என்று சொல்லி அங்குள்ள அரிசன மக்கள் மனக் கிலேசம் ஏற்பட்டிருக்கிறது. அது கசப்பாக மாறுவதற்குள் அவர்களுக்குத் தனி மயானம் அமைத்துக்கொடுக்க வேண்டும். ஏற் கெனவே இருந்த மயானம் அரிசன காலனிக்கு இடம் எடுக்கும்போது சேர்த்து எடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு மயானம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திருப்பாச்சேத்தியில் 106-2, 105-3 என்ற இரண்டு சர்வே நம்பர்களில் முறையே 42 செண்ட், 51 செண்ட், நிலம் மயானப் பூமியாக இருக்கிறது. அதை அவர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். அது போதவில்லை என்ற நிலை வருமானால் வேறு புதிய நிலம் மயானத்திற்காக ஆர்ஜிதம் செய்யலாம்.

திரு. த. சோனையா : அமைச்சரவர்கள் இரண்டு இடங்களில் மயானம் இருப்பதாகச் சொன்னார்கள். திருப்பாச்சேத்தி என்னுடைய தொகுதியில் இருக்கிறது. நான் தினமும் அங்கு போய்வருகிறேன். அரிசனங்களுக்கு

[1974 மார்ச் 14

மயானம் இல்லை என்று அமைச்சரிடமும், அரசிடமும் முறையிட்டிருக்கி
றுர்கள். மயானம் இல்லாததால் அங்கே கலவரம் ஏற்படக்கூடிய சூழ்
நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த மயானம் அழிக்கப்பட்டு
விட்டது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு மயானம் ஏற்படுத்திக்
கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, நான்,
மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் அளித்த விபரங்களை வைத்து பதில்
சொல்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும் தகவலைவைத்து,
மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, கனம் அமைச்ச
ரவர்களுக்கும் கனம் அங்கத்தினர் அவர்களுக்கும் இடையே இந்த
கேள்வியின்மீது நடைபெற்ற விவாதத்தைப் பார்க்கும்போது, அங்கே
பொதுவாக இருக்கக்கூடிய மயானத்தில் அரிசனங்களுக்கு இடம் இல்லை
என்று தெரிகிறது. ஆகவே, இந்தச் சச்சரவைத் தீர்த்து வைத்து, அரி
சனங்களும் அந்த மயானத்தைப் பயன்படுத்திக்கொள்கின்ற வகையில்—
தனியாக ஏற்படுத்திக் கொடுக்காமல்—அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சச்சரவுகளைத் தீர்த்து
வைத்து அந்த மக்களுக்கு நன்மை செய்வது என்றால், அவர்களுக்கு
இடமே இல்லாமல் போய்விடும். மாண்புமிகு அம்மையார் அவர்கள்
நேற்று பேசும்போது கூட அரிசனங்களுக்கு என்று தனியாக இடம்
ஒதுக்கக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியின்போதே
இப்படி இருந்துவந்திருக்கிறது. அப்போது அம்மையார் அவர்கள் அதைத்
தடுத்திருக்கலாம். ஆனால் முடியாது. இவை எல்லாம் முடியாத காரி
யங்கள். இன்னும் அரிசனங்களுக்குத் தனியாக வசதி செய்துகொடுக்க
வேண்டிய அவசியம் இருக்கிறது. தீண்டாமை முற்றிலும் ஒழிக்கப்பட்டு,
எல்லோரும், சமம் என்ற நிலை ஏற்பட்டால், தனியாக இடம் ஒதுக்க
வேண்டியதில்லை. அந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட இன்னும்
நீண்டகாலம் ஆகும். அதுவரையில் அவர்களுக்கு நன்மைகள் செய்தாக
வேண்டும். பொது மயானத்தில் அரிசன மக்களின் உடலை வைக்கக்
கூடாது என்ற நிலையே ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். சிக்கல்
கள் ஏற்பட்டால் போலீசார் மூலம் தீர்த்து வைக்கலாம். ஆனால்
தனி இடம் கொடுத்தால் சிக்கல் இல்லை என்ற காரணத்தினால் இபபடிச்
செய்கிறோம்.

## பூவலம்பேடு அரிசனக் குடியிருப்பு.

*418 வினு.— திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன
நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பூவளம்பேடு அரிசனக்
காலனி மக்களுக்கு வீட்டு மனை வழங்கும் திட்டமும், இடுகாட்டுக்கு வழி
அமைக்கும் திட்டமும் மேலும் காலதாமதம் ஆவதேன்?



1974 மார்ச் 14]

(இ) இவை எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : (அ) and (இ) கும்முடிப்பூண்டித் துணை வட்டம், பூவளம்பேடு அரிசனக் காலனி மக்களுக்கு வீட்டுமனை மற்றும், மயானத்திற்குப் பாதை அமைப்பதற்காக நிலம் கையகப் படுத்தும் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த மாதிரி நில ஆர்ஜிதம் செய்து வீட்டு மனை வழங்குவதிலும், இடு காடுக்கு வழி அமைத்துக் கொடுக்கும் திட்டமும் பல்லாண்டு காலமாக பரிசீலனையில் இருக் கின்றன. இவைகளுக்கென்று ஒரு சிறப்புத் திட்டம் ஏற்படுத்தி, எவை எவை நீண்ட காலமாக பரிசீலனையில் இருக்கின்றனவோ, அவைகளை விரைவு படுத்தி நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தாமதத்திற்குக் காரணம் நிலத்தைக் கையகப்படுத்துவதில் ஏற்படுகின்ற சிக்கல்தான் பெரிதாக இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்கள் தகராறு இல்லாமல் கொடுத்து விட்டால் இந்தத் தாமதம் பெரிதும் தவிர்க்கப்பட்டு விடும். தாமதத்தைத் தவிர்க்க எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

## வைகைக் கால்வாய் சீர் அமைப்பு.

*419 வினு.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2-ம் தேதி அன்று வினு எண் 529-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வைகைக் கால்வாய் சீர் அமைப்பு வேலை எந்த அளவுக்கு நடை பெற்று இருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விவர அறிக்கை * பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, இந்த வைகைக் கால்வாய் சீரமைப்புத் திட்டம் ஏறத்தாழ 10 ஆண்டு காலமாக நடைபெற்றுக்கொண் டிருக்கிறது; இன்னும் முடிவடையவில்லை. ஆகவே, இந்த ஆண்டிலாவது முடிவடைகின்ற அளவுக்கு இத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, திட்ட வேலை களுக்கு 1968-ம் ஆண்டில் ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரம் முடிவடைவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* 465ம் பக்கத்தில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[முற்பகல் - 9-30]

## Marina Beach

* 420 Q.—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(a) whether there is any proposal under the consideration of the Government to further beautify the Marina Beach ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) (1) மெரினாவில் அண்ணா சதுக்கத்திற்கு அருகில் சிறுவர் பூங்கா ஒன்றைக் கட்டும் செயற் குறிப்பு தமிழ் நாடு சிறப்பு நலநிதியில் வேண்டிய நிதி வசதி இல்லாத காரணத்தால் நடப்பாண்டில் எடுத்துக் கொள்ளப்பட முடியவில்லை.

(2) மெரினாவில் அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து காந்திஜி சிலைவரையிலான முதல் நிலைப்பணி முடிந்த பிறகே, காந்திஜி சிலையிலிருந்து நேப்பியர் பாலம் வரை இயற்கைக் காட்சி வனப்புடைய தோட்டங்களின் சீரமைப்புப் பணியும் (ஐந்து கட்டங்களில்) ஒப்பளிப்புக்காக எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, சென்னை துறைமுக வேலை துவங்கிய நாளிலிருந்து இராயபுரம் பீச் காணாமல் போய்விட்டது, ஹைகோர்ட் பீச்சும் காணாமல் போய்விட்டது, மீண்டும் துறைமுகத்தை விரிவுபடுத்துகின்ற வேகத்தைப் பார்த்தால் மெரினா கடற்கரையும் பாதிக் கப்படுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நமது அரசு மத்திய அரசோடு தொடர்புகொண்டு அந்தப் பணிகளை கடற்கரையிலே செய்யவும், மெரினா கடற்கரையை அப்படியே வைத்திருக்கவும் வற்புறுத்துமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மெரினா கடற்கரைக்கு ஆபத்து வராதபடி அரசு பார்த்துக்கொள்ளும். அப்படி ஒன்றும் ஆபத்து வந்ததாக நான் கருதவில்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் பூந்தோட்டங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. ஆனால், மணற் பாங்கான இடங்களில் பலபேர் இரவிலே காகிதங்கள் மற்றும் குப்பைகள் எல்லாம் போடுகிறார்கள். சிலபேர் அசுத்தமும் செய்கிறார்கள். அந்தக் காகிதங்களை எல்லாம் அப்புறப்படுத்தி, அசுத்தம் இல்லாமல் பார்த்துக் கொண்டால், மெரினா கடற்கரை பார்ப்பதற்கு இரம்மியமாக இருக்கும். சிலபேர் வேறு விதமான அசுத்தங்களும் செய்கிறார்கள். நாம் மேடாக இருக்கிறதே என்று உட்காரப்போனால் அசுத்தங்கள் இருக்கின்றன. ஆகவே, அதைப் போக்க, நிறைய யூரினல்களையும், லெட்ரின்களையும்




அங்கு அமைத்துக்கொடுத்தால், அந்த இடங்களை அவர்கள் பயன்படுத்து வார்கள்: கடற்கரை பார்ப்பதற்கும் சுத்தமாக இருக்கும். அங்கு அதிக மாக பூந்தோட்டங்கள் தேவையில்லை. இந்த அசுத்தங்கள் இல்லாம லிருக்க வேண்டும். அதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தப் பூந்தோட்டங்களினால் பலருக்குப் பல விதமான வசதிகள் கிடைக்கின்றன. அதைக் கெடுக்க நாம் விரும்பவில்லை.

அசுத்தம் இருப்பதாக சொல்கிறார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இரவு நேரங்களில் காகிதங்கள் போடுகிறார்கள் என்று சொன்னார்கள். என்ன என்ன காகிதங்கள் எப்பேர்ப்பட்ட காகிதங்கள் என்று எனக்குத் தெரியாது. அவற்றை எல்லாம் எடுத்து சுத்தம் செய்ய காலை நேரங்களில் அப்பணிகளைச் செய்ய ஆட்கள் இருக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : பூந்தோட்டங்கள் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதற்காக வேறு இடங்கள் இருக்கின்றன. பொது மக்கள் எதற்காகக் கடற்கரைக்கு வருகிறார்களோ, அந்த நோக்கம் நிறை வேறும் வகையில், அதைச் சுத்தமாக, துப்புரவாக வைத்துக் கொள் வதையே முக்கியமான பணியாக அரசு எடுத்துக்கொண்டு செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு அங்கத்தினர் அவர்களை அங்குப் போகவேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அதற்குப் பெயரே "லவர்ஸ் பார்க்".

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் ஒரு "ரிவால்விங் ஹோட்டல்", சுழலும் ஓட்டல், கட்டப்படும் என்று கூறப் பட்டதே, அது கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இப்பொழுது அந்த யோசனை இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, உலகத்திலேயே இரண் டாவது அழகான கடற்கரையை நாம் பெற்றிருக்கிறோம். இப்பொழுது வண்ண வண்ண விளக்குகளைக் கண்ணைக் கவரும் வகையிலே போட் டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல், இந்தப் பக்கத்திலே படக்குக் குழாம் வரையிலே, ஹார்பர் இருக்கிறது. இடை யிலே ஒரு ஓட்டல் இருக்கிறது. அந்தப் பக்கம் ஆல் இந்தியா ரேடியோ வுக்கு முன்னால் குடிசை மாற்றுவாரியம்தான் இருக்கிறது. இருப்பதோ கொஞ்சம் இடம்தான். அந்த இடமும் குறையாத வகையிலே, நமது கடற்கரைக்கு இன்னும் சிறப்பு வரக்கூடிய வகையிலே, நம்முடைய அரசாங்கம் கடற்கரையைப் பாதுகாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இருக்கிற இடத்தில் கட்டிடம் வராதவகையில் அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் படும்.

விளக்குகளைப் பற்றி தெரிவித்தார்கள். அந்த விளக்குகளை எல்லாம் எடுத்துவிட்டு, அரசுச் செலவிலேயே, கார்ப்பரேஷனுக்கு, வேறு விளக்குகளை, "கட் ஆப்" விளக்குகளை, அண்ணாசாலையில் போடப்பட்டிருப் பதைப்போல், 200 விளக்குகளைப் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வேலை விரைவில் தொடங்கும். அப்படி கடற்கரையை அழகு படுத்துவதில் அரசு கவனம் செலுத்தும்.

உலகிலேயே அழகான இரண்டாவது கடற்கரை என்று சொன்னார்கள். நான் உலகத்தைப் போய் பார்க்கவில்லை. பார்த்த பிறகு அங்கத்தினருக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, நமது மெரினா கடற் கரையிலே, பம்பாய் கடற்கரையிலே இருப்பதைப் போல் சிறந்த அக்வேரியம் அமைத்து, அங்கு வருகின்றவர்களுக்கு ஒரு கண்காட்சி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இப்பொழுதே அக்வேரியம் இருக்கிறது. வேண்டுமென்றால், அது சிறப்பாக அமைவதற்கு மீன் இலாகா நடவடிக்கை எடுக்கவேண்டும். மீன் இலாகா அமைச்சரைக் கேள்வி கேட்டால் பதில் அளிப்பார்கள்.

### *Salem Steel Plant*

*** 421 *Q*.—Thiru N. K. PALANISWAMY :** Will the Hon. the Minister for Industries be pleased to state —

(*a*) whether the Government of Tamil Nadu have written to the Centre in recent times not to cut the financial allocation already made for the Salem Steel Plant and to ensure its execution without delay; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) & (இ) : சேலம் உருக்காலைக்கென 1974–75 நிதி ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 15 கோடியிலிருந்து ரூ.3 கோடியாகக் குறைக்கப்பட்டிருப்பதை மறுபடியும் கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் இந்தியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள தந்தியில் கேட்டுக்கொண் டிருக்கிறார்.





திரு. என். கே. பழனிசாமி : சார், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத் தில் புதிதாக உருக்காலை ஒன்றுமில்லை. அப்படி இருக்கும்போது ஏற்கெனவே ஒத்துக்கொண்ட இந்த உருக்காலைக்கு அதிகப்படியாக நிதி ஒதுக்கி, சீக்கிரமாக உற்பத்தி செய்வதற்குப் பதிலாக பணத்தைக் குறைப் பதற்கான முயற்சியை எடுத்துக்கொள்வது சரியல்ல. ஆகவே, நமது சர்க்கார் சார்பில் முதலமைச்சர்கள் மாநாட்டிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வற்புறுத்தி, உடனடியாகப் போதுமான நிதியை மத்திய அரசு ஒதுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சேலம் உருக்காலைக்கு இப்படி அடிக்கடி ஓர் ஆபத்து வந்து கொண்டே இருக்கிறது. இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பணத்திலேயே ஐந்தில் ஒரு பங்கு கொடுக்கக்கூடிய அளவுக்கு, இருப்பதிலே நான்கு பங்கைக் குறைக்கக் கூடிய அளவுக்கு ஒரு முடிவை மத்திய அரசு எடுத்திருப்பதாகத் தகவல் கிடைத்தவுடன், இந்நிலை யைப் போக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் பிரதம அமைச் சருக்கு வலியுறுத்தி ஒரு கடிதம் எழுதி இருக்கிறார்கள். மத்திய அர சாங்கம் திட்டமிட்டிருக்கிற ஒரு திட்டத்தையாவது—சேலம் உருக்காலைதான் அவர்களுடைய மத்திய திட்டத்திலே வருகிறது—அதையாவது திட்டப்படி நிறைவேற்றவேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தின் கோரிக்கையாகும்

**Dr. H. V. HANDE :** Sir, may I know the items in respect of which this reduction from Rs. 15 crores to Rs. 3 crores has been made ? Also, will the Hon. Minister convey to the Central Government the sentiments of all the sections of this House and tell them that reduction to this extent means that it is actually giving up the whole programme and that the whole State is very much upset about it and that they should immediately restore the amount ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுவும் ரொம்ப முக்கியமான பகுதியாகும். இந்த ஆண்டு சில திட்டங்களுக்குத் தரப்பட இருக்கிற ரூ. 15 கோடி, இந்த ஆண்டு ஒதுக்கப்பட வில்லையானால், அது ஒரு பெரிய இழப்புக்கு வழி வகுக்கும் என்பதுதான் நம்முடைய வாதமாகும்.

உதாரணத்திற்கு, இதற்கு தேவையான 'ஃபாரின் நோஹவ் இதற்குத் தேவையான எக்விப்மெண்ட்ஸ் இவைகளுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக் கிறது. இது பாதிக்கப்படுமானால், எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை விரைவுபடுத்துவது பாதிக்கப்படும் என்ற ஓர் அம்சத்தையும் முதலமைச்சர வர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலே இவையெல்லாம் வலியுறுத்தப்படுகின்ற காரணத்தால், அவையும் மத்திய அரசாங்கத்துக்கு முதலமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்படும், பிரதம அமைச்சருக்கும் தெரிவிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இது மத்திய அரசு திட்டமாக இருந்தாலும் நமது மாநிலத்திலே உள்ளவர்களுக்கு— மகாராஷ்டிராவிலே 80 சதவிகிதம் கேட்டிருக்கிறார்கள் அந்தப் பகுதியின்

ளுள்ள ஆட்களுக்கு—அதே மாதிரி தமிழ் நாட்டிலே குறைந்தத 50 சதவிகிதமாவது நமது உத்தியோகஸ்தர்களை நியமிக்க அரசாங்கப மத்திய அரசை வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : வட மாநிலங்கள் சிலவற்றை சுற்றிப்பார்த்தபொழுது, அங்குள்ள தொழிற்சாலைகளிலே, மத்திய சர்க்கா தொழிற்சாலைகளிலே, எப்படி ரெக்ரூட் செய்யப்படுகிறது என்பதைப பார்த்தபொழுது, சில பயங்கரமான உண்மைகள் கிடைத்துள்ளன. தமி ழர்களுக்கு வாய்ப்பே கிடைப்பதில்லை. வட மாநிலங்களில் எந்தப பகுதியிலாவது தமிழர்கள் 50 ஆண்டுகளாக வாழ்ந்து வந்தாலும், அவர் களுடைய பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடாது என்று மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளிலே இன் றைக்கும் அக்கொள்கையை அமுல்படுத்துகிற துர்ப்பாக்கியமான நிலைமை இருப்பதைப் பார்த்தோம்.

அது மட்டுமல்ல, இந்த மாநிலத்திலே இல்லாத அளவுக்கு, அந்த மாநிலத்திலே உள்ள அலுவலர்களையே— நம்முடைய மாநில ஐ.ஏ.எஸ். அதிகாரி போல்—அந்த மாநில அதிகாரிகளைப் போட்டு அவர் யாரை எடுக்கச் சொல்கிறாரோ, அவரைத்தான் நியமிக்கவேண்டுமென்று வலி யுறுத்துகிற பயங்கரமான நிலை, மத்திய அரசாங்கத் தொழிற்சாலைகளிலே வட மாநிலங்களிலே நிலவுவதைப் பார்த்தோம். அந்த விவரங்களை அறிந்து வருவதற்காக, தொழில் துறை அதிகாரி வட மாநிலங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறார். அவர் அவற்றை அறிந்துவந்து, புள்ளி விவரம் கிடைத்தவுடன், பிரதம அமைச்சருடன் தொடர்பு கொண்டு, மத்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு, இந்த நிலை இருக்கக்கூடாது என்று வலியுறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

சேலத்திலே இதுபோன்ற வேலை வாய்ப்புகள்வரும்போது, நம்முடைய மாநிலத்தினுடைய வேலைவாய்ப்புத் துறை மூலமாகக் கேட்கப்படவேண்டும், நம்முடைய மாநில அலுவலரைப் போட வேண்டுமென்று கேட்டோம். நம்முடைய அலுவலர் ஒருவர் இருந்தாலும், அவருக்கு எந்தவிதமான வாய்ப்பும் கொடுக்கப்பட வில்லையென்றும், அவரைக் கலப்பதில்லையென்றும் வடபுலத்திலிருந்து வருபவர்கள்தான் முடிவுகளை எடுக்கிறார்கள் இங்கேயிருக்கிற, நமது மாநிலத்திலிருக்கிறவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லையென்றும் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி இந்தியப் பிரதமருக்கு எழுதுவது என்று நமது மாநில அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

**Thiru B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister whether it is the policy of the Government of India to implement such a scheme to give job opportunities to the sons of the soil and whether Tamil Nadu will implement the same policy, as otherwise the Central Government would be showing discrimination to Tamil Nadu ?**



மாண்புமிகு திரு. செ. மாதவன் :—இது மத்திய அரசாங்கத்தைக் கேட்க வேண்டும். நாம் நம் மாநிலத்தைப் பொறுத்த அளவிற்கு இருக்கிற நிலையை ஆராய்ந்து வலியுறுத்தியிருக்கிறோம். சன்ஸ் ஆப் தி சாயில் என்கிற கொள்கையை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், இங்கே உள்ளவர் களுக்கும் வேலை கொடுக்கப்படவேண்டுமென்ற அடிப்படையில், மத்திய அரசாங்கம் நடத்துகிற தொழில்களில் வேறு மாநிலங்களில் ஒருவிதமான கொள்கை, நம் மாநிலத்தில் ஒருவிதமான கொள்கை என்கிற நிலைமைப் பின்பற்றுவதைத்தான் தவறு என்று சுட்டிக்காட்டுகிறோம்.

திரு. கே. எ. வகாப் : 15 கோடி என்று ஒதுக்கிவிட்டு, இன்றைக்கு அதை 3 கோடியாகக் குறைத்திருப்பதாக அமைச்சர் சொன்னார்கள். இது தமிழ் நாட்டின் எதிர்கால வளர்ச்சியையே பாதிக்கக்கூடியதாகையால் —உ.பி. தேர்தலுக்கு முன்னாலேயே ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத் திற்கு 3 கோடி என்று ஒதுக்கிவிட்டு, அங்கே 150 கோடிக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, இந்த நிலைக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் அரசு இந்த மன்றத்திலேயே ஒரு தீர்மானம் கொண்டுவந்து, அதை ஏகமனதாக நிறைவேற்றி, மத்திய அரசுக்கு அனுப்பிவைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கெனவே நான் தெரிவித் தேன், அவர்கள் தெரிவிக்கிற கருத்து இந்த மன்றத்திற்குத் தெரிவிக்கப் படும். நமக்குப் பதில் எப்படி வருகிறது என்று பார்த்து, இந்த மன்றத் திலேயே ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டால், ஏற்பாடு செய்யலாம்.

திரு. கே. என். குமாரசாமி : சேலம் உருக்காலைக்கு 15 கோடி என்று தெரிவித்து, 3 கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் எத்தனை ஆண்டிலே அதனைப் பூர்த்தி செய்வதாக உத்தேசம் ? 15 கோடியை, 3 கோடியாக குறைக்க ஏதாவது காரணங்களைப் மத்திய சர்க்கார் தெரிவித்திருக்கிறதா ? என்ன என்ன காரணங்களை பரிசீலனை செய்து, இந்த ஒரு முடிவுக்கு வந்திருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்கள் என்ன என்ன காரணங்கள் என்று தெரிவித்தவுடன், இந்த மன்றத்திற்குச் சொல்வதாகச் சொன்னேன். ஏதோ அதற்கு காரணங்கள் இருப்பது போல இந்த மன்றத்தில் தெரிவிக்கப்படுகிற கருத்தே நம்முடைய நலனுக்கு உகந்தது அல்ல.

திரு நா. வீராசாமி : இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் வந்து அடிக்கல் நாட்டிய இந்தத் திட்டம் எந்தக் காரணங்களுக்காகக் காலதாமதம் செய்யப்படுகிறது ? இதுபோல இந்தத் திட்ட முதலீடு குறைகிற நேரத்தில் இங்கே வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என் பதை நமது அரசாங்கம் மத்திய அரசுக்கு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 மார்ச் 14

மாண்புமிகு திரு செ. மாதவன் : ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட தொகை குறைகிற காரணத்தினுல் 7,500 பேர்கள் வேலையிழக்க நேரிடும் என்கிற பய உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. இதையும் நமது முதலமைச்சர் அவர்கள் தம் தந்தியில் கூறியிருக்கிருர்கள்.

ரேயான் தொழிற்சாலே.

*422 வினு திரு. கி. செயராமன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரேயான் நூல்களுக்கு வேண்டிய ரேயான் கூழ், மரக்கூழ் தயாரிக்கும் ஆலே ஒன்றை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ.மாதவன் : (அ) & (இ) : தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், ரேயான் தயாரிப்பதற்கு உதவும் மரக்கூழ், விஸ்கோஸ் நெட்டிழை (Viscose Staple Fibre) முதலியவற்றை தயாரிப்பதற்குத் தமிழ்நாட்டில் ரூ. 30 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொழிற்சாலே ஒன்று அமைக்க அனுமதிக் கடிதம் வழங்குமாறு கேட்டு 1973, டிசம்பர் திங்களில் இந்திய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இந்திய அரசிடமிருந்து அனுமதிக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

*Import licences.*

* 423 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the recommendations of the State Government are obtained by the Union Ministry of International Trade before import licences are issued to parties in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) : இறக்குமதி வணிகக் கட்டுப்பாடு விதிமுறையின்படி, இந்திய அரசால் இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படுவதற்கு, தலைமைச் செயலக அளவில் மாநில அரசின் பரிவுரை தேவையில்லை. பொறுப்பேற்கும் அதிகாரியின் பரிவுரை தேவைப்படுகிறது. மாநில அரசின் அத்தகைய அதிகாரிகளையும் அவர்களின் பரிவுரைகள் தேவைப்படுகிற தொழிற்பிரிவுகளையும் காட்டும் விவர அறிக்கை@ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 465-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 மார்ச் 14]

THIRU N. DENNIS : May I know whether the State Government have itemised the commodities for import and export from this State and may I also know the total value of those commodities ?

THE HON. THIRU S. MADHAVAN : This question relates to sponsoring authorities for export permits.

*Moral discourses in Jails.*

* 424 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether moral discourses were given at Central Jails in this State during the calendar year 1973 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ ஒன்று அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். டென்னிஸ் : யாரால் இந்தச் சொற்பொழிவாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள்? சப்ஜெக்ட் யாரால் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறை இலாக்காவால்.

திரு. ஆ. பரந்தாமன் : இந்த விவர அறிக்கையில் இப்படிப்பட்ட ...ாடங்கள் சென்டிரல் ஜெயிலில் நடந்ததாகத் தெரியவில்லை. இதற்கான ...ாரணங்களைத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காரணம் எதுவும் இருக்காது. ...வ்வொரு சிறைச்சாலையிலும் ஆங்காங்கு ஏற்பாடு செய்யச் சொல்லி ...ிருக்கிறேம். அந்தச் சிறைச்சாலையில் செய்யாவிட்டால் ஏற்பாடு செய்யப் ...டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த விவா அறிக்கையில் திருச்சி சிறை ...லும் சரி, மற்ற எல்லா சிறைச்சாலேகளிலும் சரி மதபோதனையாகவே ...செய்யப்படுவதாகத் தெரிகிறதே, மத போதனைகளுக்குப் பதிலாக இன்று ...ாட்டில் இருக்கக் கூடிய முற்போக்கான கருத்துக்களைச் சொல்லுவதற்கும் ...ற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 468-ம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முன்னாலே அப்படி இருந்தது கதாகாலக்ஷேபம் நடந்துகொண்டிருப்பதைப் பார்த்துவிட்டுத்தான், திருக்குறள், திருவாசகம், திருப்புகழ் போன்ற தமிழ் இலக்கியங்களிலுள்ள அறக் கருத்துக்களை தமிழ்ப் புலவர்களை வைத்துச் சொல்ல வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இப்போது பல இடங்களில் திருக்குறள் சொல்லப்பட்டு வருவதை, விவர அறிக்கையில் பார்த்தால் தெரியும்.

## *Crop Insurance Scheme.*

* 425 *Q.*—THIRU N. K. PALANISWAMY, THIRU D. S. A. SIVAPRAKASAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have introduced Crop Insurance as a Pilot Scheme in this State during 1973 ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பயிர் இன்ஷூரன்ஸ் செய்வதற்கு சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக 1971 இல் ரூ. 38,500 செலவிடப்பட்டது. பயிர் இன்ஷூரன்ஸைத் தொடங்குவதாக இருந்தால், அதனால் நட்டம் ஏற்படக்கூடுமாதலால், அந்த நட்டத்தை மத்திய அரசே ஏற்றுக்கொள்ளுமா என்பது கடிதப் போக்குவரத்தில் இருக்கிறது. இன்ஷூரன்ஸ் மத்திய அரசின் பொறுப்பு என்பது அரசியல் சட்டம்.

திரு. என். கே. பழனிச்சாமி: இதைப்பற்றி கடிதப் போக்குவரத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நட்டம் எவ்வாறு ஏற்படும் என்று அமைச்சர் சொல்வார்களா?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : மத்திய அரசு இன்ஷூரன்ஸ் ப்ரீமியத்தை 5 சதவீதமாக வைக்கச் சொல்லியிருக்கிறது. நாம் இதை பரிசீலனை செய்து பார்த்ததில் குறைந்த பட்சம் 20 சதவீதமாக வைத்தால்தான் நட்டம் ஏற்படாதிருக்கும். அதாவது ஐந்தில் ஒரு பங்கு, ஆயிரம் ரூபாய் பயிருக்கு 200 ரூபாய் ப்ரீமியம் இருந்தால்தான் கட்டுப்படியாகும். நன்றாக விளையக்கூடிய இடத்தில், 20 ஆண்டுக்கு ஒரு முறைதான் தீய்வு ஏற்படும் என்கிற இடத்திலாவது இந்தத் திட்டத்தைக் கொண்டு வரும்படி மத்திய அரசு சொல்லுகிறது. நிச்சயமாக விளையும் என்கிற இடத்தில் இருக்கிற விவசாயிகளிடம் இருந்து இன்ஷூரன்ஸ் கட்டணத்தை வாங்க முடியாது. ஆக 5 சதவீதம் ப்ரீமியம் என்பது கட்டுப்படியாகாது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.



திரு ஏ. ஆர். சுப்பையா : பல ஆண்டுகளாக இந்த ஆட்சியின் கொள்கையாக இருக்கக்கூடிய இந்தத் திட்டத்தை பைலட் ஸ்கீமாகவாவது ஒரு மாவட்டத்திலாவது ஏற்படுத்த முன்வருவார்களா? லாப நஷ்டக் கணக்கு அதிலிருந்து தெரிந்துவிடும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கோயம்புத்தூரில் உடுமலைப் பேட்டை தாராபுரம் போன்ற இடங்களில் ஆராய்ச்சி செய்தோம், பைலட் ஸ்கீமாகவாவது கொண்டுவரவேண்டும் என்று. பைலட் ஸ்கீமுக்குத்தான் மத்திய அரசு சட்ட முன்வடிவு அனுப்பியிருக்கிறார்கள். 5 சதவீதம் பிரீமியம் என்பது மிகுந்த நட்டத்தை ஏற்படுத்தும், நட்டம் ஏற்பட்டால் அதை மத்திய அரசு ஏற்குமா என்பதுதான் கடிதப்போக்குவரத்தில் இருக்கிறது.

திரு தோப்பூர் திருவேங்கடம் : இந்த நட்டத் தொகை முழுவதையும் மத்திய அரசே ஏற்கவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறதா? அல்லது தமிழக அரசும் அதில் ஒரு பங்கை ஏற்பதாகத் தெரிவித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : இன்ஷூரன்ஸ் என்பது மத்திய அரசின் பொறுப்பு. கூட்டுறவுத் துறையில் இருந்த இன்ஷூரன்ஸ் கம்பெனியைக் கூட மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்ஷூரன்ஸ் மூலமாக வருகிற லாபத்தில் இப்போது அவர்கள் மாநில அரசுக்குப் பங்கு தரவில்லை. இதில் நட்டம் ஏற்பட்டால் அதை மாநில அரசு ஏற்கும் என்று சொல்லவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மத்திய அரசினிடத்திலே, இருக்கின்ற பல உரிமைகளை நாம் நமக்கு அதிகாரங்கள் போதாது என்று அதிகமாகக் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். இந்த நிலையிலே நம்முடைய கிராப் இன்ஷூரன்ஸ் திட்டத்திலே ஏற்படுகின்ற நஷ்டத்தை மட்டும் மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டு இருக்கிறதா? அல்லது இந்தத் திட்டத்தை முழுவதும் அமல் செய்கின்ற உரிமையை வழங்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, அமல் செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்று தெளிவாக எழுதியிருக்கிறோம். ஆனால் அமல் செய்யும்போது கோடிக்கணக்கிலே பணம் நஷ்டம் ஏற்படுகிறது. அந்த நஷ்டத்தை ஈடுசெய்வதற்குப் பணம் வேண்டும். இந்த கிராப் இன்ஷூரன்ஸ்காக என்று தனியாக மக்களிடத்திலே வரிப்போடுவது என்பது சரியாக இருக்காது. இப்படி நஷ்டம் வரும்பொழுது ஏற்றுக்கொள்வோம் என்று அவர்கள் உத்திரவாதம் கொடுத்தால் நாம் தொடங்கிவிடலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: கிராப் இன்ஷூரன்ஸ்ஸை குறைந்த செலவிலே செய்யலாம் என்றும், என்ன என்ன பயிர்களுக்குக் கொண்டு வரலாம் என்றும் ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஏற்கனவே இன்ஷூரன்ஸ் உத்தியோகத்திலே இருந்த என்.வி. நாயுடு

[1974 மார்ச் 14]

அவர்கள் கட்டுரைகள் தினமணியில் எழுதியிருந்தார்களே, அதைப்பற்றியெல்லாம் பரிசீலனைசெய்து அதைக் கொண்டுவருவதற்கான யோசனை அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி.பா. ஆதித்தனார் : தினமணியிலே எழுதிய கட்டுரையை நான் பார்க்கவில்லையென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சில பயிர்களுக்கு என்று மத்திய அரசு இயற்றிய சட்டத்தில் இல்லை. அவர்கள் சில பகுதிகளுக்கு இதைக் கொண்டுவரலாம் என்றுதான் எழுதியிருக்கிறார்கள். எந்த எந்தப் பகுதிகளை எடுத்துக்கொள்ளலாம் என்றால் நிச்சயமாக விளைகின்ற பகுதிகளைத்தான் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த நிலைமையில் ஆயிரம் ரூபாய் அளவிற்கு விளைச்சல் இருக்கிறது என்றால் அதற்காக 100 ரூபாய் அல்லது 200 ரூபாய் கேட்டால் விவசாயிகள் கொடுக்கமாட்டார்கள் என்று எழுதியிருக்கிறோம்.

சாதாரணமாக பஞ்சம் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வருகிறது, பஞ்சம் என்றால், "பாஞ்ச்" அதாவது ஐந்து, ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது. இதை நடத்த வேண்டுமென்றால் குறைந்தது 20 சதவீதமாவது பிரிமியம் நமக்குத் தேவைப்படுகிறது. 5 சதவீதம் பிரிமியம் என்று வைத்தால் நஷ்டம்தான் வரும். நஷ்டத்தை ஈடுசெய்வதற்கு மத்திய அரசு உத்திரவாதம் கொடுத்தால் நாம் நடத்தலாம்.

திரு. எம். முத்தையா : மத்திய அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநில சர்க்காரால் சில பொறுக்குவிதை திட்டங்களின் கீழ் பொறுக்குவிதைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தப் பொறுக்குவிதைகளிலே பாதிப்பு விவசாயிகளுக்கு ஏற்பட்டால் அவர்களுக்காக இந்தத் திட்டத்தைக் கொண்டுவர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பொறுக்கு விதைத் திட்டம் என்பது வேறு, இது வேறு. இதிலே குறிப்பிடப்பட்டிருப்பது பயிர்கள் இன்ஷ்யூரன்ஸ். அப்படிச் சொல்லும்பொழுது ஒரு பகுதி முழுவதும் "பிளாக்" ஆக எடுத்து அந்தப் பயிர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் செய்வது என்று திட்டம் இருக்கிறது. பொறுக்கு விதைக்கு அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

திரு. கு. பெரியசாமி : தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையிலே முதலமைச்சர் அவர்கள் மாதம் ரூபாய் 10 கட்டினால் அவர்களுக்கு ரிடையர் ஆகும்பொழுது ஒரு கணிசமான தொகை அதாவது 10 ஆயிரம் ரூபாய் கிடைக்குமென்ற முறையிலே ஒரு சோஷியல் செக்யூரிட்டி ஸ்கீம் கொண்டு வந்திருக்கிறார்கள். அது மத்திய அரசின் துணையில்லாமலேயே கொண்டுவரப்பட்டு இருக்கிற நல்ல திட்டமாகும். அதைப் போலவே விவசாயிகளுக்கும் சோஷியல் செக்யூரிட்டி ஸ்கீம் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாதம் பத்து ரூபாய் என்று வசூல் செய்து அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது வேறு திட்டம். இது இன்ஷ்யூரன்ஸ், இன்ஷ்யூரன்ஸ் கூட அல்ல, ஏனென்றால் இன்ஷ்யூரன்ஸ் முழுவதும் மத்திய அரசின் பொறுப்பிலேதான் இருக்கிறது. அந்தத் திட்டத்தை சோஷியல் செக்யூரிட்டி என்று சொல்லியிருக்கிறோம். இந்தத் திட்டத்தை அம்மாதிரி நடத்த இயலாது என்பது நாம் நடத்திய ஆராய்ச்சியில் இருந்து தெரிகிறது. அது ஓட்டப்பிடாரம் உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். மற்றவர்களுக்கும் தெரியும். அடிக்கடி பயிர்கள் தீய்ந்து விடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. இந்த நிலைமையில் 1,000 ரூபாய்க்கு 200 ரூபாய் கட்டவேண்டுமென்று விவசாயிகளிடத்திலே சொன்னால் அவர்கள் கட்டமாட்டார்கள். 5 சதவீதம் என்ற அளவிற்கு பிரிமியம் வைத்து நடத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று தெரிகிறது. 20 சதவீதம் என்று வைத்தால்தான் நடைபெறும். 1,000 ரூபாயிலே 200 ரூபாய் இதற்காகக் கட்டவேண்டுமென்று கேட்டால் விவசாயிகள் கொடுப்பார்களா என்பதை உறுப்பினர் அவர்களே, ஆராய்ந்து முடிவு செய்துகொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பயிர் பாதுகாப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு 75 பங்கும், மாநில அரசு 25 பங்கும் போட்டு, ஒரு சில பைலட் ப்ராஜக்ட்களையாவது உருவாக்குவதற்கு அமைச்சரவை முடிவு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, இது பயிர்பாதுகாப்பு அல்ல, பயிர் இன்ஷ்யூரன்ஸ். பயிர் பாதுகாப்பு பூராவும் அரசாங்க மூலமாக நடைபெற்று வருகிறது. இன்ஷ்யூரன்ஸ் என்பது மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பு. இன்ஷ்யூரன்ஸ் நிறுவனங்களின் லாபம் பூராவும் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள், நமக்குத் தருவதில்லை. கோவாப்பரேட்டிவ் டிபார்ட்மெண்டிலே இன்ஷ்யூரன்ஸ், ஏற்கெனவே கையிலே ரொக்கப் பணம் மட்டும் 25 இலட்சம் இருந்ததற்கு கூட அவர்கள் 15 இலட்சம் மட்டும் கொடுத்து எடுத்துக்கொண்டார்கள். லாபத்தை அடைகிறவர்களே நஷ்டத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றுதான் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : பொதுவாக விவசாயத் தொழில் என்று சொன்னால் அதிலே லாபம் உத்திரவாதம் இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக ஆயக்கட்டுப் பகுதியாக இல்லாத, புஞ்சைப் பகுதிகளாக இருக்கிற பகுதிகளிலே விவசாயிகளுக்கு வருமானம் நித்திய கண்டம், பூரண ஆயுசாக இருக்கிறது. புஞ்சைப் பகுதிகளிலே மழையில்லாத நேரங்களிலே பயிர்கள் கெட்டு விடுகின்றன. விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல அரசாங்கத்திலிருந்து ஹை-ப்ரீட் கம்பு என்று தருகிறார்களே, அதை நம்பி விவசாயிகள் 500 ரூபாய் 1,000 ரூபாய் என்று போட்டு பயிர் செய்து பார்த்தால் விதை முளையிலேயே போய்விடுகிறது. இந்தமாதிரித் திட்டங்களுக்காவது பயிர் பாதுகாப்புத் திட்டத்தை, இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை ஆரம்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே நான் விடை
சொன்னேன். மாண்புமிகு அங்கத்தினர் கேட்டிருக்கலாம். மறுமுறை
சொல்வதற்கு நான் கவலைப்படவில்லை. இப்படி விவசாயிகளுக்கு உத்திர
வாதம் இல்லாமல் இருப்பது உண்மை. புஞ்சைப் பயிரிலே அடிக்கடி
பஞ்சம் வருகிறது, அதுவும் உண்மை. ஆனால் இந்தத் திட்டத்தைக்
கொண்டுவந்தால் ஆண்டுதோறும் விவசாயிகள் எவ்வளவு பணம் கட்ட
வேண்டுமென்ற கணக்கை எடுத்துப் பார்க்கிறபோது நமக்கு ஆராய்ச்சி
யிலே தெரிந்திருக்கிறது. உடுமலைப்பேட்டை, தாராபுரம், காங்கேயம், உறுப்
பினர் அவர்களுடைய தொகுதி, தாளவாடி, பவானி ஆகிய இடங்களிலே
ஆராய்ச்சி நடத்திப் பார்த்ததில், இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கட்டுப்படியான
நிலைமையிலே நடைபெறவேண்டுமானால் ஏறத்தாழ 20 சதவீதம் பிரிமியம்
ஆண்டுக் கட்டணமாக வாங்கவேண்டியிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கொரு
முறை விளைச்சல் இல்லாத நிலைமை ஏற்படுகிறது. பல ஆண்டுகளாக
இருந்த கணக்கை எடுத்துப்பார்த்தால் அந்த நிலைமை இருப்பது தெரி
கிறது. இந்த நிலைமையில் ஆண்டுதோறும் விவசாயிகளிடத்திலிருந்து
200 ரூபாய் பிரிமியமும் தரவேண்டுமென்று கேட்டால் விவசாயிகள் தயங்கு
வார்கள் என்ற குறிப்பை மத்திய அரசுக்கு நாம் அனுப்பி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 426.

திரு. என். கே. பழனிசாமி : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், இது முக்கியமான கேள்வி, இவ்வளவு சீக்கிரம் முடித்துவிடக்கூடாது....

திரு. நா. வீராசாமி : சார், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்குக் குறைவாகத்தான் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு மட்டும் 9 துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. போதுமானது, உட்காருங்கள்.

## *Tobacco Cultivation.*

* 426 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :—

(*a*) whether it is a fact that a research in tobacco cultivation has been conducted in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ) ஆம். மதுரை மாவட்டம் வேடசந்தூரில் உள்ள புகையிலை ஆராய்ச்சி நிலையம் ராஜமந்திரி மத்திய ஆராய்ச்சி நிலையத்தின் கிளை நிறுவனமாக இயங்கி வருகிறது.



திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் அடிப்படையிலே புகையிலையை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு என்ன என்ன நடைமுறைகள் கையாளப்படுகின்றன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தனிக் கேள்வி போட்டால் பூராவும் சொல்லமுடியும். ஏறத்தாழ 5, 6 பக்கங்கள் இருக்கின்றன. விளைச்சல் வேறு, ஆராய்ச்சி வேறு. இப்பொழுது ஆராய்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசின் கிளை நிலையமாக அது நடந்து கொண்டிருக்கிறது.

Thiru K. S. KOTHANDARAMIAH : Sir, some time back the Director of Tobacco had recommended to locate a small Tobacco Research Centre at Hosur and I do not know what became of it. It is well-known that the best tobacco is grown in Hosur taluk and there is also a proposal to locate a cigarette manufacturing factory in Hosur taluk. In view of all this, may I know from the Hon. Minister for Agriculture who is very much interested in agriculture, to give more incentives to agriculturists who cultivate tobacco and recommend the establishment of a Research Centre there ?

The Hon. Thiru Si. Pa. ADITANAR : Sir, Government are fully aware that Dharmapuri district from which the hon. Member hails is very suitable for tobacco cultivation and the Government are now implementing various schemes for encouraging tobacco cultivation there. I understand there is a proposal in the Industries Department to set up a cigarette factory there. But the question now relates to Research. Therefore, if the hon. Member will be good enough to put a separate question about the various encouragements and incentives given for tobacco cultivation, I will print the answer and place it on the table of the House.

(முற்பகல் 10-00)

திரு கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, புகையிலை ஆராய்ச்சி மூலமாக யீல்டை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது செய்ய முன் வருமா ? பருத்தி, மற்ற உணவுப் பொருள்களைப் பொறுத்த வரையில் நவீன முறையில் சாகுபடி செய்து ஆராய்ச்சியின் மூலம் யீல்டை அதிகப்படுத்தும் முறையிருக்கிறது. ஆனால், புகையிலை விவசாயத்தில் மட்டும் அப்படி அதிகப்படுத்த முடியாத நிலை ஏற்படுவதால் புகையிலை விற்பனையை நிறுத்தக்கூடிய சூழ்நிலை கூட வருகிறது. ஆராய்ச்சியின் மூலமாக இதை அதிகப்படியாக உற்பத்தி செய்ய தற்பொழுது ஒரு ஏக்கருக்கு 25 மூட்டைகள் என்றால் அதைவிட அதிகப்படுத்துவதற்கு முடியவில்லை. அதிகப்படுத்த வாய்ப்பிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஆராய்ச்சியின் மூலமாக புகையிலை வளர்ச்சியையும் அதிகரிக்க முடியும் என்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக பல திட்டங்களை அரசு—மத்திய சர்க்கார்கூட ஓரளவு உதவி செய்து வருகிறது—மேற்கொண்டுள்ளது. பல திட்டங்கள் அமுலில் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் முழு விவரங்களையும் இன்னின்ன முறையில் புகையிலை வளர்ச்சியை அதிகப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

THIRU B. VENKATASWAMY : In the answer given by the Hon. Minister for Agriculture, he has stated that Dharmapuri is well suited for growing this virginia tobacco. As it is, the Excise Duty levied on tobacco is 10 times of the cost of tobacco.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு, இது வேறு. புகையிலை என்பதால் அதன்மேல் இருக்கும் வரியைப்பற்றியெல்லாம் கேள்வி கேட்பது முறையல்ல. இது ஆராய்ச்சிப் பற்றித்தான்.

EHIRU B. NENKATASWAMY : It is humpering the production.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, புகையிலையை வாயில் போட்டு அடக்கிக் கொண்டால் கேன்சர் போன்ற நோய்கள் வருவதாகக் கூறுகிறார்களே, அரசாங்கம் இந்தச் சாகுபடியை உற்சாகப் படுத்துவதால் மேலும் அது பரவும் என்பதால் மேற்கொண்டு அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் அப்படியே விட்டுவிடலாம் அல்லது வெளிநாட்டிலே உபயோகிப்பவர்களுக்காக மட்டும் உற்பத்தி செய்யலாம்.

(விடை இல்லை.)

## முத்துரெங்கம்பட்டி ஊராட்சி.

*427 வினா—திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், முத்துரெங்கம்பட்டி பஞ்சாயத்து தலைவரிடமிருந்து பிப்ரவரி 1972-ல் பொது மக்களுக்கு சாலை வசதி, குடி நீர் வசதி செய்து தரவேண்டி நிதி உதவி கேட்டு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.





(இ) 1973-74-ம் ஆண்டிலும், 1974-75-ம் ஆண்டிலும் கிராமப் பணித் திட்டத்தின்கீழ் சாலை மற்றும் குடிநீர் திட்டத்தை முத்துரெங்கம்பட்டி ஊராட்சியிலுள்ள கிராமங்களில் செயல்படுத்த கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தப் பணியைத் தொடங்குவதற்கு ஏதாவது நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது ஒதுக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் எடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு இந்த ஆண்டு அந்த வேலைத்திட்டம் முடியும் நிலையில் இருக்கிறது.

## பார்வதிபுரம் பகுதியில் குடிநீர் வழங்கல்.

* 428 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி நகரம், பார்வதிபுரம் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் பஞ்சத்தைப் போக்க வேண்டி பொதுமக்களிடமிருந்து 1973 செப்டம்பர் மாதத்தில் நிர்வாக அதிகாரிக்கு மனு ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. அ.பெ. தர்மலிங்கம் :

(அ) ஆம்.

(இ) பார்வதிபுரம் பகுதியில் உள்ள கேணிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு வரண்டு இருந்தமையால் தாற்காலிகமாக அப்பகுதியில் உள்ள மக்களுக்கு தண்ணீர் கிடைக்கும் பொருட்டு அதன் அருகாமையில் உள்ள தா. பேட்டை ரோடில் உள்ள தண்ணீர் போதிய வசதி உள்ள பெரிய கேணியில் தண்ணீர் இறைத்துக் கொள்வதற்கு ஏற்ப நான்கு மர உருளைகள் பொருத்தப்பட்டு குடிமக்கள் தண்ணீர் தாராளமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

முசிறி பேரூராட்சி எல்லைக்குள் காவேரியிலிருந்து குழாய் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் சம்பந்தமாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் வேலை ரூபாய் 1,31,250 மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி கோட்டப் பொறியாளரினால் மேற்கொள்ளப்பட்டு துரிதமாக நடந்து கொண்டு வருகிறது. சம்பந்தப்பட்ட வேலை முடியும் தருவாயில் உள்ளது. பார்வதிபுரம் பகுதியில் உள்ள கேணியில் தண்ணீர் இல்லாமலிருப்பதால்

அப்பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு காவேரியிலிருந்து குழாய் மூலம் கொண்டு வரும் திட்டத்தின்கீழ் பம்பின் மெயின் இழுத்து தண்ணீர் சப்ளை செய்வதற்கு பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததால் பொதுமக்களிடமிருந்து நன்கொடை மூலம் தொகை வசூல் செய்து பார்வதிபுரம் பகுதிக்கு குடிதண்ணீர் சப்ளை செய்யவும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வரப்படுகிறது என்றும் திருச்சி மாவட்ட ஆட்சியாளருக்கு முசிறி பேரூராட்சி நிர்வாக அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முசிறி நகரத்திலுள்ள பார்வதிபுரம் நகர பஞ்சாயத்திற்கும் சம்பந்தப்பட்டதுதான். குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் ஏன் இந்தப் பகுதி சேர்க்கப்படவில்லை. இனிமேலாவது சேர்ப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா? பண வசதியில்லையென்றால் கடனாகவாவது கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வீடுகளுக்கு மட்டும் அவர்கள் தண்ணீர்க்குழாய் பொருத்திக் கொள்ள விரும்பினால் அதற்காக நன்கொடை வழங்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, அதைப்போலவே பார்வதிபுரத்திற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவர்களுக்கு இணைப்பு கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. இணைப்பு கொடுக்கப்படும்.

## ஆலயங்களில் சமுதாயப் பணிகள்.

* 429 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழகத்தில் உள்ள கோவில்களில் அதிக வருமானம் உள்ள கோவில் எது?

(இ) மேற்படி கோவிலிலிருந்து சமுதாயப் பணிக்கு ஆண்டு தோறும் எவ்வளவு செலவிடப்படுகிறது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) மதுரை மாவட்டம், பழனி, அருள்திரு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில்.

(இ) மேற்படி திருக்கோயிலிலிருந்து சமுதாயப் பணிக்காக 1970-71, 1971-72, மற்றும் 1972-73 ஆண்டுகளில் முறையே ரூ. 10,61,535, ரூ. 13,27,199 மற்றும் ரூ. 13,39,278 செலவிடப்பட்டுள்ளது.



திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பழனி கோயில் நிதியிலிருந்து எந்தெந்த சமுதாயப்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, 17 வகையான சமுதாயப் பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. பெண்கள் கல்லூரி, சமய வளர்ச்சி சொற்பொழிவுகள், கீழ்த்திசை பண்பாட்டுக் கல்லூரி, கலைக் கல்லூரி (ஆண்கள்), நாதஸ்வரக் கல்லூரி, செந்தமிழ் கல்லூரி, ஏழை விடுதி, ஏழை மாணவர் மதிய உணவு, நூல் நிலையம், வேத ஆகமப்பள்ளி, கோசாலா, சித்த வைத்திய சாலை, பிச்சைக்காரர்கள் மறு வாழ்வுநிதி, கார்த்திக் பள்ளி, மருத்துவமனை, செவிடர்பள்ளி, குழந்தைகள், முதியோர்கள் காப்பகங்கள் என்ற வகையில் செலவிடப்படுகின்றன.

* 430 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கோவில்களில், ஏழைக் குழந்தைகளுக்கு பால் வழங்கும் திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்பட்டு வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :

(அ) ஆம்.

(இ) தமிழ் புத்தாண்டு தினத்திலிருந்து (13—4—1973) மூன்று வயதிற்குட்பட்ட ஏழைக் குழந்தைகளுக்கு தினசரி தலா 200 மில்லி லிட்டர் பால் ஒவ்வொரு திருக்கோயிலின் நிதி வசதிக்குட்பட்டு வழங்க ஏற்பாடாகி, அதன்பேரில் 64 திருக்கோயில்களிலிருந்து 648 குழந்தைகளுக்கு இத்திட்டப்படி இலவசமாக பால் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் 31—12—1973 முடிய 11 திருக்கோயில்களில் 147 குழந்தைகளுக்கு இலவசமாக தினசரி தலா 200 மில்லி லிட்டர் பால் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டம் அனுமதிக்கப்பட்ட எஞ்சியுள்ள 53 திருக்கோயில்களில் இத்திட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதுரை அருள்திரு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் இத்திட்டத்தின்கீழ் தினசரி பால் கொடுப்பது தவிர, ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் 7 லிட்டர் பால் திருக்கோயில் செலவிலும், 15 லிட்டர் பால் அன்பளிப்பாகப் பெற்றும் (தினசரி 22 லிட்டர் பால்) ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கும் திட்டமும் நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த கணக்கிலிருந்து தலா பத்து குழந்தைகள்தான் வருகின்றன, பால் வழங்கப்படும் குழந்தைகள். பழனி கோயிலைப் பற்றிச் சொன்னார்கள். அதிகமான வருமானம் வரும் கோயில்களில் இந்தத் திட்டத்தின்படி அதிகமான குழந்தைகளுக்கு வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

[1974 மார்ச் 14

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோயில்களின் வருமானத்தைப் பொறுத்தும், அந்தக் கோயில்களிலே உள்ள உபரி நிதியைப் பொறுத்தும்தான் வழங்கப்படுகிறதே தவிர எல்லாக் கோயில் களிலும் பத்து குழந்தைகள் என்ற வீதத்தில் வழங்கப்படவில்லை. எந்தெந்தக் கோயில்களில் உபரி நிதி அதிகமாக இருக்கிறதோ அந்த நிதியின் தன்மையைப் பொறுத்து குழந்தைகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : லிஸ்டட் டெம்பிள்ஸ் எல்லாவற்றிலும் இப்படி ஒழுங்கான முறையில் பால் வழங்கப்படுகிறதா ? ஒழுங்கான முறையில் பால் வழங்கப்படுகிறதா என்று கண்காணிக்க கமிட்டி போடப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அதிலே சந்தேகம் வர வேண்டிய அவசியம் இல்லை, ஏழைக் குழந்தைகளுக்கு என்று வழங்கப்படுகிற பால் ஒழுங்காகத்தான் வழங்கப்படுகிறது. லிஸ்டெட் டெம்பிள்ஸ் என்று சொல்லப்பட்டிருப்பட வற்றிலும் எந்தக் கோயில்களில் உபரி நிதி இருக்கி றதோ அந்தக் கோயில்களில் மட்டும் பால் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி *இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. 1974–75-ம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1974–75-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். திரு கே. எம். ராஜகோபால் நேற்று ஐந்து நிமிடம் பேசியாகிவிட்டது. இப்போது ஐந்து நிமிடத்திற்குள் முடித்துவிட வேண்டும்.

*திரு. க. மு. இராசகோபால் : குறுக்கீடு இல்லாமல் இருந்தால் ஐந்து நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

தலைவர் அவர்களே, உலகத்திலே மனிதனை மனிதன் சுரண்டி வாழ் கின்ற கொடுமையை இந்த நாட்டிலே ஒழிக்க வேண்டுமென்று தன் னுடைய உள்ளத்திலே அடங்கிக் கிடந்ததை, அவன் நெஞ்சத்திலே ஊறிக் கிடந்ததை வடித்து விட்டு மடிந்தான் காரல் மார்க்ஸ், இங்கர்சால். அதைச் செயல் வடிவில் கொண்டு வந்தவன் மாபெரும் புரட்சி வீரன் ரஷ்ய நாட்டு லெனின். அவனைத்தான் மக்கள் மத்தியில் புரட்சிக்காரன் என்று ஏற்றுக் கொள்ளலாம்.



ஆனால் தமிழ் நாட்டில் எடுத்ததற்கெல்லாம் புரட்சி புரட்சி என்று சொல்கின்றார்கள். எனக்கு உள்ளபடியே மெத்த வேதனையாக இருக்கிறது. அவர் இந்தச் சட்டமன்றத்திலே எவ்வளவு பெரியமோசடி செய்திருக்கிறார். அவரை இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள் மக்கள். அவர் இங்கே தாக்கல் செய்திருக்கிற சொத்துக் கணக்கில் எவ்வளவு மோசடி செய்திருக்கிறார் ? எந்த அளவுக்குச் சொத்துக் கணக்கை மறைத்திருக்கிறார் ? இங்கே சொத்தை மொத்தமாகக் காட்டிவிட்டால் டில்லியினுடைய கணக்கில் அகப்பட்டுக் கொள்ள வேண்டியிருக்குமே என்ற எண்ணத்தில் ஏமாற்றிக் கொண் டிருக்கும் நபரை இன்று வரை சட்டம் என்ன செய்திருக்கிறது ? இங்குள்ள அத்தனை சட்ட மன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் சொத்துக் கணக்கை ஒழுங்காகக் கொடுத்திருக்கிறார்கள். நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு, வீடுகள் எத்தனை, தட்டை வீடுகள் எத்தனை, மதிப்பு எவ்வளவு என்ற நிலை எல்லாம் இருக்கிறது. ஆனால் அவர் சொத்துக் கணக்கைத் தாக்கல் செய்திருப்பதே ஓராண்டுதான். அந்த ஓராண்டு காட்டியிருக்கிற கணக்கிலும் என்ன சொல்லியிருக்கிறார் ? "ஓடி ஓடி உழைக்கணும் ; ஊருக்கெல்லாம் கொடுக்கணும்" என்றவர் ஊருக்கு எங்கே கொடுக்கிறார் ? தன்னுடைய கணக்கில் "ராமாவரம் தோட்டம், நிலம், வீடு—எனக்கும் சக்கரபாணிக்கும் பாதி" என்று கூறியிருக்கிறார். நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு, மதிப்பீடு என்ன என்று சொல்ல வில்லை. எவ்வளவு பெரிய மோசடி ?

திரு. கோவை செழியன் : ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் எல்லாம் வேண்டாம்.

திரு. கோவை செழியன் : அவர் உட்கார்ந்து விட்டார். பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துக் கணக்கைப்பற்றிச் சொன்னார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பல பேரும் சொத்துக் கணக்கைக் கொடுத் திருக்கிறார்கள். கொடுத்திருக்கிற சொத்துக் கணக்கு சரிதானா என்று இதுவரை எந்தக் கமிஷனாவது ஆராய்ந்து பார்த்ததா ? உயர்நீதிமன்ற நீதிபதியை வைத்து சரிபார்த்ததா ? அல்லது போலீஸ் இலாகாவில் இருப்பவர்களை வைத்து சரிபார்த்துச் சொன்னார்களா ? மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் கணக்கு சரிதானா. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசியதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றிப் பேசக்கூடாது.

திரு. க. மு. இராசகோபால் : சொத்துக் கணக்கு தவறு என்று சொல்லவில்லை. அவர் கொடுத்த கணக்கே மோசடி என்று சொல்லுகிறேன் (குறுக்கீடு). மக்களை ஏமாற்றுகின்ற தில்லுமுல்லுக்காரர் புரட்சித் தலைவன் என்று அழைக்கப்பட்டால் அதைவிட அவமானம் இந்த நாட்டில் வேறு என்ன இருக்க முடியும் ?

[1974 மார்ச் 14

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, கோயில்களின் வருமானத்தைப் பொறுத்தும், அந்தக் கோயில்களிலே உள்ள உபரி நிதியைப் பொறுத்தும்தான் வழங்கப்படுகிறதே தவிர எல்லாக் கோயில்களிலும் பத்து குழந்தைகள் என்ற வீதத்தில் வழங்கப்படவில்லை. எந்தெந்தக் கோயில்களில் உபரி நிதி அதிகமாக இருக்கிறதோ அந்த நிதியின் தன்மையைப் பொறுத்து குழந்தைகளுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : லிஸ்டட் டெம்பிள்ஸ் எல்லாவற்றிலும் இப்படி ஒழுங்கான முறையில் பால் வழங்கப்படுகிறதா ? ஒழுங்கான முறையில் பால் வழங்கப்படுகிறதா என்று கண்காணிக்க கமிட்டி போடப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அதிலே சந்தேகம் வர வேண்டிய அவசியம் இல்லை, ஏழைக் குழந்தைகளுக்கு என்று வழங்கப்படுகிற பால் ஒழுங்காகத்தான் வழங்கப்படுகிறது. லிஸ்டெட் டெம்பிள்ஸ் என்று சொல்லப்பட்டிருப்பவற்றிலும் எந்தக் கோயில்களில் உபரி நிதி இருக்கிறதோ அந்தக் கோயில்களில் மட்டும் பால் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி *இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. 1974–75-ம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1974–75-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம். திரு கே. எம். ராஜகோபால் நேற்று ஐந்து நிமிடம் பேசியாகிவிட்டது. இப்போது ஐந்து நிமிடத்திற்குள் முடித்துவிட வேண்டும்.

*திரு. க. மு. இராசகோபால் : குறுக்கீடு இல்லாமல் இருந்தால் ஐந்து நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

தலைவர் அவர்களே, உலகத்திலே மனிதனை மனிதன் சுரண்டி வாழ்கின்ற கொடுமையை இந்த நாட்டிலே ஒழிக்க வேண்டுமென்று தன்னுடைய உள்ளத்திலே அடங்கிக் கிடந்ததை, அவன் நெஞ்சத்திலே ஊறிக் கிடந்ததை வடித்து விட்டு மடிந்தான் காரல் மார்க்ஸ், இங்கர்சால். அதைச் செயல் வடிவில் கொண்டு வந்தவன் மாபெரும் புரட்சி வீரன் ரஷ்ய நாட்டு லெனின். அவனைத்தான் மக்கள் மத்தியில் புரட்சிக்காரன் என்று ஏற்றுக் கொள்ளலாம்.



1974 மார்ச் 14] [திரு. க.மு. இராசகோபால்]

ஆனால் தமிழ் நாட்டில் எடுத்ததற்கெல்லாம் புரட்சி புரட்சி என்று சொல்கின்றார்கள். எனக்கு உள்ளபடியே மெத்த வேதனையாக இருக்கிறது. அவர் இந்தச் சட்டமன்றத்திலே எவ்வளவு பெரியமோசடி செய்திருக்கிறார். அவரை இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள் மக்கள். அவர் இங்கே தாக்கல் செய்திருக்கிற சொத்துக் கணக்கில் எவ்வளவு மோசடி செய்திருக்கிறார் ? எந்த அளவுக்குச் சொத்துக் கணக்கை மறைத்திருக்கிறார் ? இங்கே சொத்தை மொத்தமாகக் காட்டிவிட்டால் டில்லியினுடைய கணக்கில் அகப்பட்டுக் கொள்ள வேண்டியிருக்குமே என்ற எண்ணத்தில் ஏமாற்றிக் கொண்டிருக்கும் நபரை இன்று வரை சட்டம் என்ன செய்திருக்கிறது ? இங்குள்ள அத்தனை சட்ட மன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் சொத்துக் கணக்கை ஒழுங்காகக் கொடுத்திருக்கிறார்கள். நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு, வீடுகள் எத்தனை, தட்டை வீடுகள் எத்தனை, மதிப்பு எவ்வளவு என்ற நிலை எல்லாம் இருக்கிறது. ஆனால் அவர் சொத்துக் கணக்கைத் தாக்கல் செய்திருப்பதே ஓராண்டுதான். அந்த ஓராண்டு காட்டியிருக்கிற கணக்கிலும் என்ன சொல்லியிருக்கிறார் ? "ஓடி ஓடி உழைக்கணும் ; ஊருக்கெல்லாம் கொடுக்கணும்" என்றவர் ஊருக்கு எங்கே கொடுக்கிறார் ? தன்னுடைய கணக்கில் "ராமாவரம் தோட்டம், நிலம், வீடு—எனக்கும் சக்கரபாணிக்கும் பாதி" என்று கூறியிருக்கிறார். நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு, மதிப்பீடு என்ன என்று சொல்லவில்லை. எவ்வளவு பெரிய மோசடி ?

திரு. கோவை செழியன் : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் எல்லாம் வேண்டாம்.

திரு. கோவை செழியன் : அவர் உட்கார்ந்து விட்டார். பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துக் கணக்கைப்பற்றிச் சொன்னார்கள். ஆளும் கட்சியில் இருப்பவர்கள் பல பேரும் சொத்துக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்திருக்கிற சொத்துக் கணக்கு சரிதானா என்று இதுவரை எந்தக் கமிஷனாவது ஆராய்ந்து பார்த்ததா ? உயர்நீதிமன்ற நீதிபதியை வைத்து சரிபார்த்ததா ? அல்லது போலீஸ் இலாகாவில் இருப்பவர்களை வைத்து சரிபார்த்துச் சொன்னார்களா ? மாண்புமிகு ஆதித்தனார் அவர்கள் கணக்கு சரிதானா....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசியதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும். மற்றவர்களைப் பற்றிப் பேசக்கூடாது.

திரு. க. மு. இராசகோபால் : சொத்துக் கணக்கு தவறு என்று சொல்லவில்லை. அவர் கொடுத்த கணக்கே மோசடி என்று சொல்லுகிறேன் (குறிக்கீடு). மக்களை ஏமாற்றுகின்ற தில்லுமுல்லுக்காரர் புரட்சித் தலைவன் என்று அழைக்கப்பட்டால் அதைவிட அவமானம் இந்த நாட்டில் வேறு என்ன இருக்க முடியும் ?

திரு. ப. உ. சௌந்தரபாண்டியன்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்தில் இந்த அரசாங்கம் செய்த முடிவின்படி ஒவ்வொரு உறுப்பினரும் சொத்துக் கணக்கை வைக்கிறோம். இதே முறையில்தான் அமைச்சர்களும் மற்றவர்களும் கணக்கை வைத்துக் கொண்டிருக்கிறோம். இதிலே ஏதாவது முரண்பாடு இருக்குமானால், தவறுகள் இருக்குமானால் சட்டப் பேரவைத் தலைவர் அல்லது அவை முன்னவர் ஒரு குழுவை அமைத்து பரிசீலனை செய்யலாமே தவிர, நம்முடைய அவையில் இருக்கும் உறுப்பினரை தனிப்பட்ட முறையில் ஒரு உறுப்பினர் முறைகேடான முறையில் சுட்டிக்காட்டுவது அவையின் கண்ணியத்திற்கு உகந்தது அல்ல. இதை நம்முடைய நடைமுறையாகப் பின்பற்றலாமா என்று அறிய விரும்புகிறேன். இன்னும் நான் சுட்டிக்காட்ட விரும்புவது—இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கும் சொத்துக் கணக்கில் நிரம்பத் தவறுகள் இருக்கின்றன என்று என்னாலே கூற முடியும். இந்த நிலை வளர்ந்தால் இந்த அவையின் கண்ணியத்தைப் பாதிக்கும். இதைப் பற்றி நீங்கள் ஒரு முடிவு கூறவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. ராசகோபால் அவர்கள் கொடுத்த நேரத்தில் பட்ஜெட்டைப் பற்றிப் பேசுங்கள்.

திரு. க. மு. இராசகோபால்: கொடுத்த நேரத்தில் பேசிவிட்டுப் போகிறேன். பட்ஜெட்டைப் படிக்கத் தெரியாது.

அவர் கொடுத்த சொத்துக் கணக்கில் நஞ்சை எவ்வளவு, புஞ்சை எவ்வளவு, மதிப்பீடு என்ன என்று ஒரு இடத்தில் கூட சொல்லவில்லை. இது என்ன கணக்கு? பிறகு வங்கியின் கணக்கைச் சொல்லுகிறார். இந்தியன் வங்கி, ராயப்பேட்டை, இந்தியன் ஓவர்சிஸ் வங்கி, மைலாப்பூர், சிண்டிகேட் பாங்க் . . . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நம்முடைய சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் அவர்களுடைய சொத்து விவரத்தைக் கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி வருஷா வருஷம் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுப்பது ஒரு சடங்கு மாதிரி இருக்கிறது. கேரளத்தில் இந்த மாதிரி கணக்கைக் கொடுத்தவுடன் அமைச்சரவை பரிசீலிக்கிறது. இங்கு பரிசீலனை என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. இங்கு அவரவர்கள் கணக்குகளைச் சமர்ப்பிக்கலாம் அவ்வளவு தான். அப்படிக்கொடுத்திருப்பது சரியாகக் கூட இருக்கலாம், அல்லது தவறாகக் கூட இருக்கலாம். இங்கே இப்படிப் பேசுவது உறுப்பினர்களுடைய உரிமையையே மீறுவதாக இருக்கிறது. நான் இந்த ஆண்டு கணக்கைக் கொடுக்கவில்லை. என்னைப் பொறுத்தவரை வருஷா வருஷம் என்னுடைய சொத்துக்கள் குறைந்து கொண்டே வருகிறது. அதிலே தகராறு இல்லை. ஆனால் கொடுத்துப் பயன் இல்லை. அது ஒரு சடங்கு மாதிரி இருக்கிறது.



As a protest I have not submitted the accounts of last year deliber-ately.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

திரு கே. டி. கே. தங்கமணி: இதைப் பற்றி இப்படி காமெண்ட் பண்ணுவது முறைதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒருவர் கணக்கைக் கொடுத்திருக்கிறார். அது சரியல்ல என்று இங்குள்ள உறுப்பினர் சொல்லுகிறார். இங்கே வைக்கப்பட்ட கணக்கைப் பற்றித்தான் சொல்லுகிறார். (குறுக்கீடுகள்).

திரு சி. வி. வேலப்பன்: அவர் கொடுத்த கணக்கு தவறு என்று இவர் எப்படி சொல்ல முடியும்?

திரு கே. டி. கே. தங்கமணி: This will open the pandora's box. என்னுடைய கணக்கை முதல் வருஷம் கொடுத்திருக்கிறேன். இன்றைக்குப் பார்த்தால் அது குறைந்திருக்கும். இப்படி ஒவ்வொரு வரும் கொடுக்கிறார்களா? அவர்களுடைய நிலைமையை வைத்து அதைப் பற்றித் தாங்களே பரிசீலனை செய்வதற்காக ஒரு கமிட்டியைப் போடுங்கள். கொடுக்கப்பட்டுள்ள கணக்குகள் எல்லாம் சரியானவைதானா என்று ஆராய ஒரு குழு போடுங்கள். நீங்கள் அதைப் பற்றி விசாரித்துச் சொல்லுங்கள். இங்கே நம்முடைய சட்டத்தின் அடிப்படையில் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறதே தவிர, அதைப் பற்றி விசாரணை செய்ய வேண்டுமென்று சூழ்நிலை இல்லை.

It is out of order. Protection should be given to the Hon. members who have submitted accounts.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: இந்த மாதிரியான விரிவான விமர்சனம் இல்லாமல் இந்தப் பிரச்னையை இதோடு விட்டு விடுவது நல்லது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் எல்லோரும் கணக்குகள் கொடுத்திருக்கிறோம். அதைப் பற்றி நாம் விமர்சிக்காமல் இருப்பது சாலச்சிறந்ததாகும் என்ற கருத்தை நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது ஒரு ஒப்பன் டாகுமென்டாக இருப்பதால் அதைப்பற்றி இவ்வளவு விரிவாக இங்கே விவாதிக்க வேண்டுமா என்பதை தாங்கள் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர்கள் தங்களுடைய கணக்குகளை எல்லாம் தந்திருக்கிறார்கள். நியாயமான, ஒழுங்கான கணக்குகளைத் தரவேண்டும் என்பது தான் ஜனநாயக மரபு. அதன்படி தந்திருக்கிறார்கள். அதிலிருக்கிற தவறுகளையெல்லாம் பற்றி இங்கே விவாதித்தால் அது நன்றாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

<u>திரு. என். கணபதி</u> : இந்த அவையில் வைக்கப்படுகிற ஒவ்வொரு கடிதமும் அல்லது அறிக்கைகளும் இந்த அவையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட அதிலிருக்கிற குற்றங் குறைகளை இங்கிருக்கிற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகிற அந்த அடிப்படை உரிமையை மதித்துத்தான் இந்த அவையில் வைக்கப்படுகிறது. எனவே இந்த அவையில் வைக்கப்படுகிற இந்தச் சொத்துக் கணக்கில் இருக்கிற குற்றங்குறைகளை எடுத்துக் கூறுவதற்கு உறுப்பினர்களுக்கு அடிப்படை உரிமை இருக்கிறது என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஆகவே சொத்துக் கணக்கில் இருக்கிற குற்றங்குறைகளை எடுத்துச்சொல்வதற்கு, அது பற்றி கமென்ட்ஸ் செய்வதில் எந்தவிதமான தவறும் இல்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : கொடுக்கப்படும் கணக்குகள் இந்த அவையின் முன் வைக்கப்படுகின்றன. அவை முன் வைக்கப்பட்ட எந்தக் காரியத்தைப் பற்றியும் விமர்சிக்க அவையில் இருக்கிற உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. திரு இராசகோபால் சொன்னார்கள் என்றால் இன்னொரு உருப்பினர் இன்னொரு உறுப்பினரின் கணக்கு சரியாக இல்லை என்று சொல்வதற்கு அவருக்கு, உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. வாய்ப்பு வரும்போது பயன்படுத்தலாம். அதில் தவறு இல்லை.

<u>திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u> : பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதைப் பற்றிக் குறிப்பிட்டேன். அதுபற்றி தாங்கள் எந்தவிதமான தீர்ப்பும் வழங்கவில்லை. இந்த நிலை வளருமேயானால் பேரவைத் தலைவருடைய சொத்துக் கணக்குகளைப் பற்றி பேச வேண்டிய நிலை ஏற்படும்.

(கூச்சல்-குழப்பம்).

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு. சௌந்தரபாண்டியன் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார். அது என்ன என்று கேட்பதற்கு முன் திரு. கோவிந்தராசன் எழுந்து நின்று . . . . . .

<u>திரு. துரை கோவிந்தராசன்</u> : அவர்கள்தான் முதலில் எழுந்தார்கள், பின்னர்தான் நான் எழுந்தேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : நீங்கள் தான் முதலில் எழுந்து நின்றது. திரு. சௌந்தரபாண்டியன் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்தார். அவர் முதலில் சொல்லி முடிக்கட்டும்.

**Thiru V. Krishnamoorthi (Nellikuppam) : May I submit to the Hon. Speaker that we have to maintain the dignity and decorum of the House.**





உறுப்பினர்கள் தங்கள் கணக்குகளைக் கொடுக்கிறார்கள். அதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்றால் அதைப்பற்றித்தான் பேச முடியும், பேசுவார்கள். ஆகவே அதைவிட்டுவிட்டு வேறு விஷயத்திற்குச் செல்ல உறுப்பினர் அவர்களை அழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : நான் கொடுத்திருக்கிற கணக்குகள் மோசடியானது அல்லது தவறானது என்று சொல்வது சரிதானா என்பது தான் என் பாயின்ட் ஆப் ஆர்டர்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அது இந்த அவைமுன் வைக்கப்பட்ட ஒரு காகிதம். அந்தக் காகிதத்தைப் பற்றி ஒரு உறுப்பினர் கருத்து சொல்கிறார். அந்தக் கருத்துக்கு மாற்று கருத்து தெரிவிக்க வேண்டுமானால் நீங்களும் கருத்து தெரிவிக்கலாமே தவிர விவாதிக்கவே கூடாது என்று சொல்லமுடியாது.

<u>திரு. க. மு. இராசகோபால்</u> : நான் உள்ளதைச் சொல்கிறேன். ஏன் இவ்வளவு வேகம் காட்டுகிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினர்தான். நானும் கணக்குகளை, என் சொத்துக் கணக்குகளை வைத்திருக்கிறேன். காஞ்சிபுரம் வட்டம், கம்பராசபுரம் க. மு. இராசகோபால் நான். எனக்குள்ள சொத்துக்கள், 18 ஏக்கர் 94 சென்ட் நன்செய் நிலம். 20 ஏக்கர் 4 சென்ட் புன்செய் நிலம். மதிப்பு சுமார் ரூ. 75,000. இருக்க தட்டை ஓட்டு வீடுகள், ஒரு மெத்தை வீடு, மதிப்பு ரூ. 13,000. வாலாஜாபாத்தில் ஒரு சிறிய மெத்தைக் கட்டடம், மதிப்பு ரூ. 3,000. இப்படி என் சொத்து மதிப்பைக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இவர்கள் இங்கு அதன் மதிப்பைக் கொடுக்கவில்லை, விஸ்திரணம் பற்றியும் சொல்லவில்லை. ஆகவே நான் இதைப் பற்றிக் குறை கூறும்போது ஏன் பாய்கிறீர்கள்? நான் மதிப்பு வைத்திருக்கும் அண்ணன் கே. டி. கே தங்கமணி அவர்கள் சட்டம் படித்தவர்கள். அவர்களே இதற்கு **என்றால், கணக்கு கேட்டுத்தான் இந்த எங்கள் குடும்பமே இரண்டாகப் பிரிந்திருக்கிறது.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : யார் ** என்று கேட்கிறேன். இந்தக் கணக்கு விவகாரம். . . . . . . . . . . . . . . . . . .

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : இந்த விவாதத்தில் நண்பர் திரு. இராசகோபால் அவர்கள் பேசும்போது ** என்று சொன்னார்கள். அந்த வார்த்தையை அவர்கள் வாபஸ் பெற்றுக் கொள்வது நல்லது, நடவடிக்கைக் குறிப்பில் இருந்து அதை எடுத்துவிடுவதும் நல்லது.

<u>திரு. க. மு. இராசகோபால்</u> : நான் அதை வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தையை நான் நட வடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். திரு. தியாகராசன்.

*திரு. இ. எஸ். தியாகராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த 1974–75-ம் ஆண்டுக் கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல் நான் முனைகிறேன்.

1974–75-ம் ஆண்டுக்காக நம் முதல்வர் அவர்கள் அளித்துள்ள இந்த வரவு செலவுத் திட்டத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இன்றையதினம் டெல்லி மாநகரத்தில் அமைக்கப்பட்டிருக்கிற இந்த அரசின் பட்ஜட்டை விட நம் அரசு தந்திருக்கிற பட்ஜெட் போற்றுதற்குரியதாக இருக்கிறது. அதை நாடே போற்றிக் கொண்டிருக்கிறது. நம் நாட்டு மக்கள் அதை உண்மையிலேயே பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாக இந்த பட்ஜட்டில் வேளாண்மைத் துறைக்காக 68·81 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் பயனாக நாட்டில் பசுமைப் புரட்சி தோன்றி வேளாண்மைப் துறை நல்லமுறையில் வளர்ச்சி பெற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. மாநில வளர்ச்சிப் பண்ணை ஒன்றைத் துவக்க நம் அரசு முன்வந்திருக்கிறது. விவசாயம் வளர்ச்சி பெறுவதற்காக கால் நடை வளர்ச்சிக்காக 5·26 கோடி ரூபாய் இந்த பட்ஜட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நாட்டில் கால்நடை வளர்ச்சி மேம்பாடு அடைந்தால் விவசாயத்திற்கு அது நல்லமுறையில் பயன்படும்.

அடுத்து, நீர்ப்பாசன வசதிகளுக்காக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை யில் 30·83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது நம் நாட்டில் பாசன வசதிகள் நல்ல முறையில் வளர்ச்சி பெற உதவியாக இருந்து விவசாயம் நல்லமுறையில் வளர்ச்சி பெறவும் நல்லதொரு வாய்ப்பாக அமையும்.

[முற்பகல் 10·30]

என்னுடைய தொகுதியிலே—திருத்தணி வட்டத்திலே—சில புதிய ஏரிகளைப் அமைக்க வேண்டுமென்று ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறேன். அவைகளை இந்த ஆண்டாவது எடுத்து, அந்தப் புதிய ஏரிகள் அமைவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறுபாசன திட்டத்திற்காக ரூ. 4·51 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த சிறுபாசன திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் இந்தப் பணம் அநேகமாகப் போதாது என்று கருதுகிறேன். சிறு சிறு பாசனத் திட்டங் களை வளப்படுத்துவதற்குப் போதுமான பண வசதி இல்லாததாலும், அவைகளுக்கு வாய்க்கால்கள் இல்லாத காரணத்தாலும் சிறு பாசனங்களை



சரியான முறையில் செய்திட முடியாமல் போகிறது. ஆகவே, இதற்கு அதிகப் பணம் ஒதுக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்ததாக, நம்முடைய மின்சார வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அறிக்கையில் அது நல்ல முன்னேற்றம் கண் டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை நான் வரவேற்கிற போது, இந்த ஆண்டு ஒரு புதிய திட்டத்தை நம்முடைய அரசு சொல்லி இருக்கிறது. அதாவது, அரிசன காலனிகளுக்கு வீதி விளக்குப் போட்டு, அதற்காகும் செலவை, அரசே ஏற்றுக்கொள்கிறது. இது உண்மையிலேயே ஒரு நல்ல பணி, எந்த அரசும் செய்யாத ஒரு நல்ல பணி என்பதை நான் கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, கைத்தறி நெசவாளர்களுக்கு துயர் தணிப்பிற்காக ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்று தமிழகத்தில் பெரிய நெச வாளர் பிரதிநிதிகளாக இருப்பவர்கள் தமிழ் நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தான். அவர்களின் விற்பனை 1972–73-ல் 9·17 கோடி ரூபாயாக இருந்ததற்கு மாறாக, நடப்பு ஆண்டில் 12 கோடி ரூபாயாகப் பெருகியுள்ளது என்று குறிப்பிட்டு இருப்பதிலிருந்து ஏழை நெசவாளர்களுக்கு, அவர்களுடைய உற்பத்தி நல்ல முறையில் விற்பனை யாகி இருப்பது அவர்களுடைய வளர்ச்சிக்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், நம்முடைய அரசு சென்ற ஆண்டு ரூ. 1 கோடி அவர்களுக்கு கடனைக் கொடுத்தது. கடந்த ஆண்டு ஒரு நெருக்கடி வந்தபோது, நம்முடைய கலைஞர் அவர்கள் ஒரு கைத்தறி நெசவாளருக்கு ரூ. 100 என்ற அடிப்படையில் ரூ. 1 கோடி ரூபாயைக் கடனை வழங்கி இருந்தார்கள். இன்று இருக்கும் நெசவாளர் களின் நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, அதைத் தடுக்கும் வகையில் அந்தக் கடனை ரத்து செய்து இருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கைத்தறி வாரியம் அமைத்து, கூட்டுறவு சங்கங்களில் இல்லாத நெசவாளர்களுக்கும் நூல் விநியோகிப் பது, ஜவுளி விற்பது ஆகியவை பற்றி சந்தானம் குழு கொடுத்த அறிக்கையில் பரிந்துரை செய்திருக்கிறது. அதை ஏற்று செயல்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி வரும்போது இன்றையதினம் நெசவாளர்களுக்கு இருக்கும் குறை கள் ஓரளவிற்கு தீர்ந்து விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், தமிழகத்தில் பெரும் அளவு தொழில் வளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. அந்த வளர்ச்சியின் வேகத்தோடு, இன்றையதினம் நம் முடைய தமிழ் நாட்டில் 8 சர்க்கரை ஆலைகள் துவங்கப்படவிருக்கிறது. அந்த 8 ஆலைகளில் ஒன்றை பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருக்கும் திருத்தணியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்க வேண்டுமென்று மாண்புமிகு கலைஞர் அவர்களையும், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மக்கள் நல்வாழ்வுக்காக பல கோடி ரூபாயை இன்றைய தினம் நம்முடைய அரசு இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கி இருக்கிறது. என்னுடைய தொகுதியில் மத்தூர், வங்கனூர் போன்ற இடங்களில் நெசவாளர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். அந்தப் பகுதி களில் அரசாங்க ஹாஸ்பிடல் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாநிலத்தைத் தவிர, வேறு எந்த ராஜ்யத்திலும் செய்ய முடியாத ஒரு நல்ல திட்டத்தை, அதாவது அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக ஒரு வாரியம் அமைத்து இருக்கிறார்கள். ஐந்து லட்சம் வீடுகள் ஐந்தாண்டுக் காலத்தில் கட்டுவதற்கு இந்த வீட்டு வசதிக் கழகம் முற்படும் என்ற ஒரு நல்ல திட்டத்தை அரசு தாயாரித்து இருக்கிறது. அதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்விக்காக ரூ. 110 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் திருத்தணி கலைக் கல்லூரியில் இது வரையில் பட்டப் படிப்பு இல்லாமல் இருக்கிறது. அதனால் அந்தப் பகுதி மாணவர்கள் மிகவும் கஷ்டப்படு கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டாவது அங்கே பட்டப்படிப்பு வகுப்பு அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சமூகப் பொது பாதுகாப்பு திட்டம் ஒன்றை தமிழ் அரசு ஒன்று தான், கலைஞர் அவர்கள் தான் கொண்டு வந்து இருக் கிறார்கள். இது புதுமையானது மட்டுமல்ல, இது எல்லா மக்களாலும் வரவேற்கக்கூடியதொன்றாகும். அதற்காக இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக பல லட்சக்கணக்கான வீடுகள் கட்டுவதற்கு அரசு திட்டமிட்டு இருக்கிறது. இப்போது நகர் பகுதிகளில் தான் அந்த வீடுகள் கட்டப்படுகின்றன. அவற்றை கிராமப்புறத்தில் கட்டு வதற்கும் முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் திட்டத்தின் கீழ் எங்கள் திருத்தணி வட்டத்தில் உள்ள பொதட்டூர்பேட்டை, அம்மையார்குப்பம், பள்ளிப்பட்டு போன்ற நகர பஞ்சாயத்துகளில் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது சாலைகள் நன்றாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பள்ளிப் பட்டு குசஸ்தளி ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று கேட்கப்பட்டு 67-லேயே திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. இருந்தும் அதற்குப் பண வசதி இல்லாததால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, அதற்காக அரசு கருணை கூர்ந்து பணம் ஒதுக்கி, அந்தப் பாலத்தை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.





திருத்தணியில் ரயில்வே மேம்பாலம் ஒன்று அவசியம் வேண்டும். அது மிகவும் அவசியம். அது இல்லாததால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதையும் இந்த அரசாங்கம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு கலைஞர் அவர்கள் சமர்ப் பித்துள்ள இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

* திரு. மணலி சி. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய சில பொதுக் கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதி தந்தமைக்கு நன்றி யறிதல் உடையவனாக இருக்கிறேன்.

எனக்கு முன்பு பேசியவர்களின் வாதத்தைப் பார்க்கிறபோது, நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் இல்லாத பல வேறு விதமான விஷயங்களையும் எடுத்துச் சொல்கிற காரணத்தால் நேர நெருக்கடி ஏற் படுகிறது. விஷயம் பேச வேண்டுமென்பவர்களுக்கு நேரம் கொடுக்க இல்லாமல் போகும் நெருக்கடியும் தங்களுக்கு ஏற்பட்டு, விடுகிறது. மேலும் சம்பந்தமில்லாத வம்புகளும் ஏற்படும் சூழ்நிலையைப் பார்க்கிற போது எனக்கு மிகவும் மனவேதனையாக இருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி விவாதிக்கிற நேரத்தில் மத்திய சர்க்காரின் நிதிநிலை அறிக்கை பற்றியும் நாடாளுமன்றத்தில் நேற்றைய தினம் விவாதம் தொடங்கியிருக்கிறது. அங்கே எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு, இங்கேயிருப்பவர்களும் நடக்கவேண்டும். காலையில் எழுந்தவுடன் ரேடியோவை முடுக்கிவிட்டுக் கேட்டேன். அங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர் கள் பேசியிருக்கிறார்கள், . இப்போது இருப்பது ஒரு தேசிய நெருக்கடி என்று நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுகிறபோது சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். இது நாடு பூராவிலும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு விஷயம். ஏதோ ஒரு ராஜ்யத்தில் இருக்கும் நிலைமை அல்ல. நாடு பூராவிலும் மிகத் தீவிரமாக இருக்கிறது. இது எங்கே கொண்டுபோய் விடுமோ என்ற விதத்தில் இந்தப் பொருளாதார நெருக்கடி இருக்கிறது என்பதை மறந்து விட்டு நாம் பிரச்சனைகளை கவனிக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதை மறைப்பதற்கு பற்பல சிறு சிறு விஷயங்கள் இருக்கின்றன. ...மலைப் பற்றி, மற்றவற்றைப் பற்றி பேசுவதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த நெருக்கடிப் பிரச்சனையை மறைப்பதற்காகப் பேசக் கூடாது என்றுதான் கேட்டுக்கொள்கிறேன். நெருக்கடி பிரச்சனையை பின்னுக்குத் தள்ளிவிட்டு, இப்படிப்பட்ட சாதாரண பிரச்னைகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில் பல தோழர்கள் இங்கே பேசினார்கள். அப்படிப் பேசுவது சரியல்ல என்று கருதுகிறேன்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 மார்ச் 14]

இந்த நெருக்கடிக்கான காரணத்தைப்பற்றி பார்க்கிற நேரத்தில், அதற்குப் பெரும் பொறுப்பு மத்திய சர்க்கார் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால் மத்திய சர்க்காரின் கையில் தான் பெரும் அளவிற்கு அதிகாரம் குவிக்கப்பட்டு இருக்கிறது. அவர் களின் நடவடிக்கை இல்லாமல் அந்த நெருக்கடியைத் தீர்க்க முடியாது. அதை யாரும் மறுக்க முடியாது. அந்த அடிப் படையில் நான் கூறுகிறேன். மத்திய சர்க்காருக்கு பொறுப்பு உண்டு. அதைச் சொல்கிற நேரத்தில் மாநில சர்க்கார் அவர்களுக்கு உரிய அச்சங்களை, பலவீனங்களை, அதற்கேற்ப இருக்கும் சூழ்நிலைகளை மறைப்பதற்காக இதை உபயோகிக்க வேண்டாம், அப்படி உபயோகிப்பது சரியல்ல என்று சொல்லிக் கொள்கிறேன்.

இப்போது இருக்கும் நெருக்கடிக்குக் காரணம், விலைவாசி ஏற்றத்தின் ரூபத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இது எங்கு பார்த் தாலும் இருக்கிறது. சொல்லப் போனால் தமிழ்நாட்டைவிட மற்ற பகுதி களில் கோர தாண்டவமாடுகிறது. உதாரணமாக குஜராத்தில் ஒரு எம். எல்.ஏ.-வை மொட்டை அடித்து கழுதையில் ஏற்றி ஊர்வலம் விட்டிருக் கிறார்கள். எங்கு பார்த்தாலும் இந்த நெருக்கடி தாண்டவமாடுகிறது. 74 பேர்கள் ராஜினாமா செய்துவிட்டார்கள். இன்னும் இந்திராகாந்தி அம்மையார் தான் வற்புறுத்தலுக்கு கட்டுப்படமாட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். சட்டமன்றம் பூராவும் கலையும் வரையில் அப்படிச் சொல்லிக்கொண்டிருக்கப் போகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இது எதைக் காட்டுகிறது? ஏன் நெருக்கடி ? ஏன் விலைவாசிஏற்றம் ?

இருக்கக்கூடிய உணவு பற்றுக்குறை தீர்க்கப்பட வேண்டும். முதலிலே இந்த நெருக்கடியை தணிக்க என்ன செய்ய வேண்டும் என்று சொல்ல வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்று யோசனை கூறியும் அவர்கள் செய்யவில்லை என்றால், நிச்சயமாக, கண்டிப்பாக எதிர்த்துப் போராடுவோம். நெருக்கடி தணிய வேண்டும். அதற்குண்டான வழிவகைகளைக் காண வேண்டும். வெளி நாட்டிற்கு நாம் கொடுக்க வேண்டிய கடன் பாக்கி, நாம் செலுத்திக் கொண்டு வரக்கூடிய வட்டி, வெளிநாட்டினர் இங்கே அடிக்கக்கூடிய கொள்ளை, இப்படிப்பட்ட பல்வேறு விஷயங்கள், இந்த நாட்டில், இருக்கக்கூடிய ஏகபோக முதலாளிகளின் போக்கு, அவர்கள் எப்படி பணத்தை சுரண்டுகிறார்கள் என்ற தன்மை, பொதுவாக நாட்டில் அரசாங்கத்தையே நொடிக்க வைக்கக்கூடிய அளவில் 7,000, 8,000 கோடி ரூபாய் கறுப்புப் பணம் இந்த நாட்டில் ஆதிக்கத்தில் இருந்து வருகிறது. இவைகளையெல்லாம் கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு, அதிகாரத்தை ஊரா வுக்கு இங்கே கொடுக்கக்கூடிய விதத்தில் தான் நாம் கேட்கிறேன். இட்டுதட்ட பெரிய முனிசிபாலிட்டிகளுக்கு, ஸ்தல ஸ்தாபனங்களுக்கு நாம்



1974 மார்ச் 14] [திரு. மணலி சி. கந்தசாமி]

எவ்வளவு அதிகாரம் கொடுக்கிறோமோ அதுபோன்ற அதிகாரங்கள் தான் மாநில சர்காருக்கு இங்கே வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரங்களை வைத்துக்கொண்டுதான் செயல்பட வேண்டிருக்கிறது. நாட்டை துண்டாட வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் இல்லை. இந்தப் பிரச்சனைகளை யெல்லாம் தீர்ப்பதற்கு மாநில சர்காருக்கு போதிய அதிகாரம் வேண்டும் என்பதுதான் நோக்கம். இந்திய ஆளும் கட்சிகாரர்கள் இங்கே இருக் கிறார்கள். அவர்களை நான் ரொம்ப வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் உதவி செய்ய வேண்டும்.

இன்றைக்கு மத்திய சர்க்கார் தன்னுடைய கடமைகளை செய்து வருகிறதா ? கடமையை செய்ய முடியாததற்குக் காரணம் என்ன ? நாட்டினுடைய ஐக்கியத்தைக் குலைக்க யாரும் விரும்பவில்லை. நான் தெளிவாக் கூறுகிறேன். இப்படிக் கூறுவதற்கு உனக்கு என்ன அதி காரம் இருக்கிறது என்று என்னைக் கேட்கலாம். தி.மு.க. வோடு நான் பேசியிருக்கிறேன். அவர்கள் ஒரு அரசியல் அங்கமாக இருக்கிறார்கள். ஆளும் கட்சியாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நிச்சயம் நாட்டை உடைக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. நாடு ஒன்றுபடுவதற்கு சில மாற்றங்கள் தேவை. நிச்சயம் மாநில சுயாட்சி என்று சொல்லக் கூடிய பிரச்னை, அந்த இழையோடு இருக்கக்கூடிய மையக் கருத்து இந்த பட்ஜெட்டில், நிதிநிலை அறிக்கையில் ஓடிக்கொண்டிருக்கிறது. தொடக் கம் முதற்கொண்டு இறுதி வரையில் இருக்கக்கூடிய மையக் கருத்தாக அது அமைந்திருக்கிறது.

மாநில சுயாட்சி வேண்டும் என்று எதற்காகக் கேட்கிறோம்? இந்தியா ஒரு யூனியன் ஆஃப் ஸ்டேட்ஸ் ஆக இருக்க வேண்டும் அல்லது யூனியன் ஆஃப் சோசலிஸ்ட் ரிபப்ளிக்காக இருக்க வேண்டும்—அந்த அடிப்படையில் இன்றைய தினம் சில மாற்றங்கள் தேவை. அந்தத் திசையில் ஒரு எவல்யூஷன் அல்லது ரிவல்யூஷன் ஏற்பட்டால் தான் இந்தியாவினுடைய ஒற்றுமை ஸ்திரமாக இருக்கும். அந்த ஒற்றுமையை குலைக்க முடியாது. அந்த ஒற்றுமை உணர்ச்சி அடிப்படையில் ஏற்படக் கூடியது ஒற்றுமை அல்ல. உணர்வு பூர்வமான ஒற்றுமை, மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் ஏற்படக் கூடிய ஒற்றுமை, பின்தங்கியவர்களை முன்னேற்றக்கூடிய அளவில் தேசிய அளவில் நிலை யாக இருக்கக்கூடிய ஒற்றுமையாக இருக்க வேண்டும். அதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

பல நண்பர்கள் மானியங்களைப் பற்றியெல்லாம் இந்த விவாதத்தில் பேசினார்கள். அந்தந்த மானியக் கோரிக்கை விவாதிக்கப்படும்பொழுது அதைப் பற்றிப் பேசலாம். மானியங்களைப் பற்றிப் பேசுகிற நேரம் இது அல்ல. இங்கே ஒரு குளம் வெட்ட வேண்டும், அங்கே ஒரு அணை போட வேண்டும், அங்கே ஒரு ஏரி அமைக்க வேண்டும், ஒரு லைன் போட

வேண்டும் என்பதைப்பற்றி யெல்லாம் இதில் பேசவேண்டிய அவசிய மில்லை. அரசியல் கருத்துக்களை பொதுவாக விவாதிக்கக்கூடிய பய இது என்று நான் கருதுகிறேன்.

மாநில சுயாட்சி என்பது இந்திய சர்க்காரை எதிர் நோக்கியிருக்கக் கூடிய ஒரு முக்கியமான பிரச்னை. அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வழிவகைகள் காண வேண்டியது மிகவும் அவசியம். அதைப் ஃபேஸ் பண்ண வேண்டும், எதிர் நோக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் நான் எங்கேயோ கூட இதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். இரண்டு பெரிய வல்லரசுகள் இருக்கின்றன. ஒன்று யுனைடெட் ஸ்டேட் ஆஃப் அமெரிக்கா, இன்னொன்று யூனியன் ஆஃப் சோஷலிஸ்டு சோவியட் ரிபப்ளிக். இந்த இரண்டிலும் ஒன்றினுடைய அமைப்பு முதலாளித்துவ அமைப்பு, மற்றொன்றினுடைய அமைப்பு சோஷலிச அமைப்பு என்று எடுத்துக்கொண்டாலும் கூட, அவைகள் இரு வல்லரசு களாக திகழக்கூடிய அமைப்பாக அமைந்திருக்கின்றன. இது எப்படி ஏற்பட்டது ? ஒன்று பூர்ஷுவா அமைப்பில் ஏற்பட்டது. ஒன்று சோஷலிச அப்பபடையில் அமைந்திருக்கிறது என்று எடுத்துக் கொண்டா லும் கூட, அடிப்டிப்பட்ட நிலைமையில் இருக்கக்கூடிய அரசியல் அமைப்பு அங்கே அமுலில் இருந்துவரக்கூடிய விஷயம் என்றாலும், இன்றைக்கு இரண்டு நாடுகளும் மிகப் பெரிய வல்லரசுகளாக உலகத்தையே ஆட்டி டைக்கக்கூடிய வலிமை மிக்க நாடுகளாக அமைந்திருக்கின்றன. ஆகவே இதைப் பார்க்கும்பொழுது சம்பிரதாயமாக ஒற்றுமை என்று பேசிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. மந்திரத்தால் ஒற்றுமை ஏற்பட்டு விடுமா என்ன? அது ஒரு மந்திரமா ? இருக்கக்கூடிய சூழ்நிலையை சமாளித்து எதிர்நோக்க வேண்டும். பிரச்னைகளை சமாளிக்க வேண்டும், இதை யெல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால், இரண்டு விஷயங்களை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கலைஞர் அவர்கள் இரண்டு விஷயத்தில் அதிகாரத்தைக் கூட மீறி விட்டார்கள் என்று சொல்லலாம். மத்திய அரசாங்கத்தின் அதிகாரத் தில் தலையிட்டுவிட்டார்கள் என்று கூட சொல்லலாம். ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஏற்படுத்திவிட்டார்கள். சட்டத்தைப் பற்றியெல்லாம் பேசினார்கள். ஆனால் ஷிப்பிங் கார்ப்பபரேஷன் வந்தாகிவிட்டது ? என்ன செய்யப்போகிறீர்கள் ? பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷன் வந்தாகிவிட்டது. அதனால் தமிழ் நாட்டிற்கு நல்லது த்ானே, தமிழ் நாட்டிற்கு அதனால் ஏதாவது கெடுதல் ஏற்படுகிறதா ? தமிழ் நாட்டிற்கு நல்லது என்றால் இந்தியாவிற்கே நல்லதுதான். தமிழ் நாட்டில் பொருளாதார அபி விருத்தி ஏற்பட்டது என்றால் அது நிச்சயம் அகில இந்தியாவிலும் பிரதிபலிக்கத்தானே செய்யும். அப்படி ஒரு தேசிய கண்ணோட்டத்தோடு இதையெல்லாம் அணுக வேண்டும்.

அதேபோல், இன்ஷூரன்ஸ் துறையில் கூட கலைஞர் அவர்கள் மெது வாகப் புகுந்துவிட்டார்கள். உண்மையிலேயே நான் அவர்களைப் பாராட்டுகிறேன். இன்ஷூரன்ஸ் மத்திய சர்க்கார் கையில் இருக்கலாம்.



ஆனால் சாமர்த்தியமாக கலைஞர் அவர்கள் அதிலே புகுந்து விட்டார்கள். அந்த இன்ஷூரன்ஸ் திட்டம் அமலுக்கு வந்துவிட்டது. அதனால் லாபம் தானே ? இல்லை என்று சொல்ல முடியுமா ? தமிழ் நாட்டின் பட்ஜெட்டில் அதன் பிரதிபலிப்பு அடுத்த வருஷத்தில் தெரியப் போகிறது. பத்து லட்சம் சிப்பந்திகள் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். அத்தனை பேரும் மாதத்திற்கு ஒருவர் ரூ. 10 வீதம் கொடுத்தால் எவ்வளவு வருமானம் வர இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். எத்தனை பேர் சாகப் போகிறார்கள் ? எத்தனைப் பேர்களுக்கு ரூ. 10,000 கொடுக்க வேண்டி இருக்கும்? அதுதான் சர்க்காருக்கு ஆதாயம். இவர்கள் இப்படி யாருக்கும் தெரியாமல் இன்ஷூரன்ஸ் துறையில் புகுந்துவிட்டார்கள்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> நான் அறிவித்தது இன்ஷூரன்ஸ் திட்டமல்ல, குடும்ப நலத் திட்டம். எத்தனை பேர் சாகப்போகிறார் கள் என்று கேட்டார்கள். இந்த இரண்டு மாத காலத்திற்குள் 20 அரசு அலுவலர்கள் இயற்கை எய்தி, அவர்களுடைய குடும்பத்தினர் ரூ. 10,000 வீதம் பெற்றிருக்கிறார்கள்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி :</u> இரண்டு மாதத்தில் வசூல் பண்ணியது எவ்வளவு என்று பார்க்க வேண்டும். சாதுரியத்தோடு வேலை செய்திருக் கிறார்கள் கலைஞர் அவர்கள். இந்தத் திட்டம் பொது மக்களுக்கு விஸ்தரிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட இன்ஷூ ரன்ஸ் தொழிலில் தலையிட்டுவிட்டார்கள். அதிலே என்ன தவறு என்று தெரியவில்லை. மக்களுக்கு பயன்படக்கூடிய திட்டம் தானே, ஆதாயம் வரக்கூடிய திட்டம்தானே ? நான் இதை யெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று கேட்டால், புதிய கண்ணோட்டத்தோடு பிரச்னையை அணுகவேண்டும்.

கலைஞர் அவர்களுடைய மூஞ்சியைப் பார்க்கக்கூடாது. மந்திரிகளுடைய மூஞ்சியைப் பார்க்காதீர்கள். பிரச்னையை மாத்திரம் பாருங்கள். இவர் கள் தான் எப்பொழுதும் ஆட்சியில் நீடித்து இருக்கப் போகிறார்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களா ? கலைஞர் ஆட்சிதான் எப்பொழுதும் இருக்கும் என்ற எண்ணம் உங்களுக்கு வந்துவிட்டதா ? நீங்களும் ஒரு காலத்தில் வரத்தான் போகிறீர்கள். அப்பொழுது இதே பிரச்னைகளை எதிர் நோக்கப் போகிறீர்கள். அப்பொழுது இந்தப் பிரச்னை களுக்கு நீங்கள் பதில் சொல்ல முடியாத நிலை ஏற்படும். நான் பொதுவாகச் சொல்கிறேன். யூனியன் ஆஃப் சோஷலிஸ்ட் சோவியத் ரிப்பப்ளிக் இருக்கிறது, யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா இருக்கிறது. அந்த நாட்டில் எல்லாம் இருக்கின்ற நிலைமையைப் பார்க்கவேண்டும். யூனிட்டி, பிளவுபடாத யூனிட்டி, ஐக்கியம் ஏற்படவேண்டும். மக்களுடைய அறிவு ஆற்றல் வளரவேண்டும். உணர்ச்சி ரீதியான ஒற்றுமை அல்லாமல், உணர்வு பூர்வமான ஒற்றுமை, நாட்டிலே எல்லோரும் சரி சமம், அனைத்து மக்களும் வாழ வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன, யாரும் யாருக்கும் அடிபணிய வேண்டியதில்லை என்ற அடிப்படையில் இயற்கையாக வளரக் கூடிய ஒற்றுமை வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி

என்பது பிரிவினை கோஷமல்ல என்று தான் கருதுகிறேன். (குறுக்கீடு)
நான் பேசும்பொழுது தயவு செய்து குறுக்கிடவேண்டாம் என்று நண்பர்
வடிவேல் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் கன்ஸர்வேடிவ் மனட்
பான்மையோடு அணுகக்கூடாது. நாட்டிலோ பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்
கிறது. மற்ற இடங்களிலெல்லாம் என்னவெல்லாமோ நடக்கிறது. உள்ள
படியே எம். எல். ஏ. வெளியே நடந்துபோக முடியவில்லை. இன்னும்
சொல்ல போனால், "அதோ எம். எல். ஏ. போகிறார், அவர் தலையை
ஏன் மொட்டைஅடித்துவிடக்கூடாது" என்று பேசக்கூடிய நிலைமை கூட
நாட்டில்வந்துவிடும். நான் கம்யூனிஸ்டு கட்சியில் ரொம்ப நாட்களாக
இருந்திருக்கிறேன். காரியதரிசியாக இருந்திருக்கிறேன். எனக்கு இந்த
விஷயங்களெல்லாம் தெரியும். பூர்ஷ்வா தேசீய சர்க்கார், டாமினேட்
டை பூர்ஷ்வாஸ், அந்த வகையிலே இயங்கக்கூடிய ஒற்றுமை என்றைக்கும்
நிலைத்து நிற்காது. நாட்டிலே ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு பதில்
சொல்லவேண்டிய நிலைமையில் இருக்கிறோம்.

புதிய கண்ணோட்டத்தோடு பிரச்சினைகளை எண்ணிப் பார்க்கவேண்டும்.
மாநில சுயாட்சி என்றால் தமிழ் நாடு பிரிந்துபோய்விடும் என்று
நினைக்கத் தேவையில்லை. அம்மாதிரி சந்தேகம் வேண்டியதில்லை.
நான் சொல்கிற பாதையில் ஒற்றுமை ஏற்பட்டால் நாட்டை பிரிக்க
முடியாது. மாநில சுயாட்சி என்றாலே, அதிக அதிகாரம் மாநிலங்
களுக்கு வேண்டும் என்றாலே அதை எதிர்க்கக்கூடிய போக்கு
இருக்குமானால், அந்தப் போக்கு தான் பிரிவினைக்கு வித்திடும். நான்
தெட்டத் தெளிவாகச்சொல்கிறேன். புதிய கண்ணோட்டத்தோடு, பிரச்னை
தீர்க்கவேண்டும் என்ற நிலையில் இதை அணுகவேண்டும். நான் கலைஞ
அவர்களைக் கேட்கிறேன். ராஜமன்னார் அறிக்கை பற்றி
கூட இங்கே விவாதிக்கவேண்டும். உங்களுடைய கருத்தை
சொல்லுங்கள். இன்னின்ன காரணத்தினாலே அதி
அதிகாரம் நமக்கு வேண்டுமென்று சொல்லுங்கள். மக்கள்
அதை உணருகின்ற வகையிலே மக்கள் மத்தியிலே உங்கள் கருத்து
களைச் சொல்லுங்கள். அப்படியானால்தான் வீண் சந்தேகம் ஏற்படாது
சுயாட்சி கேட்கிறார்கள் என்ற சந்தேகத்திற்கு இடமில்லாத அளவுக்கு
கருத்துக்களை மக்கள் மத்தியிலே பரப்ப வேண்டும். மத்தியிலே இருக்கின்
வர்களுக்கும் விளக்கிச் சொல்லுங்கள். நியாயமான கோரிக்கைகளுக்கு
வாதாடுங்கள். நியாயமான காரணங்களுக்காக அதிக அதிகாரம் வேண்
மென்று நீங்கள் போராட்டம் நடத்துவதானால் அதிலே நாங்களும் சேர்ந்து
கொள்கிறோம் (கரவொலி). நாங்கள் மட்டுமல்ல; நாட்டின் பிரச்சினை
என்று வரும் போது சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருமே சேர்ந்துகொள்ள
வேண்டியதுதான். அப்போதுதான் பிரச்சினை தீரும்.

என்னுடைய நண்பர், மதிப்பிற்குரிய உறுப்பினர், கம்யூனிஸ்ட் கட்சி
தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசும்போது ஆந்திராவை
பற்றி குறிப்பிட்டார்கள். அங்கே மட்டும் என்ன நடக்கிறது. விசா



ஆந்திரத்தை காண முடிகிறதா? இல்லையே. மொழிப்பிரச்சனை எழுந்திருக்கிறது. அதற்குக்கூட காரணம் நிர்வாகம் ஒரேமாதிரியாக, சீராக விசால ஆந்திராவில் நடைபெறவில்லை என்பதால் பிரச்சனை எழுந்திருக்கிறது. அதனால் தெலிங்கானா என்றும், ஆந்திரா என்றும் இரண்டாகப் பிரிகின்ற நிலைமை இருக்கிறது. அதுவும் இவர்களுடைய கோரிக்கையை வலுப்படுத்துவதாகத்தான் அமைந்திருக்கிறது.

அந்தப் பிரச்சனையின் காரணமாக எழுந்த போராட்டத்தின்போது நூற்றுக்கணக்கானவர்கள் சூடுபட்டு செத்தார்கள். இருந்தபோதிலும் ஒன்றும் நடக்கவில்லை. இப்போது ஏற்பட்டிருக்கிற சமரசம் கூட ஒரு டெம்பரரி Patch-up தான். அது திடீரென்று வேறு வழியிலே வெடிக்கத்தான் போகிறது. தெலிங்கானா, ஆந்திரா என்ற பிரச்சனை எழுந்து, அதன் காரணமாகச் செத்தவர்கள் எல்லாம் தொண்டர்கள். இந்த கம்யூனிஸ்ட்காரர்களுக்கு ஒரு பழக்கம் எப்போதுமே உண்டு. தலைவர்கள் முன்னால் போகமாட்டார்கள். தொண்டர்களைத்தான் சாக விடுவார்கள். ஆந்திராவிலே செத்ததும் கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் தான். தலைவர்கள் யாரும் சாகவில்லை. (கரவொலி).

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> கம்யூனிஸ்ட் கட்சியில் தலைவர்கள் சாகக் கூடாது, தொண்டர்கள்தான் சாகவேண்டுமென்று ஏதாவது விதி இருக்கிறதா ?

<u>திரு. மணலி சி. கந்தசாமி :</u> என்ன மேடம் ? அவர்கள் சொன்னது எனக்கு சரியாகக் கேட்கவில்லை.

<u>திரு. எஸ். வடிவேல் :</u> அவர்கள் சொல்கிற மாதிரி, எங்களைக் காட்டி விட்டு சாக வைத்தார்கள். அதனால் சாகிறோம். தலைவர் தான் சாகவில்லையே , இன்னும் இருக்கிறார்கள்.

<u>திரு. மணலி சி. கந்தசாமி :</u> போராட்டங்களில் முன்னணியில் நின்று உயிர்விட்ட தொண்டர்களின் கால் மண்ணை எடுத்து என் நெற்றியில் திலகம் வைத்துக்கொள்ளவும் நான் தயாராக இருக்கிறேன். நான் குறிப்பிடுவது, போராட்டத்தை ஒரு சூதாட்டமாக வைத்துக்கொள்ளக்கூடாது. போராட்டம் நடத்துவது என்றால் ஒரு கட்டுப்பாட்டுக்கு, நியாயத்திற்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். சும்மா தத்துவம், அமைப்பு என்று சொல்லி தொண்டர்களை சாகவிடக்கூடாது. ஆந்திராவிலே அதுதான் நடைபெற்றது. அதனால் நூற்றுக் கணக்கான தொண்டர்கள் செத்தார்கள். ஆந்திரா, தெலிங்கானா என்று சொல்லி, சில பிற்போக்கு சக்திகள் தூண்டிவிட்டன. அதனால் அத்தனை பேர் பலி ஆனார்கள்.

இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரையில் இன்றைக்கு இருக்கக்கூடிய நெருக்கடியில், இன்றைக்கு இருக்கக்கூடிய பொருளாதார சூழ்நிலையில் இதைவிடச் சிறப்பாக எப்படித் தயாரிக்க முடியும் ? (குறுக்கீடு). நான்

சற்று விறுவிறுப்பாகப் பேசக்கூடியவன். அதிலும் வயதானவன். அதனால் இடையிடையே குறுக்கிட்டால் என் பேச்சு தடம் புரண்டு விடக்கூடும். ஆகையால் சபாநாயகர் அவர்கள் என் பேச்சில் குறுக்கீடு இல்லாமல் பார்த்துக்கொண்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மணலி அவர்கள் பேசிய பின்னால், திருவாளர்கள் வெங்கடசாமி, மொய்தீன், பெருமாள், பொன்னப்ப நாடார்— இவ்வளவு பேர் பேசிய பின்னால், முதலமைச்சரவர்கள் விடையளிக்க வேண்டும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் ஒருவர் பேசும்போது குறுக்கீடு செய்யாமல் இருந்தால் பேசுகின்றவர்கள் தங்கள் பேச்சை குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துக்கொள்ள வசதியாக இருக்கும்.

திரு. மணலி சி. கந்தசாமி : ஆக, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழலில் இப்படிப்பட்ட ஒரு பட்ஜெட்டைத் தான் தயாரிக்க முடியும்; அதைச் செய்திருக்கிறார்கள். ஆகவே, அதைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. இன்றைச்கு மத்திய அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற கொள்கையினால்தான் இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. பண வீக்கத்தை, நாணயக் செலாவணியைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் அவர்களிடம் தான் இருக்கிறது. ஆகவே, நெருக்கடியைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவர்களுடைய பொறுப்பு ; அது மாநிலத்தினுடைய பொறுப்பு அல்ல. இருக்கின்ற குறைபாடுகளைச் சொல்லவேண்டியதுதான். அதை மறுப்பதற்கில்லை. குறைபாடு எங்கே இருந்தாலும் எடுத்துச் சொல்லவேண்டியது நம்முடைய கடமை.

அடுத்தபடியாக, இந்த ஏகபோக மூலதனத்தைப்பற்றிக் குறிப்பிட வேண்டும். 7,000 கோடி, 8,000 கோடி ரூபாய் மூலதனமுள்ள நிறுவனங்கள் கூட இருக்கின்றன. அவைகளை என்ன செய்யப்போகிறார்கள் ? அதற்குப் பரிகாரம் காணாமல் எக்சைஸ் வரியைப் போட்டுக் கொண்டே போனால் டைரக்ட் டாக்ஸ், இன்டைரக்ட் டாக்ஸ் என்று போட்டுக் கொண்டே போனால் பிரச்சனை தீர்ந்துவிடாது. நோட்டுப் புழக்கம் இன்றைக்கு அதிகமாக இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். அதற்கு ஒரு வழி செய்யலாம். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக 'வால்யூ' உள்ள நோட்டுகளை செல்லுபடியாகாது என்று அறிவித்துவிட வேண்டும். அதற்கு தீவிரநடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படியானால்தான் பரவலாக இருக்கின்ற கள்ளப்பணத்தைக் கண்டுபிடித்து, குறைக்க முடியும். அதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கலாம். இந்தியன் பினல் கோடிலே திருத்தம் கொண்டுவரலாம். அதற்கெல்லாம் மத்தியிலே ஆண்டு கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கட்சிதான் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். என்னுடைய மாஜி கட்சித் தலைவர் குப்தா போன்றவர்கள் அங்கே இதைத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற அதிகப்படியான அதிகாரங்களை மாநிலங்கள் சரியாக செயல்பட தேவையான அதிகாரங்களை பெறுவதற்கு போராட்டம் நடத்தினால், அந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். இப்போது இருக்கின்ற கொள்கைகளை மாற்றி அமைக்க மத்திய அரசு நடவடிக்கை



எடுக்க வேண்டும். எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் இப்படிப்பட்ட ஒரு போராட்டத்தை நடத்தினால் அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இந்த லாண்ட் ரீஃபார்ம்ஸ் பற்றி சில வார்த்தைகள் கூற வேண்டும். இந்தத் திட்டம் சரியாகச் செயல்படவில்லை. அதைப்பற்றி கலைஞர் அவர்கள் ரொம்ப வருத்தப்படுகிறார்கள். நீங்கள் செய்வதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் அதிலே பலகீனம் இருக்கக்கூடாது என்று சொல்கிறோம். மக்களுக்கு அதனால் திருப்தி ஏற்படவில்லை. அவர்களுக்கு ஒரு இல்லூஷன் ஏற்பட்டிருக்கிறது அதைப் போக்க வேண்டும். சமீபத்தில் நம்முடைய அமைச்சர் திரு. மாதவன் தஞ்சை மாவட்டத்திற்குப் போனார். பல அரசாங்க உத்தி யோகஸ்தர்களைச் சந்தித்ததாகச் சொன்னார். இன்றைக்கு இந்த விஷ யத்தில் அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை. பினாமி முறை இன்னும் ஒழியவில்லை ; அதிகமாக இருக்கிறது. அதை ஒழிக்க தக்க வகையில் சட்டத்தைச் செயல்படுத்தவில்லை. ஆகவே, சட்டத்தைப் போட்டுவிட்டால் போதாது; அதை ஒழுங்காகச் செயல்படுத்திக்கொண்டிருக் கிறார்களா என்பதையும் கண்காணித்துக்கொள்ள வேண்டும். ஒரு சின்ன விஷயத்தை மட்டும் இங்கே கூற விரும்புகிறேன். ஒரு ஹவுசிங்- கோவாப்பரேட்டிவ் சொசைட்டிக்கு தன்னுடைய நிலத்தை விற்பனை செய்து, அதிலே இருக்கின்ற டெனன்டை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் ஒரு லான்ட்லார்டு. டெனன்டை நேரடியாக எவிக்ட் பண்ண முடியவில்லை. அதனால் அவரை வெளி யேற்றுவதற்காக கோவாப்ரேட்டிவ் ஹவுஸிங் சொசைட்டிக்கு விற்கிறார் லான்ட் லார்டு. இப்படி பல இடங்களில் நடைபெறு கின்றன. இந்த பினாமிகளுக்கு என்று திறமையாக வாதம் புரிகின்ற பினாமி வக்கீல்களும் இருக்கிறார்கள். இந்த இந்த வழியிலே போங்கள் என்று தூண்டிவிடுவதே இந்த அதிகார வர்க்கம் தான். அதற்காக ரொம்ப லஞ்சம் வாங்கிக்கொள்கிறார்கள். சட்டத்தை இயற்றிவிட்டு, அதைச் செயல்படுத்த அதிகாரிகளை போடுகிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் ? சட்டத்தை செயல்படுத்தப் போகிறேன் என்று போகிறார்கள். ஒரு தாசில்தாரோ, கலெக்டரோ போகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். சட்டம் அப்படியேதான் இருக்கும். நடவடிக்கையும் எடுப்பதாகக் காட்டிக் கொள்வார்கள். ஆனால் ஒன்றும் நடைபெற்றிருக்காது. ஆனால் அந்த அதிகாரி மட்டும் லட்சக்கணக்கில் சம்பாதித்து இருப்பார் ஒன்றிரண்டு ஆண்டு களுக்குள் . இதுதான் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதை நிரூபிக்க வேண்டுமானால் எங்களைப்போன்றவர்களைக்கொண்ட ஒரு கமிட்டி போடுங்கள். அதிகாரிகளைக் கொண்ட ஒரு கமிட்டியையும் போடுங் கள். ஓராண்டு அல்லது இரண்டாண்டு கழித்து எப்படி இந்த இரண்டு கமிட்டிகளும் செயல்பட்டிருக்கிறது என்று பார்த்தால் தெரிந்து கொள்ள லாம். அதற்கு முன்னோடியாக நிலச் சீர்திருத்த சட்டத்தையே எடுத்துக் கொள்ளலாம். பினாமி முறையினால் எதிர்பார்த்த நன்மை இந்த சட்டத்தினால் கிடைக்கவில்லை. அதிகாரிகள்தான் அதற்குக் காரணம்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 மார்ச் 14

நான் இப்படிச் சொல்லும்போது கலைஞர் அவர்கள் நாங்கள் செய் வதைச் செய்கிறோம்; நடப்பது நடக்கட்டும் என்று ஒரு கர்ம யோகி போல் சொல்லக்கூடும். கோவில் நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள். ஏராளமான நிலம் இன்னும் கையகப்படுத்தப்படாமல் இருக்கிறது. சட்டத்தை ஒழுங்காகச் செயல்படுத்தச் செய்யுங்கள். அப்புறம் நடப்பது நடக்கட்டும் என்று கர்ம யோகி ஆகிவிடுங்கள். அதிகாரத்தில் இருந்து தான் ஆக வேண்டுமென்று எண்ணாதீர்கள். நீங்கள் அதிகாரத்தில் இல்லாவிட்டாலும் ஒரு காலத்தில் சரித்திரம் உங்களைப் பாராட்டும். இன்னார் ஆட்சிக்காலத்தில் விவசாயிகளுக்கு இன்னின்ன சட்டங்கள் இயற்றப்பட்டன; அதனால் இன்னின்ன நன்மைகள் கிடைத்தன; விவசாய மக்கள் பயனடைந்தார்கள்; பெருமகிழ்ச்சியடைந்தார்கள் அவர்கள் ஆட்சியில் என்று சரித்திரம் உங்களைப் பாராட்டும். அந்தப் புரட்சியை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள் இன்னார்தான் என்று சொல்லும்போது அது உங்களுக்குப் பெருமையளிக்கும்.

கோவில் நிலத்தை எடுக்க வேண்டுமென்று நான் சொல்லும்போது எல்லாக் கோவில் நிலங்களையும் எடுத்துக்கொள்ளவேண்டும். ஒன்றையும் விட்டுவிடக்கூடாது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் அனந்தநாயகி அவர்கள் தொழக்கூடிய கோவில் நிலத்தையெல்லாம் கூட நிச்சயமாக எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் கடவுளுக்கு வாரிசு இங்கே அம்மையார் அவர்கள்தான். (கரவொலி).

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படி எடுத்துக்கொள்வதற்கு அதிகாரம் கிடையாது. இருந்தாலும் எடுப்பதற்குள் விற்றுவிடுவார்கள்.

திரு. மணலி சி. கந்தசாமி: நீங்கள் வக்கீல், நான் சாதாரண ஆள். என் சட்டத்தில் எல்லாம் செய்யலாம் (சிரிப்பு).

நிலச்சீர்திருத்தத்தை ரெவ்யூ பண்ணவேண்டும். அஃபிஷியல்ஸ், நான்-அஃபிஷியல்ஸ் கமிட்டி அமைத்து, எந்த அளவுக்கு இந்தச் சட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறது, என்ன குறை இருக்கிறது என்பதை ஆராய வேண்டும். மாஜி பட்டாளக்காரர்களுக்கு நிலம் கொடுப்பதாகச் சொன்னார்கள். சொன்னால் போதாது. முடியக்கூடியதைச் சொல்ல வேண்டும். இல்லையென்றால் சொல்லக்கூடாது. அரிசன விவசாயக் குடும்பத்திற்கு எல்லாம் கொடுத்த பிறகுதான் மாஜி பட்டாளக்காரர்களுக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அரிசன விவசாயிகளுக்கே போதாத போது அவர்களுக்குக் கொடுப்பதற்கு எங்கே நிலம் இருக்கிறது? நீங்கள் கொண்டு வந்திருக்கிற சட்டம் நல்லதுதான். ஆனால் அதிலே பலவீனம் இருக்கிறது.



1974 மார்ச் 14) [திரு. சி. மணலி கந்தசாமி]

(முற்பகல் 11-00).

நான் இப்போது உங்களுக்குச் சொல்கிறேன். இதுமாத்திரம் அல்ல. கட்சிக்காரர்கள் பணம் வசூல் பண்ணுகிறார்கள். எங்கள் கட்சிக்காரர்களை அல்லது வேறு கட்சிக்காரர்களை இழிவு செய்ய வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. "உனக்கு நான் நிலம் வாங்கித் தருகிறேன். எனக்கு 50 ரூபாய் கொடு" என்பதாக கட்சிக்காரர்களோ, கணக்குப்பிள்ளைகளோ இன்றைக்கு விவசாய மக்களை ஏமாற்றி பணம் வாங்குகிற நிலைதான் இருக்கிறது. இது எல்லாம் எதனாலே? நிர்வாகக் கோளாறினால்தான். சமுதாயத்தைச் சீரழிக்கக்கூடிய இப்படிப்பட்ட நிலைமை மாறவேண்டுமென்றால் நீங்கள் உங்கள் நிர்வாகத்தை ஒழுங்கு செய்யுங்கள்.

அடுத்தபடியாக தியாகி மானியம். தியாகி மானியத்திலே-அர்த்தமில்லாது இங்குள்ள உத்தியோகஸ்தர்களே முதலிலே சர்டிபிகேட் கொடுக்கவே மறுக்கிறார்கள். மாண்புமிகு காமராசர் அவர்கள் தான் தண்டவாளத்தைப் பெயர்க்கச் சொன்னார். அவர் பேச்சைக் கேட்டு அவ்வாறு செய்து தண்டனை பெற்றவர்களைக் கூட நீங்கள் தியாகிகள் இல்லை என்கிறார்கள். உதாரணமாக என்னையும், அம்ருதலிங்கத்தையும் நாடு கடத்தினார்கள். சர்டிபிகேட் கேட்கிறபோது சுதந்திரத்திற்காக அவர் அவ்வாறு தண்டனை பெறவில்லை, சத்தியாக்கிரகத்தில் போனது இல்லை என்கிறார்கள். இது எல்லாம் சரியல்ல. ஏகாதிபத்ய காலத்தில் சிறை சென்றிருந்தால், தண்டனை பெற்றிருந்தால் கொஞ்சம் லிபரலாக அவர்களுக்கு எல்லாம் தியாகிகள் மானியம் அளிக்கப்பட்ட வேண்டும், அவர்களுக்கு எல்லாம் மறுப்பது அழகல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பர்டிலைசர்-ஏற்கனவே சொன்னேன். நீங்கள் நெல் கொள்முதல் செய்வதைப்போல தனியார் துறையில் உற்பத்தியானாலும், அரசுத் துறையில் உற்பத்தியானாலும்-சென்டிரல் பூல் என்பதைப்போல, ப்ரொவின்ஷியல் பூலை ஏற்படுத்தி நீங்களே விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்தாக வேண்டும். பூச்சி மருந்தும் அப்படித்தான். இப்படிச் செய்தால்தான் பலவிதமான ஆபத்துகளைத் தவிர்க்க முடியும் என்று தெரிவித்துக்கொண்டு-அவகாசம் இல்லை-இதோடு நிறுத்திக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY : On behalf of the Swantantra Party I wish to offer a few remarks regarding the budget which has been presented by the Hon. Chief Minister. I am not welcoming the budget for many reasons which I will state later on.

The Hon. Chief Minister has stated as follows in his budget :—

" The nation is facing a serious economic crisis characterised by severe shortages, bottlenecks in production and uncontrolled inflation. The common man faces shortages of essentia

commodities needed for his daily life. The economy has been afflicted by inadequacy and lack of timely deliveries of industrial raw materials, minerals, oil, fertilisers, etc. Until this economic canker which has appeared at the national level is tackled, it will be difficult to prevent its spreading into our State also."

I accept this wholeheartedly. The same condition is prevailing in the entire nation. On behalf of the Swatantra Party I wish to state that the Central Government is responsible for the present inflation in the country. Mr. Manali Kandasami has also stated that.

Abundant printing of currency notes, uncontrolled circulation of black money in all walks of life are the main reasons for inflation. My party has been warning the Central and State Government not to present deficit budget which is another reason for the economic pell-mell. Unless stringent steps are taken by the Central Government by demonetising the currency, it is no good. Demonetisation will be a good medicine for the present economic suffering of the masses. Persons working hard are not able to purchase what they want due to soaring prices. Central Government should see that demonetisation is implemented. There is no other solution. Of course they may think by such a reform, they will not get money for elections. But in the interest of the Nation, in order to counter the economic crisis, it is better to demonetise currency.

Regarding bottlenecks in production, it is because of nationalisation policy of State and Central Government. We have been warning that nationalisation will not deliver the goods to poorer classes and that encouragement of private sector alone will give higher production. Japan, Germany and United States encourage private sector and by that they are able to export goods to other countries. By doing such a thing in our country, by encouraging private sector, we can eliminate bottlenecks in production.

Administrative lapses and lavish expenditure in Government al machinery should be cut down. Now they are paying Rs. 3,500 for the person managing the Food Corporation. I am glad the Central Government has realised the mistake at least





now. I thank this Government for not embarking on the policy of nationalisation of food grains. That is why we are quite safe in rice production and are able to sell rice to poorer classes. I hope the State Government will continue its present procurement policy.

Steps should be taken to minimise administrative delays. Unnecessary expenditure should be avoided.

More employment opportunities should be created by giving more aid to SIDCO and TIDCO ; they will in turn will lend more money to industries. By springing up of more industries, more employment opportunities will be created.

There is total loss in production by communist forces in the country. They are creating labour unrest. Loss of production is one of the reasons for soaring prices. Yesterday, railway gang workers have stopped the trains. How much of inconvenience would have been caused to the passengers. On account of labour unrest the Nation is going to suffer. Labour also should realise that without production they will not get any benefits and the Nation also will not get improvement. So these communist forces in the country which are encouraging strikes, etc., should be put an end to. This trend should not be allowed to continue.

Regarding educational policy, the Government should appoint teachers who are intelligent and free from politics. Otherwise everywhere we see student unrest and unless the quality of the teachers is good, the quality of education also will not improve. The coming generation will be still worse. I am very happy that the Hon. Education Minister is introducing job-oriented education. I read it in papers. This job-oriented education was thought of 20 years ago by Rajaji. But politicians gave it some other colour. I am very happy at least now the Government have realised the value of job-oriented education, so as to eradicate unemployment to some extent.

Regarding Youth Services, we have given jobs to 4,576 youths in the State. I am also a Chairman of a Union and what is the kind of work they are doing? Actually, one of my friends here

Coming to the rural roads, the hon. Member Thiru Karivengadam mentioned about this yesterday, and said that roads should be laid in areas where the population was less than 1,500. Now roads are laid in places where the population is more than 1,500. I would like to say that the population should be reduced to 750. Then only many villages will have the roads. It is the duty of every citizen to get the facilities from the Government. Therefore, I request that the population may be reduced to 750, so that every village in backward areas in the State, not only in Dharmapuri, will get the benefit of having roads.

(The Hon. Speaker sounded the gong)

I shall finish in another 10 minutes.

MR. SPEAKER : Only 5 minutes.

THIRU B. VENKATASWAMY : Regarding protected water-supply, I understand the Tamil Nadu Water and Drainage Board has taken up Dharmapuri and Ramanathapuram to give protected water-supply in due course. I request the Hon. Minister to see that Hosur and Dhankanikota are also included. If this is done, the people in that area will be very happy.

Regarding the benifits to the Government Servants, I would like to say that the contribution of Rs. 10 per month for the Family Benefit Scheme is a very good scheme. At the same time, we must give more facilities to the Government servants. Unless the Government servants are happy, the administration will not be efficient. We must give more facilities and at the same time they should also work for the welfare of the State and the Nation.

With regard to administrative reforms, I am to point out that there are too many appointments at all levels which has led to extra expenditure for the Government and inefficiency among the staff. It should be removed. If necessary, unnecessary appointments at various levels should be stopped. In Panchayat Unions, they are spending 80% on staff as salary, and 20% of the incomes is spend on providing other facilities. This kind of things should be stopped. The Panchayats should provide more facilities by minimising the expenditure on staff.





Coming to Veeranam project, I understand the transportation is done through private contractors. The Tata Benz, Leyland lorries and dumpers of the project are not used. I do not know the reason. In the last three or four days, it has appeared in the newspepers also. What is the difficulty in using the Benz and Leyland Lorries of the Veeranam Project. I hope the concerned Minister will give proper reply. It has created an impression in the minds of the people that they want to encourage private contractors. I hope the Hon. Minister will give a clarification as to why the Project vehicles have not been used and a private contractor has been encouraged.

Coming to the local points, I would like to say this. The Dharmapuri District has been provided with a Development Corporation. Really I thank the Government for giving this Development Corporation to Dharmapuri district. The Socio-economic survey conducted by the Government of India has pointed out that if there is no economic prosperity in Dharmapuri and if the same economic prosperity prevails in two years it would become invalid. Invalid in the sense that it cannot be improved. I am vary happy that the Government has created a Development Corporation. There is no use in having simply a Development Corporation but they must see that some scheme are implemented in Dharmapuri also so that in the sense that it cannot be improved. I am very happy that the

Regarding the school drop outs, what is the scheme we have for this? I think only the poor paople are not sending their children to school because they are not in a position to educate their children. The children below 14 years do not attend schools but they are roaming about here and there. There must be some job-oriented education. I request the Government to see that such children are given some technical education so that they will be useful to the Nation.

The hon. Member Thiru Kothandaramiah referred to the construction of Karavarapalli dam. I understand in the Budget the Karavarapalli dam has not been included. I understand that this scheme was included in the Fifth Five-Year Plan. I request the Hon. Chief Minister to include this in the Public Works Budget. Very many industries are coming at Hosur. Twenty People have purchased lands to start industries. There is great shortage of water. Unless the Karavarapalli Dam is constructed,

[Thiru B. Venkataswamy] [1974 மார்ச் 14

there will not be water for the industries that are coming up there. In the interest of the Dharmapuri district and in the interest of the industries that are coming up in Dharmapuri district, I request the Hon. Chief Minster to implement this scheme.

For roads and culverts, the Dharmapuri District is getting very low amount. I do not know the reasons for the same. To develop the roads and culverts in that area, more funds should be allotted to Dharmapuri. I hope in the next Public Works Budget more roads and culverts for Dharmapuri would be included.

With regard to supply of rice and fertilisers, I have already stressed this point. The people in belt area are suffering a lot for rice and kerosene. The checkposts are there 5 miles away from Dharmapuri. I am telling this every time. The people are suffering. I request the Hon. Minister to issue ration cards or any licence to carry rice. I request the Hon. Minister to see that the ration cards are issued to them.

The teachers and the staff in Panchayat Unions are not getting the hill allowance. I request the Hon. Minister concerned to issue necessary orders to enable them to get hill allowance.

I also understand that there is a proposal to acquire 100 acres of land to have industrial complex in Hosur.

Finally, I would like to refer to Rajaji Memorial College in Hosur. For the past 6 or 7 years, the proposal has been pending. I am sure the Hon. Chief Minister will be kind enough to appoint a Committee with the Collector as the President of the Committee. We have no official machinery to collect the amount. Without the officials, it is very difficult to collect the amount. I request the Hon. Chief Minister to give necessary permission and also financial assistance to start the College in Hosur in memory of revered Rajaji. Many industries are coming there and the industrialists will be interested in having the College. They are telling—

என்னய்யா இது, உங்கள் ஊரிலே ஒரு காலேஜ் கூட இல்லையே, நாங்கள் எப்படி இண்டஸ்ட்ரிகளை ஆரம்பிப்பது என்று கேட்கிறார்கள்.



1974 மார்ச் 14] [Thiru B. Venkatasamy]

They are asking me. In the interest of the industries, as well as in the interest of the local people, I hope the Hon. Chief Minister will appoint a Committee with the Collector as its President so that we will be assured of having Rajaji Memorial College in Hosur.

Thank you very much.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் மீது சிறிது நேரம் பேசலாமென்ற உள்ள உணர்வோடு நான் காலையிலிருந்து இருந்தேன். ஆனால் என் உடல்நிலை நான் கொஞ்ச நேரம் பேசுவதற்கு கூட இடமளிக்காத நிலைமை யில் இருக்கிறது என்பதை நான் நன்றாக உணர்கிறேன். என்றாலும் கட்சியினுடைய தலைவன் என்ற ஒரு முறையிலே நான் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லி நிதிநிலை அறிக்கையை ஆதரிக்கிறேன் என்று சொல்வது என்னுடைய கடமை என்ற நிலைமையிலே நான் உங்கள் முன் பேச விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கை என்று அதற்குத் தெளிவான பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-30)

ஒளிவு மறைவு இல்லாத பெயர், நிதிநிலை அறிக்கை. நிதி எப்படி இருக்கிறதோ அந்த நிலையில் வைத்து அளிக்கப்பட்ட அறிக்கை என்று அதற்குப் பொருள். அதுதான் நிதிநிலை அறிக்கை. அதற்கு மேலேயோ அல்லது அதற்குக் குறைவாகவோ அல்லது சட்ட வரம்பிற்கு மாறாகவோ அல்லது முறை தவறிய முறையிலேயோ அந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்றால் அதைப்பற்றி விளக்கமாகச் சொன்னால் அதனைப் புரிந்தவர்கள், படித்தவர்கள் என்று சொல்பவர்கள் அதைச் சொன்னால் என்னைப் போன்றவர்கள், மணலியைப் போன்றவர்கள், பள்ளிக்கூடத்தில் படிக்காதவர்கள், அரசியலையே பள்ளிக்கூடமாக வைத்துக் கொண்டவர்கள் போன்ற அவர்களுக்கு ஓரளவுக்குப் புரிந்து கொள்வதற்கு முடியும் என்பதை நான் என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது சொன்னேன். நீங்கள் சோஷலிசம் சோஷலிசம் என்று சொல்கிறீர்களே, இதில் சோஷலிசம் இல்லை என்று சொல்கிறீர்களே, படித்த நீங்கள் அதைக் கொஞ்சம் விளக்கினால் தேவ லாம் என்று சொன்னேன். அவர் சொன்னார், இப்பொழுது விளக்கு வதற்கு நேரம் இல்லை என்று சொல்லிவிட்டு, இது சோஷலிசம் அல்ல என்று சொன்னார்கள்.

(திருமதி ஜோதி வெங்கடாசலம்—தலைமை.)

நான் கொஞ்சம் அரசியல் அனுபவத்தை வைத்துக்கொண்டு, நடந்த சம்பவங்களை மனதில் வைத்துக்கொண்டு அவர்களுக்குச் சொல்வேன், பண்டித நேரு அவர்கள் ஒருசமயம் சொன்னார்கள், "சோஷலிச பாணி" என்று. நான் அவர்களுக்குச் சொல்கிறேன், நம்முடைய முதல்வரவர்கள் "சோஷலிச பாணி" கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை

எனவே கொஞ்சமும் தயவு தாட்சண்யம் இல்லாமல் பேக்டரி முதலாளிகளை பேக்டரி சிஸ்டத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று நீங்கள் நிர்ப்பந்திக்க வேண்டுமென்று ஏழை மக்களின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். இதை அனுபவ ரீதியில் பார்த்ததால் சொல்கிறேன். இன்னும் அதைப்பற்றி விளக்கம் சொல்ல வேண்டுமென்றால் நான் சொல்ல முடியவில்லை.

அடுத்து நான் சர்க்காரிடம் கேட்டுக்கொள்வது, மனிதப் பண்பையும் வளர்க்க வேண்டும். வெறும் தொழிலை, சட்டத்தை, தொழிற்சாலைகளை, பள்ளிக்கூடங்களை மட்டும் வளர்ப்பது போதாது. மனிதனிடத்திலே பண்பையும் வளர்க்க வேண்டும். ஏன் நான் இப்படிச் சொல்கிறேன் என்றால், இந்த நாட்டிற்கு ஹிப்பிகள் என்ற ஒரு கூட்டம் வருகிறது. அந்தக் கூட்டம் இந்த நாட்டிலேயுள்ள நல்ல பிள்ளைகளை பாழ்படுத்துகிறது. எனக்குச் சட்டம் தெரியாது. மத்திய சர்க்கார் அனுப்புகிறது, அவர்கள் இங்கே வருகிறார்கள், எங்களால் தடுக்க முடியவில்லை என்றால் நிச்சயமாக மத்திய சர்க்காரிடத்திலே சொல்லி எங்கள் மாநிலத்திற்கு அவர்களை வரவிடாதீர்கள் என்று சொல்ல வேண்டும்.

அவர்கள் மனித இனத்தின் நெறியைப் பாழ்படுத்துகிறவர்கள். இந்த மாநிலத்திற்குள் நுழையக் கூடாது என்று முதல் முதலாக அவர்களைத் தடுக்க வேண்டும். மகனைப் பெற்றவன், 25 வருஷம் சாப்பாடு கொடுத்து காப்பாற்றியவன் 'என்னடா இப்படி இருக்கிறாய் ?' என்று கேட்டால் "இதுதான் ஃபாஷன்" என்று சொல்லுகிறான். அவனைப்போய் பத்து வருஷத்திற்கு முன்னால் பார்த்தால் கீழ்ப்பாக்கத்திலிருந்து ஒருசமயம் தவறி வந்து விட்டானோ என்று கருதும் நிலையில் இருக்கும். ஹிப்பிகள் தமிழ் நாட்டுக்குள் நுழையக் கூடாது, மத்திய சர்க்கார் சொன்னாலும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்ற உத்தரவைச் சர்க்கார் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கலையைப் பற்றி. இந்தக் கலையில் எனக்கு அதிகம் நம்பிக்கையில்லை. என்ன காரணத்தாலோ என் மண்டையில் ஆண்டவன் அதை வைத்துப் படைக்கவில்லை போல் இருக்கிறது. இருக்கட்டும். நான் முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்கிறேன். அவர் கலைஞர். இங்கு வருகிற படங்களை இந்திப் படங்கள், வெளிநாட்டிலிருந்து வருகிற படங்களைப் பார்த்தால் — நான் படம் பார்ப்பதில்லை ; வால்போஸ்டரைப் பார்த்துத்தான் சொல்லுகிறேன் — அநியாயம் ; அநியாயம். ஒரு நூல் கூட இல்லை ; நிர்வாணமாக (இரு கைகளையும் மேலே தூக்கிக் கொண்டு) இப்படி கையை மேலே தூக்கிக்கொண்டு போஸ் கொடுத்து நிற்கிறாள். அதைப் பார்த்தால் பச்சிளம் குழந்தைகளும், இளைஞர் உள்ளங்களும் உருப்படுமா ? நிச்சயமாக உருப்படாது. இதுதான் கலை என்றால் இந்தக் கலை மண்ணோடு மண்ணாகப் போகட்டும்.





கலை வேண்டும். என். எஸ். கே. நாடகத்தைப் பார்த்திருக்கிறேன். இரண்டொரு சினிமா பார்த்திருக்கிறேன் அந்தக் காலத்தில். அவர் சில கருத்துக்களைச் சொல்லுவார். அதிலே, "வாத்தியாரையா" கொஞ்சம் நில்லுங்கள் (அவர் ஒரு பொருளைக் குறிப்பிட்டுக் கூறுகிறார் ; அதை நான் இப்போது சொல்லவில்லை) அதை நான் வாயில் போட்டால் நீங்கள் அதுதான் கங்கை என்று சொல்லுகிறீர்களா ?" என்று ஹாஸ்யத்திலே காரண காரியங்களோடு கருத்துக்களைச் சொன்னார்கள். கலை என்றால் மனிதன் பார்த்து பின்பற்றக்கூடியதாக இருக்கவேண்டும். அந்தத் துறையை வளர்ப்பதற்கு நிச்சயமாகக் கலைஞர் அவர்கள் பாடுபட வேண்டும்.

இப்போது என்ன ஆகிவிட்டது ? மன்னிக்க வேண்டும். நான் கொஞ்சம் வயதானவன். அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். பெருமைக்காக அல்ல. இந்த அவையிலேயே வயதில் அதிகமானவன். மனத்தில் பட்டதைச் சொல்வேன் அதிக நாள் இருக்க மாட்டேன். அதனால் சொல்லிவிடுகிறேன். சினிமாத் துறை மக்களுடைய நலனை, அவர்களுடைய ஒழுக்கத்தை, நாணயத்தை, நெறிமுறைகளைப் பாழ்படுத்தியிருக்கிறது என்பதோடு மட்டுமல்லாது அரசியலையும் குட்டிச்சுவராக்கியிருக்கிறது. நான் கேட்ட பாட்டு ஒன்றைச் சொல்லுகிறேன். படத்தைப் பார்த்துவிட்டு அந்தப் பாட்டைக் கேட்டுவிட்டு வருகிறவர்கள் என்ன நினைக்கிறார்கள் ? "நான் நினைத்து விட்டால் அது நடந்து விட்டால், இங்கு ஏழைகள் கண்ணீர் விட மாட்டார்". நான் நினைக்கவும் இல்லை அது நடக்கவும் இல்லை ; ஏழைகள் கண்ணீர் போகவும் இல்லை.

இப்போதிருக்கிற நிலைமை — இந்த நம்பிக்கை வந்தவுடன் இளைஞர்கள் உள்ளத்திலே அது ஒரு வகையான உணர்ச்சியை உண்டாக்குகிறது. பெண்கள் உள்ளத்தில் வாஸ்தவத்தில் இவர்களுக்கு வழிவிட்டால் இதெல்லாம் நடக்கும் என்று தோன்றுகிறது. ஆண்களில் சில பேருக்குச் சில உணர்ச்சிகள். இன்னும் சிலருக்குச் சபல உணர்ச்சி. இதை நான் விரிவுபடுத்த விரும்பவில்லை. இது அரசியல் நாணயத்தை மட்டுமல்ல ; எல்லாவற்றையும் வேறு எங்கோ கொண்டு போய்க் கொண்டிருக்கிறது.

மணலி அவர்கள் சொன்னார்கள். நீங்கள் ஆட்சியில் இல்லாமல் போக நேரிட்டாலும் செய்வதைத் துணிந்து செய்யுங்கள் என்று சொன்னார்கள். நான் அதை மனப்பூர்வமாக ஒத்துக் கொள்கிறேன். துணிந்து செய்யுங்கள், நடவடிக்கை எடுங்கள். நடப்பது நடக்கட்டும். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. நிச்சயமாக தற்போதைய சூழ்நிலை நிலைக்காது. நீங்கள் யாரும் அச்சப்பட வேண்டாம். இந்தச் சூழ்நிலை ஒரு புயல் காற்று. இது அடங்கிய பிறகு நிச்சயம் தென்றல் வீசும். அந்தத் தென்றல் வரும் வரையிலும் நாம் கொஞ்சம் அமைதியோடு இருக்க வேண்டும். இந்தப் புயலில் பயந்து விடக் கூடாது.

அரசியல்வாதிகளாக இருப்பவர்களுக்குச் சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் உண்டு. அது நானாகக் கூட இருக்கலாம்; ஏன் மற்றவர்களைச் சொல்லவேண்டும். ? எது சீசனோ, எதற்கு மார்க்கெட்டோ, எது எதிர்காலத்திலே பயன்படுமோ என்று கருதுகிற அரசியல்தான் இன்றைய சூழ்நிலையாக இருக்கிறது. அந்த அரசியல் வர்க்கம் இப்போது வளர்ந்து வருகிறது.

நேற்றுப் பேசும்போது — மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டாம். நானே இருக்கிறேன். இப்போது பேசுகிறேன். அடுத்த நாள் பேசும்போது நேர் மாற்றமாக, நான்தான் பேசுகிறேனா அல்லது வேறு யாராவது பேசுகிறார்களா என்ற மாதிரிப் பேச்சு இருக்கிறது. முந்தாநாள் சொல்வது "இதைப் போல் புரட்சிகரமான அரசு இல்லை; இதைப் போல் மறுமலர்ச்சியான அரசு இல்லை; ஏழைகளுக்கு உதவும் அரசு இல்லை"; என்று. இன்றைக்குச் சொல்லுவது "இந்த அரசு ஒன்றும் செய்யவில்லை;" என்று. தனக்கு ஒன்றும் செய்யவில்லை என்பதால் நாட்டுக்கே ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தனக்குச் செய்யவில்லை என்று சொன்னால் அது வேறு விஷயம். நாட்டுக்கே ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னால் அது எப்படி இருக்கும் ?

உங்களுடைய தோழமைக் கட்சி என்ற முறையில் ஒன்று சொல்லுகிறேன். முஸ்லிம் லீகைப் பற்றி இங்கே பேசப்பட்டது. அவ்வளவு தூரம் ஒன்றும் பேசவேண்டியதில்லை. இது ஒரு மைனாரிடி கட்சி. அது பிரிதிநிதித்துவம் கோரும் ஒரு கட்சி. அதிலே எந்தக் காலத்திலும் பலன் கருதி இருந்தவர்கள் இல்லவே இல்லை. எனக்குச் சரியாக 50 வருஷம் பொது வாழ்க்கையிலே அனுபவம் இருக்கிறது. 35 வருஷத்தை முஸ்லிம் லீக்கில் செலவு செய்திருக்கிறேன். என்ன பலனைக் கருதி செலவு செய்திருக்கிறேன். ஒன்றுமில்லை. இப்போது நாலைந்து எம்.எல்.ஏக்கள் வந்திருக்கிறார்கள். இதைத் தவிர, பரந்து கிடந்த பாலைவனத்திலே எங்கள் பணி நடந்து கொண்டிருந்தது. நடத்திக் கொண்டிருந்தோம், இனியும் நடத்திக் கொண்டிருப்போம். முஸ்லீம் லீக் மைனாரிடி உரிமைக்காகப் பாடுபடுகிற இயக்கமே தவிர, யாரிடத்திலும் சண்டையையோ, தகராறையோ கிளப்புகிற இயக்கம் அல்ல.

இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தை முஸ்லீம் லீக் ஆதரிக்கிறது என்றால் ஒரு நல்ல நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பார்க்கிறது. இந்த நாட்டினுடைய அரசியல் இருக்கிறதே, குறிப்பாக தமிழ் நாட்டின் அரசியல் ஒரு சமாதானமான நிலைமையைப் பெற வேண்டுமென்பது முஸ்லீம் லீக்கின் அடிப்படை லட்சியம். அந்த லட்சியத்தின் அடிப்படையில் தான் நாங்கள் உங்களுக்கு ஆதரவு கொடுக்கிறோம். இப்போது கொஞ்சம் வழுவிற்று. எங்கே ? மன்னிக்க வேண்டும் — பாண்டிச்சேரியில். அங்கு நாங்கள் ஒரு ஆள் இல்லை. நிச்சயமாக நாங்கள் இரண்டு பேரோ, நான்கு பேரோ இருந்தால் அது வழுவி இந்தத் திணரல் திணற விடமாட்டோம். அமைதியான நிலைமைக்கு அரசியலைக் கொண்டு வந்து விட்டு விடுவோம்.



நடந்தது மூன்றாகப் பிரிந்திருக்கிறது. இப்போது அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது ? இங்கே பேசிய நண்பர் ஒருவர் சொன்னார்— முதல்வர் அவர்களைக் கூப்பிட்டுச் சொன்னார் "பார்த்தீர்களா ? இனி நீங்கள் ஆட்சியில் இருக்கலாமா ?" என்று. அங்கே வந்த அவர்களைக் கேட்கிறேன் — "நீங்கள் எவ்வளவு நாளைக்கு இருக்கப் போகிறீர்கள் ?" முடியாது. நிலையான அரசு இல்லை. தாற்காலிகமாக அதைப் பயன்படுத்த முடிந்ததே தவிர நிலையான அரசாக அமைக்க முடியவில்லை. நாளைக்குத் தமிழ்நாட்டு நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழர்களின் நலன் கருதுகிறவர்களிடம் சொல்லுகிறேன்; நிச்சயமாக அந்த நிலைதான் இங்கும் நிகழுமே தவிர, சாஸ்வதமான நிலையை இவர்களால் உண்டாக்க முடியாது. ஆகையால் தலைவர் அவர்களே, நான் கேட்டுக் கொள்வது, நாங்கள் விரும்புவது ஒரு சமாதான அரசியலை.

அது மட்டுமல்ல எல்லோருக்கும் ஒரு பிரதிநிதித்துவம் தன்மை. கூடுமானவரையில் ஏழைகளுக்கான சலுகைகள். அதை இந்த நிதிநிலை அறிக்கையில் கூடுமானவரையில் தந்திருக்கிறது அரசு என்பது எங்கள் தெளிவான நம்பிக்கை. இதைவிட ஒரு பட்ஜட்டை இங்கல்ல இந்தியா முழுமையிலும் உள்ள எந்த மாநிலத்திலேனும் இப்படிப்பட்ட நான்காம்தர மக்கள், அதாவது பின்தங்கிய மக்கள் அதாவது தொழில் இல்லாத மக்கள், அல்லது இழிநிலையில் உள்ள மக்கள், அல்லது உத்தியோகத்தில் உள்ள மக்கள் இவர்கள் நலன் கருதி போடப்பட்ட பட்ஜட் இதற்கு நிகராகப் போடப்பட்டிருக்கிறது என்பதை இந்தப் பேரவையில் யாராவது விளக்கி இருந்தால் நான் அதைப் பாராட்டியிருப்பேன், வரவேற்றிருப்பேன். (மணியடிக்கப்பட்டது.) நான் இதை மட்டும் கூறி இந்த நிதிநிலை அறிக்கை இந்த நாட்டினுடைய இன்றைய நிலைக்குப் பொருத்தமாகவும் இன்றைய மக்களுடைய நிலைக்குப் பொருத்தமாகவும் சோஷலிஸப் பாணியில் இது தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று கூறி இதை நான் வரவேற்கிறேன் முழுமனதோடு என் கட்சியின் சார்பில் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை என் கட்சியின் சார்பில் வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கையை மிகவும் நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் நம் முதல்வர் அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். நெருக்கடியான சூழ்நிலையில் நிதானம் தவறாமல், நியாயமான காரியங்களுக்கு ஒதுக்க வேண்டிய தொகையை ஒதுக்கத் தவறாமல், எந்த எந்தப் பகுதிகளில் உடனடியாக முன்னேற்றம் காணப்படவேண்டும் என்ற அடிப்படையை வைத்தும் எந்தெந்தப் பகுதிகளுக்கு எந்தெந்த அளவிற்கு தொகைகள் ஒதுக்கப்பட்ட வேண்டும் என்ற கருத்தை மையமாக வைத்தும்

[திரு ஏ. ஆர். பெருமாள்] [1974 மார்ச் 14

தக்க முறையில் இந்த நிதிநிலை அறிக்கையை முதல்வர் அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரின் நலனுக்காக இருக்கக்கூடிய அரசு இந்த அரசு என்று நாங்கள் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த வாதத்திற்கு ஆதாரமாக 16·6 கோடி ரூபாய் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரின் நலன்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல. வேளாண்மைத் துறையை எடுத்துக்கொண்டாலும், கல்வித் துறையை எடுத்துக்கொண்டாலும், தொழில் துறையை எடுத்துக் கொண்டாலும் இன்னும் பல்வேறு துறைகளை எடுத்துக்கொண்டாலும் நாம் மதிக்கத்தக்க வகையில், பாராட்டத்தக்க வகையில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. இங்குள்ள எதிர்சாரியில் உள்ளவர்கள் இந்த அறிகையில் உள்ள நல்ல அம்சங்களைப் பாராட்டாமல் விட்டுவிட்டு எங்கு ஓட்டை இருக்கிறது, எங்கு குறைகள் இருக்கின்றன என்று கண்டு பிடித்து அதைச் சொல்வதுதான் சாதாரணமான வழக்கம். அந்த வழக்கத்தின் அடிப்படையில்தான் அவர்களும் குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். இந்த அரசு செய்யத் தவறிய காரியங்களை, இந்த அறிக்கையில் விட்டுப்போன காரியங்களை எல்லாம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அதே நேரத்தில் அவர்கள் தெளிவாக ஒன்றை புரிந்துக் கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை எற்றதற்குப் பின்னால் தமிழ் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றங்கள் தமிழ் மாநிலத்தில் சாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சாதனைகள் இவைகளையெல்லாம் சீர்தூக்கி பார்ப்பீர்களேயானால் ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையும் தமிழ்ச் சமுதாயத்திலுள்ள ஏழை எளிய மக்களை முன்னேற்றுவதற்காக, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரை முன்னேற்றுவிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் அடையாளச் சின்னங்கள் ஏராளம் என்பது சாதனைகளிலும் தெரியும் நிதிநிலை அறிக்கைகளிலிருந்தும் தெரியும். ஆகவே, அதை மையமாக வைத்து இந்த நிதிநிலை அறிக்கையை பார்க்கும்போது இது ஏழை எளிய மக்களுக்காகத் தயாரிக்கப்பட்ட ஒன்று என்பது தெரியவரும். அதே நேரத்தில் இந்த அறிக்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டு நான் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

கைத்தறியாளர்களுக்காக வழங்கிய ஒரு கோடி ரூபாய் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. அதேபோல் வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் கடன்களும் ரத்து செய்யப்பட வேண்டும். ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ள விவசாயிகள் அத்தனை பேர்களுக்கும் அவர்களுக்கு எவ்வளவு கடன்கள் இருந்தாலும் அந்தக் கடன்கள் நிச்சயமாக ரத்து செய்யப்படுமானால் கிராமாந்திரப் பகுதிகளில் வாழ்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு உத்திரவாதம் அளிப்பதாக இருக்கும் என்ற என் கருத்தை நான் கூறிக்கொள்கிறேன்.



1974 மார்ச் 14] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

அடுத்து நமது முதல்வர் அவர்கள் பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையைப் பற்றித் தெளிவாக இங்கே சொல்லியிருக்கிறார்கள் அதற்காக ஏறத்தாழ ஐந்து லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. வீரபாண்டிய கட்டபொம்மனின் வரலாற்றுப் பிரசித்திபெற்ற கோட்டையை, வெள்ளையனை எதிர்த்துப் போராடிய அந்த வீர மன்னனின் கோட்டைக் கொத்தளத்தினை இடித்து அங்குப் பருத்தியும் ஆமணக்கும் விதைப்பதாக நாம் வரலாற்றில் படிக்கிறோம். ஐந்து லட்ச ரூபாய் செலவில் புதுப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு அழியாத நினைவுச் சின்னம் எழுப்பியிருப்பதுபோல் இராமநாதபுரம் மாவட்டத்தில் வீரபாண்டிய கட்ட பொம்மனுக்குப் பின்னால் வெள்ளையனை நேரடியாக எதிர்த்துப் போராடிய வீர மன்னன் மருது பாண்டியனைப் பற்றி நாம் முதல்வர் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த மருது பாண்டியனின் சமாதி திருப்பத்தூரில் இருக்கிறது. அவன் பிறந்த ஊர் நரிக்குடி. இன்று வீரபாண்டிய கட்ட பொம்மனின் கோட்டையை புதுப்பிக்க நாம் ஐந்து லட்ச ரூபாய் ஒதுக்கியிருப்பது போல் வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு பாஞ்சாலங்குறிச்சியில் அழியாத நினைவுச் சின்னம் எழுப்பியிருப்பது போல் திருப்பத்தூரிலும், மருது பாண்டியன் சமாதி இருக்கும் இடத்திலும் மருது பாண்டியனுக்கு அழியாத ஒரு சின்னத்தை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும் என்பதோடு கூட அவன் பிறந்த ஊரான நரிக்குடியை மருது நகர் என்று மாற்றித் தீர வேண்டும் என்ற கோரிக்கையையும் அப் பகுதிவாழ் மக்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் உள்ளத்தில் இருந்து வரக்கூடிய கோரிக்கையாகும் அது.

மருது பாண்டியனுக்கு அழியாச் சின்னம் ஒன்று எழுப்ப வேண்டுமென்றால் பெரும் தொகை தேவைப்படலாம். பொருளாதாரச் சிக்கல் வரலாம். ஆனால், நரிக்குடி என்ற அந்த இடத்தை மருத பாண்டியன் பிறந்த ஊராகிய அந்த இடத்தை மருது நகர் என்று மாற்றுவதில் பொருளாதாரச் சிக்கல் எதுவும் வரமுடியாது. வெள்ளையனை எதிர்த்துப் போராடிய அந்த வீரனின் நினைவாக அந்த பெயர் வைக்கப்பட வேண்டும். மேலும் நரிக்குடி என்ற பெயரை—நரிக்குடி என்றால் அங்கு வாழ்கிற மக்களுக்கெல்லாம் ஓரளவு அந்த நரித்தனம் இருக்குமோ என்ற எண்ணம் கூட ஏற்படக் கூடிய அளவில் இருப்பதால் அந்த நரிக்குடி என்ற ஊரின் பெயரை மருது நகர் என்று மாற்ற வேண்டுமென்று இந்த நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கச்சத்தீவு. கச்சத்தீவு விவகாரத்தில் மத்திய அரசுக்கு எவ்வளவு அக்கறை இருந்தாலும், இந்திய நாட்டின் ஒரு பகுதி என்று அவர்கள் எடுத்துக்கொண்டாலும், மத்திய அரசுக்கு உள்ள அக்கறை, ஆர்வத்தைவிட நம் மாநில அரசுக்கு அதிக அக்கறை உண்டு என்ற அளவில் கச்சத் தீவு எப்படியாவது தமிழ் நாட்டோடு சேர்க்கப்பட்டாக வேண்டும் என்றும், மத்திய அரசின் அனுமதியோடு, மத்திய அரசின் அங்கீகாரத்தோடு, நம் மாநில அரசின் பிரதிநிதிகள் இலங்கை அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தவும் வழிவகைகள் காணப்

[திரு. வ. ஆர். பெருமாள்] [1974 மார்ச் 14

படவேண்டும். அதற்கு நாம் பாத்தியதைப்பட்டவர்களாவோம். ஆகவே கச்சத்தீவு பற்றி இலங்கை அரசோடு நம் மாநில அரசின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தவும், கச்சத் தீவை தமிழ் மாநிலத்தோடு சேர்க்கவும் சட்டரீதியாக நியாயரீதியாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை நம் முதல்வர் அவர்கள் துணிவோடு எடுக்கவேண்டும்.

இந்தக் கச்சத்தீவு தமிழ் நாடோடு சேர்க்கப்படுவதற்கு எந்த விதமான சரித்திரக் கோளாறுகளும் கிடையாது. எந்த விதமான வரலாற்றுக் குற்றமும் அதில் கிடையாது. நாம் அந்தப் பகுதிக்கு பாத்தியதைப் பட்டவர்கள்தான். ஆகவே, மத்திய அரசோடு போராடி இலங்கை அரசோடு நாம் பேச்சுவார்த்தை நடத்தவும் கச்சத் தீவை நம் மாநிலத் தோடு சேர்க்கவும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, இராமநாதபுரம் தலைநகர்ப் பிரச்சினை. கிழக்கு இராமநாதபுரம் மேற்கு இராமநாதபுரம் இவற்றிற்கு எந்த ஊர் தலை நகராக இருக்கவேண்டும் என்பது பற்றி கிளர்ச்சிகள் நடந்து வருவது நமக்குத் தெரியும். மேற்கு இராமநாதபுரத்தைப் பொறுத்த வரையில் எந்த ஒரு ஊராவது தலைநகராக இருப்பதற்கு மத்திய பகுதியாக இருக்கிறதா என்று சொன்னால் நிச்சயமாக இல்லை. மேற்கு இராமநாதபுரத்திற்கு எந்த ஊரும் தலைநகராக எடுத்துக்கொள்ளப்பட முடியாமல், மையப்பகுதியாக எடுத்துக்கொள்ளப்பட முடியாமல் இருப்பதால் மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தலைநகராக புதிதாக ஒரு ஊரை அங்கு உற்பத்திசெய்து அதைத் தலைநகராக கொள்ளவேண்டும். என்ற என் கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என் காரியப்பட்டி தொகுதியில் உள்ள கிறுதாமல் நதியைச் சீர்படுத்தி செம்மைப் படுத்தி நீர்ப்பாசன வசதிக்கு ஏற்றதாகச் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை 1967-லிருந்து 1974–75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீதான விவாதம் வரையில் சொல்லிக் கொண்டு வருகிறேன். அரசு உரிய நடவடிக்கைகள் எடுக்கும் என்று நம்பிக்கையில் இதோடு விட்டுவிடுகிறேன்.

பின்னர், குண்டாற்றில் ஒரு பாலத்தைக் கட்டி மணல் மாணிக்கத்திற்குச் செல்ல போக்குவரத்து வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மணல் மாணிக்கம் செல்லும் வழியில் போக்குவரத்து வசதிக்காக இன்னொரு பாலமும் கட்டித்தர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

காரியப்பட்டித் தொகுதியை ஒட்டியிருக்கும் 18 கிராமங்களுக்கு நீர்ப் பாசனம் செய்வதற்காக கல்லர்பட்டி கால்வாய்த் திட்டம் என்று 24 லட்சம் ரூபாய் செலவில் செய்வதற்குத் திட்டம் இருக்கிறது. அதை சாங்ஷன் செய்தால் அந்தப் பின்தங்கிய பகுதிகளில் இருக்கும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 14. [திரு. வ. ஆர். பெருமாள்]

இங்கே பேசியவர்கள் அத்தனைபேரும் தேர்தலில் வெற்றி தோல்வி பற்றி பேசினார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் மிகவும் பணிவோடு சொல்வதெல்லாம் அரசியலில், ஜனநாயகத்தில் வெற்றிகளும் தோல்வி களும் ஏற்படுவது மிகச் சாதாரண இயல்பு. அதை மனதில் வைத்து ஒன்று சொல்கிறேன். வெற்றியை யாரும் தாங்கிக் கொள்ளலாம். ஆனால் தோல்வியைச் சுத்த வீரர்கள்தான் தாங்கிக் கொள்ள முடியும். ஆகவே சில தோல்விகள் ஏற்பட்டு விடுவதால் துவண்டுவிடாமல் துணி வோடு வெற்றியைச் சந்திக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

எங்களிடத்தில் கூடச் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தோடு பார்வேடு பிளாக் இன்னும் உறவு வைத்திருக்க வேண்டுமா ? நிச்சயமாக நீங்கள் எதிர்காலத்தை இழந்துவிடமாட்டீர்களா என்று கேட்டார்கள். ஊமத்துரை காட்டிக் கொடுத்திருந்தால் சிவகங்கையும் புதுக்கோட்டை மாதிரி ஒரு சமஸ்தானமாக ஆயிருக்கும். நாங்கள் மருது பாண்டியன் பரம்பரையில் வந்தவர்கள். அந்தப் பேச்சை எங்களிடத் தில் பேசாதீர்கள் என்று சொன்னேன். எதிர்காலத்தைப் பற்றி எங்களுக்கு கவலையில்லை. எத்தனையோ மாற்றங்கள் வருவது இயற்கை. அரசியலில் சடார், சடார் என்று நிகழ்ச்சிகள் வருகின்றன. அந்த நிகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு நியாயமான வழியில் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும். அந்தச் சேவை பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செய்கிற சேவையாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுப்பதை மையமாக வைத்துக்கொண்டிருக்கிறது இந்த அரசு. இது மக்களுக்குத் தெரியாமல் இருக்கலாம் இன்று. அப்படி மக்களுக்குத் தெரிகிற காலம் வரும். இந்த இடைக்காலத் தோல்வியைக் கண்டவுடன் நாம் ஓடி ஒளியக் கூடாது. மக்கள் உங்களுக்குச் சேவை செய்ய வாய்ப்புக் கொடுப்பார்கள் என்று கூறிக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை மீது கடைசியாக எதிர்க்கட்சித் தரப்பில் பேசுவதற்கு வாய்ப்பு பெற்றமைக்காக நான் மிகவும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் இந்த வரவு-செலவு திட்டத்தை ஆதரிப்பதற்கு இல்லை என்று முதலில் நான் கூற முற்படுகிறேன், எதிர்க் கட்சிகள் எல்லாம் என்ன முறையில் செயலாற்ற வேண்டும், பணியாற்ற வேண்டும் என்பதற்கு இலக்கணமாக இந்த மன்றத்திலே 1957–ம் ஆண்டு ஜூலை மாதம் 4–ம் தேதி திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் ஒரு முறை உரையாற்றி இருக்கிறார்கள். அந்த உரையை முதலில் படித்து விட்டு என்னுடைய சொற்பொழிவை ஆரம்பிக்கலாம் என்று நினைக்கிறேன்.

அவர்கள் பேச்சு பின் வருமாறு :......வால்யூம் 2—பக்கம் 450–ல் சொல்லியிருக்கிறார்கள். “ நாங்கள் இவ்விடத்திற்கு உங்களுக்கு லாலி பாடுவதற்காக வரவில்லை. குற்றங்குறைகளை எடுத்துக் கூறவே

வந்திருக்கிறோம். அதுதான் ஜனநாயகத்தின் பொறுப்பு. நாங்கள் இ இதம் தெரியாயல நடந்து கொள்ளவில்லை. வேலையில்லாத் திண்டா டம் போகவில்லை. நீர்ப்பாசன வசதி கிடைக்கவில்லை. குடி தண்ணீ வசதி கிடைக்கவில்லை என்பதனையெல்லாம் பல அங்கத்தினர்கள் எடு துக் காட்டினார்கள்" என்று ஒரு முறை அண்ணாதுரை அவர்கள் இங்கே அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த அடிப்படையை நான் கொள்கை ரீதியாக ஒப்புக்கொள்ளாவிட்டாலும், வாதத்திற்கா அதை ஏற்றுக்கொள்கிறேன். எதிர்க்கட்சிகளாகிய நாங்கள் இந்த மே கோளை ஏற்றுக்கொள்கிறோம்.

இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், ஆளும் கட்சியில் இருக்கிறவர்களும், தோழமைக் கட்சியில் இருப்பவர்களும், இது ஒரு அழகான பட்ஜெட், வரவு-செலவு திட்டம், சமதர்மம் பூத்துக் குலுங் கும் திட்டம் என்று எல்லாம் அவர்கள் பாராட்டி, புகழ்ந்து பேசினார்கள் நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு வேளை இந்த பாராட்டினால் முதலமைச்சர் அவர்களுக்கு அஜீர்ணம் ஏற்பட்டு இருக்க லாமோ என்னவோ தெரியவில்லை. அது மட்டுமல்லாமல் இப்போது இருக்கும் சூடுபிடித்து இருக்கும் அரசியல் சூழ்நிலையில் வயிற்றுவலி வந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை. பாராட்டுவதற்கு ஒரு எல்லை வேண்டும், வரம்பு வேண்டும் என்ற முறையில் இதைக் கூறு கிறேனே ஒழிய அது அல்லாமல் துரோக மனப்பான்மையோடு இழித்தும் பழித்தும் பேச வேண்டுமென்ற நினைப்பிலே இதை நான் கூறவில்லை.

இன்று இருக்கும் வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது மிகவும் நெருக்கடியான நிலைமையிலே இந்திய அரசியலில் நெருக் கடியான நிலைமையில் நாடு ஓடிக்கொண்டிருக்கிறது, என்பதை மக்கள் உணர்கிறார்கள் என்ற அடிப்படையிலே இந்த வரவு-செலவு திட்டத்தை ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இங்கே நிதியமைச்சர் அவர்கள் ஒரு துண்டு விழும் பட்ஜெட்டை ரூ. 12·56 கோடி துண்டு விழும் என்று மதிப்பிட்டு அளித்து இருக்கிறார்கள். வருவாய் ரூ. 470·69 கோடி என்றும் செலவினம் ரூ. 483·25 கோடி என்றும் இந்த நிதியாண்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு பல முறை துண்டுவிழுகிற பட்ஜெட் இங்கே சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

எதற்காக இந்தத் துண்டு விழும் பட்ஜெட்டை கொண்டு வருகிறார்கள் என்பதைப்பற்றி நாம் ஆராயவேண்டியிருக்கிறது. 1973–74–லே எவ் வளவு துண்டு விழுந்து இருக்கிறது என்று சொன்னால் 4·84 கோடி என்று கணக்கிலே இருக்கிறது. அதற்குப் பிறகு 1970–71–லே 789 லட்சம் என்று கணக்கிலே இருக்கிறது. 1969–70–ல் 2,532 லட்சம் என்று பணக்கு காட்டப்பட்டிருக்கிறது. இந்த துண்டு விழும் பட்ஜெட்டால் கண வீக்கம் அதிகம் ஏற்படும் என்று சொன்னால், ஒரு வேளை நமது பொருளாதார நிபுணர் தர்மலிங்கம் அவர்கள், விவசாய அமைச்சர்



அவர்கள், சொல்வார்கள், நோட்டு அடிக்கும் அதிகாரம் இந்திய அரசின் கையில் இருக்கிறது, அது டெல்லியில் இருக்கிறது, ஆகவே, இந்த பண வீக்கத்தைத் தடுக்கும் அதிகாரம் மத்திய அரசிடம்தான் இருக்கிறது, ஆகவே, நமக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்ற வாதத்தைச் சொல் வார்கள் என்று கருதுகிறேன்.

இது எல்லாம் இருந்தாலும், நாம் இப்போது இருக்கும் சமஷ்டி சர்க்காரில் இருக்கிற நடைமுறையில் எப்படி வரவு-செலவுத் திட்டத்தை தீட்டவேண்டுமென்று சீராக, சிறப்பாகச் சிந்திக்க கடமைப்பட்டவனாக இருக் கிறேன்.

துண்டு விழும் பட்ஜெட் என்பதற்காக வாதிட வரவில்லை. ஆனால் நீங்கள் ஆதரிக்கிற, நீங்கள், பெருந்தகை, உங்களுடைய கொள்கை காப் டாளர் என்று சொல்கிற உங்கள் முன்னாள் தலைவர் துண்டு விழும் பட்ஜெட் பற்றி ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தில் கூறியிருக் கிறார். அந்தக் கருத்தையும் இந்த நேரத்தில் தங்களின் அனுமதி யோடு சுருக்கமாக ஒரு சில வாசகங்களைப் படிப்பதற்கு அனுமதிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். துண்டு விழுகிற பட்ஜெட்டைப் பற்றி அவர்கள் பக்கம் 452–ல் சொல்லியிருக்கிறார்கள். ஜூலை 4, 1957-ல் பேசியிருக்கிறார்கள்.

"ஜெர்மன் தேசத்தை ஆண்ட ஹிட்லர் துண்டு விழும் பட்ஜெட்டை சர்க்கார் வைத்துக்கொண்டிருக்கும் ஒரு மகத்தான ஆயுதம் என்று கருதி, கட்டுக்கடங்காத அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, ஏராளமாக ஜெர்மன் மார்க்கு நோட்டுகளை அடித்து துப்பாக்கியின் முனை கொண்டு விநியோகித்து, தமது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்திக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது. பற்றுக்குறை பட்ஜெட்டின் மகிமையையும் நிதி யமைச்சர் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. காரணம் நிதியமைச்சர் துண்டு விழும் பட்ஜெட் இருப்பது தான் சரி என்று கருதுகிறார்களோ" என்று துண்டு விழும் பட்ஜெட்பற்றி காங்கிரஸ் அரசாங்கத்தில் நிதியமைச்சராக இருந்த திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் தாக்கல் செய்த பட்ஜெட் மீது பேசுகிற போது சொன்னார்கள். அதையெல்லாம் வேடிக்கையாகத் தாக்கி அவர்களே பேசி இருக்கிறார்கள். அது முறையோ என்னவோ இன் றைக்கு துண்டு விழும் பட்ஜெட்டை சரியானமுறை என்று எண்ணித்தான் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கையாள்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

இங்கே படம் பிடித்த நிகழ்ச்சியை எல்லாம் உறுப்பினர்கள் பார்த்து இருப்பீர்கள். இந்த முறை மிகவும் கூடுதலான வகையில் படம் பிடித்தார்கள். ஒரு வேளை அடுத்த முறை படம் பிடித்துக்கொள்ள முடியுமோ முடியாதோ என்ற அச்சத்தில் விமரிசையாக எடுத்தார் களோ என்னவோ தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த படப்பிடிப்பு எல்லா ஆண்டுகளிலும் எடுப்பது போல் தான் எடுக்கப்பட்டது. அப்படிப் படம் எடுக்கப்பட்ட பிறகு தொடர்ந்து இந்த மந்திரிசபை இருந்து வருகிறது என்பதை மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒரு வேளை இந்தத் தடவை நடந்திருக்கிற கோலாகலங்களையெல்லாம் கண்டுவிட்டு இந்த படப்பிடிப்பை பிடித்துவைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. நான் குறையாகச் சொல்லவில்லை. சாதாரணமாக ஏதோ ஸ்நாப்ஸ் எடுப்பார்கள். அப்படித் தான் எப்பொழுதும் இங்கே நடப்பது வழக்கம். ஆனால் புதியதாக ஒரு புது முறையில் படப்பிடிப்பு நடந்திருக்கிறது. அதற்கு என்ன காரணமோ தெரியவில்லை.

அடுத்தபடியாக, இது துண்டு விழுகின்ற பட்ஜெட், பண வீக்கத்தைக் குறைக்கவேண்டும் என்று கூறினேன். அதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். அதிக வரி போடவில்லை. ஒரு வரியும் போடவில்லை என்று இந்த அரசாங்கம் ஒரு வேளை தன்னைப் பெருமைப்படுத்திக்கொள்ளலாம். இந்த விற்பனை வரி சீரமைப்பு என்ற தலைப்பிலும், அதே மாதிரி மோட்டார் வாகனங்கள் என்ற தலைப்பிலும் சுமார் 10 கோடி ரூபாய் வருவாயை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இது வரிவிதிப்பு அல்லவா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முன்பு பஸ் கட்டணங்களையெல்லாம் சீரமைப்பு என்று சொல்லி, அதில் ஒரு வரி விதித்ததை இந்த மன்றம் மறந்திருக்காது, மக்களும் மறந்திருக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஆதலால் சீரமைப்பு என்ற முறையிலே பல கோடிக் கணக்கான ரூபாய்க்கு வரியை இந்த அரசாங்கம் விதித்திருக்கிறது என்பதை நான் இந்த அவையில் கவனத்திற்குக் கொண்டு வர முற்படுகிறேன்.

உதாரணத்திற்காக நான் சொல்கிறேன். 1971–72-ல் அர்பன் லாண்ட் டாக்ஸ், 4· சத விகிதம் அப்பொழுது இருந்தது. அதைப் பிற்பாடு ·5, ·7, ·8, 1 சதவிகிதம் என்ற முறையிலே வரியைக் கூட்டி அந்த இனத்திலே ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வருவாயைப் பெறுவதற்கு இருப்பதையும் இந்த மன்றம் மறந்திருக்காது என்று நினைக்கிறேன். திருச்சி, மதுரை, சேலம், கோவை போன்ற நகரங்களுக்கு இந்த அர்பன் லாண்ட் டாக்ஸ் 1971–72-ல் அதாவது ஜூன் திங்கள் 19-ம் தேதியன்று 1971-ல் இந்த மன்றத்திலே கொண்டு வந்ததை நான் ஞாபக மூட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விற்பனை வரி 3 சதவிகிதம் ஆக இருந்ததை 3½ சதவிகிதம் ஆக இருந்ததை அதே பட்ஜெட்டில் தாக்கல் செய்து ரூ. 3·8 கோடி வருவாயைப் பெறுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமின்றி ஸர்சார்ஜ் ஆன் ஸேல்ஸ் டாக்ஸ் 10 சத



விகிதம் என்று போட்டு கடைசியில் அதைக் கொஞ்சம் குறைத்துவிட்டிருக்கிறார்கள். ஆக, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது, கணிக்கப்பட்ட 47 கோடி ரூபாய் டெபிஸிட்டைக் குறைப்பதற்கு ரூ. 12 கோடிக்கு வரியைச் சுமத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமின்றி பங்களா தேஷ்-க்கு வேண்டி அதிகமாக செலவினங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று முத்திரை தான் வரி போடவில்லையா ? அதே மாதிரி கேளிக்கை வரியைக் கூட்டவில்லையா ? இத்தனை வரிகளைக் கூடுதலாகப் போட்டாலும், இந்த அரசாங்கம் சொல்கிறது " நாங்கள் வரியைக் கூட்டவில்லை " என்று. ஆனால் உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். வரியைக் குறைப்பது எளிதானது அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். போட்ட வரி ஒருகாலும் குறைந்தது இல்லை என்பதுதான் இந்த மன்றத்திலே இருக்கிற மரபு என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக விற்பனை வரியை நாம் பார்க்கும்பொழுது விற்பனை வரி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பெருகிக்கொண்டு வருகிறது என்பதை நாம் நிதிநிலை அறிக்கைகளைப் படித்துப் பார்த்தால் நிச்சயம் தெரியும்.

இந்த விற்பனை வரியைப் பற்றிப் பல கருத்துக்களையெல்லாம் கூறியிருக்கிறார்கள். விற்பனை வரியைப்பற்றி முன்பு திரு சி. சுப்பிரமணியம் உணவுப் பண்டங்களுக்கு விற்பனை வரி போட்ட நேரத்திலே அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த உயர்திரு அண்ணா அவர்கள் பல கருத்துக்களையெல்லாம் எடுத்துக்கூறி இருக்கிறார்கள். அந்தக் கருத்தை நான் இப்பொழுது ஞாபகமூட்ட விரும்புகிறேன். அந்தக் கருத்து நிச்சயம் வரவேற்கத்தக்க கருத்துதான். ஆனால் அரசாங்கம் அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளவில்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன். உதாரணமாக அண்ணா ஒரு விஷயத்தை எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அதிலே இருக்கிற விவரத்தையும் தாங்களுக்கு எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

" உணவு தானியங்கள் என்பதை உணவுப் பொருள்கள் என்று மாற்றி அவைகள்மீது விற்பனை வரியை நீக்கினால், அதனால் சில லட்ச ரூபாய் நான் வருமானம் குறையும். ஆனால், மக்கள் சாப்பிடுகின்ற பொழுது சர்க்காரை மனமார வாழ்த்துவார்கள். உணவு சாப்பிடுகின்ற நேரத்திலே ' நல்ல சர்க்கார் நாட்டிலே நிலவுகிறது. நல்ல மந்திரி சபை நாட்டிலே ஆளுகிறது, உணவுப் பொருள்கள் மீது வரியை எடுத்து விட்டார்கள் ' என்று மனமார வாழ்த்துவார்கள். சட்ட சபையிலே பல பேர்கள் வந்து போகிறார்கள். ஜனநாயகத்தின் பரிசாக இதை மதிப்பார்கள். முதல் கவளத்தில் முதலமைச்சரை வாழ்த்துவார்கள். இரண்டாவது கவளத்தில் நிதி அமைச்சரை வாழ்த்துவார்கள் ". என்று சொன்னார் உடனே உயர்திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் குறுக்கிட்டுக் கூறியிருக்கிறார்கள். " மூன்றாவது கவளத்தில் இதை

எடுத்துச் சொன்னவரை வாழ்த்துவார்கள்" என்று கூறியிருக்கிறார். பிறகு உயர்திரு அண்ணாதுரை அவர்கள் அவர்களுக்கு ஏற்ற பாணியில் மறுமுறையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

"சாப்பிடுகின்ற நேரத்தில் சாப்பாட்டுப் பொருள்கள் மீது வரியில்லை என்று பொது மக்கள் ஒருமுகமாக வாழ்த்துவார்கள். சாப்பிடும்பொழுது வாழ்த்துவது நல்லது என்று வைதீகர்கள் கூறுவார்கள். மற்ற விஷயத்தில் வைதீகத்தில் வேறுபட்ட கருத்தைக்கொண்ட நான் இதுவிஷயத்தில் வேண்டுமானால் ஒத்துக்கொள்கிறேன்". என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். வைதீகக் கருத்துக்களை, கொள்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. நல்ல புதிய கருத்துக்களை, தெளிவான கருத்துக்களை திரு. அண்ணாதுரை அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்தினை ஏன் இந்த அரசாங்கம் கடை பிடிக்கவில்லை என்று நான் கேட்கிறேன். ஒரு வேளை அந்தக் கருத்தி லிருந்து, அந்தக் கொள்கையிலிருந்து நீங்கள் நழுவிவிட்டீர்களோ என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, நிதிஅமைச்சரைப்பற்றி, அன்றிருந்த நிதிஅமைச்சரைப் பற்றி ஒரு சில கதைகளையும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதையும் இந்த மன்றத்திற்குச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

"எப்பொழுதும் நிதி அமைச்சர்கள் மன அரிப்புக் கொண்டவர்கள். ஒரு தடவை நிதி அமைச்சர் பீடத்தில் உட்கார வைத்துவிட்டால் எப்பொழு தும் கனவிலும் நினைவிலும் அவருக்கு வரி என்ற நினைவுதான். ஒரு ஹாஸ்ய பத்திரிகையில் படித்தேன். மனைவி கட்டிக்கொண்டிருக்கும் சாதாரண சேலையைப் பார்த்து நிதி அமைச்சர் "இதில் வரி இல்லையா" என்று கேட்டாராம். அந்தகூட நிதி அமைச்சருக்கு வரியின் கவனம் போகவில்லை. கற்பனை நிதி அமைச்சரைப்பற்றி நான் குறிப்பிட்டேன். இந்த நிதி அமைச்சரைப்பற்றி அல்ல." என்று சொல்லி மன்றத்தைச் சிரிக்க வைத்திருக்கிறார்கள். அந்த முறை யிலே இப்பொழுது இருக்கிற நிதி அமைச்சருக்கும் முதல் அமைச்சருக்கும் ஒருவேளை அரிப்பு ஏற்பட்டு இருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. ஒரு முள் கிரீடமாக இருக்கக்கூடும். ஆனாலும் இந்த முள் கிரீடத்தை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும் என்பதை நான் உணர்கிறேன். இந்த மாதிரி நிதி அமைச்சராக இருப்பவர்கள் நல்ல கொள்கைகளை யெல்லாம் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர்கள் எடுத்துக் கூறியிருக்கி றார்கள்.

இந்த வரவு-செலவுக் கணக்கைப் பார்த்தால் நேர்முக வரியைவிட, மறைமுக வரிதான் கணிசமான பங்காக இருக்கிறது என்று சொன்னால் இது சாதாரணமாக ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கின்ற வரவு-





செலவுத் திட்டமாகத்தான் இருக்கிறது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத் தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்த முறையிலே நிதி அமைப்புகள் இருக்கவேண்டும் என்ற கருத்தெல்லாம் அன்னாருடைய உரையில் இருக்கி றது. ப்ரொகிரெஸிவ் டாக்ஸேஷன், ரிக்ரஸிவ் டாக்ஸேஷன், டைரக்ட் டாக்ஸேஷன், இன்டைரக்ட் டாக்ஸேஷன் என்ற கொள்கைகளையெல்லாம் பற்றி அவர்கள் அழகாகவும், தெளிவாகவும் கருத்துக்களை எடுத்துக் கூறி யிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. இன்னும் பார்த்தால் வரவேற்கத் தக்க பல காரியங்களை அன்னார் கூறியிருக்கிறார்கள். நிச்சயம் நான் கருதினேன், உணவுப் பொருள்களுக்கு விதி விலக்கு அளிப்பார்கள் இந்த விற்பனை வரியிலிருந்து என்று நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

புட்கிரைன்ஸ் மட்டிற்கும் போதாது, மற்றும் உணவுப் பொருள்கள் முழுவதற்கும், புட்ஸ்டஃப்ஸ் என்று சொல்லக்கூடிய எல்லாவற்றிற்கும் விதிவிலக்கு அளிப்பது தான் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தினை நான் வலியுறுத்திக் கூறுகிறேன்.

அடுத்தபடியாக நமது நாட்டிலே இருக்கின்ற உணவு நிலைமையைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் இங்கே எடுத்துக் கூறப்பட்டன. அரிசியின் விலை உயர்ந்து விட்டது, சீனியின் விலை உயர்ந்து விட்டது என்று கூறினால், அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். இல்லை கூடவில்லை, ரூ. 2-க்கு படி அரிசி கிடைக்கிறது சென்னை மாகாணத்தில் கிடைக்கிறது என்று பேராசிரிய ராக இருந்த அன்னார் பப்ளிக் ஹெல்த் மினிஸ்டர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். ரூ. 2-க்கு எங்கே கிடைக்கிறது ?

THE HON. THIRU Si. Pa. ADITANAR : On a point of elucidation under Rule 65 of our Assembly Rules. The hon. Member was saying that I was complaining about the printing of currency notes. In today's Hindu, on page 4 column 1 it is stated as follows :—

"Notes in circulation have jumped to Rs. 6,105.50 crores and expansion of printed currency during last week is Rs. 100 crores."

You can realise the effect of that on prices.

THIRU R. PONNAPPA NADAR : I am much grateful to the elucidation made by the Hon. Minister for Agriculture regarding inflation and printing of notes, which goes hand in hand, when you print more, more money is added in circulation. That is the fiscal policy. This State Government also has walked into the

trap which has been laid by the Central Government. They have also adopted the same tactics. There is no difference between the policy pursued by Central Government and State Government. This is the clarification I am making.

இன்ஞெரு விஷயம் அதாவது நோட்டடிப்பதைப்பற்றிக் கூற விரும்பு கிறேன். இந்த அரசாங்கம் துண்டு விழுகின்ற பட்ஜெட்டைத் தயாரிக்கிறது என்ருல் ரிசர்வ் பாங்கிலிருந்தும், இதர டிரஷரி பாங்குகளிலிருந்தும் கடன் வாங்கி ஈடுகட்டிக் கொள்ளலாம். ஆக, பாங்குகளுக்கு கடன்பட்டவர் களாக இருப்டோம். மத்திய அரசாங்கம் நோட்டு அடிக்கிருர்கள். நோட்டு அடிக்கிருர்கள் என்ருல் அவர்கள் இஷ்டம்போல் அடிக்கவில்லை. சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுதான் அடிக்கிருர்கள்.

நோட்டுகளை அதிகமாக அடிப்பதிஞல் பண வீக்கம் ஏற்டுகிறது என்று நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆஞல் விலையேற்றத் திற்கு அதுமட்டுமல்ல காரணம். உற்டத்தி டெருகவில்லை. நீங்கள் வேண்டுமாஞல் உற்பத்தி பெருகி இருக்கிறது என்று சொல்லக்கூடும். என்னைப் பொறுத்தவரை உற்பத்தி பெருகவில்லை என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன். உணவுப் டெ ாருட்களைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன என்பதைத் திட்டவட்டமாக அறிவித்துவிட வேண்டும். ஸ்டேட் டிரேடிங் வேண்டுமா, வேண்டாமா என்பதை மாநில முதலமைச்சர்கள் எல்லாம் கூடி அதற்கு ஒரு தீர்வு காணவேண்டும்.

இந்த வரவு—செலவுத் திட்டத்திலே, நமது மாநிலம் உணவுத் துறை யிலே நல்ல முன்னேற்றம் கண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிருர்கள். இது ஒரு உபரி மாநிலமாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிருர்கள். எழுபத்திமூன்று லட்சம் டன் அளவுக்கு உற்பத்தி பெருகியிருக்கிறது என்று கவர்னர் உரையின்போது கூறியிருக்கிருர்கள். தமிழ்நாட்டுக்குத் தேவைப்படுவது 55 லட்சம் டன் உணவு தானியங்கள் என்று கணக்கையும் கூறியிருக்கிருர்கள். அப்படியாஞல் இவ்வளவு உபரி இருந்தும் என் விலைவாசி கூடியிருக்கிறது ? இந்த உற்பத்தியைக் கொண்டு ரூபாய்க்கு ஒருபடி அரிசி என் போடவில்லை என்று நான் கேட்க விரும்புகிறேன். இதற்கு மாநில சுயாட்சி தேவையில்லை. மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் தேவையில்லை. இந்த மாநில அரசாங்கமே இதைச் செய்யலாம்.

ஆஞல், நம்முடைய கையிலே அதிகாரம் இல்லை. பணவீக்கத்திஞல் தான் விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது என்று நீங்கள் கூறுகிறீர் கள். உற்பத்தி இனம் பெருகாததால்தான் விலை ஏறுகிறது. "சப்ளை அண்டு டிமாண்ட்" என்ற விதிப்படி பார்த்தாலும் கூட உற்பத்தி பெருகி யிருந்தால் விலைவாசி குறையத்தான் வேண்டும். அப்படி குறையவில்லை என்ருல் எங்கோ கோளாறு இருக்கிறது ; ஓட்டை உடைசல் இருக்கிறது. அதை உங்களால் தவிர்க்க முடியவில்லை. அதஞல் பண்டங்கள் விலை குறையவில்லை.



THIRU S. KANDAPPAN : How can it be an isolated and closed market ?

THIRU R. PONNAPPA NADAR : Tamil Nadu is a separate zone and if this Government is not able to check the inflow......

THIRU S. KANDAPPAN : There is distinction between separate zone and having a closed market. Tamil Nadu as such, as per the Constitution, cannot have a closed market. It cannot get itself isolated from the main stream. That being so, a separate zone will not help you.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தத் தனி சோன் வேண்டும வேண்டாமா என்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்து முடிவு செய்யட்டும். ஆஞல் இன்று உணவுப் பண்டங்களின் விலை கூடியிருக்கிறது. திருச்சி நகரிலே கூடியிருக்கிறது ; மதுரை நகரிலே கூடியிருக்கிறது ; கோவை மாவட்டத்திலே கூடியிருக்கிறது. எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் கூடியிருக்கிறது என்று சொன்ஞல் அது எல்லைப்புற மாவட்டம் என்று சொல்லிவிடுவீர்கள். ஆகவே, உணவுக் கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அரசாங்கம் சரியான முறையில் செயல்படவில்லை என்ற கூற்றைத்தான் நான் கூறவேண்டும்.

பசுமைப் புரட்சியைப்பற்றிக் கூறிஞர்கள். இருந்தபோதிலும் உணவுப் பண்டங்களின் விலை கூடியிருக்கிறது. இப்போது இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு—இந்த அதிகாரமே போதும்—உங்களால் விலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை, பண்டங்களை வாங்குகின்ற அந்த இடத்திலே விலையைக் கட்டுப்படுத்த உங்களிடம் அதிகாரம் இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடலாம் ; முடியும் என்று சொன்ஞர்கள். அவர்களுக்குத் தெரிந்த அந்த வழிமுறையைச் சொன்ஞல் நல்லது. குவிண்டால் ஒன்றுக்கு 72 ரூபாய் என்று விற்ருல், டடி அரிசி எப்படிப் போடலாம் என்ற சாத்தியக்கூற்றை அவர்கள் சொன்ஞல் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நான் இந்த அரசுக்கு சட்ட ஆலோசகராக இருக்க விரும்பவில்லை. என்னுடைய டொறுப்பை உணர்ந்து, எதிர்க்கட்சித் தரப்பிலே எப்படி எப்படிச் செய லாற்ற வேண்டுமென்று எனக்குத் தெரியும். மூன்று ரூபாய்க்கு படி அரிசி போடுவோம் என்று வேண்டுமாஞலும் நீங்கள் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி : நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர் கள் பொருளாதார ஆலோசனைதான் கேட்டார்கள் ; சட்ட ஆலோசனை கேட்கவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: கனம் அங்கத்தினர் அவர்களே, ஒரு சட்ட நிபுணராக இருப்பதால் சட்ட ஆலோசனை கேட்கமாட்டார்கள் என்று நினைக்கின்றேன்.

பொருளாதார அடிப்படையிலே 73 லட்சம் டன் உற்பத்தி என்றால் இது ஒரு உபரி மாநிலம்; அப்படியானால் ஏன் படி அரிசி ஒரு ரூபாய்க்கு போட முடியாது? இங்கே சுமார் 4½ கோடி மக்கள்தான் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நமது தேவையே 55 லட்சம் டன்தான். அப்படி இருக்கும்போது நிச்சயமாக ரூபாய்க்கு படி அரிசி போட முடியும் என்ற காரணத்தால் கூறுகிறேன். ஆனால் அதற்கு நேர் மாறாக இன்றைக்கு நடக்கிறது. உணவு தானிய வர்த்தகத்தைப் பெரும் முதலாளிகள் கையில் சிக்க வைத்திருக்கிறீர்கள். வர்த்தக சூதாடிகள்தான் பெரும் வியாபாரிகளாக இருக்கிறார்கள். விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை; பதுக்கலை ஒழிக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஒரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை. நெஞ்சிலே கை வைத்துப் பார்த்தால் உங்களுக்கே தெரியும். ஆகவே இன்றைக்கு எந்தப் பக்கத்திலும் உணவு தானியங்கள் ஒழுங்காகக் கிடைக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இந்த அரசாங்கத்தின்மீது திணிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இருப்பது இந்த அரசாங்கத்தின் தொழில் கொள்கை. தொழில் கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அரசு கூட்டுத் துறையாகத் தொழில் நடத்த விரும்புகிறது என்ற கருத்தைக் கூறுகிறார்கள். அந்தக் கொள்கை வரவேற்கத்தக்கதா அல்லது தனியார் துறையை ஒழித்து, பொதுத்துறையை உருவாக்க வேண்டுமா என்பதைப்பற்றி அரசாங்கம் திட்டவட்டமான கருத்தை வெளியிட வேண்டும். அதைப் பற்றி எல்லாம் பட்ஜெட் கொள்கையாக இருக்கிற இந்த அறிக்கையில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

இன்றைக்கு இந்த நாட்டிலே தொழில் அமைதி குறைவதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்க்கவில்லை. ஆனால் தொழில் தகராறுகளில் சிலவற்றைச் சுமூகமாகத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், அண்டையில் ஏற்பட்ட பஞ்சாலைத் தொழிலாளர்கள் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தததைக் குறிப்பிடலாம். அதை வரவேற்கிறேன். பி. அண்ட். சி. மில்லிலே ஏற்பட்ட போராட்டத்தைச் சரியான முறையிலே தீர்த்து வைத்திருக்கிறீர்கள். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. இன்னொரு விஷயம் இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் விஷயத்தில் இந்த அரசாங்கம் நடந்துகொள்கின்ற நிலை உகந்ததாக இல்லை.

எங்கள் பகுதியிலே டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அது நியாயமா இல்லையா என்ற பிரச்சனைக்கு நான் வர விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு அறிக்கை விட்டார்கள். அது ஜனவரி 1-ம் தேதி என்று நினைக்கிறேன். அந்தத் தொழிலாளர்கள்மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்



பட்டு, அனைவருக்கும் வேலை கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று ஜனவரி மாதத்தில் கூறினார்கள். 440 தொழிலாளர்கள் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டு வழக்கு முடிவு பெறாமல் இருக்கிறார்கள். இதுவரையிலும் அவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. அந்தத் தொழிலாளர்கள் என்ன செய்வார்கள்? ஆனால் அங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு யூனியன் வைத்திருக்கிறார்கள். அந்த யூனியனில்..........

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத் துவக்க விழாவின்போது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கன்னியாகுமரியில் சட்ட விரோதமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள்மீது கருணைகாட்டி, மீண்டும் அவர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்ற உறுதிமொழியினை அளித்தார்கள். அதற்கு ஒப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஆர். பொன்னப்ப நாடார்: நான் இந்த பட்ஜெட் கூட்டத்திற்கு வருவதற்கு முன்னதாக கேஸ் எதுவும் வாபஸ் பெறப்படவில்லை. தொழிலாளர்கள் என்னிடம் வந்து முறையிட்டார்கள். ஆகையால்தான் அதைப்பற்றி இங்கே கூறுகிறேன். அவர்களை வேலைக்கு அமர்த்தியிருக்கிறீர்கள் என்றால் மகிழ்ச்சியடைகிறேன்; பாராட்டுகிறேன். அங்கே இருக்கின்ற நிலைமை, திராவிட முன்னேற்றக் கழக யூனியனில் சேர்ந்து சந்தா கொடுத்தால்தான் வேலையில் சேர்த்துக்கொள்வதாகச் சொல்கிறார்கள்.

[பிற்பகல் 12·30]

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: காவல் துறையினர் போட்ட வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற உத்தரவு போடப்பட்டிருப்பதாக நான் சொன்னேன். ஒருவேளை அதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாமே தவிர, அரசாங்கத்தின் உத்தரவு போய்விட்டது.

திரு ஆர். பொன்னப்பநாடார்: ஜனவரித் திங்களில் அறிவிக்கப்பட்டு, இன்று மார்ச் திங்கள் வரை அவர்களுக்கு இன்னமும் வேலை அளிக்கப்படவில்லை. அதிலும் குறிப்பாக அவர்களை ஆறு, ஏழு மாதங்களாக அலையவிட்டிருக்கிறார்கள் என்பதனை வேதனையுடன் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட அமைச்சர் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்மென்று சொல்கிறேன். இதனை அரசியல் கண்ணோட்டத்துடனேயே நடத்தியிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டினையும் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக புதியதாக என்ன என்ன தொழில்களை நடத்தலாம் என்பதற்கு எதிர்கட்சித் தலைவராக திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் இருந்தபோது பல அரிய யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை இந்த மன்றத்தில் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன்.

சினிமாத் தொழிலைத் தேசீயமயமாக்க வேண்டுமென்பது அவர்களது யோசனைகளில் ஒன்று. 1958-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி அன்று திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் இங்கே பேசும்போது, "காங்கிரஸ் உறுப்பினர் திரு. ஏழுமலை அவர்கள் சினிமாவைத் தேசீயமயமாக்க வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். இந்தச் சர்க்காருக்கு அந்தத் துணிவு வரவேண்டுமென்று உண்மையில் நான் விரும்புகிறேன். சினிமாவைத் தேசீயமாக்குவது என்ற தீர்மானத்திற்கு இந்தச் சர்க்கார் வந்துவிட்டால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் உறுதி கூறிக்கொள்கிறேன். அவர்கள் சினிமாவைத் தேசீயமயமாக்கியவுடன் ஐந்தாண்டுக் காலத்தில் எத்தனை கதையை அவர்கள் எங்களிடமிருந்து கேட்டாலும் நாங்கள் இலவசமாகத் தருகிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். மதிப்புக்குரிய திரு. காமராசர் அவர்கள் குறுக்கிட்டு, "கதை கொடுப்பதோடு ஆக்டும் பண்ணணும்" என்று சொன்னதற்கும் "முதலமைச்சர் அவர்கள் அதில் நாங்கள் நடிக்கக்கூட வேண்டும் என்று சொல்கிறார்கள். நிச்சயமாக நடிப்போம். நான் ஏன் இதை இவ்வளவு அழுத்தமாகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால் சினிமாத் துறையில் நாங்கள் ஈடுபாடு கொண்டிருப்பது எங்கள் கட்சி நடத்தும் விடுதலைக் கிளர்ச்சிக்கு அது பெரிதும் உதவும் என்ற காரணத்தினால் தான்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தை அவர்கள் கட்சி ஆட்சியில் இருக்கிற நேரத்தில் ஏற்றுக்கொண்டு, சினிமாத் தொழிலைத் தேசீயமாக்க, சினிமாக் கொட்டகைகளைத் தேசீயமாக்க முன்வருவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதனால் இதை எடுத்துச் சொல்லுகிறேன்.

இன்னும் 1959–60-லே மீட் இண்டஸ்ட்ரியையும் அரசே எடுத்து நடத்தலாம் என்பதற்கு திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் சில புள்ளி விவரங்களை அப்போது கொடுத்திருக்கிறார்கள். இறைச்சித் தொழில் மூலமாக ஆஸ்திரேலியா நாட்டிலே 425 கோடி ரூபாய் வருவாயும், டென்மார்க் நாட்டிலே 300 கோடி ரூபாயும், நியூசிலாந்து நாட்டிலே 200 கோடி ரூபாயும், அர்ஜென்டைனாவிலே 150 கோடி ரூபாயும், நெதர்லாந்து நாட்டிலே 135 கோடி ரூபாயும் வருவாய் வருகிற காரணத்தினால், தமிழ்நாட்டிலே ஆடுகள் நிறைய இருக்கிற காரணத்தினால் இந்தத் தொழிலை இங்கே ஏன் ஏற்படுத்தக்கூடாது என்று கூறியிருக்கிறார்கள். அப்போது கசாப்புக்கடை வைக்கச் சொல்கிறீர்களா என்று ஏளனமாகக் கூடப் பேசியிருக்கிறார்கள். நான் ஏளனமாக அந்தக் கருத்தைக் கூறவில்லை. அது வரவேற்கத்தக்க விஷயம். இன்னும் பஸ்களை எல்லாம் தேசீயமாக்கவேண்டும் என்றும் அப்போது சொல்லியிருக்கிறார்கள்.

பஸ் தொழிலைப்பற்றிப் பேசுகின்ற நேரத்தில் டிரான்ஸ்போர்ட் அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். அதில் பல்லவன் டிரான்ஸ்போர்ட் பற்றிச் சில புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. 1973 மார்ச் முடிய ரூ. 93·69 லட்சம் நட்டம் என்றும், 1973–74-இல் ரூ. 83·94 லட்சம்





நட்டம் என்றும் கொடுத்திருக்கிறார்கள். பஸ்களை வைத்துக்கொண்டு 20 கோடி ரூபாய் வருவாய் தந்துவிடுவேன் என்று இங்கேயே ஒரு அமைச்சர் கூறியதுண்டு.

THE HON. THIRU S. RAMACHANDRAN : May I request the hon. Leader of the Opposition to wait for one more day?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : டிரான்ஸ்போர்ட் டிமாண்டு வருகிற நேரத்தில் எவ்வளவு லாபம் வந்துவிட்டது என்கிற கணக்கைக் காட்டப் போகிறார் இதை ஒரு உதாரணத்திற்குக் கூறினேன். பல்லவன் டிரான்ஸ்போர்ட்டில் லாபம் ஒன்றும் கரைபுரண்டு போய்விடப்போவதில்லை.

அடுத்து, எனக்குப் பல புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. அந்தப் புகார்கள் எல்லாவற்றையும் இங்கே எடுத்துச் சொல்ல முடியாது என்றாலும் ஒன்றிரண்டை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த வரவு-செலவுத் திட்டத்தைப்பற்றி என்னுடைய கணிப்பில், முன்பு இந்த மன்றத்திலேயே

"tapping the rich and patting the poor."

என்று சொல்லப்பட்டது, இப்போது

"tapping the poor and patting the rich."

என்ற அடிப்படையில்தான் இப்போது அமைந்திருக்கிறது என்பதாகும்.

Rob Peter to pay Paul.

என்று பெரியவர்கள் பலரும் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். இந்த முறையில்தான் இது இன்றைய தினம் அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, திருச்சி ஜில்லாவில் நெய்க்குப்பல் என்ற கிராமத்தில் ஊராட்சியில் முன்பு இருந்த முன்னாள் தலைவர் கலியாணசுந்தரம் என்பவரால் பணம் கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. ராயப்பன் என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மற்றவர்களுக்கும் புகார் கொடுத்திருக்கிறார்கள். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முன்னாள் தலைவர் டி.எம்.கே. தலைவராக இருந்தார் என்று கூறப்படுகிறது. அந்தக் கணக்குகளை எல்லாம் இ.பி.ஓ. அவர்களும் ஏனைய அதிகாரிகளும் ஆய்வு செய்து, ஊழல்கள் இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் ]

அடுத்தபடியாக திண்டிவனத்தில் எக்ஸ்-பஸ் ஸ்டாண்டு காண்டிராக்ட வெங்கடேச ரெட்டியார் என்பவர் ஒப்பந்தப்படியான தொகை எல்ல வற்றையும் கொடுத்துவிட்டதற்கான ரசீதுகளை வைத்திருக்கிறார். இருந்து இலாக்காவினர் அவர்மீது எடுத்திருக்கிற நடவடிக்கைபற்றி அவர்க கொடுத்திருக்கிற மனுவைப் பார்த்தால் உண்மையிலேயே அவை உண்ை யாக இருக்குமானால் அதில் யார் யார் தவறி இருக்கிறார்களோ அவர்கள்மீது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ரோடு இன்ஸ்பெக்டர்கள்—பெருவழித்துறையில் இரு கிறவர்கள் தங்களுக்கு ஓய்வூதியம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் ஏனைய துறைகளில் இருப்பவர்களைவிடச் சம்பளம் குறைவாக இருக்கிறத அதுவும் 2-ஆம் நிலையில் உள்ளவர்களுக்கு மிகவும் குறைவு, ஒ மேன் கமிட்டி அவர்களைப்பற்றிச் சரியாக ஆய்வு செய்யவில்லை என்றெல்லா கூறி வருகிறார்கள். அதுபற்றியும் அரசு தக்க நடவடிக்கை எடுக் வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக வளவனூரில் சலவைக் கல் காண்டிராக்ட் சம்பந்தமா ஒருசில ஊழல்கள் நடந்திருப்பதாகப் புகார் வந்திருக்கிறது. முன்பு அந் ஊராட்சி ஒன்றியத்தில்—சேமங்கலம், குன்னம், கரசன்னூர் ஆகிய மூன்று இடங்களிலும் இருந்த சலவைக் கல்லை ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்று கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இப்போது டெண்டர் கோரப்படாமல் ஏலம் விடப்படாமல் ஆட்சித் தலைவர் ஒரு சிலருக்கு அதைக் கொடுத்திரு பதன் காரணமாக அரசுக்குப் பண இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் கூறி யிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓ.க்களைப்பற்றி ஒரு வார்த்தை நான் கூற வேண்டுமென்று கருதுகிறேன். இந்த பட்ஜெட்டிலே, அவர்களுக்கு ரூ. 10 அதிகமாகக் கொடுப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. வரவேற் கிறோம்; இல்லையென்று சொல்லவில்லை.

இன்றிருக்கிற நிதிநிலையிலே, மத்திய சர்க்கார் கடைபிடிக்கிற கொள் கைகளின் காரணமாகப் பல சங்கடங்கள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன என்ற கருத்தினை முதலமைச்சரவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மாநிலத்திற்கு அதிகமான பணம் வேண்டுமென்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்காது. ஆறாவது நிதி ஆணைக்குழு, சரியான நிதியை நமக்கு வழங்கவில்லையென்ற கருத்தெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறது.

மெயில் பத்திரிகையிலே "Budget with a case" என்ற தலைப்பில் எடிட்டோரியல் எழுதியிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்திட மிருந்து நாம் அதிகமான பணம் பெறுவதற்கு நமக்கு எல்லா தகுதி களும் இருக்கின்றன என்று அந்தத் தலையங்கத்திலே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். நாம் ஒரு டெவலப்ட் ஸ்டேட் என்ற முறையிலே



1974 மார்ச் 14] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

நியாயமான முறையிலே நமக்குக் கிடைக்க வேண்டிய பணம் கிடைக்க வில்லையென்று சொன்னால், நிச்சயமாக அதை வாங்கித்தான் ஆகவேண் டும். அப்படி இல்லையென்றால், தமிழ்ச் சமுதாயம் நம்மைப் பழிக்கும் என்பதிலே எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இருக்காது என்று நினைக் கிறேன்.

ஒரு வேளை எதிர்க்கட்சியிலே இருக்கிறோம் என்றால், எதிர்க்கட்சியிலே இருப்பதால் அத்தனையையும் எதிர்ப்பதற்கு நாங்கள் இங்கு வரவில்லை. நிச்சயமாக நமக்கு மத்திய அரசிடமிருந்து அதிகமாக நிதி கிடைக்க வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நாம் கேட்டிருந்த விகிதாசாரத்தை நிச்சயமாக நாம் பெற்றுத்தான் ஆகவேண்டும். இல்லா விட்டால் டெவலப்ட் ஸ்டேட் என்று சொல்லி, அவர்களுக்கு வேண்டிய ஒரு சில இடங்களிலே காரியங்களைச் செய்து விடுவார்கள். செய்து வருகி றார்கள்.

அதே முறையில் நம்முடைய மாநிலமும் கடைப்பிடிக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஒரு சில ஜில்லாக்கள் இன்று புறக்கணிக்கப்பட்டிருக்கின் றன. வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று இந்தக் கட்சியிலே இருந்தவர்கள் முன்பு கூறினார்கள். அதேபோல், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று கூற விரும்புகிறேன். குறிப்பாக, கன்னியாகுமரி என்று சொல்கின்ற நேரத்திலே, அது முனையாக மாறிவிடுகின்றது என்ற குற்றச்சாட்டை நான் கூறிட விரும்புகிறேன். எங்களுடைய பகுதியாக இருப்பதால், அதை நான் கூறாமலிருந்தால், அது நியாயமல்ல. குறிப்பாக, 1967-க்குப் பின்பு அது வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, ஒருவேளை அந்தப் பகுதியிலே இருக்கின்றவர்கள் எங்களைத் தனியாக விட்டால் கூடச் சந்தோஷமாக இருப்போம் என்ற நிலைமையிலே, மாநில சுயாட்சியை அவர்களும் கேட்டுவிடுவார்களோ என்ற நிலையிலே—நாங்கள் கேட்க வில்லை—அஞ்சுகிறோம். எல்லாப் பகுதிகளுக்கும் நீதியும் நியாயமும் வழங்குகின்ற அளவிலே, நீதி செலுத்த வேண்டுமென்று பரிவோடு நாங்களும் வரி செலுத்துவதால் கேட்கிறோம்.

என். ஜி. ஓ.க்களைப் பொறுத்தவரையிலும் வேறொன்று கூற வேண்டு மென்று நினைக்கிறேன். மருத்துவப் படியை அவர்களுக்கு லம்ப்சம்மாகக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும். அதைவிட்டு, ரீஇம்பர்ஸ்மென்ட் என்று இருப்பதால், பலவித கஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்படுகின்றன. என். ஜி. ஓ.க்களைத் தூண்டி விடுவதற்காக இதை நான் கூறவில்லை. இந்த பட்ஜெட்டிலே இது விடப்பட்டிருக்கிறது................
........

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: என். ஜி. ஓ.க்களுக்கோ, மற்ற அலுவலர்களுக்கோ, மருத்துவப்படி கொடுத்ததற்குப் பின்னால், மருத்துவ மனைக்குச் சென்று அவர்கள் மருத்துவ வசதி பெற்றால், அவர்களிடம் கட்டணம் வாங்கலாமா?

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : அதையெல்லாம் அரசாங்கம் ஆலோசித்து முடிவு செய்யவேண்டும். அதல்லாமல், திடீரென்றுகேட்டு நான் அந்த வலைக்குள்ளே சிக்கிக் கொள்வதற்கு ஆசைப்படவில்லை. இதையெல்லாம் படித்து, ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். தங்களுடைய இலாகாவிலே நல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள். தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் பதில் சொல்வார்கள். நான் உடனடியாகப் பதில் சொல்வதற்கில்லை.

அடுத்தபடி, இன்னொரு புகாரைப் பற்றிக் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இன்று கூட்டுறவு இலாக்காவிலே பல வங்கிகள் நடக்கின்றன. கட்சி கூடாரமாகப் பல நடந்துகொண்டிருக்கின்றன. எங்கள் பகுதியிலே நடந்து கொண்டிருக்கின்றன. திருநெல்வேலியிலே நடந்துகொண்டிருக்கின்றன. ஏனைய பகுதிகளிலும் நடந்துகொண்டிருக்கின்றன. விதிமுறைகளெல்லாம் அப்படியே திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயில் சொசைட்டி, லிஃப்ட் இரிகேஷன் சொசைட்டி என்று பேப்பரிலே இயங்கக்கூடிய பல சொசைட்டிகள் இருக்கின்றன. அதற்கும் நாமினேஷன்ஸ் வந்து கொண்டிருக்கின்றன. இந்த நாமினேட் மெம்பர்களை வைத்துக்கொண்டு, எல்லா திறமைசாலிகளையும் வைத்துக்கொண்டு அந்த இலாகாவை நடத்திய உயர்திரு. ஆதித்தனார் அவர்கள் தன்னுடைய கைவரிசையை அதிலே அழகாகக் காட்டி இருக்கிறார்கள்.

வேலூரிலே ஒரு மத்திய வங்கி இருக்கிறது. (குறுக்கீடு) அந்த டைரக்டர்கள் எல்லாம் எப்படி நியமனம் பெற்றிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ரூ. 10 கொண்ட 100 பேர்களுக்கு ஒரு டைரக்டர். ஆனால், இலட்சக்கணக்கான ரூபாயைச் செலவழிக்கின்ற, கடன் கொடுக்கின்ற சொசைட்டிக்கும் ஒரு டைரக்டர். இந்த மாதிரியான பல காரியங்கள் இருக்கின்றன. இந்த லிஃப்ட் இரிகேஷன் சொசைட்டிகள் எங்கிருக்கின்றனவோ எனக்குத் தெரியவில்லை. போர்ட் கூட காணவில்லை. பூதக் கண்ணாடி வைத்துக்கூட காணமுடியாது. ஆனால், அதிலே ஒரு டைரக்டர் மத்திய வங்கியிலே இருக்கிறார். வேலூரிலே நடக்கின்ற அந்தச் சங்கத்தைப் பற்றி பல புகார்கள் வந்த வண்ணமா இருக்கின்றன. அங்குப் பல நியமனங்கள் நடக்கின்றன. டெம்பரரியாக நடக்கின்றன; பலவற்றையும் பிரித்து அடிக்கடி டெம்பரரியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பெர்மனெண்ட் பிளேசிலே டெம்பரரி அப்பாய்ன்ட்மெண்ட் நடத்துவதற்கு என்ன காரணமோ எனக்குத் தெரியவில்லை. நான் ஒன்றும் அறியேன் பராபரமே என்று கூறினார்கள். அதுதான் காரணமோ என்னவோ, எனக்குத் தெரியவில்லை. அதுமாதிரி நபர்கள் தலைமையிலே இருக்கிறார்கள். நியமனத்திலே நடைபெறுகிறக் கோளாறுகளை எல்லாம் நீக்குவதற்கு அந்த இலாகா வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும். அவர்கள் ஒருவேளை, ஆளும் கட்சிக்கு வேண்டியவர்களாக இருக்கலாம். ஆனால், நல்ல நிர்வாகத்திற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற காரணத்தினால்தான் அதை நான் கூற விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) 10 நிமிடத்திலே முடித்துவிடுகிறேன், சுருக்கமாக முடித்துவிடுகிறேன்.



இந்த விற்பனை வரி சம்பந்தமாக, ஹாண்ட் மேட் சோப்புக்கு எக்ஸம்ஷன் கொடுக்க வேண்டுமென்று மனுக்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு வேலை காதி இலாகாவிலே ஹாண்ட் மேட் சோப் செய்கிறார்கள், டாய்லட் சோப், வாஷிங் சோப் என்று தனியாக வைத்து, அதற்குவேண்டிய நடவடிக்கைகளை எடுப்பது பொறுத்தமாக இருக்கும். அதைப் பற்றி வருவாய்துறை அமைச்சர் அவர்கள் ஆராய்வார்கள் என்று நினைக்கிறேன்.

வீராணம் திட்டத்திலே பல தகராறுகள் இருக்கின்றன என்ற புகார்கள் எல்லாம் வந்திருக்கின்றன. அங்கே, நமது இலாகாவின் பெயரிலே டிரான்ஸ்போர்ட் வெஹிக்கில்ஸ் எல்லாம் வாங்கி இருக்கிறார்கள். அவைகளெல்லாம் ஐடிலாக இருக்கின்றன. லாரிகள், டெம்ப்போக்கள், எல்லாம் வாங்கியிருக்கிறார்கள். பல வண்டிகள் ஐடிலாக இருக்கின்றன. ரத்தினு டிரான்ஸ்போர்ட் என்பவருக்கு சிமெண்ட், கம்பி போன்றவற்றை எடுத்துச் செல்ல கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதுவும் ஒழுங்காக இல்லை என்ற புகாரைக் கூறி இருக்கிறார்கள். அதையும் அரசாங்கம் வேண்டிய முறையிலே கவனிக்கவேண்டும். நமது அரசாங்கம் வெஹிக்குல் கொடுக்கிற நேரத்திலே, ஏன் கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும்........................

<u>திரு. செ. கந்தப்பன்</u> : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிற இந்தச் செய்தி சில நாட்களுக்கு முன்பாகப் பத்திரிகையிலே வந்தது. அப்பொழுதே அது விசாரிக்கப்பட்டதில், அது அடிப்படையற்றது என்று தெரியவந்தது என்கிற செய்தியை மட்டும் நான் ரெக்கார்டுக்காக இங்கே சொல்லவிரும்புகிறேன்.

<u>திரு. ஆர். பொன்னப்ப நாடார்</u> : இன்னொரு செய்தி மணப்பாறை முனிசிபாலிட்டி சம்பந்தமாக, இன்று அந்த மணப்பாறை முனிசிப்பாலிடியிலே இருக்கிற பல பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக, பிரிலிமினரி நோட்டிபிகேஷனை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. உசிலம்பட்டி, கண்ணஉடையான்பட்டி, கலிங்கப்பட்டி என்ற பகுதிகளையெல்லாம் இன்றைக்கு நீக்கியிருக்கிறார்கள். சேர்மன் அவர்கள் ஏதோ எழுதி அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். முனிசிபல் கவுன்சிலே அதற்குத் தீர்மானம் இல்லை. அரசியல் நோக்கோடு அந்தப் பகுதிகளையெல்லாம் நீக்கம் செய்திருக்கிறார்கள் இந்தப் பகுதிகளெல்லாம் எங்களுடைய காங்கிரஸ் கட்சிக்கு அதிகப் பலம் உடைய பகுதிகளாக இருக்கிற காரணத்தினாலும், அதிலே இருக்கிற பெரும்பான்மை அங்கத்தினர்கள் அந்தப் பகுதியிலிருந்து வருகின்ற காரணத்தினாலும் நீக்கம் செய்திருக்கிறார்கள் என்ற கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதுபோல் பல இருக்கின்றன. இப்பொழுது எடுத்துக்கூற வேண்டாமென்று நினைக்கிறேன்.

கடைசியாக, போலீஸிலே, இரண்டு காரியங்களை மட்டும் கூறி என்னுடைய உரையை முடிக்கலாம் என்று நினைக்கிறேன். இன்று நிலச் சீர்திருத்தத்திற்காக நல்ல சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். டெனன்ஸி ஆக்டெல்லாம் வந்திருக்கின்றன. ஆனால், திருநெல்வேலியிலிருந்து

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 14

எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. அதிலே என்ன கூறியிருக்கிறார்கள் என்றால், இந்த டெனன்ஸி சட்டப்படி ஒருவருக்குச் சொந்தமான ஆட்களை வைத்து அறுவடை செய்து கொண்டு போயிருக்கிறார்கள். அதற்கு போலீஸ் உடந்தையாக இருந்திருக்கிறது என்ற கருத்தையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதிலே, என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால், தூத்துக்குடியிலே இருக்கின்ற அசிஸ்டெண்ட் கலெக்டர் அவர்கள் 1973ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ஆம் தேதி அன்று அவர்கள் தான் அந்த நிலத்திற்கு பட்டா உரிமையாளர்கள் என்று தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். ஆனால், தனிப்பட்ட நல்ல பெருமாள் அண்டு பிரதர்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் சூப்பிரண்டென்டெண்ட் ஆப் போலீஸ் அவர்களுடைய உதவியோடு, டெப்புட்டி சூப்பிரின்டென்டெண்ட் ஆப் போலீஸ் அவர்களுடைய உதவியோடு, அங்கு சென்று 100 கோட்டைக்கு மேலான நெல்லை அறுவடை செய்திருக்கிறார்கள் என்று கூறி இருக்கிறார்கள். அங்கே டெனனட் ஆக இருப்பவர் வி. எம். சுப்பையா நாடார் என்பவர். இந்த மாதிரியான காரியங்களையெல்லாம் போலீஸ் இலாகாவிலிருந்து செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், எப்படிப் பொறுத்துக்கொள்ளமுடியும்?

ஒரு இலாகாவிலிருந்து ஒரு தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. போலீஸ் இலாகாவிலிருந்து அந்தத் தீர்ப்புக்கு விரோதமாக இயங்கிக் கொண்டு இருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எங்கள் பகுதியிலே இன்னொரு கேசும் இருக்கிறது. தங்கரத்தினம் என்ற நபர் அவர் கையிலே 4·70 ஏக்கர் நிலத்தை கன்னியாகுமரி மாவட்டத்திலே இரணியல் என்ற ஊரிலே சர்வே நம்பர் 456–பி கல்குளம் தாலூகா என்று இருக்கிறது. அது சம்பந்தமாக அதிகாரி ஒரு தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர் பயிர்செய்த நிலங்களையெல்லாம் 1974ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ஆம் தேதியன்று போலீஸ் உதவியோடு அறுவடை செய்து இருக்கிறார்கள். இது சம்பந்தமாக நான்கு கிரிமினல் கேஸ்களும் டெனன்ஸ்மீது ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள். இப்படி அதிகார துஷ்பிரயோகம் நடந்துகொண்டிருக்கிறது. பல கஷ்டங்களும் துன்பங்களும் இருந்துகொண்டிருக்கின்றன.

இந்த பட்ஜெட்டிலே வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்காகத் திட்டம் இல்லை. இளைஞர் அணி இருப்பதால் ஐயாயிரம் பேர்கள் இருக்கிறார்கள் எல்லோருக்கும் வேலை கொடுப்பார்களா என்று தெரியவில்லை. நாட்டிலே பார்த்தால் இந்த அரசாங்கத்தின்மீது மக்கள் வெறுப்புணர்ச்சியைத்தான் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

நான் தேர்தல் முடிவுகளைப் பற்றி ஒன்றும் கூற விரும்பவில்லை. அது மக்கள் தீர்ப்பு என்று எடுத்துக்கொள்கிறோம். நாமும் அடுத்த தேர்தலுக்குத் தயாராகவும் உஷாராகவும் இருப்பதற்கான சூழ்நிலையெல்லாம் இருக்கிறது. ஜனநாயக முறையிலே மக்களின் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள எதிர்க் கட்சிகள் தயாராக இருக்கும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1974 மார்ச் 14]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது 77 உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சித் தலைவரையும் சேர்த்து கருத்துக்களை இங்கே கூறியிருக்கிறார்கள். இந்த விவாதத்திலே காரசாரமாகப் பேசியவர்களுக்கும், கடுமையாகப் பேசியவர்களுக்கும், நல்ல ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துச் சொன்னவர்களுக்கும், அரசு தன்னுடைய கடமையிலிருந்து எங்காவது நழுவிவிடுமானால் அதனைத் திருத்திக்கொள்ளுகின்ற அளவிற்கு நல்ல செம்மையான வழிமுறைகளைச் சொன்னவர்களுக்கும் நான் என்னுடைய நன்றியை இந்தக் கட்டத்தில் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும்பொழுது பாதிப்பேச்சு அவருடைய பேச்சாகவும் பாதிப் பேச்சு அறிஞர் அண்ணா அவர்களுடைய பேச்சாகவும் இருந்ததை நாமெல்லாம் கவனித்தோம். அண்ணா அவர்கள் 1957-லிருந்து 1962 வரையில் இந்த மாமன்றத்திலே ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்து அவர்கள் பல்வேறு கட்டங்களிலே அவைகளைப் படித்துக்காட்டினார்கள். அண்ணா அவர்கள் அந்த உரையை 1957–58ஆம் ஆண்டிலே ஆற்றிய நேரத்திலே அந்த உரை இந்த அளவிற்கு வரவேற்கப்படும், இந்த அளவிற்குக் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் எடுத்துக்கொண்டு ஆஹா எவ்வளவு அழகான வாதம், எவ்வளவு அழகான பொன்மொழிகள் என்று சொல்லக்கூடிய ஒரு நாள் வருமென்று நாங்கள் அன்றைக்கு எதிர்பார்க்கவில்லை. அந்த நாள் இந்த நாளாக இருப்பதை பார்த்து உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் பல பகுதிகளை பொன்னப்ப நாடார் அவர்களே இங்கே எடுத்துக்காட்டினார்கள்.

ஆனால் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியிலிருந்து உரையாற்றியபோது நம்முடைய நாடார் அவர்கள் இந்த அவையிலே இருந்தார்களா என்று கேட்டபொழுது அவர்கள் இல்லை என்று சொன்னார்கள், அவர்கள் இருந்திருந்தால் அப்பொழுதே ஆளுங்கட்சிக்கு அண்ணா அவர்களின் அறிவுரைகளை நீங்கள் நிச்சயமாக நிறைவேற்றவேண்டுமென்று கூறியிருப்பார்களென்று நம்புகிறேன். ஆனால் அண்ணா அவர்களின் துரதிருஷ்டமோ அல்லது நாடு இன்னும் கொஞ்சம் காலதாமதமாகத்தான் நலன்களைப் பெறவேண்டுமென்ற காலமோ அப்பொழுது பொன்னப்ப நாடார் அவர்கள் இந்த அவையிலே இல்லாமல் போய்விட்டார்கள்......

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எங்களுடைய அரசியல் கொள்கை வேறு. நான் உங்களுடைய கட்சியிலே நிச்சயமாக வரமாட்டேன். நான் மேற்கோளாகத்தான் எடுத்துக்காட்டினேன். நீங்கள் ஆட்சிக்குவந்தால் இதையெல்லாம் செய்யவேண்டுமென்பதைத்தான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் தங்களை அழைக்கின்ற முயற்சியிலே ஈடுபடவேயில்லை. நீங்கள் அந்தக் கருத்துக்களைக் காலதாமதமாக ஏற்றுக்கொண்டு அவைகளை நிறைவேற்றவேண்டுமென்று கூறியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபொழுது எடுத்துக் கூறிய அந்தக் கருத்துக்களை மாத்திரம்தான் எடுத்துச் சொன்னீர்கள். எங்கள்கட்சி ஆளுங்கட்சியானதற்குப் பிறகு அண்ணா அவர்கள் முதலமைச் சராக பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பிறகு அப்பொழுது எதிர்கட்சித் தலை வராக இருந்த திரு. கருத்திருமன் அவர்கள், ஆளுங்கட்சியாக இருக்கின்ற கட்சி எதிர்க்கட்சியாக இருந்தபொழுது எடுத்துச் சொன்ன கருத்துக்களை ஞாபகப்படுத்திய நேரத்திலே அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதையும் அடுத்த விவாதத்தில், பொன்னப்ப நாடார் அவர்கள் டடித்துப் டார்த்து, என்ன சொன்னார்கள் என்பதையும் எங்களுக்கு ஞாபகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள கட்சி எதிர்கட்சியாக இருந்தபொழுது என்ன என்ன விவகாரங் களை ஆளுங்கட்சியாக அப்பொழுதிருந்த காங்கிரஸ் கட்சிக்கு எடுத்துக் கூறியதோ அதையெல்லாம் எங்களுடைய ஆட்சி மெல்ல மெல்ல ஆனால் உறுதியாக நிறைவேற்றுவதற்கு நாங்கள் கடைமைப்பட்டிருக் கிறோம். அந்தப் பணியை நாங்கள் தொடர்ந்து செய்துவருகிறோம் என்ற கருத்தினை முதலமைச்சர் டொறுப்டை ஏற்றுக்கொண்ட பிறகு அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அண்ணா அவர்கள் சொன்ன கருத்துக்கள் எதிர்கட்சியாக இருந்த பொழுது சொல்லப்பட்ட கருத்துக்கள் இந்த ஆட்சியிலே நிறைவேறாமல் போய்விடும் என்று கருதத் தேவையில்லை.

காங்கிரஸ் கட்சித் தலைவரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுள் ஒருவரான கே.டி.கே. தங்கமணி அவர்களும் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பேசுகின்ற நேரத்திலே அண்ணா அவர்கள் வாதாடுவதற்காக எடுத்துக்கொண்ட அழகான வாக்கியத்தைப் பயன்டடுத்திக்கொண்டார்கள். எதிர்க்கட்சிகள் ஆளுங்கட்சிக்கு லாலி பாடுவதற்காக இல்லை, ஆளுங்கட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கதான் எதிர்க்கட்சியிருக்கிறது என்று கூறினார்கள். அண்ணா அவர்கள் ஆளுங்கட்சி செய்கின்ற நல்ல காரியங் களைப் பாராட்டுகின்ற உணர்வோடு தவறான காரியங்களை எடுத்துரைக்கின்ற உணர்வையும் கொண்டிருந்தார்கள் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

காங்கிரஸ் கட்சித் தலைவரும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும் இங்கே பேசிய நேரத்திலே நாங்கள் லாலி பாடுவதற்கு இங்கே வரவில்லை என்று சொன்னபோது நான் எண்ணிக் கொண்டேன், இந்த அரசை இழித்துப் பழித்துப்பேசிய நேரத்திலேயெல்லாம் நான் அதை லாலியாகக் கருதிக் கொள்ளாவிட்டாலும் பழைய கல்யாண வீடுகளிலே பாடுகின்ற நலங்குப் பாட்டாகக்தான் கருதிக்கொண்டேன். பழைய கல்யாண வீடுகளிலே—உண்மை யிலேயே மாப்பிள்ளையும் அழகாகத்தான் இருப்பார், பெண்ணும் அழகாகத்தான் இருப்பாள்—பெண் வீட்டார் அழகான மாப்பிள்ளையாக இருந்தாலும் பழித்துப் பாடுவார்கள், அதைப்போல மாப்பிள்ளை வீட்டாரும் பெண் அழகாக இருந்தாலும் பழித்துப் பாடுவார்கள். பெண் வீட்டார் எங்கள் அழகான பெண்ணுக்கு இந்த அழுமூஞ்சி மாப்பிள்ளையா—



என்றும், மாப்பிள்ளை வீட்டார், இந்த சிடுமூஞ்சிப் பெண் எங்கள் சுந்தர னுக்குப் பொருத்தமோ என்றும் பாடுவார்கள். இதை பழைய கல்யாண வீடுகளிலே நலுங்குப் பாட்டு என்று சொல்வார்கள். அப்படிப் பழித்துப்பாடினாலுங்கூட மாப்பிள்ளையையும் பெண்ணையும் பாராட்டவேண்டு மென்ற உள்ளம்தான் அவர்களுக்கு இருக்கும். அந்த முறையிலே நலுங்குபாடுவது என்பது கேலி பேசவும், கிண்டல் பேசவும் பழைய கல்யாண வீடுகளிலே வழக்கம். அந்த வகையிலே அவர்கள் சொன் னதை நான் லாலியாக இல்லாவிட்டாலும் நலுங்காக எடுத்துக்கொள் கிறேன். அந்தப் பாட்டிலே உள்ள கருத்துக்களுக்கு ஏற்றதாக இந்த அரசு இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதி நிலை அறிக்கைபற்றி மொத்தமாகப் பல கருத்துக்கள் கூறப் பட்டன. வரவு-செலவுத் திட்டம் எப்படி அமைகிறது என்றால் வளர்ச்சி வேகத்தைப் பெருக்கவேண்டும், விலைவாசியைக் கட்டுப்படுத்தவேண்டும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கவேண்டும் என்பதுபோன்ற முக்கியப் பிரச்சினைகளோடு தொடர்புகொண்டதுதான் வரவு-செலவுத் திட்ட அறிக்கையாகும்.

(பிற்பகல் 1–00)

அப்படித் தொடர்பு கொண்டிருக்கின்ற அந்த நிலைமையை, விலை வாசிகளைக் குறைக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க என்கின்ற இரண்டு தலைப்புகளிலே பார்த்தால் அது மாநில அரசு தயாரித்து வெளி யிடுகின்ற வரவு செலவுத் திட்டத்திலே அதிகத் தொடர்பு கொண்டிருக் கிறதா அல்லது மத்திய அரசு தயாரித்து வெளியிடுகின்ற வரவு-செலவுத் திட்டத்திலே அதிகத் தொடர்பு கொண்டிருக்கிறதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தேசீய மட்டத்திலே விலைவாசிகளைக் குறைக்க, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க தேசீய மட்டத்தில் மத்திய அரசின் சார்பாக வெளியிடப்படுகின்ற வரவு-செலவுத் திட்டத்திற்கு இருக் கின்ற சக்தி மாநில அரசின் வரவு செலவுத் திட்டத்திலே நிச்சயமாக இருந்திட முடியாது என்பதை நாம் ஒத்துக்கொண்டுதான் தீர வேண்டும்.

அந்தக் காரணத்தால்தான் நம்முடைய திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் பேசுகின்ற நேரத்திலேயும், ஆளுங் காங்கிரசைச் சேர்ந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்ற நேரத்திலேயும் இது பஞ்சாயத்து போர்டு ஆண்டறிக்கை போல் இருக்கிறது, பஞ்சாயத்து யூனியன் ஆண்ட றிக்கை போல் இருக்கிறது, மாவட்ட ஆட்சி வளர்ச்சிக் குழுவினுடைய ஆண்டறிக்கைபோல இருக்கிறது ஒரு கம்பெனியின் ஆண்டறிக்கை போல இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

அதற்காக நான் வருத்தப்படவில்லை. இந்த அளவிற்கு உண்மையை ஒத்துக்கொண்டு இப்பொழுது மாநிலங்கள் ஒரு பஞ்சாயத்து யூனியன் நிலைமையிலேதான் தன்னுடைய வரவு-செலவுத் திட்டத்தை வைக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றன என்பதை ஒத்துக் கொண்ட தற்காக நான் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 14

பஞ்சாயத்து யூனியன் நிலைமையில் இல்லாமல் மாநில அரசுகள் உண்மையிலேயே மாநில அரசுகளாக இருந்து மாநில அரசு சமர்ப்பிக்கின்ற வரவு செலவுத் திட்டமாகச் சமர்ப்பிக்கின்ற அளவிற்கு நிச்சயமாக வளரவேண்டும், அத்தகைய சக்தியை, வலிமையை நாம் பெற வேண்டும் என்பதை அவர்கள் சூசகமாக எடுத்துச் சொன்னதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாநில அளவில் வைக்கப்படும் வரவு செலவுத் திட்டங்கள் அந்த மாநிலத்திற்கு வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், மாநிலத்தினுடைய நிதி வசதி ஆதாரங்கள் ஆகிய இந்த அடிப்படையிலே தான் அமைய முடியும். ஒரு விவாதம் இங்கே எழுப்பப்படுகிறது. பற்றுக்குறை பட்ஜட் நல்லதா, அல்லது உபரி பட்ஜட் நல்லதா என்ற விவாதம் எழுப்பப்பட்டது. பற்றுக் குறை பட்ஜட் தீமை என்று, 19-ஆம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பித்து இருபதாம் நூற்றாண்டின் துவக்கம் வரையில்—1930 என்று கோடிட்டுக் கொள்ளலாம்—அதுவரையில் பற்றுக் குறை பட்ஜட் தயாரிப்பது என்பது ஆபத்தானது, விலைவாசிகளை உயர்த்தும் என்றெல்லாம் ஒரு கருத்து கூறப்பட்டன. அதற்குப் பிறகு பற்றுக் குறை பட்ஜட் நல்லது என்பது மட்டுமின்றி, உபரி பட்ஜட்டுக்கள் அவ்வளவு சிலாக்கியமானவை அல்ல என்ற மாற்றுக் கருத்தும் தெரிவிக்கப் பட்டது.

நாம் உபரி பட்ஜட் நல்லதா அல்லது பற்றுக்குறை பட்ஜட் நல்லதா என்ற விவாதத்திலே நேரத்தைச் செலவழிக்காமல் எந்தச் சூழ் நிலையில் பட்ஜட் தயாரிக்கப்படுகின்றது. அந்த பட்ஜட்டிலே வருகின்ற பற்றுக்குறையின் அளவு, இடைவெளி, (கேப்) எந்த அளவில் இருக் கிறது, அதை நிறைவு செய்ய என்ன முயற்சி எடுக்கப்படுகிறது, அந்த முயற்சியின் காரணமாக அடித்தள மக்கள் எந்த அளவிற்குப் பாதிக்கப் படுகிறார்கள் என்ற இந்த சூழ்நிலைகளின் அடிப்படையிலே ஒரு நிதிநிலை அறிக்கையை நாம் ஆராய வேண்டும்.

இன்றைக்கு மாநில அரசு பற்றுக்குறை பட்ஜட் தயாரிக்கின்ற நேரத்தில், அதை ஈடுகட்ட, சில வரிகளைப் போட வேண்டியிருக்கிறது. ஆனால் மத்திய அரசு பற்றுக்குறை பட்ஜட் தயாரித்து வெளியிடும் நேரத்தில் வரிபோடுவதோடு அல்லாமல் அதை ஈடுகட்ட பணப்புழக்கத்தைத் தாரா ளமாக அனுமதிக்கிறது. பணப்புழக்கத்தைத் தாராளமாக அனுமதிப் பதற்குரிய அந்த அதிகாரம் மத்திய அரசுக்கு இருப்பதைப்போல் மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது, எந்தச் சூழ்நிலையும் இல்லை.

ஆகவே பணப்புழக்கத்தைத் தாராளமாக அனுமதிக்கின்ற மத்திய அரசினுடைய பட்ஜட்டின் காரணமாகத்தான் விலைவாசி உயர்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் எழுகின்றது என்கின்ற உண்மையை நாம் உணரவேண்டுமேயல்லாமல் பற்றுக்குறையை ஈடு கட்டுவதற்காக ஒருசில வரிகளைப் போடுவதால் மாநில அரசினுடைய நிதிநிலை அறிக்கையால் தான் வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு ஏற்படுகின்றது என்று கூறுவது அவ்வளவு பொருத்தமுடையதாக ஆகாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 மார்ச் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

இந்த அரசாங்கத்தைப் பொருத்தவரையில் வரி போடுவதில் தாங்கக் கூடியவர்களுக்கு வரி தாங்க முடியாதவர்களுக்கு புதிதாக வரி போடக் கூடாது என்ற கொள்கை, போடுகின்ற வரிகளின் மூலம் விலைவாசியோ அல்லது மற்றக் காரியங்களோ உயர்ந்து விடாமல் ஒரு கட்டுக்கோப்புககுள் அடக்கி வைக்க வேண்டுமென்ற அந்த இலட்சியத்தின் அடிப்படையில் தான் நாம் வரிபோடும் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறோம். அந்த நிலைமையில் 10 கோடி ரூபாய்க்கு இந்த பற்றுக்குறையை ஈடு செய்ய வரி போட்டிருக்கிறோம்.

மோட்டார் வரி சீர்திருத்தத்தின் வழியாக $6\frac{1}{2}$ கோடி ரூபாய் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல ஆண்டு காலமாக வியாபாரிகள் பலமுனை விற்பனை வரி வருவதை ஒருமுனை விற்பனை வரி என்று மாற்ற வேண்டுமென்று செய்து வந்தக கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் 59 பொருள்களுக்கு பலமுனை வரியை ஒருமுனை வரியாக ஆக்கியதன் காரணமாகவும், அந்த சீரமைப் பிலே வருகின்ற வருவாயும், அதையொட்டி 50,000 ரூபாய் வரையிலும் வியாபாரம் செய்பவர்களுக்குச் சலுகை கொடுத்து, 10 இலட்சம் ரூபாய்கு மேல் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு சர்சார்ஜை 5 சதவிகிதத் திலிருந்து 10 சதவிகிதம் என்று தாங்கக்கூடியவர்களுககு உயர்த்தியதாலும் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் கிடைக்கிறது. ஆக மொத்தம் இந்தப் பற்றுக்குறையை ஈடுகட்ட 10 கோடி ரூபாய்கு நாம் இன்றைக்கு வரி விதித்திருக்கிறோம். வரி விதித்தோம் என்று சொல்வது கூடச் சரியல்ல. வரி விதிப்பில் மாற்றம் செய்திருக்கிறோம்.

நாட்டிலேயுள்ள அத்தியாவசியப் பொருட்களில் அகவிலைப் படியை நிர்ணயிக்க என்றே சில பொருட்கள் இருக்கின்றன. அகவிலைப்படியை எந்தப் பொருள்களைக் கொண்டு நிர்ணயிக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தப் பட்டியலிலே உள்ளவற்றை நான் உங்க ளிடத்திலே சொல்ல விரும்புகிறேன். அரிசி, கோதுமை: சர்க்கரை கேப்பை, பச்சைப்பயறு என்று ஆரம்பித்து பூண்டு, வெந்தயம், சீரகம் என்றெல்லாம் தொடர்ந்து நல்லெண்ணெய், கடலை எண்ணெய், முட்டை, பால், தயிர், நெய் என்று நீண்டு. பொடி, ஜிலேபி, விறகு, மண் ணெண்ணெய், மின்விசைக் கட்டணம் என்று தொடர்ந்து, தலையணை உறை, செருப்பு, குடை என்று மீண்டும் நீண்டு முகப்பவுடர், பற்பொடி, தையற் கூலி என்ற வகையில் இப்படி 100 பொருள்களும்தான் அத்தியா வசியப் பொருள்கள். எதற்கு அத்தியாவசியப் பொருள்கள்? தொழி லாளர்களின் அகவிலைப் படியை உயர்த்த இந்த அத்தியாவசியப் பொருள் களின் விலையை மனதில் கொண்டுதான், கணக்கில் கொண்டுதான் அகவிலைப்படி உயர்வு அளிக்கப்படுகிறது.

அகவிலைப் படியை உயர்த்த அத்தியாவசியமாக இருக்கும் பொருள் களின் மீது, நாம் 59 பொருள்கள் மீது இன்றைக்கு வரி மாற்றம் செய்திருக்கிறோமே அது பாதிக்கிறதா என்றால் இல்லை. நாம் வரி மாற்றம் செய்துள்ள பொருள்கள் என்ற பட்டியலில் இந்த மாமன்றத் தில் வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் இரண்டு மூன்று கட்டங்களில் 7 சதவிகித வரியாக இருந்த பொருள்கள் அப்படியே 7 சதவிகிதமாக ஒருமுனை வரியாக, நிர்வாக வசதிக்காக, பல தொந்தரவுகளை நீக்கிக் கொள்வதற்காக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக பருப்பு, எண்ணெய், பிண்ணாக்கு, போன்றவைகளுக்கு 7 சதவிகிதம் என்று இருந்ததை $3\frac{1}{2}$ சதவிகிதம் என்று குறைக்கப்பட்டிருக்கிறது. எதற்கு அதிகமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்றால், இந்த 59 பொருட்களில் சீட்டுக் கட்டுகளுக்கு 9 சதவிகிதம், செயற்கை இரப்பர் பொருள்களுக்கு 9 சதவிகிதம், இரப்பரால் செய்யப்பட்ட பொருள்களுக்கு 9 சதவிகிதம், தூய பட்டுத் துணிகள் (கைத்தறி நீங்கலாக) 10 சதவிகிதம், எஃகினால் செய்யப்பட்ட மேஜை, நாற்காலிகள் போன்ற தளவாடங்களுக்கு 10 சதவிகிதம், லினோலியம் 15 சதவிகிதம், சலவைக் கற்களும், சலவைக் கற்களினால் ஆக்கப்பட்ட பொருள்களும் 15 சதவிகிதம், நீளமான தரை விரிப்புகளுக்கு 15 சதவிகிதம், மண் மற்றும் வழுவழுப்பான ஓடுகள் (மொசாயிக் ஓடுகள்) 15 சதவிகிதம், விசை ஏணி (லிப்ட்)க்கு 15 சதவிகிதம், மொலாசஸ் 25 சதவிகிதம், அரிஷ்டங்களுக்கு 30 சதவிகிதம், இண்டியன் மேட் ஃபா-ரின் லிக்கருக்கு 25 சதவிகிதம் என்ற அளவிற்கு இந்த ஆடம்பரப் பொருள்களுக்குத்தான் இந்த வரி மாற்றத்தின் மூலம் நாம் வரி உயர்வு செய்திருக்கிறோமே அல்லாமல் மற்றப் பொருள்களுக்குக் கூடுமான வரையில் வரியைக் குறைத்திருக்கிறோம். ஏற்கனவே பலமுனை வரியாக இருந்ததை ஒருமுனை வரியாக மாற்றும் நேரத்தில் அதிகப்படுத்தாமல் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, வரி உயர்வால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள். வரி உயர்வை 10 கோடி ரூபாய்க்கு போட்டுவிட்டோம் என்ற வாதம் பொருத்தமுடையது அல்ல என்பதற்காகத்தான் இவைகளை நான் சொன்னேன்.

ஏதோ தமிழகத்திலே மட்டும்தான், இந்த மாநிலத்திலே மட்டும் தான் வரிகளைப் போட்டுவிட்டோம் என்று வாதிடுவது சரியான கருத்து அல்ல. மற்ற மாநிலங்களில் போடப்பட்ட வரவு-செலவுத் திட்டங்களை, எனக்குக் கிடைத்தவரையிலே அந்த தகவலை உங்களுக்குச் சொல்ல நான் விரும்புகிறேன்.

மராட்டிய மாநிலத்தில் வருவாய் 693 கோடி ரூபாயும், செலவு 728 கோடி ரூபாயும் வருவாய்க் கணக்கில் காட்டப்பட்டு பற்றுக்குறை 35 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டு, வரி 31 கோடி ரூபாய்க்கு மராட்டிய மாநிலத்தில் போடப்பட்டிருக்கிறது.

மேற்கு வங்கத்தில் வருவாய்க் கணக்கில் வருவாய் 435 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, செலவு 455 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, பற்றுக்குறை 19 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, வரி 24 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டிருக்கிறது.

கர்நாடக மாநிலத்தில் வருவாய்க் கணக்கில் வருவாய் 367 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, செலவு 362 கோடி ரூபாய்க்குக் காட்டப்பட்டு, உபரி 4 கோடி ரூபாய் என்று காட்டப்பட்டு, 19 கோடி ரூபாய்க்குக் கர்நாடகத்தில் வரி போடப்பட்டிருக்கிறது.

பஞ்சாப் மாநிலத்தில் வரவு செலவு பற்றிய விவரங்கள் கிடைக்கவில்லை என்றாலும் பற்றுக்குறை 21 கோடி ரூபாய் என்றும், வரி விதிப்பு 17 கோடி ரூபாய் போடப்பட்டிருக்கிறது என்றும் தகவல் கிடைத்திருக்கிறது.





இந்த நிலையில் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 470 கோடி ரூபாய் வருவாயும், 483 கோடி ரூபாய் செலவும் உள்ள நம்முடைய வரவு-செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை 12·55 கோடி ரூபாய் என்பதும், நாம் போட்டிருக்கும் வரி 10 கோடி ரூபாய் என்பதும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில் அதிகம் இல்லை என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாகத் தமிழகத்து மக்களுக்கு உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த லிஸ்டில் கொடுத்திருக்கும் 59 பொருள்களைப் பற்றிக் குறிப்பிட்ட காரணத்தால் கேட்கிறேன். ஆயில் கேக்சுக்கு வரி போடப்படவில்லை என்ற முறையில் பிரசங்கம் இருந்தது. ஆனால் இதற்கு $3\frac{1}{2}$ சதமானம் வரி இருப்பதையும், ஏரேடெட் வாட்டர்சுக்கு 5 சதமானம் வரி இருப்பதையும் பார்க்கிறோம். இவை எல்லாம் சாதாரண மக்கள் உபயோகப்படுத்தக்கூடிய பொருள்கள் அல்லவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாட்டுத் தீவனத்திற்கு விதிவிலக்கு என்று சொன்னோம். ஏற்கனவே, எண்ணெய்களுக்கு விதிவிலக்கு தாற்காலிகமாகச் செய்திருக்கிறோம். இப்போதும் அமலில் இருக்கிறது. அப்படிச் செய்ததன் காரணமாக விலை குறைந்ததா என்றால் இல்லை. அதையும் மனதில் கொள்ளவேண்டும். அந்த விதிவிலக்கைப் பெரிய வியாபாரிகள் அனுபவிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதே தவிர, வாங்கி உபயோகப்படுத்துகிறவர்கள்—கன்ஸ்யூமர்ஸ்—பயன்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படவில்லை. புண்ணாக்கைப் பொறுத்தவரை, $3\frac{1}{2}$ சதவிகிதமாக ஆக்கியிருக்கிறோம். அதைப்போல் எண்ணெய்க்கு $3\frac{1}{2}$ சதவிகிதம் ஆக்கியிருக்கிறோம். இல்லாவிட்டால் பல முனை வரியில் 7 சதவிகிதமாக ஆக்கியிருக்க வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மாட்டுத் தீவனத்திற்கு வரிவிலக்கு என்று சொல்லுகிறார்கள். பிண்ணாக்கும் மாட்டுத் தீவனத்தில்தானே வரும். புண்ணாக்குக்கு வரி போட்டு விட்டு எப்படி மாட்டுத் தீவனத்திற்கு வரி விலக்கு என்று சொல்ல முடியும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புண்ணாக்கு மாட்டுத் தீவனமாக மாத்திரமல்லாமல் வேறு பல காரியங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே, மாட்டுத் தீவனத்தில் புண்ணாக்கு இல்லாமல் என்று போட்டிருக்கிறோம். அதையும் $3\frac{1}{2}$ சதவிகிதமாகக் குறைத்திருக்கிறோம். நான் முன்னாலே சொன்னதையும் மறந்துவிடக் கூடாது. இப்படி குறைக்கின்ற காரணத்தால் அது பொதுமக்களுக்குப் பயன்படுகிறதா என்றால் இல்லை. அதையும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

ஆக்க வேலைக்கான ஒதுக்கீடுகளைக் குறைத்துவிடுவோமானால் பற்றுக்குறை பட்ஜட்டைப் போடாமலே வரவு-செலவுத் திட்டத்தைப் தயாரிக்க முடியும். ஆனால் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று

கருதுகிற ஓர் அரசு, எப்படியும் நல்ல வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற முனைப்போடு பற்றுக்குறையாக இருந்தாலும் பரவாயில்லை. தாங்கக்கூடியவர்களிடத்தில் வரி போட்டு அல்லது வருமானத்திற்கு வேறு வழிவகைகளை யோசித்து, சிந்தித்து, செயல்படுத்தி அதன் மூலமாகத் திட்டங்களைத் நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணுவது தவறு அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் பேசிய எதிர்கட்சி உறுப்பினர்கள் பலரும் " இது மத்திய அரசைக் குறை கூறுகின்ற நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது " என்று கூறினார்கள். நல்லவேளையாக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் " மத்திய அரசு நமக்குத் தரவேண்டிய பங்கை ஒழுங்காகத் தந்துதான் தீரவேண்டும் ; நிதி விவகாரங்களில் அநீதி இழைக்கப்படக்கூடாது ; அப்படி இழைக்கப் படுமானால் அதைத் தட்டிக் கேட்க, வலியுறுத்திக் கேட்க, மாநில அரசுக்கு உரிமை இருக்கிறது ; மாநில அரசு தட்டிக் கேட்க வேண்டும் ; இல்லையேல் தமிழ்ச் சமுதாயம் பாழ்பட்டு விடும் " என்றெல்லாம் அவர் கூறிய வாசகங்கள் இந்த அரசுக்குத் தெம்பூட்டுகிற வகையில் அமைந்திருக்கின்றன என்பதை மறுத்து விடுவதற்கில்லை.

மத்திய சர்க்காரைக் குறைகூறுகிறோம் என்றால், பாராளுமன்றத்தில் நின்றுகொண்டு பேசுகிற உறுப்பினர்களைப் போல் மத்திய அரசினுடைய அரசியல் கொள்கைகளில் வேறுபட்டு விமர்சிக்கின்ற கோணத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் குறைகூறல் அமையவில்லை என்பதைத் தயவு செய்து இந்த மன்றத்தில் இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

நிர்வாகத்தில் இருக்கும் சிக்கல்கள், பல்வேறு அதிகாரங்கள் இல்லாத காரணத்தால் நமக்கு ஏற்படுகிற திணறல்கள், திக்கு முக்காடல்கள், நிதி ஒதுக்கீட்டில் ஒழுங்கான பங்குத் தொகை அளிக்காத காரணத்தால் ஏற்படும் சங்கடங்கள் ஆகியவற்றைத்தான் நிர்வாகத்தில் ஏற்படுகிற இன்னல்களைத்தான் அந்தக் கோணத்தில்தான் இந்த நிதிநிலை அறிக்கை முழுதும் வாதிட்டிருக்கிறோமே அல்லாமல் மத்திய சர்க்காரைக் குறை கூற வேண்டுமென்ற எண்ணம் கிஞ்சிற்றும் இடையாது என்பதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டுத் திட்டம் வருகிற ஏப்ரல் திங்களில் தொடங்கியாக வேண்டும். பத்திரிகையில் என்ன செய்தி படிக்கிறோம் ? இன்னும் திட்டத்திற்கான திட்டவட்டமான முடிவு தெரிவிக்கப்படவில்லை. இன்னும் மூன்று மாத காலத்தில் அல்லது ஆறு மாத காலத்தில் திட்ட நடவடிக்கையைப் பற்றி இறுதி முடிவு எடுக்கலாம் என்ற செய்தியைப் படிக்கிறபோது நாம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டில் காலடி எடுத்து வைக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறோமோ இல்லையா என்ற கேள்வியைக் கேட்டால் அது மத்திய சர்க்காரைக் குறைகூறும் காரியமாக ஆகிவிட முடியாது.





நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 25,000 கோடி ரூபாய் அகில இந்தியா அளவில் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டது. இப்போது இரண்டு மடங்குக்கு மேலாக 50,000 கோடி ரூபாய் அளவுக்கு ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு திட்டத் தொகையாக ஒதுக்குகிறார்கள். நான்காவது திட்டத்தில் நடப்பு ஆண்டினுடைய ஆண்டுத் திட்டத்திற்கு நம்முடைய மாநில அரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் 129 கோடியாக இருக்கும்போது அதாவது 25,000 கோடி ரூபாய் திட்டத்தில் நடப்பு ஆண்டுக்கு 129 கோடி ரூபாய் என்ற நிலையில் 50,000 கோடி ரூபாய் திட்டத்தில் அடுத்து வருகிற ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டி னுடைய திட்டத்திற்கு ஒதுக்கீடு 118 கோடி ரூபாய்தான்—அது 118 ஆக இருக்கட்டும் அல்லது 108 ஆக இருக்கட்டும்—என்றால் அது நியாயமா ? இதைக் கேட்பது எப்படி மத்திய சர்க்காரைக் குறை கூறுவதாக ஆகிவிடும், மீறுவதாக ஆகிவிடும் என்பதையும் அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்த்திடல் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடன் தவணை முறையில் தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறார்கள். 87 கோடி ரூபாயை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. தவணை முறைகளில் தள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் மாநிலத்திற்கு மாநிலம் வேறு பட்டிருக்கிறது. சில நேரங்களில் வேறு ஒரு மாநிலத்தை விட அதிகமான சலுகை பெறுகிறோம். சில நேரங்களில் ஒப்பிட்டுப் பார்த்தால் வேறு சில மாநிலங்களை விட குறைவான சலுகை பெறுகின்ற நிலையும் இருக்கிறது

டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள், அதற்காகக் குறிப்பிடுகிறேன். 87 கோடி ரூபாயைக் கடன் தவணை முறையில் தள்ளிக் கொடுத்திருக்கிறார்கள் என்ற காரணத்தை எண்ணிப் பார்க்கும்போது அதை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தவணையாக ஆக்கியிருக்கிறார்கள். ஆனால் நமக்குத் தரப்பட்டதாகச் சொல்லப் படுவது—தருவதாக என்று திருத்திக்கொள்ள வேண்டும்—ஒப்புதல் தருவதாகச் சொல்லப்படுகிற 118 கோடி ரூபாய்க்குள்ளேதான் கடன் தவணையும் இணைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் நடப்பு ஆண்டில் நாம் திட்டத்திற்காகச் செலவிடுகிற 129 கோடி ரூபாய் எங்கே ? ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் நாம் செலவழிக்கலாம் என்று ஒப்பளிக்கப்படுவதாகச் சொல்லக்கூடிய கடன் தவணை உள்ளிட்ட 118 கோடி ரூபாய் எங்கே ? இதை எண்ணிப் பார்க்கும்போது மத்திய அரசு, அல்லது திட்டக் குழு அல்லது நிதிக் குழு ஆகியவை நம்முடைய மாநிலத்திற்கு அநீதி வழங்குகின்ற சூழ்நிலை தென்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுவது அரசுப் பொறுப்பில் இருக்கும் எங்களுடைய கடமையாக இருக்கிறதேயல்லாமல் வேறு அல்ல.

நிதி ஆணைக் குழுவில் என்ன செய்திருக்கிறார்கள் ?, ஒரு புதிய தலைப்பு. என்ன தலைப்பு ? " நிர்வாகத்தைச் சீரமைத்து மேம் படுத்தும் மானியம் "—" **Upgradation Grants** " என்பதே அந்த

மானியம். அந்தத் தலைப்பில் சில மாநிலங்களுக்கு உதவித் தொகை, சிறப்புத் தொகை, அளிக்கப்படுகிறது. அதைப் பெற முடியாத மாநிலங்கள் எவையெவை ? தமிழ்நாடு, குஜராத், கேரளம், மராட்டியம் ஆகிய இந்த நான்கு மாநிலங்களும் அந்த மானியத் தொகையைப் பெற முடியவில்லை. நிர்வாக மேம்பாட்டுக்காக என்ற அந்தக் காரணத்தைக் காட்டுகிறார்கள். கல்வி, மக்கள் நல்வாழ்வு போன்ற துறைகளில் இது வரை அதிகம் செலவு செய்யாமல் இருக்கிற மாநிலங்களுக்கு "Upgradation grants" என்று தருகிறார்கள். அப்படித் தரப்படுகிற மானியம், உத்திரப் பிரதேசத்திற்கு 290 கோடி ரூபாய் ; பீகாருக்கு 166 கோடி ரூபாய் ; மேற்கு வங்கத்திற்கு 72 கோடி ரூபாய் ; ஒரிஸ்ஸாவுக்கு 57 கோடி ரூபாய் ; ஆந்திரத்திற்கு 52 கோடி ரூபாய் ; மத்தியப் பிரதேசத்திற்கு 50 கோடி ரூபாய் ; மைசூருக்கு 27 கோடி ரூபாய்.

தமிழகம், குஜராத், கேரளம், மராட்டியம் போன்ற மாநிலங்களுக்குக் கல்வி, மக்கள் நல்வாழ்வு போன்ற துறைகளில் அதிகச் செலவு செய்திருக்கிறது என்ற ஒரு காரணம் காட்டி இந்த மானியம் தர மறுக்கப்பட்டிருக்கிறது.

அந்த மானியம் நமக்கு வேண்டுமென்று போராடுகிற நேரத்தில் எதிர்க்கட்சிக்காரர்களுடைய உறுதுணை ஆளுங்கட்சிக்கு இருந்திட வேண்டுமென்று கேட்பது மத்திய அரசுக்கு விரோதமான போக்கு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள், 'நான்-ப்ளான் எக்ஸ்பெண்டிச்சர்' அதிகமாக ஆகிக்கொண்டு போகிறது என்று. ஆகவே, எல்லா அரசாங்கங்களும் என்று அவர்கள் ஆங்கிலத்தில் கூடச் சொன்னார்கள் "They must reduce the non-plan Expenditure" என்று அன்றைக்கு அழுத்தந்திருத்தமாக அவர்கள் சொன்னார்கள். 'நான்-ப்ளான் எக்ஸ்பெண்டிச்சர்' என்றால் என்ன ? ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் திட்டத்திற்கென்று செலவிடப்படுவது அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் திட்டமல்லாத செலவு ஆகிறது. அதுதான் 'நான்-ப்ளான் எக்ஸ்பெண்டிச்சர்' இப்போது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப ஆண்டில் ஆயிரம் ஆசிரியர்களை நியமிப்பதாக வைத்துக்கொள்வோம். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் அது 'நான்-ப்ளான் எக்ஸ்பெண்டிச்சரில்' வந்துவிடும். அதைக் குறைக்க வேண்டும் என்கிற அம்மையார் அவர்களின் வாதத்தை ஒத்துக்கொண்டால் அந்த ஆயிரம் ஆசிரியர்களை, திட்டமல்லாத செலவை நாங்கள் குறைக்கப் போகிறோம், ஆகவே, நீங்கள் வீட்டுக்குப் போங்கள் என்று சொல்ல வேண்டிய நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டு விடும்.





அதேபோல் ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்ப ஆண்டில் ஒரு நூறு மருத்துவ மனைகளைக் கட்டுவது என்று திட்டம் போட்டு பிறகு அந்த ஐந்தாண்டுகள் முடிந்து அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய ஆரம்பத்தில் அந்த மருத்துவ மனைகள் எல்லாம் 'நான்-ப்ளான் எக்ஸ்பெண்டிச்சரில்' வந்து விடுகிறது. திட்டமில்லாத செலவில் வந்துவிடுகிறது. அப்படி வரும்போது திட்டமில்லாத செலவைக் குறைக்க வேண்டுமென்பதற்காக அந்த மருத்துவ மனைகளை இழுத்து மூடிவிடவும் முடியாது. அதனுடைய செலவுகளை, பராமரிப்புகளை குறைத்துவிடவும் இயலாது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒரு ஐந்தாண்டுத் திட்டம் முடிந்து அடுத்த ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பமாகும்போது அந்த 'நான்-ப்ளான் எக்ஸ்பெண்டிச்சர்' ஏற்பட்டால் அதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால் வருடாவருடம் உங்கள் 'நான்-ப்ளான் எக்ஸ்பெண்டிச்சர்' மேலே போய்க் கொண்டிருக்கிறது, 1969–70, 1970–71 என்று. எந்த ஆண்டு ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தது, எந்த ஆண்டு புதிதாக ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஒரே ஒரு ஐந்தாண்டுத் திட்டம் போட்டு அமைதியாக முடித்து விட்டால் பரவாயில்லை. ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டமும் மற்ற ஐந்தாண்டுத் திட்டத்தை தொடர்ந்து துரத்திக் கொண்டிருக்கிறது. அப்படி சக்கரம் போல் சுழலும் விதத்தில் ஒரு முறை திட்டச் செலவாக இருந்தது அடுத்த முறை திட்டம் இல்லாத செலவாகிறது. ஆகவே குறைக்க முடியாது. அம்மையார் அவர்கள் 'நான்-ப்ளான் என்ஸ்பெண்டிச்சர் என்பதற்குப் பதிலாக 'நான்-டெவலப்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சர்' என்று கூறியிருப்பார்களேயானால் அதைப்பற்றி விவாதிப்பது அர்த்தமுண்டு. ஆனால் 'நான்-ப்ளான் எக்ஸ்பெண்டிச்சரைக்' குறைப்பது ஏதுவான ஒன்று அல்ல.

நம் நண்பர், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பேசிய திரு வடிவேல் அவர்கள் பேசுகிறபோது நிலச்சீர்திருத்தத்தினால் எடுத்த நிலங்கள் எல்லாம் எங்கே என்று கேட்டார்கள். நீங்கள் நிலங்களை எடுத்தீர்களே, நிலம் எவ்வளவு எடுத்தீர்கள், எத்தனை ஏக்கர்கள் எடுத்தீர்கள் என்று கேட்டார்கள்: அவர் பெயருக்கு ஏற்றால் போல் ஆக்ரோஷமாகப் பேசினார்கள். உருக்கமாகவும், உணர்ச்சிவசமாகவும் இருந்த அந்தப் பேச்சில் நிலங்கள் எல்லாம் எங்கே எங்கே என்று கேட்டபோது எனக்குக் கூட சந்தேகமாக இருந்தது. எங்கேதான் போய் விட்டது, நமக்குத் தெரியாமல் போனதை திரு வடிவேல் அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்களே என்று கூட சந்தேகப்பட்டேன்.

பிறகு புள்ளி விவரங்களைப் பார்க்கிற நேரத்தில் நிலச்சீர்திருத்தத்தால் 1967-ம் ஆண்டு மார்ச் திங்கள் வரையில் உபரி நிலங்களாக அறிவிக்கப்பட்டவை, அதாவது ஏற்கெனவே காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது

நிலச்சீர்திருத்தம் கொண்டு வந்து 30 ஸ்டாண்டர்டு எக்கர் என்று கொண்டுவந்தபோது, முன்கூட்டியே அறிவிக்கப்பட்டு, கிடைத்தது கூட அல்ல 24,194 எக்கர்தான் உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டது. அப் போது எதிர்கட்சி துணைத் தலைவராக இருந்தபோது நான் கேட்டேன் அப்போது ரெவன்யூத்துறை அமைச்சராக இருந்த திரு. மாணிக்கவேலர் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். திரு வடிவேல் அவர்கள் கேட்ட இதே கேள்வியை கேட்டேன். எவ்வளவு நிலம் எடுத்தீர்கள், எங்கே இருக்கிறது என்றெல்லாம் கேட்டபோது அன்றைய அமைச்சர் மாணிக்க வேலர் அவர்கள் சொன்னார்கள், அவைகள் எல்லாம் பிரிக்கப்பட்டுவிட்டன என்று· அவரவர் பிரித்துக் கொண்டு போய் விட்டார்கள் உபரி நிலத்தை என்று அவர்கள் நகைச்சுவையோடு சொன்னார்கள். நிலம் பிரிக்கப் படவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை, ஆகவே பிரித்துக் கொண்டார்கள். இதற்காகக் கவலைப்படக்கூடாது என்று திரு. மாணிக்க வேலர் அவர்கள் நகைச்சுவையாகச் சொல்லி எங்கள் வாயையெல்லாம் அன்று அடைத்துவிட்டார்கள்.

இதில் 1967 மார்ச் திங்கள் வரையில் அப்போது அறிவிக்கப்பட்ட உபரி நிலம் 24,194 எக்கர். இதிலே எடுத்துக் கொள்ளப்பட்டவை 16,330 எக்கர். உபரி நிலம் என்று அறிவிக்கப்பட்டு அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டவை 16,330 எக்கர். 1967 வரையில் இதில் விவசாயிகளுக்காக யாதொரு நிலமும் கொடுக்கப்படவில்லை. அதை கோடிட்டு வைத்துக் கொள்ள வேண்டும். பிறகு 1970ம் ஆண்டு இந்த ஆட்சியில் 30 ஸ்டாண்டேர்ட் எக்கர் என்பதை 15 ஸ்டாண்டேர்ட் எக்கர் என்று குறைத்தோம். அப்படிக் குறைத்தபோதுதான் கரும்பு நிலங்களுக்கு இருந்த விதிவிலக்கு ரத்து செய்யப்பட்டது. மேய்ச்சல் நிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு இவை எல்லாம் ரத்து செய்யப் பட்டன. ஆக, இந்தச் சட்டத்திற்குப் பிறகு 31-1-1974 வரையில் அறிவிக்கப்பட்ட உபரிநிலம் 90,284 எக்கர். இவற்றில் வழக்குகள் ஏற்பட்டு விட்ட காரணத்தால் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிற நிலங்கள் 20,429 எக்கர். நோட்டீஸ் கொடுக்கப்பட்டு எடுக்கும் தருவாயில் உள்ள நிலங்கள் 2,306 எக்கர். எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்கள் 67,519 எக்கர் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலத்தில் குத்தகைதாரர்களுக்கும் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கும் அளித்தவை 62,387 எக்கர். இதிலே பட்டா கொடுக்கப்பட்டு முழுமையாக அவர்களுக்கு உரிமையாக்கப்பட்டது 39,970 எக்கர். தொடர்ந்து பட்டாக்கள் மேலும் கொடுக்கப்பட்டு வரு கின்றன. ஆகவே நிலம் எங்கே எங்கே என்று தேட வேண்டிய அவசிய மில்லை. இன்னும் அதிகமாகக்கூட 90,000 எக்கருக்கு மேல் கூட நிலம் கிடைத்திருக்கக் கூடும். ஆனால் முப்பது ஸ்டாண்டேர்ட் எக்கர் வரப்போகிறது என்று முன்கூட்டியே தெரிவிக்கப்பட்ட காரணத்தால். ஆளுக்கு ஆள், அன்று திரு மாணிக்கவேலர் அவர்கள் சொன்னதைப் போல் பிரித்துக் கொண்டு விட்டார்கள் என்ற காரணத்தால் நாம் பதினைந்து ஸ்டாண்டேர்ட் எக்கர் என்று கொண்டு வந்த நேரத்தில் அதிக உபரி நிலம் நமக்கு கிடைக்கமுடியாத ஒரு சூழ் நிலை ஏற்பட்டது விட்டது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.



மேலும் நண்பர் வடிவேல் அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். 64 லட்சம் பேர்கள் சொந்த நிலமற்றவர்கள் என்று சர்க்கார் கணக்கு கூறுவதாகச் சொன்னார்கள். அப்படி எந்த சர்க்கார் கணக்கும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் தனியாகவோ அல்லது மன்றத்தின் வேறு ஒரு நேரத்தில் வெளியிடுவார்களேயானால் அவைகளை ஆராய்ந்து அது பற்றி பரிசீலிக்க நான் தயாராகயிருக்கிறேன். இப்போது எனக்குக் கொடுத்துள்ள தகவல்படி, 1971 மக்கள் தொகை கணக்குப்படி தமிழ்நாட்டிலுள்ள விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 45 லட்சமாகும். விவசாயத் தொழிலாளர்கள் சில நேரங் களில் விவசாய வேலையும் செய்வார்கள் மற்ற நேரங்களில் வேறு வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் எல்லோரையும் உள்ளிட்டு விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 45 இலட்சம். இதில் குத்தகைக்காரர்களின் எண்ணிக்கை 4 இலட்சம். இந்தக் கணக்கைத் தவிர நிலமற்றவர்கள் 64 லட்சம் என்பதற்கு தகவல் எதுவும் என்னிடத் தில் இல்லை. ஆகவே அவர்கள் தெரிவிப்பார்களானால் அதைப்பற்றி பரிசீலிக்க நான் தயாராயிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

நிலச்சீர்திருத்தத்தால் எடுக்கப்படுகிற எந்த நிலமானாலும் அதை முதல் கட்டமாக அந்த நிலத்தை யார் குத்தகைக்கு எடுத்துக்கொண் டிருக்கிறார்களோ அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அப்படி குத்தகை தாரர்கள் யாரும் இல்லாவிட்டால் நிலமற்ற விவசாயிகளுக்கு அது வழங்கப்படுகிறது என்பதையும் நண்பர் வடிவேல் அவர்கள் எழுப்பிய பிரச்னைக்கு நான் பதிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்படிருக்கிறேன்.

ஆளுங்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு குமாரசாமி அவர்கள் பேசும்போது இந்த அரசு நீர்ப்பாசனத்திற்காக என்ன திட்டங் களைத் தீட்டியது, என்ன காரியங்களைச் செய்திருக்கிறது என்றெல்லாம் கேட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டத்தில் ஏற்கெனவே இருந்து இடையில் தேங்கி விட்டு நின்றதை புதுப்பித்து 68,000 எக்கர் பாசன வசதி பெறுகிற நிலைமை இருந்ததை 1,42,000 எக்கர் என்று அறிவிக்கப்பட்டிருப்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

சித்தாறு பட்டணங்கால் திட்டத்தின் முழு சக்தியையும், உபயோகித்து 47,000 எக்கர்கள் இப்போது பயிர் செய்யப்படுகிற சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

1967-ம் ஆண்டுக்கு பிறகு எடுத்துக் கொள்ளப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங் கள், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் மணிமுக்தா நதி, நெல்லை மாவட் டத்தில் இராம நதித் திட்டம், நெல்லை மாவட்டத்தில் கடனா திட்டம், மதுரை, இராமநாதபுரத்தில் வைகைக் கால்வாய் புதுப்பித்தல், மதுரை மாவட்டத்தில் பரப்பலார், மதுரையில் பாலார்-பொரந்தலார், தருமபுரி யில் சின்னாறு திட்டம், வடஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டத்தில் தண்ணீர

அணைக்கட்டுத் திட்டம், வட ஆற்காடு, தென் ஆற்காட்டில் நந்தன் கால்வாய் புதுபிக்கப்படும் திட்டம், நெல்லை மாவட்டத்தில் கருப்பா நதித் திட்டம், திருச்சி மாவட்டத்தில் பொன்னையாறு திட்டம், இராமநாதபுரம் மாவட்டத்தில் பிளவுக்கால் திட்டம், மதுரையில் மருதா நதித் திட்டம் மொத்தம் 27 கோடியே 7 லட்சம் ரூபாய்க்கு திட்டங்கள் உருவாக்கப்பட்டு அதன் காரணமாக 1,87,530 ஏக்கர் புதிதாக சாகுபடிக்கு வருகிற சூழ்நிலையில் இந்த அரசு இந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் செய்து முடித்திருக்கிறது.

இன்னும் 1973–74ல் அனுமதியளிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் உறுப்பினர்கள் படித்துப் பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும் என்று கருதுகிறேன்.

சிறுபாசனத் திட்டத்தின் கீழ் கூடுதலாக பாசனம் செய்யப்பட்ட கணக்கைப் பார்த்தால் நீங்கள் எல்லாம் வியப்படைகிற கணக்கை இந்த அரசு உருவாக்கிக் காட்டியிருக்கிறது, ஐந்தாறு ஆண்டுக் காலத்தில்.

(பிற்பகல் 1–30)

1965–66முடிய —பல ஆண்டுகள் தொடர்ச்சியாக 1966-ம் ஆண்டு முடிய தனியார் குழாய்க்கிணறுகள் 4,369 இருந்தன. இன்றைக்கு 14,477 கிணறுகள். 1966 முடிய வடிமுனைக் குழாய்கள் 2,248 இருந்தன. இன்றைக்கு 14,737 இருக்கின்றன. 1966 முடிய, 1967ல் 565 துளைக் குழாய்கள் (போர் வெல்ஸ்) இருந்தன. இன்றைக்கு 4,873 துளைக் குழாய்கள் இருக்கின்றன. 1967ல் ஆழப்படுத்தப்பட்ட கிணறுகள் 100 இருந்தன. இன்றைக்கு 8,042. 1966 முடிய கூடுதலாகப் பாசனம் செய்யப்பட்ட நிலத்தின் அளவு 1,10,160 ஏக்கராகும். இன்றைக்கு 4,71,782 ஏக்கராகும். இவைகளெல்லாம் சிறுபாசன திட்டத்தின் மூலமாக நாம் செய்து இருக்கிற அரிய சாதனை என்பதை யாரும் மறந்து விடுவதற்கு இல்லை.

திரு பொன்னப்ப நாடார் அவர்களும், மற்ற கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும், மற்றவர்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும் பேசுகிற நேரத்தில் கூட்டுத்துறை தமிழக அரசின் சார்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருப்பதையும், குறிப்பாக தூத்துக்குடியில் இருக்கிற உரத்தொழிற்சாலைப் பற்றியும், அது கூட்டுத் துறையில் தான் இருக்கவேண்டுமா, ஏன் பொதுத்துறையில் இருத்தலாகாது என்றும் கேட்டார்கள். கிட்டத்தட்ட 85 கோடி ரூபாய் உரத் தொழிற்சாலை திட்டத்தை மாநில அரசு திட்டமாக, பொதுத் துறை திட்டமாக நாமே நடத்தவேண்டுமென்று மத்திய திட்டக்குழுவிடம் வலியுறுத்தினோம். மத்திய திட்டக்குழு இணங்க மறுத்து விட்டது. மத்திய அரசின் உதவி கிடைக்காத நேரத்தில் 85 கோடி திட்டத்தை நம்மால் நிறுவ முடியாது.



இதற்கிடையில் மத்திய வங்கிகள் (பைனான்சியல் இன்ஸ்டிடியூஷன்ஸ்) இவைகளெல்லாம் தனியார் துறையில் உரத் தொழிற்சாலை யாராவது நிறுவுவதாக இருந்தால், அதற்கு பண உதவி செய்யத் தயாராக இருந்தன. இதைத் தனியார் துறைக்கு விட்டு விடக்கூடாது, பொதுத் துறைக்கு மத்திய திட்டக்குழு அனுமதிக்காத சூழ்நிலையில் தான், மாநில அரசு தலையிட்டு நாமும் இதிலே பொறுப்பு ஏற்றுக்கொண்டு 26 சதவிகிதம் அரசுக்கும் 25 சதவிகிதம் தனியாருக்கும், மீதமுள்ள 49 சதவிகிதம் பொதுப் பங்குகள் என்ற முறையில் கூட்டுத் துறையில் துவங்கியிருக்கிறோம். பொதுத் துறை வேண்டாம் என்று இல்லை. பொதுத் துறைக்கு வராமல் முழுக்க முழுக்க தனியார் துறைக்கு போகும் சூழ்நிலையில்—மத்திய திட்டக்குழு நம்முடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாததால்—நாம் கூட்டுத்துறை என்ற அளவில் வரவேண்டுமென்று முயற்சியை எடுத்துக்கொண்டோம் என்பதை நான் விளக்கமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, 85 கோடி ரூபாய் மூலதனம் போட்ட நிறுவனத்தில் 5 கோடி ரூபாய் மட்டும் போட்ட, தனி நபரின் நிர்வாகத்தில் அந்த உர உற்பத்தித் தொழிற்சாலையின் முழு பொறுப்பை கொடுத்தது நியாயமா ? அவர்கள் மற்ற சகோதர கம்பெனிகளுக்கு உர உற்பத்தி தொழிற்சாலையின் வேலைகளை காண்ட்ராக்ட் கொடுப்பது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிற வகையில் தான் நாம் 26 சதவிகிதம் வைத்து இருக்கிறோம். அதிலே இயக்குனர் என்ற அளவில் அரசாங்கத்தின் சார்பில் 4 இயக்குனர்கள் இருக்கிறார்கள். இருக்கின்ற சங்கடத்தைச் சொன்னேன். பொதுத் துறைக்கு மத்திய திட்டக்குழு சம்மதிக்கவில்லை. இதைத் தவிர வேறு வழி இல்லாமல் நாங்கள் செய்து இருக்கிறோம். வேறு தவறு ஏற்படாமல் செய்வதற்கு அரசு கண்காணிப்போடு இருக்கிறது என்ற உறுதியை நிச்சயமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மத்திய சர்க்கார் உர தொழிற்சாலைகளைப் பொதுத் துறையில் இருக்கவேண்டுமென்று "இண்டஸ்டியரில் பாலிசி ரெசல்யூஷன்" போட்டு இருக்கிறார்களே, அதை மத்திய அரசு மாற்றி விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாம் கேட்ட நேரத்தில் பொதுத் துறைக்கு மத்திய திட்டக்குழு அனுமதி கிடைக்கவில்லை. ஆகவே, நாம் எடுத்த முடிவு அது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கப்பல் கழகம் பற்றிச் சொன்னார்கள். அம்மையார் அவர்கள், தனி நாடு என்ற அளவிற்கு நாம் கப்பல் விடப்போகிறோம்., மத்திய சர்க்காரை எதிர்த்து இந்தக் காரியத்தைச் செய்யப் போகிறோம் என்று

பொருள்படும்படி பேசினார்கள். இன்று காலையில் பேசிய பெரியவர் மணலி அவர்கள் இந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகம் நாம் ஏற்று நடத்துவது ஒரு துணிகரமான முயற்சி என்று சொன்னார்கள். இது எந்த முயற்சியாக இருந்தாலும், மத்திய சர்க்காரை எதிர்த்து நடத்துகிற முயற்சி அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் மத்திய அரசோடு வாதாட, போராடக்கூடியவர்கள் என்றாலும், நமது உரிமைகள் தேவை என்று கேட்பதில் அழுத்தம் திருத்தமாக இருப்பவர்கள் என்றாலும், இன்று இருக்கும் விதிமுறைகளைத் தாண்டி மத்திய சர்க்காரை எதிர்த்துப் போகும் கொள்கை இந்த அரசுக்கு என்றும் இருந்தது இல்லை, இன்றைக்கும் இல்லை. என்றைக்குமே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு மாநில அரசுக்கு இருப்பதைவிட மத்திய அரசுக்கு இருக்கிறது என்பதை நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை, ஹேமாவதியில் மைசூர் அணை கட்டுவது போல் மற்ற மாநிலங்கள் மத்திய அரசின் ஆணைகளை மதிக்காமல் இருப்பது போல் உள்ள சூழ்நிலைக்கு நம்முடைய தமிழ்நாடு அரசு தள்ளப்படாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு தமிழ்நாடு அரசிலே இருக்கும் நமக்கு மாத்திரம் அல்ல, மத்திய அரசின் பொறுப்பில் இருப்பவர்களுக்கும் நிச்சயமாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

இது மத்திய அரசின் சப்ஜெக்டாக இருக்கிறதே, இதற்கு அனுமதி பெற்று இருக்கும் நீங்கள், ஏன் காவிரி பிரச்னையை உடனடியாக தீர்க்கவில்லை என்று கேள்வி கேட்டார்கள். மத்திய சர்க்காரிடத்தில் "ஷிப்பிங்" என்ற சப்ஜெக்ட் இருந்தாலும், அவர்கள் இன்று தனியார் கம்பெனிகள் கப்பல் போக்குவரத்துக் கழகங்கள் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கிறார்கள். இப்படி தனியாருக்குக் கொடுக்கும் போது ஏன் மாநில அரசுக்கு கொடுக்கக் கூடாது என்ற கேள்வியை திட்டக் குழுவில் எழுப்பிய போது, திட்டக் குழு அதற்கு இணக்கம் தெரிவித்தது. அந்த இணக்கம் தெரிவித்ததன்பேரில் தான் இந்த அறிவிப்பைச் செய்திருக்கிறோம். "பூம்புகார் போக்குவரத்துக் கழகம்" என்று அறிவிப்புச் செய்திருக்கிறோம். அதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். இவைகளெல்லாம் நிதி நிலை அறிக்கையில் நான் விவரமாகக் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன்.

இந்தியாவில் உள்ள போக்குவரத்துக் கப்பல்களில் 90 சதவிகிதம் பம்பாய்த் துறைமுகத்தில் தான் வந்து நிற்கின்றன. ஏன்? அந்த பெரும்பாலான தனியார் கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் அந்தப் பகுதியிலுள்ள தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கின்றன. மேற்குக் கடற்கரையில் ஏற்பட்டு இருக்கும் இந்தக் கப்பல் போக்குவரத்து நெருக்கடியைக் குறைத்து, கிழக்குக் கடற்கரையில் விரிவுபடுத்தி, நம்முடைய தமிழ்நாடு, தென்னிந்திய பகுதிகள் இவைகளிலெல்லாம் பரவலாக நிறைவு செய்ய, இந்திய ஒருமைப்பாடு என்பது பேச்சளவில் இல்லாமல், இந்தியா ஒருமைப்பாடு என்றால் பம்பாய், உத்திரப் பிரதேசம் என்று இல்லாமல், இந்திய ஒருமைப்பாடு என்றால் காஷ்மீர் முதல்





கன்னியாகுமரி வரை என்கிற உணர்வு ஏற்படுகிற அடிப்படை நோக்கம் நெஞ்சில் கொண்டும் கிழக்குக் கடற்கரையில் கப்பல் போக்குவரத்து அதிகமாக ஆகவேண்டுமென்ற நிலையிலும் தான் இதை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

மத்திய அரசாங்கத்தின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அவர்கள் ஒரு கொள்கை வகுக்கிறார்கள். 90 லட்சம் டன் கொள் அளவுள்ள கப்பல் திறனை வளர்க்கவேண்டுமென்று மத்திய சர்க்காரின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் எண்ணமாகும். அதற்கு உறுதுணையாகத் தான் இந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆரம்பமாகிறதே அல்லாமல் ஏதோ பூம்புகார் என்ற பெயர் வைக்கவேண்டுமென்பதற்காகவோ அல்லது தமிழ்நாடு முழுவதும் தனிக்கொடி பறக்க விட்டு, தமிழ்நாடு தனி நாடாக பிரிந்துவிட வேண்டும், உலகம் முழுவதும் அந்தக் கப்பல் சுற்றி வர வேண்டுமென்பதற்காக அல்ல. பூம்புகார் என்ற பெயர் வைத்ததால் அந்தக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி வந்து விடக்கூடாது.

ஒரு முறை பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது போலீஸ் நிலையம் என்று இருந்தவற்றை காவல் நிலையம் என்று மாற்றி இருந்தார்கள். பிறகு மறுபடியும் பக்தவத்சலம் அவர்கள் ஆணையிட்டு காவல் நிலையங்களை அழித்து போலீஸ் நிலையம் என்று எழுதச் சொன்னார்கள். நானும், நாவலர் அவர்களும் ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் திருவொற்றியூரில் திராவிட முன்னேற்றக் கழகம் காவலர் கூட்டம் போட்டது. அதற்குப் பிறகு காவலர் என்பதை அழித்து போலீஸ் என்று எழுதச் சொன்னோம் என்று விளக்கம் தந்தார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: காவலர் என்றால் வாட்ச்மேன் என்ற அளவிற்கு அர்த்தம். அதைவிடஉயர்ந்த பணியை போலீஸ் காரர்கள் செய்கிறார்கள் என்று கனம் பக்தவத்சலம் அவர்கள் சொன்னதாக நினைவு. நானும் அப்போது இந்த மன்றத்தில் அங்கத்தினராக இருந்தேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: போலீஸ் செய்வது உயர்ந்த வேலை. வாட்ச்மேன் செய்வது தாழ்ந்த வேலை என்று சொல்லி, வாட்ச்மேன் வேலையைத் தாழ்வாகக் கருத வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) இது தெரிந்தால் முதலிலேயே காவல் நிலையம் என்று போட்டு இருக்க வேண்டியது இல்லை. திருவொற்றியூரில் திராவிட முன்னேற்றக் கழகம் காவலர் கூட்டம் போட்டவுடன் தான் காவலர் நிலையம் என்பதை போலீஸ் நிலையம் என்று போட்டதாக விளக்கம் சொன்னார்கள். ஆகவே, தமிழ் மொழியில் இருக்கும் வெறுப்பின் காரணமாக—பூம்புகார் என்ற பெயரை வெறுக்கக்கூடாது—நல்ல காரியங்களை எதிர்த்துப் பேசக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேனே அல்லாமல் வேறு அல்ல.

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 14

வாரியங்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்களும் வாரியங்களை நிறைய வைத்துக்கொண்டே போகிறீர்களே என்று எல்லாம் சொன்னார்கள். வாரியங்களை, கார்ப்பரேஷன்களை அதிகமாக வைப்பதற்கு மிக முக்கியமான காரணம் நிர்வாகத்தைப் பரவலாக ஆக்கி செயல்பட படுத்தவேண்டும் என்பது ஒரு நோக்கம். அடுத்தது அதிக நிதியை மாநில அரசோ, மத்திய அரசோ அதற்கு ஒதுக்க முடியாத சூழ்நிலையில் வங்கிகள் உட்பட இன்றைக்கு இருக்கிற பினான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன்களிடமிருந்து பெரும் தொகை பெறலாம் என்கின்ற அந்த நோக்கத்தினுடைய அடிப்படையில் தான் இந்த கார்ப்பரேஷன்கள், வாரியங்கள் வைக்கப்படுகின்றன.

நம்மைவிட சிறிய மாநிலமான கேரளாவில் அரிஜன் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ரூபம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், பிஷ்ஷரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், எலக்ட்ரானிக் கார்ப்பரேஷன் போன்ற பல கார்ப்பரேஷன்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. எனக்குத் தெரிந்த பெயர்களை மாத்திரம் சொன்னேன்.

அதே போல மகாராஷ்ட்டிர மாநிலத்தில் ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், இண்டஸ்டிரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ஸ்டேட் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன் ஆஃப் மகாராஷ்ட்ரா, சிட்டி இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், ஸ்டேட் பைனான்ஸ் கார்ப்பரேஷன், "கொங்கன்" டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன், விதர்பா டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன் ஆகிய வாரியங்கள் மராட்டியத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மராட்டியத்தில் "பாசன வாரியம்" என்ற ஒரு வாரியத்தை, ஒரு கார்ப்பரேஷனை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள்.

உத்திரப் பிரதேச மாநிலத்தில் "ஆஸ்பிடல் கார்ப்பரேஷன்" என்று ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். "பிரிட்ஜஸ் கார்ப்பரேஷன்" என்ற ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கார்ப்பரேஷன்கள் ஏற்படுத்துவது என்பது—ஏதோ வாரியங்கள் வாரியங்கள் என்று சொல்கிறார்கள். ஒருவர் தலைவரைப் போடுவதற்கு என்று சொல்கிறார்—நாங்கள் 2, 3 வாரியங்களை ஏற்படுத்தி, அவைகளில் தலைவர்களைப் போட்டதோடு சரி—இனிமேல் வாரியங்கள் ஏற்படுத்தினால் ஏதோ ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களை தலைவராகப் போடப்போகிறார்கள் என்ற ஐயத்தின் காரணமாக, எப்படி பூம்புகார் என்ற பெயரைத் தாங்கி கப்பல் போக்குவரத்து கார்ப்பரேஷன் ஏற்படுத்தியவுடன் கப்பல் போக்குவரத்து கார்ப்பரேஷன் வேண்டியதில்லை என்ற எண்ணம் ஏற்பட்டதோ அப்படி ஏற்படாமல், வாரியங்கள் நல்ல காரியங்களைச் செய்வதற்கு பயன்படக்கூடிய, நிர்வாகத்தை பகிர்ந்து கொள்ளக்கூடிய, திறம்பட செய்யக்கூடிய, அதிக நிதி வசதி பெறக்கூடிய சூழ்நிலையில் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற எண்ணத்தில் இவைகளையெல்லாம் வரவேற்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1974 மார்ச் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

காவேரி பிரச்னையைப் பற்றி இங்கே பயங்கரமாகப் பேசப்பட்டது. ஏதோ காவேரி பிரச்னையில் 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தம், இனிமேல் அடைபட்டுப் போய்விடும் என்றெல்லாம் சொல்லப்பட்டது. 18–2–1974—ஒடு அந்த ஒப்பந்தம் முடிந்து விடுகிறது என்றால், அதற்குப் பிறகு, காவேரி தண்ணீர் தமிழ் நாட்டிற்கு வராமல் போய்விடவில்லை. 1924-ல் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1974-ஒடு முடிந்துவிடுகிறது என்று பொருள் அல்ல. இதற்குப் பிறகு புதிய ஒப்பந்தம் எழுதப்பட வேண்டும் என்பதும் பொருள் அல்ல. காவேரி பற்றி எந்த ஒரு முடிவு எடுப்பதாக இருந்தாலும், அது தமிழ் நாட்டிலுள்ள பெரிய பிரச்னை என்ற அடிப் படையில் எல்லாக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை அடிக்கடி கூட்டி, அவர்களுடைய சீரிய சிறந்த ஆலோசனைகளைப் பெற்றுத்தான் அந்த முடிவினைத் தான் மத்திய அரசோடு நாங்கள் பேசும் பொழுது விவாதிக் கிறோம். அந்த முடிவினுடைய மையத்தை வைத்துக்கொண்டு தான் இந்தப் பிரச்னையை அணுகுகிறோமேயல்லாமல் வேறு அல்ல என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

காவேரி பிரச்னையில் பல கமிட்டிகளை எல்லாம் மத்திய சர்க்கார் போட்டு முடித்துவிட்டார்கள். நாம் மிகுந்த பொறுமையோடு இருக் கிறோம், இல்லை என்று மறுக்கவில்லை. ஏனென்றால், இந்திய ஒருமைப் பாட்டில் மற்ற மாநிலங்களுக்கு இருக்கிற அக்கறையில் எள் அளவு பங்கு குறைந்த அக்கறை நமக்கு இல்லை என்பதை நிரூபிக்கின்ற வகையில் நாம் பொறுமையோடு இருக்கிறோம்.

ஹேமாவதி அணையை அங்கே கட்டுகிறார்கள், தண்ணீர் அங்கிருந்து வருகிறது, நாம் ஏன் அதை தடுக்கக்கூடாது என்று அம்மையார் கேட்டார் கள். ஒருமுறை பட்டுக்கோட்டை சீனுவாசய்யர் அவர்கள் நீர்ப்பாசன மகாநாட்டில் பேசும்பொழுது தமிழ் நாட்டிலிருந்து ஒரு பெரும் படை சென்று அங்கு இருக்கிற காவேரி அணையை உடைக்க வேண்டும் என்று கூட பேசினார்கள். அவைகளெல்லாம் தீவிர வாதத்திற்கு, வேகமான பேச்சுகளுக்கு பொருத்தமுடையதாக இருக்கும். சில பேர்களுக்கு பேச்சில் வேகம் இருக்கும், செயல் மிக மிகச் சாதாரணமாக ஆகிவிடும். ஆகவே தான் பேச்சில் வேகத்தைக் காட்டி, செயலில் எதையும் குறைத்துவிடக் கூடாது என்ற சூழ்நிலையில் இன்றைக்கு இந்த அரசு இந்தப் பிரச்னையில் மிகுந்த பிடிவாதம் காட்டிவருகிறது. காவேரி ஆறு இல்லாவிட்டால், காவேரி ஒப்பந்தத்தில் ஏதாவது சீர்கேடு ஏற்பட்டுவிடுமேயானால், கர்நாடக மாநிலத்திற்கு ஆதரவாக, ஒருதலைப் பட்சமாக மத்திய அரசு ஏதாவது முடிவு எடுத்துவிடுமேயானால், $4\frac{1}{2}$ கோடி தமிழ் மக்களுடைய வாழ்வு அதோ கதி ஆகிவிடும். அப்படி ஏற்படுகின்ற நிலையில் இந்த அரசு நிச்சயம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது; அப்போது, தமிழ்நாட்டி லிருக்கிற தி.மு.க. தோழர்களுடைய கரங்கள் மாத்திரமல்ல, எல்லா தமிழர்களுடைய கரங்களும் அன்றைக்கு யாரை எதிர்க்க வேண்டுமோ அவர்களை எதிர்க்க வேண்டிய அளவுக்கு ஓங்கி உயரும் என்ற உறுதியை நாம் நிச்சயமாகப் பெற்றிருக்கிறோம். ஆகவே, இதிலே எந்தவிதமான ஐயப்பாடும் தேவையில்லை. மத்திய அரசு நீதி வழங்கும் என்று

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 14

எதிர்பார்ப்போமாக. கர்நாடக அரசும், கேரள அரசும், தமிழக அரசும் கூடிப் பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வருவார்கள் என்று எதிர்பார்ப்போமாக என்று கூறி இந்தப் பிரச்னையைப் பற்றி என்னுடைய கருத்தை இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.

மற்றும் பல பிரச்னைகளைப் பற்றியெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையில் பேசப்பட்டது. சோஷலிஸம் இல்லையாது, தேசியமயமாக்குவது மாத்திரம் சோஷலிஸம் அல்ல என்றெல்லாம் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். தேசியமயமாக்குவது மாத்திரம் சோஷலிஸம் அல்ல. ஆனால், தேசிய மயக் கொள்கை சோஷலிஸத்தினுடைய வெற்றி முகட்டிற்கு செல்லுகின்ற வழியில் உள்ள ஒரு கட்டம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே, அந்தக் கட்டத்தை நாம் இன்றைக்கு படிப்படியாகச் செய்து வருகிறோம். கடைசியிலே சோஷலிஸம் வருவதற்கு நாம் செய்திருக்கிற பல்வேறு காரியங்களை இந்த நிதி நிலை அறிக்கையிலே பல இடங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அவைகளைஎல்லாம் மீண்டும் நான் இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும் என்று விரும்பவில்லை.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் கூட இன்றைக்கு தொழிலாளர்கள் நல இன்ஷூரன்ஸ் திட்டம் என்கின்ற திட்டத்தைப் பார்த்தால் நம்முடைய மாநிலத்தில் தான் அவர்களுக்கெல்லாம் வரையறுக்கப்பட்ட சட்ட வரம்புக்கு மீறி தொகையை செலவழித்திருக்கிறோம். ஒரிஸாவில் சட்ட வரம்புக்குள்ளே தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. குஜராத்தில் 21 லட்சம் ரூபாய் சட்ட வரம்புக்கு மீறி தொழிலாளர் நல இன்ஷூரன்ஸுக்கு அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. அரியானாவில் சட்டவரம்பிற்குள் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பீகாரில் ரூ. 9 லட்சம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆந்திராவில் ரூ. 7 லட்சம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. மராட்டியத்தில் சட்ட வரம்புக்குட்பட்டுத்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மத்தியப் பிரதேசத்திலும் சட்ட வரம்புக்குள் தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்தில் ரூ. 23 லட்சம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. அசாமில் சட்ட வரம்புக்குள் செலவழிக்கப்பட்டிருக்கிறது. கேரளாவில் சட்டவரம்புக்குள் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டில் தான் சட்டவரம்பை மீறி தொழிலாளர் நல இன்ஷூரன்ஸ் திட்டத்தின் கீழ் ரூ. 72 லட்சம் அதிகமாக செலவழிக்கப்பட்டிருக்கிறது. அப்படி இந்தியாவிலேயே அதிகமாக செலவழிக்கின்ற ஒரே ஒரு மாநிலம் தமிழ்நாடு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (கரவொலி).

முப்பத்தைந்தாயிரம் பஸ் தொழிலாளர்களுக்கு அகில இந்தியாவிலும் ஒரு பென்ஷன் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற அரசு தமிழ்நாடு அரசு அல்லவா? அதையாவது நீங்கள் பாராட்டக்கூடாதா? பாராட்ட வேண்டும் என்று இப்படி வேண்டி வேண்டி உங்களைக் கேட்கிறேனே, அதற்காகவாவது ஒருமுறை பாராட்டக்கூடாதா?



1974 மார்ச் 14] [டாக்டர் மு. கருணாநிதி]

திரு. தங்கமணி அவர்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று கருதுகிறேன். 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு சென்னை வாணி மஹால் தியேட்டரில் நடைபெற்ற ஒரு பாராட்டுக் கூட்டத்தில் அவர்கள் பேசினார்கள். அதை மறந்திருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஏதேதோ அரசியல் சூழலில் எத்தனையோ விஷயங்கள் மறந்துபோய்விடுகின்றன. அன்று அவர்கள் அந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டார்கள். ஒரு காலத்தில் கம்யூனிஸ்டு கட்சிக்கு தமிழ் நாட்டில் ஆபத்து வந்த நேரம். அந்த நேரத்தில் அடக்குமுறைக்கு ஆளாக நேர்ந்தது என்பதை எடுத்துச் சொல்லி, கம்யூனிஸ்டு கட்சிக்கு உயிரூட்டம் தந்தவர்களில் திராவிட முன்னேற்றக் கழகத்திலேயே முதன்மையானவர் கருணாநிதி என்று தங்கமணி அவர்கள் அன்று கூறினார்கள். இன்றைக்கு அவர்கள் பாராட்டாவிட்டாலும், அன்றைக்குப் பாராட்டியதை நான் நினைத்துக் கொண்டு இன்றைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு மணலி அவர்கள் பாராட்டினார்கள். அவர்கள் பேசும் பொழுது நான் அவர்களை கவனித்துக் கொண்டிருந்தேன். அவர்கள் மிகுந்த உருக்கத்தோடு சொன்னார்கள். நம்முடைய முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் திருப்பூர் மொகைதீன் அவர்களும் மிகுந்த உருக்கத்தோடு பேசினார்கள். நம்முடைய பெருமாள் அவர்கள் பேசினார்கள். சுதந்திரா கட்சித் தலைவர் திரு வெங்கடசாமி அவர்களும் பேசினார்கள். இந்த விவாதம் தொடங்கியபோது இன்றைக்குக் கொஞ்சம் சூடாக ஆரம்பித்தாலும், நண்பர் ராஜகோபால் அவர்கள் பேசும்பொழுது கொஞ்சம் சூடாக விவாதம் இருந்தாலும், பின்னால் எதிர்க் கட்சித் தலைவர்கள், தமிழரசுக் கட்சித் தலைவர், காங்கிரஸ் கட்சித் தலைவர் உள்பட அத்தனை பேரும் பேசிய நேரத்தில் உள்ளபடியே நிலைமைகளை நல்ல முறையில் எடுத்துச் சொல்லி மிகுந்த உருக்கத்தோடு பேசினார்கள்.

நம்மிடையே எவ்வளவு மனமாச்சரியங்கள் இருந்தாலும், எவ்வளவு கட்சி வேறுபாடுகள் இருந்தாலும், எவ்வளவு கொள்கை வேறுபாடுகள் இருந்தாலும், தமிழ் சமுதாயத்திற்கு சில நல்ல காரியங்களைச் செய்வதற்காக மக்கள் எங்களைப் பணித்திருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இதுதான் கடைசி பட்ஜெட் என்று கூட சொன்னார்கள். நான் அதைப்பற்றி கவலைப்படவில்லை. ஒருவேளை ஐந்தாண்டு காலம் முடியாமல் 1976-ல் பட்ஜெட் வைக்காமலே கூட இந்த அரசு கவிழ்ந்துவிட வேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்களோ என்னவோ தெரியாது. கடைசி பட்ஜெட்டாக இருக்கிற காரணத்தினால் படம் எடுத்தார்கள் என்று கூட சொன்னார்கள். ஒருவரை கடைசி கட்டத்தில், சந்தேகப்படுகிற கட்டத்தில் படம் எடுப்பது என்றால்.....

திரு ஆர். பொன்னப்ப நாடார்: போன தடவை 1972-ல் எலக்ஷன் நடக்கவேண்டியிருந்தது. அது 1971-ல் நடந்துவிட்டது. அதேமாதிரி தமிழகத்தில் இப்பொழுதும் வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படிச் செய்வார்களா இந்திரா காந்தி என்பது எங்களை விட உங்களுக்குத்தான் அதிகமாகத் தெரியும் என்று கருதுகிறேன். அப்படிச் செய்தால் பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அப்பொழுது இந்திரா காந்தி செய்யவில்லை. நீங்களே சென்றுதான் நாங்களும் கலைத்துவிடுகிறோம் என்று சொன்னீர்கள். இந்திரா காந்தியா செய்தார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் கலைப்பதாகச் சொன்னார்கள். பிறகு நாங்களும் கலைப்பதாகச் சொன்னோம்.

ஆகவே, தமிழ் மக்கள் பார்த்து முன்னேற்றக் கழக அரசு ஐந்து ஆண்டுகளுக்கு, 10 ஆண்டுகளுக்கு 1967-ஆம் சரி, இப்பொழுதும் சரி எங்களிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள், அந்தப் பொறுப்பை எங்கள் கட்சியினால் நிறைவேற்ற முடியும் என்பதை எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்.

இருந்தாலும், அதே நேரத்தில் வேறுபட்ட கருத்துக்களையெல்லாம், ஆட்சியை ஒழுங்காக நடத்திச் செல்வதற்கு உறுதுணையாக இருக்கிற விதத்தில் எழுதி, பேசி எங்களை ஊக்கப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வேறு யாருக்கும் இடம் தராமல் நாங்களே தான் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறோம் என்ற பிடிவாதம் நிச்சயம் எங்களுக்குக் கிடையாது.

ஆனால், ஒன்றைச் சொல்வேன். இங்கே பேசிய நண்பர்கள் சொன்னார்கள். ஏதோ தமிழ்நாட்டிலே மலையாளிகளை எல்லாம் தமிழர்கள் அடிக்கிறார்கள், துரத்துகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட பேச்சு கூட நல்லது அல்ல. ஏனென்றால், ஒவ்வொரு மாநிலத்திலும் சிறுபான்மையோர் இருக்கிறார்கள். கேரளத்தில் தமிழர்கள் வாழ்கிறார்கள், ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். இங்கே ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். கேரளத்தவர் வாழ்கிறார்கள். பம்பாயில் தமிழர்கள் வாழ்கிறார்கள், பம்பாயிலே தமிழர்களுக்கு, மலையாளிகளுக்கு, ஆந்திரர்களுக்கு, கன்னடியர்களுக்கு ஏற்பட்ட கதியைக் குறித்து நாமெல்லாம் கடுமையான கண்டனத்தை அரசியல் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டு அத்தனை பேர்களும் தெரிவித்திருக்கிறோம்.

அதே நேரத்தில் திருவனந்தபுரத்திலே இருக்கிற தமிழர்கள் எவ்வளவு அடக்க உணர்ச்சியோடு நடந்துகொள்கிறார்களோ அதேபோல இங்கே இருக்கின்ற மற்ற மாநிலத்தவர்களும் அடக்க உணர்ச்சியோடு நடந்து கொள்ள வேண்டும். அது மிக மிக முக்கியம். அதை விட்டுவிட்டு, ஏதோ இங்கே இருக்கின்ற தமிழர்கள் எல்லாம் மிகச் சாதாரணமானவர்கள் என்ற எண்ணம் ஏற்படக்கூடாது. தமிழ்நாட்டிலே



மலையாளிகளுக்கு இடமுண்டு; தெலுங்கர்களுக்கு இடமுண்டு; ஏனைய சிறுபான்மையோருக்கு இடமுண்டு; குஜராத்தியருக்கு இடமுண்டு. அத்தனை பேரும் பாதுகாக்கப்படுவார்கள்.

ஆனால், ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தென்னிந்தியாவிலே ஒரே ஒரு கேரள ராஜ்ஜியம்தான் இருக்கலாம்; இரண்டு கேரள ராஜ்ஜியங்களுக்கு இடமில்லை என்று கூறிக்கொண்டு இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-51 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

168. Notification issued with G.O. Ms. No. 2054, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Gudiyatham Local Planning Area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

169. Notification issued with G.O. Ms. No. 1410, Agriculture dated the 12th June 1973 in regard to certain amendments to the Madras Collection of Statistics Rules, 1966. [Laid on the table of the House under section 14 (3) of the Collection of Statistics Act, 1953 (Central Act XXXII of 1953).]

170. Notification issued with G.O. Ms. No. 91, Rural Development and Local Administration, dated the 18th January 1974 in regard to exclusion of the areas relating to Nachimuthu Gounderputhur and Samathur villages from the limits of Dharapuram Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

[1974 மார்ச் 14

171. Notification issued with G.O. Ms. No. 2684, Rural Development and Local Administration, dated the 3rd November 1973 in regard to division of Coonoor Municipality into twenty-four wards and reservation of three seats for Scheduled Castes and two seats for Women in the Coonoor Municipal Council. [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

B. Reports, Notifications and Other Papers.

64. Notification issued with G.O. Ms. No. 7214, Revenue, dated the 3rd December 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deed in favour of the Chief Eecutive Officer, Tamil Nadu Khadi and Village Industries Board, Madras.



1974 மார்ச் 14]

## இணைப்பு I.

[367-ம் பக்கத்தில் 419-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

வைகைக் கால்வாய் சீரமைப்பின் கீழ் உள்ள பல்வேறு வேலைத் திட்டங்களுக்கான முன்னேற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பார்த்திபனூர் ரெகுலேட்டர் வேலைகள் :

பார்த்திபனூர் ரெகுலேட்டர் வேலைகள் அநேகமாக எல்லாம் முற்றுப் பெற்று விட்டன. நிரந்தர மின் இணைப்பு வேலைகள், மதகுப் பலகை களைத் தூக்குவதற்கான இயந்திரப் பொறிகளைப் (**Hoisting Equipment** பொருத்துதல் ஆகிய வேலைகள் தற்போது நடந்து கொண்டு வரு கின்றன.

பார்த்திபனூர் ரெகுலேட்டரின் கீழ் உள்ள கால்வாய்கள் :

இடது புறத்தில் 45 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 29·00 கி.மீ. நீளம் வெட்டி முடிக்கப்பட்டுள்ளது. வலது புறத்தில் 45 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 29·00 கி.மீ. நீளம் வெட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விரகனூர் ரெகுலேட்டர் :

ரெகுலேட்டரின் சில பகுதிகளுக்கு ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்ப இருக்கின்றன. மற்றப் பகுதிகளில் வேலைகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

விரகனூர் ரெகுலேட்டரின் கீழ் உள்ள கால்வாய்கள் :

இடது புறத்தில் 31 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 5 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் வெட்டுவதற்கான மதிப்பீ தயார் செய்யப்பட்டுள்ளது. இடது புறக் கால்வாயின் பாக்கி பாகத்திற்கும் வலது புறத்தில் 46 கி.மீ. நீளத்திற்கான கால்வாய் வெட்டுவதற்குமான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

## இணைப்பு II.

[374-ம் பக்கத்தில் 423-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த தொழில்கள் தொடர்பான இறக்கு மதி விண்ணப்பங்கள், ஒவ்வொரு தொழிலுக்கெதிராகவும் குறிப்பிடப் பட்டுள்ள இம்மாநில அரசின் "பொறுப்பேற்கும் அதிகாரிகளால்" பரிவுரை செய்யப்படுகின்றன :—

(i) கைத்தறித் தொழில் .. மாநிலக் கைத்தறித் துறை இயக்குநர்.

[1974 மார்ச் 14

| | |
|---|---|
| (ii) மீனை டப்பிகளில் அடைத்தல். மீனை உறைய வைத்தல் மற்றும் ஏனைய மீனவத் தொழில்கள். | மாநில மீன்வளத்துறை இயக்குநர். |
| (iii) பற்பொடி தயாரிக்கும் தொழில் உட்பட ஒப்பனைப் பொருள் தயாரிப்புத் தொழில், மருந்து தயாரிக்கும் தொழில். | மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரி, சுகாதாரப் பணிகள்-குடும்ப நலத் திட்டத்துறை இயக்குநர். |
| (iv) தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் வராத பட்டியலில் சேராத சில தொழில்கள், சிறு தொழில் பிரிவுகள், சில கூட்டுறவுச் சங்கங்கள், கட்டுமான முகவரமைப்புகள், வாகனங்கள் தங்குமிட வேலைகள், டயர்களைப் புதுப்பிக்கும் தொழில் பிரிவுகள். | தொழில்-வணிகத்துறை இயக்குநர். |
| (v) கூட்டுறவுச் சங்கங்கள் .. | கூட்டுறவுச் சங்கப் பதிவாளர். |
| (vi) சில அச்சுத் தொழிற் பிரிவுகள். | எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர். |

2. ஒவ்வோர் ஆண்டும் இந்திய அரசால் வெளியிடப்படும் இறக்குமதி வணிகக் கட்டுப்பாடு கொள்கை நூலின் அடிப்படையிலும், இறக்குமதி வணிகக் கட்டுப்பாடு விதிகள், நடைமுறை கையேட்டின் அடிப்படையிலும் பரிவுரைகள் அமைந்துள்ளன.

Import applications relating to the following categories are recommended by the Sponsoring Authorities under this State Government noted against each below :

| | |
|---|---|
| (i) Handloom Industry .. .. | The State Director of Handlooms. |
| (ii) Canning, Freezing and other Fishery Industries. | The State Director of Fisheries. |



1974 மார்ச் 14]

| | |
|---|---|
| (iii) Pharmaceutical Industry and Cosmetics including tooth powder industry. | The Drugs Controller and Director of Health Services and Family Planning. |
| (iv) Certain non-Director-General of Technical Development and non-Scheduled Industries, Small Scale Industrial units, certain Co-operative Societies, Construction Agencies, Garage Works, Retreading Units. | The Director of Industries and Commerce. |
| (v) Co-operative Societies. | Registrar of Co-operative Societies. |
| (vi) Certain Printing Units. | Director of Stationery and Printing. |

2. The recommendations are based on the Import Trade Control Policy Book, Import Trade Control Handbook of Rules and Procedure published by the Government of India every year.

இணைப்பு—III

[375-ம் பக்கத்தில் 424—ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(a) Yes.

(b) Details of moral discourses given at the Central Jails in this State during the calendar year 1973 up to 23rd November 1973:—

| *Name of Jail.* | *Name of the lecturer.* | *Total number of lectures delivered.* | *Religious.* | *Remarks.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| Central Jail, Salem .. | .. Pulavar Dukkani Varadarajan. | 13 | Hindu | Various topics of Thirukkural. |
| Central Jail, Salem .. | .. Pulavar Dukkani Varadarajan. | 12 | Hindu | Discourses about various topics on Thirukkural. |
| Central Jail, Madras .. | .. S. R. Kachabeswaran .. | 11 | Hindu | Discourses of Hindu religious and general instructions from Thirukkural. |
| | Father Gnanaprakasam, M.A. | 6 | Christian | Discourses of Christianity and general instructions. |
| | [illegible] Natesan .. | 2 | Hindu | Moral and general instructions on Kural. |
| [illegible] | [illegible] Kirupanantha Wariar. | 1 | [illegible] .. | .... |
| | Thiru M. K. Miranda, M.A. | 1 | Christian .. | General discourses on moral and religious lecture. |
| | Thiru Gnananda Adigal .. | 20 | Hindu .. | Do. |
| | Thirumathi J. Saradambal | 20 | Hindu .. | Do. |
| | Rev. Fr. Sebastian .. | 5 | Christian | Do. |
| | Thirumathi S. R. Kachabeswaran. | 8 | Hindu .. | .... |
| Central Jail, Cuddalore .. | Thavathiru Kundrakudi Adigalar. | 2 | Hindu .. | One lecture on general and moral instructions and another Pattimanram. |
| Central Jail, Madurai .. | Thiru S. Ramachandran .. | 10 | Hindu .. | Moral lectures. |
| | Thiru Molvi. M. P. Md. Yusuff Ali. | 14 | Muslim .. | The lectures given by them were generally on moral and ethical matters. |
| Central Jail, Tiruchirappalli .. | Thiru A. Kanagarathinam. | 25 | Hindu .. | Thirukkural Discourse. |

| Name of Jail. | Name of the lecturer. | Total number of lectures delivered. | Religious. | Remarks. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | Thiru A. Kanagarathinam | 24 | Hindu .. | Lectures in Thirukkural. |
| | Thiru R. Radhakrishna Raja. | 22 | Hindu .. | Moral lectures. |
| | Md. Sulaiman .. .. | 21 | Muslim .. | Do. |
| | Thiruvalargal Samuel and 4 others. | 6 | Christian | Do. |
| | Thiruvalargal Jaganathan and others. | 2 | Christian | Do. |
| Central Jail, Tiruchirappalli. | Thiruvalargal Christopher and others. | 3 | Christian | Do. |
| | Thiru G. Charles .. | 1 | Christian | Do. |
| | Thiruvalargal D. David and others. | 4 | Christian | Do. |
| | Pastor V. S. Rajan .. | 1 | Christian | Do. |
| | Thiru Imanuel .. .. | 1 | Christian | Do. |
| Central Jail, Vellore .. | Thiru Siva Oli .. | 19 | Hindu .. | .. |
| Central Jail, Palayamcottai. | Thirumuruga Kirupanantha Wariar. | 1 | Hindu .. | Moral lectures. |



(அ) ஆம்.

(இ) இம்மாநிலத்திலுள்ள மத்திய சிறைகளில் 1973-ஆம் ஆண்டில் நவம்பர் திங்கள் 15-ம் நாள் வரை ஆற்றப்பட்ட ஒழுக்கநெறி சொற்பொழிவுகளின் விவரங்கள் வருமாறு :—

| சிறைச்சாலையின் பெயர். | சொற்பொழிவு ஆற்றியவரின் பெயர். | ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளின் மொத்த எண்ணிக்கை. | சமயம். | குறிப்புகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| சேலம் மத்திய சிறை .. | புலவர் துக்காணி வரதராஜன். | 25 | இந்து சமயம். | திருக்குறளில் பல்வேறு தலைப்புகள் பற்றி. |
| சென்னை மத்திய சிறை .. | திரு. எஸ். ஆர். கச்சாபேஸ்வரன். | 11 | ௸ | இந்து சமயத்தைப் பற்றியும், திருக்குறளிலிருந்து பொது அறிவுரைகள் பற்றியும் சொற்பொழிவுகள். |
| | பாதிரியார் ஞானப்பிரகாசம், எம்.ஏ. | 6 | கிறித்துவ சமயம். | கிறித்துவ மதம் பற்றியும் பொது அறிவுரைகள் பற்றியும் சொற்பொழிவு. |
| | பண்டிதர் நடேசன் .. | 2 | இந்து சமயம். | குறளிலிருந்து ஒழுக்க நெறி, பொது அறிவுரைகள் பற்றிய சொற்பொழிவு. |

| சிறைச்சாலையின் பெயர் | சொற்பொழிவு ஆற்றியவரின் பெயர் | ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளின் மொத்த எண்ணிக்கை. | சமயம். | குறிப்புகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | திருமுருக கிருபானந்த வாரியார். | 1 | இந்து சமயம். | உண்மையின் சிறப்பு. |
| | திரு. எம். எக்ஸ். மிராண்டா, எம்.ஏ. | 1 | கிறித்துவ சமயம். | ஒழுக்கநெறி பற்றி பொதுவான சொற்பொழிவும் சமயம் பற்றிய உரையும். |
| | திரு. ஞானநந்த அடிகள் .. | 20 | இந்து சமயம். | ஒழுக்க நெறி பற்றி பொதுவான சொற்பொழிவும் சமயம் பற்றிய உரையும். |
| | திருமதி ஜே. சாரதாம்பாள். | 20 | ௸ | ௸ |
| | பாதிரியார் சபாஸ்டியன் .. | 5 | கிறித்துவ சமயம். | ௸ |
| | திருமதி எஸ். ஆர். கச்சபேஸ்வரன். | 8 | இந்து சமயம். | இனியவை கூறல், செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை (குறள் வகுப்பு: அடக்கமுடைமை, பொறையுடைமையும் அழுக்காறாமையும் நல்லொழுக்கமும், புறங்கூறாமை முதலிய தலைப்புகளில். |
| கடலூர் மத்தியச் சிறை .. | தவத்திரு குன்றக்குடி அடிகளார். | 2 | இந்து சமயம். | பொது ஒழுக்கநெறி அறிவுரைகள் பற்றி ஒரு சொற்பொழிவு, சமுதாய தீமைகளை நீக்குவது அன்பினாலா அறிவினாலா என்ற தலைப்பில் பட்டி மன்றம். |
| மதுரை மத்தியச் சிறை .. | திரு. எஸ். ராமச்சந்திரன் .. | 10 | இந்து சமயம். | ஒழுக்க நெறி சொற்பொழிவுகள். |
| | திரு. மவுல்வி, எம்.பீ. மகமது யூசப் அலி. | 14 | முஸ்லீம் சமயம். | பொதுவாக ஒழுக்க நெறி, நன்னெறி பற்றி அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். |
| திருச்சி மத்தியச் சிறை. .. | திரு. ஏ. கனகரத்தினம் .. | 25 | இந்து சமயம். | திருக்குறள் குறித்த சொற்பொழிவு. |
| | திரு. ஆர். ராதாகிருஷ்ண ராஜா. | 32 | ௸ | ஒழுக்க நெறி சொற்பொழிவுகள். |
| | முகம்மது சுலைமான் .. | 21 | முஸ்லீம் சமயம். | ௸ |

| சிறைச்சாலையின் பெயர். | சொற்பொழிவு ஆற்றியவரின் பெயர். | ஆற்றப்பட்ட சொற்பொழிவுகளின் மொத்த எண்ணிக்கை. | சமயம். | குறிப்புகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| திருச்சி மத்தியச் சிறை .. | சாமுவேலும் பிற நால்வரும். | 6 | கிறித்துவ சமயம். | ஒழுக்கநெறி சொற்பொழிவுகள். |
| | ஜகன்னாதன், ஏனையோர். | 2 | ஷை | ஷை |
| | கிறிஸ்டோபர், ஏனையோர். | 3 | ஷை | ஷை |
| | ஜி. சார்லஸ் .. .. | 1 | ஷை | ஷை |
| | டேவிட், ஏனையோர் .. | 4 | ஷை | ஷை |
| | பாஸ்டர் வி. எஸ். ராஜன். | 1 | ஷை | ஷை |
| | இமானுவேல் .. .. | 1 | ஷை | ஷை |
| வேலூர் மத்தியச் சிறை. | திரு. சிவஒலி .. .. | 19 | இந்து சமயம். | பொது நல்வழியும் மற்ற அறிக்கைகளும். |
| பாளையங்கோட்டை மத்தியச் சிறை. | திருமுருக கிருபானந்த வாரியார். | 1 | ஷை | ஒழுக்கநெறி சொற்பொழிவு. |

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The main headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every main heading including various names, entries pertaining to proceedings other than questions are indicated by printing immediately after the subject-matter within brackets e.g. (M) for Motion (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said main headings, i.e. "Committee(s)", 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very main headings.

All the papers laid on the Table of the House are indexed only under the main heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the main heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M./Ad. Motion | ... Adjournment Motion. |
| Ann. | ... Announcement. |
| B.O.H. | ... Business of the House. |
| C.A. | ... Calling Attention to a matter of urgent public importance. |
| C. A. St. | ... Calling Attention Statement. |

| | | |
|---|---|---|
| Consid. | . | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/ Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D. E. E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

---

**Tenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.**

---

11th, 12th, 13th and 14th March 1974.

VOLUME XLIX (Nos. 1 to 4).

## A


PAGE

ABDUL JABBAR, THIRU V. M.
Budget, 1974-75, G.D. ... ... ... ... 70-7

AGRICULTURE—
Crop Insurance Scheme ... ... ... ... 376-38
Tobacco cultivation ... ... ... ... 380-38

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—
Budget, 1974-75, G.D. ... ... ... 90-10
Mechanised Fishing Boats, purchase from U.S.S.R. ... ... ... ... ... 270-27
Statues in Madras City, location ... ... 1

ANBAZHAGAN, THIRU K.
Budget, 1974-75, G.D. ... ... ... ... 156-157, 209-210, 328, 34

Postponement of questions without written communication from the concerned Minister. (Point of order.) ... ... ... ... ... 24

PAGES

A—*cont.*

ARANGANNAL, THIRU Rama—

Hospital Advisory Committees, recommendation ... 127–130

B.

BALASUNDARAM, THIRU V.—

Archakas from Scheduled Castes, number ... 23–26

Coir industry at Kadappakkam, starting ... 17–18

BOARD(S)—

Wakf, value of properties ... ... ... 256–258

BRIDGES AND CULVERTS—

Manniyaru, bridge across ... ... ... 20

BUILDINGS—

Municipal Council building, Mettupalayam ... 141

C.

CALLING ATTENTION—

Allwin, Middle School, Mulagumoodu, proposed closure ... ... ... ... ... 143–144

Rice, acute scarcity—in Kanyakumari district. 33–36

CHAIR—

Announcements :

B.O.H., Change in order ... ... ... 36

Rulings and Observations

Adjournment Motions :

*Fire Accident in Gudiyatham and its consequences.*—

Consent was withheld in the light of the Chief Minister's explanatory statement ... 28–30

Debate :

*Interruption.*—It was not in order to interrupt a Member's speech ... ... ... ... 43



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Reference to Members' statement of Assets and Liabilities.*—On objection being raised by a Member to the reference of assets and liabilities of another Member, the Chair held that inasmuch as it was a document placed on the table of the House, the Members were entitled to comment on the same in the House and it was open to other Members to do it when their turn came availing the opportunity ... 387–391

Decorum :

It was only for the Chair to direct a Member to resume his seat ... ... ... ... 175

Expressions used in the House :

"டமாரம்" (Drum)—in the sentence—" They should give up the idea that every Tamilian should play the drum for Indira Gandhi " தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இந்திராகாந்திக்கு டமாரம் அடிக்கவேண்டும் என்ற எண்ணத்தை விட்டு விட்டு..)

On exception being taken to the use of the expression, at the suggestion of a Minister and the Chair, the Member changed the expression as 'supporting tendency' ஆதரிக்கின்ற மனப்பான்மையை) 205

Mike :

When the Chair rose to speak the other mikes would be switched off ... ... ... [illegible]

Point of Information :

Information regarding reasons for disallowing adjournment motions, calling attention notices and questions should not be sought in the House but only in the Speaker's Chamber ... ... 276

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Point of order.

*Absence of a Minister.*—With reference to a point of order raised by a Member about the absence of the Minister for Transport, who was alleged to have resigned, the Chair held that it was not a point of order ... ... ... ... ... 143

*Criterion.*—On a lady Member rising on a point of order, the Speaker remarked that it has become her practice to rise on a point of order and say something other than a point of order. On exception being taken to these remarks by the Member and some other Members, the Speaker observed :

'While a Member was entitled to raise a point of order, the matter raised by the Member was never a point of order and she had taken advantage of the occasion to offer some remarks. He made the above remarks only to bring home to her the fact that a point of order could be raised only when there was any breach of the rules. He was not against Members rising on a personal explanation or point of elucidation or clarification, but it was not in order to do so under the pretext of raising a point of order.' ... 182–186

*Postponment of certain questions.*—On 13th March, 1974 a Member rose on a point of order and stated that the Chair observed the previous day that at the request of the Minister for Transport the questions addressed to him were postponed. But it was reported in the Press that he had not contacted the Speaker and he was not available the previous day. So, he enquired whether the Chair was right in guiding the





C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Point of Order.—*cont.*

*Postponement of Certain Questions.—cont.*

House in an incorrect and wrong manner and whether the Speaker had received any written communication from the Minister.

The Speaker observed that he had received a written communication from the Minister's Personal Assistant requesting the postponement of the questions addressed to the Minister and said that as per the Rules the Speaker could, at the request of the concerned Minister, postpone one or two questions entered in the list of questions for a day to a subsequent date. He added that when he announced that certain questions were postponed to a later date, it should be accepted irrespective of any other report that might have appeared in the Press ... ... ... ... ... 243–246

While Members had a right to raise a real point of order as per Rules, the opportunity should not be misused for expression of one's views or offering personal explanation or for seeking clarification ... 182–187

Questions and Answers.

*Postponement.*

If the Chair announced that certain questions were postponed on a particular day, it should be taken as authentic and it was not in order to question the Chair in the matter on the basis of newspaper reports ... ... ... ... 243–246

With reference to a suggestion that information about questions postponed for the subsequent date at the request of the Minister should be furnished to the Members in advance, the Chair observed that the suggestion could be considered 353–354

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

Questions and Answers.—*cont.*

*Supplementary Questions.*

*Relevancy.*

When the main question related to research in tobacco cultivation, it was not in order to put supplementary questions about the tax on tobacco ... ... ... ... 382

When the main question was about a particular region or place, it would be better if the Members put supplementary questions about the particular region or place instead of making it a general issue and putting questions about various other regions or places ... ... ... ... ... 364

CHELLIAH, THIRU KUZHA—
Budget, 1974-75, (G.D.) ... ... ... 36-46

CHEZHIYAN, THIRU KOVAI—
Absence of Minister for Transport from the House (Point of Order) ... ... ... ... 275, 276

CHIDAMBARAM, THIRU C. T.—
Budget, 1974-75 (G.D.) ... ... ... 191-194

CHILD WELFARE—
Balar Vihar, grants to ... ... ... ... 269-270

COLLEGES—
Tamil medium students in colleges, payment of incentive money ... ... ... ... 265-268

COMMITTEE(S)—
Hospital Advisory Comittee, recommendations 127-130

CO-OPERATIVES—
Marketing Federation, sale of Kashmir apples 260-261
The Nilgiris Co-operative Marketing Society, supply of vegetables for Super Markets ... 258-260



C—*cont.*

COURT(S)—
District Court for Pudukkottai ... ... ... 18-19
Sub-Court for Tiruppur ... ... ... 18

D.

DENNIS, THIRU N.—
Cauvery waters, utilisation ... ... ... 135-137
Co-operative Marketing Federation, sale of Kashmir apples ... ... ... ... ... 260-261
Import licences, particulars ... ... ... 374-375
Jails, moral discourses in ... ... ... 375-376
Kaveripoompatinam, development as Major Port 254
Pilot project of assessment of total personality, details ... ... ... ... ... 6-7
Primary Health Centre at Karingal conversion into Dispensary ... ... ... ... 133
Tobacco cultivation ... ... ... ... 380-382
Toys unit at Kodambakkam ... ... ... 142
Traffic safety lessons in schools, imparting ... 20-21

DURAISAMY, THIRU S.—
Harijans of Kangayanpalayampudur, house-sites for ... ... ... ... ... 13-14
House-sites in Tiruppur area, allotment ... 255
Kuppusamy Naidu Hospital at Coimbatore ... 132-133
Sub-Court for Tiruppur ... ... ... ... 18

DURAI MURUGAN, THIRU—
Auroville Project, acquisition and assignment of land ... ... ... ... ... ... 117-119
Budget, 1974-75 (G..) ... ... ... ... 46-52

PAGES

E.

EDMUND, THIRU G. R.—
Bala Vihar, grants to ... ... ... ... 269–270
Co-operative Marketing Federation, sale of Kashmir apples ... ... ... ... ... 260–261
Muslim High School at Melapalayam, recognition. 11–12

EDUCATION—
Pilot Project of assessment of total personality, details ... ... ... ... ... ... 6–6
World University Services Centre, functioning. 268–269

ERASAGOPAL, THIRU K. M.—
Budget, 1974–75 (G.D.) ... ... ... ... 342–344, 386–391

ETTIAPPAN, THIRU P.—
Barrage near Vinnamangalam, construction ... 253–254

EXPORTS AND IMPORTS—
Import licences, particulars ... ... ... 374–375

EXPUNCTION—
Budget, 1974–75, (G.D.) ... ... ... 391

F

FINANCIAL BUSINESS—
Budget, 1974–75 (G.D.) ... ... ... 36–105, 144–228, 276–345, 386–463

FISHERIES—
Fishing Industry, modernisation ... ... 15
Mechanised boats, distribution ... ... 271–274
Mechanised boats, purchase from U.S.S.R. ... 270–271



PAGES

F—*cont.*

FOODGRAINS—
Pulses, production ... ... ... ... 139–140
Rice, acute scarcity in Kanyakumari district (C.A.) ... ... ... ... ... 33–36

FOWLER, THIRUMATHI ALDA, M.—
Budget, 1974–75 (G.D.) ... ... ... ... 168–172

FREEDOM FIGHTERS—
Directory, printing ... ... ... ... 2–6
Pattayams to ... ... ... ... ... 1

G

GANESAN, THIRU L.—
Budget 1974–75 (G.D.) ... ... ... 221–228

GURUSAMI, THIRU N. V.—
B.I.M. degree holders, employment, opportunities. 130–132

H

HANDE, DR. H. V.—
Postponement of questions without written communication from the concerned Minister (Point of Order) ... ... ... ... 243–244

HARIJAN WELFARE—
Harijans of Ediarpakkam, house-sites for ... 134
Harijans of Kangayanpalayampudur house-sites for ... ... ... ... ... ... 13–14
Harijans of Poovalambedu colony, distribution of house-site pattas and laying of road to burial ground ... ... ... ... ... ... 366–367

PAGES

H—*cont.*

HARIJAN WELFARE—*cont.*

Harijans of T. Alangulam village, house-sites for. 12-13

Harijan of Thirupachethi, cremation ground for. 365-366

Harijans of Trhiuppudaimaruthur colony for. ... 134

Link road to Harijan street at Valandur, formation 15

Water-supply to Sanaputhur colony in Gummudipoondi sub-taluk ... ... ... ... 363

Water-supply to Sirupazhalpettai colony in Gummudipoondi Panchayat Union ... ... 363–365

HOSPITALS AND DISPENSARIES—

Arambakkam Hospital, functioning ... ... 247

Kuppusamy Naidu Hospital at Coimbatore ... 132–133

Primary Health Centre at Karingal, conversion into Dispensary ... ... ... ... 133

Thiruppathur Hospital, expansion ... ... 247–248

HOUSING—

House-sites Tiruppur area, allotment ... ... 255

I

ILANGOVAN, THIRU G.—

Tourist Bungalow at Kallanai, construction ... 358

INDUSTRIES—

Backward areas, concessions to Vandavasi taluk 15–17

Coir industry at Kadappakkam, starting ... 17-18

Match industry, starting by Khadi and Village Industries Board ... ... ... ... 263–264



PAGE

I—*Cont.*

INDUSTRIES—*cont.*

Rayon Factory ... ... ... ... 374

Toys unit at Kodambakkam ... ... 142

INSURANCE—

Crop Insurance scheme ... ... ... ... 376–380

IRRIGATION—

Barrage near Vinnamangalam construction ... 253–254

Cauvery delta area, modernisation ... ... 138

Cauvery waters, utilisation ... ... ... 135–137

Tiruchirappalli district, facilities ... ... 139

Vaigai Canal, modernisation ... ... ... 367

J

JAIL(S)—

Moral discourses in ... ... ... ... 375–376

JAMES, THIRU J.—

Allwin Middle School, Mulagumoodu, proposed closure (C.A.) ... ... ... ... 143, 144

Fire accident at Gudiyatham (A.M.) ... 28

JAYARAMAN, THIRU K.—

Rayon Factory ... ... ... ... ... 374

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Budget, 1974–75, (G.D.) ... ... ... 320–329

K.

KANDAPPAN, THIRU S.—

Budget, 1974–75, G.D. ... ... ... ... 489

KANDASAMI, THIRU MANALI C.—

Budget, 1974-75, (G.D.) ... ... ... ... 395–405

PAGES

H—*cont.*

HARIJAN WELFARE—*cont.*

Harijans of T. Alangulam village, house-sites for. 12-13

Harijan of Thirupachethi, cremation ground for. 365-366

Harijans of Trhiuppudaimaruthur colony for. ... 134

Link road to Harijan street at Valandur, formation 15

Water-supply to Sanaputhur colony in Gummudipoondi sub-taluk ... ... ... ... 363

Water-supply to Sirupazhalpettai colony in Gummudipoondi Panchayat Union ... ... 363-365

HOSPITALS AND DISPENSARIES—

Arambakkam Hospital, functioning ... ... 247

Kuppusamy Naidu Hospital at Coimbatore ... 132-133

Primary Health Centre at Karingal, conversion into Dispensary ... ... ... ... 133

Thiruppathur Hospital, expansion ... ... 247-248

HOUSING—

House-sites Tiruppur area, allotment ... ... 255

I

ILANGOVAN, THIRU G.—

Tourist Bungalow at Kallanai, construction ... 358

INDUSTRIES—

Backward areas, concessions to Vandavasi taluk 15-17

Coir industry at Kadappakkam, starting ... 17-18

Match industry, starting by Khadi and Village Industries Board ... ... ... ... 263-264



PAGE

I—*Cont.*

INDUSTRIES—*cont.*

Rayon Factory ... ... ... ... 374

Toys unit at Kodambakkam ... ... 142

INSURANCE—

Crop Insurance scheme ... ... ... ... 376-380

IRRIGATION—

Barrage near Vinnamangalam construction ... 253-254

Cauvery delta area, modernisation ... ... 138

Cauvery waters, utilisation ... ... ... 135-137

Tiruchirappalli district, facilities ... ... 139

Vaigai Canal, modernisation ... ... ... 367

J

JAIL(S)—

Moral discourses in ... ... ... ... 375-376

JAMES, THIRU J.—

Allwin Middle School, Mulagumoodu, proposed closure (C.A.) ... ... ... ... 143, 144

Fire accident at Gudiyatham (A.M.) ... 28

JAYARAMAN, THIRU K.—

Rayon Factory ... ... ... ... ... 374

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Budget, 1974-75, (G.D.) ... ... ... 320-329

K.

KANDAPPAN, THIRU S.—

Budget, 1974-75, G.D. ... ... ... ... 489

KANDASAMI, THIRU MANALI C.—

Budget, 1974-75, (G.D.) ... ... ... ... 395-405

PAGES

M—*cont.*

MOTION(S)—
Ad. Motions :
Fire accident at Gudiyatham ... ... ... 28–30

MUNUSAMI, THIRU R. R.—
Freedom Fighters, pattayams to ... ... ... 1
Overhead tank near Alandur, completion ... ... 249
Statues in Madras City, location ... ... ... 19
The Nilgiris Co-operative Marketing Society, supply of vegetables to Super Markets ... ... ... 258–260

N.

NARAYANASAMY, THIRU MANNAI P.—
Rice, acute scarcity in Kanyakumari district (C.A.st.) ... ... ... ... 33-35, 36

NEDUNCHEZHIYAN, DR. V. R.—
Allwin Middle School, Mulagumoodu, proposed closure (C.A. st.) ... ... ... 143–144

P.

PALANIAMMAL, THIRUMATHI V. P.—
Budget, 1974–75 (G.D.) ... ... ... ... 291-293

PALANISAMY, PULAVAR, C.—
Budget, 1974–75, (G.D.) ... ... ... ... 79–82

PALANISAMY, THIRU N. K.—
Temples, appointments in ... ... ... 22–23
Bala Vihar, grants to ... ... ... ... 269–270
Chinchona Plantations, workers' wages ... ... 261–262
Crop Insurance scheme ... ... ... ... 376–380
Freedom Fighters, printing of directory ... ... 2.6



PAGES

P—*cont.*

PALANISAMY, THIRU N. K.—*cont.*
Graduate teachers, regularisation of services ... 7–10
Public Libraries, reorganisation ... ... ... 120–125
Salem Steel Plant, execution ... ... ... 370–374
Tamil medium students in colleges, payment of incentive money ... ... ... ... 265–268
Tourist Bungalows, particulars ... ... ... 354–357

PANCHAYAT (S)—
Muthurangampatti—, request for financial assistance. ... ... ... ... ... 382–383

PAPERS LAID ON THE TABLE—
Administrative Reforms Commission's report on District Revenue and General Administration (Tamil) ... ... ... ... ... ... 106
Catering Establishments Act, 1958, notification ... 105
Colection of Statistics Act, 1953, notification ... 463
District Municipalities Act, 1920, notifications ... 463, 464
" Entrance to Secretariat Buildings, Revised Instruction "; booklet (English and Tamil) ... ... 106
General Sales Tax Act, 1959, notification ... ... 106
Indian Stamp Act, 1899, notification ... ... 464
Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961, notification ... ... ... ... 346
Public Service Commission Regulations, 1954, notifications ... ... ... ... ... 106, 346
Town and Country Planning Act, 1971, notifications. 105, 106, 228, 229, 345, 463.

PAGES

P—cont.

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Warehousing Corporation, Act, 1962, balance sheet and Profit and Loss Account of the Tamil Nadu Warehousing Corporation for 1971–72 ... ... 229

PARANDHAMAN, THIRU A.—
House-sites for Harijans at Ediarpakkam ... ... 134
Marina Beach, beautification ... ... ... 368–370
Temples, appointments ... ... ... ... 22–23

PERUMAL, THIRU A. R.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 419–423

PLANTATIONS—
Cinchona workers' wages ... ... ... ... 261–262

PON CHOCKKALINGAM, THIRU P.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 59–64

PONNAPPA NADAR, THIRU R.—
Budget, 1974–75, G.D., ... ... ... ... 423–440
Fire accident at Gudiyatham (A.M.) ... ... 28
Postponement of questions without written communication from the concerned Minister (Point of Order) ... ... ... ... 245, 246
Rice, acute scarcity in Kanyakumari district (C.A.) ... ... ... ... ... ... 33, 35

POULTRY—
Development in Tiruchirappalli district ... ... 140–141

PORT(S)—
Kaveripoompattinam, development as Major Port 254



PAGES

R.

RAMACHANDRAN THIRU S.—
Budget, 1974–75 G.D. ... ... ... ... 313

RAMAKRISHNAN, THIRU KUPPAL, K. S.—
Budget, 1974–75 G.D. ... ... ... ... 293–297

RAMASAMY, THIRU G.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 76–79
Thiruppathur Hospital, expansion ... ... 247-248

RETHINASAMY, THEVAR THIRU, M. C. A.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 64-66

S.

SADASIVAM, THIRU, S.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 66–70

SATYAVANIMUTHU, THIRUMATHI—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 323, 324, 326,

SCHOOL(S)—
Allwin Middle School, Mulagamoodu, proposed closure (C.A.) ... ... ... ... ... 143–144
Muslim High School at Melapalayam, recognition 11–12
Traffic safety lessions in schools, imparting ... 20–21

SEENIVASAN, THIRU P.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 172–182

SHANMUGAM, THIRU P. U.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 218, 219
River water, talks between Tamil Nadu and Kerala States (St.) ... ... ... ... ... 30–32

PAGES

P—cont.

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Warehousing Corporation, Act, 1962, balance sheet and Profit and Loss Account of the Tamil Nadu Warehousing Corporation for 1971–72 ... ... 229

PARANDHAMAN, THIRU A.—
House-sites for Harijans at Ediarpakkam ... ... 134
Marina Beach, beautification ... ... ... 368–370
Temples, appointments ... ... ... ... 22–23

PERUMAL, THIRU A. R.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 419–423

PLANTATIONS—
Cinchona workers' wages ... ... ... ... 261–262

PON CHOCKKALINGAM, THIRU P.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 59–64

PONNAPPA NADAR, THIRU R.—
Budget, 1974–75, G.D., ... ... ... ... 423–440
Fire accident at Gudiyatham (A.M.) ... ... 28
Postponement of questions without written communication from the concerned Minister (Point of Order) ... ... ... ... 245, 246
Rice, acute scarcity in Kanyakumari district (C.A.) ... ... ... ... ... ... 33, 35

POULTRY—
Development in Tiruchirappalli district ... ... 140–141

PORT(S)—
Kaveripoompattinam, development as Major Port 254



PAGES

R.

RAMACHANDRAN THIRU S.—
Budget, 1974–75 G.D. ... ... ... ... 313

RAMAKRISHNAN, THIRU KUPPAL, K. S.—
Budget, 1974–75 G.D. ... ... ... ... 293–297

RAMASAMY, THIRU G.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 76–79
Thiruppathur Hospital, expansion ... ... 247–248

RETHINASAMY, THEVAR THIRU, M. C. A.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 64-66

S.

SADASIVAM, THIRU, S.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 66–70

SATYAVANIMUTHU, THIRUMATHI—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 323, 324, 326,

SCHOOL(S)—
Allwin Middle School, Mulagamoodu, proposed closure (C.A.) ... ... ... ... 143–144
Muslim High School at Melapalayam, recognition 11–12
Traffic safety lessions in schools, imparting ... 20–21

SEENIVASAN, THIRU P.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 172–182

SHANMUGAM, THIRU P. U.—
Budget, 1974–75, G.D. ... ... ... ... 218, 219
River water, talks between Tamil Nadu and Kerala States (St.) ... ... ... ... ... 30–32

PAGE

S—*cont.*

SIRAIMEETAN, THIRU, T. K.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 282-28

SIVAPRAKASAM, THIRU, D. S. A.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 82-8
Crop Insurance Scheme ... ... ... ... 376-38
Harijans of Thiruppudaimaruthur, colony for ... 13
Labour disputes in city hotels, cases referred to arbitration ... ... ... ... ... 26
Libraries, opening in Tirunelveli district ... 125-12

SONIAH, THIRU T.—
Harijans of T. Alangulam village, house-sites for 12-1
Harijans of Thiruppachethi, cremation ground for 365-366
Vaigai canal, modernisation ... ... ... 367

SOUNDARAPANDIAN, THIRU P.—
Budget, 1974-75, G.D. ... ... ... 329-340
Cauvery delta area, modernisation ... ... ... 138
District Court for Pudukottai ... ... ... 18-19
Link road to Harijan Street at Valandur, formation 15
Match Industry, Starting by Khadi and village Industries Board ... ... ... ... ... 263-264
Muthurangampatti Panchayat, request for financial assistance ... ... ... ... ... ... 382-383
Parvathipuram area, drinking water supply ... 383-384
Porambokes in Mel-Mayanur and Kattalai araes, eviction of occupants ... ... ... ... 250-253
Poultry development in Tiruchirappalli district 140-141
Pulses, production ... ... ... ... ... 139-140



PAGES

S—*cont.*

SOUNDARAPANDIAN, THIRU P.—cont.
Temples, amount spent towards social welfare activities ... ... ... ... ... ... 384-385
Tourist cottages in Kanyakumari, construction ... 357
World University Services Centre, functioning ... 268-269

STATUES—
Location of—in Madras City ... ... ... 19

STEEL PLANT—
Salem—, execution ... ... ... ... ... 370-374

SUBRAMANIAM, THIRU A.—
Budget, 1974-75, G.D. ... ... ... 211-221

SUNDARA BHARATHI, THIRU SOWDI S.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 276-282

SUNDARAM, THIRU O. N.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 52-59

SURULIVEL, THIRU M.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 203-210

SWAMIDHAS, THIRU A.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 194-203

T

TANGAMANI, THIRU K. T. K.—
Budget, 1974-75, G.D. ... ... ... ... 144-168
Postponement of questions, intimation to Members (Point of information) ... ... ... ... 353

TEACHER(S)—
Graduate—, regularisation of services ... ... 7-10